In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருஞான சம்பந்தர்

ஓர் ஆய்வு

முதல் பகுதி

வை. இரத்தினசபாபதி

டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்
மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக் கழகம்
2000

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத்துறை வெளியீடு - 31

பொதுப் பதிப்பாசிரியர் :

டாக்டர் இரா. பாலசுப்பிரமணியன்

திருஞானசம்பந்தர் – ஓர் ஆய்வு

முதற் பகுதி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருஞானசம்பந்தர்

ஓர் ஆய்வு

முதற் பகுதி

டாக்டர் வை. இரத்தினசபாபதி
வித்துவான், பி.ஓ.எல்., எம்.ஏ., பி.எச்.டி.
துணைப்பேராசிரியர்
டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன்
மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக் கழகம்

டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்
மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக் கழகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

© சென்னைப் பல்கலைக்கழகம்
முதல் பதிப்பு 1982
மறுஅச்சு 2000

விலை ரூ. : 65/-

அச்சிட்டோர்:
வெற்றிவேல் ஆப்செட் பிரஸ்
சென்னை - 600 021.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

டாக்டர் பொன். கோதண்டராமன்
(பொற்கோ)
துணைவேந்தர்
சென்னைப் பல்கலைக்கழகம்

அணிந்துரை

பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளைப் பாடிய திருஞானசம்பந்தர், நாளும் தமிழிசை பாடித் தமிழியக்கத் திற்கும், அருளியக்கத்திற்கும் வழிகோலியவர். இவருடைய பாடல்களில் இயற்கைக் காட்சிகளில் கலந்து மகிழ்ந்த அழகனுபவம் வெளிப்படுவதைக் காணலாம். அவருடைய பாடல்களில் அமைந்துள்ள தத்துவக் கோட்பாடுகளையும் இறைவழிபாட்டு நெறியையும் 'திருஞானசம்பந்தர்-ஓர் ஆய்வு' என்னும் இந்நூல் ஆராய்ந்துரைக்கின்றது.

சென்னைப் பல்கலைக்கழக மெய்யுணர்வு ஆராய்ச்சித் துறை பொன்விழாக் கண்ட துறை. இந்தியத் தத்துவம், உலகம் தழுவிய தத்துவக்கோட்பாடுகள் முதலாய துறைகளில் அரிய நூல்களை வெளியிட்டுப் புகழ்பெற்ற துறை. அத்துறையின் வெளியீடாக மலர்ந்த திருஞான சம்பந்தர் பற்றிய இரு தொகுதிகளும் இப்பொழுது மீண்டும் மறுபதிப்பாக வெளிவருகின்றன. சைவ சித்தாந்த அறிஞர் பேராசிரியர் டாக்டர் வை. இரத்தின சபாபதி அவர்கள் இவ்விரு தொகுதிகளையும் எழுதியுள்ளார்கள். தமிழர் தம் தொன்மைச் சிந்தனையை அறிந்து கொள்ள இந்நூல் பெரிதும் பயன்படும். தமிழுலகம் இதனை ஏற்றுப்போற்றும் என நம்புகிறேன்.

இத்தகைய நூல்களைச் சிறப்பாக வெளியிடுவதில் துணைநிற்கும் பதிப்புத் துறை இயக்குநர் பேராசிரியர் டாக்டர், இ, சுந்தரமூர்த்தி அவர்கட்குப் பாராட்டுதல்கள்.

பொன்.கோதண்டராமன்

சென்னை — துணைவேந்தர்

2.05.2000 — சென்னைப் பல்கலைக்கழகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆக்கியோன் முன்னுரை

'திருநெறியத்தமிழ்' என்னும் திருப்பதிகத் தமிழ்நெறி என்ற ஒரு புதிய மரபினை நிலைநாட்டி வளர்த்தவர் திருஞானசம்பந்தர் என்று திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகள் கூறுவதை அடிப்படையாகக் கொண்டு, திருஞானசம்பந்தர் திருப்பதிகங்களையே மூலமாகக் கொண்டு, ஞானசம்பந்தர் தொண்டின் அடிப்படைக் கொள்கை ஒன்றினை முறையுற அமைத்துக் காட்டும் முயற்சியின் முதற்பகுதி யாக இந்நூல் வெளிவருகிறது. இதுபற்றித் 'தோற்றுவாய்' என்ற ஒரு தனித்தலைப்பே அமைக்கப் பெற்றிருப்பதால் நூலைப்பற்றிய முன்னுரை ஏதும் இங்கே அமைத்தல் பயனற்றதாம்.

திருஞானசம்பந்தரின் வரலாற்றுப் பகுதி முழுமையும் இம்முதற் பகுதியில் அமைதல் வேண்டும். கொள்கை விளக்கம் என்ற வகையில் இடையிடையே சில இன்றியமையா விரிவுகள் எழுதப் பெற்றமையினாலும், பத்துப்படிகளில் அமையும் அவர்தம் வரலாற் றில் ஐந்தும் ஐந்தும் என்ற இருபிரிவு முக்கியம் பெறுவதனாலும் முதல் ஐந்துடன் முதல்பகுதி முடிவுறுவதாயிற்று. இரண்டாம் ஐந்தினை உளங்கொண்ட பிரிவும் வரலாறும், அருளியல் நிகழ்வும், கொள்கை விளக்கமும் ஆகியவை இரண்டாம் பகுதியில் அமையும் செய்திகளாயின. 1982 மார்ச் மாதத்திற்குள் அப்பகுதியும் வெளி யாக்கப் பெற்றுவிடும்.

காலங்கடந்த பரம்பொருளைப் பற்றிய பேச்சாக இருப்பினும் காலம்பெற மலர்ந்த தூய வாயினர் திருஞானசம்பந்தர். எனவே, காலத்தோடு இணைத்துப் பார்த்த நிலையில் தம் கொள்கையை உரு வாக்கினர். ஆதலின் மக்கள் வாழ்வியல் தொண்டினை உளங் கொண்ட பணி எனவே கருதுதல் வேண்டும் என்பது அவர்தம் கொள்கை. அக்கொள்கையே இவ்வாய்வின் அடிப்படை. எனவே, காலம் நோக்கி எழும் வினுக்களைச் சந்தித்து விடை கூறவேண்டியது நம் கடமை.

"ஊறினார் ஓசையுள் ஒன்றினர் ஒன்றிமால், கூறினர் அமர் தரும் குமரவேள்—தாதையூர்" என்றும் "கானலைக்கும்மவன் கண்ணிடந்தப்பநீள்வானலைக்குந் தவத்தேவு வைத்தானிடம்" என்றும் ஞானசம்பந்தர் முருகனையும் கண்ணப்பனையும் நினைந்து பாடி அறிமுகப்படுத்தும் தலம் திருத்தென்குடித்திட்டை. உலக நாயகியை ஒருமருங்கு கொண்ட பசபதீசுவரரை வழிபடுகடவு ளாகக் கொண்டு, திட்டையில் தம்மைக் குடியுரிமை செய்துகொண்ட பெருமை, எம் நிலையத்து இயக்குநர், டாக்டர். இரா. பாலசுப்பிர மணியனர்க்கு உண்டு. திருஞானசம்பந்தர் பதிகம் மலர்ந்த தலத் தவராகலின் திருமுறைகளிலும் திருமுறை ஆசிரியர்களான அருளாள களிடத்திலும் ஆழ்ந்த பக்தி கொண்டு விளங்குகிறார் என்பது அவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறப்புரிமை. 19—2—1981ல் கோவை, பேரூர், சாந்தலிங்கர் திரு மடத்தின் சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் சார்பில் ஐம்பெருங் குருமகாசந்நிதானங்கள் வாழ்த்த, 'தத்துவவித்தகர்' என்ற சிறப்புப் பெயர் அளித்துப் பொன்னுடை போர்த்தப்பெற்ற பெருமை யுடைய அவர், தமிழுலகில் திளைத்துக்கிடந்த என்னைத் தத்துவ உலகில் நெறிப்படுத்தி நிலைநிறுத்திய வகையில் நிறுவனத்துக்கே யன்றி எனக்கும் நெறியாளர். என்னுடைய தத்துவ ஆசிரியராக விளங்கும் அவர்களின் இணையடிகளை வணங்குதலன்றி வேறு வழி காணேன்.

என் நெஞ்சுவக்கும் பணியில் யான் நிலைபெற்று நிற்பதற்கு முன்னமேயே கால்கோள் அமைத்த இந்நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர்களாகிய டாக்டர், T. M. P. மகாதேவன், டாக்டர், வ. ஆ. தேவசேனாபதி ஆகியோர்களுக்கு யான் என்றென்றும் நன்றியறிதற் கடப்பாடுடையேன்.

திருமுறைப் பணிகளில் எனக்குமுன் ஈடுபட்ட சான்றோர்கள் அனைவரையும் அவர்தம் திருவடிகளை வணங்கிப் போற்றுகின்றேன். எளியனின் ஞானாசிரியராகிய ஞானியாரடிகளையும், அருள் ஞானத் தீட்சாகுருவாகிய மயிலம் சிவஞான பாலய சுவாமிகளையும் (19ஆம் பட்டம்) வணங்கி, அவர்தம் திருவடிகளே கண்ணாகக் கொண்டு போற்றும் நன்றியுணர்வினன். என்னுடனாய் இயக்கும் பேராசிரியர் 'ஆசி' அவர்களை வணங்குகிறேன்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற கொள்கையை உயிர் மூச்சாகக்கொண்டு, பல்லாற்றானும் உழைத்தும் இயக்கியும் வரும் முதுபேரறிஞர் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், பேரா சிரியர் G. R. தாமோதரனார் அவர்களுக்கு என் வணக்கமும் நன்றியும் என்றும் உரியன.

சென்னைப் பல்கலைக் கழகத்து அலுவலகங்களையேயன்றி என்னையும் உடனிருந்து அவ்வப்போது உற்சாகமூட்டி அரவணைத்து இயக்கிவரும் பதிவாளர், பெருந்தகை திரு. குமாரசாமி அவர்களை வணங்கி நன்றி கூறும் கடப்பாடுடையேன்.

தமிழில் தட்டெழுத்துச் செய்து கொடுக்கும் வசதியை எம் நிறு வனம் இன்னும் உண்டாக்கிக் கொள்ளாத நிலையில், என் கையெழுத் தையே தம் தலையெழுத்தெனக் கொண்டு அச்சகப் பணியேற்றல் என்பது சட்டத்துக்கு அப்பாற்பட்ட மனிதத்தன்மையின் இலக்கிய நிலை. அதனால் விளையும் தொல்லைகள் பல. ஆயினும், பல்லாற்றா னும் இது ஒரு திருமுறைப் பதிப்பு மட்டுமன்று, நன்முறைப்பதிப்பு எனவும் பெயர் பெறவேண்டும் என்ற வகையில் அயராது உழைத்த அவ்வை அச்சுக்கூடத்தாருக்கும் உரிமையாளர் திரு. சேஷாசலம் அவர்களுக்கும் என்றென்றும் நன்றியறிதற் கடப்பாடுடையேன்.

சென்னை-5. இங்ஙன்

20—3—1981. **வை. இரத்தினசபாபதி**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ளுறை

	அணிந்துரை	...	v
	ஆக்கியோன் முன்னுரை	...	vii
1.	தோற்றுவாய்	...	1—10
2.	பெருநெறிய பிரமாபுரம்	...	11—30
3.	பிரமபுரத்துறை பெம்மான் எம்மான்	...	31—72
4.	விண்டலர் பொழிலணி வேணுபுரத்தரன்	...	73—110
5.	புண்டரிகத்தவன் மேவிய புகலி	...	111—166
6.	விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேயினன்	...	167—204
7.	சுடர்மணி மாளிகைத் தோணிபுரத்தவன்	...	205—236
8.	அப்பராம் பேறு	...	237—246
9.	முதற்பகுதியின் முடிப்புரை	...	247—248

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருஞானசம்பந்தர் தேவாரம்

1.	திருமுறை எண்ணிக்கையால்	1, 2, 3.
2.	பாடப்பெற்ற சிவத்தலங்கள்	220
3.	தலத் திருப்பதிகங்கள்	377
4.	பொதுத் திருப்பதிகங்கள்	7
5.	திருப்பதிகங்கள் மொத்தம்	384க்குத்
	திருப்பாடல்கள்	4158

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1. தோற்றுவாய்

சிவம் பெருக்கும் பிள்ளையாரெனவும் சிவானந்தத் தெள்ளமுது எனப்பெறும் ஞானவாரமுதமுண்ட பிள்ளையாரெனவும் போற்றிப் புகழப்பெறுகின்ற திருஞானசம்பந்தர் சைவ சமய நற்குரவர்கள் எனப் பெறும் அருளாசிரியர்கள் நால்வரில் முதல் நின்ற பெருந்தகை யாவர்.

சைவ சமய நற்குரவர்கள் நால்வருள் முதல் நின்ற திருஞான சம்பந்தரும் இரண்டாமவராக எண்ணப் பெறும் திருநாவுக்கரசரும் ஒரே கால எல்லையில் வாழ்ந்த வரலாற்றுப் பின்னணியை உள்ளிட்ட அருட்குரவராவர். மூன்றுமவராகிய திருநாவலூரார் நம்பியாரூரர் எனவும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் எனவும் போற்றப் பெறுபவர். முன்னுள்ள இருபெருந்தகைகளின் கால அளவைக்குப் பின்னே ஏறக் குறைய இருநூறு ஆண்டுகட்குப் பின்னர் வரலாற்றுப் பெருமை மிக வாழ்ந்தருளிய அருளாளர். இனி, நான்காமவராகிய மாணிக்க வாசகப் பெருந்தகை மேலே காட்டப்பெற்ற மூவருக்கும் முந்தியவரா பிந்தியவரா என்ற ஆய்வு இன்று வரை முடிவு பெறுததாக அமைந்துள்ளது. ஆயினும், முன்னுள்ள மூவரில் கருத்து வேறுபாடில்லாத கால அளவை அறிஞரால் ஏற்றுக் கொள்ளப் பெற்ற தொன்று.

சைவ சமயப் பெருந்தகைகளாகிய திருத்தொண்டர்களின் வரலாற்றினை விளங்க எடுத்து நிலைநிறுத்தவும், அதனை மக்கள் உள்ளத்தில் நிலை நாட்ட வேண்டும் என்ற பணியைச் சிறப்புற நல்லாற்றுப் படுத்தவும், சைவ சமயத் திருத்தொண்டர்களை வணங்கினால் வாழ்வில் வளம் பெற முடியும் என்ற கருத்தைச் சைவ சமய அடிப்படை உண்மைகளுள் ஒன்றாக அமைத்துக் காட்டவும் வேண்டும் என்ற திருத்தொண்டினை முதன் முதல் தொடங்கிய அருளாளர் நம்பியாரூரர் எனப் பெறும் சுந்தரமூர்த்தி சுவாமிகளே.

சைவ சமயஞ் சார்ந்த திருத்தொண்டர்களில் அறுபத்து மூன்று தனியடியார்களின் பெயர்களையும், அவர்களைப் பற்றிய திருவருட் குறிப்புடன் அமைந்த திருத்தொண்டின் விளக்கங்களையும் ஒரு வரியிலோ இரண்டு வரிகளிலோ அமைத்து விளக்கிய முதற்பெருந் தகை திருநாவலூரரே. திருநாவலூரார் இவ்வாறு சிறப்பித்துக் கூறியும் பெயர்களை அமைத்துக் கூறியும் வழிபட்ட அறுபத்துமூவர் தவிர, ஏனை ஒன்பது தொகை அடியார்களையும் குறிப்பிட்டருளுகின்றார். அவ்வகையில், நம்பியாரூரர் எனப் பெறும் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருளிய 'திருத் தொண்டத் தொகை' என்னும் திருப்பதிகமானது அறுபத்து மூன்று என்ற எண்ணிக்கையில் அமைந்த தனியடியார் களேயும், ஒன்பது என்னும் எண்ணிக்கையில் அமைந்த தொகை யடியார்களேயும் உலக மக்களுக்கு அறிமுகம் செய்துவைத்த முதற் பதிகமாக மலர்கிறது எனக் கொள்வது சைவ மரபு.

"மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத் தீதிலாத் திருத் தொண்டத்தொகை தரப் போதுவான்" என்று சேக்கிழார் பெருமானுல் எடுத்துக் கூறியருளப் பெற்றவாறு, திருநாவலூரர் இவ்வுலகில் அவதாரம் செய்தமைக்குரிய காரணம் 'திருத்தொண்டத் தொகை' என்னும் அரியதொரு நூலே உலகிற்கு அளிப்பது என்பதே. எனவே, திருநாவலூரரின் திருத்தொண்டத் தொகையும், திருநாவ லூரரின் வாழ்வியல் நிகழ்வு முறைகளும் திருத்தொண்டர்களின் பெருமைகளே உலகிற்கு விளக்கிக் காட்ட வேண்டும் என்ற அடிப் படைத் திட்டத்தில் அமைந்தவைகளே என்று கொள்ளுதல் வேண்டும்.

திருத்தொண்டத் தொகை பற்றிய பல்வேறு ஆய்வுகளே இனி வெளிவரவிருக்கும் திருநாவலூரர் — ஓர் ஆய்வு என்னும் நூலில் விரிவாகக் காணலாம். திருத்தொண்டத் தொகையை மூலமாகக் கொண்டு நம்பியாண்டார் நம்பிகள் *திருத்தொண்டர் திருவந்தாதி* என்னும் ஒரு நூலே அருளியுள்ளார்கள். இவ்விரண்டையும் மூலமாகக் கொண்டு எழுந்த விரிவான வரலாற்றுடன் கூடிய அருள் நூலே திருத்தொண்டர் புராணம் எனப் பெறும் பெரியபுராணம்.

'திருத்தொண்டத் தொகை'யின் ஐந்தாந் திருப்பாட்டினுள்

"வம்பறு வரிவண்டு மண நாற மலரும்
மதுமலர் நற்கொன்றையான் அடியலாற் பேணு
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்"

என்று குறிப்பிடப் பெற்ற வரிகள் சைவ சமய நற்குரவர்கள் நால்வரில் முதல் நின்றவரை — (திருஞானசம்பந்தர்) மூன்றுமவராக நின்ற அருட்குரவர் (சுந்தரர்) எடுத்து மொழிந்த அருள் நிறை வரிகள் எனக் கொள்ளல் வேண்டும்.

சைவ சமய நற்பெருங்குரவர்கள் நால்வருக்கும் முறையே ஆளுடைய பிள்ளேயார், ஆளுடைய அரசுகள், ஆளுடைய நம்பிகள், ஆளுடைய அடிகள் என்ற பெயர்கள் உண்டு என்பதையும் இங்கே அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஆளுடைய நம்பிகள் எனப் பெறும் சுந்தரர் காலத்துக்கு முன் வாழ்ந்த பெருந்தகைகளின் வரலாறுகள் உலக மக்களிடையே பெரிதும் வழக்கியல் நிகழ்வுகளாகப் பேசப் பெற்று வந்தன என்பது உண்மையே. ஆயினும், ஆளுடைய நம்பிகள் திருவாக்கினே அடிப் படையாகக் கொண்டே திருத்தொண்டர் வரலாற்றினே நிலைநிறுத்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முற்பட்ட பேரருளாளரே தெய்வச் சேக்கிழார் எனப் பெறும் 'தொண்டர் சீர் பரவுவார்' ஆவர்.

வேதநெறி தழைத்தோங்கவும், மிகு சைவத்துறை விளங்கவும், பூத பரம்பரை பொலியவும், புனிதவாய் மலர்ந்து அழுத சீதவளவயற் புகலித் திருஞானசம்பந்தர் வரலாற்றைத் தெய்வச் சேக்கிழார் தாம் பாடிய 4286 செய்யுட்களைக் கொண்ட திருத்தொண்டர் புராணத்துள் 1256 செய்யுட்களால் விரிவாக எடுத்து விளக்கியருளுகின்றார்.

நம்பியாரூரர் எடுத்து வழங்கியருளிய திருத்தொண்டத் தொகைக்கும் தெய்வச் சேக்கிழார் 'உலகெலாம்' என்ற மெய்ம்மை மொழி நின்ற தெய்வத் திருவருள் வெளிப்பாடு எனப் பெறும் திருத் தொண்டர் வரலாற்று விரியாகிய பெரியபுராணத்துக்கும் இடை நின்ற காலத்தே சைவ சமய நற்குரவர் நால்வரில் முதல் நின்ற குரு எனப் பெறும் கழுமலநகர்ப் பழுதில் இறை எழுதும் மொழி யுடைய தமிழ் விரகனுரை ஆறு அருள் நூல்களாற் போற்றிப் புகழ்ந்த பெருமை நம்பியாண்டார் நம்பிகளுக்குண்டு.

திருவருள் நெறி சார் அருளனுபவம் பெற்ற சைவ சமய அருளா சிரியர்களோடு ஒப்ப நின்ற பேரருட் பெருந்தகையராகிய நம்பி யாண்டார் நம்பிகள் சைவத் திருமுறை வரலாற்றில் அழியாப் புகழ் பெற்ற அருளாளர் பெருந்தகையாவர்.

தேவாரத் திருமுறைகள் அருளாளர்களின் திருவாக்குகளே. ஆயினும், திருமுறை பற்றி இரண்டு வினக்கள் உண்டு. தேவாரத் திருமுறைகள் இறைவனை நோக்கிப் பாடப் பெற்றவைகளாயினும் மக்கள் நலங்கருதி வெளிப் படுத்தப் பெற்றவைகளா அல்லது இறைவன் பெருமையை இறைவன் புகழுரைகளாக இறைவனை மகிழ்விக்கும் பொருட்டுப் பாடப் பெற்றவைகளா என்ற வினக் களுக்கு வரலாற்று முறையில் விடை கண்ட அருளாளரே நம்பி யாண்டார் நம்பிகள்.

தேவாரத் திருமுறைகளை அருளிய பெருமை திருஞானசம்பந்தரை உள்ளிட்ட அருளாளர்களுக்கு உண்டு என்பது உண்மையேயாயி னும் திருமுறைகளைக் குறை நீக்கிக் காத்தருளிய பெருமை நம்பி யாண்டார் நம்பிகளுக்கேயுண்டு.

தேவாரத் திருமுறைகள் அருளாளர்களால் அருளப் பெற்றவை களேயாயினும், மக்கள் வழக்கிலிருந்து மறைந்து, நாளடைவில் இல்லாமற் போயின என்ற வரலாற்றுண்மைக்குத் தலை சாய்த்து நின்றவைகளே திருமுறைகள். அருளாளர்களின் திருவாக்குக் களுக்கும் அழிவு வரும் போலும், எரியாலும் நீராலும் களங்கப் படுத்தப் பெற இயலாத வகையில் நிலைபேற்றுத் தன்மை பெற்ற திருவமர் திருப்பதிகங்களுங்கூட, காலத்தால் மறைக்கப் பெறும் போலும் என்ற குறைகளை நீக்கி, அருளாளர்களின் திருவாக்குகள் காலங் கடந்த, கால்த்தை வென்ற திருவுடையன என்பதை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உலகினர்க்கு விளக்கிக் காட்டிய பெருமை நம்பியாண்டார் நம்பிகளுக்கே உண்டு. மேலும், திருமுறைகள் இறையருள், இறைத் தன்மை, இறையுண்மை ஆகியவைகளை எடுத்து நிலை நாட்டும் மேன்மையுடையனவேயாயினும், அவைகள் மக்கள் நலங்கருதியே அருளப் பெற்றவை எனவும், வினைகள் கெடுதற்குக் காழிக் கவுணியக் கன்று ஆணையிட்டுக் காட்டிய அருளற்புதத் திருவாக்குக் களே அவைகள் எனவும், உலகில் நிலைநாட்டி, மக்கள் நலங்கருதி அருளப் பெற்ற தேவாரத் திருமுறைகளை மக்களுக்கே வழங்கி, மக்களுக்கு அவைகளின் பெருமைகளை எடுத்து விளக்கிக் காட்டிய பெருமை நம்பியாண்டார் நம்பிகளுக்கே உண்டு.

நம்பியாண்டார் நம்பிகள் இல்லையேல் திருப்பதிகங்கள் இல்லை. அவைகள் வெளிப்படுத்தப் படாமலேயே அமைந்திருப்பின், தேவார மூவர்களின் திருத்தொ ண்டுகளேயன்றி, அவர் தம் அருளிப் பாடுகளும் பயனின்றி யொழிந்தன என்பதே தமிழையும் சைவத்தை யும் சார்ந்த அவநிலையாகும்.

திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரின் திருவருளினைப் பள்ளி செல்லும் பிள்ளையாயிருந்த காலத்திலேயே பெற்று மகிழ்ந்த நம்பி யாண்டார் நம்பிகள் தம்முடைய திருவருட் பேறுடைத் திருக்கைச் சிறப்பின் காரணமாகவே போலும், அவர்கள் தொகுத்து வெளியிட்டு இன்றைக்குச் சற்றேறக் குறைய ஆயிரம் ஆண்டுகள் கழிந்த பின்னரும், ஒரு திருப்பாட்டும் கழிவுருவகையில் சிறந்து விளங்கு வதைக் காணலாம்.

ஓங்கி வளர்ந்த ஒளி திகழ் புன்னை மரங்கள் நெருங்கிய சோலை யுடன் விளங்கும் திருநாரையூரின்கண் முக்கன் அரசு மகிழும் அற்புதப் பிள்ளையெனும் அத்தி முகத்தான் என்னை நினைத்தான்' அடிமை கொண்டான், என் இடர் கெடுத்தான், பின்னரே இவ்வளவு தொண்டுகளையும் ஆற்றிய தன்னை யாரென யான் நினைக்குமாறு என்னைச் செயற்படுத்தினன் என்ற முதன் மொழியை எடுத்து மொழிந்து, இவ்வுலகத்து இருள் நீக்கி, ஒளி பரப்பிய சைவ இள ஞாயிறெனத் திகழ்ந்தருளிய நம்பியாண்டார் நம்பிகள் புகலி நிலா வும் பூசுரன், கவுணிய குலக்கன்று, சிவஞான சம்பந்தப் பெருந் தகையை, **ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக் கோவை, திருவுலாமாலை, திருக்கலம் பகம், திருத்தொகை** என்ற ஆறு அருள்நூல்களால் பாடிப் பரவிப் புகழ்ந்தமையைப் பதினொராந் திருமுறையாற் கண்டு தெளியலாம்.

பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மான் இவன் என்று கண்டும், சிவபாத இருதயன் என்ற யான் உன் தந்தை, பகவதி யம்மை உன் தாய், இவர்கள் உன் சுற்றத்தார், இக்கழு மலம் நீ பிறந்த பதி என்று உலகப் பொருள்கள் எல்லாவற்றையும் காட்டிய தந்தைக்கு, இவைகளின் உட்பொருளாய் விளங்கும் உறுபொருள் இதோ, இவனே எனக் காட்டியும், தந்தைக்கேயன்றி, அப்பரடிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எனப் பெறும் அரசுங் காணக் காட்டியும், காட்சியளவைக்குக் காணலாகாப் பரம்பொருளைக் காணலாம் எளிமைக்குக் கொண்டு வந்து நிறுத்தி, தந்தையை இவனென்று காட்டியதன் மூலம் தாய் என நிலைநாட்டுதல் போல, குருவை இவனென்று காட்டுவதன் மூலம் தந்தையாந் தனித்தன்மையை விளக்குவது போல, தெய்வத்தை இதோ இவனே என்று காட்டியதன்மூலம் குருவென. சைவசிகாமணியென, அறிவாகி இன்பஞ் செய் தமிழ்வாதில் வென்ற தவமணியென, நின்ற திருஞான சம்பந்தப் பெருந்தகை 'ஒரு நெறிய மனம் வைத்து உணர்தல்' என்ற புதுநெறியின் மூலம் தொடங்கியருளப் பெற்றதும் செப்பனிட்டுக் கொடுத்தருளப் பெற்றதும் ஆகிய பெருநெறியே திருப்பதிகத் திருநெறி. திருப்பதிகத் திருநெறியைப் 'பதிகப் பெருவழி' என்று நம்பியாண்டார் நம்பிகளும், ''பெருநெறி பிடித் தொழுக வேண்டும்'' என்று வடலூர் வள்ளல் இராமலிங்க அடிகளும் பாராட்டிப் போற்றுவதைக் காணலாம்.

ஆறது ஏறும் சடையான் அருள் மேவ அவனியர்க்கு வீறது ஏறும் தமிழால் வழி அமைத்துக் காட்டியருளிய திருஞானசம்பந்தப் பெருந்தகையின் திருவருள் நெறிசார் தொண்டினையும், கண்ணார் திருநுதலோன் கோலக்காவில் கரநொடியால் பண் ஆர்தரப்பாடு சண்பையர் காவலனுக்கு அப்பைந்தமிழ்க்கோன் பாணி நொந்திடும் என்று எண்ணி, எழுத்து ஐந்தும் இட்ட பொற்றாளம் ஈய, அதனால் எழுப்பு ஒலியும், யாழ் ஒலியும், யாழை முறிக்கும் நஞ்சுதீர் நயவொலியும் கலந்த பண்ணார் இன்தமிழ்ப் பதிக ஒலியை மீளவும் இவ்வுலகுக்கு வழங்கியமை போலவே, தேறும் புனல் தில்லைச் சிற்றம்பலத்துச் சிறந்து வந்து உள் ஊறும் அமிர்தைப் பருகிட்டு எழுவதோர் உட்களிப்புக் கூறும் வழிமொழி தந்து இவ்வுலகை வாழ்வித்த ஞானத் தமிழாகரரின் நன்னிதியாம் திருமுறைப் பெருமைகளையும், அவைகளை முன்னின்று துவக்கியருளிய காழிப் பெருமான் வரலாற்று நுட்பங்களையும் திருவருளின் வழிநின்று விளக்கியருளிய முதற்பணியாளர் நம்பியாண்டார் நம்பி அவர்களே.

சைவசமய நற்பெருங் குரவர்கள் நால்வரில் இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் என்று எழுதிக் காட்டமுடியாத பரம்பொருளை, தோடுடைய செவியன் என்பது முதலாகக் குறியிட்டுக் காட்டி, பீடுடைய பிரமா புரமேவிய பெம்மான் என்று சுட்டிக் காட்டிய நிலையில் குரு என நின்ற ஞானசம்பந்தரைப் போலவே திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரின் அருள் பெற்று, பதிகப் பெருவழியின் மூலமாகிய திருப்பதிகம் இதோ எனக் காட்டியும், வெளிப்படுத்தியும், வகுத்துக் கொடுத்தும் நின்ற குருவெனப் போற்றப் பெறும் நிலையுடையவரே நம்பியாண்டார் நம்பிகள்.

நாரையூர் நம்பிகளை அடியொற்றி, திருவருள் மரபும், வரலாற்று நுட்பமும் செறிய, பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பல்துறை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வளமும் பாங்குடன் அமைய, உலகத் துயிர்களை எடுக்கும் மாக்கதை யாக்கித் தொண்டர் தம் பெருமைகளை விரித்துரைத்த பெருமை தெய்வச் சேக்கிழாருக்கு உரியதாகும். திருமுறைப் பதிகப் பெருவழியினைத் தொடங்கி வைத்த பேரருளாளர் காழிக்கவுணியக் கன்று எனப்பெறும் திருஞானசம்பந்தப் பெருந்தகையாராக அமைய, தோட்டியல் காதன் இவனென்று தாதைக்குச் சூழ் விசும்பிற் காட்டிய கன்றின் திருப்பதிக வழியினை, பார்மண்டலத்திற் பன்னிரு பேரோடு மன்னிநின்ற பிரமாபுரம் போலவே, பன்னிரண்டாந் திருமுறையாகத் திருத்தொண்டர் புராணத்தை நிறுத்தி, அப்பதிகப் பெருவழியை விரிவு செய்து நிலைநிறுத்தி அருளிய பெருமை தெய்வச் சேக்கிழார் திருவாக்குக்கு உண்டு.

நாரையூர் நம்பிக்கும் தொண்டர் சீர் பரவும் சேக்கிழாருக்கும் பின்னுகப் பல அருளாளர்கள் தொண்டாற்றிய போதிலும், தெய்வச் சேக்கிழார் திருவாக்கினுக்குப் பின் வேறொருவர் நினைந்து ஆய்ந்து சொல்லச் செய்தி இல்லை என்று துணிவு தந்து, சேக்கிழார் தம் திருவாக்கின் அமைப்பினை ஒட்டியே அருளாளர்களின் வரலாற்றுப் பெருமைகளையும் நுட்பங்களையும் அமைத்துக் கொள்ள வேண்டும் எனக்கொள்ளும் சைவமரபு இன்றுவரை பேணப்பெற்று வருகிறது. ஆயினும், தெய்வச் சேக்கிழாருக்குப் பின் கி.பி. பதினேழாம் நூற்றுண்டில் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகளும், சென்ற நூற்றுண்டிறுதியில் விளங்கிய இராமலிங்க அடிகளும் சைவசமய நற்பெருங்குரவர்களாகிய நால்வர் அருளாளர் பெருமக்களின் வரலாற்று நுட்பம், அருளியல் அனுபவ விளக்கம் ஆகியவைகளைத் தத்தம் ஆய்வுக் கோணங்களில் நின்று விளக்கியுள்ளமை சைவமரபு நன்கு அறிந்த ஒன்றே.

சைவ சமய முதற் பெருங்குரவர்களாக நின்ற நால்வர் அருளாளர்களைப் போலவே அவர்கள் தொடங்கிய திருப்பதிகப் பெருவழியினை விளங்கிக் கொள்ளுதற்கு நால்வர் அருளாளர்கள் இடைநின்ற பெருந்தகைகள் என்னலாம். அவர்கள் முறையே நம்பியாண்டார் நம்பிகள், தெய்வச் சேக்கிழார், சிவப்பிரகாச அடிகள், இராமலிங்க அடிகள் ஆவர்.

மேலே குறிப்பிடப் பெற்ற நால்வர் பெருமக்களுக்குப் பின், அருளியலும் அறிவியலும் இணைய நிற்க, அவற்றின் துணைகொண்டு, நிலமேறிய மருப்பின் திருமாலும் நிலம் படைத்த குலமேறிய மலர்த் தாமரையானும் காணமுயன்றும் முடியாத தாளையும் முடியையும் கண்டும் காட்டியும் நின்ற நலமேறிய சம்பந்தன் வரலாற்றை ஆய்ந்து வெளிப்படுத்திய வரலாற்றுப் பொலிவு பெற்ற நால்வர் பெருந்தகைகள் உண்டு.

(1) ***திருஞானசம்பந்தர் சரித்திரம்*** என்ற நூலினை எழுதிய பேராசிரியர், கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் திருஞான சம்பந்தரின் வரலாற்று நிகழ்ச்சிகளோடு தத்துவ நுட்பங்களை இணைத்துக் காட்டி விளக்கம் அமைத்தார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(2) *பன்னிரு திருமுறை வரலாறு* (இரண்டு பாகங்கள்) என்ற நூலினை ஆக்கித் தந்து, தம் வாழ்நாள் முழுவதையும் திருமுறை ஆய்வுக்கென்றே பயன்படுத்திய அருளாளர் பெருந்தகை, திருமுறை ஒன்றனாலேயே உலகந் தழுவிய புகழுடன் வாழமுடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக நின்று, இன்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிற, திருமுறைக் கலைஞர். க. வெள்ளைவாரணனாரவர்கள் புலையடித் தொண்டனாகிய திருநீலகண்டயாழ்ப் பாணனைப் பூசுரன் ஆக்கிய பொல்லாமணியெனவும், தண்டமிழ்ச் சைவசிகாமணி யெனவும் வழங்கப் பெறும் ஞானசம்பந்தப் பெருமான் வரலாற்றில் எழும் சிக்கல்கள் பலவற்றையும் தீர்த்து, விளக்க முறும் வண்ணம், அவ்வரலாற்றை அமைத்துத் தந்துள்ளார்கள்.

(3) **பெரியபுராண ஆய்வுரை** என்ற பொதுப்பெயரில் நான்கு பிரிவுகள் அடங்கிய தனி நூல்களை, தனித்தமிழ் இது எனத் தேர்ந்து சுவைத்த காரணத்தால் தனித்தமிழ் இயக்கங்கண்ட தமிழ்ச்சுவைஞர், தமிழ் மாமுனி. மறைமலையடிகள் தந்த மாணிக்கம், பாவலர் போற்றும் நாவலர் பெருந்தகையவர்கள், அருளாளர்களின் வரலாற்று நிகழ்ச்சி களுக்குச் சான்று உண்டா இல்லையா என்ற ஆய்வினை அடிப் படையாகக் கொண்டு, சான்றுடைய நிகழ்ச்சி இது, சான்று இல்லை யாயினும் ஏற்கலாம் என அமைத்துக் காட்டிய சிறப்போடன்றி, அருளாளர்களின் வரலாறுகளை ஆய்வுரைத் துலாக்கோலில் துணிந்து வைத்து எடைபோடலாம் என எண்ணியும் செய்தும் சைவ உலகிற்குத் துணிவைத் தந்த பெருந்தகை, பேராசிரியர், மறை. திருநாவுக்கரசு அவர்கள் இருந்தண் புகலி, கோலக்கா, ஆவடுதுறை, அரத்துறை ஆகிய இடங்களில் முறையே போனகம், தாளம், பொன், சிவிகை ஆகியவைகளை அருந்திட, ஒத்த, முத்தீச்செய, ஏற இறைவனால் அளிக்கப் பெற்ற பெருந்தகையாகிய தமிழ்விரகர் ஞானசம்பந்தர் வரலாற்றைத் திட்பமும் நுட்பமும் செறிய எழுதி யுள்ளார்கள்.

(4) **தேவார ஒளிநெறி** என்ற தலைப்பில் திருமுறை ஆய்வுப் பணியை மேற்கொண்டு, ஒரு பல்கலைக் கழகத்தில் பல் பேறறிஞர்கள் இணைந்து நின்று செய்ய வேண்டிய பணியை ஒருவராக நின்று செய்து, தமிழும் சைவமும் செம்மாந்து நிற்குமாறு அமைத்துக் கொடுத்த டாக்டர். தணிகைமணி அவர்கள் திருமுறைப் பணி மேற் கொண்டு திருமுறைத் திருக்கோயில் அமைத்த பெருந்தகை யாவார்கள்.

இவ்வாறு, நம்பியாண்டார் நம்பிகள், தெய்வச் சேக்கிழார், கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள், வடசை வள்ளல் இராமலிங்க அடிகள் என முன் வரிசையில் அமைந்த நால்வரும், பேராசிரியர். கா. சுப்பிரமணியப் பிள்ளை, திருமுறைக் கலைஞர். வெள்ளைவாரனனார், பேராசிரியர். மறை. திருநாவுக்கரசனார், தணிகை மணி ஆகிய நால்வரும் அடுத்த வரிசை அமைத்தார்களாக, காலந் தந்த கருத்து வளர்ச்சியையும், உலகந்தழுவிய சிந்தனை வளர்ச்சி யையும் அடிப்படையாகக் கொண்டு, பல் துறைப் புலமை தழுவிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நோக்கில் *திருஞானசம்பந்தர் வரலாற்றுராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும்* என்ற நூலை ஆக்கித்தந்த டாக்டர். சொ. சிங்கார வேலனார் அவர்கள் தேசம் முழுதும் மழை மறந்து ஊண்கெட, செந்தழற்கை ஈசன் திருவருளால் எழில் வீழிமிழலையின்வாய் இஞ்ஞாலம் கவின் பெற்று விளங்குதற்குக் காசின் மழை பொழிந்தவனும், குறுமனம் முன் கலவாத் தமிழாகரன் எனப்பெறுபவனும் ஆகிய ஞானசம்பந்தப் பெருமான் வரலாற்றைத் திறனாய்வு முறையில் அமைத்துத் தந்துள்ளார்கள்.

மேலே காட்டப் பெற்றவை தவிர, திருமுறைப் பதிப்பு என்ற தொண்டினை மேற்கொண்ட பல்வேறு பேரறிஞர்கள் ஆங்காங்கே, வயலார் மருகற் பதிதன்னில் வாள்அரவால் கடியுண்டு, அயலா விழுந்த அவனுக்கு இரங்கி, அறிவழிந்த கயலார் கருங்கண்ணி தன் துயர் தீர்த்த கருணை வெள்ளம் என நின்ற தண்டமிழ் ஞானத் தமிழாகரன் ஞானசம்பந்தன் வரலாற்று நுட்பங்களை விளக்கியுள்ளார்கள். இவ்வாறு, பேராசிரியர்கள், அருளாளர்கள் ஆற்றிய அரும் பணிகளின் செழுமையினாலும், காலச் சூழல் விளைத்த கருத்து வளத்தினாலும் மேலும் பல வினாக்கள் இன்று நம்மிடையே எழுப்பப் பெறுகின்றன. வினாக்களின் அடிப்படையை உளங்கொண்டு, திருஞானசம்பந்தர் வரலாற்று நிகழ்வுகளையும் அருளற்புதங்களையும் முழுமையாக மீளவும் புதிய நோக்குத் திறனாய்வு செய்து விடை அளிக்கவேண்டுவது இன்றியமையாததும் காலந் தழுவியதும் ஆகிய திருமுறைத் திருப்பணி. தேவையை முன்னிட்ட இப்பணி 'திருஞான சம்பந்தர்—ஓர் ஆய்வு' என்ற தலைப்பில் இருபகுதிகளாக அமைக்கப் பெற்றுள்ளது.

அருளியற்கொள்கை (Mysticism) என்பது இன்று அனைத்துச் சமயங்களிலும் காணப்பெறும் ஒரு பிரிவு. அருளனுபவம் பெற்ற அருளாளர்கள் எல்லாச் சமயங்களிலும் அவ்வக் காலங்களில் வாழ்ந்து நின்று, பல அருளற்புத நிகழ்ச்சிகளை நிகழ்த்தியும், திருவருட் பெருமையை விளக்கியும், திருவருள் பற்றிய கருத்தை, வரலாற்றை உருவாக்கியுள்ளார்கள்.

எந்த ஒரு சமயமும் அது வரலாற்றுச் செறிவுடன் கூடிய திட்பமும் நுட்பமும் அமைந்த கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, காலந்தழுவிய வளர்ச்சியைப் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறது என்று எண்ணப் பெறுமானால், அதன் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் தொண்டாற்றிய பெருந்தகைகளுள் முதலிடம் பெற்றவர்கள், பெறுபவர்கள் அருளாளர்களே. அருளாளர்களின் அருளற்புத நிகழ்ச்சிகள் அக்காலத்தே வாழ்கின்ற மக்கட் கூட்டத்தினரை ஒரே சமயத்தில் தம்பக்கல் இழுத்து, திட்பமும் செறிவும் வாய்ந்த சமய உண்மைகளை ஏற்றுக் கொள்ளுமாறு செய்து விடுகின்றன. அறிவாலும் அனுபவத்தாலும் சிறிது சிறிதாக உணர்ந்து, மக்களால் மேற்கொள்ளப் பெறும் நிலையில் ஒரு சமயம் பெறுகின்ற வளர்ச்சிக்கும், அருளாளர்கள் தோன்றி அருளற்புத

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிகழ்ச்சிகளை உண்டாக்குவதால் அச்சமயம் பெறுகின்ற விரைந்த வளர்ச்சிக்கும் பெரிய இடைவெளி உண்டு. அவ்வாறே, ஒரு சமயம் மிக விரைந்து மக்கள் மன்றத்திலிருந்து வெளியேற்றப் பெறுவதற்கும் அவ்வருளாளர்கள் ஒரோவொரு காலத்து நிகழ்த்திய திருவருளற்புத நிகழ்வுகள் பொய்யானவை, அறிவாராய்ச்சிக்கு உட்படாதவை என்று தோற்றுவிக்கப் பெற்ற கருத்தே அடிப்படைக் காரணமாக அமைந்துவிடுகிறது. இவ்வகையில், சைவசமய வளர்ச்சியை உளங் கொண்டு, இன்று மக்கள் மனத்தில் எழும் சமய உணர்வுகளின் அடிப்படைகளைத் தேர்ந்து ஏற்றுக் கொண்டு, சைவசமயத்தில் வரலாற்று மாந்தர்களாக வாழ்ந்து சென்ற நற்பெருங்குரவர்களாகிய அருளாளர்கள் நிகழ்த்திய அருளற்புதங்கள் உண்மையானவை, சான்றுள்ளவை, நிகழக் கூடியவை, அறிவாராய்ச்சியோடு அணுகக் கூடியவை என்ற தலைப்புக்களில் நின்று ஆய்வுகளை வெளிப்படுத்தி யதன் மூலம், அன்று, திருக்கோயிலும் திருக்குளமும் சைவப் பெருமக்களின் திருவுள்ளமும் கல்லும் புதரும் இருளும் மண்டி அழியாதவாறு காத்த உழவாரப் பணியாளர், திருநாவுக்கரசு எனும் ஒரு மகாமந்திரத்தை உயர் பெயராகக் கொண்ட அப்பரடிகள் போலவே இன்றும் அறிவாராய்ச்சி, திறனாய்வு என்னும் புதுமைப் பெயர்களால் சைவசமயம் அதன் வளர்ச்சி ஆகியவை தாக்குறு வண்ணம் அறிவாராய்ச்சி உழவாரப் பணி புரிந்த பெருந்தகை யாளரே மறை. திருநாவுக்கரசனார். அவர்தம் தொண்டு சைவப்பயிர் தழையத் தழைந்த தமிழ்சார் களைநீக்கல் என்னும் பெருந்தொண் டாகும். ஆயினும், உலகத் திறனாய்வாளர்கள் நெருங்கியும், நிறைந்தும், பணி மேற்கொள்வதற்கு வாய்ப்பும் சூழலும் வளர்ந்து வரும் நிலையில், உலகில் நிலவும் பல்வேறு சமயங்களிலும் அவ்வப் போது வாழ்ந்த அருளாளர்களின் அருளனுபவம் பற்றிய இணைப்பு, இணைப்பு மதிப்பீடு பற்றிய ஆய்வுகள், வினாக்கள் பெருகி வருகின்றன.

எனவே, காலவளர்ச்சியோடு விரைந்துவளரும் கருத்து வளர்ச் சியும், விஞ்ஞான வளர்ச்சியினால் சேய்மை என்று கருதப்பெற்றன வெல்லாம் அண்மை என அணையவந்து கொண்டிருப்பதை ஒட்டி எழுகின்ற இணைப்புச் சிந்தனை வளர்ச்சியும் காரணங்களாக நிற்க, எழுகின்ற வினாக்களுக்கு விடைகாண வேண்டிய இன்றியமையாமை ஒன்று. இதற்கு மேலான வேறொரு பணியும் இங்கே தேவையாக அமைகின்றது.

திருவருளின் வழிநின்று திருத்தொண்டர் பெருமையை விளக்க முற அமைத்துக் காட்டிய பெருமை சேக்கிழாரடிகளுக்குண்டு. ஆனால், சேக்கிழாரடிகளின் திருவாக்குக்களின் பொருள் இன்னும் முழுமையாக உணரப் பெறவில்லை என்ற கருத்தினையும் நாம் கொள்ள வேண்டியுள்ளது.

மேலே குறிப்பிடப்பெற்ற இருவகைக் காரணங்களைக் கொண்டு ஆக்கப்பெற்ற இந்நூல் முறையே எட்டு நூல்களாக வெளிவரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டது. சைவசமய நற்பெருங் குரவர்கள் நால்வர்களையும், அவர்தம் அருளிப்பாடுகளையும் கொண்டு அமைக்கும் முறையினை உட்கோளாகக் கொண்டது. இவ் வகையில் முதலாவதாக, திருஞானசம்பந்தரின் வரலாற்று நுட்பம், அருள்நிறை நிகழ்வுகளில் அமைந்த அருளியல் நியதி ஆகியவை முதற்பாகமாகவும், அவர்தம் அருளிப்பாடுகளினால் அமைத்து விளக்கம் செய்யப்பெறும் கொள்கை விளக்கம் இரண்டாம் பாக மாகவும் அமைக்கப்பெறும். இவ்வாறே, நால்வர் பெருந்தகைகளுக் கும் அமைக்கும்போது எட்டு நூல்களாகும்.

இவ்வரிசையில் திருஞானசம்பந்தராகிய, முதல்நின்ற அருட் பெருங்குரவரின் வரலாற்று நுட்பம், அருளியல் நிகழ்வுகளின் அருளியல் அமைதி ஆகியவைகளை விளக்கும் வகையில், **திருஞானசம்பந்தர்-ஓர் ஆய்வு** என்னும் நூலின் முதற்பாகமாக இந்நூல் மலர்கின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. பெருநெறிய பிரமாபுரம்

தமிழும் சைவமும்

தமிழை ஒரு மொழி எனக் கொண்டு, அதனை உண்டாக்கியவன் யார் என்ற வினுவை எழுப்பியும், உண்டாக்கிய ஒருவன் அதனை முதன்முதலாக யாருக்கு விளக்கமாகச் சொல்லிக் கொடுத்தான் என்ற வினுவை முன் வினுவுடன் இணைத்தும் ஆய்வு செய்வது ஒரு வகை. இவைகளுக்கு விடையாக இறைவன் அகத்தியனர்க்குத் தமிழை அளித்தான் எனக் கூறி விடைகாணும் மரபு தொன்று தொட்டு அமைந்து வருகிறது. ஆயினும், இறைவன் முதன்முதல் உண்டாக்கினுன், பின்னர் அவனே அதனை அகத்தியனுக்கு அளித்தான் என்ற மரபுவழிக் கருத்துக்களைவிட, அவ்விறைவன் ஏனைத் தமிழறிஞர்களோடு இணைந்து சங்கமிருந்து தமிழாய்ந்தான் என்ற கருத்து அறிஞர்களிடையே வலிவு பெற்று விளங்குவதையும் காண முடிகின்றது.

> "கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோ டமர்ந்து
> பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந் தமிழ்"

என்ற சான்ருேர் கவியைச் சிந்திக்கும்போது அவ்வுண்மை புலனும்.

இக்காலத்தே நூல் செய்தார் ஒருவர் அந்நூலுக்கு வெயியீட்டு விழா என ஒன்றை அமைத்து, அவ்விழாவில், அந்நூலை ஒருவர் வெளியிட்டுக்கொடுக்க, அதன் முதற்பிரதியை இன்னுர் வாங்குவார் என அமைக்கும் முறைமைக்கும் ஒருவகை மரபுப்பின்னணி உண்டு என்று கூறுமாறு போலவே, இறைவன் தமிழை ஆக்கினுன் என்றும் அதனை முதன்முதல் அகத்தியனர்க்குக் கொடுத்தான் என்றும் வரலாற்று முறையால் நாம் அறிகிருேம். ஆயினும், ஆய்வரங்கம் ஒன்று கூட்டி அவ்வவையில் நூலைப்படித்து விளக்கிக் காட்டி, அதனைக் கேட்டோர் அனைவரும் ஒப்புதல் அளிக்கும் முறையில் நூலை வெளியிடும் மரபுவழியே பெரிதும் பாராட்டப் பெறுவதாக அமைகிறது. இம்முறை அரங்கேற்றம் எனப்பெறும் மரபுமுறையே. இத்தகைய ஆய்வுமுறையில் நூலில் கூறப்பெறும் கருத்துக்களின் உண்மைத் தன்மை, செயற்பாட்டுத் தன்மை முதலியன ஆய்வுக்குரிய பொருள்களாக அமையும். அவ்வகையில் தமிழை ஆக்கியவன் கடவுளேயாயினும், அவனே ஒரு நூலை எழுதி வெளியிடப் புகும்போது, அதனை எழுதி, எழுதியவன் இறைவன் என்று கையொப்பமிட்டுக் கொடுத்துவிட்டாலே போதும் என்ற கொள்கையைத் தமிழகம் ஏற்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வில்லை. அவன் எழுதிய நூலை அவனுடன் புலவர்கள் உடனிருந்து ஆராய்ந்தபின்னரே ஏற்பதும், ஏனையோர் எழுதிய நூலை இறைவ னும் உடனிருந்து ஆராய்ந்த பின்னரே ஏற்பதும் ஆகிய மரபு முறைகள் தமிழகத்தில் பின்பற்றப் பெற்று வந்தன என்பது தெளியக் கிடக்கும் உண்மைகளாம்.

அவ்வாறே, சைவசமய நன்னெறிக்கும் ஒருவகை அமைப்பு இருந்தது என்பது தெய்வச் சேக்கிழார் பெருமான் திருவாக்கினல் உணரக்கிடக்கிறது.

வேதத்தை அருளியவன் இறைவன்; ஆகமங்களை அமைதியுற வகுத்துக் கொடுத்தவன் சிவபரம் பொருள்; கல்லாலின் புடைய மர்ந்து நான்மறை ஆறங்கம் முதல் கற்ற கேள்வி வல்லார்கள் நால் வருக்கும் வாக்கிறந்த பூரணமாய், மறைக்கு அப்பாலாய், எல்லா மாய், அல்லதுமாய் இருந்த தன்னை, இருந்தபடி, இருந்து காட்டிச் சொல்லாமற் சொன்னவர் திருக்கயிலைத் தென்முகக் கடவுள்; திருக் கயிலையில் உமையொரு பாகமாகத் திகழ ஒருமைப் பரம் பொருள் பன்னூறு வகையான ஆகமப் பொருள்களையும் நந்தியெம்பெரு மானுக்கு உபதேசமுறையாற் கூற, அந்நந்தி யெம்பெருமான் உப தேச முறைமையில் இன்னுர்க்குக் கொடுக்க, இவ்வாறு வந்தது இவ் வகை நெறிமுறைகள் என்று கூறும் வரலாற்று முறையானது சிவ பரம் பொருளை வாழ் முதற்பொருளாகக் கொண்டு வழிபடும் சைவ நன்னெறிக்கும் உண்டு. இவ்வகையில் சிவநெறியினை இயற்றிய வன் பெருமையும், ஏற்றவன் பெருமையும் வெளிப்படும். இயற்றிய வன் பெருமை ஏற்றவன் பெருமை என்பவைகளை மட்டுமே கொண்டு சைவநன்னெறியினைத் தமிழகம் ஏற்றும் போற்றியும் வந்தன என்று கொண்டுவிட முடியாது.

தமிழுக்கென ஒரு சங்கம் இருந்து தமிழாய்ந்தது போலவே சைவ சமயத்துக்கும் ஒரு பேரவை இருந்தது. சிவபரம் பொருளே முன்னிட்டு ஒன்றைச் செய்தாலும் அதை ஏற்றுக் கொள்வதும் விலக்குவதும் ஒருவகையில் ஆற்றல்மிக்க பேரவையின் பொறுப்பில் அமைந்திருந்தன என்பதை உணர முடிகிறது. எடுத்துக்காட்டாக, சிவம் என்னும் ஓசையால் உணரப்பெறும் ஒன்றே பரம் பொருள் என்ற கருத்தினை, அவனுல் வெளியிடப்பெற்ற வேதங்களாலோ அல்லது ஆகமங்களாலோ தமிழகச் சைவ உலகம் ஏற்றுக் கொள்வது இல்லை. அவ்வுண்மையை நம்முள் இருந்து, நம்முன்னோர் களாய் விளங்கி, அவர்கள் நுகர்ந்தும் அறிந்தும் வெளிப்படுத்த, அக்காலத்து விளங்கிய மன்றம் அக்கருத்தை ஆராய்ந்து துணிந்து ஏற்றுக் கொள்ளப்பெற்ற காரணத்தினுலேயே, அது தமிழகத்துச் சைவமக்களால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது என்பது தெய்வச் சேக்கிழார் துணிந்து கூறிய முடிபாகும்.

“மதிவளர் சடைமுடி மன்றுளாரை முன்
துதிசெயும் நாயன்மார் தூயசொல்மலர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே"

என்பது பெரியபுராணத்தின் நான்காம் திருப்பாட்டாகும்.

திருத்தொண்டர்கள் எனப்பெறுபவர்கள் யார் என்னில் இப் பேரவையின் உறுப்பினர்களே. அப்பேரவையின் பெயர் "புனிதர் பேரவை" என்பதாம். சிவபரம் பொருளை முன்துதி செய்யும் நாயன் மார் தூய சொற்கள், அச்சொற்களின் பயனைத் துய்ப்பவர்கள் ஆகிய மரபு நெறியைக் கொண்டவர்கள் அமைந்த பேரவை அது. அத் தகைய பேரவை உறுப்பினர்களின் வரலாற்றை, அவர்கள் வாழ்ந்து காட்டிய நெறிமுறைகளை அமைக்க முற்படுகிறேன் என்று தம் பணி யினைத் தொடங்க முற்படும் சேக்கிழார் சைவநெறி உலகில் விளங்கி வெல்வதாக என்று கூறவில்லை. "புனிதர் பேரவை விதிமுறை உல கினில் விளங்கி வெல்கவே" என்று குறிப்பிடுகிறார் என்னில், சிவ நெறியையும் ஆய்ந்து முடிவு செய்யும் உரிமையை அப்பேரவை பெற்றிருந்தது என்பதை நாம் ஏற்பதில் தடையில்லை.

ஆயினும், எந்த ஒன்றையும் ஆக்கவும், அழிக்கவும், மாற்றிக் கொடுக்கவும் வல்ல பரம்பொருள் ஒன்றை அமைக்கும்போது, அதனை ஆய்வுசெய்து ஏற்கவும் தள்ளவும் ஆகிய உரிமை வேறு ஒரு பேரவையிடம் இருக்கிறது என்ற கருத்தை மரபு வழிப்பட்ட சைவ உள்ளம் ஏற்றுக் கொள்ளத் தயங்கும் என்பதும் உண்மையே. அதனை உளங்கொண்ட காரணத்தாலேயே அறிதற்குரிய வரலாற்று நிகழ்வு ஒன்றைத் திருவருளே உண்டாக்கிக் கொடுத்துள்ளது. அதனைக் கீழ்வருமாற்றாற் காணலாம்.

புனிதர் பேரவையின் உறுப்பினர் விறன்மிண்டர். இவர் சேர நாட்டினர். இவர் திருவாரூருக்கு வருகிறார். அங்கே நம்பி யாரூரர் எனப்பெறும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் செயல் ஒன்று தவறுடை யது என்று காண்கிறார். எனினும், சுந்தரரைத் 'தம்பிரான் தோழன்' என்ற சிறப்புத்தந்து, அவரை ஆண்டுகொண்டிருக்கிறான் சிவன் என்பதையும் அறிகிறார். நம்பியாரூரராகிய சுந்தரரின் செயல் புனிதர் பேரவை விதிமுறைகளுக்கு முரண் என்பதை உளங்கொண்ட விறன்மிண்டர், "இவனும் புறகு இவனை ஆட்கொண்ட சிவனும் புறகு" எனக்கூறி, இருவரையும் புறம்பு எனநீக்குகின்றார். பின்னர், நம்பியாரூரர் இறைவனுடன் வந்து, தன் தவற்றை நீக்க வேண்டும் என்றவகையில் திருத்தொண்டத் தொகை பாடுகிறார். திருத் தொண்டத்கொகையைப் பற்றிக் கூறும் சேக்கிழார் தம் உள்ளக் கிடக்கையை இங்கே காணலாம்.

"எந்த ஒன்று வெளிப்படாத காரணத்தால் திருநாவலூரரும் அவரைத் தன் தோழமைதந்து ஆட்கொண்ட சிவனும் புனிதர் பேரவையிலிருந்து விலகியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதோ, எந்த ஒன்று வெளிப்பட்ட காரணத்தால் அவ்விருவரும் மீளவும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புனிதர் பேரவையில் இணைவதற்கு முடிந்ததோ அதுதான் திருத்தொண்டத்தொகை" என்பது திருத்தொண்டத்தொகை பற்றிய சேக்கிழார் கருத்து. இதனை,

"ஞாலம் உய்ய நாம் உய்ய நம்பி சைவநன்னெறியின்
சீலம் உய்யத் திருத்தொண்டத்தொகை முன்பாடச்
செழுமறைகள்
ஓலமிடவும் உணர்வரியார் அடியாருடனும் உளது என்றால்
ஆலம் அமுது செய்தபிரான் அடியார் பெருமை அறிந்தாரார்"

எனப் பெரியபுராணம், விறன்மிண்ட நாயனார் புராணத்து ஒன்பதாம் திருப்பாட்டின் மூலம் உணரலாம். திருத்தொண்டத் தொகையினை அருளிச்செய்தவுடன் நம்பியாரூரர் திருக்கூட்டத்தின் நடுவணைந்தார் என்ற செய்தியை,

"உம்பர் நாயகர் அடியார் பேருவகை தாமெய்த
நம்பி யாரூரர் திருக்கூட்டத்தின் நடுவணைந்தார்"

என்ற பெரியபுராணம், தடுத்தாட்கொண்டபுராணம் 203ஆம் செய்யுளால் உணரலாம்.

மேற்கூறியவற்றால், தமிழாய்ந்த சங்கம் போலவே சைவநன்னெறியினை ஆய்ந்து தெளிதற்கும் உரிய புனிதர் பேரவையானது தக்க விதிமுறைகளை அமைத்துக்கொடுத்துச் சைவம் வாழ வழி வகுத்துக் கொண்டிருந்தது எனத் தெளியலாம்.

மறுமலர்ச்சி இயக்கம்

சிவ பரம்பொருளை வாழ்முதற் பொருளாகக் கொண்டு வழிபட்டு வந்த சான்றோர்கள், மேற்கொண்டொழுகிய சைவநன்னெறியில் ஒருவகை மறுமலர்ச்சியைத் தோற்றுவித்து, அம்மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவராகத் தாமே இருந்து செயற்படுத்திய, சைவ நன்னெறியின் மறுமலர்ச்சித் திருஞாயிறு என விளங்கிய பெருமை திருஞானசம்பந்தருக்கு உண்டு என்பதை உணரும் வகையில், திருஞானசம்பந்தப் பெருமான் வரலாற்றினையும் திருமுறைகளையும் எடுத்து விளக்கும் நம்பியாண்டார் நம்பிகள் திருவாக்கும், சேக்கிழார் திருவாக்கும் நிரலே அமைந்து விளங்குகின்றன. 'புனிதர் பேரவை' என்ற ஒருவகை அமைப்பானது சிறந்து விளங்குவதற்குரிய தொண்டினைத் தொடங்கி நடத்திய பெருமகனாரே திருஞான சம்பந்தர்.

திருஞான சம்பந்தப் பெருமான் தலைமை பூண்டு நடத்திய சைவ மறுமலர்ச்சி இயக்கத்தில் வெளிப்பட அமைத்துக் காட்டிய கொள்கைகள் மூன்று.

1. **கண்ணுற் கடவுளைக் காணலும், காட்டலும்.** தம்பியார் உளராக வேண்டும் என வைத்த தயை — திலகவதியார் மேற்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்ட தவமாகும் தயவு எவ்வாறு திருநாவுக்கரசரை உருவாக்கியதோ, அவ்வாறே, புனிதவதியார் எனப் பெறும் காரைக் காலம்மையாரை முன்னிட்டுக் கொண்டு திருஞானசம்பந்தரின் தொண்டு மணம் விரியத் தொடங்குகிறது.

''கீதம் முன்பாடும் அம்மை'' என்று குறிப்பிடப் பெறும் தெய்வச் சேக்கிழார் வாக்கினுக்கு ஒப்ப, திருப்பதிகம் இசையுடன் பாடி இறைவனை ஏத்தும் மரபினை முதன்முதல் தொடங்கியவர் காரைக்கால் அம்மையாரே. அம்மையார் பாடிய திருவாலங்காட்டுத் திருப்பதிகமே தேவாரத் திருப்பதிகங்களுக்கெல்லாம் மூலமாய், முதலாய் அருளப் பெற்ற திருப்பதிகங்கள். அம்மையார் பாடிய பதிகங்களுக்குத் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் என்ற பெயர் உண்டு. இங்கே இடையில் அமைந்த மூத்த என்ற சொல்லுக்கு உரிய சிறப்புப் பொருள் வேறு உண்டென்னினும், பொதுவாக மூத்த என்பது காலத்தால் முன் தோன்றிய என்ற பொருளையே குறிக்கும் எனக் கொள்ளுவது சைவ மரபு.

பதிகம் என்ற முறையில் பத்துத் திருப்பாட்டுக்களை அருளிச் செய்தபின் பதினொன்றுந் திருப்பாட்டு ஒன்றை அருளி, அதனைத் திருக்கடைக்காப்பு என்ற பொருளில் அமைத்து, அதனுல் திருப்பதிகத்தின் பயனையும் அமைத்துக் கூறும் முறையினை அமைத்துக் காட்டினுர்கள்.

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் இரண்டனுள் முதற் பதிகத்தை நட்டபாடைப் பண்ணில் அமைத்துப் பாடுகிருர்கள் அம்மையார். ஞானசம்பந்தப் பெருமான் பாடிய முதற்பதிகமும் நட்ட பாடைப் பண்ணிலேயே அமைகிறது.

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் இரண்டனுள் முதற்பதிகத்தின் இறுதியில்

> "......... .... காரைக்காற் பேய்
> செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்
> சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாரே"

என்றும், இரண்டாம் பதிகத்தின் இறுதியில்

> "......... .... காரைக்காற் பேய் தன்
> பாடல் பத்தும் பாடி ஆடப் பாவம் நாசமே"

என்றும், திருப்பதிகப்பயன் கூறிமுடித்தமைபோலவே, திருஞான சம்பந்தரும் திருப்பதிகப் பயன் கூறித் திருக்கடைக்காப்புச் செய்யும் மரபு முறையைப் பின்பற்றுகின்ருர்.

அடுத்து, காரைக்காலம்மையார் காலத்தே அமைந்த சில இடர்ப்பாடுகள் அவர்தம் பாக்களின்மூலம் வெளிப்படுகின்றன. அவற்றுள் சில முக்கியமானவை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(1) இறைவனுக்குத் தன்னை ஆளாக ஆக்கிக் கொண்டது உண்மை. ஆளானேனும் அல்லல் அறிய முறையிட்டால் கேளாதது என் கொலோ எனக் கேட்டு, பின்னரும் சொல்கிறார்.

"இடர் களையாரேனும் எமக்கு இரங்காரேனும்
படரும் நெறி பணியாரேனும்"

என்ற மூவகைக் குறைகளையும் எடுத்துக் காட்டித் தமக்கு அவரை அடையக் கூடிய வழியையும் தெளிவுபடக் கூறி அருளவில்லை என்று குறிப்பிட்டு விட்டு, ஆயினும் என் நெஞ்சு அவர்க்கு அன்பு அறுது என்று குறிப்பிட்டார்.

(2) இறைவன் திருவுருவம் பலவாறு பேசப்பெறுகிறது. பல வரலாறுகள் அவனைப் பற்றிப் பேசப் பெறுகின்றன. இவைகளில் எது ஒவ்வும் எது ஒவ்வாது என யான் அறியேன். ஆனால், அனைவரும் அவன் உருவம் வரலாறுகள் ஆகியவை பற்றி ஒவ்வாமை யுண்டு என்று இழித்துப் பேசுகின்றனர்; நீ அவன் அடிமையல்லவா? விளக்கம் கூறு எனக் கேட்டுப் பழித்துரைக்கின்றனர். பிற சமயத் தவர் கூறும் பழியுரைகளை என்னால் கேட்டுக் கொண்டு வாழ இயல வில்லை என்று வருந்துகிறார்.

(3) யான் அடிமை என்பது உண்மைதான். ஆளாகக் கொண்ட நீ உன் உருவத்தை எனக்குக் காட்டினால் என்னகுறை? அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்; இன்றும் திருவுருவங் காண்கிலேன்; உன்னை ஆளாகக் கொண்ட ஆண்டவனின் உருவம் தான் ஏது? என்று வினவுவாருக்கு என்ன பதில் சொல்வேன் என்று வருந்துகிறார்.

காரைக்காலம்மையாரின் காலச் சூழலை உன்னும் போது சைவசமயத்துக் கடவுளின் உருவம், கடவுள் பற்றிய பல வரலாறுகள் பழித்துரைக்கப் பெறும் இழிநிலை. சைவசமயத்து அடியவர்களுக்கு அவ்வினாக்களுக் கெல்லாம் விளக்கம் கூற இயலாத நிலை. புறச்சமயத்தவர்கள் நூலறிவு ஒன்று மட்டுமே கொண்டு, நுழைபுலமும் நுட்ப அறிவும் கொண்டு சிந்திக்காமல் பேசுகிறவர்களாகவே காணப் பெறுகின்றனர். இந்நிலையில், சைவசமயம் ஏச்சுக்கும் பேச்சுக்கும் இழிவுக்கும் இலக்காயினமை கண்டு வருந்தி உரைக்கின்ற அமைப்பை நாம் காண முடிகிறது.

இவ்வகையில், திருஞானசம்பந்தப் பெருமான் சிவபரம் பொருளைக் காணவும் காட்டவும் வல்ல நிலையில் விளங்கிய முதல் அருளாளராகத் தம்மை உலகுக்குத் தந்தவராகிறார். "பெம்மான் இவன்" என்று சுட்டிக் கூறிய வகையில் அவர் ஒரு பேரருளாளர் என்பது ஒரு புறமிருக்க, மூன்றாண்டுக் குழந்தையாயிருந்தமையின் பல நூல்களில் படித்து உணர்ந்த செய்தியைத் தாம் நேரில் கண்ட தாகப் பாடுகிறது போலும் என்று எண்ணவும் இடமில்லாது போயிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. இறைவன் தானே வலிய வந்தருளுதல் "இடர்களை யாரேனும், எமக்கிரங்காரேனும், படரும் நெறிபணியாரேனும்" என்று அம்மையார் வருந்திய வருத்தத்துக்கு மாருக, திருஞான சம்பந்தப் பெருமான் திருக்கைகள் தாளமிடுங்கால் வருந்துமே யென்று உலகவர் காணப் பொற்ருளம் வழங்கியதும், அவர்தம் சீறடிகள் வருந்துமேயென்று முத்துச் சிவிகையைத் தானே வலிய வந்து அளித்ததும் ஆகிய அருட்செயற்பாடுகளை ஞானசம்பந்தர் சிவபரம் பொருள் மூலம் செய்யுமாறு அமைத்ததன் நோக்கம் உயிர்கள் பொருட்டுத் தாமே இரக்கங் கொண்டு அனைத்தையும் அளிப்பவன் சிவன் என்ற கருத்தைப் புறச்சமயத்தவரும் உணரு மாறு செய்தல் என்பதே.

3. பெண்ணினல்லாளொடுங் கூடிய பெருந்தகையாய் அவனே வந்து ஆளாகக் கொண்டான்

காரைக்காலம்மையாரிடம் பலரும் இழிவாகப் பேசி, எடுத்து வீசிய வினுவானது இறைவன் திருவுருவம் பற்றியது. அதனை விளக்கும் போக்கில் பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்தது எனக் கூறி, அப்பரம் பொருள் உயிர்களாகிய நம்மை ஆளாகக் கொள்ளவரும் பணியில் பல்வேறு வடிவங்களை மேற் கொள்கிறது என்றும், இறைவன் உயிர்களை நோக்கி வரும் நெறியே சைவ சமய நெறி; உயிர்கள் இறைவனை நோக்கிச் சென்று அடைய வேண்டும் என்பதை வலியுறுத்துவது சைவ சமய நெறி அன்று என்றும் எடுத்துக்காட்டி, சைவசமயத்தில் ஒருவகை மறுமலர்ச்சி யைத் தோற்றுவித்த பெருந்தகையராகத் தம்மை அமைத்துக் கொண்டு விளக்கம் கூறுவதை முதற் பதிகத்திலேயே காண முடி கிறது.

மூன்று வயதுக் குழந்தையாயிருந்து திருப்பதிகம் அமைத்தருளும் காலத்திலேயே, புத்தரும் சமணரும் புறங்கூறியும், நன்னெறியொடு படாதவைகளை அமைத்து இழிவாகப் பேசியும் வருகிருர்கள் என்பதை எடுத்துக்காட்டி, அவர்கள் சமய உண்மைகளைப் பேசும் போது, பொதுவாக மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறி களைக் கூடக் கடைப்பிடிப்பதில்லை என்று கூறும் நிலையைத் திருவரு ளாற்றலாற் பெற்று, அதனை எடுத்து விளக்குவாராயினர்.

இவ்வாறு, சைவ சமயத்தைப் புத்துணர்வு பெறச் செய்து, புதிய விளக்கங்கள் பலவற்றை எடுத்துக் கூறியும், செயற் படுத்திக் காட்டி யும் வாழ்ந்து சிறந்த அருளாளர் என்ன நின்றவரே திருஞான சம்பந்தப் பெருந்தகையார்.

மலையரையன் மடப்பாவை அளித்த சிவஞானத் தெள்ளமுதை வாய்மடுத்த சிறுமதலை எனத்தகும் பாலருவாயராகிய திருஞான சம்பந்தப் பெருமான் தம் தந்தையே முதலாக அனைவருக்கும் 'என்னை இது செய்த பரம்பொருள் இவனே' என்று சுட்டிக் காட்டு முகத்தான் அருளிய முதலாந் திருப்பதிகத்தினை அடிப்படையாகக் கொண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்பெருமான் சைவ சமயம் பற்றியும், தாம் மேற்கொண்ட தொண்டு பற்றியும், உலகியற் பின்விளைவு பற்றியும் குறிப்பிட்டருளிய செய்திகள் இவை இவை என்று எடுத்து வழங்கிய பெருந்தகையாளர்கள் உண்டு. இனிவரும் பல்வேறு ஆய்வுகளுக்கெல்லாம் மூலமாக நின்று விளங்கும் தன்மையுடைய முதற் பதிகத்துத் திருக்கடைக் காப்புத் திருப்பாட்டினை இங்கே காணலாம்.

"அருநெறிய மறை வல்ல முனி அகன் பொய்கை அலர் மேய
பெருநெறிய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் தன்னை
ஒரு நெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரை செய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே"

பதிகப் பெருவழி கண்ட பாலறாவாயர்

உறவும் பொருளும் ஒண்போகமும் கல்வியும் கல்வியுற்ற துறவும் துறவுப் பயனும் காழியர் கோன் திருநாமங்களே என்று அருளாளர்களால் பாராட்டப் பெறும் திருஞானசம்பந்தப் பெருந்தகை 'பதிகப் பெருவழி' கண்டதன் மூலம் அளவிடற்கரிய காலங் கடந்த பெருமையுடைய சைவ நன்னெறியை மறுமலர்ச்சி இயக்கமாக மாற்றி, அதற்கு இயக்க வடிவம் கொடுத்தும், செயற்படுத்திக் காட்டியும் தொண்டாற்றிய முதற் பெருந் தொண்டர் என வரலாற்றுப் பெருமை படைத்தவராகிறார்.

பொருந்திடு ஞானத் தமிழாகரராகிய திருஞானசம்பந்தர் திருந்திய தோணிபுரத்துக்கு இறைவன் திருவருளால் தொடங்கிய பதிகப் பெருவழியானது தன்னுண்மை நிலையில் முழுமையாக வளர்ந்து சிறந்து 'புனிதர் பேரவை' என்ற பெயருடன் வளமும் வாழ்வும் சுரக்கும் நிலையில் அமைந்து விளங்கிய சிறப்பினைப் பெரிய புராணத்துப் புனிதர் பேரவை நிகழ்ச்சிகளால் அறியலாம்.

சுரந்த திருமுலைக்கே துய்ய சிவஞானம் சுரந்துண்டார் பிள்ளை என்று புகழப் பெறும் காழிக் கவுணியக்கன்று தாம்பாடிய முதற் பதிகத்தின் திருக்கடைக் காப்புத் திருப்பாட்டில் அமைத்துக் காட்டியருளிய, "பெருநெறிய பிரமாபுரம்" என்றும் "திருநெறிய தமிழ்" என்றும் சுட்டியருளிய தொடர்களை அடிப்படையாகக் கொண்டு,

"பதிகப் பெருவழி காட்டப்
பருப்பதக் கோன் பயந்த
மதியத் திருநுதல் பங்கன்
அருள்பெற வைத்த எங்கள்
நிதியை"

என்று, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியின் இரண்டாஞ் செய்யுளிலும்;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ஆறது ஏறுஞ் சடையான் அருள்
மேவ அவனியர்க்கு
வீறது ஏறுந் தமிழால் வழி
கண்டவன்''

என்று, ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தத்தின் ஐந்தாஞ் செய்யுளிலும் நம்பியாண்டார் நம்பிகள் விளக்கமுற எடுத்துக் காட்டி விளக்கியருளியுள்ளார்கள்.

பதிகப் பெருவழியைக் கால்கோள் செய்த பெருமை காரைக் கால் அம்மையாருக்கே உண்டெனினும், அம்மையாரை உடன் கொண்டு, அம்மையைச் சார்ந்து வரும் அருள்நெறி இளவலாக அமைந்த ஞானப்பெருந்தகை,

"இடர் களையாரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறி பணியாரேனும்''

எனத் திருவாலங்காட்டுப் பதிகம் அருளுவதற்கு முன்னால் அளித்த அற்புதத் திருவந்தாதிக் கருத்துக்களையே உடன் கொண்டு தாம் மேற்கொள்ள வந்த "திருப்பதிகப் பெருவழியை'' அமைத்தார்.

"துயரிலங்கும் உலகில் பலவூழிகள் தோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங்கு பிரமாபுரம்''

என்று முதற்பதிகத்தினுள் ஞானசம்பந்தப் பெருந்தகை எடுத்து விளக்கும் கருத்துக்களை நோக்கும் போது, பிரமாபுரமும் சைவ நன்னெறியும் இணைந்து நின்ற வகையில் பெற்ற வரலாற்றுத் தாக்குதல்களையும், தாக்குதல்களுக் கெல்லாம் ஈடுகொடுத்துத் தனித் தன்மையை நிலை நாட்டித் தன் பெயரை இலங்க வைத்ததன் காரணம் அது தன்னகத்துக் கொண்ட பெருநெறிப் பண்பே என்பதையும் இணைத்துக் காட்ட முற்பட்ட தொடரே "பெருநெறிய பிரமாபுரம்'' என்று கருதிய நம்பியாண்டார் நம்பிகள்,

"பார் மண்டலத்தினிற் பன்னிரு
பேரொடு மன்னிநின்ற
நீர் மண்டலப் படப்பைப் பிர
மாபுரம் நீறணிந்த
கார்மண்டலக் கண்டத்து எண்தடந்
தோளன் கருணை பெற்ற
தார் மண்டலமணி சம்பந்தன்
மேவிய தண்பதியே''

என்று, தாம் திருஞானசம்பந்தரைப் பாடவேண்டும் என்று எண்ணித் தொடங்கிய ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி என்ற நூலின் முதற் பாட்டிலேயே குறிப்பிட்டுக் கூறி, இரண்டாம் பாட்டின் முதலிலேயே "பதிகப் பெருவழி காட்ட வந்த எங்கள் நிதி'' என்று எடுத்துக் கூறியருளுவாராயினர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரமாபுரத்துக்குப் பன்னிரு பெயர்களிருப்பினும் முதற்பதிகத்தில் 'பிரமாபுரம்' என்ற பெயரையே எடுத்தாளும் குறிக்கோளையும் "பெருநெறிய பிரமாபுரம்" என்று ஞானசம்பந்தர் காட்டிய இணைப்பையும், பதிகப் பெருவழி என நம்பியாண்டார் நம்பிகள் அமைத்த இணைப்பையும் இணைத்துச் சிந்தித்தால் ஓர் உண்மை புலப்படும்.

பிரமாபுரத்தை ஒத்த நிலையினதே சைவசமயம். காலங்கடந்த வரலாற்றுப் பெருமையுடைய சைவசமயம் பன்னிரு முறை தாக்குண்ணப் பெற்றது. ஒவ்வொரு முறை தாக்குதலுறும் போதும் ஒவ்வொரு கொள்கையை மறுமலர்ச்சிக் கொள்கையாக மலர்வித்து, அக்கொள்கையின் சிறப்பினுல் எதிர்ப்பினைத் தாங்கி நிற்கும் ஆற்றல் பெற்றுப் பீடுற விளங்கிய பெருமையினையுடையது சைவசமயம். பன்னிரண்டு உயர்பெருங் கொள்கைகளின் பெருமையால் பெரு நெறியுடையதாகிய சைவமாயிற்று. இவ்வகையில் திருப்பதிகப் பெருவழியானது சைவநற் சமயம் பன்னிருவகைக் கால அமைப்புக் களில் மலர்வித்துக் கொண்டு பீடு பெற நின்றமைக்குக் காரணமாகிய பன்னிரு வளமார் பெருங்கொள்கைகளைக் கொண்டு பெருநெறியாக விளங்கி வருகிறது என இணைத்துக் காணவேண்டும்.

"ஊர்பரந்த உலகின் முதலாகிய ஓர் ஊர் இது என்னப்
பேர் பரந்த பிரமாபுரம்"

என்றும்,

"கருமை பெற்ற கடல் கொள்ள மிதந்ததோர் காலம் இது என்னப்
பெருமை பெற்ற பிரமாபுரம்"

என்றும் வரையறைகளுடன் எடுத்து விளக்கியருளுவராயினர்.

திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் திருவருள் பெற்ற சிறப் பினையுடையவர் நம்பியாண்டார் நம்பிகள் என்பது ஒருபுறமிருக்க, நம்பியாரூரராம் தம்பிரான் தோழர் அருளிய திருத்தொண்டத் தொகை என்னும் திருவருட் பெருநூலைத் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரே உபதேசிக்க, திருவருள் உணர்வுடன் திருத்தொண்டத் தொகையை உபதேச முறையாற் கேட்கும் பேற்றினைப் பெற்றவர் நம்பியாண்டார் நம்பிகள். திருஞானசம்பந்தர் வரலாற்றை அருள் நுட்பம் கெழும அறிந்துரைக்கும் பேறு பெற்றவராதலின், "பெரு நெறிய பிரமாபுரம்" எனப் பெருநெறியையும் பிரமாபுரத்தை யும் இணைத்து, ஞானவாரமுதமுண்ட பிள்ளையார் அருளியதன் நுட்பத்தை உணர்ந்து, பிரமாபுரம் பற்றிய குறிப்பு ஒன்றினைக் குறிப் பிட்டருளுகின்ருர்.

பிரமாபுரம் பன்னிருமுறை கடல்கோளால் தாக்குண்ணப் பெற்றது. பன்னிரண்டு முறையும் அழியாமல் தன்னை-தன்தனித் தன்மையை இவ்வுலகில் நிலைநாட்டிய பெருமையுடையது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"... ... ... ஆலித்து
மன்னிருகால் வேலைவளர் வெள்ளத்து உம்பரொடும்
பன்னிருகால் நீரில் மிதந்தவூர்"

என்று, நம்பியாண்டார் நம்பிகள் தாம்பாடிய **ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை** என்ற நூலின் 55 ஆம் கண்ணியில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

பன்னிரண்டு முறை தாக்கப்பெற்ற காலத்தும் அழியாமல் நின்றது மட்டுமல்லாமல், அவ்வம் முறையும் ஒவ்வொரு சிறப்புப் பெற்றுத் தன்னை வளர்ச்சியோடு விளங்க வைத்துக் கொண்ட பெருமையுடையது பிரமாபுரம் என்ற குறிப்பினை உணர்த்துகின்றார் நம்பியாண்டார் நம்பிகள்.

பிரமாபுரம் எனப்பெறும் சீகாழிக்குப் பன்னிரு பெயர்கள் உண்டு. இதனைத் தெய்வச் சேக்கிழாரடிகள்,

"பிரமபுரம் வேணுபுரம் புகலி பெரு வெங்குருநீர்ப்
பொருவில்திருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சை வயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்"

என்று கூறும் **பெரியபுராண** 1917ஆம் திருப்பாட்டினிற் காணலாம்.

பன்னிரு முறை நீரில் மிதந்தபோது பன்னிரு பெயர்களைத் தாங்கும் நிலை பெற்றதோடன்றி, பன்னிரு பெயர்களுக்குரிய பண்பு களையும் கொண்டு திகழ்கின்ற பிரமாபுரம் என்று குறிப்பிட்டுக் கூறும் வகையில்

"... ... ... ஏய்ந்த
புகலி கழுமலம் பூம்புறவம் என்றுஇப்
பகர்கின்ற பண்புற்றதாகித் திகழ்கின்ற
மல்லைச் செழுநகரம்"

என்று **ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலையின்** 58, 59ஆம் கண்ணிகளை நம்பியாண்டார் நம்பிகள் அமைத்துக் காட்டி யுள்ளார்கள்.

திருஞானசம்பந்தர் தாம்பாடிய ஏகபாதத் திருப்பதிகத்தினுள் பன்னிருவகைப் பெயர்களையும் எடுத்துக்காட்டி, அவைகளால் அமைக்கப்பெறும் பன்னிருவகையான சைவ மறுமலர்ச்சிக் கருத்துக் களை இணைத்துக்காட்டி முடிக்கின்றார். இக்கருத்து விரிவாகப் பின்னர் விளக்கப்பெறும்.

பன்னிரு வகையான கால அமைப்புக்களில் பெற்ற வரலாற்றுப் பின்னணியையும், பன்னிரு வகையான பேரியற் சைவ மறுமலர்ச்சிக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொள்கைகளேயும் அவ்வப்போது உடனிருந்து கண்டு உணர்ந்த பெருந்தகையாகப் பாலறுவாயர் அமைந்திருக்க வேண்டும் என்றும், அவ்வாறு பல்வேறு காலகட்டங்களில் விளக்கம் பெற்ற கொள்கைகளே ஒன்ருக இணைத்தறிந்து உணர்த்த முற்படும் பெருந்தொண்டினே ஏற்று, இவ்வுலகம் உய்ய அவதாரம் செய்த பெருந்தகையே திருஞானசம்பந்தச் சைவசிகாமணி என்று கருதலாம் என்றும் கொள்ளும் வகையில்,

''ஒருநெறிய மனம் வைத்து உணர் ஞான சம்பந்தன்''

என்று தம்மை அறிமுகப்படுத்தும் அருளுரையை முதற்பதிகத்தின் திருக்கடைக்காப்பினுள் அமைத்துத் தெளிவுபடுத்தினர் என்று கொள்ளுதல் பொருந்துவதே.

பன்னிரண்டும் பதினறும்

திருஞானசம்பந்தப் பெருந்தகை இந்நிலவுலகில் பதினறுண்டுகள் வாழ்ந்தார் என்றும் பதினறுயிரம் பதிகங்கள் அருளினர் என்றும் வரலாறு அமையும். இதனேப்,

''புண்ணியப் பதினறுண்டு பேர் பெறும் புகலிவேந்தர்''

என்று சேக்கிழார் பெருமானும் அமைத்தருளுகின்ருர்.

புண்ணியப் பதினறுண்டு என்ருலும், பாலறுவாயர் திருவருட் பெருநெறியில் தொண்டாற்றி வாழ்ந்த காலம் பன்னிரண்டு ஆண்டுகளே என்றுதான் கொள்ள வேண்டி அமைகின்றது. முன்னர்ப் பன்னிருமுறை உடனிருந்து கண்ட சைவப் பெருநெறியின் பன்னிருவகைப் பீடுசார் நெறிகளே ஒரு நெறிய மனம் வைத்துணர்ந்து, பதிகப் பெரு வழி என்ற ஒரு தொகையாக்கி, அதன் பன்னிருவகைப் பீடுசார் நெறிகளேயும் ஏறு தமிழால் வீறு பெறச் செய்யும் திருவருட் பெரு நெறியில், பன்னிரண்டாண்டுகள் தொண்டாற்றியுள்ளாராதல் வேண்டும்.

பன்னிரண்டு கால அமைப்புக்களில் நின்று வெற்றி பெற்ற பீடுசார் பன்னிருவகைக் கருத்துக்களே, 'திருப்பதிகப் பெருவழி' எனப் பெயரிடு முகத்தால் ஆறதேறுஞ்சடையான் அருள்மேவ அவனியர்க்கு வீறது ஏறும் தமிழால் வழிகாணுதல் என்ற தொண்டு முறையில் ஒரு தொகையாக்கி நிறுத்தி, அவைகளேப் பன்னிரண்டு ஆண்டுகளில், பன்னிருவகையான அருளியல் நிகழ்ச்சிகளின் மூலம் இவ்வுலகில் விளக்கிக் காட்டித் தொண்டாற்றிய சைவசிகாமணி என்று கொள்வதும் ஒருவகையில் திருஞானசம்பந்தப் பெருமானின் அனேத்துச் செய்திகளேயும் ஒருசேர அமைத்து நோக்கித் தெளிவு பெறுதற்கு ஒரு வழியாக அமையும் எனக்கொள்ளலாம். இவ்வகையில்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"குவளைக் கருங்கட் கொடியிடை
துன்பந் தவிர அன்று
துவளத் தொடுவிடந் தீர்த்த
தமிழின் தொகை செய்தவன்"

என்று வரும் ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம் என்னும் நூலின் மூன்றும் திருப்பாட்டில் அமைந்த'தமிழின் தொகை' என்பதற்குத் தமிழ்ப்பதிகம் என்ற பொருள் மட்டுமேயன்றி, 'தொகை' என்பது பன்னிரு பெருநெறிகளை உடன் கொண்ட தொகையாகக் கொள்ள வேண்டும் என்று நம்பியாண்டார் நம்பிகள் உணர்த்துவதாகவும் கொள்ளலாம்.

இதனை அரண் செய்யும் வேறு ஒரு சான்றும் உண்டு. திருஞான சம்பந்தப் பெருந்தகை இந்நிலவுலகில் பதினாறு ஆண்டுகள் வாழ்ந்தாலும் அவருக்குத் திருஞானசம்பந்தர் என்ற ஒரு பெயர் தான் உண்டு. அந்த ஒரு பெயரால் தான் அவர் இந்நிலவுலகில் வாழ்ந்தார் என்று நம்பியாண்டார் நம்பிகள் குறிப்பிடுவதையும் சிந்திக்க வேண்டும்.

திருஞானசம்பந்தர் இந்நிலவுலகில் எளிவந்த நிலையில், எழில் அரைஞாண் மணிவடம் தழங்க, துளிவந்த கண்பிசைந்து புனிதவாய் மலர்ந்தழுதபோது, எங்கள் அரன் துணையாம் கிளி வந்த சொல்லி பொற் கிண்ணத்தில் ஞான அமிர்தளித்த நிகழ்ச்சிக்கு முன், அவர் இந்நிலவுலகில் நிலவிய மூன்றாண்டுகளும் அவர் எத்தகைய பிள்ளைத் திருநாமமும் இன்றியே வாழ்ந்த ஆண்டுகள். எந்த ஒரு பெயராலும் அவர் குறிப்பிட்டுக் கூறப் பெற வாழ்ந்தாரில்லை என்பதன் கருத்து, அவ்வாண்டுகள் அவர்தம் வாழ்வில் கணக்கில் கொள்ளப் பெரு ஆண்டுகள் என்று கொள்ள வேண்டியன என்ற கருத்து நம்பியாண்டார் நம்பிகளுக்கு அமைந்திருக்கும் என்று கருதலாம். இதனை,

"......... .. .. தீதறுசீர்க்
காலத் தொகுதியும் நான்மறையின் காரணமும்
மூலப் பொருளும் முழுதுணர்ந்த—சீலத்
திருஞான சம்பந்தன் என்றுலகம் சேர்ந்த
ஒரு நாமத்தால் உயர்ந்த கோவை"

என்ற, ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலையில் 68, 69ஆம் கண்ணிகளின் மூலம் உணர்ந்து தெளியலாம். இக்கருத்தை அரண் செய்வதாக வேருரு கருத்தையும் நாம் கொள்ளலாம்.

ஞானபோனகரும் ஞானத்தமிழாகரரும் ஆய திருஞான சம்பந்தப் பெருந்தகை மதுரைக்கு ஏகியபோது, அமணர் கொடுஞ் செயலுக்குப்பின், அரசனுக்கு ஏற்பட்ட வெப்பு நோய் தீர்ப்பான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டி, ஆளுடைய பிள்ளையாரை அழைப்பதற்கென்று பாண்டி மாதேவியாரும் பரிவுடை அமைச்சனராகிய குலச்சிறையாரும் சென்று விண்ணப்பஞ் செய்ய, சண்பைக் காவலரும் "ஈண்ட அழையும்" என்றருளிச் செய்தபின், இருவரும் சென்று ஞான சம்பந்தப் பெருமானைக் காண்கிருர்கள். அவர்தம் காட்சியில் திருஞானசம்பந்தப் பெருமான் எவ்வாறு தோற்றம் பெற்ருர் என்பதை விளக்கும் வகையில்,

"ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்"

என்ற திருப்பாட்டாகச் சேக்கிழார் திருவாக்கு மலர்கின்றது. இதனுள், "வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்து" என்ற அமைப்பும் மூன்றும் பிறைக்கால எல்லையளவுவரை தன்னைத் தோற்றிக் கொள்ளாதிருந்து, நான்காம்பிறை முதலாகத் தன்னைத் தோற்றியும் வளர்த்தும் வருகிற நிலவின் புறத்தன்மை ஒப்பும் திருஞானசம்பந்தர்க்கு உண்டு என்ற கருத்தைக் கொள்வதில் தடையில்லை.

பிறையும் முழுநிலவும் போலக் கொண்டு பதினுறுகலைகள் ஒரு வகை முழுமையின் நிறைவின் அழியாத் தன்மையின் அமைப்பாவன எனக்கொண்டு, குறிப்பிட்டுத் தோற்றிக் கொள்ளமுடியாத நிலையில் முதன் மூன்று படிநிலைகள் கழிய, நான்காவது தொடங்கிக் கணக் கிடுமாறு போல முதன் மூன்ருண்டுகள் ஒரு பெயராலும் குறிப் பிட்டுச் சொல்ல முடியாதவாறு கழிந்துவிட, ஞானப்பாலுண்டது முதலாக அமையும் பன்னிரண்டாண்டுகள் திருப்பதிகப் பெரு வழியை நாட்டியும் வளர்த்தும் தொண்டாற்றியவர் ஞானசம்பந்தப் பெருந்தகை என்று கொள்ளல் வேண்டும்.

பதினுறு என்ற முழுமையில் நின்று திருப்பதிகப் பெருவழியை, தமிழால் காணும் பெருநெறியை நிறைவுறச் செய்த பெருந்தகையார் திருஞானசம்பந்தர் என்பதை உளங்கொண்டு

"புண்ணியப் பதினுருண்டு பேர் பெறும் புகலி வேந்தர்"

எனச் சேக்கிழார் பெருமான் கூறிச் சிறப்பிக்கின்ருர்.

திருஞானசம்பந்தர் 'தோடுடைய செவியன்' என்று எடுத்த மொழித் திருப்பதிகம் முழுவதிலும் 'பிரமாபுரம்' என்ற வழக்கையே எடுத்தாளுகின்ருர். 'பிரமபுரம்' என்பதற்குப் பிரமன் வழிபட அவனுக்கு அருள் புரிந்த தலம் என்று பொருள் கொள்வது பொது மரபு. ஆயினும், திருஞானசம்பந்தர் இம் முதற்பதிகத்திற் பிரமாபுரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பலவகையான பெருமைகளைக் கொண்டு விளங்குவது என்று அதனுடைய தனிப்பெருமை விளங்கும் வண்ணம் அமைத்துக் காட்டுகின்றார்.

''ஊர்பரந்த உலகின் முதலாகிய ஓரூர் இதுஎன்னப்
பேர்பரந்த பிரமாபுரம்''

என்றும்,

''கருமைபெற்ற கடல்கொள்ள மிதந்ததோர் காலம் இதுஎன்னப்
பெருமை பெற்ற பிரமாபுரம்''

என்றும்,

''துயரிலங்கும் உலகிற் பலவூழிகள் தோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங்கு பிரமாபுரம்''

என்றும்,

''தாள் நுதல் செய்து இறைகாணிய மாலொடு தண்டாமரையானும்
நீணுதல் செய் தொழிய நிமிர்ந்தான் ....
....
பேணுதல் செய் பிரமாபுரம்''

என்றும் கூறியருளிய குறிப்பினை உளங் கொண்டு நோக்கும் போது, பெருமையுடையது என்னும் பொருளில் பெருநெறியைத் தன்னகத்துக் கொண்டது என்னும் பொருளில் *பிரமாபுரம்* என நெடிலோசை படக் கூறியிருக்கலாம் எனவும் கொள்ளக் கிடக்கிறது.

முதற்பதிகத்தின் திருக்கடைக் காப்பினுள் பிரமாபுரம் எவ்வாறு பன்னிருமுறைக் காலக் கோட்பாடுகளிலும் அழியாது பீடுபெற நின்றது என்பதை உணர்த்தும் முறையில்,

''அகன் பொய்கை அலர் மேய பெருநெறிய பிரமாபுரம்''

என அமைத்துக் காட்டினார். உலகம் அகன் பொய்கையாக, அதன் மேல் வீறுகொண்டு நிற்கும் தாமரையைப் போல் பெருநெறியில் விளங்குவது பிரமாபுரம் எனவிளக்கி, அவ்வாறே, அருநெறிய மறை வல்ல முனிவனாகிய பரம் பொருள் தம்முடைய மறைவல்லராம் தன்மையை மாற்றிக் கொண்டு, இப்பிரமாபுரத்தில் எனக்குரிய பெம்மானாக வந்து பொருந்தினான் என்றும் அமைத்தருளினார்.

அருநெறிய மறை வல்ல முனிவனின் மறைநெறிப்படி வாழ்ந்து, அவன் வழிபடப் பிரமபுரமாக இருந்த அத்தலத்தில், அப்பிரமன் அருநெறிய மறை வல்ல முனிவனின் அருள்பெற்றுச் சிறந்த வரலாறு ஒருவகை.

பிரமன் வழிபட அவனுக்கு அருள்புரிந்த அருமறை வல்ல முனிவன், பிரமபுரம் பெரு நெறியை இணைத்து நின்றதால் பிரமாபுரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எனப் பீடுபெற நின்ற காலத்தில் பெம்மானைத் தம்மை மாற்றிக் கொண்டு வந்து அமைய, அவனைத் திருநெறிய தமிழால் அறிந்தும் நுகர்ந்தும் அவ்வாறே மற்றவரும் அறியவும் நுகரவும் தொண்டு செய்து சிறந்த ஞானத்தமிழாகரர் வரலாறு வேறு ஒருவகை.

இவ்விருவகை வரலாறுகளையும், இருவகை நெறி நின்றோர்களையும் இணைத்து நிறுத்தி, இருவருடைய செயல்களையும், வாழ்ந்த ஆண்டையும், பெற்றபலனையும் எடுத்துக் காட்டி, அருமறை நெறியமைந்த பிரமபுரத்துக்கும், வீறதேறுந்தமிழால் அமையும் திருப்பதிகப் பெருவழி என்னும் பெருநெறிய பிரமாபுரத்துக்கும் அமைந்த வேற்றுமையை எடுத்துக் காட்டியருளுகின்றார் சேக்கிழார்.

"எண்ணிலாண் டெய்தும் வேதாப் படைத்தவள் எழிலின் வெள்ளம்
நண்ணுநான் முகத்தாற் கண்டான் அவளினும் நல்லாள் தன்பால்
புண்ணியப் பதினா றுண்டு பேர்பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிர முகத்தாற் கண்டார்."

என்பது பெரியபுராணம் 3012 ஆம் திருப்பாட்டாகும்.

பிரமன் எண்ணில்லாத ஆண்டு வயதுடையவன். அவன் படைத்த பெண், அப்பெண்ணின் அழகைத் தன்னுடைய நான்கு முகங்களாற் காணும் பேறு பெற்றான்.

திருஞானசம்பந்தர் பதினாறே ஆண்டு வயதினர். எலும்பைப் பெண்ணாக்கிய நிலையில் படைக்கப் பெற்ற பெண், பிரமன் படைத்த பெண்ணை விட நல்லவள். வினைக்கீடாகிய பெண்ணையே பிரமன் படைத்தான். வீறதேறுந் தமிழால் ப்திகப் பெருவழி காட்டும் பெரு நெறியால் விளங்கும் பெண்ணைப் படைத்தார் புகலிவேந்தர். பிரமன் தன் நான்கு முகங்களால் அவளுடைய அழகைத்தான் பார்க்க முடிந்தது. ஆனால், பெம்மான் எனப் பெறும் கண்ணுதற் பரம் பொருளின் திருவருளையே, கருணை வெள்ளத்தையே ஆயிர முகங்களாற் காணவும், காட்டவும் ஆகிய பேறு பெற்றார் ஞான சம்பந்தர் என்று சேக்கிழார் பெருமானின் அருள் வாக்கின் நுட்பம் அறிந்து போற்றுதல் வேண்டும்.

எனவே, பிரமன் வழிபட்டுப் பேறு பெற்ற பிரமபுரம் ஒரு பாலாக, பெரு நெறிய பிரமாபுரமாக அது மலர்ந்த வரலாற்றை உளங் கொள்க. திருநெறிய தமிழ் வழியிலமைந்த திருப்பதிகப் பெரு வழியை இவ்வுலகில் தோற்றுவித்து, வளர்த்துத் தொண்டாற்றிய முதற்பெருந் தலைவராக நின்றார் சம்பந்தர். திருப்பதிகப் பெருவழிச் சைவ சமயம் ஒரு வகை மறுமலர்ச்சி இயக்க உருப்பெற்ற சைவ சமயம் என நிற்க, அதன் தனிப்பெருந் தலைவராக நின்று அதனை வளர்த்து, உலக மக்களுக்குத் திருப்பதிகப் பெரு நெறியைத் தீந்தமி ழால் செயற்படுத்தித் தந்தருளிய முதற்குரவரே காழிக்கவுணியக் கன்றெனும் சைவ சிகாமணியாக நின்ற திருஞானசம்பந்தர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடிப்புரை

இத்தலைப்பில் அமைக்கப் பெற்ற செய்திகளின் தொகுப்பைக் கீழ்க்கண்டவாறு அமைத்துக் கொள்ளுதல் மேல் வரும் செய்திகளை இணைத்துச் சிந்திக்கத் துணை புரியும்.

தமிழைப் போலவே சைவ நன்னெறிக்கும் புனிதர் பேரவை என்ற அமைப்பு இருந்தது; அத்தகைய அமைப்பு உருவாவதற்குரிய தொண்டினை - சைவ மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்தவர் திருஞானசம்பந்தர்; காரைக்காலம்மையாரை ஒட்டியே பதிகப் பெருவழியைத் தொடங்கிய அவர் மூன்று அடிப்படை நெறிகளை விளக்க முற்பட்டார்; பெருநெறிய பிரமாபுரம் என்று கூறியருளிய அவர் பன்னிரு கடல்கோளுக்குத் தாக்குறுது பீடு பெற நின்ற பிரமாபுரம் பன்னிரு பண்புகளால் பன்னிரு பெயர்களைப் பெற்றது போலவே சைவ சமயமும் பன்னிரு முறை தாக்குண்டு, பன்னிரு நெறிகளால் வீறு பெற்றுத் திகழ்ந்து விளங்கியது என்ற இணைப்பை உணருமாறு எடுத்துக் காட்டிய பெருமை திருநாரையூர் நம்பி யாண்டார் நம்பிகளையே சாரும்; அம்முறையில் பன்னிரு கால வேறுபாடு தழுவிய அனைத்தையும் ஒரு நெறிய மனம் வைத்துணர்ந் தார் திருஞானசம்பந்தர்; புண்ணியப் பதினாறு ஆண்டுகள் நில வுலகில் வாழ்ந்தாலும், பன்னிரு நெறிகளை, பன்னிரு அருட்செயல் களால், பன்னிரண்டாண்டில் நிகழ்த்திக் காட்டி, திருப்பதிகப் பெரு வழியைத் தமிழால் அமைத்த சைவ சமய மறுமலர்ச்சி இயக்கத் தலைவரே ஞானசம்பந்தர்; பிரமபுரத்தில் நின்று அருமறை வல்ல முனியை வழிபட்டுப் பிரமன் பெற்ற பேற்றுக்கும், பிரமாபுரத் தில் திருப்பதிகப் பெரு நெறி சார்ந்து, அப்பெரு நெறியை எடுத்துக் காட்டி, அவ்வழியில் நின்றும், நிற்க வைத்தும், தமிழால் நெறிப்படுத்திய ஞானசம்பந்தர் பெற்றும் பெற வைத்தும் காட்டிய பேற்றுக்கும் உள்ள வேறுபாட்டினைச் சேக்கிழார் திருவாக்கால் உணரலாம் என்பனவாகிய கருத்தமைவுகளே.

முடிப்புரையுடன் இணையும் குறிப்புரை

வானத்தில் தவழும் நிலவுக்கு உரிய கலைகள் பதினாறு. பதினாறு கலைகளைக் கொண்ட நிலவு தக்கன் சாபத்தால் நாளும் கலைகள் குறைய, ஒரே ஒரு கலையுடன் மட்டுமே நிற்கும் நிலையைப் பெற்றது. அடுத்தநாள் எஞ்சிய ஒரே ஒரு கலையும் அழியும். அவ்வாறு அழிந் தால் நிலவே அழிந்தது என்பதுதான் முடிந்தமுடிவு. எனவே, ஒரே ஒரு கலையில் நின்ற நிலவு சிவனைச் சரணடைந்தது. அடைக்கலம் தருமாறு கேட்டது. சிவனும் நிலவைக் காப்பதாகக் கூறி, ஒரு கலைத்திங்களை எடுத்துத் தன் முடியில் சூடிக் கொண்டான். எனவே, சிவனின் முடியில் இருப்பது ஒரு கலைத் திங்களே.

சிவனுக்குப் 'பிறைசூடி' என்ற பெயர் உண்டு. பிறை என வரும் சொல்லுக்கு மூன்றும் நாள் திங்கள் என்பதாகவே உரைசொல்வ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துண்டு. உலகவழக்கிலும் பிறை என்ருலே மூன்ரும்நாள் நிலவையே குறிக்கும். அதிலும், தேயும் நிலையில் வரும் மூன்ரும்நாள் நிலவைக் குறிக்காது. சிவன் தன் தலையில் சூடியபின், அந்த ஒருகலைத் திங்கள் நாளும் வளர்ந்து முழுமை அடைவதும், பின்னர் நாளும் தேய்ந்து சிறுமை அடைவதும் ஆகிய இருநிலைகளையும் பெற்றது. வளர்வதற்கும் தேய்வதற்கும் உரியன இரண்டாம் கலை முதலாக உள்ள பதினைந்து கலைகளே. சிவன் அணிந்த ஒரு கலைத் திங்களை, மூன்று கலையுடைய திங்களாக, பிறை எனக் குறிப்பது ஏன்? மக்கள் அளவில் காணக்கூடியதாக அமைவது மூன்ரும் கலையுடன் அமைந்த திங்களே. பிறை என்பதற்கு மூன்ரும் நாட்பிறை என உரைகொள்ளும்போது, வளர்ச்சிக்கும் தேய்விற்கும் ஆட்படாத ஒருகலைபோக, எஞ்சிய இரண்டு கலைகளும் இரண்டு நாட்களில் வளர்ந்துள்ளன. முழுமதிநாள் என்ற பௌர்ணமியை நீக்கி, அல்லது முழுமறைநாள் என்ற அமாவாசையை நீக்கி, அடுத்த இரண்டு நாட்களில் வளர்ந்த கலைகள் இரண்டு. இரண்டாம்நாள் நாம் பார்க்கும் திங்கள் மூன்றுகலைகளையுடைய பிறை. இவ்வாறே பதினைந்துநாட்களின் வளர்ச்சியில் பதினறு கலை களையுடைய முழுமை நிலவைக் காண்கிரும். எனவே, சிவன் தலையில் இருப்பது ஒற்றைக்கலைத் திங்களே யாயினும், நாம் காணக்கூடிய நிலையில் உள்ள மூன்ரும் பிறையையே, அவன் சூடியிருக்கும் பிறை எனக் கொள்கிரும்.

திருஞானசம்பந்தரை ''வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்து'' என, மதியுடன் இணைத்துக் காட்டுகிருர் சேக்கிழார். பதினறுண்டுகள் நிலவுலகில் வாழ்ந்தவர். பதினறு கலைகள் நிரம்பிய வானத்தின் முழுமதிபோல் பதினறு படிநிலைகளில் நிரம்பிய ஞானத்தின் முழுமையென ஞானசம்பந்தரைக் காட்டுகின்ருர். வானத்து நிலவில் பதினைந்துநாள் பெற்ற வளர்ச்சியில் நாம் காண்பது பதினறு கலையுடன் வளர்ந்த முழுநிலவை. அவ்வாறே ஞானசம்பந்தப் பெருமானின் புண்ணியப் பதினறுண்டு பெற்ற ஞானமுழுமை யானது, அவர் இந்நிலவுலகில் காழிக் கவுணியக் கன்று எனப் பிறந்து வாழ்ந்த ஆண்டுகள் பதினைந்துமட்டுமே. சிவபாத இருதயரின் மகவாகப் பிறந்து மூன்ருண்டுகள் கழிந்த பின்னரே ஞானப் பால் அருந்தினர். எனவே, ஞானப்பாலருந்தும் நிலைபெற்ற காலத்தே அவர் நான்காம் பிறையை ஒத்த நிலையில் இருந்தார்.

முன்னுறு நிலையில் தொடங்கி வளர்ந்த திருவடிமறவாப் பான்மையும், மலர் கொண்டு செய்யும் வழிபாடும் மூலமாக, அவருக்கு இப்பிறவி அமைவதால், முன்னுறு நிலையை 'ஒருகலை' எனக் கொள்ளவேண்டும். முன்னுறுகலையை மூலமாகக் கொண்டே, கழல்பேணும் தொண்டு நெறியானது காழிக் கவுணியக் கன்று என்ற பெயரில் தொடங்குகிறது. முன்னுறு நிலையில் அமைந்த தவம், வழிபாடு ஒரு கலையாக, நிகழ்த்திய ஆண்டு (முன்னைப் பிறவி முழுவதும்) ஓராண்டாக அமைய, இவ்வுலக வாழ்வில் சீகாழிப் பிள்ளையாக நின்று மூன்ருண்டுகள் கழித்தார். இவ்வாறு, இவ்வுலகில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாலாங்கலைமதியென நின்ற காலத்தில், முற்பிறவி ஆண்டு ஒன்றும் இப்பிறவி வாழ்வு ஆண்டு மூன்றும் கடந்திருந்தன. ஞானப்பால் வளர்ச்சியானது ஐந்தாங்கலையிலிருந்தே தொடங்குகின்றது. ஞானப் பால் அருந்தும்முன் அவர் வளர்ந்தும் வளர்த்தும் நின்ற கலைகள் நான்கு. எனவே, அவர் ''*நான்மறையின் தனித்துணை*'' என்று குறிப்பிடப்பெற்றார். அதன் காரணமாகவே, அவர் அழுதநிலையில் அவர் வாயிலிருந்து வெளிப்பட்டது வேதவொலி என்று குறிப்பிட்டுக் காட்டினார் சேக்கிழார்.

ஞானப்பால் அருந்திய நிலையில், இவ்வுலக வாழ்வியல் ஆண்டுகள் மூன்றும், முன்னுறு தவநிலை ஆண்டு ஒன்றும் ஆக நான்கு ஆண்டுகள் முடிந்திருந்த நிலையில் ஞானப்பால் அருந்தினார். ஞானப்பால் அருந்தியபின் புதிய வளர்ச்சியானது தொடங்குகிறது. அது நான்காம் கலையை முடித்து, அம்முடிவில் எழும் புதியவளர்ச்சி. அது வேத முடிவில் விளையும் ஞான வளர்ச்சி. பரம்பொருளின் 'அந்தம் ஆதி' என்ற இருநிலைகளில் அந்தம் என்பது அபர ஞானம். அதன்முடிவில் பரஞானம் எழுந்து, பரம்பொருளின் ஆதியாம் பகுதியை அறிந்து துய்க்க, பிறருக்கு அறிவிக்க முற்படுகிறது. முன்னதன் அந்தத்தில் எழுவதே ஆதி. பரஞான வளர்ச்சியே ஏனைப் பன்னிரண்டு படிநிலைகளில் வளர்ந்து முழுமை பெறுகிறது. அப் போது அவர் ஞானமுழுமை, ஞானநிறைவு பெற்றமையால் ''ஞானத் தின் திருவுரு'' என்று சேக்கிழாரால் குறிப்பிடப்பெறுகிறார்.

சிவபாத இருதயரின் குழந்தையாகத் தோன்றி இந்நிலவுலகில் வாழ்ந்த ஆண்டுகள் பதினைந்தே.

வானத்துத் திங்களை எடுத்துக்காட்டி, ஞானவளர்ச்சியை உள்ளீடாக அமைத்து, அவருடைய ஞானவாழ்வியல் அடிப்படை யில் பதினாறாண்டுகள் வாழ்ந்தார் எனக் கொள்ள வேண்டும். இவ் வெண்ணிக்கை ஞான வாழ்வியலை உட்கொண்டது என்ற கருத்தும் தோன்றுமாறு புண்ணியப் பதினாறாண்டு என்று, அவருடைய இணைப்பினால் காலமும் வாழ்த்தப் பெறுகிறது.

ஞானசம்பந்தர் முன்பிறவிநிலையிலும் இப்பிறவிநிலையிலும் தொடங்கி வளர்த்து முடித்த நெறி ஒன்றே என்னும் கருத்தில், முன்னுறு தவநிலையை இணைத்து ஓராண்டாக்கி, அதுவும் அவருடைய பின்னுறு நிலையுடன் இணைக்கப்பெற, பதினாறாண்டு என்ற எண்ணிக்கை நிறைவுறுகிறது.

இருபிறவிகளிலும் ஞானசம்பந்தர் பெற்ற ஞானநிலை வளர்ச்சி இருபிரிவானது. முதற்பிரிவு நான்காண்டுகள். முன்னைப்பிறவி ஆண்டு ஒன்றும் இப்பிறவி ஆண்டு மூன்றும். இதனால், அவர் நான்மறையின் தனித்துணை ஆனார். இரண்டாம் பிரிவு ஞானவளர்ச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சியானது இந்நிலவுலகில் பன்னிரண்டு ஆண்டுகளைக் கொண்டது. பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்து, பன்னிரண்டு கலைகளை வளர்த்து, பன்னிரண்டு அருள் நிகழ்ச்சிகளை நடத்தி, பன்னிரண்டு வீறுசால்நெறிகளால் நிறுவப்பெறும் *திருப்பதிகத் தமிழ்நெறியைத் தோற்றி*, வளர்த்து, நிறைவுசெய்த முழுமையாளர் ஆனார், திருஞான சம்பந்தர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. பிரமபுரத்துறை பெம்மான் எம்மான்

ஏகபாதத் திருப்பதிகம்

திருஞானசம்பந்தப் பெருமான் இந்நிலவுலகில் அரவு தீண்டி இறந்தவனை எழுப்புதல், எலும்பைப் பெண்ணுக்குதல் போன்ற பலவகை அற்புதச் செயல்களைச் செய்துள்ளமை அவர் தம் வரலாற்ருல் அறிகிரோம். இத்தகைய அற்புதச் செயல்கள் எல்லா வற்றையும் இணைத்து, அவைகளை எவ்வாறு விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்கு ஒரு கட்டளைக்கல் தருகிருர் சேக்கிழார். "'இப்படி ஒரு செயல் இதுவரை எங்கே நடந்துள்ளது! நடந்ததா கக் கேள்விப் படாமையால் ஒப்பற்றது, அற்புதம்' என்று இத் தகைய நிகழ்ச்சிகளைக் கண்டவர், காணுதவர் ஆய பொதுமக்கள் கருதுகிருர்கள்" என்பது சேக்கிழார் அமைத்த முறை.

திருஞானசம்பந்தர் வரலாற்றில் எடுத்துப் பேசப் பெறும் இத்தகைய அற்புதங்கள் ஒரு பக்கம் இருக்க, வேருேர் அற்புதத் தையும்அவர் நிகழ்த்தியுள்ளார். அது, அவர்பிறந்த ஊரைப் பற்றியது. சீகாழிக்குப் பிரமபுரம் முதலாகக் கழுமலம் ஈருகப் பன்னிரண்டு பெயர்கள் உண்டு. பன்னிரண்டு பெயர்களைத் தனித்தனியாக நிறுத்தியும், சக்கரமாகச் சுழல நிறுத்தியும், கோமூத்திரியாக நிறுத்தி யும் ஏறக்குறைய 67 திருப்பதிகங்கள் அருளியுள்ளார்கள். தாம் பிறந்த ஊரைப் பற்றி, இவர் போல வேறு எந்த அருளாளரும் பாடிய வரலாறு அறியப் பெறவில்லை. பிறகு, எல்லா ஊர்களையும் இணைத்து "க்ஷேத்திரக் கோவை" என்ற பதிகமும் அருளியுள்ளார்.

சீகாழிக்குரிய பன்னிரண்டு பெயர்களை வரிசை பிறழாது அமைத்து, எழுதியும், சொல்லியும், வழிபட்டும் உய்ய வேண்டும் என்று வலியுறுத்திக் கூறும் கொள்கையுடையவராக அமைந்தவர் திருஞானசம்பந்தர். பிரமபுரம் தொடங்கி, கழுமலம் வரை வரிசை தவருது சொல்லும் முறையை "வழிமொழி" என்றும் குறிப்பிடுகிருர் காழிப் பிள்ளையார். அவ்வகையில், சீகாழிக்குரிய பன்னிரு பெயர் களையும் இணைத்து நிறுத்திப் பாடும் வரிசையில் தலைநின்ற பதிகமாகக் கொள்ளும் சிறப்பினையுடையது ஏகபாதத் திருப்பதிகம்.

இடம் ஒன்று, பெயர் பன்னிரண்டாய் நின்ருற் போல, பதிகம் ஒன்று, பாட்டும் பன்னிரண்டு. பன்னிரண்டு பெயர்களை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒட்டிய பன்னிரண்டு தனிப்பாட்டுக்கள். ஓர் ஊர்ப்பெயருக்கு ஒரு திருப்பாட்டு என்ற முறையோடு, வேறு ஒரு முறையும் உண்டு. நான்கு வரிகள் (பாதங்கள்) உள்ள பாட்டில், முதல் வரிதான் ஏனைய மூன்று வரிகளாக அமையும். ஒரே வரியை - முதல் வரியை ஏனைய மூன்று வரிகளாகவும் நிறுத்தி விடுதல். ஏகபாதம் என்பது ஒரு வரி என்ற பொருள் தரும். எடுத்துக் காட்டாக,

"பிரமபுரத்துறை பெம்மான் எம்மான்
பிரமபுரத்துறை பெம்மான் எம்மான்
பிரமபுரத்துறை பெம்மான் எம்மான்
பிரமபுரத்துறை பெம்மான் எம்மான்

இவ்வாறே, அடுத்த பாட்டு வேணுபுரம் எனத் தொடங்கும். பன்னிரண்டு பாட்டுக்களும் இப்படியே அமைந்திருக்கும். நான்கு வரிகளும் ஒரே அமைப்பில் இருக்கின்றனவாயினும் பொருள் வேறுபாடு உண்டு. எனவே, ஒரே அமைப்புடைய ஒரு வரிக்கு நான்கு வெவ்வேறு பொருள்கள் உண்டு. இருபொருள் அமையுமாறு பாட்டினை அமைப்பது உண்டு. ஞானசம்பந்தப் பெருமான் நான்கு பொருள்கள் அமையுமாறு அமைக்கிறார். ஒன்றே தான் நான்கு பொருள்களை உணர்த்த நான்காக நிற்கிறது.

'திரு எழுகூற்றிருக்கை' என்ற திருப்பதிகத்தின் மூலம் தாம் அருளிய திருப்பதிகங்களுக்கெல்லாம் உள்ளீடாக அமைந்த தத்துவ உண்மைகளைத் தொகுத்துக் கூறினார். திருஏகபாதத் திருப்பதிகத்தின் மூலம், சைவ நற்சமயம் சென்ற காலத்தில் பழுதிலா நிலையில் விளங்கியமைக்கும், இனி எதிர் காலத்தில் சிறப்புற விளங்குவதற்கும் அடிப்படையாக அமைந்த பன்னிரு கொள்கைகளை எடுத்துக்காட்டி, எண்ணிக்கையால் பன்னிரண்டாயினும், பன்னிரு வகையான வெவ்வேறு காலங்களில் (சென்ற காலத்தின் பழுதிலாத் திறமாக விளங்கியவைகள்) நிலை நாட்டப் பெற்றவையாதலின் பன்னிரண்டாயினும், இடப் பெயர்களை அடிப்படையாகக் கொண்டமையால் பன்னிரண்டாயினும், நெறியும் ஒன்றே; நாயகனும் ஒருவனே. இத்தகைய அடிப்படையை விளக்கும் போக்கில் அமைத்துக் கொடுத்தருளியுள்ள பதிகமே ஏகபாதத் திருப்பதிகம்.

திருஞானசம்பந்தரின் திருவுள்ளக் கிடக்கையை அடிப்படையாகக் கொண்டு, கொள்கை விளக்கம் செய்தற்குரிய மூலமாக நின்ற வரலாறு, பிற செய்திகள் ஆகியவற்றை ஏகபாதத் திருப்பதிக அமைப்பிலேயே அமைப்பது நன்று எனக்கருதி, இது முதல் ஏகபாதத் திருப்பாட்டு வரிகளையே தலைப்பு வரிகளாக அமைத்து, இந்நூற் செய்திகள் வளருகின்றன.

ஏகபாதத் திருப்பதிகத்தின் முதல் திருப்பாட்டின் முதல் வரியானது "பிரமபுரத்துறை பெம்மான் எம்மான்" என்பதே. அதுவே, இப்பகுதியின் தலைப்பாக அமைகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞானவெளியே பராசக்தி. ஞானவெளியின் நிறை முடிவில் இன்ப நிறையாக இருப்பது பரம் பொருள். ஞானத்தின் உச்சியில் பழுப்பது இன்பமாயினும், எந்த ஒரு நிலையிலும் முதல், நடு, இறுதி இல்லை. ஞானமும் இன்பமும். அப்படி நின்றவன் பெம்மான். அவன் என்னை இன்பத்தில் ஆழவைக்க வேண்டி என்னை ஒப்ப என்னிடம் வந்து எனக்காகக் காத்துக் கொண்டு தங்கியிருக்கிறான் ஆதலின் எம்மான். தன்னிலையில் அரியது; அனைத்தையும் கடந்தது. தானே என்னை நோக்கி வந்தது. இத்தகைய, 'அருமையும் எளிமையும்' என்ற கருத்தை உடன் கொண்டதே அம் முதல்வரியின் பொதுப் பொருள்.

பிரமன் அறியவேண்டும் என முயன்றபோது அவனால் அறியப் பெறாதவன்; வழிபட்டுக் கும்பிட்ட போது அவனுக்கு எளிமையில் எளிவந்தவனானான், என்ற வரலாற்றுப் பகுதிகளையும் உடன் கொண்டதே அவ்வரி.

மேலே குறிப்பிடப்பெற்ற பொருள்களையெல்லாம் உள்ளடக்கிய நிலையில், ஞானசம்பந்தப் பெருந்தகை எடுத்துக் கூறிய 'பெருநெறிய பிரமாபுரம்' என்ற திருவாக்கினை அடிப்படையாகக் கொண்டு சென்ற தலைப்பில் பல செய்திகள் இணைக்கப் பெற்றன.

அறிதற்கரிதாம் பரம் பொருள் என்பது ஞானமும் இன்பமும் இணைந்த ஒன்றே என்று காட்டி, அதுவே, நம்மை ஒத்த நிலையில் இறங்கி வந்து, நமக்குத் தொண்டாற்றுகிறது என்பதே முடிந்த பொருள்.

வழிமொழியின் வாய்மை

தனமே தருபுகழ்ச் சைவசிகாமணி எனப் போற்றப்பெறும் ஞான வாரமுதமுண்ட சிவஞானக் குழந்தையானது நடந்து மண்மிசைச் செல்லுமானால் வருந்துங்கொல் என்று எண்ணி, கடலில் விளங்கும் நஞ்சினை அருந்திய நனி நாகரிகத்தர் எனப் பெறும் அரத்துறை மேய அடிகள் செந்தமிழ்த் திறம்பயில் சிவஞானசம்பந்தருக்குச் சீர் மணிகள் எழில் பெறக் கோக்கப்பெற்ற முத்துச்சிவிகையை அளித்தார்.

''முத்தியற் சிவிகையூர்ந்து அருள் நெறியில் முதலரசு இயற்றிய துரையே'' என்று வடலூர் வள்ளற் பெருமான் 'பதிகப் பெருவழி' எனப் பெறும் அருள்நெறியைத் தொடங்கி வைத்த முதற் பெருந்தகை ஞானசம்பந்தரே என்று ஏற்றம் மிகுமாறு போற்றுகின்றார். தமிழ் ஞானசம்பந்தர் என்ற வழக்கினைத் தமிழாளியாராக விளங்கிய அப்பரடிகள் உமை திருமுலைப்பால் உண்ட காரணத்தால் தழைத்த மொழியாராக விளங்கினார் என்று சிறிதே மாற்றம் காட்டிச் சிறப்பித் தருளினார். ஆனால், பொன்னி வடகரை சேர் நாரையூரில் புழைக்கை முகமன்னன் எனப் பெறும் பொல்லாப் பிள்ளையார், அறுபத்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூன்று அடியவர்களின் பதி, தேயம், மரபு, செயல் ஆகியவைகளை உபதேசமுறையில் அருளிச்செய்ய, ஆனைமுகத்தவன் அருளை முன்னிட்டுக் கொண்டு, திருத்தொண்டர் பெருமைகளை உணர்ந்த நம்பியாண்டார் நம்பிகள், தேறும் புனல் தில்லைச் சிற்றம் பலத்துச் சிறந்து வந்து உள் ஊறும் அமிர்தைப் பருகியிட்டு, எழுவதோர் உட்களிப்புக் கூறும் *வழிமொழி* தந்து தன்னை வாழ்வித்த வல்லாளரே காழிக் கவுணியக் கன்று என்று பாராட்டுகின்ருர். நம்பியாண்டார் நம்பிகளால் சுட்டப் பெறும் *வழிமொழி* என்பது எதைக் குறித்தது ?

'வழிமொழி' என்பதன் விளக்கத்தை, இரண்டாண்டுகளுக்கு முன், இந்நிறுவனத்தின் மூலம் யான் எழுதி வெளியிட்ட '*திருமுறைத் தெளிவே சிவஞான போதம்*' என்ற நூலில் 6 ஆம் பக்கம் முதல் 40 ஆம் பக்கம் வரையில் எழுதியுள்ளேன். அதனையும் உடன்கொண்டு, அதன் மேலெழும் பல்வேறு வளர்ச்சி முறைகளை இணைத்துக் காணவேண்டிய நிலை இங்கே உண்டு. இது ஆளுடைய பிள்ளையார் எனப் பெறும் திருஞானசம்பந்த வள்ளலை முழுமையான ஆய்வுப் பொருளாகவும் அனுபவப் பொருளாகவும் கொண்டெழும் நூலாக அமையும் காரணத்தால், திருஞானசம்பந்தரின் தொண்டின் தொடக்கமும் நிறைவும் சில வளர்ச்சிப் படிகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பெற்றுள்ளன என்பதைத் திருஞானசம்பந்தர் திருவருள் கொண்டு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

மேலும், திருஞானசம்பந்தர் தாம் வாழ்ந்த கால அளவையை ஒட்டிய சமூக, மொழி, பொருளாதார நிலைமைகளைப் பின்னணிகளாகக் கொண்ட சிந்தனையின் அடிப்படையில் தம் தொண்டினை அமைத்துக் கொண்டவர் எனக்கூறி, 'செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கை வென்றேற' என்ற சேக்கிழார் திருவாக்கினை எடுத்துக் காட்டி, அயல்வழக்கினை வடமொழி வழக்கென்றும், அமண் வழக்கென்றும் விளக்கம் செய்து, பேசவும் எழுதவும் முற்படும் போது, உணர்ச்சிப் பெருக்கு உந்தியெழும் நிலை தோன்றி விடுவதுண்டு. அதேநிலையில் 'ஆரியமும் செந்தமிழும் ஆனுன் கண்டாய்' என்றும் "நான்மறை ஓதி, ஐவகை வேள்வி அமைத்து, ஆறங்க முதலெழுத்தோதி, வரன் முறை பயின்று எழுவான்தனை வளர்க்கும் பிரமபுரம் பேணினை" என்றும் "வேதநெறி தழைத் தோங்க மிகுசைவத்துறை விளங்க" என்றும் வருகின்ற அருளாளர் வாக்குக்களுக்கு முன்னே அமைத்தமை போல உணர்ச்சி மிக்க விளக்கங்களைக் கூற இயலாமல், காலக் கோட்பாட்டின் கலப்பு என்ற ஒருவகைப் பொது நிலை விளக்கத்தைக் கூறுவதோடு மட்டுமே அமைந்து, விடுவதுண்டு. இவ்வாறு அமைந்த பல்வகை வேறு பாட்டு முறைகளை எடுத்து, நுட்பமாக இணைத்து, தம் வாய் மொழியாலும், வரலாற்று நிகழ்வாலும் ஒரு பொதுமைப் பெருநெறியை நிலைநாட்டிய பெருமை திருஞானசம்பந்தருக்கு உண்டு. திருஞான சம்பந்தரின் வாக்குக்களை எடுத்துக் கொள்வோமானுல் "நற்றமிழ் ஞானசம்பந்தன்" என்று தம்மைக் கூறிக் கொள்ளும் போது,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"தமிழ்மண்டலம் ஐந்தும் தாவிய ஞானம்" என்று திருமூலர் கூறு மாறு போல "நற்றமிழ் ஞானம்" என்பதை எவ்வளவு அழுத்தமாகக் கூறுகிருரோ, அந்த அளவுக்கு அழுத்தமாகவே தான் "மறை ஞான சம்பந்தன்" என்றும் தன்னைக் கூறிக் கொள்ளுகிருர். "கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை" என்று ஒரு முறைக்கு இருமுறை மடக்கணி அமைத்துக் கூறி வலியுறுத்துகிருர். திருஞானசம்பந்தப் பெருமானுல் துவக்கப் பெற்ற திருப்பதிகப் பெருவழி எனப் பெறும் வீறுதமிழ்ப் பெருநெறியை எப்படிப் புரிந்து கொள்ள வேண்டும் என்று அருளியல் நுட்பத்தோடு எடுத்துக் காட்டிய அருளாளர் வரிசையில் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகள் முதலாக வடலூர் வள்ளல் இராமலிங்க சுவாமிகள் ஈருக உள்ள பலரும் இணைந்துள்ளனர். அத்தகைய அருளாளர்களின் திருவாக்குகளை யும், திருவருளையும் சிந்தித்து நின்று விளங்கிக் கொள்ள வேண்டுவது திருப்பதிகத் தமிழ் நெறியைக் கொள்வோர் கடமை. அத்தகு முயற்சியைத் தொடக்கும் சொல்லாக, திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி அவர்களால் எடுத்துக் காட்டப் பெற்ற தனிமொழியே — வழிமொழி என்பது.

காலம் பெற அழுதார்

'அழுதடி அடைந்த அன்பர்' என்பது மணிவாசகருக்கே உரிய சிறப்புப் பெயர். 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்ற மணிவாசகத் தொடருக்கு "அழுதால் உன்னைப் பெறலாம்" என்று பொருள் விளக்கம் செய்தவர்கள் உண்டு. அதற்கு மாருக, அழுதால் உன்னைப் பெறலாமே ? பெற இயலாது என எதிர் மறைப் பொருள் கொண்டவர்களும் உண்டு. "அன்பே என் அன்பே என்று அன்பால் அழுது அரற்றுதல் வேண்டும்" என்று கூறி, அன்பே அன்பாக, அறிவு அழியும் அன்பு தான் தேவை என்று கூறிய சாத்திர நூல் போலவே, அழுகைக்கும் அப்பாற்பட்ட ஞானம் தேவை என்று கூறும் சாத்திரங்களும் உண்டு. "சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்" என்ற மணிவாசகத் தொடருக்கு விளக்கங் கூறும் போது சிரிப்புத் தான் இறைவனை எய்துவிக்கும் என்று கண்டு, அனுபவப் பொருளென அதற்கு விளக்கம் செய்தவர்களும் உண்டு.

இன்பம்பெற வேண்டும் என்று வாழ்க்கையைத் தொடங்கும் எல்லா உயிர்களும் முதலில்—வாழ்வின் தொடக்கத்தில்அழுகின்றன. என்றுமே அழுது கொண்டிருக்கிற ஒருவனுக்கு வரலாறு உண்டு. ஆனுல், அவன் வரலாற்றில் அவன் அழுகையை வெளிப்படக் குறிப்ப தில்லை. என்றும் அழுது கொண்டே இருப்பவன் என்று பொருள் தரும் சொல்லைப் பெயராகக் கொண்டவன் இராவணன். அவன் வரலாற்றுச் சிறப்புப் பெற்றவன். சில நேரம் மட்டுமே விழித்திருந்து, தொடர்ந்து தூங்குபவனுகக் கும்பகர்ணனை மக்கள் அறிவார்கள். ஆனுல், என்றுமே அழுபவன் என்று இராவணனை மக்கள் அறிவது மிகமிகக் குறைவு. என்றுமே அழுபவன் யார் என்னில், ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்து அறிவு அமைந்தவன்; புலத்தியன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மரபில் வந்த பொன்னகர் இலங்கை வேந்தன். என்றுமே அழுதவனைத் தன் பதிகத்தில் எடுத்துக் காட்டும் உள்நோக்கு ஒன்று உண்டு என்ற கருத்தோடு இவ்வுலகில் காலம் பெற அழுதவர் ஒருவர் உண்டு. காலமெல்லாம் அழுவது ஒருவகை. அவ்வழுகையானது காலத்தை வீணாக்கும். காலச் சக்கரத்தில் அழிந்து விடும். ஆனால், காலத்தை நிறுத்தி, காலத்தைத் தன் வழியில் பணியாற்ற — ஏவல் கொள்ள அழுதவர் ஒருவரே. அதனால் தான், அவரைக் **காலம் பெற அழுதார்** என்று சேக்கிழார் குறிப்பிட்டருளினார். காழிக் கவுணியக் கன்று ஞானப்பால் அருந்துவதற்குச் சற்று முன் அழுத ஒருமுறைதான் அவர் அழுதது என்று கொள்ளலாகாது. ஆனால், உலகக் குழந்தைகள் அழுகிற அழுகைக்கு மாறாக, சிற்சில சமயங்களில் மட்டுமே அவர் அழுவதுண்டு என்றும், அழுகைக்குக் காரணமும் தெரியாது, அழுகின்ற முறையும் வேறாக இருக்கும் என்றும் சேக்கிழார் அருளுகிறார். ஏனைய அழுகைக்கு உரிய காரணம் அறிந்து தீர்வு செய்ய இயலும். இத்தகைய வேறுபட்ட அழுகைக்கு எத்தகைய தீர்வு முறையையும் காண இயலாத நிலையில் சிவபாத இருதயரும், பகவதியம்மையாரும் இருந்தனர் என்றும் தெரிகிறது. ஞானப்பால் அருந்தும் நிகழ்வு நடைபெறும் காலம் பொருந்தும் அந்த நாட் காலையில், தந்தையார் குளிக்கப் போகும் போது, பொது அழுகை இல்லாமல் சிறப்பு அழுகை அழுதார் சம்பந்தர். சிறப்பழுகை அமையும்போது வாய் மலர்ந்து அழுவாராம்.

"வெருக் கொண்டார் போல் அழுவார் **குறிப்பு அயலாய்**" என்பது சேக்கிழார் வாக்கு. ஆயினும், பெற்றோர்கள் இன்னதென அக்குறிப்பை அறியவில்லையாயினும், சேக்கிழார் பெருமான்,

"பண்டு திருவடி மறவாப் பான்மையோர் தமைப் பரமர்
மண்டு தவ மறைக் குலத்தோர் வழிபாட்டின் அளித்தருள
தொண்டின் நிலை தர வருவார் **தொடர்ந்த பிரிவு உணர்வு ஒருகால்**
கொண்டு எழலும் வெருக் கொண்டார் போலழுவார் குறிப்பயலாய்"

என்றருளிச் செய்து, குறிப்பிட்ட அந்த நாளில், தந்தையார் சிவபாத இருதயர் நீராடச் செல்லும் போது அழுதார். பின்னர் உடன் சென்று, குளக்கரையில் நின்ற போது, தந்தையார் தண்ணீரில் மூழ்கவே, தந்தையைக் காணவில்லை என்ற ஓர் உணர்வு, இறைவனும் தந்தையை முன் பிரிந்த பிரிவுணர்வைத் தூண்டிவிட்டது என்று பொருத்திக் காட்டுகிறார்.

"மறைமுனிவர் மூழ்குதலும் மற்றவரை முற்காணாது
இறை தரியார் எனும் நிலைமை **தலைக்கீடா** ஈசர் கழல்
முறை புரிந்த முன்னுணர்வு மூள அழத் தொடங்கினார்"

என்று கூறிய சேக்கிழார் (பெரிய புராணம் 1964) உடனேயே, திருஞானசம்பந்தர் மேற்கொள்ளும் சிறப்பு அழுகையைச் செயற்படுத்தும் முறையைக் கூறியருளுகின்றார். அது,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"கண்மலர்கள் நீர் ததும்பக் கைம்மலர்களாற் பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய் மணி அதரம் புடைதுடிப்ப
எண்ணில் மறை ஒலி பெருக எவ்வுயிருங் குதுகலிப்பப்
புண்ணியக் கன்றனையவர் தாம் பொருமி அழுதருளினர்"

என்ற திருப்பாட்டாக (பெரியபுராணம் 1965) மலர்கின்றது.

கைகளாற் கண்களைப் பிசைவதால் கண்ணில் நீர் ததும்புகின்றது. வாயில் அமைந்த அழகிய உதடுகள் பக்கங்களில் விரிந்து துடிக்கின்றன; வெளிவருவது வேத ஒலி; கேட்கும் உயிர்கள் குதூகலங் கொள்கின்றன. பொருமிப் பொருமி அழுகிறது என்பவை முறைகள். இதனை முன்னேயும் சேக்கிழார்

"... ..   ..   புனிதவாய் மலர்ந்து அழுத்
சீதவள வயற்புகலித் திருஞானசம்பந்தர்"

என்று பெரியபுராணம் 1004ஆம் செய்யுளிற் குறிப்பிடுகின்றார். குழந்தை அழும் போது வரும் ஒலி இயல்பாகக் கேட்போருக்குத் துன்பத்தை உண்டாக்கும். இங்கே வெளிவரும் ஒலியானது வேதம்; கேட்ட உயிர்கள் ஒரு வகையான பொருள் புரியாத இன்ப உணர்ச்சியில் செயல்படுகின்றன என்று குறிப்பிடுகிறார்.

அழுகின்ற முறையில் உள்ள ஒரு வகை மாற்றத்தைத் தவிர, இயல்பாக ஒரு குழந்தை தன் தந்தையிடத்தில் ஈடுபட்டு அழும் முறையிலேயே — இயல்புப் போக்கிலேயே செய்தியை அமைத்து வருகின்ற சேக்கிழார், தந்தையாரைக் காணவில்லை என்றதும் அந்த இயல்பு அடிப்படையிலேயே பழமையில் பிரிந்த உணர்வு தலைப்பட்டது என்று கூறுகிறார். ஆனால், அக்குழந்தையானது தன் தந்தையாரிடம் சென்று, தண்ணீரில் மூழ்கிய நிலையில் அங்கே பார்த்து அழாமல், மேலே தோணிபுரத்தாரைப் பார்த்து எப்படி அழும்? என்ற ஒரு வினவை எடுத்துக் கொண்டு, எதிர் பாராச் செயல் என்று தான் சொல்ல வேண்டும் என்று கருதி,

"மெய்ம்மேற் கண்துளி பனிப்ப வேறெங்கும் பார்த்தழுவார்
தம்மேலைச் சார்புணர்ந்தோ சாரும் பிள்ளைமை தானோ
செம்மேனி வெண்ணீற்றார் திருத்தோணிச் சிகரம் பார்த்து
அம்மே அப்பா என்றென்றழைத்தருளி அழுதருள"

என்று (பெரியபுராணம் 1966) அமைத்தருளுகின்றார்.

இங்கே நாம் கருத்திற் கொள்ள வேண்டிய செய்திகள் இரண்டு. ஒன்று: ஞானப்பால் அருந்தும் முன் அழுத போது எழுப்பிய ஒலி மறைஒலி. இரண்டாவது: அவ்வொலியால் எல்லா உயிர்களும் குதூகலித்தன என்பது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழுதவரின் முன்னிலையும் பின்னிலையும்

ஞானசம்பந்தராகிய குழந்தையை இவ்வுலகிற்கு வருமாறு அமைத்ததன் நோக்கம் இரண்டு.

1) மறைக் குலத்தவராகிய சிவபாத இருதயரும் பகவதியம்மையும் வழிபாட்டுப் பெருமையுடையவர்கள். தம்மை வழிபடுவதிற் சிறந்த அவ்விருவருடைய வழிபாட்டு முறைகளுக்கு உரிய பயனாக ஞானசம்பந்தர் என்ற குழந்தையை அளித்தார்.

2) இவ்வுலகில் இறைவனைத் தொண்டு செய்து போற்றுபவர்கள் உண்டு. தொண்டின் பெருமையை நிலைநாட்டுவதற்காக ஞான சம்பந்தரை இவ்வுலகிற்கு அனுப்புகிறார்.

மேலே சொன்ன இரண்டு காரணங்களை மூலமாகக் கொண்டு அனுப்பப் பெற்றவர் தன்மை என்ன? சிவனுடைய திருவடியை என்றும் மறவாது போற்றும் பண்பினர்.

''பண்டு திருவடி மறவாப் பான்மையோர் தமைப் பரமர்
மண்டு தவ மறைக் குலத்தோர் வழிபாட்டின் அளித்தருளத்
தொண்டின் நிலைதர வருவார்''

என்பது சேக்கிழார் (பெரியபுராணம் 1958) திருவாக்கு.

வழிபாட்டுப் பயன் என்ற முதற்காரணத்தை மேலும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

சிவபாத இருதயரும் பகவதியம்மையாரும் தத்தம் தனி நிலையில் சைவ நெறியில் வந்தவர்கள். சிவனைத் தவிர வேறு எவரையும் வணங்காத கொள்கையும் திருநீறு பூசுவதில் பற்றும் உடைய வர்கள்.

சிவபாத இருதயரும் பகவதியம்மையாரும் ஒப்பற்ற மகன் ஒருவன் வேண்டும் என்ற குறிக்கோளை உள்நிறுத்தி, வழிபாட்டினை மேற்கொண்டார்கள். எப்படிப்பட்ட மகன் வேண்டும்?

சிவபாத இருதயரும் பகவதியம்மையாரும் இருவகைத்தவம் மேற்கொள்கிறார்கள்.

1) இல்லறம் என்பது இன்பம் நிறைந்த இல்லறமாக அமைய வேண்டும் என்றால் இன்பநல் இல்லறத்தின் அடிப்படை மகப்பேறு. அவ்வகையில், இல்லறத்தின் இன்ப நிறைவு என்ற நிலையை விளக்கும் வகையில் மகப்பேறு தேவை. மகப்பேற்றை முன்வைத்த வழிபாடு பொது வகைத் தவம்.

2) உலகில் சமணர், சாக்கியர் ஆகியவர்களால் பொய் மிகுந்து பழைமையாகிய வேத வழக்கம் குறைந்து வருகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவனடியார்களுக்கு அன்பு காட்டித் தொண்டு செய்பவர்கள் இல்லை. திருநீறு பூசுதல் முதலிய சாதனங்கள் சிறந்தவைகளாக மதிக்கப் பெறவில்லை. இம் மூன்று அடிப்படைகளில், பிற சமயங்களை மறுத்து அழிக்கும் தொண்டுக்குரிய பிள்ளை தேவை, அதற்கான சிறப்புத் தவம்.

இவர்கள் கருத்தை ஏற்றுக் கொண்டான்; வழிபாட்டை ஏற்றுக் கொண்டான். எனவே பிள்ளை ஒருவனை அமைக்க வேண்டும் என்பது மட்டும் போதாது; அவர் தம் கருத்துக்களைச் செயற்படுத்தி முடிக்க வல்ல ஆற்றல் வாய்ந்த பிள்ளையாக அவனை அமைக்க வேண்டும்.

இனி, பிள்ளை அழுததும் இறைவர் அருள் செய்ய முற்படுகிறுர். தாம் அருள் செய்வது எந்த அடிப்படையைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்பது ஒரு வினவாகிறது.

குழந்தை அழுததும் இறைவர் மேற்கொண்ட அருட்செயல் இரண்டு காரணங்களை உடையது எனக் காட்டுகிறுர் சேக்கிழார்.

(1) சிவபாத இருதயருக்கும் பகவதியாருக்கும், அவர்கள் புரிந்த வழிபாட்டினை ஏற்றுக் கொண்டமைக்காக, அவர்கள் விரும்பியவைகளைக் கொடுக்க வேண்டும்.

(2) சிவனுடைய திருவடியை மறவாது போற்றுதல் என்பது ஒரு நெறி, அந்நெறியில் வருபவர்களுக்கு ஞானம் கொடுக்க வேண்டும்.

''திருமறைநூல் வேதியர்க்கும் தேவியர்க்கும் தாம்கொடுத்த
பெருகு வரம் நினைந்தோ தான் தம் பெருமைக் கழல்பேணும்
ஒரு நெறியில் வரு ஞானங் கொடுப்பதனுக்கு''

என்பது (பெரியபுராணம் *1968*) சேக்கிழார் வாக்கு.

இவ்வாறு எண்ணியவுடன் உமையம்மையை நோக்கி, ''துணைமுலைகள் பொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத்து ஊட்டு'' என ஆணையிட்டார், தோணியப்பர். அம்மையார் முதலில் குழந்தை இருக்கும் இடம் அணைந்து, பொன்கிண்ணத்தில் பாலைக் கறந்து, பின்னர், அப்பாலில் சிவஞானத்தைக் குழைத்துக் கொடுக்கிறுர்கள். சிவஞானம் திருமுலைப்பாலின் இயற்கைத் தன்மைக்கு அப்பாற் பட்டது போலவும், திருமுலைப்பாலுடன், அதையும் குழைத்து ஊட்டினுள் அம்மை என்ற குறிப்பும் காணப் பெறுகிறது. தோணியப்பரின் ஆணையில் அக்குறிப்பு இல்லை.

ஆயினும், ''பாலடிசில் ஊட்டு'' என்ற ஆணைப்பகுதியில், பாலை அடிசில் என்று கூறியதனுல், பாலில் ஞானம் குழைக்கப் பட வேண்டும் என்ற குறிப்பும் உள்ளதாகக் கொள்வர். மதுரையில், தன் தந்தையார் தம்மை வந்து பார்த்த காலத்து, திருஞானசம்பந்தர் அருளிய கழுமலப் பதிகம் ஒன்று உண்டு. அதனுள்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"போதையார் பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாது எனத்
தாதையார் முனிவுறத் தானெனை ஆண்டவன்"

என்று, தம் இளமைக் காலத்தே நடைபெற்ற இனியநல்லருட் செயலை எடுத்து மொழிகிறார். அத்திருப்பதிகம் முழுவதிலும் அம்மையைச் சிறப்புறுத்திப் பாடுவதன் நோக்கம், உமையம்மையின் மிகுகருணைத் திறத்தைப் போற்றுவதே. "மண்ணின் நல்லவண்ணம் வாழலாம்" என்று தொடங்கி, அவளால் வரும் பெருமைகளை யெல்லாம் எடுத்துச் சொல்லி வருகின்றவர் "கழுமல வளநகர்ப் **பெருக்கு நீரவளொடும் பெருந்தகை யிருந்தது**" என்று குறிப்பிடுகின்றார். மணிவாசகப் பெருமான் திருவெம்பாவையில், "முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்" என்று குறிப்பது போல, அன்பர்க்குத் திருவருளைப் பெருக அளிக்கும் தன்மையுடையவள் என்று குறிப்பிடுவதால் சிவஞானத்தை மிகுதியும் பெருக அமைத்துக் கலந்து ஊட்டிய பேரருளை நினைந்து, கழுமலநாதன் 'பெருந்தகை' என்ற பெருமைக்குரியவனாக அமைவதற்கு உரிய காரணம் அவளே' என்றும் கருதும் வகையில் குறிப்பிட்டுக் கூறியருளினர். இங்கே, சிவஞானம் கொடுத்த அருட் செயல் அம்மையையே சாரும் என்ற குறிப்பை,

"மகிழ்ச்சி மிகவுண்டு போலும் எதிர்வந்து
புகழ்ச்சியொடு நீபாடும் போது—நெகிழ்ச்சி மலர்ச்
சந்தையினும் வண்டிரையும் தண்புகலிச் சம்பந்தா
தந்தையினும் பால்கொடுத்த தாய்க்கு"

என, நுட்பமாக விளக்கியருளினர் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள், தம்முடைய **நால்வர் நான்மணி மாலை**(13)யில்.

பாலடிசில் ஊட்டப் பெற்றதும் சிவஞானசம்பந்தராயினர். இதனைச் சேக்கிழார் "**பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார்**' என்று குறிப்பிடுகிறார்.

பேருணர்வு என்பதனுள் மூன்று இணைப்புகள் காணப்படுகின்றன. நான்காவது கருத்து ஒன்றும் இணைக்கப் பெறுகிறது.

(1) "எப்பொருளையும் ஆக்குபவன் ஈசனே" இது உணர்வு.

(2) "அப்பொருள்தான் ஆளுடையார் அடியார்கள்" இது அறிவு.

(3) "இப்படியால் இது" என்பது துப்புரவுடையார் துணிவு;
காரண காரிய இணைப்பு.

(4) காரணகாரிய இணைப்பினை அடிப்படையாகக்கொள்ளாமல் தமக்குப் பட்டவற்றையே உண்மை என்று சொல்லிக் கொண்டு திரிபவர்கள் வலிமையற்றவர்கள். அவர்கள் தம் துணிவு தாமே உடைபட்டுத் தூசாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலே கூறப்பெற்ற மூன்றும், மூன்ருவதோடு இணைந்த ஒன்றுமாகத் தனித்தனி நிலையில் விளங்கிய கொள்கைகளின் அல்லது முடிவுகளின் அடிப்படையில் அவர் பெற்ற ஞானத்தைப் பகுத்துக் காட்டுகின்ருர்.

எப்பொருளும் ஆக்குவான் ஈசனே என்ற உணர்வியற் கொள்கை உருவாவதற்குரிய காரணமாக அமையும் ஞானம் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்.

இரண்டாவதாக நிற்பது "அப்பொருள் தான் ஆளுடையார் அடியார்கள்" என்ற அறிவு. இது அறிவியற் கொள்கை. இதனை வழங்கிய ஞானம் பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்.

மூன்ருவதாக, இப்படியால் இது என எல்லாவற்றையும் காரண காரிய அடிப்படையில் வைத்து அறிந்து கொள்ளும் முறைக்கு அடிப்படையாக, உவமையிலாக் கலைஞானம் அமைந்தது என்று கொள்ளலாம். ஆனுல் உவமையிலாக் கலைஞானத்தாலும் உணர முடியாத மெய்ஞ்ஞானம் என உரை செய்பவர்களும் உண்டு.

ஆயினும், 'உணர்வரிய மெய்ஞ் ஞானம்' என்பதை வேறுபிரித்து உரை காண்பதே நேரியது. முதல்நின்ற மூன்றையும் பிரித்து உணர முடிகிறது. ஆனுல், இங்கே கூறப் பெற்றுவாறு இன்றி, இவைகளுக் கெல்லாம் அடிப்படையாகவும், இவைகளைக் கடந்ததாகவும் அமையும் ஞானம் ஒன்று உண்டு. அது அவன் நம் உள்ளத்தைக் கவர்ந்து கொள்ள, அவனுக்கு ஆளாக நின்று தொண்டு செய்ய வேண்டும் என்ற அறிவைப் பெருக்கிக் கொண்டே போகிற உண்மை ஞானம். அதனையே 'மெய்ஞ் ஞானம்' என்று கூறுகின்ருர் சேக்கிழார்.

"தோடுடைய செவியன்" என்று எடுத்த முதல் திருப் பதிகத்தினுள் அமைந்த '**உள்ளம் கவர் கள்வன்**' என்ற அனுபவ விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டே 'உணர்வரிய மெய்ஞ் ஞானம்' என்று குறிப்பிடுகின்ருர். மேலும், முதற் சொன்ன மூன்றுமே இதனுள் வந்து அடங்கி விடுகின்றன என்று கூறி, அவ்வாறு அடங்கிய போது எழும் பொலிவு ஒன்று உண்டு எனக் குறிப்பிடும் முறையில்,

"**பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார்**" என்று குறிப் பிடுகின்ருர்.

எனவே, காலம் பெற அழுதார் என அவர்தம் முன்னிலையையும் பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார் என அவர்தம் பின்னிலை யையும் அமைத்துக் கொள்ளலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருணர்வினுரின் தன்னிலே விளக்கம்

திருஞானசம்பந்தர் இவ்வுலகிற்கு வர நேர்ந்ததன் காரணம், முன்பு இறைவன் திருவடி மறவாப் பான்மையோடு இருந்த ஒருவரை, வேதியர் குலத் தம்பதிகளின் வழிபாட்டுப் பயனாக இறைவர் அமைத்துக் கொடுத்தார் என்ற இணைப்பு, பிரிவின் காரணமாக வந்த அழுகை, முதலியவை சேக்கிழார் தம் அடிச்சுவட்டில் சென்று அறிந்தவை.

சேக்கிழார் திருவாக்கின் வண்ணம் நோக்கும் போது "பண்டு திருவடி மறவாப் பான்மையுடன் இருந்த ஒருவரை இவ்வுலகில் தொண்டின் நிலையை அனைத்துயிர்களும் அறியுமாறு தெரிவிக்க அல்லது 'தொண்டு' என்ற ஒன்றினை உலகில் தோற்றி நிலைநாட்ட அனுப்புகிறார் என அறியலாம். திருநாவலூரரைத் திருத்தொண்டத் தொகை தருதற்காக அனுப்பியது போல, 'தொண்டு' என்ற ஒன்றை உலக உயிர்களுக்கு அறிவுறுத்தியும் விளக்கியும் செயற்படுத்தியும், அதை ஒரு 'நெறி' என நிறுத்தும் பணிக்கு முதல்வராக ஞானசம்பந்தரை அனுப்பிவைக்கிறார் இறைவர் என்று தெரிகிறது. இவ்வகையில், 'தொண்டு நெறி' என்ற சைவத்திரு நெறியானது திருஞானசம்பந்தரால் தொடங்கப் பெற்று, திருநாவுக்கரசரால் விளக்கம் செய்யப் பெற்று, திருநாவலூரரால் தனிப்பெருங் கொள்கையாக நிலைநாட்டப்பெற்று, திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகளால் அந்நெறிக்கு அமைந்த இடைக்காலத் தொய்வு நிலை நீக்கம் பெற்று, சேக்கிழார் பெருமானுல் அந்நெறி எல்லாவகையானும் முழுமை பெற்று நிறைவு செய்யப் பெற்றதாகிறது என்று கொள்ளலாம்.

சேக்கிழார் பெருமானின் திருவாக்கின் வழியில் இத்தகைய கருத்தை நாம் அமைப்போமாயின், அது திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகள் அருளியவாறு திருப்பதிகப் பெருவழியைத் தொடக்கி, வீறு தேறும் தமிழால் வழிகண்டவன் என்ற கருத்தோடு இணைந்த ஒன்ருகவே நாம் அமைத்துக் கொள்ளலாம். அவ்வாருயின், **தொண்டின் நிலே தருதல்** என்ற ஒன்று இறைவனைத் திருப்பதிகத்தால் தமிழில் பாடுவது என்பதே. இவ்வாறு பொருள் முடிப்பதற்கு, நம்பியாண்டார் நம்பிகள் அருளிய "வழிமொழி தந்து" என்ற குறிப்பு ஒரு தடையாக அமைகிறது. திருஞானசம்பந்தப் பெருமானின் திருப்பதிகம் வழிமொழியாயின் முதன்மொழி எது? நம்பியாண்டார் நம்பிகள் திருப்பதிக வழியைத் தொடங்கியதும், தமிழால் அவ்வழியை அமைத்ததும் திருஞானசம்பந்தரே என்பதை அறுதியிட்டுக் கூறுகிருர். திருஞானசம்பந்தர் திருப்பதிகங்கள் வழிமொழிகள் எனக் கொள்வதில் சிக்கலில்லே. திருப்பதிகங்கள் எவ்வகையில் வழி மொழிகளாகும் என்பதே இங்கு எழும் ஐயம்.

இனி, சேக்கிழார் திருவாக்கு வேருேர் உண்மையை விளம்புகிறது. தொண்டின் நிலே தருதற்கு ஒருவரை அனுப்பமுற்படுகிருர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்னமேயே, அவர் சிவன் திருவடி மறவாத தன்மையர்; அவருக்கு அமைக்கப் பெறும் புதிய பணியானது தொண்டிஃன நிஃல நாட்டுதல். மேற்கொள்ள வேண்டிய புதிய பணிக்குரிய அறிவிஃன அளிக்க முற்படுகிருன் இறைவன். அச்செய்தி,

"தம்பெருமைக் கழல்பேணும் ஒருநெறியில் வரு ஞானம்
கொடுப்பதனுக்கு"

என்ற சேக்கிழார் வாக்கினுல் வெளிப்படுகிறது. அவ்வாருயின், முன்னமே திருவடி மறவாப் பான்மையர், இப்போது தம் பெருமைத் திருவடிகள் பேணுதல் வேண்டும். என்ருல், இரண்டும் ஒன்றே. திருவடிமறவாமை, திருவடிப் பெருமை பேணுதல் என்ற இரண்டும் தம்முள் வேறுபட்டவை அல்ல; ஒரு நெறியே என்ற பொருளில், அவருக்குக் கொடுக்கப் பெறும் ஞானமும் ஒரு நெறியில் வரும் ஞானமே என்று கொள்ளலாம். முன்னே, மண்ணுலகம் அல்லாத வேறு ஒரு உலகில் மனத்தால் செய்து வந்த பணியை, இப்போது மண்ணுலகில் தொண்டு என்ற பெயரில் செய்ய வருகிருர் என்று குறிப்பிட்டால், இட வேறுபாடு என்ற ஒன்றேயன்றி, மேற் கொள்ளும் நெறியில் வேறுபாடு இல்ஃல. ஒருவேஃள முன்னே பலகால் அனுபவ மூலமாகப் பெற்ற அறிவு அவருக்கு உண்டு. இப்போது மண்ணுலகுக்கு வருகிருர். பிறவி காரணமாக அப்பழைய அறிவு அவருக்குத் துஃண செய்யாமற் போய்விடலாம். ஆகையால் இந்நெறியில் அவர் முன் பெற்றுள்ள ஞானத்தை மீண்டும் இங்கே பெறவேண்டிய நிஃலயில் அது, திருமுஃலப்பால் மூலமாகக்கொடுக்கப் பெறுகிறது என்னில், அது அவர் முன்னே திரட்டிய ஞானமேயல்லாது இறைவன் புதியதாக அமைத்துக் கொடுத்த ஞானம் ஆகாது. திருமுஃலப்பால் அருந்தியவுடன் அவர் பெற்ற ஞானத்தை வரிசைப் படுத்திக் கூறும் சேக்கிழார் முதலில் நிறுத்திக் கூறும் ஞானம்,

'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்'

என்பதே. அதனுடன் வேறு இரண்டுவகையான ஞான அமைப்புக் கஃளயும் தருகிருன் என்று சேக்கிழார் அருளுவதாகக் கொள்ளலாம்.

இவ்வாருக, மேலே குறிப்பிடப் பெற்றவாற்ருல் இரு தொடர்கள் மேலும் விளக்கம் பெற வேண்டிய நிஃலயில் உள்ளன; அவை, வழிமொழி, ஒரு நெறி என்பன.

மேலே கூறப் பெற்றவைகளுக்குத் திருஞானசம்பந்தர் ஏதும் விளக்கம் அமைக்கின்ருரா எனக் கருத வேண்டியது இன்றிய மையாதது. இங்கேயும், திருப்பதிகங்கஃளக் கூட, இவ்வாறுதான் அமைத்துப் பொருள் காணவேண்டும் என்ற விளக்கத்தையும் சேக்கிழார் பெருமான் வரையறை செய்துள்ளமையால், திருஞான சம்பந்தர் திருவாக்குக்கும் சேக்கிழார் பெருமான் அமைத்த விளக்கத்தையே நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞானசம்பந்தர் திருநீலகண்டப் பதிகம் பாடும் போது,

"மறக்கும் மனத்தினை மாற்றி எம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக்கீழ்ப் பிழையாத வண்ணம்
பறித்த மலர்கொடு வந்து உமை ஏத்தும் பணியடியோம்"

என்று, ஆறுவது திருப்பாட்டில் அமைப்பதை நோக்கும் போது திருவடி மறவாமையை உயர்வாகக் கருதுகிறார். ஆனால், மனம் மறக்கிறது. ஆயினும், மனத்தின் இயல்பை மாற்றி அமைக்க முற்படுகிறார். உயிரானது இறைவன் திருவடியிலேயே சென்று அடங்கி நிற்க ஒருப்படவில்லை. வற்புறுத்தி அதைச் செய்து, மனத்தினை நினைக்குமாறு செய்து, இவ்விரண்டாலும் திருவடிக்குப் பிழைசெய்யாமலிருக்க முயற்சிக்கிறார். இவைகளைப் பெறுவதற்கு மலர் எடுத்து வந்து சூட்டி வழிபடுவது துணையாகிறது. அதில் நான் தவறவில்லை என்கிறார்.

மேலும், அச்சிறுபாக்கத் திருப்பதிகத்தினுள்,

"கைச்சிறு மறியவன் கழலலாற் பேணுக் கருத்துடை
ஞானசம்பந்தன்"

என்று குறிப்பிடுவதால், சிவன் கழல் தவிர வேறு எதையும் நினைவுப் பொருளாகக் கொள்வதில்லை என்று குறிப்பிடுகிறார்.

அடுத்து, தன்னை இவ்வுலகிற்கு அனுப்புவதற்கு உரிய காரணத்தை வெளிப்படையாகக் குறிப்பிடும் பகுதியே கீழ்வருவது;

"துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி
மறக்குமா றிலாத என்னை மையல் செய்திம் மண்ணின் மேல்
பிறக்கு மாறு காட்டினாய்; பிணிப்படும் உடம்பு விட்டு
இறக்கு மாறு காட்டினாய்க்கு இழுக்குகின்றது என்னையே"

இங்கே கூறப்பெறும் முறையில், ஆளுடைய பிள்ளையார் காழியில் பிறக்கும் முன் இறையடி மறவாப் பண்பினராக இருந்தார் என்பதும், ஒருவகை மயக்கத்தைச் செய்தவன் இறைவன் என்பதும், இம் மண்ணின் மேல் பிறக்குமாறு காட்டினவனும் அவனே என்பதும் விளங்கும். இவ்வருளுரையின் எஞ்சிய பகுதிகள் பின்னர் வரும் சிந்தனைக் குரியன.

"திருந்தடி மறக்குமாறு இலாத என்னை மையல் செய்து" என்று குறிப்பிட்டருளுவதன் மூலம் பிறப்புக்குக் காரணம் தெரிய வருகிறது

ஆளுடைய பிள்ளையார் மண்ணுலகுக்கு வந்ததையும் ஆளுடைய நம்பிகள் மண்ணுலகுக்கு வந்ததையும் சிறிதே ஒப்பிட்டால் ஓர் உண்மை விளங்கும்.

இருவருமே முன்பு திருந்தடிப் பிழையாதவர்கள். திருமலர்த் தொண்டு செய்தவர்கள். ஆளுடைய நம்பிகள் திருநீற்றுத் தொண்டினைத் திருக்கயிலாயத்தில் செய்தவர். ஆளுடைய பிள்ளை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யார் திருநீற்றின் பெருமையை இவ்வுலகுக்கு விளக்க வந்தார். இவையெல்லாவற்றுக்கும் மேலாக, இருவருமே திருநீலகண்டத்தில் இணைப்பு உடையவர்கள். ஆலால சுந்தரர் என்ற பெயருடன் திருக்கயிலையில் பெருமானுக்குத் திருநீறு, திருமலர் ஆகிய இரண்டையும் பற்றிய தொண்டுகளைச் செய்து கொண்டிருக்கும் போது தான், ஆலகால நஞ்சு வந்தது. அதனைத் திரளையாக்கிக் கொண்டு வந்து கொடுத்த தனிப்பெரும் பெருமையுடையவர். தேவாரப் பதிகம் பாடிய மூவருள் திருநீலகண்டப் பதிகம் பாடி, உயிர்கள் வினைகளை ஒழிக்கப் பெருந்துணை புரிந்த பெருந்தகையே ஞானசம்பந்தர். திருநீலகண்டப் பதிகத்து ஆறும் பாட்டினுள், இறைவன் திருவடியை மறவாது நினைந்து, மலர் வழிபாடு செய்த திறமையை எடுத்துக் காட்டியுள்ளார். மேலும், திருப்பிரமபுரம், நாலடிமேல் வைப்புத் திருப்பதிகத்தினுள்,

''இரவொடு பகலதாம் எம்மான் உன்னைப்
பரவுதல் ஒழிகிலேன் வழியடியேன்''

என்று தம்மை அறிமுகப் படுத்தும் ஆளுடைய பிள்ளையார் சிவஞானத் தெள்ளமுது அருந்திய பின், அவருக்கு உண்டாகிய ஞானத்தின் தன்மையைக் குறிக்க வரும் போது, முதன்முதலாக

''எப்பொருளும் ஆக்குவான் ஈசனே''

என்ற உணர்வு வந்தது என்பது சேக்கிழார் வாக்கு. எல்லாப் பொருள்களும் உள்பொருள்களே. பொருள்களை இறைவன் படைக்கவில்லை. பொருள்களை மேல்நிலைக்குக் கொண்டு வருபவன் என்று விளக்கம் கூறுவர் சான்றோர். அப்படியானல் உலகப் பொருள்களையெல்லாம் அடிமையும் உடைமையும் ஆக அமைக்கும் உரிமை அவனுக்கு எப்படி வந்தது? அவ்வுரிமை திருநீலகண்டத்துக்கே உண்டு. உயிர்களைப் படைக்கவில்லை என்று சொல்லலாம், உயிர்களை அழிக்க வந்த ஆலகால நஞ்சினைத் தான் ஏற்றான். உயிர்களை, உலகத்தை அழியாமற் காத்த வகையில் அத்திரு நீலகண்டத்தை,

''கருமையின் ஒளிர்கடல் நஞ்சமுண்ட
உரிமையின் உலகுயிர் அளித்த நின்றன்
பெருமையை நிலத்தவர் பேசினல்லால்
அருமையில் அளப்பரி தாயவனே''

என்று குறிப்பிட்டருளுகின்றார் ஞானசம்பந்தர். ஞானப்பாலருந்தியவுடன் எடுத்த திருப்பதிகத்துள், எல்லாப் பாட்டினுள்ளும் 'பெம்மான் இவன் என்று, தனக்கிது செய்தான் இவன் என்பதன்றி, உலகத்துக்கிது செய்து, பெம்மானாக ஆனவன் இவன் என்பதை இணைத்துக் காட்டி, அடுத்து வரும், ஏகபாதத் திருப்பதிகத்துள் முதல் திருப்பாட்டில்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''பிரமபுரத்துறை பெம்மான் எம்மான்''

என இணைத்துக் காட்டியுள்ளார். மேலும், பெம்மான, எம்மான் என அவன் பல்வகைப் பண்புகளையும் முறையே நிலை நாட்டி வரும் போது, திருவண்ணமலைப் பதிகத்துள், பெம்மானும் எம்மானுமாக நின்ற சிவன் ஒருவனே நன்மைப் பொருள் என்று கூறி நிலை நாட்டும் வகையில்,

''நஞ்சைக் கண்டத் தடக்கும் அதுவும் நன்மைப் பொருள் போலும்'' என்று அமைத்தருளினர்.

மேலே கூறப் பெற்ற வகையில், நம்பியாரூரரும் ஞானசம்பந்தரும் இணைந்த நிகழ்வுகளுக்கு உட்பட்டவர்களாக விளங்குவது போலவே, ''மையல் செய்தல்'' என்பதும் இருவருக்கும் திருவருளாலேயே வந்து சேர்கிறது. திருத்தொண்டின் நிலை தருவதற்காக ஞானசம்பந்தருக்கு ஒரு வகை மையல் அளிக்கப் பெறுகிறது. அவ்வாறே, திருத்தொண்டத்தொகை தருவதற்காக ஆலால சுந்தரருக்கும் மையல் திருவருளாலேயே நிகழ்வுறுகிறது (இதனை நம்பியாரூரர் ஆய்விற் காணலாம்) ''திருந்தடி மறக்குமாறு இல்லாத என்னை'' என்று ஞானசம்பந்தர் தம் முன்னை நிலையில் வருந்துவது போலவே, நம்பியாரூரரும் தம் முன்னைய நிலைமையில்,

''செய்ய சேவடி நீங்கும் சிறுமையேன்
மையல் மானுட மாய் மயங்கும் வழி
ஐயனே தடுத்தாண்டருள் செய்''

என வருந்திக் கேட்கிறர். அதனலேயே, அவர் தம் தேவாரத்துள்,

''பிழைப்பனகிலும் திருவடிப் பிழையேன்''

என்று மனமுருகிப் பாடுகிறர்.

இவ்வாறு, திருவடியை மறத்தல் கூடாது என்று மிக உறுதியாக இருந்த அடியவர்களை மையல் செய்து மண்ணுலகிற்கு அனுப்பியுள்ளான். ஏன்? குற்றமில்லாத நிலையில் உயிரை இம்மண்ணுலகிற்குப் பிறவி எடுக்குமாறு செய்ய முடியாது. ஆகையால், தான் விரும்பிய தொண்டினை இவ்வுலகில் திறம்படச் செய்பவர் ஒருவரை இந்நிலவுலகிற்கு அனுப்ப எண்ணும் இறைவன், குற்றமே செய்யாதவர்களையும் சிறு குற்றத்துக்கு ஆளாக்கி அனுப்புகின்றன் என்ற ஒருவகை விடையைச் சான்றேர் சிலர் முடிவு செய்வர். ஆனல், இந்த வினவுக்கு விடை சொல்ல வேண்டும் என்று பலரும் முயன்றுள்ளார்கள் என்பது உண்மை. ஏனெனில், இது ஞானசம்பந்தரே தம் திருப்பதிகத்தில் கூறி விட்ட உண்மை.

மண்ணின் மேல் வந்த பின்னரும் வேறு பிழைகள் செய்தாலும் செய்வேன், திருவடியை மறத்தல் என்ற ஒன்றை என் மனமே செய்யாது என்று கூறுவது போல, ஞானசம்பந்தரும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"கோலமாய நீண்மதிற் கூடலால வாயிலாய்
பாலனாய தொண்டு செய்து பண்டும் இன்றும் உன்னையே
நீலமாய கண்டனே நின்னையன்றி நித்தலும்
சீலமாய சிந்தையில் தேர்வதில்லை தேவரே"

என்று திண்மையுடன் எடுத்துக் கூறுகிறார். ஆயினும், சேக்கிழார் பெருமான்,

"பாச மற்றில ராயினும் பார்மிசை
ஆசை சங்கரற்கு ஆயின தன்மையால்
தேசு மிக்க திருவுரு வானவர்
ஈசனைத் தொழுதே தொழுதேகினர்"

என்று (பெரியபுராணம் 2092) எடுத்துக்காட்டி, ஞானசம்பந்தர் முன்னைப் பிறவியிலேயே பாச நீக்கம் பெற்றவராயினும், இந்நில வுலகில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் இறைவனைக் கண்டு வணங்கவேண்டும் என்ற ஆசை அவருக்கு இருந்தமையால், இறைவன் அவரை இவ்வுலகிற்கு அனுப்பினன் என்றார். சேக்கிழார் கருதுவது போல் ஆளுடைய பிள்ளையாருக்கு அத்தகைய ஆசை உள்ளத்தில் இருக்குமேயானல், அவர்,

"திருந்தடி மறக்கிலாத என்னை மையல் செய்து" என்று சொல்லத் துணியார். ஞானசம்பந்தர் இந்நிகழ்ச்சியைத் திருத் துருத்தித் தேவாரத்தில் அமைத்தருளுகின்றார். இம்மண்ணுலகின் சிறப்புக்களையும், இங்கே இறைவன் விளங்கும் முறைகளையும் அனுபவத்தில் கண்ட பின்னரும் அவ்வாறு ஒரு உரையை வழங்க மாட்டார்.

அடுத்து, மன்பதைத் தொண்டு செய்வதற்கு இறைவன் தம் அடியவரை, தகுதியால் மிக்கவரையே அனுப்ப வேண்டியுள்ளது. உலகவர் துன்பம் நீக்கக் கருதி, இவரை அனுப்ப இறைவன் முற்படும்போது, இவர் பாசமற்றவர் ஆதலின் ஏதேனும், ஒரு குறை இருந்தால் தான் பிறவியிற் செலுத்த முடியும். அதற்காக, ஒரு சிறு மயக்கத்தை உண்டாக்கினர். ஆகையால், 'மையல் செய்து' என்பது ஞானசம்பந்தர் இறைவன் தமக்குச் செய்ததைக் குறை யாகக் கருதிச் சொல்லவில்லை; தன்னை உலகுக்கு அனுப்புவதற்கு இறைவன் மேற்கொண்ட காரணத்தை எடுத்துக்காட்டும் முறை யிலேயேதான் கூறினர் என்பது வேறொரு வகை விளக்கம். இவ்விளக்கம் எழுதிய பின்னும், எழுதிய அச்சான்றோர் மனம் சமாதானம் அடைய இயலாமையின், "சம்பந்தப் பிள்ளையார் தாம் தாய் வயிற்றிலிருந்த போதும், சிவபிரானல் ஆட்கொள்ளப் பெறும் வரையிலும் அவனை மறந்திருக்க நேர்ந்தமைக்கு வருந்துகின்றார் என ஒப்புகிறார்.

ஒரு நெறிய மனம் வைத்துணர்தல்

ஞானவாரமுதமுண்ட பிள்ளையாரின் முன்னிலையும் பின்னிலையும் இணைய நிற்க, முரண்பாடில்லாத ஒருவகைக் கருத்தினை இணைத்துக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொள்ள வேண்டி எழுந்த ஆய்வுகளில் எழுந்த சிக்கல் தீர்ந்தநிலை இல்லை. ஞாலமுய்ய, நாமுய்ய, திருநெறியத் தமிழை நமக்காகவே அளித்த நம் முன்னோர்கள் அருளியிருப்பவைகளை அத்தகைய நோக்கில் நாம் அணுகவில்லை என்பதே இந்நிலைக்குக் காரணம். இவ்வகையில் ஈடுபட்ட நம் முன்னோர்களும், ஞானசம்பந்தப் பெருமானின் முன்னிலை (சீர்காழியில் பிறப்பதற்கு முன் இருந்த நிலை) அமைப்புக்களைப் பற்றி ஆய்வு செய்தாலும், முன்னிலை அமைப்பினை வரையறைப் படுத்திச் சொல்ல இயலாது எனக் கருதியே அவைகளை அழுத்தமாகச் சிந்தியாது புறக்கணித்திருக்க வேண்டும். ஆயினும், காலம் எழுப்பிய வினவினை உடன்கொண்டு மீளவும் விடை காண முயற்சிக்க வேண்டிய நிலை இப்போதுள்ள தேவை. காலத்தால் விளைந்த தேவை கருதி, மீளவும் நம் முன்னோர்களின் திருவருள் முயற்சிகளையே போற்றிப் பரவ வேண்டிய நிலையில் உள்ளது தான் நம் நிலைமை. நம் சிந்தனையில் இங்கெழுந்து நிற்கும் ஐயம் வடலூர் இராமலிங்க வள்ளலுக்கும் தோன்றியிருக்கிறது. தோன்றிய ஐயத்துக்கு ஞானசம்பந்தப் பெருமானே விடையளித்ததாகக் கூறுகிறார்.

''முன்புறு நிலையும் பின்புறு நிலையும்
முன்னி நின்று உளம் மயக்குறுங்கால்
அன்புறு நிலையால் திருநெறித் தமிழ் கொண்டு
ஐயம் நீத்தருளிய அரசே''

என்று, **ஆளுடைய பிள்ளையார் அருள் மாலையின்** ஒன்பதாம் அருட்பாவில் எடுத்து மொழிகின்றார். எனவே, இவ்வினவுக்குத் திருநெறித் தமிழில் விடையிருக்கிறது என்பதாம். இனி, அடுத்துள்ள பத்தாம் அருட்பாவில், ஒரு குறிப்பினை அருளுகின்றார்.

''வருபகற் கற்பம் பலமுயன் றுலும்
வரலருந் திறனெலாம் எனக்கே
ஒரு பகற் பொழுதில் உற அளித்தனை நின்
உறுபெருங் கருணையென் னுரைப்பேன்''

என்ற வரிகளின் மூலம், தாம் பெற்ற அனுபவ விளக்கத்தைக் கூறியருளுகின்றார். இந்த இரண்டாவது அருட்பாவின் மூலம் நமக்குரிய ஐயத்தை நம் முயற்சியால் தீர்க்க முடியாது. அவனருள் நம்மை அத்தகைய அனுபவத்தில் கொண்டு வந்து நிறுத்தும் என்று கூறிய வள்ளலார் அதனைத் திருநெறிய தமிழில், ஞானசம்பந்தர் இலைமறை காயாக அமைக்கவில்லை; பகல் போல வெட்ட வெளிச்சமாகவே அமைத்திருக்கிறார் என்று குறிப்பிடுகிறார்.

ஆளுடைய பிள்ளையாரின் முன்னுறு நிலை எது, பின்னுறு நிலை எது என்ற ஆய்வை மேற்கொள்ளும்போது, ஒருவரின் இருநிலைகளுக்குரிய இணைப்பே நமக்கு எழும் ஐயம் என்றாற் போல, நிலைகள் இரண்டுடைய நெறி ஒன்று அடிப்படையாக நிற்க, ஆளுடைய பிள்ளையார் தன்னுடைய முன்னுறு நிலையில் அந்நெறியின் ஒரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பகுதியினை அல்லது அந்நெறியின் முன்னுறு நிலையினை உணர்ந்து, அந்நெறியின் பின்னுறு நிலையைப் பிரமபுரத்தில் பிறந்த பிறப்பின் மூலம் உணர்ந்து கொண்டார் என்றும் கொள்ளலாம்.

ஞானவாரமுதமுண்டபின் பேருணர்விற் பொலியும் பிள்ளையார், யாரளித்த பாலடிசில் உண்டனை நீ? என்ற பபாத இருதயரின் வினவுக்கு விடையளிக்க முற்படுகிறார். முதலில், அவருடைய திருமேனியாற் குறிப்பிடுஞ் செயல்களைச் சுட்டுகின்றார் சேக்கிழார்.

''ஒரு காலைத் தூக்கி ஆடுகின்ற பிள்ளையார், உச்சியினில் எடுத் தருளும் ஒரு திருக்கை விரற் சுட்டி'' என்று கூறுவதால், யான் இது வரை அறிந்ததும், இனித் தம் வாழ்வில் குறிக் கோளாகக் கொண்டு விளக்கப் புகுவதும் நிலையால் இரண்டாயினும் நெறியால் ஒன்றே என்று விளக்குகின்றார். அதைப் பதிகமுறையில் விளக்கும் போது,

''ஒரு நெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன்''

என்று குறிப்பிட்டுக் காட்டினர்.

'ஒரு நெறி' என்று குறிப்பிட்டது முதல் திருப்பதிகத்தில். அதனைச் செயல் வழி விளக்கத்தில் அமைக்கும்போது, ஒருகாலை ஊன்றியும், ஒரு விரலை உயர்த்திச் சுட்டியும் அறிவுறுத்தருளினர் ஆளுடைய பிள்ளையார். இரு நிலைகளைக் கொண்ட ஒரு நெறியை இரு பிறவிகளைக் கொண்ட ஒருவர், தம் முன்னைப் பிறவியில் அந்நெறியின் ஒரு பாதியைச் செயல்படுத்தி முடித்தேன் என்ற வகையில் காலை ஊன்றியும், இப்பிறவியில் அடுத்த பாதியைச் செயல்படுத்த வேண்டும் என வரும் நான் உணர்த்த முற்படும் நெறி ஒன்றே என்பது விளங்க ஒரு விரல் உயர்த்தியும், அவர் தாம் மேற்கொண்ட செயல்களின் உட்குறிப்புக்களாக அமைத்தருளினர்.

அருநெறியும் பெருநெறியும்

'எடுத்த பதிகம்' எனப்பெறும் முதற் பதிகத்தினுள் திருக்கடைக் காப்பினில் நெறியின் தன்மையையும், நெறிக்கு உரிமையாளன் ஆகிய நெறியாளன் தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றார்.

'உள்ளங்கவர் கள்வன்' எனப் பெறும் பெம்மான் தொடர்பு கொண்ட இடங்கள் இரண்டு. ஒன்று மறை; மற்றென்று பிரமாபுரம்.

அருநெறியை யுடையது மறை; பெரு நெறியை உடையது பிரமாபுரம்.

அருநெறியையுடைய மறையில் வல்லமை பெற்றவன்; பிறருக்கு அறிவுறுத்தியவனும் கூட. ஆனல், அருநெறியில் வல்லவன் என அவன் அறியப் பெற்ற காலத்தே, அவன் முனிவன்.

பிரமபுரம் பெருநெறியையுடையது. இங்கே பேரருளாட்டியாகிய, பேரருளை வளர்ப்பவளாகிய பெண்ணில் பெரியவளோடு, பெருந் தகையாகத் தானே விரும்பித் தங்கியிருக்கிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எனவே, மறை தந்த அருநெறி முன்னது; பிரமாபுரம் விளக்கும் பெருநெறி பின்னது. இரண்டையும் இணைத்து நிற்பவன் ஒருவன். ஒருவனே யாயினும், அவனும் இவ்விரண்டிற்கும் உரிய வகையில் இருவகை நிலைகளை மேற்கொண்டுள்ளான். முதல் நிலையில் அவன் முனி; பின்னிலையில் அவன் பேரியற் கிழத்தியோடு நின்ற பெருந்தகையாளன்.

திருநெறிய தமிழ்

அருநெறியையும் பெருநெறியையும் இணைத்த ஒருநெறியை வெளிப்படுத்த முற்பட்டாரெனில் அது 'இருமையின் ஒருமை' எனப் பெறும். இரு பக்கங்களைக் கொண்ட ஒரு நாணயம் போல இணைந்தும் இணையாதிருக்கும் நிலை. இணையாமலேயே இருக்கும் இருவகை நிலைகள் அல்ல. ஒருமையில் இணைபவை.

ஆயினும், தன்னுடைய தொண்டினைக் கூற முற்படும்போது, அந்நெறியைத் 'திருநெறி' என்றார். அதனை வெளிப்படுத்தும் நிலையில் அதனைத்."திருநெறியதமிழ்" என்று எடுத்துக்காட்டியருளு கின்றார்

எனவே, திருநெறி என்பது மறை நெறியும் பிரமபுரத்து நெறி எனப்பெறும் பெரு நெறியும் இணைந்த இணைப்பன்று. அவ்வாறுயின், அவ்விணைப்புக்குப் பெயர் ஒருநெறி என்பதே. மேலே கூறப் பெற்ற இரண்டும் கலந்து, தம்முள் மயங்க, அப்போது அவ்விரண் டன் தனித்தன்மைக்குரிய வேறுபாடுகள் அழிந்து போய்விட, எஞ்சியுள்ள பொதுமையின் அடிப்படையில், பரிணமவளர்ச்சி நியதியின் வண்ணம், ஒருவகை உயர்ந்த நிலை தோற்றம் பெறும். அது, அவ்வொருமையின் அடிப்படையில் எழுவதாயினும், முன் சொன்ன அவ்விரண்டின் நிலைகளையும் கடந்த நிலை. இவ்விரு வேறு நிலைகளைக் காழிக் கவுணியக் கன்று, தாம் அருளிய திருவெழு கூற்றிருக்கையினுள், இருமையின் ஒருமையும் என்ற ஒரு நிலையைச் சுட்டிய பின்னர், 'ஒருமையின் பெருமை' என்ற வேறு ஒரு வகை நிலை உண்டு என்று எடுத்துக் காட்டினர். ஒருமையின் பெருமை என்ற இரண்டாம் நிலையைச் சேக்கிழாரடிகள்,

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்"

என்று, பெரியபுராண 143ஆம் செய்யுளிற் கூறியருளுவது கொண்டு தெளியலாம்.

மேலே எடுத்துக் கூறப் பெற்றவாற்ருல் அருநெறி எனப் பெறும் மறைநெறி; பெருநெறி எனப் பெறும் பிரமபுரத்து நெறி; இவ்விரண்டின் மேல் வருவது எனினும், இரண்டும் கெட்ட விடத்து மேலோங்கும் நெறி ஒன்று உண்டு; அதுவே திருநெறி. அதை யொட்டியதே திருநெறிய தமிழ் என்று நாம் தெளியலாம் வகையில் சான்றுகள் அமைந்துள்ளன எனக் கொள்ளலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருநெறி, பெருநெறி, திருநெறி என்ற மூன்றும் ஒன்றன் வழியாக ஒன்று என்ற நெறிமுறை வளர்ச்சியில் வருவனவே. இம் மூன்றையும், இரண்டாகக் கொள்ளும் போது முன் இரண்டையும் இணைத்து ஒருநெறி என்று அமைத்துக் கொள்ள வேண்டும்.

ஆளுடையாரின் முன்னையநிலை பற்றிய அகச்சான்று

காலம் பெற அழுத பிள்ளையார் திருத்தோணி புரத்து இறைவரைப் பார்த்து அழுதார். இறைவன் இறைவி என, இருவராகத் தனித்தனி நின்று செயல்படுத்திய — செயல்பட்ட காட்சியும், ஞானப்பால் அளித்த பெருந்தகைமையும் கண்டபின், தாம் எடுத்துப் பாடிய முதற்பதிகத்துள் "எம்மை இது செய்த பிரான் இவன்" என்று விடை கூற முற்பட்டு,

"தோடுடைய செவியன்"

என்று எடுத்துக்கூறி, 'இருமை இணைந்த ஒருமை' என்ற கொள்கை தழுவிய திருவுருவை எடுத்துக் காட்டி, விடையேறுதல், வெண் பிறை சூடியிருத்தல், சுடலைப் பொடி பூசுதல் ஆகியவற்றை மொழிந் தருளுகிறார். பார்த்தழுதது தோணிபுரத்தாரை; பேசுவது முழுவதும் பிரமபுரத்தாரை. இங்கே ஒரு முரண் தோன்றுகிறது. இவ்விருநிலை களுக்கும் ஒரு இணைப்பை உண்டாக்க வேண்டும் என்று கருதுகிறார் சேக்கிழார்.

"அந்நிலையில் திருத்தோணி வீற்றிருந்தார் அருள்நோக்கால்
முன் நிலைமைத் திருத்தொண்டு முன்னியவர்க் கருள் புரிவான்
பொன்மலை வல்லியுந் தாமும் பொருவிடை மேல் எழுந்தருளிச்
சென்னி இளம் பிறை திகழச் செழும்பொய்கை மருங்கணைந்தார்"

என்று (பெரியபுராணம் 1967) கூறியருளுகின்றார். திருமுலைப்பால் நிகழ்வுக்கு மூலமாகத் தாம் பார்த்து அழுத நிலையில் அமைந்த இறைவர் கோலமும் 'தோடுடைய செவியன்' என்ற எடுத்த மொழி யால் குறிப்பிடும் கோலமும் இணையவில்லை. பின்னர்த் திருவீழி மிழலையிலும் காழிக் காட்சியை விரித்துரைக்கும் ஞானசம்பந்தப் பெருந்தகை, திருவீழிமிழலைக் காட்சியில்,

"இன்னிசை யாழ் மொழியாளோர் பாகத்து எம்மிறையே"

என்றும்,

"நாகபணந்திகழ் அல்குல் மல்கு நன்னுதல் மான்வழி
மங்கையோடும்
பூகவனம் பொழில் சூழ்ந்த அந்தண் புகலி நிலாவிய
புண்ணியனே"

என்றும், இரண்டின் இணைப்பாக நின்ற ஒருமைக் கோலத்தை அருளிச் செய்த பெருந்தகை, மதுரைக் காட்சியில்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே"

என்றும் குறிப்பிட்டருளுகின்ருர்.

மேலும், ஒரு சிறப்பான உண்மையை நாம் இங்கே இணைத்துக் காண வேண்டும்.

இரண்டு திருத்தலங்களை இணைத்துக் காணும் காட்சியும், இணைத்துச் சில கருத்துக்களை வழங்கும் நிலையும், ஞானசம்பந்தப் பெருமான் வாழ்வில் அமைந்த முக்கிய நிகழ்வுகள். அவற்றுள், ஒன்று இவ்விடத்துக்குமிக முக்கியமானது.

திருவேள்விக்குடியும் திருத்துருத்தியும் இணைந்து நிற்கும் காட்சியை அமைத்துக் கொடுக்கும்திருவருள் உணர்வினுல் ஞான சம்பந்தர் சில கொள்கைகளை விரிவாக அமைத்துத் தருகிருர்.

திருப்பிரமபுரத் திருப்பதிகத்துள், நாலடிமேல் வைப்புத் திருப் பதிகமும் ஒன்று. அத்திருப்பதிகத்தின் எட்டாந் திருமுறைப்பாட்டின் முதல் இரண்டு வரிகள்.

"இரவொடு பகலதாம் எம்மான் உன்னைப்
பரவுதல் ஒழிகிலேன் வழியடியேன்"

என அமைகின்றன. ஆளுடைய பிள்ளையார் இங்கே குறிப்பிடும் இரவும் பகலும் ஆய எம்மான் நிலை எது? இவ்வினுவுக்கு விடை அளிக்கும் பதிகமாக அமைகிறது திருவேள்விக்குடித் திருப்பதிகம்.

திருவேள்விக்குடி என்பது திருப்பதிகப் பெயராக நிற்கும் தலப்பெயர். ஒளிந்துகொண்டிருப்பது திருத்துருத்தி. இரவிடத்து உறைவது திருவேள்விக்குடியில். பகலில் தங்குவது திருத்துருத்தி. திருத்துருத்தியில் யோகியாய் வேதமோதிக் கொண்டிருக்கிருன். திரு வேள்விக் குடியில் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்த காரணத் தால் அவன் உடம்பில் ஒரு பாகத்தில் உமையவளால் ஒற்றப் பெற்ற தழும்பு காணப்பெறுகிறது. உமையவளை நினைவுறுத்தும் தழும்புடன் கூடிய உருவமுடையவனுய், திருத்துருத்தியில், பகலில் இருக்கிருன். ஆனுல், மேற்கொண்ட அறநிலை, பிரமசாரியாய் வேதமோதிக் கொண்டிருக்கிருன். யோகியாய் வேதமோதிக் கொண்டிருக்கிருன் என்றும் பேசப் பெறுகிறது. திருமேனி காட்டும் கோலம் ஒன்று; செய்கை வேறு. திருவேள்விக்குடிப் பதி என்னும் பெயரில் கூறப் பெறும் திருத்துருத்தி நிகழ்ச்சியே பகல். எனவே, இது ஒன்று தான் பகல் பதிகம். இராமலிங்க சுவாமிகள் ஒரு பகலில் எனக்கு, திரு நெறியத்தமிழால் உணர்த்தினுய் என்று குறிப்பிட்டுக் காட்டியிருப்பது இப்பதிகமே. இப்பதிகமும் திருத்துருத்தி என்ற தனிப்பெயர்ப் பதிகமும், அளிக்கும் ஆய்வுரைக் கருத்துக்கள் கீழே உள்ளன.

1. துறவு மேற்கொள்வது என்பது உன் கருத்தன்று (துறக்குமா சொலப்படாய்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. ஒருத்தி பால் பொருத்திவைத்த உடம்பை விட்டாலும் தழும்புடன், துருத்தியில் ஒளித்துக் கொண்டிருக்கிறாய். இது என்ன மாயம்?

3. நின் திருந்தடி மறக்கும் தன்மை இல்லாத என்னை மையல் செய்து மண்ணின் மேல் பிறக்குமாறு காட்டினாய்.

4. நான் இறந்து தான் பிறந்தேன். ஏனெனில், நான் பிணியிற் பட்டு வருந்தும் உடம்பை விடவேண்டும் என்பதற்காக நான் இறந்தேன். அவ்வாறு நான் இறக்குமாறு காட்டினவன் நீ.

5. இந்நிகழ்வுகளில் அமைந்த பொருந்தாமைக்குக் காரணம் என்ன? இக்கருத்துக்களை உணர்த்தும் திருப்பாட்டு.

"துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி
மறக்குமாறு இலாத என்னை மையல் செய்து இம்மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படும் உடம்பு விட்டு
இறக்குமாறு காட்டினாய்க்கு இழுக்குகின்றது என்னையே!

என்பது. இதன் மூலம் ஆளுடைய பிள்ளையார் தம்முடைய முன்னைய, பின்னைய நிலைகளை விளக்கும் முறையை நாம் அமைத்துக் கொள்ளலாம்.

சிவபாத இருதயருக்கும் பகவதிக்கும் மகனாகப் பிறந்த போது, நான் உயிர்கள் பிறவியை எடுக்கும் முறையில்தான் இறந்து பிறந்தேன். இறத்தலுக்குக் காரணம், யான் முன்னைப் பிறவியில் இருந்த நிலை பிணிப்படும் நிலை. பிணி என்பதை இல்லறம் என்றும் கொள்ளலாம் அழிவது என்றும் கொள்ளலாம். இல்லறம் என்ற பிணியில் ஈடுபடுத்திக் கொள்ளக் கூடிய தன்மையுடைய உடம்பு என்ற விளக்கத்தை அமைத்தால், அது குற்றமில்லை. ஏனெனில், துறக்குமா சொலப்படாய் என்ற அவருடைய கருத்து, இறைவனும் துறவை நாம் இன்று விளங்கிக் கொள்ளும் முறையில் மேற் கொள்ளவில்லை என்பதே. ஏனெனில், அவன் துருத்தியில் உமை தழுவிய தழும்புடன் இருப்பது சான்றாகும். அடுத்தது, அவன் திருவடியை மறவாப் பண்பினனாகிய என்னை ஒருவகை மயக்கத்தில் ஈடுபடுத்தி, இப் பிறவியை உண்டாக்கினான்.

"மறக்கும் மனத்தினை மாற்றி, எம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக்கீழ்ப் பிழையாத வண்ணம்
பறித்த மலர் கொடு வந்துமை யேத்தும் பணியடியோம்"

என்று, திருநீலகண்டப் பதிகத்தின் 6ஆம் திருப்பாட்டில் குறிப்பிடும் சம்பந்தர் தன்னுடைய மனத்தோடு உயிரையும் மாற்றம் பெற வைக்கும் பணி நடைபெற்றுள்ளது என்பதை ஒப்புகின்றார். அத்திரு நீலகண்டத் திருப்பதிகத்தின் திருக்கடைக் காப்பினுள்,

"பிறந்த பிறவியில் பேணி எம் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவி உண்டாகில்"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று, குறிப்பிடுவதை எண்ணும் போது, அது அவர் தம் முன்னைய நிலையையும் பின்னைய நிலையையும் இணைத்துக் காட்டியுள்ளதன் உட்கோள் தெரியவரும்.

1. இப்பிறவியை அடைவதற்காகவே சென்ற பிறவியில் இறந்தார். எனவே, சென்ற பிறவி காரணமாக இப்பிறவி அவருக்கு அமைந்தது.

2. பிறந்த பிறவியில் என்ன குறிக்கோள் என்னில், செல்வன் கழலைப் பேணுதல்; அடைதல்.

எனவே, ஆளுடைய பிள்ளையாராகப் பிறந்த இப்பிறவிக்கு முன்னுள்ள பிறவியில் திருவடியை மறவாது மனம் பற்றிய நிலையும், மலர் பறித்து இட்டு வணங்குதல் என்ற வழிபாட்டுச் செயலும் அமைந்தன. இப்பிறவியில் உயிரானது திருவடியைப் பேணி நிற்கும் நிலை; திருவடியை அடைந்து துய்த்தல் பயன். மேற்கொள்ளும் செயல் திருத்தொண்டு.

நெறி என்ற வகையில் திருவடியே குறிக்கோள். முன்னிலையில் மறவாது நினைக்கும் முயற்சி. பின்னிலையில் உயிரால் பேணுதல் செய்வதும் அடைந்து துய்த்தலும் ஆகிய நிலையும் பயனும். முன்னது மறைநெறி; பின்னது பிரமாபுரப் பெரு நெறி. இவ்விரண்டும் இணைந்த நெறி, ஒரு நெறி அந்த ஒரு நெறியினை அடிப்படையாகக் கொண்டு, அதே சமயத்தில் அந்த ஒரு நெறியை அழித்த நிலையில் எழுவது திருநெறி.

ஆனல், அவன் இதற்காகச் செய்த மையல் என்ன?

இரவோடு பகலதாம் என்று கூறப் பெறும் பண்புகள் அமைந்தவன் இறைவன். அவன் அருமையான பண்புகள் — அருமையில் அளக்க அரியா செயல்கள் பலவும் கொண்டவன் என்ற ஒரு பகுதியும், பெருமையோடு பேசியும் பேணியும் அனுபவித்தற்கு உரிய பண்புகள் செயல்கள் ஆகியவைகள் பலவும் கொண்டவன் என்ற மற்றொரு பகுதியும் ஆய, இருபகுதிகளையும் கொண்டவன், அவன் என்பதே 'இரவோடு பகலதாம் எம்மான்' என்பதன் பொருள்.

இறைவன் அரியவன், அளந்தறிய முடியாதவன், எல்லாவற்றையுங் கடந்தவன், பிரமனும் மாலும் தேடியுங் காணப் பெற முடியாதவன். அவ்வாறே,

"பாடினை அருமறை வரன்முறையால்
ஆடினை காணமுன் அருவனத்தில்
சாடினை காலனை"

என்பன போன்றவைகளை;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''நிழல் திகழ் மழுவினை யானையின் தோல்
அழல் திகழ் மேனியில் அணிந்தவனே
கழல் திகழ் சிலம்பொலி அலம்ப நல்ல
முழவொடும் அருநடம் இயற்றினனே''

என்பன போன்றவைகளை, இம்மண்ணுலகத்தவர் பெருமையோடு பேச முடியுமே யொழிய, இன்ன தன்மைத்து என அளந்து அறிய முடியாது.

இத்தகைய அரிதற்கரிய நிலையினனை அறிந்து மகிழ்ந்து அவனுக்குத் தொண்டு செய்ய இயலாது. அளவிடற்கரியன ஆதலினால், அவன் திருவடியில் நம்மை இணைத்து, அத்திருவடியையே புகல் எனக் கருதி, அவனுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்பது இயலாது. முழுமையாகத் தெரிந்து கொள்ளாமல், அவனைத் துய்த்து நலம் பெறுமல், அவன் பெருமையைப் பேசி மகிழ முடியாமல் இருக்கும் நிலையில் திருவடியை நினைந்து வழிபாடு செய்தல் ஒன்றே செய்ய முடிந்தது.

இரண்டாவது நிலையில் அவனை முழுமையாகத் துய்க்க முடிந்தது. கரியானும் நான்முகனும் காணமைக் கனலுருவாய், அரியானும்; அரவஞ் சேர் அகலத்தான் தெரியாதான் என்று மட்டுமே கண்டு, வழிபாடு செய்த நிலை முதல் நிலை. இது இரவு நிலை.

இரண்டாம் நிலையில் அவன் பகலாக நின்றான். சங்கைதனைத் தவிர்ப்பிக்கும் கோன் ஆக நிற்கும் அவன் திருவடிகளைக் கொழுமலர் தூய் வழிபடவும், தூய சொல் மலரால் ஏத்தித் துதிக்கவும் முடிந்தது.

கண்ணுதலான் வெண்ணீற்றன் கமழ்சடையான் விடையேறி
பெண்ணிதமாம் உருவத்தான் பிஞ்ஞகன்பேர் பலவுடையான்
விண்ணுதலாத் தோன்றியசீர்ப் பிரமபுரம் தொழ விரும்பி
எண்ணுதலாம் செல்வத்தை இயல்பாக அறிந்தோமே

என்ற திருப்பிரமபுரத் தேவாரம், மையல் என்பதன் விளக்கத்தையும், தீர்த்த முறையையும் பேசுகின்றது. திருவடியின் பண்புகளை அறியாமல் பற்றுதல் ஒன்றே செய்ய முடிந்தது. இறையருளால் ஐயங்கள் எழுந்தன. அதுவே அவன் செய்த மையல். இப்பிறப்பில் ஐயம் நீங்க அங்கெழும் அப்பொருளின் அருமையை, பெருமையை இயல்பாக அறிய முடிந்தது. அறிந்ததால் புகழ் ஏத்த முடிந்தது. மேற்கொள்ளும் தொண்டுக்கு முன்னதே போதும் எனினும் பின்னதே எளிமை. இயல்பாக நிகழும். வலிமை தேவையில்லை. இரண்டாம் நிலையில் பொருளை முழுமையாகவும் இயல்பாகவும் அறியவும் துய்க்கவும் முடிந்தது; ஆகையால், நினைத்து வழிபடுதலினும் அறிந்து, துய்த்து, ஏத்தும் தொண்டு சிறப்புற்றது. வழிபாடும் நினைவும் சிறந்தாலே போதும் என்று கருதாமல் முழுமையாகத் துய்க்கவும் அறியவும் வேண்டும் என்ற இயற்கையான விருப்பத்தினைத் தெரிந்து நிறைவு படுத்த முடியவில்லையே! வழிபாடு செய்வதோடு சரி என

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நினைத்துச் செய்தாலும், இத்தகைய ஒரு எண்ணம் அடிக்கடி வந்து தாக்குதல் செய்யவே செய்தது. அவ்வாறு வந்து தாக்கிய நிலையை 'மையல்' என்றும், அதனையே 'உள்ளங் கவர் கள்வன்' என்றும் குறிப்பிட்டுக் காட்டினர்.

ஒரு நெறியின் இருமை நிலைகளை விளக்கப்புகும் ஆளுடைய பிள்ளையார் எந்த ஒரு பொருளுக்கும் இரண்டு பண்புகள் உண்டு; ஒன்று இயல், ஏனையது இசை. முன்னது அறிதற்குரியது, பின்னது அறிந்து சுவைத்து இன்புறற் குரியது என விளக்கிக் காட்டும் வகையில்,

"இயல் இசை எனும் பொருளின் திறமாம்"

என்று எடுத்துக் கூறி, இயற் பகுதியை முற்கூறி, பிற்பகுதியை அறிந்து இன்புறற் குரியது என இணைத்துக் காட்டினர்.

முற்பகுதிக்கும் பிற்பகுதிக்கும் உள்ள வேற்றுமைகள் சிலவற்றை விளக்குகிருர்.

முன்னது ஏற்றினை — விடையைக் கொடியாக அமைத்து உயர்த்திய பகுதி; பின்னது விடையை உகந்து ஏறிய பகுதி. முன்னது பெண்மையை உணர்த்தி, ஆனல் ஆண்மையை மிகுத்த நிலை. 'தோடுடைய செவியன்' என்பதில் பெண்மையைக் குறிப் பிட்டுக் காட்டியதோடு நிறுத்தி, ஆண்மையே பற்றிப் பேசிய நிலை. இரண்டாவது நிலையைப் "பெண் தான் மிக ஆன நிலை" என்று பேசு கின்ருர்.

"வண்டார் குழல் அரிவை யோடும் பிரியாவகை பாகம்
பெண் தான் மிக ஆனுன் பிறைச் சென்னிப் பெருமான் ஊர்"

என்று எடுத்துக்காட்டி அருளுகின்ருர். இவற்றுக்கெல்லாம் மேலாக,

"ஒருமை பெண்மை உடையன் சடையன் விடையூரும் இவனென்ன
அருமையாக உரை செய்ய அமர்ந்து எனதுள்ளம் கவர் கள்வன்"

என்று அமைத்துக் காட்டிய நிலையில், ஒருமையின் இரண்டாம் நிலை யாகிய பெண்மையை உகந்த, பெண்மையை மிக்கமைத்த நிலை இது என உணர்தல் வேண்டும்.

பிணிப்படா நிலையுடை உடம்பு

ஆளுடைய பிள்ளையாராக அமைந்த பிறப்பு முன்னிலும் மாறிய பிறப்பே. ஏனெனில், இப்பிறப்பில் தன் அனுபவ முறையினை மாற்றிக் காட்டுகின்ருர் ஆளுடைய பிள்ளையார்.

1. வெளியில் உள்ள பொருளைப் பார்த்து, அதனல், ஈர்க்கப் பெற்று, அதன் அழகைக் கண்டு, பின்னர் அப்பொருளை அப்படியே உள்ளத்தில் புக அடைத்து, அழியாது காப்பாற்றுதல் என்பது ஒரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முறை. எடுத்துக்காட்டாக, சாதாரணமக்கள் கோயிலில் ஒரு வடிவத்தைக் கண்டு, அதனுல் மனம் ஈர்க்கப் பெற்று, பின்னர் அதனை மெல்லக் கொண்டு சென்று உள்ளத்தில் பதிய வைத்துக் கொள்ளுதல். இவ்வழியில், பொறி புலன்களில் தொடங்கிய காட்சியறிவு மெல்ல உட்சென்று, பின்னர் உயிரின் இன்ப அனுபவத்தை உண்டாக்கும்.

2. உள்ளே முதன்முதற் கிளர்ந்தெழும் எண்ணம் அல்லது கருத்து. அதை உணர்ந்து, அதனையொட்டிய பொருளைப் புறத்தே காணுதல்.

3. முதன் முதல் உயிரில் எழும் ஆனந்த அனுபவம். அந்த அனுபவத்தை உணர்த்தும் அறிவு. பின்னர், அதை ஒத்த நிலையில் வெளியில் இருக்கும் பொருளைக் காணுதல்.

முதல் இரண்டு நிகழ்வுகளில் ஆனந்த இன்ப அனுபவம் இல்லை. ஐம்புலன்கள், கருவிகள் எண்ணத் தொழிற்படும். அனுபவமும் இன்பம் துன்பம் என்ற நிலையில் மனத்துக்கு மட்டுமே உரிய அனுபவ நிலையாகும்.

ஆளுடைய பிள்ளையார் சிவஞானப் பாலருந்தியபின் பெற்ற அனுபவம் மூன்றும் நிலையைச் சார்ந்தது. இம்மூன்றும் நிலை அனுபவத்தை முதன் முதல் நாலடி மேல் வைப்புப் பிரமபுரத்துத் திருப்பதிகத்துள்,

"உருகிட உவகை தந்து உடலின் உள்ளால்
பருகிடும் அமுதன பண்பினனே"

என்று எடுத்துக் கூறினர். இதனை முழுமையாகவும் தெளிவாகவும் நமக்கு எடுத்துக் காட்டிய பெருந்தகை சேக்கிழாரடிகளே.

ஞானசம்பந்தப் பெருந்தகை தில்லையிற் சென்று கூத்தப் பெருமானைக் கண்ட போது, சிற்றம்பலத்தையும் பெருமான் தனிக் கூத்தையும் கண்டார் என்று கூறவில்லை. இறைவன் தனக்கு முன்பே அளித்த மெய்ஞ்ஞானம் போன்றதே வெளியில் இப்போது காட்சிப் பொருளாக இருக்கும் அம்பலம்; உள்ளத்தில் நிறைந்து எழும் ஆனந்தமும், அதனிடையே தோன்றும் கூத்துமே வெளியில் அம்பலத் தாடும் பிரானும் அவன் கூத்துமாக அமைந்துள்ளமையைக் காண்கின்றார். இதனை,

"அண்ணலார் தமக்களித்த மெய்ஞ்ஞானமேயான அம்பலமுந் தம்
உண்ணிறைந்த ஞானத்தெழுமா னந்த ஒரு பெருந் தனிக்கூத்தும்
கண்ணின் முன்புறக் கண்டு கும்பிட்டு"

என்றார். அந்த அனுபவம் உள்ளே நிகழினும், அது வெளியில் உடல் வரையில் வந்து நின்று பொறி புலன்களுக்கும் இன்பம் செய்கிறது. ஆகையால், ஆளுடைய பிள்ளையாருக்கு அமைந்த உடல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புதிய உடல், பிணிப்படா உடல். எனவே தான், அவர் இறந்து, பின் பிறந்தவரே என்று கொள்ளக் கிடக்கிறது. உயிர் பெற்ற சிவானுபவம் நேரே உடம்பு வரையில் பரிணமிக்க, உடலுறுப்புக்களும் இன்பக் களிப்பெய்தும் நிலை ஏற்பட்டதால் அழியாவுடலாயிற்று. தத்துவத்தொடரால் குறிப்பிட வேண்டுமானால், பசுகரணங்கள் சிவகரணங்களாக மாறின என்பதாம். இதனைத் *திருக்களிற்றுப் படியார்,*

"பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனை அன்று ஏவிக் கராங்கொண்ட—பாலன்
மரணம் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
கரணம் போல் அல்லாமை காண்"

என, ஆளுடைய பிள்ளையாரின் உயிரானது தன்னுள் எழும் சிவநிலை இன்பம் பெற்றபோது, அடைந்த மாற்றத்தைக் குறிப்பிடுகிறது.

இத்தகு மூன்றும் நிலை இன்பத்தை, ஆளுடைய பிள்ளையார், இயல்பாகப் பெறுவதற்கு முன்பாகவே பெற்றுவிடுகிறார்.

அருநெறியும் பெருநெறியும் ஆய இரண்டும் இணைந்த ஒரு நெறியில் வர அருளினன் பெருமான். அவ்வகையில் அருநெறியிலிருந்து பெருநெறிக்கு வரவேண்டும். பெருநெறியில், பெருமானை-அறியவாரா நெறியினன் என்ற அரியானை, பெருமையன் எம்மான் எனவும் அறியவேண்டும். அரியவனே பெரியவன் என அறிந்த நிலையில் அந்த இருநெறியையும் இணைத்து அப்பிறவியை முடித்து, அதற்கு அடுத்த பிறவியில் அவர் திருநெறியைப் பெறவேண்டும். பெருநெறிக்கு வந்தவுடனேயே அவர் திருநெறி அனுபவத்தைப் பெற்றுவிடுகிறார். அதனால், அவர் அருளிய திருமுறையில் சில ஒரு நெறியை விளக்குவனவாகவே அமையும். இக்கருத்தை ஆளுடைய பிள்ளையார் தம்முடைய திருப்பிரமபுரத் திருப்பதிகத்துள் ஒன்றன் திருக்கடைக் காப்பினுள்,

"தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருவானைத் தத்துவனைக்
கன்னடைந்த மதிற் பிரமாபுரத் துறையும் காவலனை
முன்னடைந்தான் சம்பந்தன் மொழிபத்தும் இவை வல்லார்
பொன்னடைந்தார் போகங்கள் பலவடைந்தார் புண்ணியரே"

என்று குறிப்பிட்டருளுவதால் அறியலாம்.

இங்கே குறிப்பிடப்பெறும் நிலைகள், செயல்கள், பயன்கள் ஆகியவைகளைத் தெளிவாக அமைத்துக் கொள்ளவேண்டும்.

திருவடியை அடைந்து துய்த்து இன்புறல் என்பதே கொள்கை.

முதல் நிலையில் திருவடியை மறவாது நினைக்கும் மனநிலையை அமைத்துக் கொள்ளுதல். அதற்குரிய செயல் வழிபாடு.

இரண்டாம் நிலையில், மறவாது நினைந்த மனநிலை, மலர் முதலிய வழிபாடு என்ற இரண்டன் காரணமாக, திருவடியைப் பேணும்நிலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அளிக்கப்பெறுகிறது அல்லது அடையப்பெறுகிறது. மறவாத நினைப்பும் வழிபாடும் பேணும் நிலையை அமைக்கிறது. கழல் பேணும் இந்நிலையில் அமையும் செயல்நிலை தொண்டு என்பதாக அமைகிறது.

மூன்றும் நிலையில், கழல் பேணும் நிலையே அடைந்து துய்க்கும் நிலையாக அமைகிறது. அடைந்து துய்ப்பவன், அடையப்படு பொருள் என்ற இருநிலைகள் அழிந்து போகின்றன. பேணிய நிலையால் துய்ப்பு நிலக்கு வந்தவனைப் பார்க்க முடிகிறது. அவனுடைய செயல் நிலக்கு இப்போதுள்ள பெயர் திருத்தொண்டு.

வழிபாட்டு நிலையின் வளர்ச்சியே தொண்டு நிலை. தொண்டு நிலையின் முடிந்த ஒன்றே திருத்தொண்டு நிலை.

சிவபாத இருதயரும் பகவதி அம்மையும் மேற்கொண்ட வழி பாட்டின் பயனுக அவர்களுக்கு அளிக்கப்பெற்றவரே ஆளுடைய பிள்ளையார். எனவே, அவ்விருவருக்கும் 'தொண்டுநிலை' என்ற அடுத்த வளர்ச்சி நிலையை அளிக்கும் பொறுப்பை ஆளுடைய பிள்ளையார் மூலம் மேற்கொள்வதால், அவர் பிறப்பைப்பற்றிச் சொல் லும் போது, **தொண்டின் நிலைதர வருவார்** என்று சேக்கிழார் குறிப் பிட்டார். அவ்வாறே, அனுப்பப் பெற்றவரும் முற்பிறவியில், திருவடி மறவா மனநிலையையும் மலர்பறித்திட்டு வணங்கும் வழிபாட்டு நிலை யையும் மேற்கொண்டவரே. பெற்றோராக அமைபவரும், பிறப்பு மேவி வருபவரும் தத்தம் முன்னைய நிலைகளில் ஒத்த நிலையுடையவர் களே.

ஆயினும், புதிய ஒன்றைப் பெறுதற்கு இருவரும் விரும்புகின் றனர். சிவபாத இருதயரும் பகவதியம்மையும் இறைவன் திரு வடியை நினைதலும், வழிபாடு செய்தலும் என்ற அளவோடு அமைந்துவிடவில்லை. அவைகளே போதுமானவை தாமே, அவ் வளவிலேயே நின்றுவிட்டால் சிக்கலே இல்லை. நிற்க முடியுமா! முடியாது. ஏன்?

திருவடியை மறவாது நினைத்தல் என்பதே முடிந்த நிலை அன்று. அது தொடக்க நிலை. மனம் மட்டுமே இயைபுபடும் நிலை. மனம் என்ற அகப்புலனும் புறப்புலன்களும் மகிழும் அளவுக்கு அது ஒரு வகைச் செல்வமாக வளரும் நிலை பெறும். இது திருவடியை நினைத் தலுக்கு அடுத்த நிலை. இங்கே, வாக்கின் நிலையும் இணைந்து மலர் வழிபாட்டுடன், பொருள் நிறைந்த சொல்லால் இறைவனைப் புகழும் நிலை உண்டாகிறது. இதனை ஏத்தும் நிலை என்னலாம். இதனுள் மனம், வாக்கு, செயல் என்ற மூன்றும் நிறைவுறும் முறையில் பணி அமைவதால், இது தொண்டு நிலை எனப் பெறுகிறது. இங்கே, உயிரனுபவம் உடலனுபவம் என்பதாக இருநிலை அனுபவம் இணை கின்றன.

மூன்றும் நிலையே முடிந்த நிலை. எனவே, திருவடி நினைத்தலாகிய முதல் நிலையைத் தொடங்கிவிட்டால், அந்நெறியின் இறுதிநிலைவரை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வந்து நின்றால்தானே அந்நெறி முடிவுபெற்றதாகும். எனவே, முதற் படியில் நிறைவுபெற்ற ஒருவரை அடுத்தபடியின் பெருமை ஈர்க் கிறது. இங்கே, ஒன்பது, தொண்ணூறு என்ற எண் பெயர்களை அமைத்து நோக்குக.

ஒன்பது என்பது ஒற்றை நிலையுடைய எண். ஆனால், பெயரில் ஒற்றை நிலையைக்குறிக்கும் 'ஒன்' என்பதும் இரட்டை நிலையைக் குறிக்கும் பத்து என்ற எண்ணின் 'பது' என்பதும் இணைந்த நிலையில் 'ஒன்பது' என்பது உருவாகிறது. இவ்வாறே, ஒன்பது பத்தும் நூறும் இணையும் நிலை. ஒற்றை நிலை என்பதில் முழுமை பெற்றுவிட்டது என்பதில் குறையில்லை, மேற்கொண்ட நெறி முற்றுப் பெருமையினால், அடுத்த வளர்ச்சி நிலையின் பெருமையால் இழுக்கப் பெறுவதுண்டு. அடுத்தபடியின் பெருமையில் மனம் ஈடுபடும். அதனால், இருந்த படிநிலையிற் குறைவோ குற்றமோ இல்லை. நெறிவளர்ச்சியின் காரணமாக அந்த ஈர்ப்பு நிலையை ஏற்கச் சிறிது இடம் கொடுக்கிறது முன்னையநிலை. ஆனால், அத்தகைய ஈர்ப் பினைக் கொடுப்பது எது? பல்வேறு நிலைகளை ஒரே நிலையாக இணைப் பதாய், எல்லா நிலைகளிலும் ஊடுருவி நிற்பதாய் அமைந்துள்ள ஒன்றுதான். ஈர்க்கும் வலிமையும், ஈர்க்கப்பெறும் அளவுக்குச் சிறிது இடம் கொடுக்கும் எளிமையும் இணைந்து நின்ற நிலையே ''மையல்'' என்றும், 'உள்ளம் கவர் கள்வன்' என்றும் ஆளுடைய பிள்ளை யாரால் சொல்லப் பெறுகின்றது. முழுமையை அடையாமையும், அறியாமையும் ஆகிய குறைகள் முதல் நிலைப் படிகளில் அமையும், ஆயினும், மேற் கொண்ட முதல் நிலையில், அப்பகுதியைப் பற்றிய அறிவும் செயலும் இணையும். அந்நிலையில் அப்பகுதி நிலை அல்லது படிநிலை குறையற்ற முழுமையே ஆயினும் முழுமையை நோக்கும் போது குறையே.

மூன்றும் நிலையில், உயிர் என்ற தனித் தன்மையும் திருவடி என்ற தனித்தன்மையும் அழிந்துவிடுகின்றன. திருவடியானது தன்னை அருளென அமைத்துக்கொண்டு மாற்றம் பெற்றுவிடுகிறது. உயிரா னது ஞான நிலைபெற்றுவிடுகிறது. அருளே ஞானமே என இரண்டும் இணைந்த நிலை உண்டாகிறது. இது ஒருமை நிலை. இரண்டும் இணைந்த ஒருமை நிலையே இன்பநிலை. இங்கே கொடுப்பானும் துய்ப்பானும் இல்லை. ஞானமும் அருளுமாக இணைந்த நிலை. இதனைக் குறிப்பிடும் ஞானசம்பந்தரும், சேக்கிழாரும் கழல் பேணும் நிலை என்று குறிப் பிடுகிறார்கள். இந்நிலையில் நிற்கும் நிலை ஒருமைநிலை. இங்கே, அருளே எல்லா இடங்களிலும் இருப்பதென உணரும் முறையில் ஞானம் விளங்கிக் கொண்டிருக்கும். இதுவே திருத்தொண்டு நிலை; திருநெறி. முன்னுள்ள நிலைகளில் மலர் வழிபாடும், பரவியேத்தலும் ஆகிய செயல்போல, இங்கே செயல் வெளிப்பாடாக அமைவது ''திருநெறியத் தமிழ்'' என்பதே.

மேலே கூறப்பெற்ற மூன்று நிலைகளை முடித்துக்காட்டும் முறையில் அமைந்த சேக்கிழார் திருவாக்கினை இங்கே ஒப்பு நோக்கி உணர்தல் வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"சுந்தரரும் புறகு, அவரை ஆண்டு கொண்டவனும் புறகு, என்ற புறநிலையை நீக்கி, அக நிலைக்கு வந்து அணைய முற்பட்ட நம்பியாரூரர், ஆரூர்ப் பெருமானை அழைத்துக் கொண்டுவந்து, தேவாசிரிய மண்டபத்துப், புனிதர் பேரவையின் முன்பு நிறுத்தி, இங்கே உள்ளவர்கள் யார்? என வினவுகிறார். அப்போது இறைவன் திருவார்த்தைகளாக, புனிதர் பெருமையை விளக்கிக் காட்டுகிறார் சேக்கிழார்.

"பெருமையால் எம்மை ஒப்பார்; பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்; ஊனம்மேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார்; அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார் இவரை நீ அடைவாய்"

என்று இறைவனே புனிதர் பெருமையை விளக்குவதாக அமையும் பெரியபுராண 342ஆம் திருப்பாட்டு மலர்கிறது.

பெருமையால் எம்மை ஒப்பார் தன்னொப்பில்லான் எனப்பெற்ற இறைவனுக்கும் ஒப்புமைப் பொருளாக நிற்கும் நிலையுடையார் அடியவர். இந்நிலையை எப்படிப் பெற்றார்?'

பேணலால் எம்மைப் பெற்றார் கழல் பேணுதல் என்பதால் என்னை ஒத்த நிலையே அன்றி, என்னையே அனுபவமாக அமையப் பெற்றார்.

ஒருமையால் உலகைவெல்வார் ஒருமை நிலையில் உலகை வெல்லல் என்பது அருளும் ஞானமுமாக நின்ற ஒருமையில் அருளே எங்கும் காணப்பெறுவதாக, அறியப்பெறுவதாக அமையும். எனவே உலகப் பொருள்களும் திருவருளாகவே தோற்றும். உலகக் காட்சியோ, அதனில் ஈடுபடும் செயலோ அமையா. இதுவே, உலகை வெல்லும் நிலை என்றார்.

இருமையும் கடந்து நின்ற அருமையாம்நிலை ஒருமை என்றாலும் முன்னுள்ள இருமையின் இணைப்பில் இந்த ஒருமை வரவில்லை. இருமையையும் கடந்த நிலை. அன்பாய் இன்புறும் அனுபவநிலை.

இவ்வாறு, திருத்தொண்டர்களின் இருமை கடந்த ஒருமை நிலையை எடுத்து விளக்கி, ஆணும் பெண்ணுமாய், இரவும் பகலுமாய், திருவேள்விக் குடியும் திருத்துருத்தியுமாய் நின்ற இரண்டன் இணைப்பில் எழும் ஒருமை நிலையில் நின்ற இறைவன், தன்னுடைய தோழனாக நின்ற நம்பியாரூரரை, இருமையுங் கடந்த ஒருமை நிலையில் நின்றவர்களே அருமையாம் நிலையில் நின்றவர்கள் — புனிதர்கள், என்று கூறி அவர்களுக்கு அடிமையாக ஆக்குகிறான்.

இந்நிலையை அவர்கள் பேணலால் பெற்றார்கள். தொடக்கநிலை வழிபாடு தான். இறுதிநிலை திருத்தொண்டு நெறி என நின்றது. அதுவே, திரு நின்ற நெறி. இதனையே,

"திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரசர்"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என அப்பரடிகளை நம்பியாரூரர் போற்றினர். திருஞானசம்பந்தரைப் போற்றும் போதும்,

''வம்பரு மலர்க்கொன்றை மணம் நாற மலரும்
மதுமலர் நற் கொன்றையான் அடியலாற் பேணு
எம்பிரான் சம்பந்தன்''

என்று, பேணுதல் அடிப்படையில் குறிப்பிட்டருளினர்.

பிரமாபுரத்தைத் திருஞானசம்பந்தர் பேணு பெருந்துறை என்று குறிப்பிடுவார். இவ்வாறு, இருமையின் அடிப்படையில் எழுவதாயினும், இருமையையும் கடந்த ஒருமை நிலையை எப்படி அறிவது என வினவும் நமக்கு, இருமையை அழித்த அல்லது கடந்த ஒருமையை நமக்குத் தெளிய உணர்த்த முற்பட்ட திருப்பதிகம் ஒன்று. அது பிரமபுரத்துத் திருப்பதிகமே.

''கறையணி வேலிலர் போலும்'' என்று தொடங்கும் திருப்பிரமபுரத்துத் திருப்பதிகமே அது. அதன் திருக்கடைக்காப்பு,

''பெண்ணுரு ஆணுரு அல்லாப் பிரமபுர நகர் மேய
அண்ணல் செய்யாதன எல்லாம் அறிந்து வகை வகையாலே
நண்ணிய ஞானசம்பந்தன் நவின்றன பத்தும் வல்லார்கள்
விண்ணவரோ டினிதாக வீற்றிருப்பா ரவர் தாமே''

என்பதாக மலர்கின்றது. இத்திருப்பதிகம் முழுவதிலும் அவர் செய்த செயல் குறிப்பிடப் பெற்று, எதிர் மறைச் சொல்லாகிய 'இலர்' என்பது இணைக்கப் பெறுகிறது. அதற்கு அடுத்த நிலையில் 'போலும்' என்ற சொல்லும் அமைகிறது.

'போலும்' என்பது ஒப்பில் போலி. ஒப்புமைப் பொருள் தரும் நிலையில் வராத, போலும் என்ற சொல். எடுத்துக்காட்டாக,

''கறையணி வேலிலர் போலும்''

என்ற தொடரில் 'கறையணி வேல் இல்லாதவர்' என்பதே பொருள். போலும் என்ற சொல்லுக்கெனத் தனிப் பொருள் ஏதும் இல்லை.

ஆயினும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகங்களில் பதிகம் முழுவதுமே அத்தகைய அமைப்பில் 'போலும்' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்கள். எல்லா இடங்களிலும்-பதிகம் முழுவதும் இவ்வாறு கொள்வதற்குச் செய்யுள் நடை என்று ஒரு புதிய கொள்கையை எடுத்து மொழிந்தவர்களும் உண்டு.

தமிழ் இலக்கண முறையில் அமையும் விளக்கம் அது. இங்கே. அருளாளர்கள் திருவாக்குக்களில் அமையும் திருநெறித் தமிழ் இலக்கணம் கூறும் விளக்கம் வேறு. திருநெறித் தமிழில், அக அனுபவம் முன்னெழும். அது பெருகிப் பரந்து, மனம் முதலிய அகக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருவிகளை இன்புறுத்தி, அதே அனுபவத்தில் ஆழ்த்தும். பின்னர், புறஉடலில் உள்ள ஐம்புல அளவிலும் வந்து நின்று அதே இன்பத்தையும் அனுபவத்தையும் உண்டாக்கும். இந்நிலையில், வெளியே காணப்பெறும் பொருள் இது என்று கூறுவது, தன் அகத்து எழும் அனுபவ உணர்வினை அடிப்படையாகக் கொண்டது இங்கே ஒரு வேற்றுமை உண்டு.

பொதுமையான உணர்வில், வெளியில் இருக்கும் பொருளை அறிகிறோம். வெளியில் இருக்கும் பொருள் நம் அறிவிக்கு மூலமாகிய மூலப்பொருள். பொருள் உண்மையானது. அதுபற்றி எழும் கருத்தின் அடிப்படையில் மலரும் சொல் அப்பொருளை உணர்த்தும். முழுமையாக உணர்த்தவில்லையெனினும், அப்பொருளைப்போலவே சொல்லும் உண்மை; சொல் அதை உணர்த்தினுலும் அப்பொருளை ஒத்த சில நிலைகள் சொற்களுக்கும் உண்டு. அவ்வாறே, அக அனுபவம் அக உணர்வு என்ற நிலையில் எழும் உண்மை நிலைச்சொற்களுக்கு நேராக அமையும் மூலம் எது என்னில், அகத்தெழும் பொருள்தான். எனவே, அகநிலையில் எழும் பொருள் பற்றிய அனுபவ உணர்வு, அனுபவம் போன்றவைகளுக்கு மூலப்பொருள், அகவுணர்வில் எழும் பொருள்களே. இவ்வகையில், உள்ளத்தில் எழுவது அனுபவ அக உணர்வு. தன் அனுபவ நிலையில் அனுபவித்துக் கூறும் சொல்லுக்கு மூலம் ''கறையணி வேல் இல்லாதவர்'' என்ற அக அனுபவப் பொருளே. ஆனுல், இப்பாட்டு எதிரில் உள்ள பிரமபுரத்து இறைவரைப் பார்க்கும் நிலையில் எழுவதாகிய, அனுபவ இன்ப உணர்வின் எழுந்த சொல். அத்தகைய அகச்சொல்லின் அமைப்புக்கு வெளியில் தோன்றும் புறப்பொருளானது ஒத்தது என்பதே. எனவே, அகவுணர்வுக்கு ஒத்தவரே இத்திருவுரு என்ற வகையில் உவமைப் பொருளிலேயே அது எடுத்தாளப் பெறுகிறது. ஆகையால், போலும் என்பது உவமையே. ஒப்பில் போலி அன்று. ஆனுல், அகத்தெழும் அனுபவ மூலப்பொருளும் எதிரில் காட்சிப்படும் பொருளும் இடத்தால்வேறுபட்டாலும் பொருளால் ஒன்றே என்பதுதான் 'போலும்' என்ற சொல்லின் பொருள். அவ்வடிப்படையிலேயே, அப்பாட்டின் இறுதிவரி, பிரமபுரம் அமர்ந்தாரே'' என உடன்பாட்டு உள்பொருளாக அமைத்துக் கூறும் மரபு கையாளப் பெறுகிறது.

இனி, ''கறையணி வேலிலர் போலும்'' என்று தொடங்கும் திருப்பிரமபுரத்துத் திருப்பதிகம், இறைவன் செய்த அழிப்பு நிலையை உளங்கொண்ட வீரச்செயல், ஆக்க நிலையை உடன்கொண்ட அன்புச் செயல் என்ற இருவகைச் செயல்களையும் எடுத்துக் கூறி, அவைகளுக்குப் பின்னிணைப்பாக ''இலர்'' என்ற சொல்லை அமைத்துக் காட்டுகிறது. எடுத்துக்காட்டாக,

பன்றியின் கொம்பு இலர் போலும்
அன்றவர் ஆல்நிழல் நால்வர்க்கு அறங்கள் உரைத்திலர் போலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்ற இரண்டனுள், முன்னது அழிவுச்செயல், பின்னது ஆக்கச் செயல். இரண்டையும் செய்தார் அவர். இங்கே இரண்டையும் தனித்தனியே எடுத்துக் காட்டி அவைகளை மறுத்தபோது, அழிவுச் செயலும் செய்யாதவர், ஆக்கச்செயலும் செய்யாதவர் என்ற பொருள் கிடைக்கிறது. இரு செயல்களும் அழிந்த நிலையில் அமைந்துள்ள பொருள்தான் எது!

> "பெண்ணுரு ஆணுரு அல்லாப் பிரமபுர நகர் மேய
> அண்ணல்"

என்பது அத்திருப்பதிக வாக்கு.

பெண்ணுரு ஆக்கச் செயலும்; ஆணுரு அழிவுச் செயலும் புரிவன. இரண்டும் இணைந்தால் இரு செயல்களும் ஒக்க நடைபெற வேண்டும். இரண்டும் கடந்த நிலையில், இரண்டு செயல்களும் செய்யாத நிலையில், அப்பொருள் இருந்தால், அப்பொருள் எது? அதன் செயல் என்ன? இந்நிலையை, இரவும் பகலும் நீங்கிய நிலை என்றார். இரவாக நின்றது அவன் அரியன — வீரமுடையன ஆம் செய்கைகளைச் செய்து நின்ற நிலை. பகலாக நின்றது பெண்ணுருத் தாங்கி, பெருந்தலைகமை தவழ, ஆக்கச் செயல்கள் செய்து நின்ற நிலை. முன்னது அருமறைச் செயல்; பின்னது பெருநெறிப் பிரமாபுரத்துச் செயல். இரண்டும் அறிவால், அன்பால் அறிந்தவை. அனுபவத்துக்கு அப்பாற்பட்டவை.

ஆணுரு பெண்ணுரு அல்லா அண்ணல் அனுபவப் பொருள். இரவும் பகலும் கடந்த திரு ; கேடும் ஆக்கமும் கெட்ட திரு எனப் பெறும் அனுபவப் பொருள் விளக்கும் செயல் ஏதும் இல்லை. அது இன்ப அனுபவமாக விளையும் நிலைதான் உண்மை நிலை. இது ஞானமாய் நின்ற உயிர் அருளிற் கலக்க இன்பத்தில் ஆழ்ந்த நிலை. உயிரானது உள்ளும் புறம்புமாக நின்ற பரம்பொருளை, அருள் மயமாக நின்ற பரம்பொருளை, இன்ப அனுபவமாக நின்ற பரம் பொருளை இடை நின்று அனுபவித்து அனுபவமாக நிற்கும் நிலை. இதனை, உயிருக்கு உள்ளேயும் புறமேயும் அறிவால் அருளெனவும் அனுபவத்தால் இன்பமெனவும் நிற்கின்ற பொருளைத் துய்த்தல். இது இடை நின்று துய்த்தல் எனப்பெறும். உயிருக்கு உள்ளும் புறம்பும் அருளின்ப அனுபவப் பொருள் இருப்பதால், உயிரானது இவ்விரண்டுக்கும் இடை நின்றது எனப் பெற்றது. இங்கே உயிருக்கு இருவகை அனுபவம் உண்டு.

1. உயிரின் அகம் முழுவதும் அருளின்பம் நிறைந்து அனுபவப் பொருளாகிறது. இந்நிலை உயிரின் அகநிலை. எனவே, பரம்பொருள் உயிரின் நடுவில் இருக்க, அருளின்பமாக அப்பொருள் அனுபவப் படுகிறது.

2. உயிருக்குப் புறத்தேயும் அருளின்பமே நிறைந்து அனுபவப் பொருளாகிறது. இந்நிலை உயிரின் புறநிலை. அதாவது அருளின்பம் என்ற பரம்பொருளின் நடுவில் உயிர் இருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்விரண்டையும் இணைத்தால், உயிரின் நடுவே அருளின்பப் பொருளும், அருளின்பப் பொருளின் நடுவே உயிரும் அமைந்திருக்கின்றன என்பதாம். இதனை மணிவாசகப் பெருமான் மிகத் தெளிவாக அமைத்துக் காட்டியருளுகிறார்.

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பது ஆனல் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய் பொன்னம்பலத் தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே"

என்ற திருவாசகத்தின் உண்மையை ஓர்ந்து தெளிக.

அருளின்ப அனுபவப்பொருள் உள்ளாக, அதே பொருள் வெளியாக அமைய, அவ்விரண்டன் நடுவே உயிர் ஞானமயமாக நிற்கும். இங்கே, அனுபவப்படும் பொருள் செயற்பாடு இல்லை. அதனை உள்ளும் புறம்பும் அமைத்துக்கொண்ட நிலையிலேயே அருளின்ப அனுபவம் பெறுகிறது உயிர். ஆனல், அங்கே அது உயிர் என்ற பெயரில் நிற்பதில்லை. ஆண்மை பெண்மையை இழந்த பொருள் ஒன்று உண்டு எனநின்ற நிலை ஒன்று உண்டு. இது இரண்டும் இணைந்த ஆனல் செயல் அற்ற நிலை. அப்பொருளும், அதனைத் துய்க்க இருக்கும் பொருளும் பெயரளவில் இருக்கும். பின்னர், பெயராம் பொருளாந் தன்மையையும் இழந்துவிட்ட நிலையில் அருளின்ப அனுபவமாக விளங்கும் நிலை மட்டுமே கொள்ளப் பெறும். பொருள் என நின்ற நிலையும் இல்லை. இந்நிலையே ''திருநிலை''. இக்கொள்கையை அடிப்படையாகக் கொண்ட அருள் நாயகியாகப் பிரமபுரத்து இறைவி திகழ்கிருள். அவளுக்குத் **திருநிலைநாயகி** என்பதே பெயர். பெருமான் பிரமாபுரத்தன்.

கேடும் ஆக்கமும் கெட்டு, கொடுப்போன் ஏற்போன் என்ற பொருள் நிலையும் அழிந்த நிலையில் எழும் அருளின்ப அனுபவமே திரு. திருவை அனுபவித்த நிலையில் எழும் அனுபவ வெளிப்பாட்டு நிலையே தமிழ். இதனையே திருஞானசம்பந்தர் 'திருநெறிய தமிழ்' என்றார். இங்கே நம்பியாண்டார் நம்பிகள் கொள்ளும் முறை, அனுபவத்துக்கு மூலமாகிய பொருள்நிலை என எதுவும் இன்றி, அனுபவமாகவே இருபொருளும் வெளிப்பட்டு வரும் நிலை. அறிவு நிலையில் நின்று உணர்வதற்கு மூலமாகிய ஈதல் ஏற்றல் முதலிய நிலைகளோ, நிலைகளையுடைய பொருள்களோ என வேறுபட்டு நிற்கும் நிலை இன்றி, அனுபவமாகவே வெளிப்படும் நிலை ஒன்றே உண்டு. அத்தகைய அனுபவ வெளிப்பாட்டின் வழியில் எழும் மொழியாதலின், திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்களை,

''வழிமொழி''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று நம்பியாண்டார் நம்பிகள் குறிப்பிட்டருளுகின்றூர். இது,

நடுவாய் நின்ற நிலை அனுபவம்

எனவும் கொள்ள வேண்டும்.

அந்தம் ஆதி நடு

ஆளுடைய பிள்ளையார் பரம்பொருளைத் தத்துவ அமைப்பில் நிறுத்தி விளக்கிக் காட்ட முற்படும்போது, உலகர் வரிசையில் ஆதி, நடு, அந்தம் என இருக்கும் முறைக்கு மாறுக, அப்பொருளை அனுபவித்துணரும் முறையில் அவ்வரிசையை மாற்றி அந்தம், ஆதி, நடு என அமைத்தருளினுர். இதனைத் திருவருளால் உணர்ந்த மெய்கண்டார், சிவஞானபோத முதல் நூற்பாவில் ''அந்தம் ஆதி என்மனூர் புலவர்'' எனக் கூறி முடித்தார்.

தத்துவ முடிவில், தத்துவ அதீதனுக நின்ற நிலையில் அனைத்துத் தத்துவ முடிவில் எழுபவனுக நின்ற நிலையே ஆதி எனப்பெறும், இதனை வேதத்தின் உச்சியிற் பழுத்த சிவ முதற்பொருள் என்பார். இரவின் இறுதியில் பகல் தோன்றுமாப்போல.

அந்தமாய் நின்ற நெறி—அருநெறி—மறை நெறி-தத்துவ அதீத நெறி
இது அறிதற்கரிய நிலையில் இறுதி நெறி
ஆதியாய் நின்ற நெறி — பெரு நெறி — தத்துவாதீதமாய் நின்றது
அதுவே அறிவுக்கு இசைந்து நின்ற நெறி-பிரமாபுர நெறி

இங்கே, உயிரனுபவம் — துய்ப்பு நிலை தொடங்குகிறது. எனவே, அறிதற்கரியது என்ற அறிவின் அந்தத்தின் எழும் ஆதி.

இவ்விரண்டும் இணைந்து நின்றதே ஒரு நெறி. இவையிரண்டும் பரம்பொருளை அரியன் என்றும் பெரியன் என்றும் அறிந்த நிலை, முன்னது அறிவுக்கு அப்பாற்பட்டது; பின்னது அறிவால் அறிந்து இன்புறற்குரியது.

முன்னது — துவைத நிலை
பின்னது — அத்துவித நிலை

துவைத நிலையில்லாமல் அத்துவித நிலை வராது. இவ்விரண்டில் முன்னது ஆண்மைமிகுந்த நிலை; பின்னது பெண்மை மிகுந்த நிலை. இரண்டும் ஒரே பொருளை இருவகை நிலைகளில் அறிந்த முறைகளே.

மூவகை மொழி நிலை

மேலே குறிப்பிடப்பெற்ற இருவகை நிலைகளை விளக்கப் பயன்படும் மொழி இருவகைப் பெயர்களால் அமைக்கப்பெறுகின்றன. அவற்றை எடுத்துக் காட்டியபின் மூன்றுவது மொழிபற்றி எடுத்துக் கொள்ளலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(1) *வழி மொழி*

ஒரு நெறியின் முதல் நிலையை, இரவுப் பண்பை, பரம்பொருளின் அரியனும் பண்பை எடுத்துக்கூற முற்படும்போது பெறப்படும் மொழிக்கு வழிமொழி என்பது பெயர். இதற்கு உரிய முறை ''ஒன்றலற ஒன்றல்''. இது உயிரனுபவத்தின் முற்பகுதி. உயிரானது தன்னைத் தானற அதனோடு இணைக்கும் நிலையில் உன்னலற உன்னல், ஒன்றலற ஒன்றல் என்ற முறை கையாளப்பெறும். இவ் வகையில் மொழியாக இல்லாதது மொழியாக வெளிப்படும். இதனையே, எழுதாமறை எழுதும் மறையாக வெளிப்பட்டது என்று கூறுவர்.

இதனை, ஆளுடைய பிள்ளையார் முற்பிறவியில் முடித்துக் கொண்டு பிறந்தாராதலின், சிற்சில சமயம் வெருக்கொண்டு, பொருமி அழும்போது கேட்கும் ஒலி வேத ஒலியாக இருந்தது என்று குறிப்பிட்டருளிய சேக்கிழார் திருவாக்கு முன்பேயும் எடுத்துக் காட்டப்பெற்றது. இங்கே ஒலி உண்டு; மொழியாம் நிலை எனப் பெறும் பொருள் புலப்பாட்டு நிலை இல்லை.

இரண்டாம் நிலையில், பிரமபுரத்தைப் பார்த்து முன்னுள்ள அரிய நிலையையும் பின்னுள்ள பெருநெறி நிலை எனப்பெறும் பெருந்தகை நிலையையும் பெற்றபோது ஒன்றன் இரு தன்மைகளையும் இணைத்துப் பாடினர். பிரமபுரத்துக்குரிய பன்னிரு பெயர்களையும் அமைத்து, அந்த வழியிலேயே அப் பெயர்கள் அமையவேண்டும் என்றும் அவைகளைச் சக்கரமாகவும், கோமூத்திரியாகவும் மாற்றியும் எடுத்து விளக்கிய பதிகங்கள் ஏறக்குறைய 67 திருப்பதிகங்கள். இவை யனைத்தும் 'வழிமொழித் திருவிராகம்' அல்லது 'வழிமொழி' என்ற பெயரிலேயே அமைத்துக் காட்டுகின்றார். வழிமொழி என்பதற்கு ஆளுடைய பிள்ளையார் இருவகைகளில் விளக்கம் தந்தருளுகின் றார்கள்.

(அ) 'அந்தம் ஆதி' என்ற மரபினை வழியாகக்கொண்ட காரணத் தால் வழிமொழி. உலக ஊழியில்—உலகம் எல்லாம் அழிந்த நிலையில் பிரமபுரம் தன்னை மட்டும் ஆதியாக நின்று நிலை நிறுத்திக் கொண்டது. (ஆ) இவ்வாறே பன்னிரு திருப்பெயர்களும் வரிசை மாறுது இவ்வழியிலேயே 'அந்தம் ஆதி' என்ற மரபு முறையில் நின்றதோடன்றி, பிரமாபுரத்துப் பெரு நெறி வரிசையில் நிரல்பட நின்றவைகள். எடுத்துக்காட்டாக.

பிரமபுரப் பிரமாபுரம்
வேணுபுரப் பிரமாபுரம்

என இணைத்துக் காணுதல் வேண்டும். ஏனைய நெறிகள் அழிய நின்றது சிவநெறி. இவ்வாறே, ஏனைய நெறிகளைப் பொய்யாக்கி, தன்னை மெய்யாக நிறுத்தி நின்றது சிவநெறி. இவ்வாறே பன்னிரு, கருத்துக்களால் பன்னிருமுறை சித்தாந்தம் செய்யப் பெற்ற பெரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நெறி என்பதை விளக்கப் பன்னிரு பெயரை ஒட்டிய விளக்கங்கள் பலவற்றை அமைத்தார். இவையெல்லாம் தமக்கு முன்னுள்ள நிலைகள். எனவே, இப்பன்னிரு அமைப்புக்களை விளக்கும் போது ஆளுடைய பிள்ளையார் தம்மை "இருக்கு மொழிப் பிள்ளையார்" என அழைத்துக் கொள்வர். இவை, ஒருநெறி பற்றிய இரு பகுதிகளை அறிந்து வெளிப்படுத்தியநிலை. எழுதா மறையை எழுதும் மறையாக அமைத்துத் தந்தது. இவ்வகையில், இவை *'வழிமொழி'* எனப் பெற்றன. இதனை ஆளுடைய பிள்ளையார்

ஒழுகல் அரிது அழிகலியில் உழியுலகு
பழிபெருகு வழியை நினையா
முழுதுடலில் எழுமயிர்கள் தழுவுமுனி
குழுவினொடு கெழுவு சிவனைத்
தொழுதுலகில் இழுகுமலம் அழியும்வகை
கழுவும் உரை கழுமலநகர்ப்
பழுதில் இறை எழுதும் மொழி தமிழ் விரகன்
வழிமொழிகள் மொழி தகையவே

என்று சிறப்பித்தருளினர். மேலும்,

"தூமரு மாளிகை மாடம் நீடு தோணிபுரத் திறையை
மாமறை நான்கினோடு அங்கம் ஆறும் வல்லவன் வாய்மையினால்
காமரு கேள்வி நலந் திகழும் ஞானசம்பந்தன் சொன்ன
பாமரு பாடல்கள்"

என்று குறிப்பிடுவதையும் காணுதல் வேண்டும். இங்கே, தமிழ் என்ற சொல்லை எடுத்தாளவில்லை. இவ்வாறே, இன்னொன்று காண்க.

"பித்தனைப் பிரமாபுரத்துறை பிஞ்ஞகன் கழல் பேணியே
மெய்த்தவத்து நின்றோர்களுக்கு உரை செய்து நன்பொருள் மேவிட
வைத்த சிந்தையுள் ஞானசம்பந்தன் வாய் நவின்றெழு மாலைகள்
பொய்த்தவம் பொறி நீங்க இன்னிசை போற்றி செய்யும் மெய்ம்
மாந்தரே."

(2) *பிணைமொழி*

இரண்டாம் நிலையில் 'பிணைமொழி' என்ற ஒன்றைப் பேசியருளுகின்றார்கள்.

பிரமாபுரத்துப் பன்னிரண்டு பெயர்களில் இறுதியில் நின்ற பெயர் 'கழுமலம்'. இது முடிந்த நிலையில் திருநெறி தொடங்குகின்ற காதலின் வழிமொழியினின்றும் வேறுபட்ட நிலையில் 'பிணைமொழி' என்ற ஒரு அமைப்பை இடை வைத்தருளுகின்றார்கள். இது ஒரு நெறியின் முடிந்த நிலை.

வழிமொழியானது துவைத நிலையை உணர்த்தியது. பிணைமொழி இரண்டும் இணைந்த அத்துவித நிலையை உணர்த்தும் முறையில் அமைகிறது. திருக்கழுமலத் திருப்பதிகத்துள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"பெருகிய தமிழ் விரகினன் மலிபெயரவன் உறை பிணர் திரையொடு
கருகிய நிறவிரி கடலடை கழுமலம் உறைவிட மெனநனி
பெருகிய சிவனடி பரவிய பிணைமொழியன ஒருபதுமுடன்
மருவிய மனமுடை யவர் மதியுடையவர் விதியுடையவர்களே"

அவ்வாறே,

"கானலங் கழனி யோதம் வந்துலவும் கழுமல நகருறைவார் மேல்
ஞானசம்பந்தன் நற்றமிழ் மாலை நன்மையாலுரைசெய்து நவில்வார்
ஊன சம்பந்தத்து உறுபிணி நீக்கி உள்ளமும் ஒருவழிக் கொண்டு
வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார் மற்றிதற் காணையு நமதே"

என்றருளுகிறார். "ஆணையும் நமதே" என அருளியது பிணைமொழி வகையே. இது பிணைமொழியே என்பதை விளக்கும் முறையில், திருக்கோமூத்திரிப் பதிகத்தில்,

"அம்மான்சேர் கழுமலமாச் சிரபுரம் வெங்குருக் கொச்சை
புறவமஞ்சீர்
....
....
தம்மான் ஒன்றிய ஞானசம்பந்தன் தமிழ் கற்போர் தக்கோர் தாமே"

எனத் தாமும் பரம்பொருளும் ஒன்றியிருந்த நிலையை எடுத்துக்காட்டி விளக்குவாராயினர். அவ்வாறே, காழிப்பதிகத்திலும், 'ஒக்க உரை' என்று குறிப்பிடுகிறார்.

3. திருநெறியதமிழ் முன்னே கூறிய இருவகை மொழிகளை நீக்க, உள்ள அனைத்தும் 'திருநெறியதமிழ்' சார்ந்தவைகளே. இரண்டாம் நிலையாகிய பிணைநிலை ஆளுடைய பிள்ளையாருக்கு விரைந்து எய்திய ஒன்றுதலின், சில பிணைமொழித் திருப்பதிகங்களிலும் "திருநெறிய தமிழ்" காணப்பெறுகிறது. எடுத்துக்காட்டாக, திருப்புகலித் திருப்பிரமபுரத்துத் திருப்பதிகத்துத் திருக்கடைக்காப்பு,

செந்தமிழ் பரப்புறு திருப்புகலி தன்மேல்
அந்தம் முதலாகி நடுவாய பெருமானைப்
பந்தன் உரை செந்தமிழ்கள் பத்தும் இசை கூர
வந்தவணம் ஏத்துமவர் வானமுடையாரே"

என அமைகிறது. 'அந்தம் முதல் நடு' என்ற மூன்று நிலையும் அமைத்து, நின்ற பொருள் பற்றி, அது 'திருநெறிய தமிழ்' எனப் பெறலாயிற்று.

'திருநெறிய தமிழ்' பற்றி அவ்வப்போது விளக்கப் பெறும். நம்பியாண்டார் நம்பிகள் குறித்த 'வழிமொழி' என்பது திருநெறிய தமிழையே குறிக்கும் எனக் கொள்ளுக. முதற்பகுதியில் உள்ள வழிமொழி வேறு; திருநெறிய தமிழை வழிமொழி என்று குறிப்பது வேறு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நம்பியாண்டார் கூறும் வழிமொழி

நம்பியாண்டார் நம்பிகள் குறிப்பிட்ட வழிமொழி என்பது திருநெறிய தமிழையே. தில்லைச் சிற்றம்பலத்தை விடச் சிறந்ததாய் உள்ளுள்ள தகராகாசத்துள் தோன்றிப் பெருகும் அமுதைப் பருகி, அதனால் எழும் மிகு களிப்பில் கூறப்பெறும் மொழியை, வழிமொழி என்று கூறுகிறார். சிவானுபவம் காரணமாகப் பெருகும் மொழியாதலின், அது பிணைமொழியிலும், முதற் சொன்ன வழிமொழியிலும் வேறாக நின்ற மொழி. அது "திருநெறிய தமிழே".

வள்ளல் இராமலிங்க சுவாமிகளின் விளக்கம்

திருநெறி என்பது அருள் நெறி. சம்பந்தர் அருள்நெறியின் முதற் குரவராக அமர்ந்தமையின், முத்துச் சிவிகை, குடை, சின்னம் முதலியன அளிக்கப்பெறுகின்றன. அருள்நெறியின் முதற் குரவர் திருஞானசம்பந்தர்.

விண்ணுலகம் நேரில் அறிந்தும், உட்பொருளால் அறிய இயலாத நிலையுடையது பெருமானின் ஆண்மை மிக்க செயற்பாட்டு நிலை.

மண்ணுலகம், பிரமபுரத்துப் பெருமானை, அவன் பெருமையை அறிந்தும், அனுபவித்துத் துய்க்க முடியாத நிலையுடையது. இது பெம்மானின் பெண்மை மிக்க செயற்பாட்டு நிலை.

முன்னது அந்தம்; பின்னது ஆதி. அந்தத்தின் பின் எழுந்தது ஆதி. பிரமபுரம் ஊழிக்காலம் நிலம் ஆகியவற்றின் அந்தத்து எழுந்து நின்று ஆதியாய் நிற்கும் பெருமை பெற்றது. இவ்விரண்டும் அறிவால் மலர்ந்தவையாயினும் அன்பின் அடிப்படையைக் கொண்டவைகளே. எனவே, "அந்தமும் ஆதியும்" அறிவால் அறிந்த பரம் பொருட்டன்மைகள்.

இனி, அந்தமும் ஆதியும் அழிய, அருள் நிலை தோற்றம் பெறுகிறது. அன்பின் வழியதே அருள் எனினும், பொருளாந் தன்மை நீங்கிய அருவாம் தன்மையே அருள் நிலை அருளே உயிரின் (உயிர் என்ற நிலையும் அழிந்த நிலை தான்) அகத்தும் புறத்தும் நிற்க, அனுபவமே செயலாக, அதுவும் கொடுப்போர் ஏற்போர் என்ற செயலற்ற செயலாக அமைய நின்ற நெறியே திருநெறி. இது 'நடு' நெறி. நடு என்பது, அருளின்ப நடுவில் ஞானமாக (உயிர்) நின்ற அனுபவநிலை. அதன் வெளிப்பாடெல்லாம் தமிழே. எனவே, பரம் பொருள், 'அந்தம், ஆதி, நடு' ஆய பொருள் எனப் பெறுகிறது. இந்நிலையை அருளனுபவம் எனக்கூறி, அதனாலேயே மண்ணில் நடவாதும், தந்தையாரின் பியல்மேல் அமர்ந்துகொள்ளாமலும், செல்லும் நெறியை மேற்கொண்டவர் சம்பந்தர் என்பதற்காகவே, அருள் வெளிப்பாடாக, பரம்பொருளே விரும்பித் தந்தது என்ற கருத்தை வெளிப்படுத்தும் நிலையில் முத்துச்சிவிகை இறைவராலேயே அளிக்கப் பெறுகிறது. அருளே முத்துச்சிவிகை. அருளே அகமும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புறமுமாக எங்கும் நிறைய, அதன் இடையே ஞானம் செல்கிறது என்பதை வெளிப்படுத்தும், புறநிலை விளக்கமே முத்துச் சிவிகையிற் செல்லும் ஞானசம்பந்தர்.

இந்நிகழ்ச்சிக்குப்பின், அப்பரடிகளை முன்னே போகவும், தாம் தொடர்ந்து வருவதாகவும் கூறும் வரலாற்று நிகழ்வு உண்டு. அதற்குரிய அருள் விளக்க உரையறை அப்பரடிகள் ஆய்வு நூலில் காண்க.

இத்தகைய அருள் நிலையில் பெற்ற திருநெறியே தமிழை வெளிப்படுத்தும் அதுவே, மலப்பிணியை முற்றுக நீக்கும். எனவே, பிரமபுரம் என்ற திருநிலையிடமாகிய அந்தம் ஆதியை உள்ளிட்டுக் கழுமலத்தை இறுதியாக்கி, இவ்வரிசை மாறக் கூடாது என அமைத்து, ஏகபாதம் என்ற ஒரு நெறியையும், திருநெறியையும் வகுப்பாராயினர். திருஞானசம்பந்தர் நின்ற நெறியே திருநெறி. அவர் வழிவந்த மொழியானது பொருளை அடிப்படையாகக் கொண்டு அறிவு தந்த மொழி அன்று, அனுபவ நிலையில் வெளிப்பட்ட மொழியாதலின் *திருநெறிய தமிழ்* என்பது 'வழிமொழி' எனப் பெற்றது.

இக்கருத்தினை, இராமலிங்க அடிகள்

பொத்திய மூல மலப்பிணி தவிர்க்கும்
    பொருள் அருளனுபவம் அதற்குப்
பத்தியம் உயிரின் அனுபவம் இதனைப்
    பற்றறப் பற்றுதி இதுவே
சத்தியம் என என்றனக் கருள்புரிந்த
    தனிப்பெருங் கருணையென் புகல்வேன்
முத்தியற் சிவிகை யிவர்ந்து அருள் நெறியில்
    முதலர சியற்றிய துரையே''

என்ற ஆளுடைய பிள்ளையார் அருள்மாலையின் ஆறுந் திருப்பாட்டின் மூலம் விளக்கியருளுவதை ஓர்ந்து தெளிக.

இத்தலைப்பின் தொகைப்பொருள்

'பெருநெறிய பிரமாபுரம்' என்று எடுத்து மொழிந்த ஞான சம்பந்தப் பெருமான் தாம் பிறந்த பிரமபுரத்தின் பன்னிரு பெயர்களையும் அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கருத்துக்களை விளக்கியுள்ளார். அவைகளில் 'ஏகபாதம்' என்ற தலைப்பில், ஒரு பதிகம் பன்னிரண்டு திருப்பாட்டுக்கள் அமையுமாறு யாத்துள்ளார் என்பதும்; அப்பன்னிரு பெயர்களை முறை மாற்றுது அமைத்துப் போற்றவேண்டும் என்ற காரணத்தால் தாம் பன்னிரு பெயர்களை அடிப்படையாகக் கொண்டு கூறுபவை 'வழிமொழி' என்று பெயரிட்டுக் காட்டினர் என்பதும்; ஆனல் திருநாரையூர், நம்பியாண்டார் நம்பிகள் கூறும் வழிமொழி இதனின் வேறுன பொருளுடையது என்பதும்; வழிமொழியை விளக்கமாகத் தெரிந்து கொள்ளவேண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாதலின், திருஞானசம்பந்தரின் பல்வேறு நிலைகள் ஆராயப்பெற வேண்டும் என்பதும்; அவ்வகையில், திருஞானசம்பந்தர் காலம் பெற அழுதவர் என்பதும் அழுதவரின் முன்னுறு நிலையும் பின்னுறு நிலையும் எவ்வாறு அமைந்தன என்பதும்; இவ்வகையில், வடலூர் வள்ளல், இராமலிங்கசுவாமிகள் ஆய்ந்து கூறிய கருத்தானது சிறப்புடையது என்பதும்; இரவும் பகலும் என நின்ற இரண்டு பண்புகள் இறைவனுக்கு உண்டு என்பதும்; முன்னது அரியது பின்னது பெருமையது, முன்னது அருநெறி பின்னது பெருநெறி, இரண்டும் இணைந்த நெறியே ஒருநெறி என்பதும்; திருஞானசம்பந்தர் பாடிய திருவேள்விக்குடியும் திருத்துருத்தியும் இணைந்த பதிகம் நமக்குப்பகல் பதிகமாக அமைந்துள்ளது என்றும் அப்பகற் பதிக அடிப்படையில் சிந்தித்தால் ஞானசம்பந்தரின் முன்னுறு நிலையில் விளக்கம் கிடைக்கிறது என்பதும்; மறைநெறியின் அந்தத்தை அடிப்படையாகக் கொண்டு பெருநெறி என்ற பிரமாபுரநெறி தொடங்குகிறது ஆகையால், பிரமாபுரம் அந்தத்தையும், ஆதியையும் இணைத்து நின்ற பேரூர் என்பதும், இவ்வகையில், இறைவன் ஆற்றிய அழிவும் ஆக்கமும் ஆகிய இரண்டும் 'அந்தம் ஆதி' என நின்றன என்பதும்; திருஞானசம்பந்தர் மூவகை நெறிகளில் ஒருநெறியை விரைவாகக் கடந்தார் ஆகையால் 'முன்னடைந்தான் சம்பந்தன்' என்ற பதிகக் கருத்து அவரது வளர்ச்சிப் படியை உணர்த்த வந்தது என்பதும்; ஒருநெறியின் முற்பகுதியே மறைநெறி, அதன்பிற்பகுதி மறை தருநெறியாயினும் - முன்னதை நோக்க, இது பகற்பகுதி என்பதும்; 'கேடும் ஆக்கமும் கெட்ட திரு' என்பதே திருநெறி என்பதும்; அது துவிதம் அத்துவிதம் என்ற இரண்டையும் கடந்த நெறி என்பதும்; அதையே திருநெறி என்று ஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார் என்பதும்; அது 'நடு நிற்றல்' என்ற அனுபவநிலையை அடிப்படையாகக் கொண்டது என்பதும்; உலகியற் காட்சியில் வெளிப்பொருள் உள்வந்து பொருந்தும் நிலை உண்டாகும், ஆனால் ஞானசம்பந்தரின் ஞானம் உள்ளே தொடங்கி, புறத்தே வந்து முடிவது ஆகையால், அனுபவ வழியில் வந்தமொழி என்ற பொருளில் நம்பியாண்டார் நம்பிகள் திருஞானசம்பந்தரின் பதிகங்களை 'வழிமொழி' என்று போற்றுகின்றார் என்பதும்; இறைவன் கருத்தை அப்படியே எடுத்துக் கூறுவதனால் வழிமொழி என்பது பொதுவான உரையாயினும், ஒன்றலற ஒன்றுதல் மூலம் வரும் வழி மொழியும், இருவரும் ஒக்க நின்று வெளியிடும் பிணைமொழியும் நீங்க, பொருள் என்ற நிலை அழிந்த பின் அனுபவ வழியில் வரும் மொழியே வழிமொழி என்பதும்; 'ஆணை நமதே' என்று குறிப்பிட்டவை பிணை மொழிகளாகும் என்பதும்; அருள்நெறியில் முதல்வர் ஆனமையால் முத்துச்சிவிகை அமைக்கப்பெறுகிறது, திருவடி நினைந்து வழிபடுதல் வேறு, கழல் பேணி இன்புறுதல் வேறு என்பதும்; அருமறை நெறி, பெருநெறி, திருநெறி என்ற மூன்றும் ஒரே தொடக்கமும் முடிவும் உடையனவேனும் தனித்தனி வேறுபாடுகளைக் கொண்டவை என்பதும்; ஒருவாறு திருவருள் துணைக்கொண்டு அமைக்கப்பெற்றன. இப்பகுதியில் விரிவுபெற வேண்டிய சில கருத்துக்கள் இனி வரும் தலைப்புக்களில் ஆங்காங்கே அமைத்துக்காட்டப் பெறும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. விண்டலர் பொழிலணி வேணுபுரத்தரன்

சுற்றும் முற்றும் ஆயினுன்

" கற்று முற்றினுர் தொழும் கழுமலத்து அருந்தமிழ்
சுற்றும் முற்றும் ஆயினுன் அவன் பகர்ந்த சொற்களால்
பெற்றம் ஒன்றுயர்த்தவன் பெருந்துருத்தி பேணவே
குற்றம் முற்றும் இன்மையிற் குணங்கள் வந்து கூடுமே "

என்பது திருஞானசம்பந்தர் அருளிய திருத்துருத்தித் திருப்பதிகத்தின் திருக்கடைக் காப்பு. இதனுள் அமைந்த 'கழுமலத்து அருந்தமிழ் சுற்றும் முற்றும் ஆயினுன்' என்ற தொடரால் குறிக்கப் பெறுபவர் யார்? கற்று, கற்றபின் அதற்குத்தக நின்ற காரணத்தால், கற்றது எதுவோ அதனில் முழுமைபெற்றவர்கள் கற்று முற்றினுர் எனப் பெற்றுர். அவர்கள் தொழும் சிறப்பினையுடையது கழுமலம். கழு மலத்து அருந்தமிழ் தன்னையே புறஎல்லைக்கோடு எனக்கொண்டு, அதன் வரையில் வளர்ந்து முழுமை பெற்றவன் ஆயினுன். அப்படி ஆயினவன் எவனே, அவன் பகர்ந்த சொற்கள் என உரை கொள்ள லாம். இனி, 'கழுமலத்து அருந்தமிழ்' என்ற தொடராற் குறிப்பிடப் பெறுவது கழுமலத்து இறைவனையா அல்லது கழுமலப் பதிகத்தையா என்ற ஐயம் தோன்றுகிறது. இவ்வாறே, திருநல்லூர்ப் பெருமணத் திருப்பதிகத்தினுள்,

''கல்லூர்ப் பெருமணம் வேண்டா; கழுமலம்
பல்லூர்ப் பெருமணப் பாட்டு''

என்று குறிப்பிட்டருளுகின்றுர் திருஞானசம்பந்தர்.

அடுத்து, ஞானசம்பந்தப் பெருமான் மதுரையில் எழுந்தருளி யிருந்த காலத்து, சீகாழியிலிருந்து வந்த தன் தந்தையைப் பார்த்த வுடன் எழுந்த பிரமாபுரத்துப் பெம்மான் திருவருள் நாட்டம் பற்றிய பதிகம் ''மண்ணின் நல்லவண்ணம் வாழலாம்'' என்ற தொடக்கத் தினை உடையதாகும். இப்பதிகம் முழுவதிலும் கழுமலநகர் மட்டுமே குறிக்கப்பெறுகிறது. இப்பதிகத் திருக்கடைக் காப்பினுள் ''அருந் தமிழ் ஞானசம்பந்தன செந்தமிழ்'' என்று தம்மைக் குறிப்பிட்டுக் கொள்ளுகின்றுர். 'கழுமலத்து அருந்தமிழ்' என்று திருத்துருத்திப் பதிகத்தொடரை நினைவு கொள்ளும்போது, தாம்பாடிய ''கழுமலப் பதிகம்'' பல்வகைச் சிறப்புக்களை உடைய ஒன்ருகும் என்ற கருத்து அவருக்கு உள்ளுணர்வில் விளங்கியமையாலேயே, திருவருளுணர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வால் 'கழுமலத்து அருந்தமிழ்' என்று குறிப்பிட்டுக் காட்டினாராதல் வேண்டும்.

ஒலிமாலைக் கலிக்கோவை

மதுரையில் நடந்த புனல்வாதத்தின்போது, திருவேட்டில் எழுதப்பெற்ற திருப்பாட்டு

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே"

என்பது. இவ்வொரு திருப்பாட்டினை மட்டுமே எழுதப்பெற்ற திருவேட்டினை வைகையாற்றில் இட்டபின், அத்திருப் பாட்டுக்குப் பின்னர் பதினொரு பாட்டுக்கள் பாடி அப்பதிகத்தை முடித்தருளுகின்றார்.

தாம் எண்ணிய செயல் ஒரு திருப்பாட்டிலேயே முற்றுப் பெற்றுவிடவும், பதிக நிறைவுக்காக ஏனைய திருப்பாட்டுக்களையும் பாடி, பதிகமாக்கி இணைப்பது திருஞானசம்பந்தர் மேற்கொண்ட மரபாகும். இவ்வாறே, திருமறைக் காட்டிலும், ஒரு திருப்பாட்டிலேயே திருக்கதவு அடைக்கவும் திறக்கவும் ஆம் நிலையைப் பெற்றுவிடவும், பதிக நிறைவுக்காகவே ஏனைய திருப்பாட்டுக்களையும் பாடி, பதிகமாக்கி, நிறைவு செய்திருக்கின்றார்.

திருப்பாட்டுக்களை இணைத்துப்பாடி, நிறைவுசெய்து, பின்னர் அதனைத் தொகை செய்வது என்பது ஞானசம்பந்தர் தம்பதிகத்தை அமைக்கும் முறை என்பதை நம்பியாண்டார் நம்பிகள்,

"மின்னு மாகத் தெழிலி யுஞ்சேர்
மிகுபொன் மாடப் புகலி நாதன்
துன்னு ஞானத் தெம்பிரான் மெய்த்
தொகை செய் பாடற் பதிகம் அன்னாள்"

என்று, ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகத்தின் 29ஆம் திருப்பாட்டிற் கூறுவது கொண்டும் தெளியலாம். புனல்வாதத் திருவேட்டினில் எழுதப்பெற்ற பாட்டினை ஒட்டி அமைந்த பாட்டுக்களுள் எட்டாவதாக நின்ற பாட்டு

"வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை உலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே"

என்பது. இத்திருப்பாட்டினுள் அமைந்த "சூதன் ஒலிமாலை" என்பதற்குச் சூதமுனிவர் அருளிய பதினெண் புராணங்கள் என்று உரை கூறுவர். "கலிக்கோவை" என்பதற்குக் கலிவிருத்தம் அல்லது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கலிநிலைத்துறை என்ற பாவினங்களாற் பாடப்பெற்ற திருப்பதிகம் என்ற பொருளையே அனைவரும் கொள்கின்றனர். இனி, "அயிலுறு படையினர்" என்று தொடங்கும் திருக்கழுமலத் திருப்பதிகத்தினுள் அமைந்த திருக்கடைக்காப்பு.

"கலிகெழு பாரிடை ஊரென உளதாம்
கழுமலம் விரும்பிய கோயில்கொண் டவர்மேல்
வலிகெழு மனம்மிக வைத்தவன் மறைசேர்
வருங்கலை ஞானசம்பந்தன தமிழின்
ஒலிகெழு மாலை யென் றுரைசெய்த பத்தும்
உண்மையினல் நினைந்தேத்தவல்லார் மேல்
மெலிகெழு துயரடையா வினைசிந்தும்
விண்ணவராற்றலின் மிகப் பெறுவாரே"

என அமைகிறது. இதனுள், 'ஒலிகெழுமாலை' என்று குறிப்பிடப் பெறுவது இத்திருப்பதிகத்தையே. அவ்வாருயின், பூத முதல்வன் முதல் எனப்பெறுபவன் பூமியைப் படைத்த பிரமனுக்கு உரிய வழிபடு முதலாக அமைந்தவன் பிரமபுரத்து எம்மான். பிரம்புரத் தெம்மானை முதலாகக் கொண்டு, பொலிந்த பன்னிரு பெயர்களையும் வழியாகக் கொண்டு, அந்த முறைமையில் அமைந்த ஒலிமாலை— அத்தகைய ஒலிமாலையின் உட்பொருளாயமைந்தவன் உள்ளங்கவர் கள்வனுதலின், அவனைச் 'சூதன்' எனக் குறிப்பிட்டு, அவனை உள் ளிட்ட திருப்பதிகமே, உலகத்தவர் ஏத்துவதற்கென்றமைந்த "கலிக் கோவை" அல்லது திருப்பதிகம் ஆகும் என்று பொருள்கொள்ள இடந்தருகிறது.

சொற்றுணை ஓரைந்திஞேடு ஐந்து

"சேவுயருத் திண்கொடியான்"

என்று தொடங்கும் திருக்கழுமலத் திருப்பதிகத்தின் திருக்கடைக் காப்பு

"கற்றவர்கள் பணிந்தேத்தும் கழுமலத்துள் ஈசன்தன்
கழல்மேல் நல்லோர்
நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம்பந்தன் தான்
நயந்து சொன்ன
சொற்றுணை ஓரைந்தினெடு ஐந்திவை வல்லார்
தூமலராள் துணைவராகி
முற்றுலகம் அதுஆண்டு முக்கணுன் அடிசேர
முயல்கின் றுரே"

என்பது. இத்திருப்பாட்டு வரிகளுடன், இத்தலைப்பின் தொடக்கத் தில் எடுத்துக் காட்டப்பெற்ற, திருத்துருத்தித் திருப்பதிகத்துத் திருப் பாட்டின்

"கற்று முற்றினர் தொழும் கழுமலத்து அருந்தமிழ்
சுற்றும் முற்றும் ஆயினுன்"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்ற வரிகளை இணைத்துப்பார்த்தால் ஓர் உண்மை விளங்கும். திருஞானசம்பந்தப் பெருமான் சுற்றம் ஆயினன்; முற்றும் ஆயினன் என இரண்டு வகையில் நின்றதம் நிலைமையினையே, நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம்பந்தன் என்று திருக்கழுமலப் பதிகத்தினுள் அமைத்துக் காட்டினர். மேலும், கழுமலப் பதிகத்தினுள், சொற்றுணையாக நின்றவை ஐந்து, ஏனையவை முற்றுமாக நின்றவை என்ற இரண்டு பிரிவுகளை எடுத்துக் காட்டினர்.

சொற்றுணை ஓரைந்தினெடு ஐந்து என இரண்டாகப் பிரித்துக் காட்டிய நிலையில், அவ்விரண்டையும் முறையே கூறி, இறைவனை வணங்கினல், குற்றம் முழுவதும் இல்லாமற் போகும். குற்றம் இல்லாமையால் குணங்கள் வந்து கூடும் என்பது பதிகக்தின் இரு பிரிவுகளால் விளைந்த இருவகை நன்மைகள் என அமைத்துக் காட்டினர்.

நல்லோர்களின், கற்றேர்களின் நற்றுணைப் பதிகம் குற்றம் அறுத்துச் சுற்றமாக்கியது; ஏனைய பாதியானது குணங்களைச் சேர்த்து முழுமையாக்கியது.

"குற்றம் அறுத்தது பாதி ; குணம் சேர்த்தது பாதி" என்ற அளவில் முழுமை பெறுதல் ஞானசம்பந்தப் பெருமான் திருப்பதிகத்தால் இயலுவதொன்று என முடித்துக்கொள்ளலாம். அவ்வாருயின் குற்றம் அறுத்தலையும் குணம் சேர்த்தலையும் கொண்டு விளங்கும் பதிகமாகவே எல்லாப் பதிகங்களையும் கொள்ளலாம் எனினும், 'பஞ்சாக்கரத் திருப்பதிகமே' மேற்கூறிய கருத்தமைவுகளைக் கொண்ட திருப்பதிகமாகக் கொள்ளலாம். இப் பஞ்சாக்கரத் திருப் பதிகத் திருக்கடைக் காப்பினுள், "நற்றமிழ் ஞானசம்பந்தன்" என்று கூறும் சம்பந்தர், நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் என்று கூறிக் கொள்ளாமல், நற்றமிழும் தானும் ஒன்றே யென்னும் ஒருமைநிலையைக் கூறி, நான்மறை கற்றவனுகத் தம்மை அத்திருப்பாட்டிலேயே அமைத்துக் காட்டினர். எனவே, சுற்றமாதல் ஒருவகை; முற்றுமாதல் மற்றொருவகை. நான்மறை கற்றவனுதல் ஒருவகை ; நற்றமிழ் முற்றுமாதல் ஒருவகை. இவ்விருவகைகளையும் எடுத்துணர்த்தும் போக்கில், தம்மையும்

நல்லோர் நற்றுணை

என்றும்,

பெருந்தன்மை ஞானசம்பந்தன்

என்றும், "சேவுயருந்திண் கொடியான்" என்று தொடங்கும் திருக் கழுமலத் திருப்பதிகத் திருக்கடைக் காப்பினுள் தெரிவித்தருளினர்.

குற்றம்அறுத்தல், குணம்சேர்த்தல் என்ற இரண்டையும் இணைத்துத் தரும் நிலையுடையது திருவைந்தெழுத்து என்று எடுத்துக் காட்டும் முறையில்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"நல்லவர் தீயர் எனுது நச்சினர்
செல்லல் கெடச் சிவமுத்தி காட்டுவ
கொல்ல நமன்தமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே"

என்ற திருப்பாட்டினை அமைத்துக் காட்டினர். எனவே, சொற்றுணை ஓரைந்திஞேடு என்பதனைப் பஞ்சாக்கரத் திருப்பதிகமாகக் கொள்ளுதல் பொருந்துவதே. இப்பதிகத்தினுள் இருமை நிலைகளை எடுத்துக் காட்டும் இடங்கள் கீழே கொடுக்கப்பெற்றுள்ளன.

(1) துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்

(2) அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே

(3) செல்லல்கெட, சிவமுத்தி காட்டுவ

(4) நற்றமிழ் ஞானசம்பந்தன் ; நான்மறை கற்றவன்

(5) நற்றுணைவன் பெருந்தன்மை ஞானசம்பந்தன்

இனி, சொற்றுணையாய் நின்ற வேதியன் என்றும், நற்றுணையாய் நின்றது நமச்சிவாய என்றும் அப்பரடிகள் இணைத்துக் கூறுமாற்றுலும் இதனை உணரலாம். ஆயினும், நமச்சிவாயப் பதிகத்தைக் கொள்ளலாமே! என்ற ஒரு கருத்து உண்டாகும். அதனை நீக்கவே, சொற்றுணை ஓரைந்தினெடு என்று பிரித்துக் காட்டினுராதல் வேண்டும். எனவே, பஞ்சாக்கரத் திருப்பதிகம், நமச்சிவாயத் திருப் பதிகம் என்ற இரண்டினுள் பஞ்சாக்கரத் திருப்பதிகத்தையே இங்கு சுட்டினுராதல் தெளியலாம்.

"சொற்றுணை ஓரைந்து" என்று எடுத்துக்காட்டிய பஞ்சாக் கரத்தின் பெருமையை உணர்ந்தும் உணர்த்தியும் நின்ற நிலையே ஞானசம்பந்தப் பெருமான் சைவசமயத்து உயர்பெரும் நன்னெறி யாக எடுத்தாண்டு சிறப்பிக்கின்றுராதல் "வேணுபுரம்" என்ற இரண்டாம் பெயர் பிரமாபுரத்துக்கு அமைந்த ஏற்றத்தைத் தெரி விக்கு முறையால் அமைத்துக் காட்டுகின்றுர்.

திருவைந்தெழுத்து ஐந்தாக நின்று மந்திரமாதலும், அதுவே பின்னர் நாதன் நாமமாக நிற்றலும் ஆகிய இரு பெருநிலைகளை உடையது. திருவைந்தெழுத்துடன் தொடர்புடைய பெருமானுக்கும் இருவகை நிலைகள் உண்டு. பெற்றம் ஒன்று உயர்த்திய நிலை ; பெற்றம் ஒன்று ஊர்ந்த நிலை.

திருத்துருத்தித் திருப்பதிகத்தினுள் "பெற்றமொன்றுயர்த்தவன் பெருந்துருத்தி பேணவே" என்று குறிப்பிட்டருளுகின்றுர். "சேவுயருந்திண் கொடியான்" என்று தொடங்கும் திருக்கழுமலப்பதிகமே ஆனேற்றுக் கொடியுடையான் என்பதை உளங்கொண்டது. இங்கே, ஆனேறு வெற்றிக் கொடியாகும். திருஞானசம்பந்தர் தாம் கண்ட முதற் காட்சியில் "விடையேறி" என்பதே சுட்டப்பெற்றது. ஆனேறு அறமாக நின்று அனைத்துக் குணங்களையும் அருளும் நிலை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்னது குற்றம் அறுத்தநிலை; பின்னது குணந்தந்து ஆண்ட நிலை.

மேலே கூறப்பெற்ற கருத்துக்களை இணைத்துக்காட்டி, திருவைந் தெழுத்தின் பெருமையை உணர்த்த வந்ததே வேணுபுரம்.

வேணுபுரத்தரன்

விண்டலர் பொழிலணி வேணுபுரத்தரன் என்ற தொடரில் **விண்டு அலர்தல்** என்ற பகுதியானது, தானே வெளிப்பட்டு மலரும் தன்மையைக் குறித்தது; **பொழில் அணி வேள்** என்ற பகுதி எல்லா வகை உலகங்களும் தன்னுள் அமைக்கவும், அமைந்த அவை களுக்கு அழகு செய்யவும் ஆக அமையும் பெருந்தன்மையைக் குறித்தது, **நூபுரத்து அரன்** என்ற பகுதி அத்தகைய இயல்பினை யுடைய அரன் என்ற பொருளைத் தந்தது.

தானே வெளிப்பட்டுத் தன்னை மலர்வித்துக்கொள்ளும் தன்மையும் எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கி, அவை களுக்கு அழகு செய்யும் பெருந்தன்மையும் உடைய சிலம்பினை உடைய அரன் என்பது பொருள்.

சிலம்பொலியானது தானே வெளிப்படும் தன்மையினது; எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி, அடக்கியவைகளுக்கு அழகு செய்யும் பெருமையுடையது.

அடுத்து, திருவைந்தெழுத்தினைக் கற்று வல்லராந் தன்மை பெறு தலிலும், இருவகை நிலைகள் பேசப் பெறுகின்றன. திருவைந்தெழுத் தினைக் கற்றுச் சுற்றமாம் நிலையே முதல்நிலை. திருவைந்தெழுத்தினைக் கற்று முற்றுமாம் நிலையே இரண்டாம்நிலை. முன்னது அறிதல்நிலை; பின்னது அனுபவநிலை.

பிரமாபுரம் வேணுபுரமாக நின்றது. பிரமன் அளித்த நான்மறை யினைக் கற்றுச் சிறந்த நிலையில், விண்ணவர் ஆயினர் பலர். விண்ண வர்களின் தலைவன் இந்திரன். இந்திரனும் அல்லல்பட்டு, வந்து வணங்கியபோது, அவனுக்கு அனுபவநிலையில், அனுபவப் பொரு ளாக நின்று விளங்கியவன் வேணுபுரத்து அரன்.

பிரமாபுரமும் வேணுபுரமும்

பரஞான நிறைவாய் இன்பமாய் நின்ற பெரியவன் பெம் மான் எனப்பெற்றான். பெம்மானுயினும் அவன் எனக்குயி ரானவன் ஆதலின் எம்மான். என்னை முத்தியிலே விடுகைக்காக, பிரமம் எனப்பெறும் பெரியவன் என்மேல் விருப்பமுள்ளவனாய் என்னைத்தேடி, என்னை ஒத்த நிலையில் வந்தான். பெம்மான் எம் மான் என நின்றது பெருநெறி. பெம்மானாகிய எம்மான் தானே வந்து என்னையாண்டான் என்பதே பெருநெறிய பிரமாபுரத்தினை அடிப் படையாகக் கொண்டு எழுந்த சைவப் பெருநெறி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தண்ணீர் ஒருவகையில் எளிய பொருள். தண்ணீரை ஏற்றுச் சுமந்த மூங்கில், அதனைத் தன்னகத்தே அடக்கிவைத்திருந்து, பின்னர் அதனை முத்தாக மாற்றுகிறது. எளிய தண்ணீர் அரிய முத்தாக மாற்றம் பெறுதல் வேணுபுரத்துத் தெய்வப் பண்பு.

சூரபதுமனுக்கு அஞ்சிய இந்திரன் சீகாழிக்கு வந்து மூங்கிற் காட்டினை உண்டாக்கி, அதனுள் தானும் ஒரு மூங்கிலாக நின்று இறைவனை வழிபட்டான். மூங்கிலாக நின்ற இந்திரனின் உயிரானது தூய தண்ணீரைப் போன்றது. அதனை நன்முத்தாக மாற்றி ஒளி பெறவைத்தவன், அம் மூங்கிலடியில் விளங்கும் பரம்பொருள் என்ற வரலாற்றை உடன் கொள்ளுக.

தன்னை விரும்பி வந்தடைந்தவர் யாவராயினும் அவரைத் தக்கார், தகவிலர் என்று கருதாது, சிவமாக்கிச் சிவகதியில் உய்த்த பெருமையே வேணுபுரத்துப் பெருமை.

'தண்ணீர் முத்தாதல்' என்பது ஒருவகைக் குறியீட்டுத் தொடர். 'தண்ணீர் விளக்கெரித்தல்' என்பதும் அதுவே. தண்ணீர் விளக்கெரித்தல் என்பது தண்ணீரின் உள்நின்ற சிவம் பெருகி, தண்மையைத் தன்மயமாக்கி, தானே மிக்கு நின்று ஒளிசெய்தல் என்ற கருத்தைக் கொண்டது. அவ்வாறே, தண்ணீரின் உள் நின்ற சிவமாந் தன்மையானது பெருகி நின்று தண்ணீர்த் தன்மையைத் தன்னுள் அடக்கி, தானே வெளிப்பட நிற்றல் என்ற கருத்தையே 'தண்ணீர் முத்தாதல், என்ற குறியீட்டுத் தொடர் உணர்த்துகிறது,

அறிதற்கரியதாய பரம்பொருள் எனப்பெறும் பிரமப்பொருள் ஒருதுளி வடிவில் நிற்கும் தண்ணீரைத் தன் இருப்பிடமாகக் கொண்டு வந்து தங்கியது. இதுமுன் சொன்ன பெருநெறித் தன்மை. அடுத்த நிலையில், அப்பரம் பொருளானது தண்ணீர் வடிவத்தையே தன் வடிவாக ஏற்று, பின்னர்ப் பெருகி, தண்ணீரைத் தன்னுள் அகப்படுத்தி, தான் புறஞ்சூழ்ந்து நின்றது பிரமம் என்ற சொல் பெருகி வளரும் தன்மையது என்ற பொருள் நிலைக் கேற்ப, ஏற்ற வடிவமே தன்வடிவமாக, ஏற்று வளர்ந்து, தன்னை அகப்படுத்தியிருந்த பொருளைத் தன்னுள் அகப்படுத்திக் கொண்டது. சீவனுக்குள் சிவம் இருந்தது. சீவனுக்குள் அடங்கியிருந்த சிவம், பெருகி, வளர்ந்து, சீவனைத் தன்னுள் அகப்படுத்திக் கொண்டது. இவ்வாறு சீவனுக்குள் நின்ற சிவம் பெருகி, சீவனைத் தன்னுள் அகப்படுத்தி நிற்கும் நிலையை 'அருள்நிலை' என்று கூறுவர். திருஞானசம்பந்தரைப் பற்றி, அவர்தம் தொண்டின் சிறப்பினைப்பற்றி எடுத்து விளக்க முற்படும் சேக்கிழார்,

> "......... தாவில் சராசரங்களெல்லாம்
> சிவம் பெருக்கும் பிள்ளையார் திரு அவதாரம் செய்தார்"

என்று (பெரியபுராணம் 1929) கூறுவதை நோக்கிக் காண்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சீவனுக்குள் வந்துநின்ற சிவத்தின் தன்மையை எடுத்துக் கூறியது பிரமாபுரத் தன்மை. அடுத்த நிலையில், சிவம் தானே வளரத் தொடங்கியது என்ற கருத்தை உணர்த்தவே 'விண்டு அலர்' என்ற தொடர் வேணுபுரத்துடன் இணைக்கப்பெறுகின்றது. தானே வளர்ந்த சிவம், பின்னர் சீவனைத் தன்னுள் அடக்கி, அதனைப் புறம் சூழ்ந்து, அதனை அழகுசெய்து, தன்னையே அதற்கு அழகாக அமைத்துக் கொடுத்தது. இக்கருத்தினையே "பொழில் அணி" என்ற தொடர் குறித்தது. சீவனின் உள்ளிருந்த அது, சீவனின் உட்புறம் முழுவதும் தானேயாக, பின்னர், சீவனின் வெளிப்புறம் முழுவதும் தானேயாக நின்று, சீவனின் உள்ளும் புறம்புமாகத் தன்னை நிறுத்தி அழகு செய்தது. இவ்வாறு, பிரமப்பொருள் நின்ற நிலையே "அருளனுபவ நிலை", அகத்தும் புறத்தும் அருளே காட்சிப்படும் நிலை. இதனை வடலூர் வள்ளற் பெருமான்,

தனிப்பர நாத வெளியின்மேல் நினது
  தன்மயம் தன்மய மாக்கிப்
பனிப்பிலாது என்றும் உள்ளதாய் விளங்கிப்
  பரம்பரத்து உட்புற மாகி
இனிப்புற ஒன்றும் இயம்புரு இயல்பாய்
  இருந்ததே அருளனுபவம் என்று
எனக்கருள் புரிந்தாய் ஞானசம்பந்தன்
  என்னும் என் சற்குரு மணியே

என்று, ஆளுடைய பிள்ளையார் அருள்மாலையின் நான்காம் திருப்பாட்டினுற் கூறி விளக்கினுர்.

திருஞானசம்பந்தரின் திருவாக்கினுக்கேற்ப எந்த ஒரு பொருளுக்கும் இருவகைத் திறம் உண்டு. ஒன்று இயற்றிறம்; மற்றொன்று இசைத்திறம். இயற்றிறம் என்பது அப்பொருளின் மெய்ந்நிலை. அது செயற்பாட்டுக்கு அப்பாற்பட்டது. அது உணரும் தன்மையதே. அதுவே செயற்பாட்டு நிலைக்கு வரும்போது 'இசை' எனப் பெறுகிறது. இதனை,

"இயலிசை எனும் பொருளின் திறமாம்"

என, நாலடிமேல் வைப்புத் திருப்புகலித் திருப்பதிகத்தின் முதல் திருப்பாட்டிலேயே முதன்மைக் கருத்தாக ஞானசம்பந்தர் அமைத்தருளுகின்றுர்.

இரவொடு பகலதா நின்ற இறைவன் பண்புகளுள் இரவென நின்ற தன்மை இயலுக்கும், பகலென நின்ற தன்மை இசைக்கும் உண்டு. இவ்விணைப்பை மேற்குறித்த திருப்பதிகமே எடுத்துக் காட்டுகிறது.

"இரவொடு பகலதாம் எம்மான் உன்னைப்
  பரவுதல் ஒழிகிலேன் வழியடியேன்"

என்பன, அப்பதிகத்தின் எட்டாந் திருப்பாட்டின் வரிகளாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இயல்திறமும் இசைத்திறமும்

அருநெறியும் பெருநெறியும் இணைந்த இணைப்பே ஒருநெறி என்பது முன்னே விளக்கப்பெற்றது.

பரம்பொருளுக்கு இரு திறமாக நின்ற இலக்கணங்கள் இயல், இசை எனவும் இரவு, பகல் எனவும் நாலடி மேல் வைப்புத் திருப் புகலித் திருப்பதிகத்தால் உணரலாம்.

பரம்பொருளின் அருமை, பெருமை எனநின்ற இரண்டு வகை யான நிலைகளும் முறையே இரவு, பகல் எனவும் மறைநெறி, பெரு நெறி எனவும் கொண்டு விளக்கப்பெற்றன.

பரம்பொருளைத் தத்துவப் பொருளாகக் காண்பது, தத்துவக் குறியீட்டுச் சொற்களால் குறிப்பிட்டுக் காட்டுவது என்பதே அரு மறை நெறி. கறைக்கண்டன், புரமெரித்தான், எரியாடி என்பன வாய தொடர்கள் பரம்பொருளின் அருமையை உணர்த்தும் இயல் நிலைக் குறியீட்டுத் தொடர்கள். அவைகளால் இறைவன் தத்துவன் என்றும், ஞானத்தின் மேலாய் நின்ற நன்பொருள் என்றும் உணர்தல் ஒன்று மட்டுமே இயலுவது. அத்தகைய பண்புகள் அவனுடைய இரவென நின்ற பண்புகள், அரியன, அருமறை நெறியன, அவ் வுலகுக்குரியன. அவன் அருமையைக் குறிக்கும் சொல் 'வட சொல்' எனப்பெற்றது. 'வடம்' என்ற சொல் ஆலம் விதையென, அவன் அருமையின் நிகழ்த்திய பல்வேறு தத்துவங்களை உள்ளிட்ட வித்துச் சொற்கள். அவைகளைக் கொண்டு பாடி மகிழ்ந்து பெருமை பேசித் துய்க்க முடியாது. சுருங்கக் கூறின், மறை என்பது தத்துவக் குறியீட்டுச் சொல். 'வடம்' என்ற ஆலவிதைபோன்று அவன் அருமையை அடக்கியிருக்கும் சொல்லாதலின் வட சொல் லாயிற்று. உணர்தற்குரியது என்பதே அதன்பொருள். வடசொல் என்பது இங்கே வடக்குத் தேயத்தில் பேசும் மொழியாக அமைந்த சமஸ்கிருதம் என்பதைக் குறிக்காது. வடசொலும் தென்சொலும் என்ற இரண்டையும் உணரவும் உணர்த்தவும் ஆய இரு நெறி களுக்கு உதவும் சொற்கள் எனக் கொள்ளுதல் வேண்டும்.

வடசொற்களே மறைமொழி. அவைகள் இறைவனே தத்துவ உண்மைகளை உணர்த்தும் முறையில் அமைக்கப் பெற்ற வித்துச் சொற்கள். விதைச் சொற்களை நன்குகக்கற்றுத் தேர்ந்த பெரு மக்கள் நால்வர், அச்சொற்களால் உணர்த்தப்பெறும் மொழிப் பொருளை அறிவார்களேயன்றி, மொழியின் மூலப்பொருளை அறியாதவர்களானார்கள். அவர்களுக்கு அவ்விதைச்சொற்களின் மூலம் இது என உணர்த்த வந்த நிலையே ஆலமர்கடவுள் நிலை. சொன்ன முறையோ சொல்லாமற் சொன்னநிலை.

''கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
ஆறங்க முதற் கற்ற கேள்வி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்த தனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்

என்ற திருப்பாட்டின் பொருளை உன்னுக.

அவைகளையே அவன் விளக்க முறுத்துதற்காக, இயற்றிறத்தை இசைத்திறத்தோடு இணைத்து நடமாடுகின்ருன். இதனை,

'' நிழல்திகழ் மழுவினை யானையின்தோல்
அழல் திகழ் மேனியில் அணிந்தவனே
கழல்திகழ் சிலம்பொலி யலம்ப நல்ல
முழவொடும் அருநட முயற்றினனே
முடிமேல் மதிசூடினை முருகமர் பொழிற்புகலி
அடியாரவ ரேத்துற அழகொடும் இருந்தவனே''

என்ற நாலடிமேல் வைப்பு, திருப்புகலித் திருப்பதிகத்து நான்காந் திருப்பாட்டின் மூலம் உணரலாம். இத்திருப்பாட்டினில் முதல் நின்ற இரண்டு வரிகள் வடசொல்லாய் அமைவன, அறிதற்குரியன, மறைநெறி என்பதாம். அவைகளையே அடுத்துள்ள இரண்டு வரிகளால் இசையொடு கூட்டி, ஏத்துதற்குரிய நிலையில் வெளிப்படுத்தப் பெறும் இசைத்திறம். அதுவே பெருமை பேசுதற்குரிய பெரு நெறித் தமிழ். இறைவனின் பெருமையைப் பேசி மகிழ்ந்து இன்புறலாம் ஆதலின் அவை தென்சொல் எனப் பெற்றன. அருமறை நெறியினனுகிய நின்னைப் பெரு நெறிய முறைத் தமிழால் ஏத்துற அழகொடும் இருந்தவனே என்று திருஞானசம்பந்தர் எடுத்தாண்டு விளக்கியருளுகிருர்.

தத்துவக் குறியீட்டுச் சொற்களாக — இயல் திறமாக — இரவு இயல்பாக நின்றவைகள் அருமறைநெறி எனப் பெற்றன. அவைகளே ஞானத்திறன். அவைகளையே பெருமைக்குரியனவாக-பேசி மகிழ்ந்து துய்க்கும் இயல்பினவாக — இசைத் திறமாக — பகல் இயல்பாக அமைத்துக் கொடுத்த போது பெருநெற்'த் தமிழாயின. முன்னவை உணர்தலுக்கு மட்டுமே உரியவை. பின்னவை உணர்ந்து, ஏத்தி, துய்த்து இன்புறவும் அவ்வாறே அனுபவ முறையால் பிறர்க்கு உணர்த்தவும் உரியவை. இத்தகைய விளக்கத்தையே ''வடசொலும் தென் தமிழும் ஆனுன் கண்டாய்'' என்ற தொடருக்கு அமைத்துக் கொள்ள வேண்டும். சமஸ்கிருதம், தமிழ் என்ற வேறுபாடுகளை நீக்கியுணர்தல் வேண்டும்.

''மன்னிய வாய்மொழியாலும் மதித்தவர்
இன்னிசை உள்ளே எழுகின்ற ஈசனைப்
பின்னை உலகம் படைத்த பிரமனும்
உன்னும் அவனை உணரலும் ஆமே''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்ற திருமந்திரப் (34) பாட்டினுள் வாய்மொழி என்பதே தத்துவக் குறியீட்டுச் சொல். அதனுல் அவன் அருமையை உன்னுதல் இயலும். ஆனல், வீணையுள் எழும் இனிய இசை போல, நின்ற அந்த அளவில் மட்டுமே உள்ளத்துள் எழும் இன்பப் பொருளை உணர்ந்து துய்க்க முடியும்.

தண்மையும் வெம்மையும் ஆய இரு காலங்கள் மாரியென்றும் கோடையென்றும் வழங்கப்பெறும். இரண்டற்கும் இடையில் வரும் பனிக்காலத்தால் மாரி, கோடை என்ற இருவகைக் கால நன்மைகளும் அழியும். இறையெனும் பரம்பொருளை அனுபவித்தற்குரிய, அறிதற்குரிய இருவகைக் காலங்கள் உண்டு. குளிர்ந்த நிலையில் அனுபவித்து அறிதல் மாரிக்காலம்; அனுபவ நிலையில் இல்லாது அவன் அருமையை அறிதல் கோடைக்காலம். அனுபவத்தில் இறைவனைத் துய்த்தும் அறிந்தும் நின்ற நிலையில் உயிருக்குரிய கட்டுக்கள், தளைகள் அவிழ்க்கப் பெறும் நிலையை அறியலாம். அனுபவத்தின் நீங்கிய அறிவு நிலையில் உயிர் கட்டுக்களுக்குள் கட்டப் பெற்ற முறை, சிறைபுக்கநிலை, மீட்டும் உடம்பை விட்டுக் கழிந்து செல்லும் முறை முதலியவைகளை அறியலாம். இவ்விரு வகை நிலைகளுக்கும் உரியன முறையே தமிழும் வடமொழியும் என்று குறிப்பிட்டுக் காட்டுகின்ருர் திருமூலர்.

"மாரியும் கோடையும் வார்பனி தூங்க நின்று
ஏரியும் நின்றங்கு இளைக்கின்ற காலத்து
ஆரியமும் தமிழும் உடனே சொலிக்
காரிகை யார்க்குக் கருணை செய்தானே"

"அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறும்
சிமிழ்த்தலைப் பட்டுயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ்விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலும் ஆமே"

என்பவை திருமூலர் திருமந்திரத்து 109, 110 ஆம் திருப்பாட்டுக்கள்.

மேலே குறிப்பிட்டவாற்ருல் அருமைக்கேயுரிய, அறிதற்கேயுரிய அருமறை நெறியாகிய இரவுப் பண்பு என்பது தத்துவஞானத்துக்குரிய தத்துவ மறை மொழிகளால் அவனை அறியும் நிலை. அந்நிலை மண்ணுலகுக்கு ஒவ்வாது. பெருமை பேசுதல் என்ற பகல் நெறியே இவ்வுலகிற்குப் பொருந்துவது. ஒரே நெறியின் இரண்டு பக்கங்களில் முன்னது மறை நெறி. மறை நெறியின் அந்தத்தில், முடிவில், தத்துவ அதீத நிலையில், தத்துவங் கடந்த நிலையில், அலகில் மறை மொழியும் ஒரு பொருள் முடிவில், தத்துவ அறிவின் அதீதத்தில், ஆறத்துவா நெறி அகன்ற நிலையில், ஆறத்துவா நெறியின் அந்தத்தில் ஆனந்தமாய், இன்பமாய், இசைப்பயனுய், பெருமை பேசி ஏத்துவதற்குரியதாய் எழுந்த நெறியே பெருநெறி; பெருநெறியானது துய்ப்பு நெறியாதலின் இன்ப நெறியாயிற்று; தமிழ் நெறியாயிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இரவின் அந்தத்தில் பகல் வருதல் போல, அருமையின் முடிவில் பெருமை எழுமாறு போல, மறை நெறியின் அந்தத்தில் பெருநெறித் தமிழ் எழுந்தது. இக்கருத்தையே அந்தமாய் ஆதி ஆன பரம் பொருள் என்று குறிப்பிட்டருளுகின்றார் திருஞானசம்பந்தர்.

அருமறை நெறியும் பெருமைத் தமிழ் நெறியும் ''ஒரு நெறி''யின் இருவகை நிலைகள். முன்னது அறிதல் மட்டுமே இயன்ற நெறி, பின்னது துய்த்து மகிழ்ந்த இன்ப நெறி. அருமறை நெறிதான் முன்னையது; இரவு என நின்றது. அதன் முடிவில் தான் பகல் என நின்ற பெருமைத் தமிழ் நெறி அமைகிறது. இயல் இசைத்திறம் என நின்றது. இம்முறையைப் பிறழாது உணர வேண்டும் என நினைத்தே, ''சேவு யருந்திண் கொடியான்'' என்று தொடங்கும் திருக்கழுமலத் திருப்பதி கத்தின் திருக்கடைக் காப்பினுள்,

''நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம்பந்தன் தான் நயந்து சொன்ன
சொற்றுணை ஓரைந்திேைடு ஐந்திவை வல்லார்''

என்று இரு நெறிகளையும் இணைத்துக் காட்டிய நிலையில் தம்மையும் தம் பதிகத்தையும் விளக்கிக் காட்டுகின்றார்.

'ஒரு நெறி' எனப் பெறும் சிவநெறியில் முதல் நின்ற நான்மறை நெறிக்குத் தான் துணைவன் என நிற்பதாகவும், பெருமைக்கு உரிய, பெருமை பேசித் துய்த்து இன்புறுதலுக்காம் பெருநெறிக்குப் பெருந் தன்மை பெற, இசை பெய்து உலகினர்க்கு எடுத்துக்காட்டி, அந்நெறியாகவே தான் நின்ற தன்மையையும் இணைத்து,

''நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம்பந்தன்''

என்று கூறியருளினர். இக்கருத்தினையே சேக்கிழாரும், மதுரையம் பதியில் ஞானசம்பந்தரைக் காணும், மங்கையர்க்கரசியார் குலச் சிறையார் ஆகிய இருவரின் காட்சியாக அமைத்துக் காட்டும் வகையில்,

''ஞானத்தின் திருவுருவை நான் மறையின் தனித்துணையை
....
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர் தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்''

என்ற பெரியபுராண 2631ஆம் திருப்பாட்டினை அருளுவராயினர்.

ஒருநெறியை அடிப்படையாகக் கொண்டு வந்ததே திருநெறிய தமிழ். இதனைத் ''திருப்பதிகத் தமிழ் நெறி'' என்றார் நாரையூர் நம்பி. திருப்பதிகப் பெருவழித் தமிழைத் தொடக்கியவர் ஞான சம்பந்தர் என்பது அவர் கருத்து.

ஒருநெறி என்பது அன்பு நெறியே. அதன் முதற்படிநிலை அரியன கேட்கும் மறை நெறியாக நிற்க, அதன் முடிவில் இசை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யுடன் ஏத்தித் தொழும் பத்தி நெறியாக அதன் இரண்டாம் படிநிலை அமைந்தது. முன்னதன் முடிவில் பின்னது வந்தது. அன்பின் முடிவில் மலர்வது அருள்நெறி. அருள் நெறியே திருநெறியதமிழ் நெறி என்றும் பதிகப் பெரு வழித் தமிழ் என்றும் போற்றப் பெறும் நெறி. அந்நெறியின் முதற் குரவர் திருஞானசம்பந்தரே.

ஆயினும், திருப்பதிகத் தொடக்கம் அன்பு நெறியிலேயே தொடங்கி விட்டது. அன்பு நெறியின் முதற்படியாகிய மறை நெறியை, பரம் பொருளின் இரவு இயல்பினை, முதன் முதல் பதிகத்தால் பாடி, பதிகநெறியைத் தொடக்கியவர் காரைக்காலம்மையார். அவர்களைச் சார்ந்த இளவலாக, ஞானசம்பந்தப் பெருமான் மறை நெறிக்குத் துணையாக நின்று, பெருநெறியை இசையில் அல்லாமல், இன்னிசையினுல் பரப்பினர். தம்பதிகங்களில் மறைநெறிக்கு ஐந்தும் பெருநெறிக்கு ஐந்தும் எனத் திருப்பாட்டுக்களை ஒப்ப அமைத்து, ஒரு நெறிக்குரிய திருப்பதிகத்தினை, அம்மையாரின் வழி நின்று அமைத்து விளக்குகின்ருர். அருமறைக்குத் துணை நின்ருலும், இசையுடன் இணைந்த பெரு நெறியை இன்பமாகப் பெருக வைத்தார் அதனுலேயே,

> "நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்
> ஞானசம்பந்தருக்கு உலகவர் முன்
> தாளம் ஈந்து, அவன் பாடலுக்கு இரங்கும்
> தன்மையாளனை"

என்று நம்பியாரூரர் போற்றிப் பரவுகின்ருர். இன்னிசையால் தமிழ் பரப்புதல் என்பது ஒருநெறியின் இரு பகுதியாகிய அருமறை, பெரு நெறித் தமிழ் என்ற இரண்டையும் இன்னிசையால் ஒத்தி இன்பந் துய்க்கப்பண்ணும் திருநெறியைப் பரப்பினர் எனக் கொள்ள வேண்டும். இசையால் அவர் வளர்த்தது தமிழ் மொழியை யன்று. அறிதற் கரிய பரம்பொருளை, மறைநெறிப் பரம்பொருளை இன்னிசையால் இன்பப் பொருளாக்கித் துய்க்க வைத்தது என்பதே "நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்தல்" என்ற வரிக்குரிய பொருளாகும்.

இசை வேறு, இன்னிசை வேறு. அறிதலுக்கும் அனுபவித்தலுக்கும் அப்பாற்பட்ட அரிய பொருளை உண்டென அவ்வளவில் மட்டுமே அறிதல் முதல் நிலை. உண்டென அந்த அளவில் மட்டுமே அறிந்தபின் பெருமை பெற அறிதலும் அந்த அளவுக்குத் துய்த்தலும் இரண்டாம்நிலை. அரிய பொருளைத் துய்த்தலுக்கு ஏற்ப இசைய வைத்தநிலை இசை. இந்நிலையானது தமிழில் உள்ள இயல்நிலையை இசை நிலையாக ஆக்கும் நிலையுள் இணைக்க வேண்டும். முன்னதில் இல்லாத செயற்பாட்டு நிலை இசையில் அமைவதால், இசையை ஒட்டிய நாடகம் என்ற செயற்பாட்டுநிலை அமைக்கப் பெற்றது.

இயல் திறம் அரியநிலை; செயலற்ற நிலை. இசைத்திறம் அறியவும் துய்க்கவும் ஆம் வகையில் இயலைச் செயற்பட அமைத்த பெருமை நிலை. இருநிலைகளில் அமைந்த மூன்றும் தமிழின் மூன்று நிலைகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று பிரித்துக் காட்டினர்கள். இம்மூன்று நிலைகளையே அருமை நெறி, பெருமை நெறி என நிறுத்தி, பின்னர் அவ்விரண்டையும் இணைத்து ஒருநெறி என்றுக்கினர்கள். அதுவே "தமிழ்" எனப் பெறுவதாயிற்று.

இந்நிலையில் தமிழ் இசையுடன் கூடியதே. ஆனல் இன்னிசையுடன் கூடியதன்று. அறிதல் முறையை மட்டுமே கொண்டது முத்தமிழ். முத்தமிழ் அந்த மூன்று தன்மைகளும் இல்லாமல் இன்பம் என்ற ஒன்ருக மட்டுமே மலர்ந்தநிலை *"இன்னிசைத் தமிழ் நிலை"* ஏழு எனப் பிரிந்து துய்த்து நின்ற அனுபவநிலை.

ஒரு நெறி எனப் பெறும் இருமையின் ஒருமை நெறியைத் திருப்பதிகத்தால் உணர்த்தத் தொடங்கியவர் காரைக்கால் அம்மையாரே. அவரைச் சார்ந்து அந்நெறியை இன்னிசையால் வளர்த்து நின்ருர் திருஞானசம்பந்தர் அன்பு நெறியின் பின்னர் அருள்நெறித் திருப்பதிகப் பெருவழியைத் தமிழால் தொடங்கிய பெருமை திருஞானசம்பந்தருக்கே உண்டு.

பரம்பொருளின் அந்தம், ஆதி, நடு என்ற மூன்று பகுதிகளில் 'அந்தம் ஆதி' என்ற இரண்டையும் இணைத்த — மறை நெறியும் பெருநெறியும் இணைந்த அன்பு நெறியைத் திருப்பதிகத்தால் வளர்க்க முற்பட்டுத் தொடங்கியவர் காரைக்காலம்மையார்; அதனை இன்னிசையில் வளர்த்தவர் திருஞானசம்பந்தர். அன்பு நெறியின் பின்னர், பரம்பொருளின் நடுவாய பகுதி அருள் நெறியாக மலர்ந்தது. அருள் நெறியினைத் திருப்பதிகத் தமிழால் தொடங்கியவர் திருஞானசம்பந்தரே.

மூங்கிலைத்தேடி, மூங்கிலுக்குள் ஒரு துளித் தண்ணீராக வந்து நின்ற நிலையில் அன்புறுநிலை முற்றுப்பெற்றது. தண்ணீர் முத்தாக மாறிய மாற்றம் அருள்நெறியைச் சார்ந்தது. இவ்வகையில் ஞானப்பால் அருந்தியநிலையில் சிவஞானம் அரும்பியது.

என்னைப்பெற்ற தந்தை சிவபாத இருதயர், என்னைப்பெற்ற தாய் பகவதியம்மை என்ற அன்புறுநிலையைக் கடந்து, யாவருக்கும் தந்தைதாய் இவர்கள் எனும் உணர்வு தலைப்பட மலர்ந்த நெறியே அருள்நெறி. அன்பு நெறியிலிருந்து அருள் நெறியானது முகிழ்க்கு மாற்றைச் சேக்கிழார் அழகுற எடுத்துக் காட்டியுள்ளார்.

"யாரளித்த பாலடிசில் உண்டது நீ" என்று வினவிய தந்தைக்கு மறுமொழி சொல்ல வேண்டும். ஆனல், அவர் கூறியது யாருக்குப் பயன் தந்தது?

திருப்பதிகம் இம்மாநிலத்தோர் அனைவருக்கும் விளக்கமும் பெருமையும் அமையநின்று, அவர்தம் உள்ளத்தில் இன்பப் பெருக்காய் அனுபவப் பொருளாகிறது. இது உலக உயிர்களை நோக்கிய செயல். அடுத்தது, திருப்பதிகத்தால் இறைவனை மகிழச்செய்து,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்மகிழ்ச்சியால் அவன் தான் விரும்பித் தங்கியிருக்கும் உயிர்களிடத்தே பொலிந்து சிறக்க வேண்டும் என்ற எண்ணத்தால் அவன் திருச்செவிக்குச் சென்று இன்புறுத்துமாறும் அமைத்தார். அனைத்துயிர்களும் பரம்பொருளைத் துய்த்து மகிழும் நிலையும், பரம் பொருளும் திருப்பதிகத்தைக் கேட்டு மகிழ்ந்து, அம் மகிழ்வால் உயிர்களிடத்தே அருளாய்ப் பொங்கிப் பொலியும் நிலையும் ஆகிய இரண்டு நிலைகளை உடன்கொண்ட பணியே திருப்பதிகப் பெருவழி தந்த பயன். இதனைச் சேக்கிழார்,

''எல்லையிலா மறைமுதல் மெய்யுடன் எடுத்த எழுதுமறை
மல்லல் நெடுந்தமிழால் இம்மாநிலத்தோர்க்கு உரைசிறப்பப்
பல்லுயிருங் களிகூரத் தம்பாடல் பரமர்பால்
செல்லுமுறை பெறுதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து''

என்ற பெரியபுராண 1978 ஆம் செய்யுளில் அமைத்துக் காட்டினர்.

திருஞானசம்பந்தர் அன்புநெறியின் மலர்ச்சியாகிய அருள் நெறியினைத் தொடங்கி, வளர்க்கும் நிலையில் 'பதிகப் பெருவழித் தமிழ்' என்ற தனிநிலையைத் தோற்றுவித்தவராதலின் அது ''தண்ணிர் முத்தாதல்'' என்ற நெறியாயிற்று. தண்ணீராய் நின்ற நிலையே அன்புறுநிலை. முத்தாதல்நிலை அருளுறுநிலை. அருள்நெறியை வளர்க்கும் அருட்குரவர் ஆனமையாலேயே, திருஞானசம்பந்தருக்கு ''முத்துப் பந்தர்'' அளிக்கப் பெறுகிறது. இவ்வகையில் வேணுபுரம் அருள் நெறியை மலர்விக்கும் இடமாய் நின்ற பெருஞ்சிறப்புடையது.

அன்புறுநெறியில் முதல்நிலையாகிய மறைநெறியிலும் ஒலியின் சிறப்புண்டு; அன்புறு நெறியின் இரண்டாம் நிலையாகிய பெரு நெறியில் ஒலியானது இசையென நின்று பெருமையுடன் ஏத்திப்பரவ இடம்தந்தது. அருள் நெறியில் திருப்பதிகச் செந்நெறி என்னும் 'திரு நெறிய தமிழ்' தமக்கும் ஒலியானது தேவை. இம் மூவகைநிலைகளும் வளருதற்கு இறைவன் எழுப்பும் ஒலியானது மூவகைப்பட அமைகின்றன. அவை முறையே,

உடுக்கை ஒலி
திருச்சிலம்பு ஒலி
திருச்சிலம்பு ஓசை

என்று அமைக்கப்பெறும். வேணுபுரத்தின் மூலம், திருச்சிலம்பு ஒலியானது 'திருவைந்தெழுத்து' என்ற பெயருடன் வெளிப்போந்து, திருத்தாளத்து இன்னிசையென இணைந்து, ஞானசம்பந்தப் பெருமான் எழுப்பிய இசையுடன் கலந்து தொண்டாற்றுகிறது.

எனவே ''விண்டலர் பொழிலணி வேணுபுரத்தரன்'' என்ற இரண்டாம் பெயரால், சைவநெறி பெற்ற தனிப்பெருங்கொள்கை என்பது திருவைந்தெழுத்தினை அடிப்படையாகக் கொண்டதாகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருஞானசம்பந்தர் வரலாற்றில் ஞானவாரமுதமுண்ட நிகழ்ச்சியை அடுத்து வருகின்ற அருளியல் கலந்த வரலாற்று நிகழ்ச்சியே, திருக்கோலக்காவில் திருவைந்தெழுத்துப் பொறித்த திருத்தாளம் பெறுதல்.

''கண்ணார் திருநுதலோன் கோலக்
காவிற் கர நொடியால்
பண்ணார்தரப் பாடு சண்பையர்
கோன் பாணி நொந்திடும் என்று
எண்ணு எழுத்தஞ்சும் இட்ட பொற்
றாளங்கள் ஈயக் கண்டும்
மண்ணார் சிலர் சண்பை நாதனை
ஏத்தார் வருந்துவதே''

என்று, நம்பியாண்டார் நம்பிகள் தாம்பாடிய ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியின் 82 ஆம் திருப்பாட்டில், ஞானசம்பந்தர் திருக்கோலக்காவில் பொற்றாளம் பெற்ற நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுக் காட்டியருளினார்.

சிவஞானம் என்னும் பேருணர்வு

சிவஞானசம்பந்தராக விளங்கிய பாலறாவாயர் மூவாட்டைச் சிறுவர். போதையார் பொற்கிண்ணத்து அடிசிலை அருந்திய அந்தநன்னாளின் அடுத்தநாள் திருக்கோலக்காவுக்குச் செல்லுகிறார் பாலறாவாயர். அங்கே, இறைவனைப் பதிகம் பாடி மகிழ்விக்கும் போது, தம்கையால் தாளமமைத்துப் பாடினார். சின்னஞ் சிறிய திருக் கைகள் வருந்தும் என்று உணர்ந்த இறைவன் ஒரு பொற்றாளம் அவர் கையில் வந்து அமையுமாறு அருள்செய்கிறார். பொற்றாளம் கொடுத்ததோடன்றி, அதனுள் திருவைந்தெழுத்தையும் பொறித்து, எடுத்துத்தருகிறார் திருக்கைகள் வலிக்கும் என்பதைக் காரண மாக்கிப் பொற்றாளம் தரும் இறைவர், திருவைந்தெழுத்தினைப் பொறித்துத் தந்தமைக்குரிய காரணம் யாது?

ஞானவாரமுதமுண்டவுடன் எடுத்த திருப்பதிகம் சிவஞானப் பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார், ''எம்மை இது செய்தான் இவன்'' எனக் கூறுமுகத்தான் அமைந்த பதிகம். இது தந்தையின் வினவுக்கு உரிய விடையாக அமைந்ததாதலின் விடைமொழித் திருப்பதிகம் எனலாம். விடை கூறும் அடிப்படையில், சிவஞானத் தால் காணப்பெறும் செம்பொருட்காட்சி விளக்கத் திருப்பதிகம் எனவும் கொள்ளலாம். ஆனால், சேக்கிழார் இப்பதிகத்தை ''மெய்ம்மை மொழித் திருப்பதிகம்'' என்று பெயரிட்டு அறிமுகப் படுத்துகின்றார்.

திருமுலைப்பாலின் தன்மை

திருமுலைப்பாலருந்திய பிள்ளையார் தாம் அருந்திய ஞானப்பால் பற்றிய விளக்கமாகக் கூறுவது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"போதையார் பொற்கிண்ணத்து அடிசில்"

என்பது. பொன்கிண்ணம் இடமாக முலைப்பால் இடத்தில் இருக்கும் பொருளாக அமைகிறது. பின்னர், கிண்ணத்தில் உள்ள முலைப் பாலை இடமாகக் கொண்டு சிவஞானம் அவ்விடத்தில் இருக்கும் பொருளாக அமைகிறது. இறைவியின் திருமுலைத் தடங்களில் ஊறி யமையால், அவைகள் இடமாக, அங்கு இடத்துநிகழ் பொருளாக அமைந்த பால் பொற்கிண்ணத்தை இடமாகக் கொள்கிறது. இவ் வகையில் திருமுலைப்பாலின் தன்மை எது?

உலகமெலாம் ஒலியும் பொருளும் என நின்ற இரண்டன் இணைப் பாக அமைவனவே என்ற கருத்தை,

"சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே"

என்ற அபிராமி அந்தாதியை (28) இணைத்துச்சிந்தித்தால் ஒலியானது பிறந்து வளர்ந்து நின்றநிலை, ஒலியை மூலமாகக் கொண்டு பொருள் தோன்றி வளர்ந்து நின்ற நிலை என்ற இரண்டையும் தன் உடலென நிறுத்தி, அந்நிலையில் கூத்தப் பெருமானுடன் இணைகிருள் உமை யம்மை. எனவே, உமையம்மையின் இருமுலைத் தடங்களும் ஒலியும் ஒலியின் விளைவும், பொருளும் பொருளின் விரிவும் என இரண்டாய் நின்ற பெரும் பிரிவுகளை உணர்த்தின. அப்பிரிவுகளின் உள்ளீடு களை விளக்கிக்காட்டும் அறிவைத் தனக்குரிய பண்பாகப் பெற்று நின்ற தன்மையே திருமுலைப்பாலின் தன்மை எனக் கொள்ளலாம்.

ஒலியும் ஒலியின் விளைவுகளும், பொருளும் பொருளின் விளைவு களும், இவைகளின் இணைப்பும் ஆகியவைகளை உணரும் ஞானமே திருமுலைப்பாலினுல் விளையும் ஞானம் எனக்கொள்ளலாம். இவ்வகை யில் திருவள்ளுவர் எடுத்துக்காட்டும்,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்ற முதற்குறளில் ஒலியின் மூலமும் அதன் விளைவுகளும், பொருளின் மூலமும் அதன் விளைவுகளும் தனித்தனியே நிறுத்திக் காட்டி, இவற்றின் இணைப்பையும் அமைத்துக் கூறியுள்ளதாகக் கொள்ளலாம். இவ்வகையில், உமையம்மை நின்ற நிலையும், இரு பெருந் திருமுலைத் தடங்களில் நின்றூறிய திருமுலைப்பால் நின்ற இருவகை நிலையும், திருவள்ளுவரின் முதற்குறள் நின்ற இருவகை நிலையும் ஒன்றே எனக் கொள்ளலாம்.

அடுத்த நிலையில், சொல்லும் பொருளும் என நின்ற உமை யம்மை நடமாடும் துணைவரைப் புல்லுகிருள். சொல்லும் பொருளும் என நின்ற இருவகை மூலங்களையும் கொண்ட ஒரு திருமுலைப்பால் சிவஞானத்துடன் குழைக்கப் பெறுகிறது. திருவள்ளுவரும் அதே நிலையை மேற்கொண்டு, சிவஞானம் என்ற சொல்லை எடுத்தாள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வில்லையெனினும், 'வாலறிவன்' என்ற ஒருவனை எடுத்துக்காட்டி, முன்னுள்ள இரண்டு நிலைகளில் வந்து இணைந்த அறிவு வாலறிவன் தாளில் ஒன்ற வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

இருநிலையில் நின்ற உமை சிவனுடன் இணைகிறாள். இருமுலைத் தடங்களில் ஊறிய இருநிலைத் தன்மைகள் அமைந்த முலைப்பால் சிவஞானத்துடன் இணைக்கப் பெற்றது. இத்தகைய இணைப்பையே திருவள்ளுவரின் முதல் இரண்டு குறட்பாக்களும் அமைக்கின்றன. இத்தகைய இணைப்பை "இருமையும் ஒருமையும்" எனக் கொள்ளலாம். திருஞானசம்பந்தரின் "திருவெழுகூற்றிருக்கை" வழியில் நின்று கூற முற்படுவோமானால் "இருமையில் ஒருமை". இருமை நிலைகள் தம்மை அழித்துக்கொள்ளவில்லை. இருமையும் இணைந்து சென்று ஒருமையாய் நின்ற ஒன்றுடன் இணைகிறது. திருவள்ளுவர் வாக்கில், இருமையும் இணைந்த நிலையே கற்றவனும் நிலை. கற்றவனும்நிலை வாலறிவன் தாளில் ஒன்றி, வழிபட்டு, அதனை ஏற்க வேண்டும் என்பதே. எனவே, 'இருமையில் ஒருமை' என்று இந் நிலைகளை விளக்கிய ஞானசம்பந்தர் திருவாக்கானது திருமுலைப்பாலில் குழைக்கப் பெற்ற சிவஞானம், அடிசில் என்ற ஒரு பெயரைப் பெற்றாலும், அது 'இருமையில் ஒருமை' என்ற இலக்கணத்துக்கு உரிமையுடையதாகவே அமைந்தது என்று கொள்ளலாம்.

இனி, சிவஞானத் திருமுலைப்பால் உண்ட பிள்ளையார், பாலருவாயர் எனப் பெற்றார். திருமுலைப்பாலை உண்ணவில்லை. அதனுள் குழைத்த சிவஞானம் மட்டுமே அவரால் உட்கொள்ளப் பெற்றது என்று விளக்கம் கூறும் அருளாளர்கள், அக்கருத்துக்களை விளக்கும் முறையில் 'பாலருவாயர்' என்ற பொருள் பொதிந்த பெயரை ஞானசம்பந்தருக்கு அமைத்துக் காட்டுகிறார்கள்.

> சுரந்த திருமுலைக்கே துய்ய சிவஞானம்
> சுரந்துண்டார் பிள்ளைபெ!னச் சொல்லச் — சுரந்த
> தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
> மனமுடையாள் அன்பிருந்த வாறு

என்பது திருக்களிற்றுப் படியார் என்ற சாத்திர நூலின் 54-ஆம் செய்யுள். பொற்கிண்ணத்தை இடமாகக் கொண்டது திருமுலைப் பால். திருமுலைப்பாலை இடமாகக் கொண்டது சிவஞானம். பொற் கிண்ணம் நீக்கப் பெற்றது. திருமுலைப்பால் முன்னர் உமையம் மையை இடமாகக் கொண்டிருந்தது; பின்னர் பொற்கிண்ணத்தை இடமாகக் கொண்டது. மூன்றாம் நிலையில் ஞானசம்பந்தரின் திருவாயை இடமாகக் கொண்டு தங்கி விட்டது. எனவே, திருமுலைப் பால் வாயிலேயே நின்று விட, சிவஞானம் மட்டுமே அவர் உண்டார் என்று விளக்கம் செய்யப் பெற்றது. இவ்வகையில் பாலருவாயர், சிவஞான சம்பந்தராயினர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்லுலகம், பொருளுலகம் அல்லது ஒலியுலகம்பொருளுலகம் ஆகிய இரண்டன் இணைப்பால் வரும் அறிவே முலைப்பால் என்னலாம். இவ்வறிவைக் கற்றல், கேட்டலால் வரும் அறிவு எனக் கொள்ளலாம். அவ்வறிவினரைக் கற்றல் கேட்டல் உடைய பெரியோர் என்று கொள்ளலாம். அவர் வாலறிவைத் தொழ வேண்டும் என்றார் திருவள்ளுவர். இக்கருத்தினை,

"கற்றல் கேட்டல் உடையார் பெரியார் கழல் கையால் தொழுதேத்தப்
பெற்றம் ஊர்ந்த பிரமாபுரம்"

என்று, முதல் திருப்பதிகத்திலேயே, இரண்டாம் திருப்பாட்டில் கூறுவது கொண்டு தெளியலாம். ஒலியாலும் பொருளாலும், ஒலியையும் பொருளையும் கற்றும் கேட்டும் பெற்ற ஞானம் இருமை ஞானம். அதன் முடிவில் சிவஞானம் அமையும் எனக் கொள்ளலாம்.

ஒலிப்பொறியாகிய செவியும், அதன் புறத்தே நிற்கும் அணியாகியதோடு என்ற பொருளும் உடைமைப் பொருளில், கிழமைப் பொருளில் இணைய, அவ்விரண்டன் உடையானாக ஒருவன் உள்ளான். சொல்லும் பொருளும் என வேறுபட்டும், உடைமை உறவால் இணைந்து நிற்கும் உமையம்மையானவள் "தோடுடைய செவி" என நிற்பவளானாள். உமையம்மையால் தழுவப்பெற்ற அதே உடைமை உறவில் சிவன் உள்ளான்.

எனவே, இருமை நிலையில் நின்ற உமையம்மையால் தழுவப் பெற, அதனால் தன்னை உள்ளவனாக்கிக் கொள்ளும் நிலையுடையான் ஒருவன் உண்டு என உமையால் தழுவப் பெற்ற உமைபங்கனை, இருவரும் நின்ற நிலையும் உறவும் விளங்கும் முறையில் எடுத்துக் காட்டிய நிலையைத் "தோடுடைய செவியன்" என்று கொள்ளலாம்.

இனி, ஒலியும் பொருளும் என்ற இரண்டன் இணைப்பாக நின்ற அறிவே அறம். அறமே விடையாக நிற்க, அதன் மேல் அதனால் தாங்கப் பெறுவதால், தங்குபவன் ஒருவன் உண்டு என்று கொள்ளும் வகையில் "விடையேறி" என்று அடுத்த நிலையில் குறிப்பிட்டார் என்று கொள்ளலாம்.

முதல் திருப்பதிகத்தின் பாடல்களுக்கு விளக்கம் கூறுவது நோக்கமன்று. ஞானம் என்பதன் நிலையை விளங்கிக் கொள்ள வேண்டும். ஒலியென, பொருளென நின்ற இருநிலைகள் இணைந்த நிலையில் எழும் அறிவானது, தன் முதிர்ச்சி நிலையில் சிவஞானத்தைப் பயனாகக் கொள்கிறது. திருவள்ளுவர் கூற்றிலும், கற்றதன் பயனாக வாலறிவன் ஆதல் என்ற குறிப்பு இல்லை. வாலறிவனை, வணங்குந் தன்மையையே பயன் என்று கொண்டார். கற்றல் கேட்டலால் விளையும் அறிவினால் சிவஞானத்தோடு தொடர்பு கொள்ள முடியும். கற்றல் கேட்டல் என்பவைகளால் வரும் அறிவு, அறநூல் அறிவு, தத்துவ அறிவு, 'மெய்' என ஒன்று உண்டு என்பதை உணரும் அறிவு. இந்த அறிவால் வாலறிவைத் தொட முடியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விடையினுல் விடையேறியைத் தாங்க முடியும். ஆனுல், விடையினுல் விடையேறியை உணர்ந்து, தெளிந்து, அவன் தன்மையை வெளியிட முடியாது. அவ்வாறே, கற்றல் கேட்டல் அறிவால் வாலறிவனைப் பெற்று நுகர முடியாது. அவனைத் தொட்டு வணங்க முடியும். வாலறிவை உண்டெனக் கொள்ளவும், அதனைச் சென்று தொடுவதற்குரிய வாய்ப்பினைப் பெறவும் துணை செய்வது கற்றல் கேட்டல் அறிவு. இதனைத் *திருவுந்தியார்* என்ற சாத்திர நூல்,

> ''நாலாய பூதமும் நாதமும் ஒன்றிடின்
> நாலாம் நிலையாம் என்று உந்தீபற
> நாதற்கு இடம் அது என்று உந்தீபற''

என்ற 36-ஆம் தாழிசை எடுத்து விளக்குவதைக் காணலாம்.

பொருளும் ஒலியும் இணையும் நிலையில் அமையும் அறிவில் நிற்றலே துரியம் எனப் பெறும் நாலாம் நிலை என்றும் அந்நான்காம் நிலையே நாதனுக்கு உரிய இடம் என்றும் இத்தாழிசை விளக்குகிறது.

சிவஞானம் உண்ட நிலையில் பாலருவாயர் நாலாம் நிலையில் நின்ருர். அது துரியநிலை என்பது சாத்திரத் தொடர். நான்மறைகளையே நான்கு கால்களாகக் கொண்டு விடை நிற்கிறது. நான்மறையே — வேதமே — விடை. அதன்மேல் இருப்பவன் விடையேறி. விடையால் தாங்கப் பெறுகின்றவனேயன்றி, விடையால் உணரப்பெறுபவனே, உணர்த்தப் பெறுபவனே அல்லன் விடையேறி. இதனையே, நான்மறையின் முடிவில் விளங்குபவன் என விளக்கும் முறை உண்டு. நான்மறையின் முடிவில் நின்றதே அவன் முதல்நிலை. இக்கருத்தே ''அந்தம் ஆதி'' எனப் பெற்றது.

மேலே எடுத்துக் காட்டப் பெற்ற சாத்திரத் தாழிசையால் விளங்கிக் கொள்ள வேண்டிய முக்கியக் குறிப்பு ஒன்று உண்டு. நாலாய பூதமும் நாதமும் இணையும் போது நாலாம் நிலை உண்டாம் என்பதில் ஒரு நாதம் இருக்கிறது. ஒலியும் பொருளும் இணைய வரும் அறிவில் நாதம் கலந்திருக்கிறது. கற்றல் கேட்டலால் வரும் ஞானத்தில் 'ஒலி' என்ற ஒன்று உண்டு. ஆனுல், ஒலியும் பொருளும் இணைய நிற்க, கற்றல் கேட்டலால் வரும் அறிவில் ஒலி அமைந்திருப்பினும் கூட, அவ்வொலியின் மூலமாக அமையும் அறிவால் தொட மட்டுமே முடிந்ததாய், துய்த்து முழுமையாய் உணரப் பெருததாய் அமைந்த நாதப்பொருள் ஒன்று உண்டு என்று கூறியுள்ளமையை நோக்குக. நாலாய பூதத்துடன் ஒன்றுவதும் நாதமே. இவைகள் ஒன்ற வரும் நிலையை மட்டுமே இடமாகக் கொண்டு, அதன் மேல் எழும் நாதன் உண்டு என்று குறிப்பிடுவதால் முன்னைய நாதத்துக்கும் பின்னைய நாதத்துக்கும் வேறுபாடு உண்டு எனத் தெரியலாம்.

பொற்கிண்ணம் போல உமை திருமுலைப்பாலும் இடமே. பொற்கிண்ணததை இடமாகக் கொண்டு உமை திருமுலைப்பால் தங்கியது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போல உமை திருமுலைப்பாலை இடமாகக் கொண்டு சிவஞானம் தங்குகிறது எனக் கொள்ள வேண்டும்.

பொற்கிண்ணம் எங்கே? என்ற வினு நமக்குத் தேவையில்லை. திருமுலைப்பால் எங்கே? என்பது தேவையான வினு. அது திருஞான சம்பந்தரின் வாயிலேயே நின்றிருக்கிறது. அதனை இடமாகக் கொண்ட சிவஞானமே பிள்ளையாருக்கு உணவாக அமைந்திருக்க வேண்டும்.

இடம் என நின்றமையால் பொற்கிண்ணமும் திருமுலைப்பாலும் ஒன்றல்ல. பொற்கிண்ணம் கைவிடப் பெற்றது. திருமுலைப்பால் அவர் தம் வாயில் அருமல் இருக்கிறது. திருமுலைப்பாலைத் துப்பி, எச்சில் என்று கழுவி, மாசு என்று துடைத்து அதனை நீக்கி விடவில்லை. அதன் சுவை நாக்கிலேயே படவில்லை என்று சொல்ல முடியாது. தீமை என்று ஒதுக்கப் பெருமல், மேலாக விளையும் சிறப்புப்பயன் ஏதும் இல்லையே என்று வெறுக்கப்பெருமல், இருந்து விட்டுப் போகட்டும் என்ற அளவுக்கு ஒரு ஈடுபாட்டை அத்திரு முலைப்பால் அவர் நாக்கின் மூலம், அவருக்கு உணர்த்தியிருக்க வேண்டும். திருமுலைப்பாலை முழுமையாக அனுபவித்தது நாக்கு என்றே முழுமையாக வெறுத்து விட்டது என்றே சொல்ல முடியாது. இரண்டும் ஓரளவு தொடர்பு கொண்டுள்ளன. நாக்கு என்ற உறுப்பு அதனைச் சுவைத்து ஈடுபாடு கொள்ளவில்லையென்ருலும் சிவஞானத் தோடு தொடர்பு படுவதற்குரிய கருவியாக வந்ததே என்ற வகையில் ஒருவகை ஈடுபாடு கொண்டு, அந்த ஈடுபாட்டைத் தன் தலைவனும் ஏற்குமாறு செய்துள்ளது.

திருமுலைப்பால் ஒலியும் பொருளும் இணைந்த இரு தன்மைகளைக் கொண்டது ஆயினும், அது உமையம்மையையோ, ஒலியையோ, பொருளையோ முழுமையாகக் காட்டாது. காரணகாரிய அமைப்பைக் காணும் முறையைக் கற்றுத் தரும். ஒலியும் பொருளும் இணைந்தன; ஒலியின் பரிணுமங்களும், பொருளின் பரிணுமங்களும் இணைந்தன. இருவேறு இணைப்புகள். எனவே, இரு முலைத் தடங்கள். அவை களைத் தாங்கியவள் இருமையின் இணைப்பாய் நின்ற ஒருமை நிலையினள். இருமுலைத் தடங்கள் மூலம் வெளிப்பட்டு இணைந்த முலைப்பாலானது இருமை இணைந்த ஒருமையால் விளையும் அறிவு என இவ்வாறு அமைத்துக்கொள்க. உமையென நின்ற உலகத்தைக் காரண காரிய முறையில் அறிய உதவும் தன்மையுடைய முலைப்பா லறிவானது காரண காரிய முறை எனப் பெறும் அறிவு முறையிற் காண உதவுமேயன்றி, நேர்க் காட்சி முறையிலோ, சுவையனுபவ முறையிலோ ஒலி, பொருள் ஆகியவைகளைக் காண உதவாது.

இந்நிலையில், ஒரு முக்கிய வினுவை எழுப்ப வேண்டும். சொல்லும், பொருளும் எனநின்ற உமையானவள் திருமுலைப்பாலை அளித்தாள். அவளே சிவஞானத்தையும் குழைத்துக் கொடுத்தாள் என்னில், கற்றலும் கேட்டலும் என இருமையில் நின்ற அறிவால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவஞானத்தைக் குழைத்து கொடுக்க முடியுமோ! என்ற வினவும் விளக்கமும் அமையச்சிந்தித்தல் வேண்டும்.

உயிரனுபவமும் சிவானந்தானுபவமும்

கற்றல், கேட்டல் நிலையில் அமையும் ஒலி, பொருள் ஆகியவை பற்றிய அறிவானது முழுநிலையை எய்தி நிற்கும்போது, அவ்வறிவு நிலையையே உயிரானது தன்னிலையில் முழுமை பெற்று நின்றநிலை எனவும் உயிரானது நாலாம்நிலையாகிய துரியநிலையில் நிற்கிறது எனவும் பேசப்பெறுகிறது. அந்நிலையில் நின்ற உயிரானது சிவத்தை இணைந்து நிற்கிறது. முன்னே குறிப்பிடப்பெற்ற அறிவால் முழுமை பெற்று நின்ற உயிரானது ஒன்றல் அற ஒன்றுதல் என்ற முறையில் சிவத்தோடு இணைந்து, சிவத்தை அறிகிறது, சிவஞானம் பெறுகிறது. இந்நிலையில் உயிரானது சிவத்தைத், துவிதநிலையில் நின்று காண்ப தில்லை. ஒருவகை அத்துவிதநிலையில் இணைந்து நிற்கும் இணைப்பினால் சிவஞானத்தை அறியும் இயல்புடையதாகிறது. இதனை,

''உணராதே யாதும் உறங்காதே உன்னிப்
புணராதே நீ பொதுவே நிற்கில்''

என்று *திருக்களிற்றுப்படியார்* 30ஆம் வெண்பா விளக்குகின்றது. இதனை,

''ஒன்றுடன் இரண்டென விதண்டையிடு மிண்டரொடும்
ஒன்றல் அற நின்ற நிலையே
உன்னல் அற உன்னும் நிலை இன்னது என என்னுடைய
உள்ளுணர உள்ளும் மதியே''

என்றும்,

''தத்துவ நிலைகள் தனித்தனி ஏறித்
தனிப்பர நாதமாம் தலத்தே
ஒத்த தன்மயமாம் நின்னை நீ இன்றி
உற்றிடல் உயிரனுபவம்''

என்றும், வடலூர் வள்ளல் இராமலிங்கசுவாமிகள், ஆளுடையபிள்ளை யார் அருள்மாலையின் முறையே 11, 12 ஆகிய திருப்பாடல்களிற் குறித்து விளக்கியுள்ளார். இது ஒருவகையில் 'அண்மைநிலை நிற்றல்' என்ற உயிரனுபவம். இதனால் விளைவது அவனிலையும் என்னிலையும் அந்நியமிலை என்ற உணர்வும், தனது செயல் எனது செயல், தன துடைமை எனதுடைமை என்ற இணைப்புநிலை அறிவும் உண்டாகும். சிவனறிவைத் தன்னறிவாக, சிவன் செயலைத் தன் செயலாக, சிவனுரையைத் தன்னுரையாக ஏனையோர் அறியும் வகையில் அறிவு செயல், பேச்சு முதலியவை நிகழும். இதனைச் சிவயோகம் என்றும் கூறுவர். இங்கே, உள்ளம் முதலிய அனைத்தும் ஒடுங்கியிருக்கும்.

உயிரானது சார்ந்ததன் வண்ணமாக இயங்கும் தன்மை யுடையது என்ற கருத்தினை உளங்கொண்டு நோக்கினால், சிவத்தைச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சார்ந்து நின்ற உயிரானது, சிவனுடைய குணம் முதலியவைகளை அப்படியே பிரதிபலிக்கும். அப்போது சிவனுரையை அப்படியே வெளிப்படுத்தும். சிவனுரையே ஆன்மாவின் மூலம் வெளிப் படுவதாகிறது. இந்நிலையில் எழும் உரையையே வழிமொழி என்றும் தனதுரை எனதுரை என்றும் விளக்கிக் கூறுவர். இந்நிலையைச் சேக்கிழார்,

> "திருமறை நம்பர்தாம் முன்பு அருள் செய்த அதனைச் செப்பும்
> ஒருமையில் நின்ற தொண்டர்"

என்ற பெரியபுராண 2495 ஆம் செய்யுளால் விளக்குகிறார்.

இங்கே குறிப்பிடப்பெற்ற இந்நிலையில் உயிரானது சிவத்தின் அணிமையில் நிற்கிறது. அணிமையில் உள்ளவைகளை அப்படியே பிரதிபலிக்கிறது. உயிரும் உடன் உள்ள கருவிகளும் தற்செயலற்று ஒடுங்கியுள்ளன. உயிரானது சிவத்தின் அணிமைத்தாய் நிற்றலின் காரணமாக எழும் அனுபவத்தை மட்டுமே பெறுகிறது. சிவத்துடன் இணைந்த அனுபவம் பெறவில்லை.

ஞானப்பாலுண்ட நிலையில், திருஞானசம்பந்தர் பெற்ற அனுபவம் வேறானது. கற்றல் கேட்டல் என்பவைகளை அடிப்படை யாகக் கொண்ட ஞானம்—முலைப்பால் ஞானம் நாவளவில் நிற்க, அதனுள் கலக்கப்பெற்ற சிவஞானம் உயிரை அடைந்து, அதனைச் சிவத்துடன் இணைந்து நிற்குமாறு செய்தது. அணிமையில் நின்ற நிலை வேறு; இணைய நின்ற நிலைவேறு. அணிமையில் நின்றபோது உள்ளதை அப்படியே பிரதிபலித்தல் என்ற நிலையே உண்டா யிற்று. உள்ளதைப் பிரதிபலிக்கும் நிலையில் உயிரும், உடன்நின்ற கரணங்களும் எத்தகைய அனுபவத்தையும் எய்தவில்லை.

திருஞானசம்பந்தர் 'விடையேறி' என்பதை எடுத்துக் காட்டியது போல, திருவள்ளுவர் வாலறிவன் நற்றாளில் இணைய நிற்றல் என்று கூறியதுபோல, திருமுலைப்பாலை இடமாகக்கொண்டு உள் சென்ற சிவஞானம், திருஞானசம்பந்தராம் உயிரைச் சிவத்துடன் தொட்டுக் கொண்டு நிற்கும் நிலையை உண்டாக்கியது. இந்நிலையில் சிவம் அனுபவப் பொருளாயிற்று. ஞானப்பாலருந்தியபின் சிவஞான சம்பந்தரானார், பின்னர் சிவசம்பந்தரானார். இதுவே சிவபோகம் எனப்பெற்றது. இந்நிலையில் திருஞானசம்பந்தரின் ஞானம் (உயிர் ஞானம்) சிவஞானத்தில் கலந்தது. சிவஞானம் வியாபகம்; திரு ஞானசம்பந்தரின் ஞானம் சிவஞானத்தில் அடங்கிய வியாப்பிய ஞானம். சிவத்துடன் இணைந்த சிவபோகம் அனுபவ நிலையாக அமைந்தது.

திருஞானசம்பந்தர் என்ற உயிரின் உள்ளே அமைந்த சிவபரம் பொருள் தன்னுண்மை நிலையில் பெருகத் தொடங்கியது. உயிரின் உட்புறப் பகுதி முழுதும் சிவம் பெருகிற்று. உயிர் என்ற எல்லைக் கோடு இப்போது சிவஞானமயமாக நின்றது. சிவம் உயிர் என்ற எல்லைக்கோட்டின் வெளிப்புறத்திலும் பெருகியது. உயிர் ஞானமாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நின்று சிவானந்த இன்பம் பெறுதலால் சிவானந்தம் உடம்பிலும் பரவியது. மேலும் ஐம்புலன்களில் நிரம்பி நின்றது. பின்னர் உலகில் எங்கும் அதுவே பரந்தது. இந்நிலையில் சிவானந்த அனுபவத்தை உயிர் பெற்றது; உடம்பும் பெற்றது; ஐம்புல அளவிலும் அந்த இன்ப அனுபவம் நிரம்பி வழிந்தது. இந்நிலையைப் "பேருணர்விற் பொலிதல்" என்று குறிப்பிட்டார் சேக்கிழார்.

"உணர்வின் நேர் பெறவருஞ் சிவபோகத்தை
ஒழிவின்றி உருவின்கண்
அணையும் ஐம்பொறி அளவினும் எளிவர
அருளினை போற்றி"

என்ற பெரியபுராண 2064 ஆம் திருப்பாட்டிலும்

"பண்ணார் பதிகத் திருக்கடைக் காப்புப் பரவி
உள்நாடும் என்பும் உயிரும் கரைந்துருக்கும்
விண்ணாயகன் கூத்து வெட்ட வெளியே திளைத்துக்
கண்ணார் அமுதமுண்டார் காலம் பெற அழுதார்"

என்ற பெரியபுராண 2066 ஆம் திருப்பாட்டிலும் சேக்கிழார் கூறிய சிவபோக அனுபவ நிலையைத் தெளிய உணர வேண்டும். இவ்வனுபவம் உள்ளிருந்து வெளிவந்து பரவும் தன்மையது. உயிரின் உள்ளேயும் சிவம் விரிந்தது. உயிர், எலும்பு ஆகிய அனைத்தையும் தாக்கி உருக வைத்தது. பின்னர் ஐம்பொறிகள் வரையிலும் வந்து நின்று, அங்கெல்லாம் அந்த உடம்பின் கருவிகரணங்களும் சிவானந்தத்தில் திளைக்குமாறு செய்தது. இதனைத் திருஞானசம்பந்தரே தாம் பாடிய தில்லைத் திருப்பதிகத்தின் எட்டாந் திருப்பாட்டில்,

"வேயினார் பணைத்தோளியோடு ஆடலை
வேண்டினாய் விகிர்தா உயிர்கட்கு அமுது
ஆயினாய்"

என்று குறிப்பிட்டு, பின்னர்,

"செல்வ நெடு மாடம் சென்று சேண் ஓங்கிச்
செல்வ மதிதோய, செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ் தில்லைச் சிற்றம் பல மேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே"

என்ற, 'கற்றாங்கெரியோம்பி' எனத் தொடங்கும் தில்லைத் திருப்பதிகத்தின் ஐந்தாம் திருப்பாட்டில், சிவபோக இன்ப விளைவைத் தெளிவுற விளக்கிக் காட்டியுள்ளார். முதலில் எடுத்துக் காட்டிய பாட்டில் "உயிர்கட்கு அமுது ஆயினாய்" என்பது சிவபோக அனுபவ மொழியே. அடுத்துக் காட்டிய திருப்பாட்டில், தில்லைத் தலத்தில் உள்ள மாளிகைகள் உயர்ந்து செல்லும் செல்வத்தைப் பெற்றன. அச்செல்வத்தால் நிறைமதியைத் தொட்ட ஒன்றே பெருஞ்செல்வமாயிற்று. செல்வம் உயர்ந்து பரந்தது. மாடமேயன்றி, மாடத்துக்கு உரியவரும் செல்வரானார். மதியின் செல்வத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாடம் தொட்டது. மேன்மேல் உயரும் செல்வமாதலின் மாடத்தைச் செல்வமாக்கி அதனை உடைய மக்களைச் செல்வராக ஆக்கி, அவர் வாழ்கின்ற தில்லையைச் செல்வமுடையதாக்கி, அத்தில்லையில் அமைந்த சிற்றம்பலத்தைச் செல்வமாக்கி, செல்வச் சிற்றம்பலத்தில் தங்கியிருக்கும் பெருமானும் செல்வனுகின்ருன் என்று குறிப்பிட்டரு ளுவது சிவானுபவ இன்பம் பெருகி உயர்ந்து, அனைத்தையும் இன்பானுபவங் கொள்ளச் செய்கிறது என்பதாம்.

உயர்ஞானத் திருமொழி

முதலில் உயிரின் அகத்தே ஊற்றென ஊறிப் பரவிப் பெருகிய சிவானுபவம் பின்னர் உயிரையும் அனுபவமுறச் செய்து, அடுத்த நிலையில் புறம் வந்து, உடம்பையும் ஐம்பொறிகளையும் சிவானுபவம் துய்க்கச் செய்தது. இந்நிலையைப் 'பேருணர்வின் பொலிகின்ற பிள்ளையார்' என்று கூறினர். சிவஞானமே பேருணர்வு எனப் பெற்றது. சிவானந்தம் பொலிவை உண்டாக்கியது. சிவஞானமும் சிவபோகமும் இணையநின்று அனுபவமாயின. அந்நிலையில், அவர் பேச முற்பட்ட மொழியை

"உள்நிறைந்து பொழிந்து எழுந்த உயர் ஞானத் திருமொழி"

என்று குறிப்பிட்டார், சேக்கிழார். மேலும், திருப்பதிகம் தொடங்கும் நிலையில்,

"எல்லையிலா மறைமுதல் மெய்யுடன் எடுத்த எழுதுமறை
மல்லல் நெடுந்தமிழால்"

பாட முற்பட்டார் என்று கூறிய சேக்கிழார்,

'செம்மை பெற எடுத்த திருத் "தோடுடைய செவியன்" எனும்
மெய்ம்மை மொழித் திருப்பதிகம்'

என்று, அம்முதற்பதிகத்தைச் சிறப்பித்தருளுகின்ருர். இங்கே குறிப் பிட்ட சேக்கிழார் வாக்குக்கள் மூன்றும் முறையே பெரியபுராணத்து 1977, 1978, 1979 எண்ணுடைய திருப்பாட்டுக்களாம்.

உயர் ஞானத் திருமொழி என்பது சிவஞானத்தால் விளைந்த மொழி எனக் கொள்ளவேண்டும். அது எழுதாமறை மொழியன்று. அது வளமைமிக்க நீண்ட தமிழ் என்று குறிப்பிட்டார். உயர்ந்தும் பெருகியும், உள்ளிருந்து வெளிவந்து உடம்பும் உடம்பில் உள்ள அனைத்து அணுக்களும் சிவானந்தப் பேரின்ப அனுபவம் பெறு மாறு, செய்ததாதலின், சிவமே, அனுபவத்துக்குரிய வளமையாக நின்றது. அதனையே, தில்லைப் பதிகத்தில், "செல்வம் உயர்கின்ற செல்வம்" என்று குறிப்பிட்டார் திருஞானசம்பந்தர். சிவமாம் வளமை கொண்டு, வளரும் அனுபவம் ஆதலின் அது பேரின்பம் என்னும் பொருளில் 'நெடுந்தமிழ்' எனப் பெற்றது. இத்தகைய இன்பம் விளைதற்கு எடுத்த ஒலிகள் இரண்டு. எல்லையில்லா மறை யின் முதல் — 'ஓ' என்ற ஒலி. எழுது மறையில் எடுத்த மெய்—"த்"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்ற ஒலி. முன்னது உயிரொலி, பின்னது மெய்யொலி, மெய்யை இடமாகக் கொண்டு உயிரொலி நின்றது. உயிரொலியானது மெய் யொலியை ஆதாரமாகக் கொண்டது. 'ஓ' என்ற பிரணவ மறையின் முதல் ஒலியானது 'த்' என்ற ஒலியை உடன்கொண்டு எழுந்த நிலையில் தகரவித்தையை உணர்த்தியது. உயிரானது தகராலயம். உயிரானது ஞான அம்பலமாக நிற்க, அதனுள் சிவம் இன்பப் பொருளாக இணைந்து நின்ற நிலை. உயிரானது ஞான அம்பலம். அதனை உணர்த்தும் எழுத்து "த்" என்பது. அதனுள் இன்பப் பொருளாக நின்ற சிவம் 'ஓ' என்ற ஒலியாக அமைந்தது. இவ்விரண் டொலியின் இணைப்பே, உயிரும் சிவமும் இணைந்த இணைப்பு. பெருமான் உயிரை இடமாக அமைத்துக் கொண்டு, அங்கே வந்து தங்கி, முதன்முதலில் தன்னை இணைத்துக் கொண்டான். இக்கருத்தே "பெம்மான் எம்மான்" எனப்பெற்றது. அவன் உயிரைத் தேடி வந்து, உயிரை இருப்பிடமாகக் கொண்டு, உள்ளே தங்கி, தன்னை உயிரோடு இணைத்துக் கொண்டான். அந்நிகழ்ச்சி அவன் உயிர்கள் மேல் வைத்த அருளால், அவன் வந்து இணைந்ததை எடுத்துச் சொல்லுவதே. அவன் வந்து உயிருடன் இணைந்து இன்பம் தந்த நிலையை எடுத்துச் சொல்லுவதே தமிழ் என்பதாயிற்று. இப்பதிகத்தை 'மெய்ம்மை மொழித் திருப்பதிகம்' என்று குறிப்பிட்டார். உயிரானது சிவத்தின் அண்மையில் நின்று பிரதிபலித்த நிலையில், அவனுரை யைத் தனதுரையாக வெளிப்படுத்திய மொழியன்று. உயிரும் சிவமும் இணைந்து துய்த்த இன்ப வெளிப்பாட்டு மொழி என்பதால் அம் மொழி "மெய்ம்மை மொழி" எனப் பெறலாயிற்று.

பூதத்தில் ஒன்றிய ஒலியும் நாதமும்

உலகைச் சொல்லுலகம் பொருளுலகம் என்று பிரிப்பர். அவை களையே ஒலியும் பொருளும் எனவும் பிரிக்கலாம். தத்துவக் குறி யீட்டுச் சொற்களால் குறிக்க முற்படும்போது நாதம், விந்து என்று பிரிப்பர். இவை இரண்டும் ஐந்து, ஐந்தாகப் பிரியும். ஐந்து, ஐந்தாகப் பிரியும் ஐந்து பகுதிகளாக, ஒலி பொருள் ஆகியவை களின் இணைப்பு அமையும்.

பொருளின் பிரிவு ஐந்தாகும். மண், நீர், தீ, காற்று, வான் என ஐந்தாய் நிற்கும். இங்கே குறிப்பிடப்பெற்ற ஐந்து பொருள்களுக்கும் தனித்தனிப் பண்புகள் உண்டு.

மண்ணுடன் இணைந்தது மணம்; நீருடன் இணைத்து சுவை; தீயுடன் இணைந்தது ஒளி; காற்றுடன் இணைந்தது ஊறு எனப்பெறும் தொடுதலறிவு; ஆகாயத்துடன் இணைந்தது ஒலி. இவற்றுள் முன்னே நின்ற நான்கு பொருள்களையும் அவற்றின் இணைந்த மணம் முதலிய வைகளையும் அறியலாம். ஆகாயம் என்ற ஒரு பருப்பொருளை நாம் எந்த வகையிலும் அறிந்து ஏனைய நான்கு பொருள்களைப்போல ஒரு தனிப் பொருளாக ஏற்க இயலவில்லை. ஆனால், ஒலி என்ற ஒரு புலனை நாம் காதுகளால் அறிகிறோம். மணம் என்ற புலனறிவுக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உரிய மூலங்களை ஏற்று நிற்கும் மண்போல, சுவையறிவுக்கு நீரும் ஒளியறிவுக்குத் தீயும், தொடுதலறிவுக்குக் காற்றும் பொருள் மூலங்களாக அமைகின்றன. அவ்வாறே ஒலியறிவுக்கு உரிய பொருள் மூலம் எது? ஒலியறிவுக்கு உரிய பொருள் மூலம் ஒன்று இருக்க வேண்டும். ஒலியறிவு இருப்பதால் அதற்கென ஆகாயம் என்ற ஒரு பொருள் மூலத்தை உண்டு என ஒப்பவேண்டியுள்ளது. பொருளை நான்கெனவும், புலனறிவுப் பிரிவுகளை ஐந்து எனவும் கொண்டவர்களும் உண்டு. புலனறிவு ஐந்தாக நிற்பதை அனுபவித்துக் காண்பதால், அவைகளுக்கு மூலமாக உள்ள பொருளும் ஐந்தே என்று கொள்வது தமிழக மரபு.

அடுத்து, உலகப் பொருள்களை எடுத்துக் கொண்டால் எந்த ஒரு பொருளிலும் இங்கே குறிப்பிடப் பெற்ற ஐந்து பொருள்களும் கலந்திருக்கும். நிலம், நீர், தீ, வளி, வான் என்பவைகளைத் தனிப்பொருள்களாக நாம் பார்க்க இயலாது. நாம் பார்க்கும் நிலம் என்பது பாதிப் பங்கு நிலமும் அடுத்த பாதியில் ஏனைய நான்கு பொருள்களும் கலந்த கலப்பு நிலத்தையே பார்க்கிறோம். இவ்வகையில், ஐம்பொருள்களும் கலப்பு முறையிலும் இணைகின்ற இணைப்பாகவே உலகப்பொருள்கள் இருக்கின்றன. இதனைத் தொல்காப்பியர்,

> "நிலம் நீர் தீ வளி விசும்போடைந்தும்
> கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"

என்றார். பின்னர் ஒலியும் அவ்வாறே ஐந்து பிரிவுகளில் மாற்றம் பெறுகிறது. இருதிணைகளைக் குறிக்கும் ஒலியாக, பின் ஐந்து பால்களைக் குறிக்கும் ஒலியாக மாற்றங் கொள்கிறது. பொருளும் ஐந்தாக விரிந்து பல்வேறு வகையான உலகப் பொருள்களாக அமைகிறது. ஒலியும் அவ்வாறே ஐந்தாக விரிந்து பல்வேறு வகையான பொருள்களையும் குறிக்கும் சொல்லொலியாக மாறி அமைகிறது. இவ்விரண்டும்—பொருளும் ஒலியும்—முறைப்படி இணையவேண்டும். அத்தகைய இணைப்பின் மூலமாகத்தான் ஒருவன் பொருளைத் துய்க்கவும் அறிவைப் பெறவும் இயலும். இவ்விரண்டாலும், இவ்விரண்டன் இணைப்பிலும் ஒருவன் பெறுவது அறிவு.

உலகப்படைப்பு என்ற தத்துவ அமைப்பை உடன்கொண்டு நோக்கினல் கூத்தப் பெருமான் உடுக்கையை அசைத்து ஒலியெழுப்புவதன் மூலமே படைத்தல் நடை பெறுகிறது.

கூத்தப் பெருமானின் உடுக்கையமைந்த திருக்கையின் மூலம் படைப்பு; அபயம் கொடுக்கும் முறையில் அமைந்த திருக்கையின் மூலம் காத்தல்; அனலேந்திய திருக்கையின் மூலம் அழித்தல்; முயலகன் மேல் ஊன்றிய திருவடியின் மூலம் மறைத்தல்; தூக்கிய திருவடியின் மூலம் அருளல். இவைகளை,

> "தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
> சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஊன்றுமலர்ப் பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப் பதத்தே நாடு''

எனவும்,

''மாயை தனை உதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கி அருள் தானெடுத்து — நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானமுத்தல்
தானெந்தை யார்பரதந் தான்''

எனவும் அமைந்த உண்மை விளக்கம் என்ற நூலின் 35, 36ஆம் வெண்பாக்களால் அறியலாம்.

நீத்தார் பெருமையை அமைக்கும் திருவள்ளுவர் விரிந்து வந்து ஒருவனுக்கு அனுபவமாக அமைகிற சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தையும் வகைப்படுத்தியும் தொகைப்படுத்தியும் ஆய்ந்தறிந்து, அவைகளில் விழ்ந்து, அவைகளுக்கு அடிமை யாகாமல், அவைகளைத் திறமறிந்து தம் ஏவலர்களாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அப்படி அமைத்தவன் எவனோ, அவன் கீழ் உலகு தங்கியிருக்கும் என்றும் கூறுவதை,

''சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்றைந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு''

என்ற திருக்குறளிற் காணலாம். மேலே கூறிய ஐந்தும் உலகை அடிமைப்படுத்துகிறது. அவ்வைந்தையும் திறனறிந்து, அவைகளைப் பணிய வைக்கும் வகை தெரிந்து, செயற் படுத்தி விட்டால், அவன் உலகையே தன்னுள் அடக்கியவனாக அமைகிறான். அவ்வைந்தையும் அடக்க முற்படும்போது அவன் தன்னுடைய ஆற்றலால் அடக்க முற்படுவது உண்டு. அது மட்டுமன்றி, தனக்கு மேலே அமைந்த உயர்பொருளினோடு இணைந்து, அத்தகு பேராற்றல் மூலமாக அடக்குவதும் உண்டு. அவன் தனக்கு மேலுள்ள பேராற்றலுடன் இணைந்து நிற்கும் இணைப்புக்கு ''மறை'' என்று பெயர். பேராற்றலுடன் இணைந்த நிலையில், பேராற்றல் தரும் ஆணையின் வண்ணம் சில மொழிகளைப் பேசும் நிலை பெறுவான். அத்தகைய பேச்சுக்கள் ஆணைவழி அமைந்த பேச்சுக்கள். அது மட்டுமேயன்றி, அப்பேச்சுக்களும் 'நிறை மொழி' என்ற பெயரைப் பெறும்.

''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப''

என்று தொல்காப்பியரும்,

''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்''

என்று திருவள்ளுவரும் எடுத்து விளக்குவாராயினர். நிறை மொழி என்பதே சேக்கிழார் வாக்கில் 'மெய்ம்மொழி' என்றும், 'தழைத்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மொழி' என்றும் பேசப் பெறும். இந்நிலையிற் பேசும் பேச்சினையே "ஆணை நமதே" என்று சுட்டிக் காட்டிப் பதிகங்களில் அமைத்தார் திருஞானசம்பந்தர்.

உலகத் தோற்றத்துக்கு அடிப்படையான பருப்பொருள்கள் நிலம், நீர், தீ, வளி, வான் என்ற ஐந்து எனக் கொண்டாலும், மாற்றமுறும் நிலை முதல் நான்கற்கு மட்டுமே உண்டு. நாற்றம், சுவை, ஒளி, ஊறு என்ற நான்கும் முறையே நிலம், நீர், தீ, வளி என்ற நான்கையும் பொருந்தி நிற்கும். நிலம் அல்லது மண் என்பதுதான் நாற்றம் என்பதாக, மணம் என்பதாக மூக்கில் அனுபவப் பொருளாகிறது. 'மண்' என்ற பருப்பொருள் மணமாக நம் மூக்கில் அனுபவப் படுத்தப் பெறுகிறது. இவ்வாறே, சென்றல் 'வான்' என்பதே ஓசை என்பதாக நம் செவியில் அனுபவப்படுத்தப் பெறுவதாகக் கொள்ள வேண்டும். ஆனல், 'ஓசை' என்பது அனுபவப்படுகிறதே யொழிய அதன் மூலமாகிய 'வான்' என்ற ஒன்று இருக்கிறது என அறிய இயலவில்லை. ஓசை இருப்பதாக அனுபவப் படுவதால் 'வான்' என்ற ஒன்று இருக்க வேண்டும் என ஏற்கிறேம். இவ்வகையில், பருப்பொருள் ஐந்து எனக் கொண்டு, அவைகளின் கலப்பினல் உருவாவதே உலகப் பொருள் எனக் கொள்கிறேம். அனுமானத்தால் உண்டு எனக் கொண்ட 'வான்' மாற்றங்களுக்கு உட்படுவதாக நாம் ஒப்ப முடியவில்லை. ஓசை மாற்றமுறுவதால் வானும் மாற்றமுறும் எனக் கொள்ளலும் அனுமானமே. 'வான்' என்பது நிரந்தரமாய் நிற்கும்; நிறைந்து நிற்கும். ஏனைய நான்கு பருப்பொருள்களும் வானத்தில் அடங்குமாறு இடங் கொடுக்கும். அவ்வாறே ஏனைய பருப்பொருள்களிலும் வானம் இருக்கும். எனவே, பருப்பொருள் ஐந்து எனக் கொண்டாலும், மாற்றமுறும் வகையில் நான்கு பருப்பொருள்களே கொள்ளப் பெறுவது ஒருவகைத் தத்துவ விளக்கம்.

'ஓசை' என்ற அனுபவப்படுபொருள் மாற்றம் பெறுதற்கு ஏற்ப 'வான்' என்ற பருப்பொருள் மாற்றம் கொள்ளாத் தன்மையது ஆதலின், ஓசையின் மாற்றங்களுக்கு வேறு ஒரு 'நாதம்' மூலமாக அமைகிறது. எனவே, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தனுள் உள்ள ஓசையானது, சுவை முதலியவைகளை ஒப்ப நின்ற ஒன்று, அதனை உள் நின்று இயக்கும் ஒன்றே 'நாதம்' எனப் பெற்றது. இந்த நாதம் ஓசையோடு மட்டும் கலந்து இயக்கும் என்று கொள்வதில்லை. இது. ஐந்தாகப் பிரிந்து நின்று முதல் நான்கு பருப்பொருள்களிலும், ஓசையிலும் கலந்து நிற்கும். இக்கருத்தையே

"நாலாய பூதமும் நாதமும் கலத்தல்"

என்று, **திருவுந்தியார்**, 36ஆம் தாழிசை கூறியது.

'ஓம்' எனும் மூலவொலியெனும் 'நாதம்' ஐந்தாக விரிந்து, விரிந்த அந்த ஐம்பிரிவாகிய நாதத்தின் நேர் ஒலிகளாக 'ந.ம.சி.வ.ய' என்ற ஐந்தும் அமைகின்றன. 'ஓம்' என்ற ஓரெழுத்தே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நமசிவாய என்ற ஐந்தெழுத்தாகின்றது. பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்களுமாக நின்று பிறந்த ஓசைகளால் உலகப் பருப் பொருள் அனுபவப்படுபொருளாக அமைதல் போலவே, 'ஓம்' என்பதும், அதன் விரிவாம் ஐவகை ஒலியும், அவ்வொலியால் விரியும் பொருள்களும், அவைகள் அடங்கிய உலகமும் ஒன்று உண்டு. அவ்வுலகமும் நமக்கு அனுபவப்படும் உலகமே.

முன்னதை இம்மை என்றும், பின்னதை அம்மை என்றும் கூறு வது வழக்கு. தத்துவக் குறியீடுகளில் இவ்விரண்டையும் முறையே இகம், பரம் என்பர். இதனை,

''இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடுதல்''

என்று, வடலூர் வள்ளல், வேண்டுகோள் என்ற தலைப்பில் உள்ள 9ஆம் திருப்பாட்டினிற் கூறுகின்றார்.

முன்னது அன்புறுநெறி; பின்னது அருளுறு நெறி.

நிலம் முதலாய ஐந்தும், மணம் முதலாய ஐந்தாக மூக்கு முதலிய ஐந்திடங்களில் அனுபவப்படுதல் அன்புறு நிலையால் அமைந்த உலகியல், இக அனுபவம். இக அனுபவத்துக்கு மூலமாய மூக்கு முதலிய ஐந்து இடங்களையே இடங்களாகக் கொண்டு பர அனுபவம் நம்மால் அனுபவிக்கப்பெறும். அருளுறு நிலை அனுபவ மாகிய பர அனுபவம் ''நமசிவய'' என்ற ஐந்தாக விரிந்து, மூக்கு முதலிய ஐந்திடங்களில் தங்கி அனுபவிக்கப் பெறும். அன்புறுநிலை அனுபவத்துக்காக அமைந்த நிலம் முதலிய பொருள்களின் மாற்றங் களால் அமைந்த அதே இடங்களில் அருளுறுநிலை அனுபவம் வந்து பதியும்போது, அந்த இடம் தூய்மையாக்கப்பெறும். அருளனு பவத்துக்குரிய நாதமே 'நமசிவய' என்று வந்து ஒன்றுகின்றது. இதுவே, இகத்தே பரத்தைப் பெறுதல். அன்புறுநிலை அனுபவம் பெற்ற உயிர் இப்போது அருளுறுநிலை அனுபவம் பெறுகிறது. இடம் இந்த உடம்பே.

அருளுறுநிலை அனுபவத்துக்குரிய நாதமும், அன்புறு நிலையில் அமைந்த பருப்பொருள் மாற்றத்தால் விளைந்த ஓசையும் இணையும். இதனையே ''நாலாய பூதமும் நாதமும் ஒன்றுதல்'' என்பர்.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தும் இருவகைப் படும். அன்புறுநிலை வகை ஒன்று; அருளுறுநிலை வகை ஒன்று. இரண்டன் வகை தெரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் இக பர அனுபவங்களில் உள்ள வேறுபாடு தெரியும். இகநிலை அனு பவத்துக்குரிய அமைப்புக்களிலேயே நாம் பரநிலை அனுபவத்தைப் பெறுவதால், இரண்டன் வேறுபாடுகளை அறிதல் தேவை. வேறுபாடு தெரிந்த போது உயர்ந்ததில் தாழ்ந்ததை அடக்குவர். ஐந்தடக்கல் என்பதற்கு, இகநிலை அனுபவத்தை, பரநிலை அனுபவம் மேலோங்கு மாறு செய்து அதனுள் அடக்குதல். அருள்நிலைச் செயற்பாட்டில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்புநிலைச் செயற்பாடு அடங்கி விடுகிறது. அன்புறுநிலை அனுபவம் உயிரனுபவம். அருளுறுநிலை அனுபவம் சிவானுபவம். சிவம் அனுபவப்படும் நிலையே பரம். சிவானுபவம் பெருகுமாறு உயிர் தாழ்ந்து நிற்கும் முறை.

இந்நிலையில் 'நாதம்' என்பதே — அருளுறுநிலையில் விளையும் இன்ப நிலையாக அமைவதே — சிவம் தாமே உயிர்களின் போகமாக விளையும் பொற்புறு நிலையாக அமைவதே 'ஆணை' எனப் பெற்றது. 'ஆணை' என்பது 'மறைமொழி' எனப் பெறுதலுக்குக் காரணம், சிவானுபவ மொழி என்றோ அருளுறு நிலையில் நின்றதால் விளையும் பேச்சு என்றோ வேறு பட்டுணர முடியாமல், அன்புறு நிலையில் நின்ற காலத்து எழும் பேச்சுப் போலவே அதுவும் பேசப் பெறுதலே. அருளுறு நிலையில் அன்புறு நிலை மறைந்திருக்க, அதுவே இதுவாக, அல்லது அவ்வுரையே இவ்வுரையாக, அவனுரை எனதுரையாக ஒன்றனுள் ஒன்று மறைந்த நிலையில் வெளிப்படுதலின் 'ஆணையிற் கிளந்த மறைமொழி' என்று தொல்காப்பியரும் திருவள்ளுவரும் கூறியிருக்கும் நுட்பம் உணர்தல் வேண்டும்.

இங்கே உயிர் சிலம்பாக, அதன் உள்ளிருக்கும் ஒலியானது தானே வெளிப்பட்டு வெளியே வருகிறது. சிலம்பிலும், சிலம்பின் வெளியேயும் கேட்கப் பெறும் ஒலியை இயக்குவது உள்ளிருக்கும் பரல்கள். அவை மறைந்துள்ளன.

வேணுபுரத்தரன் என்பதை வேள்+நூபுரத்து+அரன் எனக் கொண்டு, விரும்பப்பெறும் சிலம்பினையுடைய அரன் எனப் பொருள் செய்து, உள்ளிருந்த சிவம், அருளுறு நிலைக்குரிய நாதத்தை— 'நமசிவய' என்ற ஒலியை வெளிப்படுத்துகிறது. 'நமசிவய' என்பது நாதம். அதனை விளைவிப்பவன் நாதன். இது அருளுறு நிலை. இதையே மாணிக்கவாசகர் தம் முதன் மொழியாக அமைத்து

"நமசிவாய வாஅழ்க, நாதன் தாள் வாஅழ்க"

எனத் திருவாசகத்தைத் தொடங்கினர் எனக் கொள்க.

சொல்லையும் பொருளையும் இணைத்து, கற்றல் கேட்டல் முறைகளால், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புலன்களின் அனுபவ நெறிகளால் அறிவைப் பெறுதல் உலகியல் முறை. இம் முறையில், ஐம்புல வழிகளில் அனுபவம் மேற்கொளல் அறிவு அமைவதற்குரிய காரணமாக அமைகிறது என்பதை யாரும் மறுக்க இயலாது. ஆனல், ஐம்புல வழிகளிலே இச்சை வளர்ந்து, முடிவில் ஐம்புலன்களுக்கு அடிமையாகிவிடும் நிலையே அமைந்துவிடுகிறது. ஐம்புல வழிகளைத் தன் வயப்படுத்தி, அடிமையாக்கி, அவைகளை நம் விருப்பப்படிச் செயற்படுத்தி, அனுபவித்து அறிவைப்பெறும் நிலையே நல்ல நிலை என்று கருதப்பெற்றது. இவ்வகை அருமைப் பணியை முதற்படியாக அமைத்துச் சமுதாயப் பணியை ஆற்ற முற்பட்டது 'திருநெறிய தமிழ் நெறி'.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'திருப்பதிகப் பெருவழி' என்பது சிவபோகத்தில் எழுந்த சிவானந்தத்தால் உள்ளிருந்து வெளிப்படும் உயர் ஞானத் திருமொழியை —மல்லல் நெடுந் தமிழ்மொழியைக் கருவியாகக் கொண்டது. திருப்பதிகப் பெருவழி என்பது திருநெறிய தமிழ் என வெளிப்படுகிறது. ஆனால், அது, திருஞானசம்பந்தரின் அகத்தே விளைந்த சிவ போகத்தை அடிப்படையாகக் கொண்ட மெய்ம்மொழியே. அம் மொழியானது கேட்கும் மக்களின் செவியை வழியாகக் கொண்டு அவர்களின் உள்ளத்திற்பட்டு, பின்னர் உயிரிற்படுகிறது. அது பேருணர்வுப் பெருமொழி. நிறைமொழி. ஒருணர்வு மொழி. ஆனால், கேட்கும் மக்களுக்கு அம்மொழியானது, ஞானசம்பந்தப்பெருமான் அகநிலையில் பெற்ற அதே சிவபோகத்தை உண்டாக்கினால் தான், அவர்களும் அத்தகைய உண்மை அனுபவத்தைப் பெறமுடியும். திருஞானசம்பந்தரைப் பொறுத்தவரையில் அகத்திலிருந்து புறத்தே வந்த மொழி. ஆனால் செவிமடுக்கும் பொதுமக்களைப் பொறுத்த வரையில் அது வெளியிலிருந்து உள்ளே போகும் மொழி. எனவே, ஒருணர்வு மொழியாக, பேருணர்வு மொழியாக வெளிவந்த ஒன்று, கேட்போரின் ஐம்புலன்களிலும் சென்று ஐந்தாகப் பிரிந்து பதிய வேண்டும். ஐம்புலன்களில் சிவானந்த அனுபவத்தைப் பதிய வைத்தலோடு, அங்கே முன்பிருந்த ஆசை, மயக்கம் ஆகியவைகளை அகற்றவேண்டும். ஐம்புலன்களில் பிரிந்து நின்று அனுபவம் தந்த பின்னர், உட்சென்று ஒருணர்வாய் நின்று உயிரனுபவமாக அமைய வேண்டும். அ்தற்கேற்ற முறையில், திருப்பதிகங்களுக்குத் தாள ஒத்து அமைக்க வேண்டிய நிலை உண்டாகிறது. தாளம் என்ற முறையில் ஒத்தி அறுப்பதால், ஒருமைப் பேருணர்வாகச் செல்லும் திருப்பதிகத் தமிழிசை ஐந்து புலன்களிலும் பிரிந்து தங்கி, அனுபவத்தைக் கொடுத்து, அங்குள்ள அறிவின்மையை அகற்றும் பணியை மேற்கொள்கிறது. இத்தகைய திருநெறியதமிழ்ப் பணியை உளங்கொண்டு தாளம் இறைவனால் கொடுக்கப் பெறுகிறது. அத்தாளத்தில் 'நமசிவய' என்ற ஐந்தெழுத்துப் பொறிப்பு அமைந்துளது.

சிவபோகம் பேரானந்த அனுபவம். பிரிவுபடாத—இடையறவு படாத பேரின்பம். அதனால், பேருணர்வு என்ற ஒருமைப் பேரறிவு அமைகிறது. அவ்வாறே 'நமசிவய' என்பதும் ஒருமையிற் பொலியும் பெருமைப் பேருணர்வுக்கு மூலமாகிய, ஆணையிற் கிளந்த மறைமொழியே. பிளவு படாத ஒருமையும் நிறைவும் உடைய மொழியே. ஆயினும், அது ஐந்தென விரிந்து நின்று ஐம்புலன்களில் பதிய வேண்டியும், ஐம்புலன்களின் அழுக்கை நீக்கிப் பணியாற்ற வேண்டியும், ஐந்தெழுத்தாக அந்த ஒருமைமொழியின் வடிவம் பொறிக்கப்பெற்றது. திருப்பதிக இசை திருவைந்தெழுத்தால் ஒற்றி, அறுக்கப்பெறுகிறது. ஒற்றுவதால் புலன்களில் இன்பம் நிரப்பப் பெறுகிறது. வரையறை முறையில் தொடர்ந்து செல்லும் பதிக இசையை அறுப்பதால் அது சென்று சாரும் ஐம்புலன்களின் அழுக்கை அறுப்பதாகிறது. இவ்வடிப் படையிலேயே திருவைந்தெழுத்துப் பொறித்த பொற்றாளம் திருஞானசம்பந்தருக்கு உலகவர் காணுமாறு வழங்கப்பெறுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருஞானசம்பந்தர் வரலாற்றையும் திருப்பதிகங்களையும் தாமும் அருளாளராயிருந்து, நுட்பமாக உணர்ந்த காரணத்தால் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகள் பல அரிய விளக்கங்களை எடுத்துக் கூறியருளுகிறார்கள். அவைகளுள் ஒன்று, திருத்தாளம் பெற்ற வரலாறு பற்றியது. *ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை* என்ற நூலின் 21ஆம் கண்ணியினை இங்கே காணலாம்.

" .... —பின்னைத்தென்
கோலக்கா விற்றாளம் பெற்றிக் குவலயத்தில்
மாலக்காலத்தே .... மாற்றினான் "

என்ற இக்கண்ணியின் இரண்டாம் வரியானது (இரண்டு அசைகள் இருக்கலாம்) சிதைவுற்றுள்ளது. எனினும், பொருளுணரும் நிலை இருக்கிறது. திருக்கோலக்காவில் தாளம் பெற்று, இவ்வுலகில், உயிர்கள் கொண்டிருக்கும் மயக்கத்தை, அக்காலத்திலேயே மாற்றியமைத்துத் தொண்டாற்றினார் திருஞானசம்பந்தர் என்று கொள்ளக் கிடக்கிறது. 'அக்காலத்தே' என்று குறிப்பிடுவதன் நோக்கம் சிறு பிள்ளையாக இருந்த அக்காலத்திலேயே, உலக உயிர்கள் முன்னேற்றம் கருதித் தொண்டு செய்ய முற்பட்டு விட்டார் என்பதே. திருத்தாளம் பெற்று ஒத்தறுத்துப் பாட முற்பட்டது என்பது சிறு குழந்தையின் திருக்கைகள் வருந்தும் என்பதையோ, தாளம்வைத்து ஒத்தறுத்துப் பாடினால்தான் திருப்பதிக இசை செழுமையாகஇருக்கும் என்பதையோ காரணமாகக் கொண்டதன்று. திருத்தாளத்தால் ஒத்தறுத்துப் பாடுவது உலகத்துயிர்களின் மயக்கத்தை நீக்கும் அல்லது அறியாமையை நீக்கும் திருத்தொண்டை அடிப்படையாகக் கொண்டது என்பது நம்பியாண்டார் நம்பிகளின் திருவுள்ளக் குறிப்பினால் அமையும் விளக்கம் எனக்கொள்ள வேண்டும். மேலும், நம்பியாண்டார் நம்பிகள் தாம்பாடிய *ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்* 9ஆம் திருப்பாட்டில்,

" பண்டமுது செய்ததுமை நங்கையருள் மேவு சிவஞானம்
பைந்தரள நன்சிவிகை செம்பொனணி நீடுகிற தாளம்
கொண்ட தர னும்பர்பரனெங்கள் பெருமா னருள் படைத்துக்
கொடுத்த தமிழைத் தவகுலத்தவர்களுக்கு உலகில் இன்பம்
கண்டது "

என்று கூறுவதைக் கொள்ளலாம். 'முத்துச்சிவிகையும் பொற்றாளமும் கொண்டது, திருவருள் படைத்துக் கொடுத்த திருநெறிய தமிழை உலகத்தவர்களுக்குத் துன்பம் நீங்கி, இன்பம் அமையுமாறு கருதிக் கொடுப்பதற்காகவே' என்பது அப்பாடல் வரிகள் அமைக்கும் பொருள். பேருணர்வில் ஒன்றாய் வெளிப்படும் அருளின்ப வெளியீடாம் தமிழை, உலகத்தவர் தம் ஐம்புலன்களில் முன்னமேயே அமைந்த அறியாமை அல்லது மயக்கம் என்னும் துன்பத்தை நீக்கி; இன்ப ஏற்றம் பெற வைத்துத் துய்க்கும் வகையில் செய்யப்பெற வேண்டிய தொண்டுக்கு உதவும் முறையி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லேயே பொற்றுளம் பெறும் நிகழ்ச்சி அமைகிறது என்று கூறுகிறுர். எனவே, பொற்றுளத்தில் அமைந்த திருவைந்தெழுத்தே, திருநெறிய தமிழால் விளையும் சிவப்பேரின்பத்தை, உலக மக்கள் தத்தம் ஐம் புலன்களில் இயல்பாக அமைந்திருந்த அறியாமை அல்லது துன் பத்தை நீக்கியும், இன்பத்தை அனுபவிக்குமாறு ஆக்கியும் பணி செய்கிறது எனக் கொள்ளவேண்டும். எனவே, ஐம்புலன்களின் மாசுநீக்கி, அவைகளைப் பேரின்பம் துய்க்கத் தகுதியுடையவை களாக ஆக்குவதே திருவைந்தெழுத்தின் பணி என்று கொள்ள வேண்டும். இதனை நம்பியாண்டார் நம்பிகள்

"உறுகின்ற அன்பினேடு ஒத்திய
தாளமும் உள்ளுருகிப்
பெறுகின்ற இன்பமும் பிறைநுதல்
முண்டமும் கண்டவரை"

என்று, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி 34ல் எடுத்துக்காட்டினுர்.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தின்மேல் அமைந் துள்ள ஆழமான மோகத்தினை வெவ்வேறு வகைகளால் கடக்க முற் படுகிறுர்கள். கடக்கவும் செய்கிறுர்கள். அவ்வாறு கடந்தவர்கள் இறைவன் திருவடியை அடையமுடியவில்லை. அது மட்டுமன்று. தொடரவும் முடியவில்லை. அவனேடு ஒரு தொடர்பைக் கூட அமைத்துக்கொள்ள முடியாதவர்களாக ஆகின்றுர்கள். ஆனல், திருஞானசம்பந்தருக்குத் தொண்டராக அமைந்து விட்டால், அவர் கள், பொன்னியல் பாடகக் கிண்கிணி ஒலிக்கும் பாத நிழலில் தங்கி யிருப்பவராவர் என்று கூறி, இறைவன் திருவடியைப் பொன்னியல் பாடகக் கிண்கிணிப் பாதம் என அடைமொழி விளக்கம் தந்து, நாத வொலியை எழுப்பும் சிலம்பொலியைக் கேட்டு, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தன் பகுதிகளிலும் நிலைத்துத் தங்கியிருந்த மோகமெனும் குற்றத்தை நீக்கி, குற்றம் நீக்கப்பெற்ற அந்த ஐந்தன் மூலமாகவே அருள்நெறி அனுபவங்களைப் பெற்றுக் கொண்டிருப்பர் என விளக்கினுர். இவ்வுரைகளை நாம் உணரும் வகையில், நம்பி யாண்டார் நம்பிகள் ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில் 5ஆம் திருப்பாட்டினை அருளிச் செய்கின்றுர்கள். அதுவே கீழ்வரும் பாட்டாகும்.

"மன்னிய மோகச் சுவை ஒளி
ஊறு ஓசை நாற்றம் என்றிப்
பன்னிய ஐந்தின் பதங் கடந்
தோர்க்குந் தொடர்வரிய
பொன்னியல் பாடகக் கிங்கிணிப்
பாதநிழல் புகுவோர்
துன்னிய காவமர் சண்பையர்
நாதற்குத் தொண்டர்களே."

இத்தகைய அருள்நெறியை அனுபவப்படுத்தும் பணிக்காகவே அருளப்பெற்றது ஐந்தெழுத்துப் பொறிப்புடன் அமைந்த பொற்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ருளம். அருள் நெறியை இவ்வுலகில், மண்ணுலக மக்களுக்கு அனுபவப் பொருளாக அமைத்துக் கொடுக்க வந்த அருள் நெறித்தலைவர், அருள் நெறியில் முதலரசு இயற்றிய துரையாதலின், திருஞானசம்பந்தருக்கு, **முத்துச் சிவிகை அருளப்பெற்றது** என்றும் கொள்ள வேண்டும்.

திருஞானசம்பந்தருக்குப் பொற்றுளம், முத்துச் சிவிகை, குடை, சின்னம், முத்துப்பந்தர் முதலியவைகளை இறைவன் அமைத்துக் கொடுத்ததன் நோக்கம், அருளுறு நெறியின் இயல்பு, அதனை நிலை நாட்டிட வந்த குரு, அருளுறு நெறி நிலை அனுபவங்கள் ஆகியவைகளை உயிர்கள் உணர்ந்து துய்ப்பதற்காகவே. இவைகள் திருஞானசம்பந்தரால் கேட்கப்பெற அளிக்கப் பெற்றவைகளல்ல. திருஞானசம்பந்தருக்குத் திருக்கோலக்கா இறைவன் பொற்றுளம் கொடுத்த போது, உலக மக்கள் தம் கண்களாற் காணுமாறு, அந்நிகழ்ச்சியை அமைத்துக் காட்டினான் இறைவன் என்று நம்பியாரூரர் போற்றுகின்றார். இதனை,

"நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்
 ஞானசம்பந்தனுக்கு உலகவர் முன்
தாளம் ஈந்து அவன் பாடலுக் கிரங்கும்
 தன்மையாளனை என்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாட நின்றாடும்
 அங்கணன் தனை எண்கணம் இறைஞ்சும்
கோளிலிப் பெருங் கோயிலுளானைக்
 கோலக் காவினிற் கண்டு கொண்டேனே"

எனவரும் திருப்பாடலால் நம்பியாரூரர் உளமுருகிப் போற்றிப் பரவுவதை அறியலாம்.

திருச்சிலம்பொலி

'ஓம்' என்பது பிரணவம். 'நமசிவய' என்பது விரிவுப் பிரணவம்; முன்னது ஓரெழுத்து; பின்னது ஐந்தெழுத்து. இவை அருள் நெறி அனுபவத்துக்கு மூலமாக நின்ற நாதம்.

நிலம் முதலிய பருப்பொருட் கலப்பில் வரும் ஓசை வேறு, நாதம் வேறு. முன்னதற்குக் காரணம் உடுக்கை ஒலி; பின்னதற்குக் காரணம் திருச்சிலம்பொலி. அது ஊன்றிய திருப்பாதச் சிலம்பின் மூலம் வெளிவருவதால் அன்புறு நிலையில் அமைந்த சுவை, ஒளி முதலியவைகளின் குற்றத்தை, பாசத்தை நீக்கி, அருளனுபவம் பெற வழிவகுத்தது. எனவே, பாச நீக்கமும், அருளனுபவமும் பெறுதற்கு என, எழும் ஒலியே ஊன்றிய மலர்ப்பதத்தின் அமைந்த திருச்சிலம்பொலி.

திருஞானசம்பந்தப் பெருமான் திருப்பதிகம், இவ்வொலியுடன் இணைந்த மறைமொழியாக வந்து, அனைவர் உள்ளத்திலும் நிறைந்து அருளனுபவத்தை விளைவித்தது எனலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருத்தொண்டர் வரலாற்றில், சேரமான் பெருமாள் நாயனார் இத்தகைய சிலம்பொலியை நாளும் கேட்கும் பேறு பெற்றவராகிறார். அதுவே, மூல ஒலியாதலின், உலகத்தில் வாழும் எல்லா உயிர்களின் ஒலியையும் அறியும் ஆற்றலை இதனால் அவர் பெற்றார் என அறியலாம். அவ்வாறே, ஆனாய நாயனார் அருளுறுநிலை அனுபவத்தை அனைத் துயிரும் பெற்றுத் துய்க்குமாறு செய்வதற்காக, திருவைந்தெழுத் தொலியைக் குழலொலியுடன் கலந்து கொடுத்தார். குழலும் மூங்கிலால் அமைக்கப்பெறுவதே. மூங்கிலிலிருந்து எழும் ஓசையானது திருவைந்தெழுத்தொலியை இணைத்துக் கொள்ளும் நிலையிலமைந்த ஒலி என்ற இணைப்பை எடுத்துக்காட்டி, திருஞானசம்பந்தர் திருவைந் தெழுத்தின் பெருமையினை எடுத்துக் காட்டும் முறையில் விளைந்த சைவப் பெருநெறியை வேணுபுரத்துடன் இணைத்துக் காட்டினார்.

ஊன்றிய மலர்ப்பதத்தின் அமைந்த திருச்சிலம்பிலிருந்து வெளிப்படுவது நாதவொலி, திருச்சிலம்பொலி. தூக்கிய திருவடியில் அமைந்த திருச்சிலம்பிலிருந்து வெளிவருவது திருச்சிலம் போசை.

திருச்சிலம்பொலி சிவபோகம் காரணமாக எழுந்த சிவ ஞானத்தை அனுபவமாக்கும். சிவஞானசம்பந்தர் என்பதன் உட் பொருளைத் தழுவியது. தூக்கிய திருவடிச் சிலம்பிலிருந்து வெளி வருவது திருச்சிலம்போசை. அது சிவானந்தப் பெரும் பேரின்ப அனுபவநிலையாகவே விளங்குவது.

திருச்சிலம்பு ஒலியை எடுத்துக்கூறிய பதிகமே பஞ்சாக்கரத் திருப்பதிகம். திருச்சிலம்பு ஓசையை எடுத்து வெளிப்படுத்திய திருப் பதிகமே நமச்சிவாயத் திருப்பதிகம்.

> திருச்சிலம்பு ஓசைவழியே சென்று
> நிருத்தனைக் கும்பிடு என்று உந்தீபற
> நேர்பட அங்கே நின்று உந்தீபற

என்பது, *திருவுந்தியாரின்* 17ஆம் தாழிசை. உடுக்கையொலி, திருச்சிலம்பொலி, திருச்சிலம்போசை என்ற மூன்றன் விரிவுகளை, எம்நிறுவன வெளியீடாகிய *திருமுறைத் தெளிவே சிவஞான போதம்* என்ற நூலின் 15-21 பக்கங்களிற் கண்டு கொள்க.

இத்தலைப்பினுள் அமைந்த கருத்துக்களின் தொகுப்பு

திருஞானசம்பந்தர் தாம் பாடிய திருப்பாட்டுக்கள் அவைகளில் அமைத்த செய்திகள் ஆகியவைகளைப் பதிகந் தோறும் தொகை யாக்கிச் சொல்லும் முறைமையினை மேற்கொண்டிருந்தவர் என்பதும், ஒலிமாலை, கலிக்கோவை, ஒலிகெழுமாலை என்று எடுத்தாளும் தொடர்கள், பாட்டுக்களைத் தொகைப்படுத்திச் சொல்லும் நெறியினை விளக்க வந்தவைகள் என்பதும், ஒரு பதிகத்தில் எத்தனைக் கருத்துக்கள் சொல்லப் பெற்றன என்று அவைகளுக்குத் தொகை கொடுத்துச் சொல்லுதலும், ஒவ்வொரு கருத்துக்கும் எத்தனை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எத்தனைத் திருப்பாட்டுக்கள் சொல்லப் பெற்றன என்று வரையறைப் படுத்திக் கூறுவதும் ஞானசம்பந்தரின் பதிக அமைப்பு முறைகள் என்பதும், அவ்வாறு தொகைப்படுத்தல் வகைப்படுத்தலேயன்றி, இப்பதிகத்தினை யான் இன்ன நெறியில் நின்று சொன்னேன் என்று கூறிவிளக்கும் முறையையும் மேற்கொண்டிருந்தார் என்பதும், சுற்றும் முற்றும் ஆயினான், நல்லோர் நற்றுணை, பெருந்தன்மை ஞான சம்பந்தன் போன்ற தொடர்கள் அவைகளுக்கு எடுத்துக் காட்டா வன என்பதும், 'தண்ணீர் முத்தாதல்' என்ற கொள்கையை மலர் விப்பது வேணுபுரம் என்பதும், குற்றம் நீக்குதல் குணம் கூட்டுதல் என்ற அடிப்படையில் இறைவன், நெறி, திருவைந்தெழுத்து ஆகிய வைகள் விளக்கம் பெறுகின்றன என்பதும், பிரமாபுரம் வேணுபுரம்; பெம்மான் எம்மான்; ஒரு பொருளின் இரு திறங்களாகிய இயல், இசை; இரவுபகல்; அருமை பெருமை; மறைநெறி பெருநெறி; வட சொல் தமிழ்ச் சொல்; வடம் என்பது ஆலவிதை, அதை ஒத்த தத்துவச் சொற்களே வடசொல், அவைகளை இசையாக்கியும் பெருமை பேசித் துய்த்து நிற்கவும், அவ்வாறே பிறரை ஆக்கவும் அமையும் சொற்களே தமிழ் என்பதும், இவை இரண்டும் உணரவும் உணர்த்தவும் பயன்படுவன என்பதேயன்றி மொழிகளை அடிப்படை யாகக் கொண்டனவல்ல என்பதும், அந்தமாய் நின்ற மறைநெறி, ஆதியாய் நின்ற பத்தியால் ஏத்தும் பெருமைநெறி, என்ற இரண்டும் அன்புநெறியே, அதன் பின்னர் வருவதே அருள்நெறி எனப் பெறும் திருநெறியத் தமிழ் என்பதும், இம்மூன்றுயும் நின்ற இறைவன் ''அந்தமாய் ஆதி நடு ஆனான்'' என்று ஞானசம்பந்தரால் உணர்த்தப் பெறுகிறான் என்பதும், இம்மூவகை நெறிகளுக்கும் உரிய ஒலிகளின் அமைப்பாக உடுக்கை ஒலி, திருச்சிலம்பு ஒலி, திருச்சிலம்பு ஓசை என்ற மூன்றும் அமைகின்றன என்பதும், இடை நின்ற திருச்சிலம்பு ஒலியின் விளக்கமே திருத்தாளத்தில் அமைத்த ஐந்தெழுத்து அமைப்பு என்பதும், அருளனுபவமாகிய சிவானந்த அனுபவம் உள் நின்று வெளிப்போந்து, ஐம்புலன்கள் அளவும் வந்து தங்கி அனுப வம்பெறும் என்பதும், நாலாய பூதமும் நாதமும் ஒன்றுதல் என்பதன் பொருள் இது என்பதும், நிறைமொழியும் மறைமொழியும் தரும் பொருள் இவை என்பதும், இவற்றை இணைக்க வந்த மணிவாசகத் தொடரே ''நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாஅழ்க'' என்று கொண்டு, திருவைந்தெழுத்துப் பொறித்த திருத்தாளத்தால் ஒத் தறுத்தல் என்பது சிவானந்தப் பெரும் பேரின்பத்தைத் திருப்பதிகத் தமிழில் தரும் போது, ஐம்புலன்கள் அவ்வனுபவத் தமிழை நன்கு துய்ப்பதற்கு ஏற்ற வகையில் ஐம்புலன்களில் அமைந்த குற்றம் நீக்கிக் குணம் கூட்டும் கொள்கைக்காகவே என்பதும் இத்தலைப்பில் இணைத்து விளக்கப் பெற்ற செய்திகளாம்.

திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகளும், சேக்கிழார் பெரு மானும் அருளாளர்களே. திருப்பதிகம் தொகுத்தது முதலாக, திருத் தொண்டத்தொகை எனப்பெறும் ஏழாந்திருமுறைப் பகுதியை மிகவும் மனமுருகிப் போற்றியமை ஈறாக, பல செய்திகளை நம்பியாண்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

டார் நம்பிகள் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரையே குருவாக அமைத்துக்கொண்டு, உபதேச நிலையில் கேட்டறிந்த பெருமை யுடையவர். நம்பியாண்டார் நம்பிகளுக்குக் காலத்தால் பிற்பட வந்த சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர்களின் வரலாற்றில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். மேலும், அமைச்சராகப் பதவி யிலிருந்தவர். திருவருள் வலத்தால் தமக்குக் கிடைத்த மெய்ம்மை மொழியாம் 'உலகெலாம்' என்பதைவைத்தே பெரிய புராணத்தை அருளிச் செய்கிறார்.

இருபெருந்தகைகளும் ஞானசம்பந்தரை வேறுவேறு கோணங் களில் பார்க்கிறார்கள். இருவேறு கோணங்களில் ஞானசம்பந்தரை நமக்கு விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். நம்பியாண்டார் நம்பிகளை விட வாய்ப்பு அதிகம் உண்டு சேக்கிழாருக்கு. அவ்வாறே சிக்கலும் உண்டு. நம்பியாண்டார் நம்பிகள் தமக்குப் பிடித்த செய்திகளை மட்டும் விளக்கிவிட்டு ஏனையவைகளை ஒதுக்கிவிடலாம். ஆனால், சேக்கிழார் வரலாறு சொல்ல வேண்டியவர். நம்பியாண்டார் நம்பி களிடத்தில் ஏன் இவர் இதைச் சொல்லவில்லை என்ற வினா எழாது. சேக்கிழாரிடத்தில் அவ்வினா எழும்.

வரலாற்றைச் சொல்வது என்பது விளக்கநிலை விஞ்ஞான வகையைச் சாரும். இது இப்படி இருந்தது என்ற வகையில் அமையும் விளக்கமே இருப்புநிலை விஞ்ஞானம் எனப்பெறும் வர லாற்றமைப்பு நூலுக்குப் போதுமானது. ஆனால், நம்பியாண்டார் நம்பிகள் திருஞானசம்பந்தர் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு உயர்நிலை விஞ்ஞான வகையைச் சார்ந்த விளக்க நூல் களைப் படைத்தவர். அவருடைய பொறுப்பு ஞானசம்பந்தர் செயல் களை மதிப்பீடு செய்து பாராட்டுவதுடன் மக்கள் வாழ்க்கை இன்ன வகையில் உயர்நிலை பெற வேண்டும் என்ற கொள்கையை வகுக்க வேண்டுவதும் ஆகும். அத்தகைய அடிப்படையில், சிலவற்றை விமரிசனப் போக்கில் அமைத்துக் காட்டுவது அவர் மேற்கொண்ட பணிக்குத் தேவையான ஒன்று. அவ்வகையில் ஞானசம்பந்தரை அவர் "பதிகப் பெருவழியைத் தமிழால் நாட்டியவர்" என அமைத் துக் கொண்டு விளக்கம் செய்கிறார்.

இருவர் பணிகளையும் இணைத்த முழுமை நிலையில் ஞானசம்பந் தரை நாம் அறிய முடிகிறது என்றாலும், இருவரும் மேற்கொண்ட நெறிகளில் நின்றும் நாம் ஞானசம்பந்தரை உணர்ந்து கொள்ளுதல் இன்றியமையாது வேண்டப்படுவது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. புண்டரிகத்தவன் மேவிய புகலி

இடம்பெற மலர்ந்த புனித வாயினர்

திருஞானசம்பந்தரைப் பலவேறு கோணங்களில் ஆராய்ந்து கண்டு, அனுபவித்து மகிழ்ந்த அருளாளர்கள், அறிஞர்கள் பலர். அவரவர் நோக்கங்களில் அமையும் இன்பப் பயனாக அவரவர் உள்ளங்களில் குருவாந் தன்மை பெற்று விளங்கித் தோன்றியவர் திருஞானசம்பந்தர். எனவே, தம்மை நினைபவர் யாவராயினும், அவர் தம் உள்ளங்களெல்லாம் தமக்கே உரிமையுடைய இடமென அமையுமாறு, அந்தந்த உள்ளத்தின் நிலைமைக்கு ஏற்ப, மலர்ந்து பயன்தரும் தூய்மையினர். *திருக்களிற்றுப்படியார்* என்ற நூலானது,

"தம்மிற் சிவலிங்கம் கண்டதனைத் தாம் வணங்கித்
தம்மன்பால் மஞ்சனநீர் தாமாட்டித்—தம்மையொரு
பூவாக்கிப் பூஅழியா மற்கொடுத்துப் பூசித்தால்
ஓவாமை யன்றே உடல்"

என்ற 44ஆம் வெண்பாவினுல் ஓர் உண்மையைத் தெரிவிக்கிறது.

பூசித்தல் அல்லது பூசை செய்தல் என்பதற்குப் பூ, செய்தல் (பூ+செய்—பூசை) என்று பொருள் கொண்டு, புறத்தே உள்ள இறைவன் திருவுருவத்துக்குப் புறத்தே மலர்ந்திருக்கிற பூவைப் பறித்துக் கொண்டுபோய், அத்திருவுருவின் மேல் இட்டு வழிபாடு செய்தல் என்று பொருள் காணுதல் ஒருவகை. ஒருவன் தன்னுள் சிவலிங்கம் இருப்பதைக் காணவேண்டும்; தம்முடைய அன்பையே நீராகக் கொண்டு அந்த சிவலிங்கத்துக்குத் திருமுழுக்காட்ட வேண்டும், பூவானது அழியாமல் கொடுத்துப் பூசிக்கவேண்டும் என்று கூறுவது வேறுவகை.

தம்மிற் சிவலிங்கம் கண்டமையால் ஞானசம்பந்தரானுர். அதன் மேல் வைத்த அன்பால் அழுதார். காலம்பெற அழுதார். அழுதமையால் உண்டாய கண்ணீர் திருமஞ்சன நன்னீராயிற்று. இவ்விரண்டும் செய்தால் மட்டுமே, பூ செய்ததாக அமைந்துவிடாது. தம்மை ஒரு பூவாக்கி அழியாமற் கொடுத்தார்.

தன்னுள் நின்ற பரம்பொருள், சிவபோகமாய் மலர்ந்து இன் புறுத்த முற்படும்போது, திருஞானசம்பந்தர் தம்மைப் பூவென நிறுத்தினர். பூ அழியாமற் கொடுத்த புனிதத்தன்மை எவ்வாறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று கேட்கலாம். தம்முடைய உயிரைப் புறஇதழாக்கி, உடலை அகஇதழாக்கினர். உயிரானது அகஇதழாக அமைந்தால் சிவபரத் தெள்ளமுதை அவர் நுகர்ந்திருக்க முடியும். நுகர்ந்தால் பூத்தன்மை அழிந்துபோகும். தன்னுள் பொங்கிப் பரவும் சிவானந்தத் தேனை, அப்படியே ஏற்றுப் புறநிலையாம் உடம்புக்குக் கொண்டு வந்தார். அந்தத் தேனை வண்டுகள் வந்து உண்ணவேண்டும். ஆனல், வண்டு இருக்கும் இடங்களுக்கே சென்று அந்தத் தேனை அவைகளுக்கு உணவாக அமைக்கவேண்டும். வண்டுகளை நாடிச் சென்று தேன் சொரிந்தார்.

இவ்வுவமையில் மூன்று செயல்கள். தம்மிற் சிவலிங்கம் காணுதல்; கண்ணீரைத் திருமஞ்சனத் திருநீராக்குதல்; தம்மைப் பூவாக்கிக் கொடுத்தல்.

பிரமப் பெரும் பொருள் தம்மை நோக்கி வந்து தம்முடன் ஒக்க இருத்தலை உணர்தல் என்பதே தம்மிற் சிவலிங்கம் காணுதல். 'பிரமபுரத்துப் பெம்மான் எம்மான்' என்ற முதல் நெறியின் விளக்கமே முதற் செயல்.

தண்ணீர் முத்தாதல் வேணுபுரத்துச் செயல். கண்ணீரைத் திருமஞ்சன நன்னீராக்கினர். இது இரண்டாம் நெறியை விளக்க முற்பட்ட செயலாகும்.

மூன்ருவது பூவாதலும் பூ செய்தலும். பூம்புகலி காவலனுர் எனப்பெறும் திருஞானசம்பந்தர் தம்மைப் புண்டரிகத்தவனுக ஆக்கி, சிவானந்தத் தேனைத் தமக்கே அமுதமாக்காமல், திருப்பதிகப் பெருவழி என்னும் திருநெறியத் தமிழ்த் தேனுக அனைவருக்கும் கொண்டு போய்ப் பொழிந்த வள்ளல் ஆனுர். இதனை ஒட்டியே வீட்டின்பம் அனைவருக்கும் வழங்கும் நிலை அவருக்கு உண்டாயிற்று. இச்செயலை, நினைந்து நினைந்து ஆராத அன்பினுல், இப்படி ஒரு வள்ளல் இருந்ததாக இதுவரை வரலாறு இல்லையே! என்ற கருத்தில்,

> "கொள்ளை கொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர் பிடித்துத்
> தள்ளும் திருஞான சம்பந்தர்"

என்று, கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் தம் ***நால்வர் நான்மணி மாலை*** 21 ஆம் வெண்பாவிற் குறிப்பிட்டருளினுர்.

பூ அழியாமை என்ற தூய்மையைக் குறிப்பிட வந்த கற்பனைக் களஞ்சியம், சிவப்பிரகாச சுவாமிகள்,

> "பூவான் மலிமணி நீர்ப் பொய்கைக் கரையின் இயற்
> பாவான் மொழி ஞானப் பாலுண்டு — நாவால்
> மறித்துஎம் செவியமுதாய் வார்த்த பிரான் தண்டை
> வெறித் தண் கமலமே வீடு"

என்று தம் ***நால்வர் நான்மணி மாலை*** முதல் வெண்பாவிற் குறிப்பிடுகின்ருர். சிவானந்தத் தெள்ளமுதை வாய்மடுத்த பிள்ளையார்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதனைத் தாம் உண்ணவில்லை. தமக்குக் கிடைத்த சிவானந்தத்தை ஏற்றுத் தாமே ஒரு பூவாக மலர்ந்து நின்றார். அவர் தம்முடைய உடம்பு முழுவதையும், தாமரையின் அக இதழ்களாக அமைத்துக் கொண்டு, திருப்பதிகம் என்ற தெள்ளமுதாக, பிறர் செவியில் அதனைச் சொரிந்தார். கேட்கும் வாய்ப்பில்லாத உயிர்கள், அவரைப் பார்த்த நிலையிலேயே, அவருடம்பில் அமைந்த பொலிவினால், அச் சிவானந்தத்தை நுகர்ந்தன. கேட்கவும் காணவும் இயலாத நிலையில் அமைந்த உயிர்கள் அவர் தம் திருவடியானது தம்மேற்படுதலின் காரணமாக அவ்வின்பத்தைப் பெற்றன. இதனாலேயே அவர்,

> ''தாவில் சராசரங்களெல்லாம் சிவம் பெருக்கும்
> பிள்ளையார்''

என்று சேக்கிழாரால் புகழப் பெற்றார். 'புனிதம்' என்பதும் பூ அழியாமற் கொடுத்தல் என்பதும் குறிப்புப் பொருளை உட்கொண்டவைகள். காலம் பெற அழுத பிள்ளையார் ஞாலம் பெற அளித்தாரே யன்றித் தாம் உண்ணாததே புனிதத் தன்மை. தன்னைப் பூவெனப் பொலிய வைத்துக் கொண்ட நிலையில், அப்பொலிவுக்கு எத்தகைய குறைவும் நேராத வகையில், வாயினால் ஏற்ற ஒன்றை, வாயினால் மட்டுமே கொடுத்தார் — திருப்பதிகமாக மட்டுமே கொடுத்தார் என்பதில்லாமல், வரையறையில்லாமல் தன் முழு உடம்பாலும் கொடுத்தார் என்பது கருத்து.

மேலும், ஒருமுறை உண்டதை ஒருமுறைதான் கொடுத்தார் என்பதாக அமைக்காமல், திருப்பதிகமாகக் கொடுக்கும் பொழுதெல்லாம் இரு நிலைகளையும் அமைத்தார். பரம்பொருளின் திருச்செவியில் சென்று தாக்கி, அதனைத் தன் அனுபவமாக இழுத்துவந்து ஆளாக்கும் நிலையும், அவ்வனுபவம் என்றும் வற்றாத நிலையில் அதனைத் தன் முடியில் நிறுத்தி, அதனாற் பெறுவதை — சிவானந்தத் தெள்ளமுதைத் தன் திருமேனிப் பொலிவாலும், திருநெறித் தமிழாலும் உலகத்துயிர்களுக்குச் செலுத்தி அவ்வனுபவத்தை வழங்கினார். இதனை அமைத்துக் காட்டும் சேக்கிழார், திருஞானசம்பந்தர் திருமுடியில் சிவபரம் பொருளைத் தாங்கிக் கொள்கிறார். தாங்கிக் கொள்ளும் பிள்ளையாரின் திருமுடியானது தாமரைப் பூவின் அக இதழா புற இதழா எனில், அக இதழ் வழியாகத் தேன் வெளிப்படுதல் வேண்டும். எனவே, தாமரை தலைகீழாய் நின்ற நிலையில், இருப்பதை மட்டுமே குறிப்பிட்டு, அதன் அக இதழ்களாகவே அவருடைய திருவடிகளைக் குறிப்பிடுகின்றார். ஞானசம்பந்தர் இறையடியைத் தலையில் தாங்கிய பின், அனுபவம் பெற்று, தலைகீழ்த் தாமரையாக நின்று, தேன் பிலிற்றுகின்றார். இதனை, அடிமுடி காணுதல் என்ற அடிப்படையில், உயிரும் சிவமும் தலைகீழாக மாற்றம் பெறுகின்றன என்ற உண்மையையும் அமைத்துக் காட்டி, 'தாடலை' என்ற இணைப்புத் தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றார். இந்நுட்பம் உணர்த்தும் சேக்கிழார் திருப்பாடல், ''ஞாலமுய்ந்திட ஞானம் உண்டவர்'' என்பதாம். அவர் தில்லைக்கு எழுந்தருளும்போது வழியில் உள்ள சராசரங்கள் அவருடைய திருமேனிப் பொலிவின் மூலம் சிவானந்தம் அனுபவிக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கும் முறையைச் சொல்லுகின்ருர். ஆயினும், சிறப்பாக, ஞானசம்பந்தர் திருநனிபள்ளிக்குப் புறப்படும்போது, அவர் தந்தையார் சிவபாத இருதயர், அவரைத் தன் தோள் மேல் எடுத்து அமைத்துக் கொள்ளுகிருர். அந்நிலையை,

''தாதவிழ்செந் தாமரையின் அகவிதழ் போல் சீறடிகள்
தரையின் மீது
போதுவதும் பிறரொருவர் பொறுப்பதுவும் பொரு
அன்பு புரிந்த சிந்தை
மாதவம் செய் தாதையார் வந்தெடுத்துத் தோளின்
மேல் வைத்துக் கொள்ள
நாதர் கழல் தம்முடிமேல் கொண்ட கருத்துடன்
போந்தார் ஞானம் உண்டார்''

என்ற, பெரியபுராணம் 2016ஆம் செய்யுளால் சேக்கிழார் அமைத்துக் காட்டுகின்ருர். திருஞானசம்பந்தரின் திருவடிகள் தாமரையின் அகவிதழ்கள் போன்றன என்ருர். குழந்தையின் திருவடிகள் ஆனமையால், அகஇதழ்கள் என்று கூறியிருக்கலாமே, என்று எண்ணத் தோன்றும். தாமரையின் புறஇதழும் அக இதழும் மென்மையால் வேறுபடுவன அல்ல; தன்மையால் வேறுபடுவன. புறஇதழ்கள் வெளிப்புறத் தாக்குதல்களுக்கு இலக்காகி மாறுபடும். ஆனல் அக இதழ்கள், ஒரே தன்மைத் தாய் இருக்கும். ஆனல், கால வேறுபாட்டிற்குத்தக, மாறி நின்று, தன்னை ஏற்பவருக்குப் பயன் தரும். இதனுலேயே, தாமரை தெய்வக் கற்பினுக்கு இலக்கியமாகும் பீடுடையது. சூழ்நிலைகள் தாக்குகின்ற காலத்தும் கலங்கா வண்ணம் தன்னிலையில் நின்று. தான் ஏற்றுக் கொண்ட தொண்டு நெறியில் தவருது நின்று கடமையைச் செய்தல் என்பதே கற்பு.

சிவானந்தப் பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார், தாம் தம்முடைய சிவானந்தப் பெரும் பேற்றை மேலும் மேலும் பெருக்கெடுக்கச் செய்யும் வகையில் தம்மைப் பரம்பொருளோடு இணைத்துக் கொண்டும், அதே நிலையில் தாம் தம்முடைய ஆனந்தானுபவத்தைத் துறந்து, தம் உடம்பு முழுவதையும் கருவியாகக்கொண்டு, அவ்வின்பத்தைப் பொலியவும் வைக்கின்ருர். பிற உயிர்கள் அடைந்து துய்க்கக் கூடியவாறு தேன் பிலிற்றும், தாமரையின் அக இதழாகத் தம்மை அமைத்துக் கொண்டார் என்ற கருத்தைச் சேக்கிழார் விளக்கிக் கூறுவாராயினர். இவ்வகையில், திருஞான சம்பந்தர் காலம் பெற அழுதார் என்று கொள்வதோடு மட்டுமின்றி, ''இடம் பெற மலர்ந்த புனித வாயினர்'' என்றும் கொள்ள வேண்டும்.

''புனித வாய் மலர்ந்து அழுத''

என்பது சேக்கிழார் வாக்கு. பரம்பொருளை நோக்கி அழுதது தனக்காக அன்று; தாவில் சராசரங்களுக்கெல்லாம் சிவம் பெருக்கிப் பேரின்பம் விளைவித்ததற்காகவேயாதலின், அவைகளை நோக்கியே மலர்ந்திருந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழுதலும் மலர்தலும் ஒன்றன் இருசெயல்கள். இரண்டு செயல்களும் வெவ்வேறு திசைகளை நோக்கியவை. இருவேறு செயல்களைச் செய்த அந்த வாய் தன்னளவில் புனிதமானது.

இருவேறு செயல்களை ஒரே உறுப்புத்தான் செய்தது. அவ்வுறுப்பு இருவேறு நிலைகளையும் மேற்கொண்டமைக்குக் காரணம் பொது நலப் பண்பே ஆனால், அது இருவேறு நிலைகளையும் கடந்த நிலையில் விளங்கும் தூய்மையானது; புனிதமானது.

இரவு பகல் என்றும், அழுகையும் மலர்ச்சியும் என்றும், அருநெறி பெருநெறி என்றும் நின்ற ஒரு நெறியை முற்றுவிக்கும் தொண்டு பேணினார். அழுது அழுது பரம்பொருளைத் தன்னுட் புக வைத்தவர் ஞானசம்பந்தர் ஆதலின், அவர் இறைவனை நோக்கிய நிலையிலும், புகலி ஆனார். அவ்வாறே, பேரின்பத் தெள்ளமுதை வரையாது வழங்கும் மலராக நின்றமையால் இவரையே அனைத்துயிர்களும் புகலாக அடைந்து, இன்பம் துய்த்தன. இவ்வாறு, தாவில் சராசரங்களுக்கெல்லாம் தாமே புகலாக நின்ற காரணத்தால் உலகத்தை நோக்கிய நிலையிலும் 'புகலி' ஆனார். இக்கருத்தை உணர்ந்த சேக்கிழார், திருஞானசம்பந்தரை முதன் முதல் அறிமுகப் படுத்தும்போது, அவருக்குள்ள ஏனைய பெயர்களை விடுத்து, 'புகலி'யை வைத்தே, புகலியை முன்னிட்டுக் கொண்டே, திருஞானசம்பந்தர் பெருமையை விளக்க முற்படுகின்றார்.

"வேத நெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க
பூத பரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந் தழுத
சீதவள வயற் புகலித் திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்"

என்பது பெரியபுராணம், திருஞானசம்பந்தர் புராணத்தின் முதற் செய்யுள் (1904) ஆகும்.

காழியும் புகலியும்

"பிரமபுரத்துப் பெம்மான் எம்மான்" எனவும், "விண்டலர் பொழிலணி வேணுபுரத்தரன்" எனவும் அமைந்த இரு நெறிகள் முன்னே விளக்கப் பெற்றன. பிரமபுரம் பெருநெறிக்கு வழி வகுத்தது. 'தண்ணீர் முத்தாதல்' என்பது வேணுபுரம் விளைத்த நன்னெறி.

இரவும் பகலும் என, இயலும் இசையும் என நின்ற இருமையின் இணைந்த ஒருமையில், ஒன்றுதான் அருமறை முனிவன் பெருக்கு நீரவளொடும் பெருந்தகையாய்ப் பிரமபுரத்துக்கு வந்த நெறி. இரண்டாவது, சிலம்பில் உள்ளிருந்த ஒலி, தானே தன்னை வெளிப் படுத்திக்கொண்டு வந்து, தண்ணீரை முத்தாக்கியது. இனி, மூன்றும் நெறியை விளக்குதற்கு என நின்ற புகலியின் பெருமையைக் காண லாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்கடைக்காப்பின் அமைப்பு முறை

திருஞானசம்பந்தப் பெருந்தகையே பதிகப்பெருவழியைத் திரு நெறிய தமிழால் தொடக்கியும் வளர்த்தும், நிறைவு செய்து காட்டி யும், சைவ சமயத்தை நன்னெறிப்படுத்தித் தொண்டாற்றிய முதற் பெருந்தலைவராவர். சைவசமயத்தைப் பதிகப் பெருவழியால் நாம் உணர்ந்து கொள்வது ஒருவகை. அதற்கும் முதலாக நிற்பது, பதிகப் பெருவழியை உள்ளவாறு அறிந்துகொள்வது எவ்வாறு? பதிகப் பெருவழியை விளக்கும் வழிகாட்டிப் பலகைகள் எவையேனும் உண்டா? பதிகப் பெருவழியில் நலமே நடப்பதற்குச் சாலை விதிகள் உள்ளனவா? சாலை ஓரப் பூங்காக்கள் இளைப்பாறுதற்கென அமைக் கப்பெற்றுள்ளனவா? என்ற வினக்கள் எழலாம். வேறு எவரிடமும் காணுத, கேளாத சில புதுமைகளை, சில வரையறைகளை, அமைத்துக் காட்டியவர் திருஞானசம்பந்தரே. திருப்பதிகப் பெருவழிக்குரிய அடித்தள அமைப்பு, கொண்டு செலுத்த வேண்டிய நெறிமுறைகள், வழியின் இடையிடையே அமைக்கப்பெறும் அறிவிப்புப் பலகை கள், அறிவுரைகள் ஆகியவைகளையெல்லாம் அவர் திறனுற அமைத்து வைத்துள்ள இடமே, திருப்பதிகத் திருக்கடைக்காப்பு. திருஞான சம்பந்தரின் திருமுறை மூன்றற்கும் அமைந்த திருப்பதிகத் திருக் கடைக்காப்புக்களில், அவர் அமைக்கும் செய்தியைப் பற்றிய ஆய்வுரை ஒன்று இந்நூலின் இரண்டாம் பாகத்தில் வெளிவரும். இங்கே, அவருடைய வரலாற்றுக்குத் தேவையான சில குறிப்புக் களை மிகவும் சுருக்கமாக அமைத்துக் கொள்ளவேண்டிய இன்றி யமையாமை உண்டு.

திருஞானசம்பந்தர் காலம் முதல் இன்று வரையில் அவர் அவ தாரம் செய்த இடம், 'காழி' என்ற பெயரில்தான் அழைக்கப் பெறு கிறது. தில்லையில் கூத்தப் பெருமானிடம் தோற்றுப்போன காளி யானவள் இத்தலத்தில் இலிங்கமொன்றை அமைத்து வழிபட்டமை யால், காளிபுரம் என்னும் பெயர் இத்தலத்துக்கு அமைந்தது.

ஸ்ரீகாளி என்னும் பெயரே, ஸ்ரீகாழி என்றும் பின்னர்ச் 'சீர்காழி' என்றும் வந்தது என்று கொள்ளும் விளக்கத்தில் திருஞானசம்பந் தரின் கருத்து எந்த அளவுக்கு இயையும் என்பதை அறிஞர்களே ஆய்ந்து காணவேண்டும்.

காலங்கடந்த பரம்பொருளையோ, காலங்கடந்த சமய உண்மை யையோ குறிக்கவரும் கதை என்பதாகச் சமயத்துறை ஆய்வியல் நெறிகளைக் குறைகூறும் வழக்கம் இருக்கிறது. காலத்தோடும் சமயத் தோடும் இணைத்து, வரலாற்று நிகழ்வுகளையும் அவைகளை உள்நின்று நடத்திய கொள்கை விளக்கங்களையும், ஒரு காலத்தில் நடைபெற்ற ஒன்றை நாம் வாழுங் காலத்துக்கு ஏற்ப, எவ்வாறு இணைத்துக் காணவேண்டும், காட்டவேண்டும் என்ற வாழ் வியல் நுட்பங்களையும் அமைத்தும் விளக்கிக் காட்டியும் நம்மை நல் வழிப்படுத்துவதற்காக அமைத்த திருப்பாட்டுத்தான் திருப்பதிகத் திருக்கடைக் காப்பு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'காழி' என்ற பெயர் அவ்வூருக்குக் கால வரிசை முறைப்படிப் பத்தாவதாக நின்ற பெயர். 'காழி' என்ற பெயரே தமக்கும், தம் மூர்ப் பெருமானுக்கும் அமைந்த பெயர் என்று அமைத்துக் கொள்ளு வது சம்பந்தர் மேற்கொண்ட முறை. எஞ்சியிருக்கின்ற கொச்சை, கழுமலம் என்ற இரண்டு பெயரும் இனிவரும் ஊழிகளில் நின்று நிலை நாட்டப்பெற வேண்டிய பெயர்கள் அல்ல. அந்த இரண்டும் முறையே, வேணுபுரத்துள்ளும், பிரமபுரத்துள்ளும் அடங்கிவிடும். பத்து என்ற எண்ணிக்கைக்குப் பின் மீளவும் சக்கரமாக, மாலை மாற்ருகச் சுற்றிச்சுற்றி வரும். எனவே, இனிவரும் கடல்கோளுக்குப் பின், அழியாது நின்று விளங்கும் காழிக்குப் பிரமபுரம் என்பதுதான் பெயர்.

'பத்து என்பது 'ய' என்ற வடிவத்தில் நின்று உயிரைக் குறிக்கும். ஆகையால் பத்து என்ற எண்ணிக்கையில் நின்ற 'காழி' என்பதே நாம் இப்போது கொள்ள வேண்டிய பெயர் என்று குறிப்பிடுவார்.

ஆயினும், பன்னிரண்டு பெயர்களுமே பன்னிரண்டு ஊழிகளில் வந்து தாக்கிய கடல்கோளுக்குத் தப்பி நின்றபோது பெற்ற பெயர் களே. இனி, ஏதேனும் ஒரு தலத்தில் சென்று பாட முற்படும்போது, அந்தத்தலத்து இறைவன் அங்கே வந்து அமைந்த கோலம், இப்பன் னிரண்டு ஊழிகளில் காழித்தலமும் இறைவனும் பெற்ற பெயர்களில், ஏற்ற குறிக்கோள்களில், எந்த ஒரு பெயருக்கு இணையும் முறையில் இருக்கிறது என்று கண்டு, காழிக்குள்ள பன்னிரு பெயர்களில் ஏதே னும் ஒன்றில் அதனை அடக்கி விடுவார். எடுத்துக்காட்டாக, திரு வீழிமிழலையில் காழிக் காட்சியைக் காட்டிய நிலையில் காழியும் மிழலையும் ஒத்த இயல்பின என்று கொண்டு காழிக்குள்ள இயல்பு களை மிழலைக்கு அமைத்துச் சொல்லும் முறையை மேற்கொள்வார். அப்பதிகத்திறுதியில் இதைப்பாடிய தன்னுடைய பெயரை, அங்கே 'காழியான்' என்றுதான் குறிப்பிடுவார்.

எந்த ஒரு திருத்தலத்தை அடைந்தாலும், அந்தத்தலம், இறை வன், தான் ஆகிய மூவருக்கும், காழிக்குரிய பன்னிரு பெயர் வரிசை யில் எந்த ஒன்று இயைபுபட நிற்கிறது என்று கண்டு, அப்பெய ருக்கு ஏற்ற முறையிலேயே செய்திகளை அமைப்பார். ஏதேனும் ஒரு தலம் இப்பன்னிரண்டில் ஒன்றி வாராத நிலை தோன்றுமேல், பன்னி ரண்டில் இரண்டு பெயர்களுக்கு இணையும் என்ருல், அப்போது தன்னைக் காழியான் என்று அமைத்துக்கொண்டு, பெயர் வரிசையில் ஆருவதும் நான்காவதும் உள்ள பெயர்களோடு இணையுமானல், "ஆறும் நாலும் உளவாக வைத்தபதி" என்று அமைத்துத் திருப் பதிகம் அமைப்பார். அத்தகைய இடங்களில் தம்மைக் 'காழியான்' என்றே கூறிக் கொள்வார்.

காழியான், கழுமலத்தான் என்று தம்மைக் கூறிக் கொள்ளு வது ஒருமுறை. அவ்வாறன்றி, தமிழ்க் காழியான், 'மறைநான்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வல்ல புகலியான்' என்றெல்லாம் அடைமொழியுடன் புணர்த்துத் தம்மைக் கூறிக்கொள்ளும் அமைப்பும், தாம் இன்ன நெறியில் நின்று, இன்ன நெறியைப் பின்பற்றுபவர்களுக்காக, அந்நெறியைக் காப்பாற்ற வந்த, இந்த இறைவனைப் பொருளாக அமைத்துப் பாடுகிறேன் என்றும் கூறும் முறையைப் பின்பற்றுவது வழக்கம்.

"நற்றுணை, பெருந்தகை ஞானசம்பந்தன்" என்று கூறுவாரானால், இரவுபகல் என்னும் இருதன்மைகளில் நின்று அரியனாகவும் பெருமையனாகவும் விளங்கும் பரம்பொருளை, பெண்ணும் ஆணும் ஒக்க நின்ற கோலத்தை அடிப்படையாகக் கொண்டு, இறைவனை அருமையன் பெருமையன் என்ற இரண்டாலும் எண்ணி வழிபடுபவர்களுக்கு உரிய நிலையில் தம்மை நிறுத்தி, அத்திருப்பதிகம் பாடுவார். அவ்வாறே, அந்நெறியால் என்ன பயன் விளையுமோ அதைமட்டுமே சிறப்புறுத்திக் கூறுவார்.

இனி, ஒருபொருள் இருதிறம் உடையது; முதல் திறம் இயல். இரண்டாம் திறம் இசை. இறைவனின் இயல்திறத்தைப் பாடமுற்படும்போது தம்மை மறை, வேதம் என்பவற்றோடு இணைத்தே கூறுவார். இரண்டாம் திறமாகிய இசையை—பெருமையை அமைத்துப்பாடும்போது 'இசைவல்ல ஞானசம்பந்தன்' என்று குறிப்பிடுவார். அது இன்னிசையைக் குறிக்காது. அறிதற்கரியனாகிய நிலையில் நின்ற இறைவன் தானே தன்னை இசையவைக்கும் முயற்சிக்காகச் சில இசையை எழுப்பிக் கூத்தும் ஆடியுள்ளான். எனவே, இறைவனின் இசைத்திறத்தை விளக்கிப் பாடமுற்படும்போது, இசை என்ற சொல் மட்டுமே அமையத் தன்னை எடுத்துக்கூறுவார். இசையால் உரைத்த பனுவல் என்பதற்கும் தமிழ் மாலை பத்தும் என்பதற்கும் வேறுபாடு உண்டு. முன்னுள்ளது இறைவனே பெண்தான் மிக நின்றும், ஆடல் மேற்கொண்டும் தன் பெருமையை விளக்க எடுத்தாண்ட இசை. பின் உள்ளது, இறைவனின் இசைத்திறம் ஆகிய அதே பகுதி தமக்கு அனுபவமாக அமையும்போது அனுபவ இன்பம் என்ற 'தமிழ்' என்பதை அமைத்துச் சிறப்பித்த பகுதி.

அவ்வாறே ஒலி, ஓசை என்ற இரண்டையும் அமைப்பதிலும், கழல் ஒலி, சிலம்போசை என்ற வேறுபாட்டுடன், ஆணும் பெண்ணும் இணைந்த கோலத்தில், ஆண்மை மிக்க செயல் நடைபெறுமானால் 'கழலொலி' இடம்பெறும். பெண்மைச் செயல் மிகுமானால் சிலம்போசை இடம் பெறும்.

இக்காலத்தே, குழந்தை பிறந்தவுடன் சாதகம் கணிப்பவர்கள் பன்னிரண்டு வீடுகளில், இலக்கினம், இராசியை அமைத்துவிடுவது போல (எல்லாருக்கும் வீடு பன்னிரண்டுதான்), எல்லாத் தலத்து இறைவர் திறங்களையும், தலப் பெருமைகளையும் காழியின் பெயர்களான பன்னிரண்டினுள் அடைத்து விடுவார். தன்னையும், இத்தகைய பன்னிரண்டு ஊழிக்காலங்களிலும் நின்று கண்டு வந்த வரலாற்றுப் பின்னணியுடன் சேரவைத்து, அதற்குப் பொருத்தமாகத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தம் பெயரையும் இணைத்துக் கூறும் நிலையை மேற்கொள்வார். திரு ஞானசம்பந்தர் கருத்தின் வண்ணம் சைவசமயத்தில் உள்ளவர் எல்லாரும் சைவத் திருத்தலங்கள் எல்லாமும் காழிக்கு உரிய உறுப்பினர்களும் இணைப்புத் தலங்களுமே.

தில்லைத்தலமும் காழியோடு இணைப்புடையது என்பதே திருஞானசம்பந்தர் திருவுள்ளக்குறிப்பு. இதனை விளக்கும், தில்லைத் திருக்கடைக்காப்பு

ஞாலத்துயர் காழி ஞானசம்பந்தன்
சீலத்தார் கொள்கைச் சிற்றம்பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத்தாற் பாட வல்லார் நல்லாரே

என அமைகிறது. கோயில்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்ததால் 'கோயில்' என்பதையே தம் பெயராகப் பெற்ற தில்லையைக் காழியுடன் இணைத்துக் காட்டும் ஞானசம்பந்தர் 'ஞாலத்துயர் காழி' என்று குறிப்பிட்டார். பன்னிருமுறை கடல்கோள் வந்து அழிவுற்ற போதும், அழியாது நின்ற ஊர் 'காழி' என்றே குறிப்பிடும் வரலாற்றை அமைத்துக்கொண்டு அந்நிலையில் தம்மை நிறுத்திப் பாடும் மரபு அவரிடம் உண்டு.

திருக்கடைக்காப்பும் வைணவமும்

பெரியாழ்வார் திருமொழியில், இரண்டாவது பத்தின் மூன்றும் பிரிவுக்குப் **போய்ப்பாடு** என்பது பெயர். இப்பிரிவில் அமைந்த 13 பாசுரங்களில், முன்னின்ற பன்னிரண்டு பாசுரங்களும் '**பன்னிரு நாமப் பெருமை**' கூறுவனவாக அமைய, பதின்மூன்றுவது பாசுரம் திருக்கடைக் காப்பென நின்று, பதிகம் தோன்றியதன் காரணம், பதிகம் யாரைப்பற்றி யார் கூறியது, பதிகத்தின் உட்பொருள், பதிகத்தின் பெயர், வல்லாரெய்தும் பயன் என்ற செய்திகளைச் சொல்லுகிறது.

"வார்காது தாழப் பெருக்கி யமைத்து
  மகரக் குழையிட வேண்டி
சீரா லசோதை திருமாலைச் சொன்னசொல்
  சிந்தையுள் நின்று திகழ
பாரார் தொல்புகழான் புதுவை மன்னன்
  பன்னிரு நாமத்தாற் சொன்ன
ஆராத அந்தாதி பன்னிரண்டும் வல்லார்
  அச்சுத னுக்கடி யாரே"

என்பது, அப்பாசுரம். 'காதுகுத்தல் வேண்டும்' என்பதைப் பொருளாகக் கொண்டு யசோதை திருமாலை அழைத்தாள். பன்னிரு திருநாமங்களை வரிசைப்படச் சொல்லி அழைத்தாள். ஆகையால், **போய்ப்பாடு** என்பதைத் தொடக்கமாக உடைய இத்திருப்பதிகம் **பன்னிரு நாமப் பெருமை காதுகுத்தல்** என்பதாக அமைந்தது. இப்பதிகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒன்றே அந்தாதித் தொடையில் அமைந்தது. அந்தாதித் தொடையில் பாடுவதன் நோக்கம் வரிசை பிறழக்கூடாது என்பதே. இவ்வகையில் பன்னிரு திருநாமங்களும் முறையே, கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விட்டு, மதுசூதனன், திரிவிக்ரமன், வாமனன், சிரீதரன், இருடிகேசன், பற்பநாபன், தாமோதரன் என்பன.

பெரியாழ்வார் திருவாய்மொழியை அடுத்து, நம்மாழ்வார் திருவாய் மொழியுள் இரண்டாம் பத்தின் ஏழாவது பிரிவு "கேசவன் தமர்" என்ற தலைப்பினை உடையது. இந்த ஒரு பத்து மட்டுமே பன்னிரண்டு திருமொழிகளால் ஆயது. இத்தலைப்பினைப் 'பன்னிரு நாமப் பாட்டு' என்றே நம்மாழ்வார் பெயரிட்டருளுகின்றார். பெரியாழ்வார் திருவாய்மொழியில் பன்னிரண்டு நாமங்களும் பன்னிரண்டு திருவாய்மொழிகளில் அமைக்கப் பெற்றிருப்பினும், திருநாமங்கள் அவ்வத் திருமொழிகளின் முதலிலோ, இடையிலோ, இறுதியிலோ வரப்பெறும். ஆனால், நம்மாழ்வார், திருநாமத்தை வைத்தே ஒவ்வொரு திருவாய்மொழியையும் தொடங்குவதை மரபாக அமைத்துக் கொண்டார். அதனோடு, பெரியாழ்வார் அமைத்த அந்தாதித் தொடையையும் அமைத்துக் கொண்டார். இவ்வகையில், முதல் திருப்பாட்டு, கேசவன் என்று தொடங்கி, நாராயணனாலே என்றும், இரண்டாந் திருப்பாட்டு, நாரணன் என்று தொடங்கி மாதவனே என்றும், மூன்றாந் திருப்பாட்டு மாதவன் என்று தொடங்கிக் கோவிந்தன் என்றும், நான்காந் திருப்பாட்டு கோவிந்தன் என்று தொடங்கி, விட்டு என்றும், ஐந்தாந் திருப்பாட்டு விட்டு என்று தொடங்கி மதுசூதனன் என்றும், ஆறாந் திருப்பாட்டு மதுசூதனனை என்று தொடங்கித் திரிவிக்கிரமன் என்றும், ஏழாந் திருப்பாட்டு, திரிவிக்கிரமன் என்று தொடங்கி, வாமனனே என்றும், எட்டாந் திருப்பாட்டு வாமனனே என்று தொடங்கி, சிரீதரனே என்றும், ஒன்பதாந் திருப்பாட்டு, சிரீஇதரன் என்று தொடங்கி, இருடீகேசன் என்றும், பத்தாந் திருப்பாட்டு இருடீகேசன் என்று தொடங்கி, பற்பநாபனையே என்றும், பதினொன்றாந் திருப்பாட்டு, பற்பநாபனையே என்று தொடங்கி, தாமோதரனே என்றும், பன்னிரண்டாந் திருப்பாட்டு, தாமோதரன் என்று தொடங்கி என்னுழிவண்ணனை என்றும் முடியும் வகையில் ஒரு திருமொழியில் முன்னும் பின்னும் இரண்டு திருநாமங்கள் வருமாறு அமைத்தருளினார்.

அடுத்துப் பதின்மூன்றாவது திருவாய்மொழியாக நம்மாழ்வார் பாடியருளிய,

"வண்ண மாமணிச் சோதியை அமரர் தலைமகனை
கண்ணனை நெடுமாலைத் தென் குரு கூர்ச் சடகோபன்
பண்ணிய தமிழ்மாலை ஆயிரத்துள் இவை பன்னிரண்டும்
பண்ணில் பன்னிரு நாமப் பாட்டு அண்ணல் தாளணைவிக்குமே"

என்ற திருப்பாசுரம் திருக்கடைக் காப்பினைப் போன்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெரியாழ்வாரும் நம்மாழ்வாரும் எம்பெருமானுடைய பன்னிரு திருநாமங்களையும் இவ்வாறு முறைப்படுத்தி அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற வகையில் இரண்டு பத்துக்கள் அருளியுள்ளார்கள்.

மேலும், வைணவத்தில் இப்பன்னிரு திருநாமங்களும் வழிவழி வந்தருளிய முறையைக் குறிப்பிடுவதையும் நோக்குதல் ஏற்புடையது.

ஸ்ரீவைகுண்டத்தில் பெரிய பிராட்டியுடன் எழுந்தருளியுள்ள பரவாசுதேவனே திருப்பாற் கடலில் திருப்பாம்பணையில் எழுந்தருளுகின்றான். ஸ்ரீவைகுந்தப்பெருமான் பரம் என்றும் தானே தம் நிலை என்றும், தன்னொளிச் சோதியான் என்றும் பேசப்பெறும் பொருள். திருப்பாற்கடலில் எழுந்தருளியுள்ள வாசுதேவன் சுடரொளிச் சோதியான் என்று ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப் பெறுபவன்.

ஸ்ரீ வைகுண்டத்தில் உள்ள பரவாசுதேவனுக்கு அமைந்த வியூகங்கள் நான்கு. 1. திருப்பாற்கடல் பள்ளி கொள்வோன், 2. சங்கர்ஷணன் 3. பிரத்யும்நன் 4. அநிருத்தன்.

முதல் வியூகம் எனப் பெறும் திருப்பாற்கடல் வாசுதேவன் இறைவனுடைய முழுமைக் குணங்கள் ஆறினையும் தன்னிடத்துக் கொண்ட பரம்பொருள். ஸ்ரீவைகுந்தம், திருப்பாற்கடல் என்ற இட வேறுபாடுகளைத் தவிர, இருவருக்கும் வேறு எந்த வேறுபாடும் இல்லை. அவர் திருநாட்டில் எழுந்தருளியுள்ளவர், . இவர் திருப்பாற் கடலில் எழுந்தருளியுள்ளவர், அவ்வளவே.

சைவம் வைணவம் என்ற இரண்டிலும் முறையே திருக்கயிலை, ஸ்ரீ வைகுந்தம் ஆகிய அம்மை உறைவிடங்களில் இருந்த இறைவர்கள், அங்கிருந்து கீழிறங்கி வந்து முறையே திருப்பிரமபுரத்திலும் திருப்பாற்கடலிலும் தங்கி விட்டார்கள் என்ற அடிப்படை உண்மையை இரண்டு சமயங்களிலும் நாம் காண முடிகிறது.

திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருந்த வாசுதேவன் ஆறு குணங்களையும் கொண்டு விளங்கும் மூர்த்தி. ஆறுகுணங்களையும் சக்ரம், சங்கு, கதை, பத்மம், கட்கம் (கத்தி), சார்ங்கம் (வில்) என்ற ஆறு படைக்கலங்களாக அமைத்துச் சொல்லும் வழக்கு உண்டு. இப்பரம்பொருள் மூன்று திருநாமங்களை ஏற்றும் விளக்கியும் அமைகிறார். அவை முறையே 1. **கேசவன்**, 2. **நாராயணன்**, 3. **மாதவன்** என்பன.

வியூகம் இரண்டு, **சங்கர்ஷணன்**, வாசுதேவனிலிருந்து வெளிப் போந்தருளிய வியூகம். இவ்வியூகம் அடுத்த மூன்று திருநாமங்களை ஏற்றும் விளக்கியும் நிற்கிறது. அவை முறையே 4. **கோவிந்தன்** 5. **விட்டு**, 6. **மதுசூதனன்**. வியூகம் ஒன்றில் அமைந்த இறை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மைக் குணங்கள் ஆறனுள் முதல் நின்ற இரண்டினை மட்டுமே விளக்கியருளும் இயல்பினது இது.

வியூகம் *மூன்று. பிரத்யும்நன்*, சங்கர்ஷணனிலிருந்து வெளிப் போந்தருளியது. இது அடுத்த மூன்று திருநாமங்களை ஏற்றும் விளக்கியும் நிற்பது. அவை முறையே 7. *திரிவிக்கிரமன்*, 8. *வாமனன்*, 9. *சிரீ இதரன்* என்பவை. முன் அமைத்த முறைப் படியே, இறைமைக் குணங்கள் ஆறனுள் இரண்டாம் நிலையில் நின்ற இரண்டு குணங்களை விளக்கும் திருமூர்த்தம்.

வியூகம் நான்கு. இது **அநிருத்தன்** எனப்பெறும். பிரத்யும்நன் என்ற மூன்றும் வியூகத்திலிருந்து வெளிப்போந்தருளியது. இதற் குரிய அமைப்பினையுடைய திருநாமங்கள் மூன்று. அவை முறையே 10. **இருடிகேசன்**, 11. **பத்மநாபன்**, 12. **தாமோதரன்** என்பன. எஞ்சிய இரண்டு குணங்கள் விளக்கம் பெறுவனவாகும் இங்கே.

அடுத்து அமைவது தசாவதாரக் கொள்கை. நான்காவது வியூகமே தசாவதாரத்துக்கு மூலம் என்ற ஒரு கருத்து உண்டு. அவ்வாறன்றி, முதல் வியூகமாகிய வாசுதேவனை அடிப்படையாகக் கொண்டு மச்சம், கூர்மம், வராஹம் என்ற மூன்று அவதாரங்களும், இரண்டாவது வியூகமாகிய சங்கர்ஷணனை அடிப்படையாகக் கொண்டு நரசிம்ம, வாமன, ஸ்ரீராம, பரசுராம என்ற நான்கு அவதாரங்களும், மூன்றுவது வியூகமாகிய பிரத்யும்நனை அடிப்படை யாகக் கொண்டு பலராம அவதாரமும், நான்காவது வியூகமாகிய அநிருத்தனை அடிப்படையாகக் கொண்டு கிருஷ்ண, கல்கி என்ற இரு அவதாரங்களும் அமைகின்றன என்று கொள்ளும் கருத்தும் உண்டு.

வைணவத்தில் வியூகம் என்று கூறப் பெறும் நான்கும் ஒன்றி லிருந்து ஒன்று என வெளிப்பட்டனவாயினும், பரத்தை இணைக்கும் வாசுதேவன் என்பது ஒன்றே இரண்டாய் நின்றநிலை. முன்னது அரியநிலை; பின்னது எளியநிலை. ஸ்ரீவைகுந்தத்தில் உள்ளவை நம்மால் கேட்கப் பெறும் செய்தி. திருப்பாற்கடலில் எழுந்தருளிய நிலை எளியநிலை. நம்மால் பெருமையுடன் பேசுதற்குரியவை.

இது, சைவத்தில் அருநெறி எனப்பெறும் மறைநெறியும் பெரு நெறியும் இணைந்த 'ஒருமைநெறி' என்று கொள்ளப் பெறும் கருத் துடன் ஒத்த நிலையில் காணப்பெறுகிறது.

அடுத்து, திருப்பாற்கடல் வாசுதேவனுடன் இணைந்த நான்கு வியூகங்களும் ஒரு பிரிவுடையவன. சைவத்தில் நான்மறை முதல்வன் என நின்றுற் போலவே இங்கும் நான்கு நிலைகள் பேசப் பெறுகின்றன. இந்த நான்கினை மூலமாகக் கொண்டு வருவனவே பன்னிரு திருநாமங்களுக்குரிய மூர்த்தங்கள். பத்து அவதாரங்கள் இவற்றுள் அடங்குவனவே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வகையில் சைவமும் வைணவமும் இணைந்த நிலையில் பிரிவுகளை அமைத்துள்ளன என்று கொள்ளலாம். அடுத்து, பன்னிரு திருநாமங்களையும் அவைகளைக் கொண்டு விளங்கிக் கொள்ளும் திருப்பதிகளையும் இணைத்துக் காட்டிய நிலை வைணவத்தில் காணப் பெறவில்லை.

ஆனால், பன்னிரண்டு பெயரும் உடைய வாசுதேவன் ஒன்று என இணைப்பதோடு வைணவம் நிற்க, பன்னிரண்டு ஊழிகள், பன்னிரு பண்புகள், பன்னிரு பண்புகளை நிலைநாட்டியமையின் பன்னிரு ஊர்ப்பெயருடன் இணைந்த இறைவர் திருநாமங்கள், ஏனைய எல்லாத் திருத்தலங்களும் இந்த ஒரு தலத்தில் உள்ள பன்னிரு பிரிவுகளில் அடங்குதல் ஆகியவைகளைச் சம்பந்தர் அமைத்துக் காட்டுகின்றார்.

அடுத்து, திருப்பதிக வழியில் வரும் உயிர், பன்னிரண்டு ஊழிகள் பன்னிரண்டு பண்புகள், பன்னிரண்டு வளர்ச்சியை அடைதல் என்பவைகளைப் பெறுகிறது. பிறவி ஒன்றிலோ, இரண்டிலோ, அல்லது, பன்னிரண்டிலுமோ நின்று கண்டு வந்த நிலைகளை ஒருமை மனத்தால் அறிந்து கொள்கிறது. பன்னிரண்டு படிகள் எனக் கொண்டாலும், பத்து என்பது ஒருவகைச்சுற்று என அமைவது. பத்தாம் நிலையில் நிற்கும் உயிர் முன்னுள்ள ஒன்பது படிநிலை வளர்ச்சியையும் பின்னுள்ள இரண்டு நிலையையும் இணைத்தறியும் வாய்ப்பினைப் பெறுகிறது. எனவே, திருப்பதிகப் பெருவழி பன்னிரண்டு படிகளை மட்டுமே கொண்டது. பத்தாம் படியே "திருக்காழிப்படி". காழிப்படியில் நின்றே திருப்பதிகம் முடிவு பெற்று விடும். ஆயினும் திருமுறைப்படிகள் மொத்தம் பன்னிரண்டு மட்டுமே.

பத்தாம் படியில் நின்ற நிலையானது வைணவத்தின் பத்து அவதாரங்களை நினைவுபடுத்துவதாகக் கொள்ளலாம். அங்கும் 'கல்கி' என்ற பத்தாவது அவதாரம் இனி நிகழ இருப்பதே.

காழி என்ற பத்தாம் படியும் புகலியும்

திருஞானசம்பந்தர் பத்தாம் படியில் நின்று, தாம் கடந்து வந்த ஒன்பது படிகளையும், இனிக் கடக்க இருக்கிற இரண்டு படிகளையும் இணைத்துணரும் நன்ஞானம் பெற்றார் என்ற கருத்தை அமைத்து, சகல கேவலங்களுக்கு இடை நின்ற அருளாளர் என்றும், கடந்து வந்த சகலநிலையும் அருளெனநிற்க, கடக்க இருக்கும் கேவல நிலையும் அருளாக, இவ்வாறு உள்ளும் புறம்பும் அருளே நிறைந்து நிற்கும் நிலையே காட்சிப்பட, இவ்விரண்டன் இடையில் உயிர் ஞானவடிவம் பெற்று நின்ற நிலையே, திருஞானசம்பந்தப் பரம் பொருள் நின்ற நிலை என்று விளக்கம் செய்து காட்டிய அருளாளர் களும் உண்டு.

திருஞானசம்பந்தப் பெருமான் நின்ற பத்தாம் படிநிலை 'காழி' எனப் பெறும். எல்லாம் கழிய நின்ற நிலையே காழி. இங்கே மூவகை அனுபவங்கள் பேசப் பெறுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1. சகல கேவலம் என்ற இரண்டின் நடு என்ற நிலே. இது இரவு பகல் அற்ற இடம். முன்னே உள்ள படிகளில் இருட்டில் நின்று அறிந்ததை இங்கே நீங்கி நின்று காணும் நிலே. முன்னே பேத நிலேயில் கண்ட எல்லாவற்றையும் பேதம் நீங்கிய ஒருமை நிலே யில் அமைத்துக் காணும் நிலே. பொதுவாக அருளே எங்கும் முழுமையாக நிறைந்து, ஒளியுடன் விளங்கிக் கொண்டிருக்கிறது என்று அறியும் நிலே. இங்கே ஒருமையில் இருந்தாலும், உயிரனு பவமே. இங்கே பேதம் நீங்கினும், பேதமாக இருப்பவை அன்னிய மில்லாதவை என்று காணும் ஒருமைநிலே. இதுவே அண்மைநிலே அனுபவம்.

காணப் பெறும் பொருளில் முன்னே இருந்தனவாக அறிந்த பேதநிலே வேறு. இப்போது ஒருமையில் இணைந்த இருமைநிலே எனப்பெறும் பேதநிலேவேறு. இது அந்நியமிலே என அறியும் நிலே. அடுத்து, காணப்பெறும் பொருளுக்கும் காணும் பொருளுக்கும் முன்னே வேறுபாடு இருந்தது. இப்போது அண்மை நிலேயினுல் அந்நியமிலே என்று அறிந்தது. இங்கே வெளிப்படும் மொழி வழிமொழி. அந்நியமில்லாத நிலேயில், அண்மைநிலேயில் பரம் பொருளின் உரையைத் தன்மூலம் வெளிப்படுத்துதல் இயலும். இது உயிரனுபவம். இறைவன் மொழி முதன் மொழி, இவர் மொழி வழிமொழி. இது பேதமற்ற நிலேயில், இரவு பகல் அற்ற நிலேயில் நின்று காணும் உயிரனுபவநிலே. இதனே அன்பால் பெற்றநிலே எனக் கூறுவர். இங்கே, பரம்பொருள் அன்பும் அருளுமாக நின்றது. எனக் கொண்டு அன்பு அடியாக, அருள் முடியாக அமைய, தன் னுள் நின்ற சிவம் அன்பு என்றும் திருவடி என்றும், தனக்கு அயலாக நின்ற அருள்நிலேயே அவனின் திருமுடி என்றும் காணும் நிலே உண்டாகும். இறைவன் திருவடி என்னுள் இருக்கிறது என்று காண லாம் நிலே. தசகாரிய விளக்கத்தினுள் இது ஒன்பதாம் படியாகிய சிவயோகநிலே.

2. சிவபோகநிலே. இது தசகாரிய நிலேயில் பத்தாம் நிலே. இதுவே காழி எனப் பெறும் பத்தாம் படிநிலே. பொதுமை நிலே வளர்ச்சியில் பத்தாம் படியில் நின்றவர்கள் முன்னுள்ள படி நிலேகளேப்பற்றி அறிய முற்படுவதோ, அறிவதோ இல்லே என்று அருள் நூல் கூறும். இறைவன் உயிரைத் தானுக ஆக்கியதை உயிர் அறியும் நிலே. ஆனுல், இது அருளனுபவம். ஆன்மாவானது ஞான வடிவு பெறும். முன்னமேயே தன்னே நோக்கி வந்து தன்னுட் குடி கொண்ட பரம்பொருள் அருளாகவே பரிபூரணமாக நிறைந்து நிற்கும். ஞானமாக நின்ற உயிரின் அகநிலேயானது, அருளாகவே நின்றமை போல, உயிருக்கு வெளியேயும் அப்பரம்பொருள் அருளாகவே நிற்கும். இது தனிப்பரநாத வெளியின் மேல் நின்ற நிலே. அகமும் புறமும் அருளே தோற்றினும், தன்னுள் இருக்கும் அருள் ஞானமாகவும் தனக்கு அயலாக இருக்கும் அருள் இன்ப மாகவும் அனுபவிக்கப் பெறும். உள்ளும் புறம்பும் அருள் நிற்பினும், உயிர் ஞானமயமாக நிற்கும். ஆகையால், இங்கேயும் ஒருவகை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேறுபாடு இருக்கும். இந்நிலையில், இன்பநிலையாகிய இனிக்கும்நிலை உண்டு என்று கூற இயலாது. அனைத்தையும் அருளாய் நின்று அறிவதால் உண்டாகும் இன்பம் இருக்கும். இதுதான் மலப்பிணியை முற்றுக அறுப்பது. இதன் பயனுக மலர்வதே கொச்சைவயம் என்பதும் கழுமலம் என்பதும். மலப்பொருள் மலமாற்றம் பெற்ற பொருளாக மாறுகிறது. கழுமலம் முழுமையாக மலம் நீங்கி, நன்மையை வெளிப்படுத்த முடிந்த நிலையைப் பெறுகிறது.

மன்னுயிர்க்கெலாம் மலம் நீக்கவேண்டும் என்ற காரணத்துக்காக அழுததும், திருமுறைப்பதிக வழியை மலர்வித்ததும் இந்த அருளனுபவத்தினுலேயே.

இந்நிலையே தண்ணீர் முத்தாதல். இதன் அடிப்படையிலேயே முத்துச்சிவிகை அமைக்கப்பெறுகிறது. எல்லாம் அருளே. இந்நிலையில் நின்று எழுப்பும் ஒலிதான் அருளொலி, இதுதான் உயிர்களின் வன்மையான மலங்களை நீக்கும் ஆற்றலுடையது.

திருக்கோலக்கா நிகழ்ச்சியிலேயே இவ்வருளனுபவத்தைப் பெற்றுவிட்டார் திருஞானசம்பந்தர். திருநனிபள்ளிக்குப் புறப்படும்போது அருள்பொழியும் மலராக நின்ருர். அத்தர் பியன்மேல் இருந்தபோது, தசகாரியப்படியில் இறுதிப்படியாகிய சிவபோகப் படியில் நின்ருர். அருளனுபவத்தைச் சிவபோகம் என்று நேரே சொல்லிவிட முடியாது. இந்நிலையில், அருளனுபவம், அவரைச் சிவபோகத்தில் நிறுத்தினுலும், அது, அவ்வானந்த வெளிப்பாட்டை அப்படியே உயிர்கள் பெற்றுப் பொலியுமாறு ஆக்கிவிடுகிறது. இங்கே அவர் பேசும்பேச்சு "ஆணை நமது" என்பது. இந்நிலையில் பரம்பொருளானது ஞானம் அடிப்பகுதியாக, சிவபோகப் பேரின்பம் முடிப்பகுதியாக அமைந்து இணைவதை அறிய முடிகிறது. ஆனுல், உயிரானது இன்பம் அடிப்பகுதியாக, ஞானம் முடிப்பகுதியாக நிற்கும் நிலை உடையது. இங்கே, உண்மைச் சிவபோகம் அமையாது, உபாயச் சிவபோகமே அமையும். அதுவே தசகாரியத்தின் இறுதிநிலை. இதுவே, பெருமானின் அடிமுடியைத் தன்னுள் அறியும் நிலை.

(3) சிவபோகத்தில் ஆழ்ந்துவிட வேண்டுமானுல், உயிரானது தன்னை மாற்றிப் பெருமானைத் துய்க்கவேண்டும். சிவானுபவத்தில் திளைத்தவர்கள், அவனடியின் கீழே நிற்றல் என்ற ஒன்றை மட்டுமே பெற்ருர்கள். சிவஞானம் அவன் திருவடி. சிவானந்தத்தில் திளைத்தவர்களாக இங்கு முன் கருதப்பெற்றவர்கள், தம் ஞானப்பகுதியும் இறை திருவடி ஞானப்பகுதியும் இணைய நின்ருர்கள். ஒரு குறிப்பிட்டகாலத்துக்குப் பிறகு அவர்கள், சிவானந்தத் தெள்ளமுதை அருந்தியிருக்கலாம். ஆனுல், திருஞானசம்பந்தர் அமைத்துக் காட்டிய திருநெறியத் தமிழ்நெறி யெனும் திருத்தொண்டு நெறியானது சிவபரம்பொருளை மாற்றி உயிரோடிணைந்து நிற்குமாறு செய்துவிட்டது. இங்கே,சிவபரம்பொருள் நினைத்துச்செயலாற்றுவதை, அப்படியேஇணைந்தறிந்து, அச் சிவபரம்பொருள் வகுத்த வழியிலேயே இணைந்து சென்று கொண்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

டிருந்த உயிர் தன் முன்னைய நிலையை மாற்றிக்கொண்டு, தான் வகுக்கும் அருட்செய்கைகளை அவன் மேற்கொண்டு செயலாற்றும் நிலையில், சிவபரம் பொருளையும் மாற்றி அமைத்துக் காட்டிவிடுகிறது. திருஞானசம்பந்தப் பெருமான் பேசும் பேச்சு "எனதுரை தனதுரையாக ஏன்று கொண்டான்" என்பதே. இதுவே, தமிழ்நெறி. இறைவனை—சிவபரம்பொருளை முழுமையாகத் துய்த்த நெறி. சிவபரம் பொருள் தாமே மாறி நின்றது. அதனுடைய தலையும் அடியும் இடம் மாறின. இதனைத் திருமூலர் "தட்டொக்க மாறினன்" என்றும் "வட்டமது ஒத்தது வாணிபம் வாய்த்ததே" என்றும் எடுத்துக் காட்டுவர். இதனால், சிவபரம்பொருளையே கடந்துவிட்டார்களோ இவர்கள் என்றோ, "இவன் என்றும் இவனே, இவன் அவனுமாட்டான்" என்ற சாத்திர நெறியும் பொய்த்துவிட்டன என்றோ கருதலாகாது. இந்நிலையைத்தான்

"குனியவலமாம் அடிமை"

என்று, காரைக்காலம்மையார் கூறினர். இந்நிலையினாலேயே, இறைவனும் வந்து நின்று, புனிதர் பேரவைமுன், தன்னையே அவர்களுக்கு அடிமையென ஆக்கிக் கொண்டான். இத்தகைய நிலை திருஞானசம்பந்தப் பெருமானுக்கு உண்டு என்பது சேக்கிழார் வாக்கு.

"திருமறை நம்பர்தாம் முன்பு அருள் செய்த அதனைச் செப்பும்
ஒருமையில் நின்ற தொண்டர், தம்பிரானார் பால் ஒக்க
வரும் அருட்செய்கை தாமே வகுத்திட வல்லோரென்றால்
பெருமறையுடன் மெய்த்தொண்டர்க்கு இடையீடு பெரிதாமன்றே"

என்பது, **பெரிய புராண 2495**ஆம் திருப்பாட்டாகும்.

எனவே, திருத்தொண்டின் நெறியைத் தொடக்கியும் முடித்தும் காட்டிய பெருந்தகையே திருஞானசம்பந்தப் பெருந்தகை எனக் கொள்ளவேண்டும். எனவே, காழியில் நிற்றல் என்ற அவருடைய வாக்கினுக்குப் ப்த்தாம் படியில் நிற்றல் என்பது பொருளாம். தன்னுடைய திருவடியை அனைவருக்கும் புகலியாக, புகலிடமாக ஆக்கிய பரமன், திருஞானசம்பந்தரைப் புகலியாகக் கொண்டு பல செயல்கள் ஆற்றிய நிலையில், திருஞானசம்பந்தரின் திருவடியே புகலிடமாயிற்று. இவ்வுண்மையை விளக்கும் முறையிலேயே, மூன்றும் நெறியாகிய 'புகலி' அமைகிறது.

எவர் ஒருவரைப் புகலிடமாகக் கொண்டு, அவரையே அடைக்கலமாக எண்ணி, அவருக்கு ஒருவன் தொண்டு நெறி பேணும் முறையில் தன்னை அடிமையாக ஆக்கினன் ஆனல், காலப்போக்கில், புகலிடமாக நின்றவரே, அடைக்கலங் கொடுத்தவரே, தன் அடியவனுக்கு அடியவராக ஆகுமாறு கொண்டு வந்து நிறுத்துகிற உளவு கொண்டதே திருத்தொண்டு நெறி.

"அம்மானுக்கு ஆள் ஆம் அது" ஒருவகையில் "சீர்வல்ல தாயம்" என்று அமைகிறது எனக் காரைக்காலம்மையார் குறிப்பிட்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

டருளினர். அன்பு என்னும் தாயத்தால் அவனை நம் தனி நெஞ்சின் உள்ளே அடைத்து மறைத்து வைத்துவிடலாம். அப்படிச் செய்தால் அவனை யாராலும் காண முடியாது என்று இந்நெறியை விளக்கிய பெருந்தகை காரைக்காலம்மையார். இந்நெறியின் தொடக்க நிலை இது, இந்நெறியின் இடை நிலையில் திருநாவலூரார், "ஆரூரில் அம்மானுக்கு ஆள்" என்று அம்மையார் எடுத்தாண்ட அதே தொடரை எடுத்துக்காட்டி, அந்த அம்மானையும் உடன் சேர்த்துக்கொண்டு வந்து, அடியவருக்கு அடியேன் என்று கூறியும் தொழுதும் வணங்கிய நிலையைத் திருத்தொண்டர் தொகையால் உணரலாம். இந்நெறியின் முடிவு நிலையே திருத்தொண்டர் சீர் பரவும் நிலை.

"திருநெறி' என்பது திருத்தொண்டு நெறியே. "திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரசன்" என்று நம்பியாரூரரால் அறிமுகப்படுத்தப் பெற்ற திருநாவுக்கரசரின் வரலாற்றைக் கூறப்புகும் சேக்கிழாரடிகள்,

> "திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறிவாழ
> வரு ஞானத் தவமுனிவர் வாகீசர்"

என்று தொடங்குவதால், 'திருநின்ற செம்மை' என்பதற்குத் 'திருத்தொண்டு' என்றே பொருள் கொள்ளுகிறார் எனக் கொள்ளலாம். திருத்தொண்டு நெறிக்கு மந்திர மொழியாக விளங்குவதே 'திருநாவுக்கரசு' என்ற சொல். அம்மந்திர மொழியை முதலிற் கூறி, அதன் பின்னரே அவர் திருத்தொண்டும், வரலாறும் கூறப் புகுகின்றார்.

'தொண்டனுக்குத் தொண்டனுதல்' என்ற நெறியை இரு பொருள் பெற எடுத்தாண்ட சொல்லே புகலி. இதனையே திருஞானசம்பந்தர் திருவாய்மூர்ப் பதிகத்தில் "இவராணீர்" என்ற தொடராற் குறிப்பிடுகிறார்.

தடுமாறு தொழிற் பெயருக்கு இலக்கண ஆசிரியர்கள் "புலி கொல் யானை" என்பதை எடுத்துக் காட்டுவார்கள். புலியைக் கொன்ற யானை என்றும் புலியால் கொல்லப்பட்ட யானை என்றும் இருவகைகளிற் பொருள் செய்யலாம். திருஞானசம்பந்தர் சைவத் திருத்தொண்டு நெறியை விளக்கும் முறையில் எடுத்தாளும் தொடரே "இவராணீர்" என்பது. இவரை ஆளாகக் கொண்ட நீர் என்றும் இவரால் ஆட்கொள்ளப்பெற்ற நீர் என்றும் இருவகையிற் பொருள் கொள்ளலாம். இதுவும் ஒருவகையில் தடுமாறு தொழிற் பெயரே. இவ்விரண்டையும் இணைத்து நிற்பதே திருத்தொண்டு நெறி.

திருக்கடைக் காப்பும் சேக்கிழாரும்

ஞானசம்பந்தர் அமைக்கும் திருக்கடைக் காப்பு முறையைச் சிந்திக்கும்போது, சில உண்மைகள் விளங்கும். சில பதிகங்களுக்குரிய திருக்கடைக்காப்பினை மட்டுமே சேக்கிழார் சிறப்பித்துரைக்கின்றார். "பண்பயிலும் திருக்கடைக் காப்பு", "சேணளவு பட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓங்கும் திருக்கடைக் காப்பு", "விரும்பும் மேன்மைத் திருக்கடைக் காப்பு" என்றும், இன்னும் பிற முறைகளிலும், சேக்கிழாரால் பாராட்டப் பெற்ற திருக்கடைக் காப்புக்கள் உள்ளன. அருளற் புதங்களை நிகழ்த்திய பதிகங்களுக்கு அமைந்த திருக்கடைக் காப்புக்கள் அடைமொழியுடன் அமைந்தவைகளாகும்.

இவ்வகையில், "தக்க திருக்கடைக்காப்பு" என்று இரண்டிடங்களில் சிறப்பித்துக் கூறுகிறார் சேக்கிழார். அதனுள் ஒன்று திருக்கோலக்காப் பதிகத்தின் திருக்கடைக் காப்பு. இவ்வாறு, சேக்கிழாரடிகள் இப்பதிகத்தின் திருக்கடைக்காப்புத் திருப்பாட்டினுக்குத் '*தக்க*' என்ற அடைமொழி அமைத்ததற்குக் காரணம் இப்பதிகமே பொற்றாளம் பெற்ற காலத்துப் பாடிய பதிகம் என்பதே. சேக்கிழார் கூறுவதற்கு மேலாக, ஆளுடைய பிள்ளையார் எங்கேயும் தாம் தாளம் பெற்றதாகக் குறிப்பிடவில்லை என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். நிகழ்ச்சியைப் பற்றிய வரலாற்று முறை எவ்வாறாயினும், திருக்கடைக்காப்பின் சிறப்பினை ஆய்ந்து காணுதல் என்ற வகையில் ஆய்ந்தால் திருக் கோலக்காப் பதிகம் பல்வகைச் சிறப்புக்களை உடைய பதிகம் என்பது தெரியவரும்.

ஞானவாரமுதமுண்ட பிள்ளையார், திருமுலைப்பாலருந்தியவுடன் அருளிய திருப்பதிகத்துக்குப் பிறகு, அதனை அடுத்துப் பாடிய பதிகம் திருக்கோலக்காப் பதிகமே. "தோடுடைய" என்றெடுத்த மெய்ம்மை மொழித் திருப்பதிகத்துக்குப்பின், திருக்கோயிலினுட் புகுந்து, தோணிபுரத்துப் பெருமானை வணங்கி, "இங்கு எனையாளுடையான் உமையொடும் இருந்தான்" என்ற அளவே கூறி, வெளிவந்து விடுகிறார். ஞானப்பாலருந்தி, ஞானம் பெற்று, திருக்கோயிற் பெருமானை வணங்கி, இல்லத்துக்கேகும் பிள்ளையாரைப்பற்றி, அவர் மேற்கொள்ளவேண்டிய தொண்டுபற்றி எடுத்துக் கூறுகிறார் சேக்கிழார்.

"இன்னிசை ஏழும் இசைந்த செழுந்தமிழ் ஈசற்கே
சொன்முறை பாடு **தொழும்பு** அருள் பெற்ற தொடக்கோடும்
……… ……… ……… விருப்பொடு பால்நாறும்
பொன்மணி வாயினர் கோயிலினின்று புறப்பட்டார்"

என்பது பெரியபுராணம் 1992 ஆம் திருப்பாடல்.

தொழும்பு—வழியடிமை. அரியவனை அவன் திருவடி நினைந்து மலர் வழிபாடு செய்து, அவ்வளவில் தொடர்ந்துவரும் அடிமை நிலையில், இப்பிறவியில், அவன் பெருமையை ஏத்திப் புகழ்ந்து பாடவேண்டும் என்பதே ஆளுடைய பிள்ளையாருக்குத் திருவருள் நினைவூட்டுகிறது. தமக்கு இத்தகைய அருள் நிகழ்வு நடைபெற்றமைக்கு உரிய காரணம், முற்பிறவியும் இப்பிறவியும் அமைந்த இணைப்பில் ஊன்றிய 'தொழும்பு' நிலை. இப்பிறவியில், நாம் அவனை ஏழின்னிசையால் இசைந்த செழுந்தமிழாற் சொன்முறை அமைத்துப்பாட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டும் என்பதே. இயற்றமிழ் என்ற ஒரு பகுதியை, இசைத்துப் பாடும் முறையை நாம் திருவாலங்காட்டு மூத்த பதிகங்களிற் காண லாம். ஆனால், அவன் பெருமையைப் பாடுவதாகத் தொடங்கி, திரு நெறிய தமிழ்வரையிற் கொண்டுபோய் நிறுத்த வேண்டியநிலை ஞான சம்பந்தருக்கு உண்டு என்பது உணர்த்தப் பெறுகிறது. இந்நிலையில் அவர் அருந்திய ஞானப்பால் உள்ளூற்றெழு அமுதமெனப் பெருகி, அகம், புறம் ஆகிய கருவிகளையெல்லாம் அறிவின்ப ஆனந்தங் கொள்ளச் செய்துவிடும் ஆற்றலுடையதேயெனினும், இவ்வகையில், திருமுலைப்பால் இத்தகைய ஆற்றலை அளிக்கக் கூடியதா ? என்பது ஒரு வினா திருமுலைப்பாலின் ஆற்றலைப் பற்றிய ஐயமா? என்று வினவுதல் ஒல்லாது.

திருஞானசம்பந்தர் திருவாக்கின் வண்ணம் இயலும் இசையும் ஒரு பொருளின் இருபகுதிகள். முன்னது தத்துவஞானம். பின்னது, அதனோடு இணைந்து, அதனைப் பிறர் உள்ளத்தில் பதியவைப்பதற் குரிய—இசையவைப்பதற்குரிய ஒலியமைப்பே. ஓர் எடுத்துக்காட்டு. தொல்காப்பியம் முதலிய இலக்கணநூல் படித்த ஒரு புலவன், ஒரு வெண்பா அமைத்தானாயின், அவன் யாத்த வெண்பாவினுள் அமை யும் இசை வேறு; இன்னிசை ஏழும் இசைந்த செந்தமிழ் வேறு. ஞானப்பாலானது இயலை ஒட்டிய அனுபவத்தை அளிக்கக்கூடிய இசையை மட்டுமே அமைக்குந்தன்மையினது. இதனைக் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள்,

"பூவான் மலி மணி நீர்ப் பொய்கைக்கரையின் இயற்
பாவான் மொழி ஞானப்பா லுண்டு"

என்று குறிப்பிட்டுக் காட்டுவதனால் ஞானநிலையில் நின்று அறிய முயன்றாலும், அறிதற்கரிய பெருமானை, அறிந்து, அறிந்த அந்நிலையை வெளிப்படுத்தும் அளவுக்குரிய இயலிசை என்ற ஒன்றை அளிக்கும் தன்மையதே அம்மை அளித்த திருமிகு ஞானப் பால். ஆனால், ஏழால் அமைந்த இன்னிசையில் பாடுதிறனை அவர் பெற்றுச் சிறக்க வேண்டும் என்பதே அவர் மேற்கொள்ளவேண்டிய தொண்டு. அடுத்த நாள் தோணிபுரத் திருக்கோயிலுக்குப் பெருமானை வணங்குவதற்கு வந்த பிள்ளையார், திருக்கோலக்காவுக்குச் செல்ல வேண்டும் என்ற குறிப்புடன் வந்தாரல்லர். தோணிபுரத்துத் திருக்கோயிலில் வீற்றிருந்த தாதையாரையும் மெய்த்தாயாரை யும் முன் வணங்கிப் போற்றுகின்றார். ஆனால், அப்போது திருப்பதி கம் ஏதும் பாடவில்லை. வணங்கி நின்ற அந்த அளவுக்குத்தான் அவர் செயல் அமைகிறது. பின்னர், திருவருள் வலத்தால், திருக் கோலக்காவுக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் உண்டாகிறது. இரண்டாம் நாள் காலையில் திருக்கோயிலுக்கு வந்தபோது பாடா மைக்கு உரிய காரணம் எதுவாக இருக்கும் என்பதையும் நாம் சிந் திக்க வேண்டும்.

திருக்கோலக்கா எங்கிருக்கிறது என்ற செய்திகூட அவருக்குத் தெரிந்திருக்க வழியில்லை. சிவபாத இருதயருக்கோ, இவர் இனிமேல்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எத்தகைய தொண்டினை மேற்கொள்ளப் போகிறார் என்பதை அறியவோ, எண்ணவோ, முயற்சிக்கவோ இயலாதநிலை. அடுத்த நிகழ்ச்சி என்ன என்பதை அறியாத நிலையே இவருடையதும். திருக்கோயிலுக்கு வந்து வழிபாடு செய்தபோது, திருவருள் உணர்த்துவதால், திருக்கோலக்காவுக்குப் போகவேண்டும் என நினைக்கிறார். அந்த அளவிலேயே, சிவபாத இருதயரும் இணைந்துநிற்க, ஞானசம்பந்தர் திருக்கோலக்காவுக்குச் செல்கிறார்.

திருக்கோலக்காத் திருக்கோயிலினுள் சென்று வழிபாடு செய்ய எண்ணிய நிலையில் பதிகம் பாட முற்படுகிறார். திருப்பதிகத்தின் முதல் திருப்பாட்டின் வண்ணம், அவருக்குத் தோற்றிய காட்சியானது, திருக்கோலக்காப் பெருமான் சடையும் பிறையும் தாங்கி, சாம்பற் பொடியினைப் பூசி, கோவணம் தரித்திருக்கிறவனாக அமைகிறான்.

"சடையும் பிறையும் சாம்பற்பூச்சும் கீழ்
உடையும் கொண்ட வுருவம் என்கொலோ"

என்பது, திருக்கோலக்காத் திருப்பதிகத்தின் முதல் திருப்பாட்டின் இரண்டாம் பகுதி. அடுத்து, இரண்டும் ஐந்தும் ஆகிய திருப்பாட்டுக்களில் மட்டுமே உமையொரு பாகனும் தன்மை பேசப்பெறுகிறது. அதனை அடுத்து, 6ஆம் திருப்பாட்டில் 'அடிகள்' என்று கூறும் குறிப்பையும் உளங்கொள வேண்டும். முத்துச் சிவிகை அளித்த நிகழ்வினையொட்டி, உடன்சென்று திருநெல்வாயில் அரத்துறை இறைவனைப் பாடுகின்றகாலத்து அஃத்திருப்பதிகம் முழுவதும் 'அடிகள்' என்ற சொல்லாலேயே இறைவனைக் குறிப்பிட்டிருப்பதும் இங்கே காணத் தகுவது. மேலும், 7, 8, ஆம் திருப்பாட்டுக்களில் 'பண்' என்பதன் இலக்கணத்தை வரையறை செய்து, 'குழலார் பண்' எனவும், 'குறியார்பண்' எனவும் அமைத்தருளுகின்றார். குழலார் பண், குறியார்பண் என்ற இவைகளையொட்டிய நெறியால் தொழுதல் ஆகியவைகளை ஞானசம்பந்தர் வேறொரு திருப்பதிகத்தில் எடுத்துக் காட்டி விளக்கியுள்ளார்.

"குழலார் பண்செய் கோலக் காவுளான்
கழலான் மொய்த்த பாதம் கைகளால்
தொழல்"

என்ற திருக்கோலக்காப் பதிகத்து 7ஆம் திருப்பாட்டு வரிகளைத் திருப்புகலூர்த் தேவாரம் 6ஆம் திருப்பாட்டின் முதலிரண்டு வரிகளோடு இணைத்துக் காணவேண்டும்.

'கழலின் ஓசை சிலம்பின் ஒலி ஓசை
கலிக்கப் பயில் கானில்
குழலின் ஓசை குறட் பாரிடம் போற்றக்
குனித்தான் இடம் என்பர்'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்ற வரிகளில், இறைவன் திருநடம் இயற்றுகின்றான் என்பதைக் 'குனித்தான்' என்று குறிப்பிட்டார். அவன் குனித்தான் ஆதல்—திருக்கூத்து இயற்றல் எற்றுக்கு?

வீரக்கழலின் ஓசையும் சிலம்பின் ஒலியும் சிலம்பின் ஓசையும் ஆகிய மூன்றும் இணைந்து நின்று கலந்து, ஓர் ஓசையாய் மிக்கெழுந்து விளங்க, அவ்வோசையானது குழலின் ஓசையாக அமைய, அது குறள் (குட்டையான பூதம்) மூலம் இவ்வுலகில் போற்றப் பெறுமாறு ஆடுகின்றான் என்பது அவ்வரிகளின் பொருள்.

வீரக்கழலிலிருந்து வெளிப்படும் ஓசை என்பது வலக்காலில் வெற்றிக்கென அணிந்த கழலிலிருந்து வெளிவருவது. இனி, வீரக் கழல் அணிந்த திருவடியில் உள்ள சிலம்பின் ஒலியும் இணைய, இரண்டுமே வெற்றியை ஒட்டிய ஓசை; ஆண்மைபற்றிய குறிப்புடைய ஒலி. அடுத்த நிலையில் அமைவது தூக்கிய திருவடியில் அமைந்த சிலம்பின் ஓசை. இது அம்மை பாகத்தது; பெண்மை பற்றிய குறிப்புடையது. அருளில் ஆழ்த்துவது.

இனி, இசையை விளக்கும் பறவைகளில் வண்டு, தேன் என்ற இரண்டினங்கள் பேசப் பெறுகின்றன. வண்டினம் யாழ் ஒலியைப் போன்ற ஒலியைத்தான் எழுப்பும்.

அது மறையை—தத்துவ உண்மை வேர்ச்சொற்களை—இறைவனின் அருமையாந்தன்மையை—இறைவனின் 'இயல்' 'இசை' என்ற தன்மைகளில் முதல் நின்ற 'இயல்' என்ற தன்மையை, இசைய வெளிப்படுத்துதல் ஒன்றே செய்யவல்லது. இனி, 'தேன்' என்ற வகையிலமைந்த வண்டினங்கள் ஏழாய் நின்ற இன்னிசை அமைப்புக்களை விரித்துணர்த்தும் முறையில் குழலொலியாக நிறுத்தி வெளிப்படுத்துவது. இத்தகைய விளக்கத்தைத் திருஞானசம்பந்தர், திருக்கானூர்ப் பதிகத்தின் மூன்றுந் திருப்பாட்டில்

"சிறையார் வண்டும் தேனும் விம்மு செய்ய மலர்க்கொன்றை
மறையார் பாடல் ஆடலொடு மால்விடைமேல் வருவார்"

என்று காட்டி, வண்டு மறையை இசைத்து வெளிப்படுத்தும், என்றும், தேன் என்ற இன வண்டு பாடலுக்கும் ஆடலுக்கும் இணைய அமைக்கும் ஏழிசை அடிப்படை ஒலியை வெளிப்படுத்தும் என்றும் வேறு பிரித்துக் காட்டியுள்ளார். மேலும், "கொன்றைத் தேனார் போது" என்று இணைத்துச் சொல்லுவதை அடிக்கடி மேற்கொள்வார் பிள்ளையார். கொன்றை வேதத்தை ஒத்தது. 'தேனார் போது' என்பது இறைவியைக் குறித்து, அவள் கொன்றையின் அழகை நாம் துய்க்கும் வண்ணம் நம்மை நோக்கி வந்து, தேனென அமைந்த மென் சொல் இன்பம் தந்தவள் என்றும் விளக்குவது திருஞானசம்பந்தர் மேற்கொள்ளும் முறை. முன்னது இசையாக நிற்பது என்ற ஒன்றுமட்டுமே, அது யாழை ஒத்தது. பின்னது ஏழிசை, இன்னிசை, என்ற நிலையில் அறத்தை உள்ளீடாக அமைத்து, அதனைச் செயற்படுத்தும் நிலையில் அமைந்தது. அது குழல் இசையை ஒத்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எனவே, வீரக்கழல், சிலம்பு எழுப்பும் இருவகைஒலி, ஓசைகள் ஆகியவைகளை இணைத்து, பின்னர், குழலோசையாக இந்தப்பாரிடம் போற்றுமாறு தருவது குறள். இங்கே, குறள் என்பது 'திருவிருக்குக் குறள்' என்று கொள்வது; ஒருவகை. திருவிருக்குக்குறள் போன்ற பதி கங்கள் பண் அளவை முறைக்கு இயையாதவை என்று கொள்ளுகிற வர்கள், குறட்பூதம் அத்தகைய குழலின் ஓசைபோன்ற ஓசையை அமைக்க ஆடி எழுப்புகின்றன என்று உரை கொள்வர். காரைக்கா லம்மையார், "அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருந்து கண்டு, பாடி மகிழவேண்டும்" என வேண்டுவதாலும், தாம் பேயுருப் பெற்றபின், "நற்கணத்துள் ஒன்ருய நாம்" என்று சிறப்பிப் பதாலும், இத்தகைய பேய்கள் இறைவன் எழுப்பும் மூவகை ஓசை களையும் கலந்து குழலோசைபோல அமைத்துத் தருகின்றன என்றும் கொள்ளலாம்.

திருஞானசம்பந்தர் "இருக்குமொழிப் பிள்ளையார்" என்று அடிக்கடி எடுத்தோதப் பெறுபவர். ஆகையால், 'குறள்' என்ற அமைப்பில் 'குழலோசை' அமைப்பினைச் சுவாமிகள் அமைத்திருக்க வேண்டும் என்று கொள்ளலாம். வேறும் ஒன்று. திருக்குறள் போல, அது ஏழுசீர்களாயும் இப்பாரிடம் போற்றும் பெருமையுற்றதுபோல ஏழு வகையாக இயங்கும் இன்னிசைப் பதிக அமைப்பானது மக்க ளின் நல்லுடம்பில் நின்று சிவபோகப் பேரின்பத்தைக் கொடுத்து என்றும் அழியா நிலையை உண்டாக்கும் எனவும் குறித்ததாகக் கொள்ளலாம். யாழொலிக்கும் குழலொலிக்கும் வேறுபாடு ஒன்று சுவாமிகளின் விளக்கத்தால் தெரியவருகிறது. யாழொலி வெற்றி, ஆணவத்தை அழுத்துவது போன்ற குறிப்புக்களைக் கொண்ட, மந்திர நுட்பம் அமைந்த மொழியொலியாக அமையும். குழலிசையானது அறநெறியை அடிப்படையாகக் கொண்டு, அறம் என்ற ஒன்றைச் செயற்படுத்தும் ஆற்றலே ஏழு பகுதி இசையாகப் பிரிந்து உடம்பிற் புகுந்து செயற்படுத்துவது என அமையும். அடுத்து,

"குறிகலந்த இசை பாடலினன் நசையால் இவ்வுலகெல்லாம்
நெறிகலந்ததொரு நீர்மையனாய் எருதேறிப் பலிபேணி"

என்ற திருப்புகலூர்த் திருப்பதிக முதற்பாட்டில், குறிகலந்த இசை பாடலினன் என்றும் நெறிகலந்ததொரு நீர்மையினன் என்றும் இறை வன் சம்பந்தரால் குறிக்கப் பெறுகின்ருன்.

அறநெறிக்குறிப்புடன், அறத்தின் அடிப்படையில் செயலாற்று தலைக் குறிக்கோளாகக் கொண்டு— அத்தகைய குறிப்பைக் கலந்த இசைப்பாடல்—ஏழிசைப் பாடலைப் பாடினன் என்றும், அவ்வாறு அவன் பாட வந்தபோது அறநெறியோடு தம்மைக் கலந்துகொண்ட தன்மையன் என்பதை வெளிப்படுத்தும் தன்மையில் எருதேறினன் என்றும் பலிதேர்வது என்பதை உபாயமாகக்கொண்டு உலகத்தவர் மேல் எழுந்த நசையால், அருளால் இவ்வுலகை நோக்கி வந்தான் என்றும் குறிப்பிட்டருளினர். இவ்வளவையும் திருப்புகலூரில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வளர்ந்த நிலையில் தொண்டர்களுடன் கலந்து இறைவன் அருமை பெருமைகளைப் பேசும் சம்பந்தர், இவைகளுக்கெல்லாம் மூலமாகத் திருக்கோலக்காத் திருப்பதிகத்தில்

" குழலார் பண்செய் கோலக் காவுளான்
கழலான் மொய்த்த பாதம் "

என்றும்,

' குறியார் பண்செய் கோலக் காவையே
நெறியாற் றொழுவார் "

என்றும் முறையே 7, 8 ஆகிய திருப்பாட்டுக்களிற் குறிப்பாக அமைத்துக் காட்டினர். இவைகளை விளக்கும் முறையில் திருக் காப்பினைத் தக்க திருக்கடைக் காப்பாக அமைக்கின்றுர்கள்.

" நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே "

என்பது, திருக்கோலக்காத் திருப்பதிகத்துத் திருக்கடைக் காப்பு.

"குலங்கொள் திருக்கோலக் காவுளான்" என்பதை 'நிலவும் புனலும்' எனத் தொடங்கும் வேணுபுரத்துத் திருப்பதிகத்தின் திருக்கடைக் காப்பில்

" .... வேணுபுரத்திறையை
நலமார் தருஞான சம்பந்தன் சொன்ன
குலமார் தமிழ் "

என்று கூறுவதால், மூங்கிலை இடமாகக் கொண்டு, மூங்கிலுக்கு மூல மாக நின்ற இறைவனை ஒத்த மூங்கிற் குலமாகிய ஏழிசை இன்னமுதப் பாடலை வெளிப்படுத்தும் இயல்புடைக் குலத்தில் ஒருவனாக என்னை அமைத்தான் என்ற குறிப்பில், குலங்கொள் கோலக்காவினன் என்றுர்.

'நலங்கொள்ளுதல்' என்பது கழலொலி சிலம்பொலி ஓசை ஆகிய மூன்றும் இணைந்து, அறநெறியின் அடிப்படையில் செயற் படுத்தக்கூடிய ஏழிசை இன்னமுதாக மலரவைக்கும் நலங் கொண்ட ஞானசம்பந்தன் என்ற குறிப்புடையது. வேணுபுரத்தரன் அருளால் (இதற்குமுன்னுள்ள தலைப்பில்கூறப்பெற்றது) ஐந்தெழுத்து ஒலிவந்து அமைய, அந்நலம் கொண்டேன் என்ற கருத்தமைய வைத்து, இதனால் வரும் பயனை "வலங்கொள்" பாடல் என்றுர்.

ஏழிசை இன்னமுதத்தால் யான் முன் கொண்ட பேருணர்வின் இயல் திறத்தை, உலக மக்கள் மலம் நீக்கி, நலம் பெறும் வகையில் பாடும் வலிமை, பெற்றி ஆகியவைகளைப் பெற்றேன் என்றும், என்னிலையை நோக்கிய காலத்தும் வளங்கொள் பாடல் என்றும், கேட்பார் இதன் மூலம் செயற்பட்டு, மலநீக்கம் பெற்று, இறைவன் திருவடியை அடைந்து, பேரின்பப் பயன் துய்ப்பார் ஆதலின்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவரனைவரும் வேணுபுரத்து இறைக்குலம் ஆதலாகிய வலம் கொள்வர் என்றும் குறிப்பிட்டார்.

வேணுபுரத்திறைவன் தாமே மூங்கிலாய்—வேணுவாய் நின்றவன் ஆதலின், எருது அறமாக நிற்க, அறத்தின் அடிப்படையில் செயலாற்ற வைத்தல் வேண்டும் என்ற குறிக்கோளுடன் தானே எழுவகைத் தொளைகளையுடைய குழலென, மூங்கிலென நின்றான். இவ்வகையில், அவனே ஏழிசையாய், ஏழிசையை வெளிப்படுப்பானாய், ஏழிசைப் பயனாய் அமைந்தவன் என்றும் குறிப்பிட்டார்.

வேணுபுரமாக நின்ற பதியே, ஞானசம்பந்தப் பெருமான் காலத்தில் ஏழிசைப்பயனை அனைவருக்கும் தந்து உலக மக்களெல்லாம் இசைநலம் பெற்ற காரணத்தால் 'கோலக்கா' என வழங்கப் பெற்றிருக்குமோ என்பது கருதத்தக்கது. இவ்வகையில் 'வேணு' என்ற சொல் ஏழிசையாய் வெளிப்படுத்தும் இடம் என்ற பொருளில் 'சப்தபுரி' என வழங்கப்பெற்று, அதுவே பின்னர், 'சப்தபுரீசர்' என வழங்கப் பெற்றிருக்குமோ என்பதும் கருதத் தக்கது. வேறும் ஒன்று.

ஒலியும் ஓசையும் கலந்து இணைந்து பின்னர் எடுக்கும் பிறப்பே எழுவகை இன்னிசை. கழல் ஒலியும், அக்கழலுடன் அணியப்பெற இருந்த சிலம்பொலியும் ஆண்மைப்பகுதியைச் சார்ந்தவை. ஓசையும் இணையவேண்டும். அது சிலம்போசை. அது இறைவியைச் சார்ந்தது. அதனாலேயே, திருக்கோலாக்கா இறைவியின் பெயர் 'ஓசைகொடுத்த நாயகி' எனவழங்கப்பெறுகிறது. இங்கே கூறப் பெற்றவைகளோடு, திருஞானசம்பந்தரை மதுரையில் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் எவ்வாறு கண்டார்கள் என்ற விளக்கத்தையும் இணைத்துக் காணவேண்டும். சேக்கிழார், 'ஞானத்தின் திருவுரு' எனவும் 'நான்மறையின் தனித்துணை' எனவும் ''வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்து'' எனவும் கண்டார்கள் என்பதோடு நிறுத்தாமல்,

> ''தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர் தொடுக்கும்
> கானத்தின் எழுபிறப்பு''

என்றும் கண்டார்கள் என்று கூறினர். ஞானசம்பந்தரின் திருவுருவமே இறைவன் பெருமையை ஏழிசை, இன்னிசை, நல்லமுதப்பாடல்களாக, ஒலி ஓசை ஆய எல்லாவற்றையும் இணைத்து, அமுதத்துடன் கலந்து ஏழிசையைப் பிறக்கவைக்கும் திருவுரு என்று கண்டார்கள் என்று சேக்கிழார் குறிப்பிட்டார்.

இயல் இசை மட்டுமே தெரிந்த என்னை, திருக்கோலக்கா இறைவன் கோவணந்தரித்த உடையில் நின்று, என்னையே ஏழிசையாக ஆக்கினான். இயலை ஒட்டிய இசைமட்டுமே தெரிந்திருந்த என்னை, ஏழ்வகை இன்னிசை வல்லவனுக்கித் தன் குலத்தொடு என்னை இணைத்துக் கொண்டான். குலங்கொள் தமிழை வெளிப்படுத்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வல்ல யான் அவன் குலமாகிய வேணுக்குலத்தான் ஆனேன். அந்நலம் பெற்றேன். ஏழின்னிசைத் திருப்பதிகம் மூலம் இறைவன் நலஞ்சார்புகழை வெளிப்படுத்தும் வல்லமை பெற்றேன்; வலங் கொண்டேன். என்மூலம் இனி, பிறக்கப் பெறும் தமிழ் வேணுபுரத் திறையின் புகழை உள்ளிட்ட குழல் என்னும் குலமார் தமிழாக அமைந்து வெற்றியைத் தரும் என்று தம் திருக்கடைக்காப்பினைத் தக்க திருக்கடைப்பாகவே அமைத்தருளினர் என்று கொள்ளும் வகையில் அவருரை அமைந்தது.

திருக்கோலக்காப் பதிகம் முழுவதுமே, திருஞானசம்பந்தர் மேற் கொள்ள வேண்டிய பணியை வரையறைசெய்து வலம் பெற வைக் கும் பதிகமாக அமைந்தது எனக் கொள்ள வேண்டும். பெரு நெறியை வளர்க்கும் ஆற்றலை ஞானப்பால் மூலம் பெற்ற சம்பந்தர், அதனை வெளிப்படுத்தித் தொண்டு முறை ஆற்றுதற்குரிய ஏழிசைப் பெருநெறியைத் திருக்கோலக்காவிற் பெற்றார் எனக் கொள்ளுதல் வேண்டும். ஞானசம்பந்தப் பெருமான் ஞானத்தின் திருவுருவாக மட்டும் நின்றார் என்று கொள்ளலாகாது. கானத்தின் எழுபிறப்பாக வும் நின்றார். முன்னதற்கு அம்மையப்பர் வடிவம், பின்னதற்குக் கோவண உடை வடிவம். ஞானப்பாலைக் கொடுத்தபோது அம்மை திருமுலைப்பாலுடன் சிவஞானத்தைக் கலந்ததுபோல, இங்கே அம்மையானவள் ஒலியுடன் ஓசையைக் கலந்து, மந்திரமும் தாள மும் ஆக நிறுத்தி, ஞானசம்பந்தருக்கு அளித்தாள். அங்கே யாரளித்த பாலடிசில் உண்டனை? என்ற கேள்வி எழுந்த காரணத் தால் விடையும் பிறவும் அகச்சான்றாக நின்றன. அத்தகைய கேள் வியை யாரும் இங்கே எழுப்பவில்லை. விடையும் அவ்வாறு அமைய வில்லை. எனினும், 'தோடுடைய' என்ற பதிகம்போலவே இப்பதிக மும், தத்துவ, மந்திர, இசை நுட்பங்களைக் கொண்டு விளங்கும் பதிகமேயாகும். ஞானம் பெற்றது ஒன்றே காழியில். செயற்பாட்டு நிலை அங்கே இல்லை. தொண்டு நெறிக்குறிய எல்லா விளக்கங்களை யும், வன்மைகளையும் இணைத்து, உலகமக்கள் அனைவரும் 'காழிக் குலம்' என்ற குலவுரிமையைத் தந்தது கோலக்கா.

திருக்கோலக்காவுக்குப் புறப்படும் முன் தோணிபுரத்திறைவனைச் சென்று கண்டார். அப்போது பதிகம் ஏதும் பாடவில்லை. தொண்டு நெறிக்குரிய, திருநெறியத் தமிழ்த் தொண்டுக்குரிய சிவஞானம் பெற்ற பிறகும் தடை. ஆம், இயக்கமுறைச் செயல்வழித் திட்டம் ஞானத்தால் மட்டுமே வருவதன்று.

செய்திகளைத் தெரிந்து கொள்வதாலேயே செயல்படுவான் என்று சொல்ல முடியாது. வாய்மை என்பது அறக்கொள்கை, அது செயற்பாடற்றது. அதற்கு இயக்க வடிவம் கொடுப்பது என்பதே "சட்டமாக்குதல்" என்று சொல்லப்பெறும். எல்லாச் சட்டங்களும் அறக்கொள்கையின் அடிப்படையிலேயே அமைக்கப் பெற்றிருக் கின்றன என்று கொள்ளலாமா என வினவினால், காலமாறுபாடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களில் தேவைப்படும் சில செய்திகளுக்கு, அறக்கொள்கைகள் என்ற பெயரைக் கற்பனை வளங்கொண்டு கொடுத்துவிடுவதுமுண்டு. கற்பனையோ, உண்மையோ அறக்கொள்கைகள் என ஏற்றுக் கொண்டுவிட்டால், இயக்க வடிவம் அமைக்க முற்பட வேண்டும். அவைகளே சட்டங்கள் ஆகும். மக்கள் நடைமுறைக்கே வராத சில சட்டங்கள் சட்டத் தொகுப்புக்களில் இருக்கும். அவைகள் இயக்க உருப்பெற்றிருந்தும் இயங்காமைக்குக் காரணம் உள்ளீடின் மையே.

திருஞானசம்பந்தர் மெய்ஞ்ஞானத்தை 'நலம்' என்றும், இயக்க வழிச் செயற்பாட்டுத் திட்டத்தை 'வலம்' என்றும், குறிப்பதாகக் கொண்டால், திருக்கோலக்கா நிகழ்ச்சியானது நலங்கொள் ஞான சம்பந்தரை வலங்கொள் வாய்மையாராக ஆக்கியது என்று கொள்ள வேண்டும். திருக்கோலக்காவிலிருந்து திரும்பும்போது, மீளவும் திருத்தோணிபுரம் சென்று, முன்பே திருப்பதிகம் பாடாமற் சென்ற குறை தீரும் வகையில் "பூவார் கொன்றை" என்ற பதிகத்தைப் பண் அமைப்புடன் பாடி முடிக்கிறார்.

மேலே அமைத்துக் கண்டவகையில், திருநெறிய தமிழின் தன் னுண்மை நிலையானது திருவடி நினைவு மலர் வழிபாடு எனத் தொடங்கி, தொண்டுக்கும் திருத்தொண்டுக்கும் உரிய சிவஞானப் பேருணர்வு மயமாகவே நிற்றல் என்ற முதல் நெறியாயிற்று; அதுவே, இயக்கநிலைச் செயற்பாட்டு வடிவம் எனப்பெறும் தன்னுண்மை விளக்க நிலையாக அமையும்போது ஏழென நின்ற இன்னிசை அமுதில் சிவஞானம் குழைத்த தமிழால் வெளிப்படுத்துதல் என்ற இரண்டாம் நெறியைக் கொண்டது. இவ்வகையில் பிரமபுரமும் வேணுபுரமுமாக நின்ற திருஞானசம்பந்தர், இனி, புகலியாக அமைதல் வேண்டும்.

மேலே சொன்ன இரு நெறிகளாலும் திருஞானசம்பந்தரின் கொள்கை நிறைவுபெறும் நிலை தோன்றவில்லை. தாவில் சராசரங் களெல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார் எனத் தம்மை நிறுத்தினால், ஞானசம்பந்தரின் ஏழிசை இன்தமிழ்ப் பதிகங்களைக் கேட்பவை, கேட்பவர் என்ற இப்படிப்பட்டவர்களே சிவம் பெருக்கும் நிலை பெறுவர். கேட்க இயலாதவை கேட்க முடியாதவை என்ற நிலை களில் அமைபவைகளுக்கும் வாழ்வளிப்பது எப்படி? இதனை ஒட்டிய அடிப்படைநெறி ஒன்றே மூன்றும் நெறியாக அமைகிறது.

சிவமாகப் பொலிவுடன் நின்று, அப்பொலிவினால் எல்லாப் பொருள்களையும் சிவமாகப் பொலிய வைக்கும் தன்மை என்பதே அம் மூன்றும் நெறி.

திருக்கோலக்கா நிகழ்வுக்குப் பின் சுவாமிகள் வரலாற்றில் அமையும் சிறப்பு நிகழ்ச்சிக்குரிய திருத்தலம் திருநனி பள்ளியே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநனிபள்ளியும் பகவதியம்மையும்

சைவசமய நற்குரவர் பெருந்தகை நால்வருக்கும் பொதுவின் அமைந்த வாழ்த்துச் செய்யுள் ஒன்று,

'' பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடி போற்றி
வாழி திருநாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி''

என நின்றது. இதனுள், நம்பியாரூரர் பெருமானை உலகுக்குக் கொடுத்த திருத்தலம் திருநாவலூர். அடியவர் பெருமையை விளக்க வரும் வன்தொண்டரை இவ்வுலகுக்கு வழங்கிய பெருமையுடையது திருநாவலூர் ஆதலின், வன்தொண்டரை வாழ்த்துவதற்கு முன் 'திரு நாவலூர்' வாழ்க என்றார். அவ்வாறே, உலகத்துயிர்களுக்கெல் லாம் பிறப்பறுக்க வந்த பெருந்தகை, எவ்வளவு தொகையினராக வரினும் வருக, பிறப்பென்னும் பேதைமை நீக்கிச் சிறப்பென்னும் செம்பொருள் காட்டவும், அதனொடு இணைத்து இன்புறுத்தவும் வல் லேம் என்று, இருகை நீட்டி வாரீர் வாரீர் என அழைத்த, பிறப்பில் பெருமானைத் தம் வயிற்றில் ஏற்று, இவ்வுலகில் தளர்நடை பயில வைத்த திருத்தவத்து நிறை கிழத்தியே பகவதியம்மை.

திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் அருளிய சாத்திர நூல், மெய்கண்ட சாத்திரங்கள் என்ற தொகை நூலில் இரண்டாவதாக அமைந்த பெருமையுடையது. திரு ஞானசம்பந்தப் பெருந்தகை யுடன் ஒருவகையில் இணைந்து நிற்கும் பெருமையுடையது அது. உமையளித்த ஞானப்பால் அருந்திய பின்னர், 'ஞானசம்பந்தர்' எனப் பெற்றார். ஞானசம்பந்தர் என்ற பெயரினை அடிப்படையாக வைத்தே உலகினரால் உணரப் பெற்றவர். அந்நிகழ்ச்சிக்கு முன் அவர் எந்த ஒரு பெயரால் இவ்வுலக மக்களால் உணரப் பெற்றார்? இல்லை. அவ்வாறே, திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் தாம் அருளிய சாத்திரநூலைக் கொண்டுபோய்த் தில்லையில் திருச்சிற்றம் பலத்துக்கு முன் உள்ள 'திருக்களிற்றுப்படி' என்னும் இடத்தில் வைத்தார். இருபக்கங்களிலும் யானையின் துதிக்கை வளைந்து நிற்கும் அமைப்பில் உண்டாக்கப்பெற்ற ஐந்துபடிகளே திருக் களிற்றுப்படி. பஞ்சாக்கரப்படி என்றும் வழங்குவர். திருக்கட வூராரின் சாத்திர நூல் தன்மேல் வைக்கப்பெற்றதும், கல் வடிவில் இருந்த யானைத் துதிக்கை, உருப்பெற்று, தன் மேல் வைத்த நூலை எடுத்து, கூத்தப்பெருமான் திருவடியில் வைத்தது. அவ்வருள் நிகழ் வுக்குப் பின், அந்த நூல் ''**திருக்களிற்றுப்படியார்**'' என்ற பெய ரைப் பெற்றது. இன்றுவரை அந்த ஒரு பெயரால்தான் அது உணரப் பெறுகிறது. ஆனால், அதனை ஆக்கிய ஆசிரியர் அதற்கு ஒரு பெயர் வைத்திருக்கத் தானே வேண்டும்! அப்பெயர் இது என இதுவரை உணரப் பெறவில்லை. அவ்வகையில், திருஞானசம்பந்தரைப் போன் றதே திருக்களிற்றுப்படியார் என்ற சாத்திர நூலும். அச்சாத்திர நூல், சைவசமய நுண்பொருள்களை நாம் எவ்வாறு தெரிந்துகொள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டும் என்று தெரிவிக்கும் முறையில் பல நுட்பமான செய்திகளை வழங்குகிறது. அது விடுக்கும் வினா.

"உலகர் முன்னிலையில், திருமண மன்றத்தில், ஒருபெண்ணின் கையைப் பிடித்துக்கொண்டு, சத்தியம் செய்து, (ஆணைகூறி) சிவானந்தப் பெருவாழ்வை விரும்புவோர் யாவராயினும் வருக, கூட்டம் கூட்டமாக வரினும் சரியே, தனித்தனியே வரினும் சரியே, நல்லோர் தீயோர் என்ற பாகுபாடு இல்லை. சாதனம், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நிலைகளில் எந்த நிலையில் உள்ளீர் என்பது தேவையில்லை. வந்துவிட்டால் இனிமேல் கடுமையான பயிற்சி தருவோம் என்பதும் இல்லை. யாரும் வரலாம். உங்கள் விருப்பம் ஒன்றே உங்களைச் சிவானந்தப் பெருவாழ்வில் திளைக்க வைப்பதற்கு உரிய ஒரே தகுதி. சேரவாரும் செகத்தீரே! என்றழைத்தார், திருஞானசம்பந்தர் என்ற வரலாற்றுண்மையைத் தம்முடைய உள்ளத்திற்கொண்டு, இவ்வாறு, இவ்வுலகில், எந்த ஒரு சமயத்திலாவது, ஒருவர், அனைவரும் அறிய, மன்றத்தில் நின்று, பெண்ணின் கையைப் பற்றிக் கொண்டு சத்தியம் செய்தவர் உண்டா? அன்று முதல் இன்று வரை, எந்தச் சமயத்தவராவது சொன்னார் என்று வரலாறு காட்டமுடியுமா? என்று வினவும் முறையில் *திருக்களிற்றுப் படியார்* என்ற சாத்திர நூலின் 65ஆம் வெண்பா

"இன்று இச் சமயத்தின் அல்லது மற்றேழையுடன்
ஒன்று சொலி மன்றத்து நின்றவரார்—இன்றிங்கே
அங்கம் உயிர் பெறவே பாடும் அடியவரார்
எங்குமிலை கண்டாய் இது"

என அமைகிறது. இவ்வாறு, கொள்ளை கொள்ள வீடு உதவிக் கூற்றைப் பிடர் பிடித்துத் தள்ளும் திருஞானசம்பந்தப் பெருந்தகைக்கு, உலகத்துயிர்களின் பிறப்புக்களெல்லாம் அறுக்க வந்த பிறப்பிலிக்குப் பிறப்பளித்த தெய்வத்தாய் பகவதியம்மை. திருக்குறள், தொல்காப்பியம் என ஒவ்வொன்றை இயற்றியே உலகப் புகழ்பெற்ற சான்றோர்களைப்போல, திருப்பதிகப் பெருவழியைத் தொடக்கிய, திருநெறித் தமிழ்நாதனைப் பெற்றெடுத்த பகவதியம்மையாரைத் தன்னிடத்தில் தோற்றுவித்த ஒரே ஒரு காரணத்தினால், ஞாலம் அளந்த மேன்மைத் திருநெறித் தமிழ் வரலாற்றில் அழியாப் புகழ்பெற்ற திருவுடையதே திருநனிபள்ளி. ஞானசம்பந்தப் பெருமான் தாயாகிய பகவதியம்மை அவதரித்த தலம் திருநனிபள்ளி.

"தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை" என்பது பெண்மை நலங்கனிந்தொழுகும் ஆழ்வார் பெருந்தகை ஆண்டாள் நாச்சியாரின் அனுபவ வாக்காகும். ஆனால், பகவதியம்மையாரின் பிறப்பு இல்லையேல் திருநனிபள்ளியும் இல்லை; திருஞானசம்பந்தரும் இல்லை. தன்பிறப்பால் இருவர் புகழை உலகறியவைத்த பெருமையுடைய பகவதியம்மையை ஈன்றளித்த திருவுடையதே நனிபள்ளி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடனாற்றும் சம்பந்தர்

திருஞானசம்பந்தருக்கு உலகவர் காண நடைபெற்ற அருளியற் செய்திகளை அறிந்து, திருநனி பள்ளியைச் சார்ந்தோர் சீகாழிக்கு வந்து ஞானவாரமுதமுண்ட பிள்ளையாரைக் கண்டு வணங்கினார்கள். பலநாள் தங்கியிருந்தார்கள். திருநனிபள்ளியைச் சார்ந்தோர் மட்டுமன்று.

"ஆளுடைய பிள்ளையார் தமை முன்னம் அளித்த தாயார் முன்னுதிக்க, முயன்ற தவத்திரு நனிபள்ளி மறையோரும், எங்க ணும் நீள்பதி மருங்கில் இருபிறப்பாளரும் எல்லா ஏனையோரும், பொங்கு திருத்தொண்டர்களும், அதிசயித்து, குழாங்கொண்டு புகலி யார் தம் சிங்கஇள ஏற்றின்பால் வந்தணைந்து கழல் பணியும், சிறப்பின் மிக்கார்." என்று கூறினார் சேக்கிழார். மேலும்,

"வந்த திருத்தொண்டர்க்கும் மல்கு செழு மறையவர்க்கும்
மற்றுளோர்க்கும், சிந்தை மகிழ்வுற மலர்ந்து திருவமுது முதலான
சிறப்பின் செய்கை, தந்தம் அளவினில் விரும்பும் தகைமை
யினால் கடனாற்றும் சண்பையார் இல்லம் எந்தைபிரான்
சிவலோகம் என விளங்கியது"

என்று, நம்மை நின்று சிந்திக்குமாறு கட்டளையிட்டு முடித்தருளுகிறார் சேக்கிழார்.

சிவஞானத் திருவமுதருந்தி, உலகுவாழத் திருநெறித் தமிழை அருள வந்த குழந்தை, தம் இல்லத்தில் வந்தணைந்த அனைவரையும், சிவனுறையும் திருக்கோயில் எனக்கருதி, அவர்கள் மகிழுமாறு, திரு வமுது முதலாக அவரவர் விரும்புவனவற்றை, அவரவர் விரும்பும் அளவுக்கு அளிக்கும் திருஞானசம்பந்தரின் உள்ளம் அவ்வாறு செய்தல் தன்னுடைய கடமை என்று கருதுகிறது என்று எடுத்துக் காட்டுகிறார். தம்மைத் தரிசிக்க வந்தவர்களைத் தாம் தரிசிக்கும் முறையில் அவர்களுக்குக் கடமைப் பணிபுரிகிறார் ஞானசம்பந்தர். இது தொடக்கநிலை. இறுதியில், பூம்பாவைத் திருப்பதிகம் என்ற ஒன்றை அருளி, எலும்பைப் பெண்ணாக்குகிறார். எலும்பைப் பெண் ணாக்கியது எது? தம்முடைய பாட்டு என்றோ, தமிழின் பெருமை என்றோ, சிவமே பரம்பொருள் என்றோ கூறப்பெறும் எந்த ஒன்றை யும் காரணமாக்கவில்லை. எலும்பைப் பூம்பாவையாக்கிய நிகழ்ச் சியே திருஞானசம்பந்தர் வரலாற்றில் நிகழ்ந்த இறுதியாய் நின்ற அருளியற் செயல். அதன் பின்னர்த் திருமணமே. இந்நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு, உலகில் வாழ்கிற அனைவர்க்கும் உறுதி யளிக்கக்கூடிய ஒரே ஒரு 'அறத்தை' எடுத்துக் கூறவும் அருளியல் நிகழ்ச்சி ஒன்றால் அதன் உண்மையை நிலைநாட்டவும் முற்படு கிறார்.

அண்ணலார் அடியார் தமக்கு அமுதூட்டுவது. அமுதுண்டு மகிழுங்காலையில் அவர்தம் திருமேனியில் ஒரு பொலிவு உண்டாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதுவே திருவருட் பொலிவு. அப்பொலிவாற் பொலிதல் என்பதே அவர் எடுத்து நிலை நாட்ட முற்பட்ட அறம். இந்த அறம் உண்மையாம் எனில், இக்குடத்தில் உள்ள எலும்பு பெண்ணாகி, உலகவர் முன் வருக என்று கூறுகிறார்.

"மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மையாம் எனில் உலகர் முன் வருக" என உரைப்பார்

என்பது, பெரியபுராணம் 2990ஆம் பாட்டு.

தாம் குழந்தையாயிருந்த காலத்தே தம் இல்லத்துக்கு வருவோரைச் சிவமெனவே கருதி, அவர் மகிழும் வண்ணம் கடனாற்றிய பெருமையால், அவர் இல்லம் சிவலோகம் எனப் பொலிந்தது. தாவில் சராசரங்களெல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையாராயினர் என முதலையும் முடிவையும் இணைத்துக் காண வேண்டும்.

தலவழிபாட்டின் உட்பொருள் — புகலி

தன்னையடைந்தாரையே அன்றி, தானே சென்று பலரையும் நெறிப்படுத்த முயலும் திருத்தொண்டு நெறியைத் தொடங்க வேண்டும். திருநனிபள்ளி அந்தணரின் அழைப்பு முதல் தொடக்கமாக அமைகிறது. திருத்தலங்கள் தோறும் சென்று வழிபடுதலும் பதிகம் பாடுதலும் ஏன்? இது ஒரு வினா. எல்லாத் தலங்களுக்கும் சென்று, வழிபட்டு, திருவருள் பெற வேண்டும் என்பது பொதுவான விளக்கம். இவ்வினாவைச் சந்திக்கும் சேக்கிழார், இருந்த இடத்திலேயே திருவருளைப் பெற்ற ஞானசம்பந்தருக்குத் தலங்கள் தோறும் சென்று பெறக் கடவதாக ஒன்றும் இல்லை என்று, பொது விளக்கத்தில் அமைந்த ஒரு பகுதியை மட்டும் மறுத்து விடுகிறார். எவ்வாறாயினும் வினாவுக்கு விடை அளிக்க வேண்டுமே! மேலும், இவ்வினாவை அனுமதிக்காதது போலவே நழுவ விட்டு விடலாம். ஆயினும், திருஞானசம்பந்தரைப் பொறுத்த வரையில் அடிக்கடி எழும் வினாவாக இது அமைந்து விட்டது. சில காலம் பொறுத்திருந்து பார்க்கிற சேக்கிழார், விடை சொல்லாமல் இருக்க முடியாமை வரும் நிலையில் விடையைக் கூறிவிடுகிறார். திருஞானசம்பந்தர் குழந்தை. பல திருப்பதிகளுக்கும் நடந்து செல்லுதல் என்ற செயலை மேற்கொள்ளும்போது இயலாதநிலை, செயல் மேற்கொண்ட காலத்தில் தந்தையார் தாமே தம் தோளில் எடுத்துச் செல்ல வேண்டியநிலை. அவராலும் அப்பணியை முழுமையாகச் செய்ய இயலாமை. தன்னாலோ தந்தையாலோ இயலாமை. இத்தகைய நெருக்கடியில், தலயாத்திரை தொடங்கினால் உள்ளேயும் புறம்பேயும் சலசலப்புக்கள், வினாக்கள் எழத் தொடங்குகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேக்கிழார்,

"பாச மற்றில ராயினும் பார்மிசை
ஆசை சங்கரற் காயின தன்மையால்
தேச மிக்க திருவுரு வானவர்
ஈச னைத்தொழு தேதொழு தேகினர்"

என்று (பெரியபுராணம் 2092) விடையளிக்கிறார். இங்கேயும் இரு பொருள் கொள்ள வைத்தார். "பார்மிசை ஆசை சங்கரற்கு ஆயின தன்மை" என்ற தொடருக்கு, சங்கரன் இப்புவியில் பலவேறு இடங்களில் தங்கியிருக்கும் ஆசையினால் அங்கங்கே தங்கியுள்ளான். அங்கெல்லாம் சென்று, கண்டு வழிபட வேண்டும். ஏனெனில், முற்பிறவி அமைப்பில், அவன் இருக்கும் இடங்களிலெல்லாம் சென்று கண்டு, பெருமை பேசுதல் வேண்டும் என்று எண்ணிய தன்மை. இது ஒரு விளக்கம். சங்கரன் எழுந்தருளியுள்ள இடங்களுக்கெல்லாம் சென்று கண்டு வணங்க வேண்டும் என்ற சம்பந்தரின் ஆசை, என்பது இரண்டாவது விளக்கம்.

திருக்கோயில்கள் என்பவை அருள் நிலையங்கள். ஒரு தலத்தை எடுத்துக் கொள்வோமானால், அத்தலத்தில் அமைந்த திருவருள் நிலையமும் (திருக்கோயில்) அத்தலத்து மக்களும் பிறவுயிரும் அருள்நிலைத் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். திருவருளைப் பெற்றுத் துய்க்க வேண்டியவர்கள் மத்தியில் திருவருளானது தானே வந்து தங்கி, தானே வலியச்சென்று, தன்னை அத்தலத்து மக்களுக்கு வழங்குகிறது. திருவருள் பல்லாயிரப் பிரிவுகளாகப் பிரிந்து, அவ்வத்தலத்து வாழ் உயிர்களின் பக்குவநிலைகளுக் கேற்றவகையில் தம்மை அனுபவப் பொருளாகக் கொடுக்கிறது. எனவே, ஒரு தலத்தில் உள்ள அருள் — உயிர் அனுபவத் தொடர்பானது அடுத்த ஒரு தலத்தில் வேறுபடும். ஒவ்வொரு தலத்திலும் திருவருள் ஒவ்வொரு வகையாகச் செயல்படும். இதனையே, திருஞானசம்பந்தர்

"ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில் அளவில்லை கிளக்கவேண்டா
கோட்பாலனவும் வினையும் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்று இவைகேட்க தக்கார்"

என்ற மெய்ஞ்ஞானப் பதிகத்து (வாழ்க அந்தணர் என்று தொடங்கும் பதிகம்) நான்காந் திருப்பாட்டில் எடுத்து விளக்கியருளுவாராயினர். அருள்வான் திறமும் பெறுவான் தன்மையும் அருளின் பண்பும் அறிவாராய்ச்சிக்கு அப்பாற்பட்டன என்பதே இத்திருப்பாட்டின் கருத்து என்பர். ஞானப்பால் அருந்திய பின்னர், ஞான சம்பந்தர் பெற்ற அறிவின் அடிப்படைகளில் ஒன்று, எந்த ஒரு நிகழ்ச்சியையும் அல்லது செய்தியையும் "இப்படியால் இது" என அறிய இயலும் என்பதே. எனவே, அருளியல்நிலையானது அறிவாராய்ச்சிக்கு அப்பாற்பட்டது என்ற விளக்கம் 'ஆட்பாலவர்' என்ற ஞானசம்பந்தர் திருவாக்குக்குப் பொருந்தாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'அளவிடற்கரியது' என்ற சொல்லாட்சிக்குக் காரிய காரண அடிப்படையற்றது என்பது பொருளன்று. நம்மால் ஆய்வதற்குரிய அடிப்படையற்றது என்றோ யாராலும் ஏன் என்று கேட்க உரிமையற்ற வகையில், இறைவனால் அமைக்கக்கூடிய தன்னிச்சைச் செயல் என்றோ கருதுதல் ஆகாது. "இதனால் இது" என்ற அடிப் படையில்தான், நடக்கின்றன. நம்மால் எண்ணிக் கணக்கிட முடி யாத நிகழ்வுகள் நடக்கின்றன. ஆனால், நாமாகச் சில காரணங்களை அமைத்துக் கொள்வதும், அவைகளுக் கேற்பவே சில செயல்களை மேற்கொள்வதும் செய்யாமல், அடிப்படைக் காரணம் உண்டு என்ற எண்ணத்தில், அனைவர்க்கும் தந்தையாய் நின்ற இறைவன் திரு வடியையும், அவ்வருட்செயலில் ஈடுபட்டவரையும் நேரே கண்டு, அவர்களிடம் வினவை எழுப்பி விடை காணுதல் நேரிய முறை, என்பதே அத்தேவாரத்தின் பொருள்.

தன்னையே சுந்தரருக்குத் தோழமையாகத் தந்து விட்டான் என்பதனாலேயே சுந்தரர் சிவனைத் தன் மனைவியார் பால் தூது அனுப்பலாமா? இது ஒருவகை வினா. அது அவ்விருவருக்கும் இடை அமைந்த தனிமைச் செயல். அதைக் கேட்க நாம் யார்? என நினைக்கலாம். அவனே ஒத்துக்கொண்டு தூது போன போது ஏன் அனுப்பினர் சுந்தரர்? என்று கேட்பது தவறு என்றும் முடிவு செய்யலாம்.

இம்மண்ணுலகம், இம்மண்ணுலக ஆட்சிநிலை, மண்ணுலக அறவழி நியதி, முதலியவைகளை அமைத்து ஆராயும்போது விடை கிடைக்கக்கூடிய செயல்கள் தாம் இங்கே நடைபெற வேண்டும். இம்மண்ணுலக நியதியானது "இப்படியால் இது" என்று காரண காரிய அடிப்படையைக் கொண்டது. அவ்வகையில் நாம் அறிந்து கொள்ளுதற்கியன்றதே, என எண்ணிய வகையில், சுந்தரரும் புறகு, சுந்தரரை ஆட்கொண்ட அவனும் புறகு என்று கூறக்கூடிய துணிவும் செயற்பாட்டு நிலையில் இருந்து வந்தது என்பதையும் உணர முடிகிறது. அது மட்டுமன்று, அதுவே, திருத்தொண்டத் தொகைக்கு மூலம் என்பதையும் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

நிலவுலகில் திருக்கோயில் கொண்டிருக்கிற அருட்பெருந்தகை யும், அத்திருக்கோயிலுடன் இணைந்து தொண்டாற்றுகிற அடியவர் களும் இணைந்து நிற்கும்போது, அவர்களை மூலமாகக் கொண்டு, வெளிப்பட்டு நிற்கும் திருவருளையும் அதனை வெளிப்படுத்தி நிற்கும் தொண்டர்களையும் கண்டு திருவருட் பொலிவை அனுபவித்தல் வேண்டும் என்பது தொண்டு நெறியின் அடிப்படைக் கருத்தாக அமைகிறது. இவ்வகையில் இரண்டு அடிப்படைக் காரணங்களைத் தலயாத்திரைக்குரிய மூலங்களாகக் கொள்ளல் வேண்டும்.

1. அருளையே பண்பாகக் கொண்ட இறைவன், அவனை அடைந்து வாழும் உயிர்கள், சைவ சமயம் வளர்க்கப்பாடுபட்ட சான்றோர்கள் என்ற எல்லோருமே, அச்சமயத்துக்கு முக்கியமான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வர்களே. ஞானசம்பந்தர் தலத்துக்கு முன்னுரிமை தருகிறார். இடமே அல்லது தலமே உயிர்களையும் இறையருளையும் ஒன்று படுத்தவும் விளங்க வைக்கவும் ஆய தொண்டினைத் தொடங்கியது. எனவே, தலத்துப் பெயரோடு இணைந்த இறைவன் பெயரையே கூறுவதும் நினைவுகொள்வதும் தேவை என்ற வரையறையை உண்டாக்கினார். இவ்வகையில், பிரமபுரத்தரன், வேணுபுரத்தரன் என்று தலத்தின் அடிப்படையில் தலத்தில் தங்கித் தண்ணருள் செய்து தொண்டாற்றும் இறைவனையும், அந்தத் தலத்தில் அவனுடனேயே தங்கி, அவனருளை உணர்ந்து வாழ்ந்து, பின்னர் அவனருளை விளக்கம் செய்து கொண்டிருப்பவர்கள் என்ற வகையில் தலத்து வாழ்வோரையும், இவ்விருவரும் மேற்கொள்ளும் உறவு முறையில் திருவருள் எவ்வாறு விளக்கம் பெற்றிருக்கிறது என இம் மூன்றையும் தொடர்பு படுத்திக் கொள்ளுகிறார். ஒவ்வொரு தலத் திலுள்ளவர்களும் அவ்வத் தலத்துப் பெருமானை, அவரவருக்கு உகந்த நெறிகளில் நின்று துய்த்து, அருள் விளக்கம் செய்துள் ளார்கள். எல்லாவற்றையும் நடத்திக் கொடுப்பது திருவருளே என்பது முடிந்த முடிபாயினும், எந்த எந்தத் தலத்தில் எந்த எந்த வகையில் அது விளக்கம் பெற்றுத் திகழ்கிறது என்பதை அவ்வத் தலங்களுக்குச் சென்று, அங்கங்குள்ள அடியவர்களோடு இணைந்து, அவன் அருள் செயல்படுமாற்றைக் கேட்டுணர்ந்து, அவர்கள் வழியிலேயே சென்று அவ்வூர்ப் பெருமானை வணங்கி, அவர்கள் துய்த்தவாறே, அவனருளைத் தாமும் துய்த்தல். இவ்வகையில், தலமே முதன்மைத் தாயது.

2. திருவருள் விளக்கமுற்றுத் திகழ்வது என்பது திருக்கோயில் களில் அமைக்கப்பெறும் பூசை முறைகள், எரியும் விளக்குகள், அமைக்கும் விழாக்கள் ஆகியவைகளைக் கொண்டு விளங்கிக் கொள்வது அன்று. திருக்கோயில் என்பது திருவருள் நிலையம். ஆனால், திருவருள் விளக்க நிலையங்கள் அங்கே உள்ள அடியவர்கள். திருவருளால் விளக்கமெய்தி, திருவருளைத் துய்த்து, 'திருவருட் பொலிவு' என்ற ஒன்றைப் பிற உயிர்களும் வாழ்வில் பெற்றுச் சிறப்பதற்காக விளக்கம் செய்து கொண்டிருப்பவர்கள் அத்திருக் கோயில் அடியார்களே; சிவனடியார்களே.

இவ்வகையில், தலத்தையும் தலத்தில் நின்று தொண்டாற்றித் தம்மைத் துய்த்து, தம் இருப்பிற்குக் காரணமாக நின்ற தொண்டர் களையும் புகலிடமாகக் கொண்டவன் இறைவன். இறைவன் தலத் தையும், தலத்தில்வாழ் உயிர்களையும் புகலிடமாகக் கொண்டு, வந்து தங்குகிறான். பின்னர், தலமும் தலத்துள்ளோரும் அவனைப் புகலிடமாகக் கொள்கின்றனர். கருணை, திருவருள், இச்சை என்பவைகளாற் சுட்டப்பெறும் அருளைமட்டுமே காரணமாகக் கொண்டு, தலத்தையும் உயிர்களையும் புகலிடமாகக் கொண்டான். பின்னர், அவனைப் புகலிடமாக மற்றவர்கள் கொள்ளும் நிலை உண் டாகிறது. இவ்வகையான இருநிலை விளக்கம் தர எழுந்ததே புகலி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலே கூறப்பெற்ற இருவகை அடிப்படைகளில் அங்கங்கே விளங்கும் திருவருள் விளக்க நெறிகளைச் சென்று காணவும், அவ்வத் தலத்துள்ளவர்களையே சார்ந்து சென்று, அங்கே அமையும் திரு வருள் நுட்பத்தை அறிந்து துய்க்கவும் வேண்டும் என்ற கொள்கை காரணமாகவே தலயாத்திரையை மேற்கொள்ளுகிறார். அவ்வத் தலத்துக் திருவருள் விளக்கப்பாட்டு முறைகளை, அவ்வத்தலத்தில் நின்று, அறிந்து, துய்த்து விளங்கும் அடியவர்களையே நாமும் சேர்ந்து, கேட்டு, அப் பெருமையைத்தெரிந்து, துய்க்கவேண்டுமே யல்லாது, ஒருவன் தனக்கும் தன்னூர்க்கோயிலாகிய திருவருள் நிலையத்துக்கும் உள்ள தொடர்பை வைத்துக்கொண்டு, அங்கேயும், இப்படித்தான், இந்நிகழ்ச்சி நடைபெற்றிருக்கும் என்று தம் மதிப் பீட்டினை வழங்கி விடுதலாகாது என்பது திருஞானசம்பந்தர் திரு வுள்ளம். இவ்வாறு கருதினால், தலங்கள் தோறும் நெறிகள் வேறு படுமே, சைவசமய அடிப்படைப் பொது நெறிகளை எப்படி வகுக்க முடியும் என்றும் கருதலாகாது. மத்திய அரசின் சட்டங்களை மாநில அரசுகள் எந்த எந்த அளவுக்குச் செயற்படுத்திப் பயன்பெற்றிருக் கின்றன என்று அறிவது மட்டுமன்றி, செயல் முறைப் படுத்தும் வழி வகைகளை எப்படி அமைத்துக்கொண்டன, விளைந்த நன்மை எப்படி இருந்தது என்றெல்லாம் விளங்கிக் கொள்வதுபோலவே, பொது நெறிமுறை தேவை என்பதுடன், தலந்தோறும் அமைந்த செயற் பாட்டு முறையையும் இணைத்துக் காணவேண்டுவதும் தேவையே. இவ்வகையில் 'புகலி' என்பது திருவருள் விளக்க நிலையங்களாக விளங்கும் அடியவர்களையே சிறப்பு வகையில் குறிக்கும். நம்மறிவு இது என்று விளக்கமுறுக் காலத்திலேயே வழியடிமை, அடிமைக் குலம் என்பதாக ஆவணப்பதிவு செய்துவிட்ட காரணத்தால் இறைவன் 'புகலி' என்ற பெயரைப் பெறுபவனாக அமைகிறான்.

புகலியும் புண்டரிகமும்

உயிர்களைக் காக்கும் அடைக்கலப்பொருளாக அமைந்தவன் உயிர்களிடத்திலேயே தங்கியிருக்கிறான். உயிர்களின் இதயமாம் தாமரையில் முன்னமேயே சென்று தங்கியவன். அங்கே, திருவளரும் தேனமுதத்தைப் பொழிந்துகொண்டு, அவ்வுயிரானது அசுத்தத்தில் ஆழ்ந்து கெட்டுப் போகாதவாறு அடைக்கலம் கொடுத்து வருகிறான். இவ்வகையில் புண்டரிகம் தாமரையை உணர்த்த, உயிர்களின் இதயமாம் தாமரையை இடமாகக் கொண்டவன் விரும்பிச் சென்று தங்கியிருக்கும் பதியே புகலி.

"அகனமர்ந்த அன்பினராய் அறுபகைசெற்று
ஐம்புலனும் அடக்கி ஞானம்
புகலுடையார் தம்முள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும் புராணர்"

என்று, 'ஏரிசையும்' என்று தொடங்கும் திருவீழிமிழலைத் திருப் பதிகத்து 6ஆம் திருப்பாட்டில் கூறியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உயிருக்கும் உடலுக்கும் அமைந்த உரிமையைத் தன்னுடையது, தன்னுடையது என்று ஆவண ஓலைகாட்டி வந்தவர்கள் பலர். முதலில், விதி என்ற ஆவண ஓலையுடன் வந்தவன் இயமன். பின்னர், மூன்று பொருள்களின் கூட்டமைப்பு எனப்பேசி அம்முப் பொருளுக்கும் உரியவர்கள் வந்தார்கள். அவர்களே முப்புராதிகள். இவ்வுடம்பு முப்புரம் எனப்பெற்றது. இவ்வாறு வந்த பலரையும் உரிமையுடையவர்கள் அல்லர் என நிறுவி, தானே உரிமையுடையவன் என நிலைநாட்டிக் கொண்டான் ஒருவன். பிறர் உரிமையை மறுக்கும் போதெல்லாம் அவன் இங்கே நடனம் ஆடி, சில மாற்றங்களைச்செய்து, அம்மாற்றங்களின் அடையாளமாக அமைத்ததே ''திருநீறு'' என்று, திருப்புகலித் திருப்பதிகங்களில் அமைத்துக் காட்டுகிறார்.

ஆயினும், சீகாழி எப்படிப் புகலியாயிற்று என்பதைக் கூறவரும் திருஞானசம்பந்தர், ஊழிக்காலத்தே இறைவனும் இறைவியும் எங்கே புகலடையலாம் என்று புகலிடம்தேடி வந்தபோது, சீகாழி ஒன்றுதான் ஊழிக்காலத்தில் அழியாது நின்ற ஊராக இருந்ததால், இதனைத் தம்முடைய புகலிடமாகக் கொண்டான் என்று கூறுகிறார்.

திருநீற்றுப் பொலிவு

''புண்டரிகத்தவன் மேவிய புகலி'' என்பதன் மூலம் நிலை நாட்டப்பெறும் திருநெறியத் தமிழ்நெறி என்பது ''திருநீறு'' என்பதே.

சுடலை வெண்பொடி எனப்பெறுவது பூசியவரைப் பொலிவுடையவராக்குவது என்ற சிறப்புடையதாகிறது. திருநீற்றின் பெருமையைச் செயற்படுத்திக்காட்டும் இடம் மதுரையாக அமைகிறது என்பது உண்மையே. திரிபுரங்களை அழித்து, திரிபுண்டரத் திருநீறு மூலமாகவே உயிர்களைக் காத்து வருகிறான். இதனாலேயே திருநீற்றின் ஒளிசிறக்க அவதாரம் செய்த பிள்ளையார் எனவும் இவர் போற்றப் பெறுவர்.

ஒருநெறி என்பது இருமையின் இணைப்பு என்பது முன்னர் விளக்கப் பெற்றது. முன்னது அறிவுநிலை பின்னது அடைந்து துய்க்கும் நிலை. பின்னது அன்புநெறி என அமைக்கலாம்.

திருநெறி என்பது அருநெறியாகிய இயல் மறைநெறியும் பெருநெறியாகிய இயல் இசை நெறியும் கடந்தநிலையில் மலர்வது எனப் பெறும் அருள்நெறி. அதுவே திருநெறி. அது தொண்டு நெறியெனத் தொடங்கி, திருத்தொண்டு நெறியாக மலர்வது. ஒருநெறியைக் கடந்த நிலையில் விளங்குவது அருள்நெறி.

அன்புநெறியும் அருள்நெறியும் இணையும் இணைப்பைப் பொலிய வைப்பது திருநீறு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநனிபள்ளிக்குச் செல்லும் பிள்ளையார் சிவபாத இருதயரின் தோளின்மேல் அமர்ந்திருந்தார். ஆயினும், அவர் தம்முடைய முடியில் இறைவன் திருவடியைத் தாங்கி நிற்பதாக உணருகிறார். சிவ பாத இருதயர் அன்புநெறியாக அமைய இறைவன் திருவடியே முழுமை பெற்ற திருவருள் நெறியை உணர்த்த, இடைநின்று தம்மை விளக்கம் செய்து கொள்கிறார் திருஞானசம்பந்தர்.

அன்புநெறியில் இறைவனே எல்லாம் எனக்கருதி உயிரானது இறைவனை அணிமையில் வைத்து நிற்கும். இறைவன் திருநடம் ஆடுவது சுடுகாடு. சுடுகாடுதான் இறைவன் விரும்பி அமரும் இட மாக பள்ளியாக அமைய இருக்கிறது. சுடுகாட்டில் எரியாடுவது உண்மை. சுடுகாட்டினைப் பள்ளியிடமாக ஆக்குகிறான். காடுடைய சுடலைப்பொடியே பொலிவைத்தந்து, காண்பவர்களையெல்லாம் பொலிவுடையவர்களாகச் செய்து தண்மைசால் அருளிடமாக ஆக்குகின்றது. சுடுகாடு குளிர் இடமாகிய பள்ளியாக அமைகிறது. இதனை,

''ஈகை படர் தொடர் கள்ளி நீழல்
ஈமம் இடு சுடு காட்டகத்தே
ஆகங் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்
அப்பன் இடம் திருவாலங்காடே

என்பது, காரைக்காலம்மையாரின், திருவாலங்காட்டு மூத்த திருப் பதிகத்து 2ஆம் பாட்டு. சுடுகாட்டைக் குளிர் காடாக—பள்ளியிட மாக ஆக்கும் முறையில் அமைவதே திருநீறு.

''முள்ளி தீந்து முளரி கருகி மூலை சொரிந்துக்குக்
கள்ளி வற்றி வெள்ளில் பிறங்கு கடுவெங் காட்டுள்ளே
புள்ளி உழைமான் தோலொன் றுடுத்துப் புலித்தோல் பியற்கிட்டுப்
பள்ளி இடமும் அதுவே ஆகப் பரமன் ஆடுமே''

என்றும்,

''நொந்திக் கிடந்த சுடலை தடவி நுகரும் புழுக்கின்றிச்
சிந்தித்து இருந்து அங்கு உறங்கும் சிறுபேய் சிரமப்படுகாட்டின்
முந்தி அமரர் முழவின் ஓசை முறைமை வழுவாமே
அந்தி நிருத்தம் அனல்கை ஏந்தி அழகன் ஆடுமே''

என்றும், காரைக்காலம்மையாரின் இரண்டாவது மூத்ததிருப்பதிகத்து 5, 7 ஆகிய திருப்பாட்டுக்கள் அமைந்துள்ளன.

மறைநெறியும் பெருநெறியும் ஒன்றன் இருபக்கங்களேயென்று லும் ஒன்றன் அந்தத்தில்தான் ஏனையது பிறக்கிறது. அவ்வாறே ஒருநெறியின் அந்தத்தில் திருநெறி அமைகிறது. அன்பு நெறியின் இறுதியில் சிவபரம் பொருளுடன் அணிய நிற்கும் உயிரானது, அண்மையில் உள்ள பரம்பொருளை அணியநின்றும் அறியும், இணைந்து நின்றும் அறியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அணியநின்று அறிவது மறைநெறி; இணையநின்று அறிவது பெரு நெறி இரண்டும் முறையே அறிவுநெறி என்றும் அன்புநெறி என்றும் பெயர்பெறும்.

அருள்நெறியில் உயிரானது தன்னை அருளில் கலக்கச் செய்து ஞானமயமாய் நிற்கும். முன்னுள்ள இரு நெறிகளிலும் பெருமான் ஆடுவான். மறைநெறியில், அறிவு நெறியில் ஆண்மைமிக நின்றாடுவன். அன்புநெறியில் பெண்தான் மிக நின்று ஆடுவன்.

ஒருநெறியிலிருந்து திருநெறிக்கு உயிர் உயருகின்ற போது அது ஒரு தனிப் பிறப்பு. உயிரிலேயே மாற்றம் நிகழும், உடலிலும் மாற்றம். ஆவியை மாற்றி, பிணிப்படும் உடம்பிலிருந்தும் இறந்து, பிணிப்படா உடம்பில் மாறிப்பிறக்க வேண்டும். முன்னது பருப் பொருளுடம்பு. பின்னது ஞான வடிவு. அதனால் இதனைத் தனிப் பிறப்பு என்பது குறியீட்டு வழக்கு. உடம்பு முன்னே சுடுகாடாக இருந்தது. இம்மாற்றத்தில் அதுவே பள்ளி இடமாக அமைகிறது. முன்னே உயிர் இறைவனின் அணிமையில், அல்லது இணைந்த நிலை யில் நின்றது. இப்போது இறைவனே அருளாக உயிருக்கு உள்ளும் புறம்புமாகநிற்க, இடையில் ஞானமயமாக உயிர் நிற்கிறது. அன்பு நெறியின் அந்தத்துள் எழுவது அருள்நெறி. இதற்கெனப் பெருமான் ஆடும் ஆட்டம் '**அந்திநிருத்தம்**' '**அந்தி**' என்பது சைவக்கொள்கை யில் மாலைக்காலத்தைக் குறிப்பது தத்துவ விளக்கமாகாது. அந்தி வண்ணத்து எம் இறை என்று சொல்லும் போது, அருளாய்ப் பொலி யும் இறைவன் என்பதே பொருள். சுடுகாட்டின் சுடும் தன்மை மாற்றம் பெற்று, முழுமையும் குளிர்ச்சியுடைய பள்ளி இடமாக அமைகிறது. இருநிலைகளையும் இணைத்து விளக்குவது திருநீறு.

திருநனி பள்ளிக்குப் போதல் என்பதே ஞானசம்பந்தர் மேற் கொண்ட முதல் யாத்திரை. இங்கே அமைந்த மாற்றம் சுடுகாடு பள்ளி இடமாக மாறுகிறது என்பதே. சுடுகாட்டினை நனிபள்ளியாக மாற்றிய அம்மை பகவதியம்மை. பகவதியம்மையார் ஞான சம்பந்தரின் அன்புறுநிலைக்கு முடிவினைத் தந்து அவருடைய அருளுறுநிலைக்குரிய பிறப்பைத் தந்தவர். ஞானசம்பந்தரின் அன்புறு நிலையை மாற்றி, அருளுறு நிலையை மலரச் செய்து இவ்விரண்டும் நிகழக் காரணமாக இருந்தவர் பகவதி அம்மையார். அவர் அவதாரம் செய்த பதியானது அன்புறு நிலையை இறுதியாக்கி, அருளுறு நிலையை மலர்விக்கும் தகுதியுடைய பதியாக அமைகிறது. திருநனிபள்ளிக்கு அத்தகுதி இயல்பிலேயே அமையும். எனவே, திருநனி பள்ளிக்குச் செல்லும் திருஞானசம்பந்தர் அன்புறுநிலை யாகிய சிவபாத இருதயரின் தோள் மேல் அமர்ந்து கொண்டு, இறைவன் திருவடியாகிய அருள்நெறியைத் தன் திருமுடியில் தாங்கிச் செல்கிறார். எனவே, திருநனிபள்ளியும், பகவதியாரும், திருநனி பள்ளிசெல்லும் ஞான சம்பந்தரும் ஒரே நிலையை விளக்கும் தத்துவ அமைதியில் நிற்கிறார்கள். இங்கே இடுபறை ஒன்றி விடு கிறது. இன்னிசை பிறந்து விடுகிறது. "இடுபறை ஒன்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தர் பியன்மேல் இருந்து இன்இசையால்" என்று இணைத்தும், இடுபறை அந்தத்தில் இன்னிசை தொடங்குகிறது என்றும் திருக் கடைக் காப்பு வரிகள் குறிக்கின்றன.

சுடுகாடே திருநனி பள்ளியாகிறது. ஞானசம்பந்தர் செல்லு வதற்கு முன்னமேயே அது திருநனி பள்ளிதான். முன்னே சுடுகாட் டின் நிலை மிக்கிருந்து பள்ளியாம் தன்மை எனப் பெறும் குளிர்ச்சி நிலையானது குறைவாக இருந்தது. சற்றுத் தெளிவாக உணர்த்த வேண்டுமானால், ஞானசம்பந்தர் ஞானப்பால் அருந்திய காலமே சுடுகாடு முழுமையான பள்ளியிடமாக மாற்றம் பெற்ற காலம் என்று கொள்ளலாம். ஏனெனில், சம்பந்தர் ஒரு படியைச் சற்று வேக மாகக் கடந்தவர் என்னும் பொருளில் "முன்னடைந்தான் சம்பந்தன்" என்று அவரே தம்முடைய நிலையை விளக்கியிருக்கிறார். இந்த இணைப்பை உணர்த்தவே, திருஞானசம்பந்தர், தாம் தம் தந்தையார் முதுகில் இருந்து பாடுகிறேன் என்று தன்னிலையினை அன்புறு நிலையின் முடிவில் நின்று பேசுகிறேன் என்று குறிப்பிடுகிறார். ஆனால் அருள்நெறி தன்னுள் அமைந்த உள்ளத் தாமரையுள் மலர்ந்து விட்டது என்றும் குறிப்பிட்டார்.

திருஞானசம்பந்தரும் திருநனிபள்ளியும்

திருஞானசம்பந்தர் திருநனிபள்ளிக்குச் செல்வது தான் தலயாத்திரையின் தொடக்கம் என்று கொள்ளலாம். இந்த முதல் யாத்திரையிலேயே 'பாலை நெய்தல் பாடியது' என்ற அருளற்புதம் நிகழ்ந்ததாகக் கொள்வர். நம்பியாண்டார் நம்பிகள் மிக வியந்து சிறப்பிக்கும் இந்த அருளியல் நிகழ்வினைச் சாத்திர நூலாகிய திருக் களிற்றுப் படியார் பாராட்டுகிறது. ஆனால், சேக்கிழார் சொல்ல வில்லை. சேக்கிழாருக்குப் பின் வந்த ஆய்வாளர்கள் நம்பியாண்டார் நம்பிகள் கூற்றையும் சாத்திரநூல் தரும் சான்றையும் ஏற்று, பாலையை நெய்தலாக மாற்றிய அருளியல் நிகழ்வு உண்மையே என்ற துணிவைப் பெற்று விட்டார்கள். ஆயினும், சேக்கிழார் சொல்லவில்லையே என்பது தாம் மேற்கொண்ட துணிவை அசைக்கவே, நம்பியாண்டார் நம்பிகள் கூற்றையும் திருக்களிற்றுப் படியார் கூறிய சான்றையும் எடுத்தெழுதி, சேக்கிழாரடிகள் குறிப் பிடாமைக்குரிய காரணம் விளங்கவில்லை என்றே எழுதியுள்ளார்கள். சேக்கிழார் குறிக்காமையால் நிகழ்ச்சி நடக்கவில்லை என்று ஒருவரும் எழுதவில்லை.

திருஞானசம்பந்தப் பெருமானின் வரலாற்றில் அவர் நிகழ்த்திய அருளியற் செயல் என்று குறிப்பதானால் இது தான் முதற் செயல். ஞானப்பாலருந்தியமையும் பொற்றாளம் பெற்றமையும் ஞான சம்பந்தரின் செயல்களாக அமையா. முதல் நிகழ்ச்சியே அறிஞர் களின், அருளாளர்களின் ஐயப்பாட்டுக்கு உரியதாகிவிட்டது ஒரு வகையில் வருத்தத்திற்குரியதே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருஞானசம்பந்தர் அருளிய திருநனிபள்ளித் திருப்பதிகம் மூலமாக இந்நிகழ்வின் உண்மைநிலை என்ன என்பதை நாம் ஒருவாறு முடிவு செய்யலாம். துணிவுடன் எந்த முடிவையும் கொள்ளலாம். நிகழ்ச்சி உண்டு என்று முடிவு செய்தால் நாம் நம்பியாண்டார் நம்பிகளைச் சார்ந்துள்ளோம்; இல்லை என்று முடிவு செய்தால் சேக்கிழாரைச் சார்ந்துள்ளோம்; அவ்வளவே. இருவரும் அருளாளர்களே. நிகழ்ச்சியே இல்லை என்று சேக்கிழாரும் சொல்லவில்லை. வரலாறு சொல்ல முற்பட்ட சேக்கிழார் இதனை ஏன் சொல்லவில்லை என்பதே நிகழ்ச்சியின் உண்மையை எடைபோட முற்படுவதாகி விட்டது.

பிறபதியும் தொழ முன் செல்லல்

திருஞானசம்பந்தர் திருநனிபள்ளி சென்று வழிபாடு செய்ததை, அவர் தம்மை முன்னம் அளித்த தாயார் தாம் முன்னுதிக்க முயன்ற தவம் செய்த பதி எனக் கொண்டு, அதைச் சென்று வழிபாடு செய்வதை யாத்திரை என்று கொள்ளக் கூடாது என்பது ஒரு சில ஆய்வாளர் கருத்து. சேக்கிழார் திருநனிபள்ளி வழிபாட்டை யாத்திரையிற் கொள்ள வேண்டும் என்பதற்குக் கூறும் காரணம் மகிழ்வதற்குரியது. திருஞானசம்பந்தரின் தாய் வழி மாமன் என யாரேனும் ஒருவர் அழைத்திருந்தால் அதை ஒட்டி ஞானசம்பந்தர் சென்றிருந்தால் அதை நாம் யாத்திரை என்று கொள்ள முடியாது. ஆனல், திருநனிபள்ளியில் உள்ளவர்கள் வந்து பணிந்து,

" திங்கட், கொழுந்தணியுஞ் சடையாரை எங்கள் பதியினில்
கும்பிட்டருள அங்கே
எழுந்தருள வேண்டும்"

என்று (பெரியபுராணம் 2015) அழைக்கவே, உடன்படுகின்ருர். அவ்வாறே திருநனிபள்ளி வழிபாடு முடித்தபின் அங்கே தலைசை அந்தணர்கள் வந்து அழைக்கின்ருர்கள். இதன்மூலம் ஒரு மரபினை அமைத்துக் காட்டுகின்ருர். தலங்கள் வேருயினும் பெருமானுர் ஒருவரே. ஆனல், அந்த அந்தத் தலத்தின் மூலமாக அமையும் அந்த அந்த அருள் நிதியமாகவே திருக்கோயிலை அமைத்துக் கொள்ளல் வேண்டும் என்பது முறை. அந்தத் தலத்து அடியவர்களே அந்தத் தலத்துப் பெம்மான் திருவருளை விளக்கம் செய்பவர்கள். ஆகையால், அவர்களுடன் சென்று, அத்தலத்துப் பெருமானைப் பணிந்து நலம் துய்க்க வேண்டும். அடியவர்கள் கூறும் அனுபவ மெய்ம்மொழிகளால் அப்பெருமானைத் துய்க்க வேண்டும் என்பது மரபு.

இவ்வகையில், தம் யாத்திரையை—பிறபதி வணங்கல் என்ற திட்டத்தை அமைத்துக்கொள்ளும் திருஞானசம்பந்தர், தம்மை ஆளாக்கிய தோணிபுரத்தாரை வணங்கி அருள்பெற்றுப் புறப்படுகிருர். இங்கே சேக்கிழார் அமைக்கும் வரியே "பிறபதியும் தொழ முன் செல்வார்" என்பது, பிறபதி தொழுதல் என்பது யாத்திரை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன் செல்லல் என்பது யாத்திரையில் திருநனிபள்ளி வழிபாட்டுக்குச் செல்வதே முதல்நிலை பெறுகிறது எனக் கொள்ள வேண்டும்.

திருநனிபள்ளிக்குரிய ஞானசம்பந்தர் பதிகம் ஒன்றுதான். அதை அடிப்படையாகக் கொண்டுதான் பாலையை நெய்தலாக்கு தல் என்ற அருட்செயல் நடைபெற்றதா இல்லையா என்பதை முடிவு செய்யவேண்டும். ஆகையால், திருநனிபள்ளித் திருப்பதிகத்தை மூலமாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்பது ஆய்வுக்குரிய முதல் நிலை.

திருநனிபள்ளிப் பதிகத் திருக்கடைக்காப்பு

" ஆணை நமதே " என்று கூறியுள்ள பதிகங்களுள் இதுவே முதற் பதிகம்.

"அத்தர் பியன்மேல் இருந்து இன்னிசையால் உரைத்த பனுவல்" என்று குறிப்பிடுவதால், தந்தையார் தோளில் எடுத்துச் செல்ல, திருநனிபள்ளியை அடைவதற்கு முன்பேயே, வழியிலேயே பாடியருளிய பதிகம் இது என்று சேக்கிழார் கொள்வது பொருந்துவதே.

திருநனிபள்ளித் திருப்பதிகம் பாடத் தொடங்கும்போது தம்மை, மூவாப் பழங்கிழமைப் பன்னிருபேர் படைத்துடைய தோணிபுரத்துப் பட்டியலில் ' காழி'யுடன் இணைத்துக் கொள்கிறார், சம்பந்தர்.

திருக்கோலக்காவிலிருந்து மீளும்போது தோணிபுரம் சென்று, முன்பாடாமல் சென்றதை நினைந்து, திருப்பதிகம் பாட முற்படும் போது தம்மைக் காழியில் இணைத்துக் கொண்டுதான் பாடுகின்றார். " பூவார் கொன்றை " என்று தொடங்கும் திருப்பதிகம் காழித் திருப் பதிகமே. பூவார் கொன்றைக்கு அடுத்த பதிகமாக வருவது திருநனி பள்ளித் திருப்பதிகம். அவ்வழியே, தம்மைக் காழியான் என அமைத்துக்கொண்டார் எனவும் கொள்ளலாம்.

காழிப்பதியும் ஆறும் நாலும் ஆயபதியும்

அடுத்து, காழி என்று கருதப்படு பொருள் ஆறும் நாலும் உளதாக வைத்த பதியான ஞான முனிவன் " என்று தம்முடைய நிலையை அமைத்துக் கூறியருளுகின்றார்.

காழி என்று உளதாக வைத்த பதி எனவும் கருதப்படு பொருள் ஆறும் நாலும் உளதாக வைத்த பதி எனவும் உரை கொள்வர். பன்னிருவகையால் நடைபெற்ற ஊழிக் காலத்தில், ' காழி ' என்று உளதாக வைத்த பதி என்று கொள்வர், ஆறும் நாலும் உளதாக வைத்த பதி என்பதற்கு, ஆறு, நான்கு என்ற இரண்டெண்களையும் கூட்டினால் பத்து என்னும் எண் வரும். அவ்வகையில் பிரமபுரம் தொடங்கி, கழுமலம் வரையில் உள்ள வரிசையில் பன்னிரண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எண்ணிக்கைப் பெயர்ப்பதிகள் அமையும். அதில் பத்தாவது எண்ணிக்கையில் நின்றது காழி ஆகையால் ஆறும் நாலும் உளதாக வைத்த பதி என்பது பத்தாவது எண்ணுக வரிசை முறையில் நின்றது எனப்பெறும் 'காழி'யைக் குறிக்க வந்ததாகக்கொள்வது ஓர் உரை.

இனி, ஆறும் நாலும் என்பதை ஆறங்கமும் நான்கு வேதமும் அழியாமல் காழியில் வைத்துக் காத்தான் என, தருமபுரத்துத் திருமுறைப் பதிப்பில், குறிப்புரை எழுதிய ஆசிரியர் எழுதியுள்ளார். ஆறும் நாலும் என்ற தொடருக்கு வேதம் அங்கம் எனக்கொள்வதற்கு, நாலும் ஆறும் என்றிருந்தால் சரியாக இருக்கும், முறைமாறி இருப்பதால் வேறு கருத்தினைக் கருதியிருப்பாரோ என்ற எண்ணத்தில், தருமபுரத்தில், முதன் முதல், திருமுறைப் பதிப்பைத் தொடங்கி வைத்த பெருந்தகை, மகாவித்வான். ச. தண்டபாணி தேசிகர் அவர்கள், மூன்றுந் திருமுறையில்வரும் திருநனிபள்ளித் திருப்பதிகத்துக்குக் குறிப்புரை எழுதவில்லையாயினும், முதல் திருமுறைக்குக் குறிப்பு எழுதும்போதே, திருநனிபள்ளித் திருப்பதிகத்தில் வரும் முறை மாறிய ஆட்சியை நோக்கி, அதற்குச் சேக்கிழார் ஏதும் சொல்கிருரா என்றும் பார்த்திருக்க வேண்டும். சேக்கிழாரின்,

"காரைகள் கூகை முல்லை" எனநிகழ் கலைசேர் வாய்மைச்
சீரியற் பதிகம் பாடித் திருக்கடைக் காப்புத்தன்னில்
நாரியோர் பாகர் வைகும் நனிபள்ளி உள்குவார் தம்
பேரிடர் கொடுதற்காணை நமதெனும் பெருமை வைத்தார்"

என்ற (2018) திருவாக்கினை நினைந்து, "கலைசேர் வாய்மைச் சீரியற் பதிகம்" என்றமையால், சேக்கிழாரின் கருத்தை உட்கொண்டு, முதல் திருமுறையில், திருப்புத்தூர்ப்பதிகத்தின்,

"கூறை போர்க்குந் தொழிலார் அமண்கூறல்
தேறல் வேண்டா; தெளிமின்; திருப்புத்தூர்
ஆறும் நான்கும் அமர்ந்தார் அவர்போலும்
ஏறு கொண்ட கொடியெம் இறையாரே"

என்ற பத்தாம்பாட்டில் வரும் ஆறும் நான்கும், என்பவைகளுக்கு "ஆறு நான்கும் என்ற ஒரு சொல்லாக்கொண்டு நிரலேநிறுத்தி, அறுபத்துநான்கு கலை ஞானங்களில் அமர்ந்தார் எனவும் கொள்ளலாம் என்று குறிப்புரை எழுதினர்கள். அதற்கும்மேல், ஆறு, ஆறு என எடுக்கப் பெற்று வருகின்ற அகம், அகப்புறம், புறம். புறப்புறம் ஆகிய சமயங்களின் உட்பொருளாய் அமர்ந்திருப்பவர் என்றும் கொள்ளலாம் எனவும் எழுதினர்கள். ஞானசம்பந்தப் பெருமான் கருத்தாக இவற்றுள் எதைக் கொள்ளலாம் என்று முடிவுசெய்ய இயலவில்லை.

திருஞானசம்பந்தப் பெருமான் தம்மைக் காழியுடன் இணைத்துக் கொள்ளுவதற்கு உரிய அடிப்படைகள் பல.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரெனும் இவை பன்னிரண்டிலும் உண்டு எனப் பெயர் பெற்றவூர் என்றும் கலி என்ற அடைமொழியையுஞ் சேர்த்துக் 'கலிக்காழி' என்றும் குறிப்பிடும் வழக்கமுடையவர் ஞானசம்பந்தர்.

"காழியுள் உரகம் ஆரும் சடைமுடி அடிகள் தம்பால் உணர்ந்து உறுதலால் பெருகமல்கும் புகழ்பேணும் தொண்டர்க்கு, இசை யார் தமிழ்விரகன் சொன்ன இவை" என்று அருளுகின்ற ஞானசம் பந்தர் உள்ளம் காழிநகரின் பெருமைக்கு அங்குள்ள தொண்டர் களின் பெருமையைக் காரணமாக்குகிறது. தொண்டர்கள் இறை வனை அறிந்து அனுபவிக்கிறார்கள்; அனுபவித்து அறிகிறார்கள். இவ்விரு வகையாலும் அவர்தம் அனுபவம் சிறக்கிறது. அனுபவம் பெருகப் பெருக, அவர்தம் பொலிவும் சிறக்கிறது. இத்தகைய இறை இன்பத்தை உலகத்துயிர்களுக்கு வழங்குவதால், வைரத்தன்மை, வலிமைத்தன்மை உடையது காழி என்பது ஞானசம்பந்தரின் கருத்து.

காழி நீங்கலாக உள்ள ஊர்களில் எந்த ஒன்றில் பிறந்தாலும், பிறந்த அவன், பிறந்த அப்பிறவிக்கு ஒத்த, அப்பிறவியின் மூலம் பெறக்கூடிய அறிவை மட்டுமே பெற இயலும். ஆனால், காழியிற் பிறந்தவன், தான்பிறந்த முன்னைப் பிறவிகளில் பெற்ற அறிவையும், அப்பிறவிகளில் தனக்கு நேர்ந்த அனுபவத்தையும் இணைத்துத் தெரிந்து கொள்ளுகிறான். பலபிறவிகளிலும் பெற்ற அறிவை இணைத்து ஒருசேர இப்போது பெறுகிறானுதலின், அறிவுத்திண்மை உடையவன் ஆகிறான்.

மேலே அமைக்கப்பெற்ற குறிப்புக்களை மூலமாகக் கொண்டு, திருநனி பள்ளித் திருக்கடைக் காப்புப் பாட்டில் வரும் 'காழி' என்ப தற்கு உரிய ஓர் உரையை அமைக்கலாம்.

> "'காழி' என்று கருதப் படு பதி
> பொருள் ஆறும் நாலும் உளதாக வைத்த பதி"

என மொழிமாற்றி அமைத்துப் பொருள் காண வேண்டும்.

'காழி என்று கருதப்படு பதி' என்பதற்கு, எந்த ஊழியில் எந்த ஒரு பெயரோடு இருப்பினும், அது 'காழி' என்ற ஒரு பெயராலேயே கருதப் பெறும் பெருமையுடைய பதி என்று "பண்ணின் நேர் மொழி" என்று தொடங்கும் காழித் திருப்பதிகத் திருக்கடைக் காப் பினுள் அமைத்துக் கூறுகிறார்.

> "பொருள் ஆறும் நாலும் உளதாக வைத்த பதி"

என்பது காழிப் பெருமான் திருமுடியிற் கங்கையை வைத்து, அயனும் மாலும் அறிவரிய நான்கு பெரும் பண்புகளைக் கால்களாகக் கொண்டு விளங்கும் அறத்தின் வடிவாய பெற்றத்தையும் செயற் படும் நிலையில் வைத்த பதி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிறைவும் தூய்மையும் கொண்ட பேரின்பம் என்ற நினைவை நல்கும் ஆற்றினை (ஆறு)த் தலையில் அழகுக்காக வைக்கவில்லை; செயற்பட வைத்தான். 'நாலு' என்ற எண் நான்கு கால்களைக் கொண்ட அறவடிவில் அமைந்த பெற்றம்.

அறவடிவாம் பெற்றம் ஊர்ந்த நிலையில், காழிநகர் மேய உயிர்களுக்கு, நான்கு வகையில் நின்று அனுபவம் அளிக்கிறன்.

1. இந்நாள் வரையில் காழிநகர் மேய உயிர்கள் இன்பம் அனுபவிக்க வொட்டாது தடுத்தவைகளுக்கும் தானே துன்பமாக நின்றுன்.

2. துன்பம் நீக்கி, உயிர்களின் தங்கும் இடங்களை அருளாக ஆக்கி, பின் அருளனுபவ இன்பம் தருகிறுன்.

3. ஏழாகிய இனிய இசையாகவே அவ்வுயிர்கள் தங்குமிடங்களை ஆக்கி, அவைகள் உள்ளத்தில் அன்பாக நின்று கொண்டிருப்பான்.

4. காழிநகரில் வந்து பொருந்திய உண்மைப் பொருளாக நின்றுன்.

நான்கு என்ற அறத்தை வைத்த முறையை விளக்கிய ஞான சம்பந்தர்.

"தேனை வென்ற மொழியாள் ஒருபாகம்
கான மான் கைக்கொண்ட காழியார்
வானம் ஓங்கு கோயிலவர் போலாம்
ஆன இன்பம் ஆடும் அடிகளே".

என்ற, பூவார் கொன்றைப் பதிகத்தில், வானம் ஓங்கு கோயிலவர் என்பது கங்கையையும், அதனைத் தாங்கிய குறிப்புடன் தூய பேரின்பம் அளிப்பவராகவும் விளங்குகிறுர் என்று குறிப்பிட்டருளினர். இனி, ஐந்தெழுத்தை உள்ளீடாகக் கொண்டு காழிப் பெருமானை விளக்குகின்ற முறையையும் காணுதல் வேண்டும்.

"நம்மான மாற்றி நமக்கு அருளாய் நின்ற
பெம்மானை"

என்று காழிப்பதியார் காழிப்பதிகத்தில் அருளுகின்றுர்.

"நம்மான" என்பதன் பொருள், நம ஆன மாற்றி எனப் பிரித்து ந,ம என்ற இரண்டு மல எழுத்துக்களால் குறிக்கப் பெறும் உயிரிடங்களை மாற்றி, நமக்கு அருளாய் நின்ற அவன், அருளாகவே அவைகளை மாற்றினன் என்பதாம்.

மேலே கூறப் பெற்ற கருத்துக்களையெல்லாம் திருநனி பள்ளித் திருப்பதிகத்தில் அமைத்துக் காட்டியருளுகின்றுர். திருநனி பள்ளித்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருப்பதிகத்திலும், இக்கருத்துக்களை எங்கே அமைத்துள்ளேன் என்ற குறிப்பையும் அவரே வழங்குகின்றார்.

காழி என்று கருதப் பெறுவதற்கு உரிய பெருமைகளையெல்லாம் இப்பதிகத்தில், ஆறு, நாலு என்ற எண்ணிக்கை அமைந்த திருப் பாட்டுக்களில் அமைத்துள்ளதாகக் குறிப்பிடுகின்றார்.

''மேகமொ டோடு திங்கள் மலரா அணிந்து
மலையான் மடந்தை மணி பொன்
ஆகம் ஓர் பாகமாக அனலாடும் எந்தை
பெருமான் அமர்ந்த நகர் தான்''

இது, திருநனிபள்ளித் திருப்பதிகத்தின் 6 என்ற எண்ணிக்கைப் பாட்டு.

பெண்மையை மிகவைத்து, அதன் ஒரு பகுதியில் தான் இடம் பெற்று ஆடுகிறான். ஆகங்குளிர்ந்து அனலேந்தி ஆடுதல் என்பது பாச வெப்பங்களை நீக்கி பேரானந்தப் பேரின்பம் உயிர்களிடத்தே பொங்கிச் சிறக்குமாறு ஆடுதல். அடுத்து அவனே விரும்பி வந்து இங்கே தங்கி ஆடுகிறான்.

இவை 6ஆம் திருப்பாட்டில் அமைந்தவை.

இனி, 4ஆம் திருப்பாட்டில் அமைவனவற்றைக் காணலாம்.

''குளிர்தரு கங்கை தங்கு சடை மாடிலங்கு
தலைமாலை யோடு குலவி
ஒளிர்தரு திங்கள் சூடி உமை பாகமாக
உடையான் உகந்த நகர்''

என்பது திருநனிபள்ளித் திருப்பதிகத்து 4ஆம் பாட்டின் முதலிரண்டு வரிகள்.

கங்கையானவள் குளிர்ந்து சிறக்குமாறு அணிந்துளான். திங்கள் தலைமாலை குலவவும் ஒளிமிகுந்து சிறக்கவும் ஆம் வகையில் அமைத் துள்ளான். தன்னில் ஒரு பகுதியை உமைக்கு இடமாக வைத்தவன். அத்தகையோன் விரும்பித் தங்கியிருக்கும் ஊர்.

மேலே கூறப் பெற்றவைகளையும் தத்துவ நோக்கில் இணைத்துக் காண வேண்டும். வானுயர் கங்கை மிகவும் குளிர்ச்சியை அடையு மாறு அணிந்தான் என்பது உயிர்கள் வீடுபேற்றின்பத்தைச் சிறக்க அனுபவிக்கும் முறையில் கங்கையை அமைத்துள்ளான்.

அடுத்து, திங்கள் புதிய ஒளி பெற்றுத் திகழ்கிறது. அருளொளி யின் நடுவே திங்களை அமைத்த காரணத்தால் மிக்க ஒளியுடன் சிறந்து விளங்குகின்றது. உயிர்களை அருளின் நடுவாக மாற்றியுள் ளான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன்னில் ஒரு பாதியை உமைக்கு இடமாக அளித்தான் என்பது, தன்னையே உயிர்களின் ஒருபாதியாகக் கொண்டுபோய் அனைத்து நின்று, அவ்வுயிர்களுடனேயே நின்று அவைகளைக் காப்பாற்றி வருகிறான் என்னும் பொருள் பெற அமைத்துள்ளார்.

எனவே, ஆறும் நாலும் என்பவை கங்கையையும், நான்கு கால்கள் கொண்ட அறம் என்னும் பெற்றத்தையும் குறித்து, காழி நகர் இவ்விரண்டையும் அனுபவப் பொருளாகப் பெற்று, துய்த்து மகிழும் பெருமையுடையதாதலின் அவைகளே திருநனி பள்ளியிலும் நின்று மகிழ்வூட்ட வேண்டும் என்ற வகையில், திருநனி பள்ளித் திருப்பதிகத்து ஆறும், நான்கும் ஆகிய திருப்பாடல்களில் அமைத்துக் காட்டியுள்ளதாகக் குறிப்பிட்டருளினார்.

இவ்வாறு காழியையும் நனிபள்ளியையும் ஆறு, நான்கு என்ற குறியீட்டுச் சொற்கள் மூலம் இணைத்து, பின்னர், தம்மை,

"ஆன ஞான முனிவன்"

என்று கூறி விளக்கம் செய்தமைக்கின்றார்.

ஆன ஞானம் என்றால் என்ன ?

திருஞானசம்பந்தப் பெருமான், திரு அவளிவணல்லூர்த் திருப்பதிகத் திருக்கடைக் காப்பினுள் அமைக்கும் விளக்கம் ஒன்றுண்டு.

"ஆனமொழி யானதிறலோர் பரவும் அவளிவணல்லூர் மேல்
போனமொழி நன்மொழிகளாய புகழ் தோணிபுர வூரன்
ஞானமொழி மாலை நலம் நாடு புகழ் ஞானசம்பந்தன்
தேனமொழி மாலை புகழ்வார் துயர்கள் தீயது இலர் தாமே"

என்பது அப்பாட்டு. இதனுள், மொழி என்ற ஒன்றினை,

ஆனமொழி, போனமொழி, ஞானமொழி, தேனமொழி என நான்கு வகைகளில் விளக்கம் செய்து காட்டுகின்றார்.

ஆனமொழி என்பது இறையருள் ஆணைவழியிலான மொழி என்பதால் நிறைமொழி. போதையார் பொற் கிண்ணத்து அடிசில் போனகம் (உணவு) ஆக அமைந்ததால் வெளிப்பட்ட மொழி. அதனால், அது போனமொழி. ஞானமொழி என்பது உமையளித்த பாலடிசில் என்னுள் எழுப்பிய அருளனுபவத்தை நான் ஞானசம்பந்தத்தில் நின்று பெற்றேன். ஆகையால், ஞானவடிவாய் நின்று, என்னுள்ளும் எனக்குப் புறத்தும் நிறைந்துள்ள அருளை, ஞானமாகவும் இன்பமாகவும் அனுபவித்த நிலையில் வெளிப்பட்ட மொழியாதலின் ஞானமொழி. அம்மொழியானது உயிர்களின் மலத்தை வேரறுக்கும் மருந்தாகிய 'தேன்' என நின்றதால், அவர் தம் மொழி மற்றவர்களுக்குத் தேனமொழியாயிற்று.

அவ்வாறே. திருநனிபள்ளித் திருக்கடைக்காப்பில், தம்மை "ஆன ஞான முனிவன்" என்று கூறியதன் கருத்து, ஆறும் நாலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உளதாக வைத்த காரணத்தால் பெருகி நிறைவான ஞானம் அடைந்த முனிவன் என்று கூறிக் கொள்ளுகின்றார்.

''ஆறும் நாலும் வைத்ததால்ஆன ஞானம்''

என்பதன் பொருள் என்ன?

காழிக்கு அமைந்த பன்னிரு பெயர்களில் ஆருவதும் நாலாவதும் ஆக அமைந்த பெயர்கள் முறையே பூந்தராய், வெங்குரு என்பன.

காழிநகர்க் காவலன் ஆகிய இறைவன் தன்னைப் பூந்தராய் என நிறுத்தி, பின்னர் என்னையே பூந்தராய் என்னும் பதியாக அமைத்தான். அவ்வாறே, தான் வெங்குரு என நின்று, என்னை வெங்குரு ஆக்கினான். இவ்வினைப்புக் கருத்தினையே ''ஆறும் நாலும் உளதாக வைத்த பதியான ஞான முனிவன்'' என்று தம்முடைய ஞானத்தைப் பற்றிய விளக்கம் தருவதாக அமைத்தார். காழியின் பண்பு நின்ற அடிப்படையிலேயே என்னுடைய அனுபவத்தை நிகழ்த்தவில்லை. ஆறு முற்பட, நான்கு பிற்பட அமைந்த அனுபவத்தையே எனக்கு அமைத்தருளினான் என்றார். ஆறு என்ற எண்ணிக்கை மூலம் ஆருவது பெயர் காழிக்கு அமைந்ததன் காரணத்தைத் தனக்கும் அமைந்தது எனக் கொண்டார்.

'பூசுரர் சேர் பூந்தராயவன் பொன்னடி''

என்பதே, ஆறும் எண்ணிக்கையில் காழியானது நின்றபோது பெற்ற பூந்தராய் என்ற பெயரும் அதன் பண்பு விளக்கமும் அமைந்த ஏகபாதத் திருப்பாட்டு வரியாகும்.

சிவஞானிகள் மலம்நீங்கிப் பொலிவு பெறுவதற்குரிய நிலையிலும் திருநீற்றுப் பேரொளி விளங்கி அழகுபடுத்தும் வகையிலும் ஆனந்த நடனம் ஆடுகிறான். உடல் முழுவதும் திருநீற்றைத் தூளாக முழுமை பெற அணிந்தவர்களின் பாசம் நீங்கிய அருளனுபவமாக அமைகிறான். திருநீறணிந்து விளங்கும் சிவஞானிகள் உள்ளத்தில் தம் திருவடிகளை அமைத்து இன்பத்தை அனுபவிக்க வைக்கிறான்.

திருஞானசம்பந்தர் திருநனிபள்ளித் திருப்பதிகத்தில்

'' நிலமிகு கீழும் மேலும் நிகராதுமில்லை
எனநின்ற நீதியதனை
நலமிகு தொண்டர் நாளும் அடிபரவல்
செய்யும் நனிபள்ளி போலும் ''

என்றும்,

'' காடிடமாக நின்று கனலாடும் எந்தை
இடமாய காதல் நகர்தான் ''

என்றும்,

'' நனமிகு தொண்டர் நாளும் அடிபரவல்
செய்யும் நனிபள்ளி''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்றும் குறிப்பிடுவதை எண்ணினுல், சிவஞானிகள் சூழ, அவர்கள் திருநீற்றுப் பேரொளி மேலும் பொலியுமாறு ஆனந்த நடனம் இயற்றுகிருன் என்பதைத் தன்னுள் அனுபவநிலையில் அனுபவித்து அறிந்து வெளிப்படுத்திய ஆன ஞான மொழியானது, திருநனிபள்ளி யையும் ஞானசம்பந்தர் வழியில் வந்து; அந்நிலை அனுபவத்தை அத்திருநனிபள்ளியும் துய்க்குமாறு செய்தது. திருநீற்றுப் பொலிவு பெற்று விளங்கும் சிவஞானிகள் உள்ளத்தில் மூல அனுபவப் பொருளாக விளங்கும் திருவடி, இப்போது திருநனிபள்ளியில் வாழ்பவர்களுக்கும் அத்தகைய அனுபவத்தைக் கொடுத்தது என்று கொள்ளுதல் பொருத்தமே.

பூந்தராயவன் பொன்னடி ஞானசம்பந்தர் திருவுள்ளத்தில் நின்று அருளானந்த அனுபவத்தையும் அருள்மயமான ஞானத்தையும் தருவதுபோல, இறைவன் திருவடி மறுவிலா மறையோர் வாழ்கின்ற திருநனிபள்ளித் தலத்தில் வாழ்வோர் அனைவர் உள்ளத்திலும் தங்கி இன்பம் பொழிவதாக என்று அமைக்கிருர்.

இனி, நான்கு என்ற எண்ணிக்கையின் மூலம் காழிக்கு அமைந்த பெயர் வெங்குரு.

"விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேயினன்"

என்ற ஏகபாதத் திருப்பதிக வரி நமக்கு நன்மை பயப்பதாகும்.

என்னை ஒளிபெற்றுப் பொலியுமாறு செய்வதற்காக நின்மலமாக இருந்த தனது திருமேனியில் என்னைக் கொண்டுபோய் வைத்தான். பின்னர், எளியேனையும் பொருட்படுத்தி, குருவாக வந்து. என் பிறவியை நீக்கி, என்னுடைய அடிமை கெடாமலும் பேரானந்த அனுபவம் குறையாமலும் நிற்கப் பண்ணி, தன்னை என்னுள் இணைத்துக்கொண்டு, என்னுள்ளேயே தங்கினுன்.

வெங்குரு என்னும் பதியில் வந்து தங்கிய அவன் ஒரு பரிமாற்றம் செய்தான். இத்தகைய ஒரு பரிமாற்றத்தைத் திருநனிபள்ளியில் அமைத்துக் காட்டுகிருர் திருஞானசம்பந்தர். அத்தகைய பரிமாற்றம் திருநனிபள்ளித் திருப்பகத்தின் 6, 4, ஆகிய இரண்டு திருப்பாட்டுக்களில் கானப்பெறுகின்றன.

உமையம்மையை ஒரு பாகமாக அமைத்து, அவளுடைய உடம்பில் தன்னை இணைத்து, அனலேந்தி அங்கங் குளிர ஆடுகிருன். இது பாட்டு 6. பின்னர் நாலாவது திருப்பாட்டில் கண்டவாறு, உமையைத் தன்னுடைய ஒரு பாகத்தில் அமைத்து, விரும்பித் தங்கியிருக்கிருன்" என்ருர்.

மேலே விளக்கப்பெற்றவைகளைத் திருநனிபள்ளித் திருக்கடைக்காப்பில் உள்ள "காழி என்று கருதப்படுபொருள் ஆறும் நாலும் உளதாக வைத்த பதி" என்ற வரிகளோடு இணைத்துக் காண வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(1) பிரமபுரம் முதலாகக் கழுமலம் ஈறுக உள்ள பன்னிரண்டு பெயர்களில் 'காழி' என்ற பெயரோடு தம்மை இணைத்துக் கொள்கிறார்.

(2) காழியோடு தம்மை இணைத்துக் கொண்டபோது, காழி என்பது பத்தாவது பெயர்ப்பதி என்ற எண்ணிக்கை (உடன் கொண்டு) குறிப்பது ஆதலின் காழி என்று சொல்லப் பெறுகின்ற பதியானது பத்தாவதாக நின்ற பதி என்ற இணைப்பை இரண்டாவதாக அமைத்தவர்.

(3) பத்தாவது என்ற எண்ணிக்கையை ஐந்தும் ஐந்தும், இரண்டும் எட்டும் எனப் பலவாறுக அமைக்க இயலுமாயினும் இங்கே ஆறும், நான்கும் என இணைந்த நிலையை வைத்து, ஆறுவது எண்ணிக்கையால் குறிக்கப்பெறும் 'பூந்தராய்' என்பது முதலிலும், நாலாவதாகக் குறிக்கப்பெறும் "வெங்குரு" என்பது இரண்டாம் நிலையிலும் அமைய, அந்நிலையில் அமைந்த பதி என விளக்கம் கூறுகிறார்.

(4) பூந்தராய் என்ற ஆறுவது எண்ணிக்கைப் பதியின்மூலம் சுடுகாடானது பள்ளியிடமாக ஆகும் ஆக்கம் பெற்றது. இக் கருத்தை உடன் கொண்டதாகச் சம்பந்தர் குறிப்பது "நடு இருள் ஆடும் எந்தை" என்ற திருக்கடைக்காப்புப் பகுதியால் உறுதி செய்யப் பெறுகிறது. ஆகவே 'பூந்தராய்' என்ற பகுதியில், சிவ ஞானிகள் என்றும் பொலிவுபெற்று விளங்கவேண்டும் என்று திருக் கூத்தியற்றுகின்றான். பொலிவு பெற்ற சிவஞானிகளின் உள்ளத்தைப் பள்ளியிடமாகக் கொண்டு தங்கிவிடுகிறான். இதையே, புண்டரிமாகக் ஆக்கி, பின்னர் அப்புண்டரிகத்தின் அடியில், மூலப் பொருளாகத் தங்கியிருக்கிறான். புண்டரிகத்தினைப் பள்ளியாகக் கொள்ளும்போது. அவனை அங்கம் குளிர்ந்து, அனலாடும் எந்தை என்றும் குறிப்பிடுவார்.

(5) நள்ளிருள் நட்டமாடியவன் சுடுகாட்டைப் பள்ளியிடமாகக் கொண்டான். பின்னர் நாலாம் எண்ணிக்கையில் அமைந்தவாறு, தான் குருவாக வந்து முதலில் என்னை அவனுடன் சமமாக இருத்தினன். பின்னர், என்னை இடமாக வைத்து, அவன் என்னுடன் சமமாக இருந்தான். இந்நிலை வெங்குரு என்ற இடத்துக்கும், அங்குள்ள உயிர்க்கும் ஒருகாலத்தில் நிகழ்ந்த செயல் என்பதை நினைவு படுத்தினர்.

ஆன ஞான முனிவன்

திருநனிபள்ளித் திருக்கடைக்காப்பினுள் சம்பந்தர் தம்மைக் கூறிக்கொள்ளும் பகுதியே "ஆன ஞான முனிவன்" என்பது. காழி எனத் தம்மை நிறுத்தி, பூந்தராய் "ஆனநிலை" யானது—மாற்றம் பெற்ற நிலையானது காடானது பள்ளியாதல். இது ஞானநிலை. அடுத்து, "வெங்குரு" என்பதால் ஆன இன்பநிலையானது—மாற்றம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெற்ற நிலையானது பள்ளியானது இன்ப முறுத்துதல். இது இன்ப நிலை. இந்த இரண்டையும் முறையே பூந்தராய்த் திருப்பதிகத்தில் ஞான நிலையை—அருளாக உலகை மாற்றிய நிலையைக் குறிப்பிடு வதாலும், "வெங்குரு" என்ற பதிகத்தில் இன்பநிலையமாக இடத் தையும் உயிர்களையும் ஆக்கியதாகக் குறிப்பிடுவதாலும், இவ்விரண் டையும் ஞானசம்பந்தர் பின்னர்த்தான் பாட இருக்கிறார் எனினும் இவ்விரண்டையும் "பூவார் கொன்றை" என்ற பதிகத்தில்—திருநனி பள்ளித் திருப்பதிகம் பாடுவதற்கு முன் பாடிய பதிகத்தில்,

"பொடியிலங்கும்" என்ற காழிப்பதிகத்தின் திருக்கடைக் காப்புப் பாட்டாகிய,

"கருக முந்நீர் திரையோத மாருங் கடற் காழியுள்
உரகமாருஞ் சடையடிகள் தம்பால் உணர்ந்து உறுதலால்"

என்பதனுள் அமைந்த, அடிகள் தம்பால் உணர்ந்து உறும் முறையை அடிப்படையாகக் கொண்டு அதனை முன்னிறுத்தியும்,

"பூவார் கொன்றை" என்ற திருப்பதிகத்தில் அமைத்த "ஆன இன்பம் ஆடும் அடிகள்" என்று கங்கையை முன்னிலைப் படுத்திக் கூறும் கருத்தையும் இணைத்து, 'ஆன ஞானம்' என, தாம் பதிப் பொருளுடன் இணைந்து பெற்ற ஞானம் எனவும் இணைந்து நின்ற அந்நிலையில் 'அடிகள்' என நின்ற அவர் தம் நிலைபோலவே என்னிலையும் 'முனிவன்' என்ற நிலையே, எனவும் இணைத்துக் காட்டி, இணைந்து நின்று பெற்ற நிலையை எடுத்து இணைக்கும் முறையில் 'ஆனை நமதே' என்ற பிணைமொழியையும் அமைத்தார்.

ஆன—அடிகள் தம்முடன் இணைந்து உற்று நிற்றலான் அமைந்த; ஞான முனி — ஞானமானது அவன் அடிகளாக நிற்க, யான் முனிவனாக நின்று பெற்ற ஞானம். எனவே, 'ஆன ஞான முனிவன்' என்று தன்னிலையை விளக்கினர்.

ஆறும் நாலும், பூந்தராயும் வெங்குருவும், நடுவிருளாட்டமும் அங்கம் குளிர்ந்தனலாடலும், அறிவும் இன்பமும், "ஆனை நமதே" என்பதும் ஆகிய இவைகளை அமைத்தமை "ஆன ஞான முனிவன்" நிலை.

பதிகம் வெளிப்படும் சூழல்

திருநனிபள்ளித் திருப்பதிகம் தோன்றும் சூழல் தனித்தன்மை வாய்ந்தது. உமை தரு ஞானப்பால் அருந்தியபின் ஞானப் பெரும் பேற்றில் திளைக்கும் பிள்ளையார் தந்தையாருடன் உலகியற் பேச்சுக் களில் அடிக்கடி ஈடுபடும் நிலை பெற்றாரிலர். எப்போதேனும் பேச முற்பட்டால், அது அருளியற் பேச்சாகவே இருக்கும். அவர் பேசத் தொடங்கினலே திருவருள் வெளிப்பாடு உண்டு என்ற அளவில் மனமகிழும் நிலையை அன்றி வேறு ஏதும் அறியார் அவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தந்தை. இந்நிலையில், குழந்தையைத் தோளில் வைத்துக்கொண்டு, தந்தையார் வழிநடை மேற்கொள்கிருர்.

திருநனிபள்ளித் திருப்பதிகம் திருநனிபள்ளியை அடைவதற்கு முன்னமேயே பாடப்பெற்றது என்பதைத் திருநனிபள்ளித் திருக் கடைக் காப்பின் மூலம் அறியலாம். நனிபள்ளியை அடைந்தபின் பாடுவதாயின், நடந்து சென்று, சந்நிதியில் நின்று பாடியிருக்க வேண்டும். "அத்தர் பியல் மேல் இருந்து" என்பதால் வழியி லேயே, திருநனிபள்ளியை அணிய நின்ற இடத்திலேயே அப்பதிகம் பாடப் பெற்றிருக்க வேண்டும் என்று கொள்ளும் சேக்கிழார், பதிகம் பாடத் தொடங்குவதற்குரிய சூழல் ஒன்றை அமைக்க வேண்டியுள்ளது. இது ஏனையோருக்கு இல்லாத ஒரு வாய்ப்பு. வாய்ப்பு என்பதாக அமையினும், சில சமயம் சிக்கல் வந்து விடுவதும் உண்டு. பதிகம் பாட வேண்டிய சூழ்நிலை ஏன் ஏற்பட்டது என்பது பற்றி நம்பியாண்டார் நம்பிகளோ, இராமலிங்க வள்ளலோ, திருக்களிற்றுப்படியார் என்ற நூலின் ஆசிரியரோ சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆனல், சேக்கிழார் சொல்லியேயாக வேண்டும். ஏனெனில், வரலாறு பாடுகின்ருர். இந்நிலையில், சென்று கொண்டிருக்கும்போதே பாடினர் என்ருல், திருநனிபள்ளி என்பதாக அவர் அறிய இயலாதே, திருநனிபள்ளி என்ற ஒரு முன்னுரையை வைத்துக்கொண்டுதானே பாட வேண்டும், என நினைக்கிருர். பதிகம் பாடும் வல்லமையுள்ள ஞானிக்கு, இத்தகைய ஒரு செய்தி அறியாது போகுமா எனில், அது அப்படித் தான் இயங்கும் என்பதை அடுத்து வரும் விளக்கம் தெளிவுறுத்தும். சேக்கிழார் அருளாளர் என்பதை எடுத்துக் காட்டும் இடங்களில் இது ஒன்று.

திருஞானசம்பந்தர் தந்தையின் தோளில் அமர்ந்து வரும்போது, இறைவன் திருவடியைத் தன் உள்ளத்துள் தாங்கி வந்தார் என்பதை முன்பேயே எடுத்துக் கூறி விட்டார். சிவபாத இருதயர் குழந்தையைத் தூக்கித் தோளில் வைத்தார், அதே நேரத்தில் சம்பந்தர் இறைவன் திருவடிகளைத் தம் உள்ளத்தில் தாங்கினர். செல்லும் வழியில் தந்தையாருக்குச் சம்பந்தர் பற்றிய நினைவே. சம்பந்தருக்குத் தன்னைத் தூக்கும் தந்தையும், தன்னல் தூக்கப் பெறும் தந்தையும் நினைவுப் பொருளாயின. சிவபாத இருதயரைத் தந்தையாகக் கொண்டு இருந்த முன்னுறுநிலை; காழி இறைவனைத் தந்தையாகக் கொண்ட பின்னுறுநிலை. ஒரே தொடர்ச்சிக் காலத்தில் அமைந்த இருவேறுநிலை. இது ஒரு பேரூழி தோற்றிய பிளவு. முன்னுள்ள நிலையில் தான் 'காடு' என நின்றேன்; ஞானப்பால் ஏற்ற நிலையில், காழியிறைவனைத் தந்தையாகக் கொண்டேன், என்பவை. காடு, நற்காடு ஆனது; பின்னர்க் கடற்கரைச் சோலையானது. அறிவும் இன்பமும் காட்டிலேயே விளங்கித் தோன்றுவதைக் காண்கிருர். இது ஞானசம்பந்தருக்குத் தந்தை தன்னைத் தோளில் ஏற்ருர் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தான் பெற்ற பல எண்ணங்கள். காடானது நெய்தற் சோலையாக விளங்குகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்நிலையில் சோலை என்ருலும், வெறும் உள்ளத்து நினைவாக இல்லாமல், ஏதோ ஒரு உண்மைச் சோலையே தோன்றுவதாகக் காண்கிருர். அந்நிலையில், 'சோலை தோன்றுகிறதே அது எது? என வினவுகிருர்.

"வானனேயும் மலர்ச்சோலை தோன்றுவது எப்பதி?"

என்பது வினு. சம்பந்தரிடத்திலிருந்து குரல் வந்ததும் தந்தை மகிழ்கிருர். காரணம் அவர் பேச்சானது திருவருளில் எழும் பேச்சாகவே இருக்கும் என்ற அந்நிலையில் தான் அவர் மகிழ்கிருர். ஆனுல், விடை சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது என்பதை உணர்ந்தார். கேள்வி, மலர்ச்சோலை தோன்றுவது எப்பதி? சம்பந்தர் இவ்வாறு வினு அமைப்பதன் காரணம் அவர் தம் உள்ளத்தில் அமைந்த வளர்ச்சிநிலை. சிவபாத இருதயருக்கு முரண்பாடு தெரிகிறது. எதிரே தோன்றுவது பாலை நிலமாகிய காடு தானே. சோலை ஏது? சாதாரணக் குழந்தையாக இருந்தால் பாலைக்கும் சோலைக்கும் உனக்கு எங்கே வேறுபாடு தெரியும் என்று அதட்டியிருப்பார். இது பாலைநிலம் என்று சொல்லியும் இருப்பார். இந்நிலையில் அவர் சிந்தனையில் பாலையாக நமக்குத் தோன்றுவது, அவருக்குச் சோலையாகத் தோற்றலாம். எவ்வாருயினும் எப்பதி? என்ற வினுவுக்கு, எதிரில் தோன்றும் 'பதி' ஒன்றே. அது திருநனிபள்ளி. எதிரில் தோன்றுவதாக இருந்த பதி திருநனிபள்ளியாதலின், அவர் வினவிய முறையிலேயே, "மலர்ச்சோலைத் திருநனிபள்ளி" என்றே சொல்லி விடுகிருர். 'திருநனிபள்ளி' என்ற பெயருடன் சம்பந்தர் தம் உள்ளத்தில் இணைப்பின் மூலம் அமைத்துக் கொண்ட வளங்கள், நிலைகள் ஆகியவைகளைப் பாடி விடுகிருர். அவர் பாடிய அந்நிலைகளே அவர் நேரிற் சென்ற போது காட்சியிற்படும் நிலைகளாக ஆயின.

சொல்லாமைக்கும் சொன்னமைக்கும்

"பாலை நெய்தல் பாடியது" என்ற சாத்திரத் தொடரையும் நம்பியாண்டார் நம்பிகள் அருளிய, நான்கு வகையான தொடர்களுள் ஒன்ருகிய,

"தாழும் சரணச் சதங்கைப் பருவத்தே
பாலையும் நெய்தலும் பாட வலான்"

என்ற தொடரையும் ஒரே அமைப்புடையன என்று கொள்ளலாகாது.

"பாலை நெய்தல் பாடியது" என்பதில் சிவஞானியின் முன்னுறு நிலையும் பின்னுறு நிலையும் இணைத்துக் காணும் அமைப்பில், சிவ ஞானமாகிய உமைதரு பொற்கிண்ணத்துப்பால் உட்செல்லுமுன் உள்ளநிலை சுடுகாடே — பாச கரணங்களே அது உட்சென்றதும் பசுகரணமாக மாறி, பின்னர், பதிகரணமாக, சிவகரணமாக அமைகிற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முறையை ஞானசம்பந்தர் திருநனிபள்ளித் தேவாரம் உணர்த்துதல் கொண்டு தெளியலாம் என்பதுவே. தொடக்கம் "காரைகள் கூகை" என்ற பாலைநிலை. பின்னர், காடும் அதன் பின்னர், நெய்தல்சார் சோலையும் ஆயின முறையை ஒரே பதிகத்தில் காண முடியும் என்ற அளவே. நம்பியாண்டார் நம்பிகள் அமைப்பது வேறு.

இறைவன் திருவடிகள் இரண்டும் பதிஞானமும், சிவானந்தமும். சதங்கை கட்டிக்கொண்டிருக்கும் பருவத்திலேயே அவன் அவற்றைப் புகலிடமாகக் கொண்டு தாழ்ந்த காரணத்தால், பாலையும் நெய்தலும் ஆக முதலும் முடிவும் அமைத்து, ஞானமும் இன்பமும் இல்லாத பாலையில் அவை அமைந்த நெய்தலை அமைத்துப் பாடும் ஆற்றல் பெற்றான் என்பதே.

திருவடிகளில்—'பதிஞானம் பதியின்பம்' என இரண்டாய் நின்ற திருவடிகளில் தம்மைத் தாழநிறுத்தி, இணைத்தது சம்பந்தர் செயல். எப்போது? சதங்கை அணிந்த சிறுபருவத்திலேயே. சிறு பிள்ளையா யிருந்தபோதே, தாழ்ந்தது அவர்செயல், வெளிப்பட்டது திருவருட் செயல்.

சிவஞானிகளின் பொலிவானது சார்ந்த இடங்களையெல்லாம் பொலிவு பெறச்செய்யும் என்பது வெண்பொடி பூசியதன் உட் பொருள். இறைவன் பாலையைப் பாலையாக, நெய்தலை நெய்த லாகத்தான் அமைக்கமுடியும். அவனைத் தன்னுள் அடக்கிய ஆனந்த நிலையில் சுடுகாட்டுப் பொடி, தூயவெண்ணீறு என நின்று மற்றவைகளையும் பொலியவைக்கும் ஆற்றல் பெறுகிறது. இதனையே, ***திருக்களிற்றுப் படியார்*** என்ற சாத்திர நூல் கூறும்,

> ***"இன்று பசுவின் மலமன்றே இவ்வுலகில்***
> ***நின்ற மலமனைத்தும் நீக்குவது"***

என்ற 7ஆம் பாட்டின் உரையினைக்கொண்டு, திருவெண்ணீறு, தான் பொலிவுடன் விளங்கி, தன்னைச் சாரவைத்த பொருள்களை யெல்லாம் பொலிவுபெறச் செய்துவிடும் என்பதே. இதனை உன் னியே, ஞானசம்பந்தப் பெருமான் திருமணம் நடைபெற்ற திருத் தலம், இன்று ஆச்சாள்புரம் என வழங்கப்பெறும் முத்தித் திருத் தலத்தில், உள்ள இறைவியின் பெயர் "திருவெண்ணீற்று உமை யம்மை" என்பது. திருவெண்ணீறு ஒன்றே அனைத்தையும் வழங்கி, முத்தியையும் இறுதியில் வழங்குவது. அதுவே, திருநீற்றுப் பெரு மையின் ஆற்றல் என அமைந்த கருத்தையும் உளங்கொள வேண்டும்.

மேலே குறித்த நிலையில், சிவஞானியின் உள்ளத்தில் அமைந்த பொலிவு, உடலில் அமைந்த பொலிவாகும். அது உள்ளத்தில் அமைந்த இறைவன் அமைக்கும் செயல். அவனால் வெளிப்படும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொலிவு சிவத்தால் வெளிப்பட்டாலும், இரண்டும் ஒன்றென இணைந்தவகையில், சிவஞானியின் பொலிவாகவே கொள்ளுதலும் அறமுறையே. சிவஞானியின் பொலிவு அனைத்தையும் சிவமய மாக்கும், அல்லது பொலிவை எய்துவிக்கும். இந்நிலையில், ஞான சம்பந்தர் திருவுள்ளத்திற் காணும் பொலிவுக்குரிய பதி எது? என்பது வினு.

தம்முள் தோன்றிய பொலிவை எய்துவதற்குரிய பதியைத் திரு நனிபள்ளி என்று தாமே தேர்ந்தெடுக்கவில்லை, திருநனிபள்ளி என்ற பதியை எடுத்து மொழிந்தது சிவபாத இருதயர். இந்நிலையில், திரு நனிபள்ளியானது இத்தகைய பொலிவைப் பெறுவதற்கு நேர்க் காரணம் யார் மறைக்காரணம் யார் என முடிவு செய்யவேண்டும். வர லாறும் அருள் நிகழ்வும் அமைத்து, வரலாறு நூல் பாடும் முறையை அமைத்துக்கொண்ட சேக்கிழார் போன்ற தெய்வக் கவிகள் எதைச் சொல்லவேண்டும்? இந்நிலையில், சம்பந்தர் திருவுள்ளத்தில் தோன் றிய வளமைக் காட்சிகள் ஒருவகையில் ஞானப்பால் அருந்தியமை யின் வெளிப்பாடாக அமைந்த தனிமையும் பொதுமையும் அமைந்த அருள்நிலை. ஆனுல், அதனைத் திருநனிபள்ளிதான் என முடிவு செய்து, அப்பொலிவை அந்நகருக்கு ஞானசம்பந்தரே அமைக்க வில்லை. அப்பெயரை அமைத்தது சிவபாத இருதயரே. இந்நிலை யில், சேக்கிழார், 'ஆணை நமது' என்று கூறிய புதுமையை உன்னி, இணைந்து நின்றமையால் வெளிப்பட்டது இது என்பதை ஏற்றம் தரும் திருவாக்காகக் கொண்டு, இச்செயல் இருவருக்கும் ஒத்த உரிமையானது என்ற வகையில், இருவரின் இணைப்புச் செயலை, ஒருவரின் முழுமைச் செயலாக ஒரு வரலாற்றாசிரியர் சொல்வது முறையன்று என்ற அறத்தை உன்னி, பாலை நெய்தல் ஆன நிகழ்ச் சியை ஏற்றுக்கொண்டு, அங்கேயும் யான் திருக்கடைக்காப்பினுள் "ஆணை நமது" என்பதை உளங்கொண்டு, "நாரியோர் பாகம் வைகும் நனிபள்ளி" என்பதையும் எடுத்துக்காட்டி, இருவர் செய லாகவே, அகத்திலும் புறத்திலும் நிகழ்ந்தமையின் அதனை ஒருவர் செயலாக அமைக்க இயலாத நிலையில், செயல் நடைபெற்ற முறை களை விளக்கிக் கூறிவிட்டு, செயல் செய்தார் யாவர் என்ற ஒன்றை மட்டும் கூருது சென்ருர். இது, அருள்நிலையில் நின்று, அருளியல் நிகழ்வுகளைப் பாடினுலும், வரலாருக அமைத்துக் கூறுபவர் மேற் கொள்ளவேண்டிய அறம் இவ்வாறுதான் அமையவேண்டும் என் பதற்குத் தாமே ஓர் எடுத்துக்காட்டாக நின்று வரலாறு படைக்கிருர் சேக்கிழார். ஆயினும், உலகவர் வெளிப்படையாகக் காணுமாறு, இச்செயல் ஞானசம்பந்தர் செயலாகவே, மக்கள் கண்டார்கள், பேசி ஞர்கள் என்று குறிப்பிடுகிருர் நம்பியாண்டார் நம்பிகள்.

"ஞாலத்தினர் அறிய மன்னுநனி பள்ளியது
பாலைதனை நெய்தல் ஆக்கியும்"

என்று திருவுலாமாலையிலும்,

"கள்ளம்பொழில் நனிபள்ளித் தடம்கடம் ஆக்கி அஃதே
வெள்ளம் பணி நெய்தலாக்கிய வித்தகன்"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று, *திருச்சண்பை விருத்தம்* நான்காம் பாடலிலும்,

" நாதன் நனிபள்ளி சூழ்நகர் கானக மாக்கி, அஃதே
போதின் மலிவய லாக்கிய கோன் "

என்று, திருவந்தாதி 17ஆம் பாடலிலும் நம்பிகள் கூறியவைகளையும் மனத்துக் கொள்கிறார் சேக்கிழார்.

பாலையை நேராகவே மாற்றவில்லை, பாலை முதலில் காடாக மாறி, பிறகு கடற்கரைச் சோலையாக மாற்றம் பெறுகிறது. இங்கேயும், சம்பந்தர் வேறோர் ஆற்றலுக்கு உட்பட்டு மாற்றுவதாக அமைகிறது. தானே தன்னிச்சை வண்ணம் அமைக்காமல், ஒரு நெறியைப் பின்பற்றி இணைந்து செயல்படுவதாகச் சேக்கிழார் கருதி, நிகழ்வுக்குரிய காரணங்கள், நிகழ்வு அமைந்த முறை ஆகிய அனைத்தையும் அவ்வந் நிலைமையில் எடுத்துக்கூறி, செயலுக்குரியவர் யாரெனக் கொள்ள இயலாது என்று நினைந்து அமைந்து விடுகிறார். இவ்வாறு அமையும் இணைப்புச் செயல்களை எவ்வாறு அமைக்கவேண்டும் என்ற நெறியையும் சேக்கிழார் ஞானசம்பந்தப் பெருமான் கடைப்பிடித்த நெறியின் மூலமாகவே அமைத்துக் கொள்ளுகின்றார்.

மதுரையில் நடைபெற்ற அனல்வாதத்தில் வெற்றிபெற்றது அருட்செயல். அவ்வோலையில் அமைந்த பதிகம் பச்சைப் பதிகம். அது திருநள்ளாற்றுப் பதிகம். மதுரையிலிருந்து மீளும் ஞானசம்பந்தர் திருநள்ளாற்றை அடைந்து திருப்பதிகம் பாடும்போது, திருநள்ளாற்றுப் பெருமான் தான் ஆலவாயில் வந்து நின்று இது செய்தான் என்பதாக அமைத்துச் சிறப்பித்தருளும் முறையில், நள்ளாற்றுப் பெருமான் ஆலவாயில் அமர்ந்து செய்தமுறை என விளக்கும் வகையில், பாடியருளிய "பாடகம் மெல்லடிப் பாவையோடும்" என்று தொடங்கும் நள்ளாற்றுப் பதிகத்தால் அறியலாம்.

'ஆணை நமது' எனவரும் பிணைமொழிகளில், இணைந்து செயல்படும் அருளியல் நிகழ்வுகளில், ஞானசம்பந்தர் நெறியையே பின்பற்றுகிறார் சேக்கிழார். ஆனால், நம்பியாண்டார் நம்பிகள், இறைவன் செயல் பொதுமையாக அமையும், அதனை குறிப்பிட்ட ஒன்றில் ஈடுபடுத்துவது சிவஞானிகளின் செயலே என்று கருதியிருக்கலாம். நம்பியாண்டார் நம்பிகளை அப்படியே மேற்கொள்ளும் தன்மையும் சேக்கிழாருக்கு உண்டு. ஆயினும், சம்பந்தர் தாமே நேரே திருநனிபள்ளிக்கு அமைக்கவில்லை, எப்பதி என்ற ஐயம், பின்னர், சிவபாத இருதயரால், 'திருநனிபள்ளி' என்ற பெயர் அமைகிறது. அங்கேயும் ஞானசம்பந்தருக்கே என்று தனிமைப்படுத்த இயலாது என்று கருதியே, நிகழ்வுகளை மட்டும் ஒப்புக்கொண்டு, அதனைச் சம்பந்தருக்குரிய செயலாக அமைத்துக் கூறுராயினர்.

இதனை, இயலிசைப் பதிகமாகக் கொள்ளாமல், இன்னிசைப் பதிகமாகக் கொள்ளல் வேண்டும். இத்திருப்பதிகம் திரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீற்றின் பெருமையைச் சைவசமய முதற்பெரு நெறியாக எடுத்துக் கொள்ளும் முறையில் அமைந்த பதிகமாகும். இந்நிலையில், இது புண்டரிகத்தவன் மேவிய புகலி என்பதன் விளக்கமாக அமைந்து புகலடைவதன் பெருமையும், புகலடைந்தவன் மூலமாகப் பெற்ற சிறப்பினுல் பிறரும் புகலடைதற்காம் செல்வம் தரும் நிலை என் பதையும் 'புகலி' என்பதன் விளக்கமாக அமைத்து உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இத்தலைப்பின் தொகைப்பொருள்

திருஞானசம்பந்தரை அறிமுகம் செய்யும் சேக்கிழார் இடம்பெற மலர்ந்ததும் காலம்பெற அழுததும் ஆகிய புனிதம் நிறைந்த வாயினர் என்பதும்; அறிமுகம் செய்யும்போது அவரைப் புகலியோடு இணைத்து, புகலித் திருஞானசம்பந்தர் என்று புகலியை விதந்து எடுத்து மொழிவதன் குறிப்பு இவை என்பதும்; புகலியுடன் இணைந்த புண்டரிகமும், ஞானசம்பந்தருடன் இணைந்த தெய்வத் தாமரையும் குறிக்கும் கருத்துக்கள் இவை என்பதும்; காழியும் புகலியும் இணைத்ததன் நுட்பமும், திருக்கடைக் காப்பினுள் பல உண்மைகளை அமைத்துக் காட்டியுள்ளமையும், சம்பந்தர் இடத் தொடும் காலத்தொடும் தம்மை இணைத்துக் கொள்வதும், பன் னிரண்டு பெயர்களில் பத்தில் தம்மை நிறுத்திக் கொள்வதும், பன் னிரண்டு தலப்பெயர்களோடு, பன்னிரு நாமப் பெருமை என்ற வைணவக்கருத்தை இணைத்து அறிவதும், புகலி என்பதன் இரு பொருள் அடியவர்களுக்கு இணைந்து பொருந்துகிறது என்ற நிலையும், திருக்கோலக்காத் திருக்கடைக்காப்பானது 'தக்கதிருக்கடைககாப்பு' என்று சிறப்பித்துக் கூறப்பெறும் பெருமையுடையதாக அமை வதும், திருக்கோலக்காத் திருப்பதிகத்தில் அமையும் "குழலார் பண் செய்", 'குறியார் பண்செய்' என வருந்தொடர்களின் குறிப்பும், பொருளின் இரு திறங்களாகிய இயல், இசை என்பவற்றுள் வரும் இசையும், ஏழிசையில் வரும் இசையும் வேறு ஆதலும், திருக்கோலக் காப்பதிகம் வலங்கொள் பாடல் என்பதும் ஆகியவை இணைத்து உணர வேண்டியன என்பதும்; திருநனிபள்ளித் தலயாத்திரையே யாத்திரையின் தொடக்கம், திருநீற்றின் பெருமை விளங்கும் முறை, அடியவர்களின் பொலிவு, ஆறும் நாலும் உளதாக வைத்த பதி, 'ஆணை நமதே' என்றதன் உட்பொருள், பாலை நெய்தல் பாடிய வரலாற்றைச் சேக்கிழார் குறிப்பிட்டுக் கூறுமையின் காரணம் ஆகிய வைகளை இணைத்து, திருநனிபள்ளித் திருக்கடைக்காப்பின் மூலம் திருஞானசம்பந்தப் பெருமான் பேணிய தொண்டு நிலையும், சாத்திரம் அமைக்கும் தத்துவநிலையும், சேக்கிழார் அமைக்கும் வரலாற்று நிலையும் ஒருங்குற இணைத்துக் காணவேண்டியது அவசியம் என்பதும் விளக்கப்பெற்றுள்ளன.

திருஞானசம்பந்தரின் நிகழ்வுகள் பலவற்றையும் உளங் கொண்டு வரலாற்று நிகழ்வுகளை வரலாற்று அடிப்படையிலே சொல்ல வேண்டும் என்ற குறிக்கோளை அமைத்துக் கொள்ளுகிருர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேக்கிழார். மேலும், இருவர், மூவர் துணைநிற்க நிகழும் ஒரு நிகழ்ச்சியை அதில் இணைந்துள்ள பலரின் வரலாறுகளைத் தாமே கூறப் பெற வேண்டிய சூழ்நிலை அமையுமேல், ஒவ்வொருவர் வரலாற்றிலும் ஒவ்வொரு முறையைப் பின்பற்றிக் கூறும் மரபு ஒன்றினைச் சேக்கிழார் மேற்கொள்கிறார். எடுத்துக்காட்டாக, திருமறைக் காட்டு நிகழ்ச்சியானது திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் என்ற இருவரையும் இணைத்தது. ஒரே நிகழ்ச்சியை இருவர் வரலாற்றிலும் ஒரே முறையில் அவர் கூறவில்லை. அவ்வாறு அவர் மேற்கொள்ளுவதற்குரிய அடிப்படை மரபு ஒன்றை அவர் அமைத்துக் கொள்கிறார். அதனை இங்கே விரிப்பிற் பெருகும். மேலும், இது பெரியபுராண ஆராய்ச்சியன்று ஆதலின் அதை விரிக்காது, திருஞானசம்பந்தரின் இந்த ஒரு நிகழ்ச்சியை மற்றவர் கூறும் முறையிலும், சேக்கிழார் கூறும் முறை எவ்வாறு மாறுபடுகிறது என்பதையும் அத்தகைய மாற்றத்துக்குரிய காரியம் இன்னது என்பதையும் மட்டுமே இத்தலைப்பில் சுருக்கமாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது என்பதையும் உளங்கொள்ள வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேயினன்

மூன்றுடன் ஒன்று

பிரமபுரம், வேணுபுரம், புகலி என்ற மூன்று பெயர்களாலும் சைவ சமயத் தொன்னெறியானது பெற்ற — மூன்று ஊழிகளில் நிலைநாட்டிய கொள்கைகள் மூன்று. அறிதற்கரியவன், கடந்த நிலையினன் ஆய இறைவன் நம்மை நோக்கி, நம்மைத் தேடி வந்து அடைந்தான் என்று கொள்ளுதலும் அதனை எண்ணுதலும், முதல் நெறி. இயல் இசை என்ற இருதிறங்கொண்ட பெருமான் நடம் இயற்றினன் ஆதலின் இயல், இசை, கூத்து என்ற முப்பெரும் பிரிவாய் நின்ற தமிழ் ஆனன். தமிழை மூன்று என்ற பிரிவுசெய்து உணர்த்திய முதல்வர் ஞானசம்பந்தரே என்பது தமிழறிஞர்கள் கண்ட முடிவு. அமரர் தெ பொ. மீ. அவர்கள் தாம் எழுதிய முத்தமிழ் என்ற கட்டுரையில் இதனைக் குறிப்பிட்டுள்ளார். முத்தமிழைத் திருநெறித்தமிழ் என அமைத்தது வேணுபுரம். திருவைந்தெழுத்தின் பெருமையும், இன்னிசை ஏழாக அமைந்து, அது குழல் மூலம் வெளிப்படுவதும், அடியார்களின் திருவுருவமே குழலாக நின்றது என்பதும் திருமந்திரநெறியையும் இன்னிசை ஏழென நின்ற நெறியையும் விளக்கின. அவையிரண்டும் சைவக் கொள்கையின் இரண்டாம் நெறி. மூன்றாவதாக நின்ற புகலியின் மூலம் திருநீற்றுப்பொலிவினல் உயிர் உயிரல் பொருள்களாகிய அனைத்தும் திருவருட் பொலிவு பெற்று விளங்கின என்பது விளக்கப் பெற்றது. இவ்வகையில் திருநீற்றின் ஒளிவளர் நெறியே சைவநன்னெறியின் மூன்றும் நெறியாயிற்று.

இனி, காழிக்கு நாலாவதாக நின்ற பெயர் 'வெங்குரு' என்பது. இப்பெயரில் அமைந்த 'வெம்' எனற அடைமொழி இரு பொருள் தரும் சொல். வெம்மை என நின்று சூடு என்ற பொருளையும் விரும்பப் பெறுதல் என்ற பொருளையும் தரும் அடைமொழிச் சொல்.

"விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேயினன்"

என்பது, ஏகபாதத் திருப்பதிகத்தின் நாலாந் திருப்பாட்டின் முதல் வரி. இதுவே, அத்திருப்பாட்டின் ஏனைய மூன்று வரிகளாகவும் அமைந்துள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'வெங்குரு' என்ற பெயரின் மூலம் காழிக்குரிய பன்னிரு படிகளில் நாலாம் படியின் அமைப்பும் பண்பும் நெறியாம் பேறும் இவை இவை என விளக்கமுற அமைத்தல் வேண்டும்.

உயர்ந்த ஒரு பொருள் தாழ்ந்த ஒரு பொருளை எடுத்துத் தன்னுடன் ஒக்க வைத்துக் கொள்ளுதல்மூலம் தாழ்ந்த பொருளும் உயர் தன்மை பெறுகிறது. அவ்வாறு எடுத்து வைத்துக் கொண்டால் மட்டும் போதுமா? பொருளை இழிந்த நிலையிற்கொண்டுபோய் நிறுத்துவதற்குரிய காரணத்தை அறிந்து, அறிவித்து, அக் காரணத்தை நீக்க வேண்டும். அப்பொழுதுதான், தான் கொண்டு வந்து அதை உயர்நிலையில் வைத்தால், அது என்றும் அங்கேயே நிற்கும் நிலைபெறும். அவ்வாறு அப்பொருள் உயர்நிலையைத் தகுதியாலும் பண்பினாலும் பெற்றபின்னர், அதனை எதிர்க்க அல்லது அழிக்க முற்படும் பொருள்களெல்லாம் தாமே அழிந்து போகும். இந்நிலையில், உயிர்களின் இழிவுக்குரிய காரணத்தை நீக்கி, அவைகளை உயர்நிலைக்கு உயர்த்த வந்தவரே குரு. 'குரு' என்ற உயர் பொருளின் சிறப்பை அறிந்து போற்றுதல் என்பதே முன்னர்க் குறிப்பிட்ட மூன்றுடன் இணைந்த நான்காம் நெறியாக அமைந்தது. குருவின் சிறப்பினை உணர்ந்து போற்றும் நெறியை விளக்க வந்த ஞான சம்பந்தர் திருவாக்கே, "விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேயினன் என்பது.

முதல்யாத்திரை முடிவு

திருநனிபள்ளிக்குச் செல்வதை யாத்திரையின் முதல்நிகழ்வாக அமைத்துக்கொண்டு தொடங்கிய ஞானவாரமுதமுண்ட பிள்ளையார் திருநனிபள்ளி வழிபாட்டை முடித்தபின், அங்கே கூடியிருந்த தலைசை அந்தணர்களின் அழைப்பை ஏற்று, தலைச்சங்காடு, பின்னர் முறையே சாய்க்காடு, வலம்புரம், வெண்காடு, தென்திருமுல்லை வாயில் ஆகிய திருத்தலங்களை வழிபட்டுத் திருப்பதிகம் பாடி, பின்னர், சீகாழியை அடைந்தார். இது முதல்யாத்திரையின் தொடக்கமும் முடிவும்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர்

திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழிசையில் வல்லவர். அவர் மனைவியார் மதங்க சூளாமணியார். நன்றாக இசையுடன் பாடுவார். தலங்கள் தோறும் சென்று இறைவன் புகழை ஒருவர் பாடுவதும், மற்றவர் அதனை யாழிலிட்டு இசைப்பதும் அவர் தொண்டு. திருஞான சம்பந்தரின் பெருமையைக் கேள்வியுற்று, அவரைக் கண்டு வணங்குவதற்குச் சீகாழியை நோக்கி இருவரும் வந்தார்கள். இறைவன் புகழ்பாடும் தொண்டர் தம்பதியினர் தம்மைக்காணச் சீகாழிக்கு வருகின்றனர் என்பதை உணர்ந்த திருஞானசம்பந்தர் அடியவர்கள் புடைசூழச் சென்று, சீகாழி நகர எல்லையில் அவர்களை வரவேற்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநீலகண்ட யாழ்ப்பாணர் தாழ்ந்த சாதியினர். திருஞான சம்பந்தர் மறைக்குலத்து நெறிவந்த காழிக் கவுணிய மரபினர். இறைவனுக்குத் தொண்டுநெறி பேணும் நிலையினர்களாய், அமைந்த இறைவன் அடியார்கள் தத்தமக்குள்ளே, சாதிவேற்றுமை இல்லை. அந்நிலையில் இறைவனின் தொண்டர் என்ற அடிப்படையில், சீகாழி நகர எல்லையிலேயே சென்று வரவேற்றார். திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர்தம் துணைவியாரும் சீகாழிக்கு வந்தார்கள் என்று சொல்லாமல், சேக்கிழார் சண்பைக்கு வந்தணைந்தார் என்று குறிப்பிடுவது பொருள் பொதிந்த விளக்கமாகும்.

காழிக்கு அமைந்த பெயர்களில் ஒன்பதாவது சண்பை. பத்தாவது படியில்-காழியில் நிற்பவர் சம்பந்தர். பத்தாம் நிலையில்நின்ற சம்பந்தர் தாமே வலிந்து சென்று, ஒன்பதாம் படியில் நின்ற பாணரை எடுத்துத் தம்நிலைக்கு உயர்த்துகிறார் என்பது வரலாறு. அதேபோன்ற பெருமையுடையது சண்பை. ஓர் உயிருக்கு ஏனைய உயிரை நோக்கிய இரக்கம் எந்த இடத்தில் தோன்றுகிறதோ அதுவே இறைவன் தங்கியிருக்கும் இடம் என்ற கொள்கையை உணர்த்தி, சிவனடியார்களே பிற உயிர்களுக்காக என்றும் இரக்கம் கொள்ளும் நிலையினர் என்று காட்டி, அவர்களே இறைவன் உறையும் திருவிடங்கள் என்று அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற கொள்கையை விளக்கவந்த பெயரே சண்பை. உயர்நிலையில் இருப்பவர் தாமே வலியக் கீழிறங்கி வந்து, கீழே உள்ளவர்களை எடுத்துத் தம்நிலையில் வைத்துக் கொள்வது என்பதை ஞானசம்பந்தரைப் போலவே சண்பையும் செய்து வரலாறு படைத்த பெருமை உடையது.

ஞானசம்பந்தர் வரவேற்க, பாணரும் பாடினியாரும் பிள்ளையாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்குகிறார்கள். பின்னர் இருவரும் வெளியிட்ட கூட்டறிக்கையை நாம் சிந்திக்க வேண்டும். இங்கே பிள்ளையாரைச் சேக்கிழார்,

"ஒரு நீர்மையுடைய பிள்ளையார்"

என்று அறிமுகம் செய்து வைக்கிறார். பாணர் தம்முணர்விற்கண்ட நிலை,

"வரும் பான்மை தரு வாழ்வு வந்தது"

என்பதே. பின்னர்த் திருஞானசம்பந்தர்,

"ஐயர் நீர் உளம்மகிழ இங்கணைந்த உறுதியுடையோம்"

என்று கூறுகின்றார்.

பிறவிதோறும் பெற்றுவருகின்ற வளர்ச்சியில், கூர்தல் அறம் (EVOLUTION) என்ற விஞ்ஞான அடிப்படையில், உயிரானது வளர்ந்து நிற்கவேண்டிய வளர்ச்சிப் படிநிலையில் முடிந்தநிலை என்பது "ஆளுடையார் அடியார்" எனநிற்றல். அதுவே அருள்நிலை. "நன்மை பெருகு அருள்நெறி" என்பது சேக்கிழார் வாக்கு. குறிப்பிட்ட நிலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வரை வளர்ந்து, பின்னர் வளர்ச்சியில்லாமலேயே அமைந்துவிடும் வாழ்வாக இல்லாமல், நிலைபெறும் மேன்மேல் வளர்தலும் ஆகிய நன்மைகளைக் கொண்ட வாழ்வு அருள்நிலைப் பெருவாழ்வு. அதனை நான் தேடிச் சென்று பெறவேண்டியது முறைமையாகவும், அவ்வாறின்றி, அத்தகைய பெருவாழ்வே என்னைத் தேடிவந்து அடைந்தது என்று கூறினார் பாணர். அருள்நெறியையும், அதனை உடைமையாகக்கொள்ளும் திருத்தொண்டர் பெருமையையும் இணைத்து உணர்ந்த காரணத்தால், ஞானசம்பந்தர் வந்து வரவேற்றதை, "வரும்பான்மை தரு வாழ்வு வந்தது" என்று கூறினார். வரும் பான்மை தருவாழ்வு என்பது அருள்நெறியில் வாழும் வாழ்வையே. பாணர் கூறியபிறகு, பேசமுற்படும் ஞானசம்பந்தப்பெருந்தகை சமயவாழ்வில் உள்ளவர்களுக்கு ஆக்கம் தரும் கருத்து ஒன்றை அருளுகின்றார். 'கொள்கையில் உள்ள உறுதி' என்பதை அளவுகோலாகக் கொண்டால், கடவுள் உண்டு என்று சொல்பவர்களை விட, இல்லை என்று சொல்பவர்களே தம்கொள்கையில் உறுதியுடையவர்கள், என்றுகூடச் சொல்லிவிடலாம். ஏனெனில் இவ்விரு சாராரின் வாழ்வியல் முறைகள் அவ்வாறு அமைந்துள்ளன.

திருவருளானது என்றும் எங்கும் நின்று நம்மைக்காப்பது என்ற துணிவை—உறுதியை நும் வருகையால் யாம் பெற்றோம் என்றார். சம்பந்தர் திருவருள் துணைநின்று காத்துவருகிறது என்பதையும், திருவருளனுபவம் உடையவர்கள் — திருவருளால் ஆட்கொள்ளப் பெற்றவர்கள் நேற்று இருந்தார்கள் என்பது மட்டுமன்று, இன்றும் இருக்கிறார்கள் என்பதையும் உம்வரவால் அறிந்தோம். அதனால், இனி வரும் காலத்தும் திருவருள் வெளிப்பட்டு நின்று காக்கும் பெருமையுடையது என்ற 'உறுதி' எமக்கு உண்டாயிற்று. திருவருளைப் பற்றிய உறுதியை உம்வருகையால் நிலை நாட்டினீர்; ஆகையால் நீவிர் தலைமைத் தன்மையினரே என்னும் நிலையில் "ஐயர்" என்ற விளக்கமும் அமையப்பேசினார் ஞானசம்பந்தர். இவ்வாறே, ஞானசம்பந்தப் பெருமான் மதுரைக்குச் சென்ற காலத்தே, மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும், வந்து ஞானசம்பந்தர் முன் நின்றபோது,

"செம்பியர் பெருமான் குலமகளார்க்கும்
திருந்திய சிந்தையீர் உமக்கும்
நம்பெருமான்தன்திருவருள் பெருகும்
நன்மைதான் வாலிதே"

என்று, திருஞானசம்பந்தர் கூற,

"சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்ற பேறிதனால்
எற்றைக்குந் திருவருளுடையேம்"

என்று மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் கூறி, நம்முடைய வாழ்வு எழுந்தருளியது என்று மகிழ்ந்தார்கள் என்று சேக்கிழார் (பெரியபுராண 2561, 2562-ஆம் பாட்டுக்கள்) கூறுவதை நோக்குக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞானசம்பந்தர் இப்போது எழுந்தருளிய காரணத்தால், திருவருளானது சென்றகாலம் முதல் இன்றுவரையில் வெளிப்பட்டு நின்று, அவ்வக்காலத்தே தம்பணியைச் செய்து வருகிறது என்பதை அறிந்து திருவருளைப்பற்றிய உறுதியுண்டாகிறது. இனியும் காக்கும் என்பதும் உறுதி. நேற்றுக் காலையில் சூரியன் உதித்தான். எனவே, நாளைக் காலையிலும் சூரியன் உதிப்பான் என்பது உறுதி. இதன் மூலம் மக்களுக்கு உணர்த்தப்பெறும் கருத்து யாது? "இதுவரை காத்த இன்னருள் இனியும் காக்கும்" என்று திருவருள் உண்டு என்பதில் உறுதி கொள்ள வேண்டும் என்பதே.

சூரியன் முதலிய இயற்கைப் பொருள்கள் தத்தம் நிலைகளில் மாறுமல் சென்று கொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்கும் ஒருவன் திருவருளானது ஆற்றலோடு விளங்கிக் கொண்டிருக்கிறது என உணரவேண்டும் என்பது கருத்து. மேலும், ஒருவனுடைய வாழ்வில் காலந்தவறுமல் நிகழ்வுகள் நடைபெறுகின்றன என்ற ஒன்றை வைத்துக்கொண்டே, திருவருளானது தனக்குத் துணை புரிந்து கொண்டிருக்கிறது என்றும் உணரலாம். பாண்டியநாட்டிலேயே இருவர்தான் சைவர், ஏனைய அனைவரும் வேற்றுச் சமயத்தினர் என்ற நிலை வந்தாலுங்கூட, அரசியும் அமைச்சரும் திருவருள் இருக்கிறது என்ற உறுதியில் நிலைத்து நின்றுர்கள். ஞானசம்பந்தர் வருகையானது திருவருள் உண்டு என்பதை உறுதிப்படுத்தியது. சிவனடியவர்கள் திருவருளைப் பொலிய வைப்பவர்கள், சிவனடியவர்களே திருவருள் உண்மையை உலகில் நிலைநாட்டுபவர்கள். நடமாடும் திருவருள் நிலையங்களாக விளங்குபவர்கள் சிவனடியார்களே.

காழிப்பதியின் எல்லையில் சென்று வரவேற்று வணங்க... ...ப கண்ட யாழ்ப்பாணரையும் அவர் தம் துணைவியார் மதங்க சூளாமணியாரையும் அழைத்துவந்து, காழிப் பெருமான் இனிதுறையும் திருக்கோயில் வழிபாட்டினைச் செய்து முடித்து, "ஐயரே! இசையமைந்த யாழினை உங்கள் இறைவர்க்கு இயற்றும்" என்று கூற, அவரும் யாழினை வீக்கி, ஏழிசைவல்ல மதங்க சூளாமணியாருடன் பாடி, பின்னர் அதனை யாவரும் போற்ற யாழிலிட்டு வாசித்துப் போற்றினர். பின்னர், திருநீலகண்ட யாழ்ப்பாணரும் மதங்க சூளாமணியாரும் தங்குவதற்கென ஒரு தனியில்லம் அமைத்துக் கொடுத்து, நாளும் அவர்தமக்கு நல்விருந்தளித்துப் பேணினர். அதுமுதல், நாள்தோறும் பிள்ளையார் பாடும் பதிகங்களைத் தம் யாழின் முறைமையில் வாசித்து, எவ்வுயிரும் மகிழும் வண்ணம் ஏழிசைப் பணிபுரிந்துவந்தார்.

திருத்தில்லை வழிபாடு

திருத்தில்லைக்குச் சென்று கூத்தப்பெருமானை வணங்கவேண்டும் என்ற எண்ணம் எழ, அந்நிலையில், தந்தையார் சிவபாத இருதயருடன், பெரும்பாணர்த் தம்பதிகள் புடைசூழ, தில்லைத் தலயாத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திரை அமைகிறது. கொள்ளிட நதியைக் கடந்து, தில்லையை நோக்கிச் செல்லும் பிள்ளையார், தென்திசைத் திருவாயிலின் வழியே திருக்கோயிலின் உள்புக்கு, திருவணுக்கன் திருவாயிலை அணுகி, இறை வழிபாடு செய்யும் கடமையில் நின்றார்.

ஆளுடைய பிள்ளையார் தமக்கு ஞானவாரமுதமுண்ட திருவருட் பேற்றினல், பொதுவாக மக்களாய்ப் பிறந்தார்க்கு அமைவதுபோல் காட்சியளவை அமைவதில்லை. வெளியில் உள்ள ஒருபொருளைப் பார்க்க முற்படும்போது, அப்புறப் பொருளைப்பற்றிய அகநிலை அனுபவம் முன் அமைந்துவிடும். அது புறவுடல், ஐம்புலன்கள் வரையிலும் வந்துநின்று, அகமும் புறமும், அப்பொருள் அகத்தே எழுப்பும் அனுபவ உணர்வினை அடிப்படையாகக் கொண்டெழும் ஆனந்த அனுபவமாக அமைந்துவிடும். பின்னரே, அவ்வக அனுபவத்தோடு ஒத்த புறநிலைப் பொருள் அவருடைய காட்சிக்குத் தோற்றம் பெறும்.

அண்ணலார் தமக்கு அளித்த மெய்ஞ்ஞானம் என்பதன் புற வடிவமாகவே சிற்றம்பலம் தோற்றம் பெறுகிறது. பின்னர், அந்த ஞானத்தின் உள்ளூறும் அமுதமானது பெருகிப் பெருகி விளைவிக்கும் சிவானந்தமாகவே கூத்தப்பெருமானின் தனிக்கூத்து அவருக்குத் தோன்றுகிறது. இந்நிலையில் உணர்வின் நேர்பெறவரும் சிவ போகத்தை உருவின்கண் அணையும் ஐம்பொறி அளவினும் வந்து நின்று இன்புறுத்துமாறு செய்து நிற்கும் சிவபரம்பொருளின் திருவருளை வியந்துவணங்கி நிற்கின்றார். ஞானசம்பந்தரின் இத்தகைய அனுபவநிலை முன்பும் விளக்கப்பெற்றுள்ளது.

,லையில் ஞானப்பால் அருந்திய பின்னர், பிள்ளையார் தமக்கு அமையும் காட்சியளவையானது உள்நிள்று எழும் ஆனந்த அனுபவமாக வெளிப்பட்டு, அது ஐம்பொறி அளவினும் வந்து நிறைந்து இன்பாம் நிலையை அளித்திட, பின்னர், தாம்பார்க்க வேண்டிய பொருளாக எதிர்நிற்கும் பொருளின் முழுமையும் நிறைவும் ஆய தோற்றம் உள்ளத்தில் அமையும். அகநிலைத் தோற்றத்தின் புற நிலைப் பிரதிபலிப்பாகவே வெளியில் உள்ள பொருள் தோன்றும். இந்நிலையில், தில்லைக் கூத்தப் பெருமானை அக, புற ஆனந்தானுபவ நிலையில் துய்த்த பின்னர், அத்தலத்து உள்ள சிவனடியார்களை முன்னிட்டுக் கொண்டு சென்று, அவர்கள் துய்த்தவாறே தாமும் அப்பெருமான் திருவருளை ஏத்தியும் பாடியும் துய்க்க வேண்டும் என்ற தம்முடைய தலயாத்திரைக் கொள்கை இங்கே அமைய வில்லை. திருத்தலங்களில் பொதுவாக அமையும் பூசை நெறித் தொண்டர்களும் பிறரும் அமைந்த நிலை இங்கே காணப்பெறவில்லை. கூத்தப் பெருமானையன்றி வேறு எதையும் பாராத தெய்வக் கற்புக் கடம் பூண்ட அந்தணர்கள் கூத்தப்பெருமானுடன் மிக அணுக்கமாக ஒருநெறிப்பட்டு நிற்கும் காட்சியைக் காண்கிறார். ஏனைத்திருத் தலங்களைப் போலல்லாமல், கூத்தப் பெருமான் உலகத்துயிர் களெல்லாம் திருவருள் நலந்தோயும் வண்ணம் ஐந்தொழிலியற்றும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பணியினனுதலின், இது ஒரு பொதுமைத்தலம் என உணர்கிருர். ஏனைத் தலங்கள், திருவருளின் ஒவ்வொரு பிரிவை மட்டுமே தத்தம் எல்லைக்குட்பட்ட உயிர்களுக்குத் தொடர்புபடுத்தும் நிலையை மேற் கொள்ள, இத்தலம், திருவருள் முழுமையைத் தன்னகத்தே கொண்டு, உலக முழுமைக்கும் அதனை ஈடுபடுக்கும் பணியில் நிற்கிறது எனக் கண்ட வகையில் தில்லைத் திருத்தலம் பொதுமையும், ஒருவகையில் சிறப்புத் தன்மையும் கொண்டு விளங்குவதை உணருகிருர். இவ் வகையில், சிவஞானத் தெள்ளமுதருந்திய பிள்ளையார் தாம் கண்டு காட்டிய தில்லைக் காட்சியானது இருவகைப் படிநிலைகளில் அமை கிறது. பொதுமையும் சிறப்பும் என நின்ற நிலைகளை, பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையாராதலின் இருவேறு திருப்பதிகங்களின் மூலம் விளக்கி அருளுவாராயினர்.

திருத்தில்லையை அடைந்து நின்ற அவ்வளவிலேயே அவருடைய அனுபவ நிறைவாம் காட்சியில் ஒரு புதுமை அமைகிறது. எந்த ஒரு பொருளும் சிவத்தொண்டின் அணுக்கமாம் நிலையில் நின்று, திருத்தொண்டின் நெறியை 'இது இப்படி' என்று விளக்குகின்ற போக்கிலேயே அமைவதைப் பார்க்கிருர். திருவீதியைப் பார்த்த போது, அது ஒரு வீதி என்ற காட்சியே புலப்படவில்லை. திருத் தொண்டு நிலையில் ஊறி நிற்கும் அன்பர் தம் நெஞ்சு என்பதாகக் காட்சிப்பட்டதேயன்றி, திருவீதிக் காட்சியே அமையவில்லை. இவ்வாறே, தில்லையில் உள்ள எல்லாப் பொருள்களுமே, திருத் தொண்டினுடன் இணைந்து நின்ற அணுக்கமாந் தன்மையை வெளிப் படுத்தும் காட்சிகளாக அவருக்குப் புலப்பட்டனவேயன்றி, தனிப் பொருள் வடிவமே தோற்றவில்லை. எனவே, பிள்ளையார், திருத் தொண்டு நெறியும் அதன் செல்வமும் என்பதாகத் தில்லையைக் கண்டாரேயன்றி, திருத்தில்லைத்தலம் அவர்தம் காட்சிக்குப் பட வில்லை. இந்நிலையில் "கற்றுங்கு எரியோம்பி" என்று தொடங்கும் முதற்பதிகம் மலர்கிறது.

"*சீலத்தார் கொள்கைச் சிற்றம்பலம்*"

என்ற அளவில், அப்பதிகத் திருக்கடைக்காப்பு நமக்கு ஓர் உண்மையை உணர்த்த வல்லதாகிறது.

சீலம்—ஒழுக்கம். சீலம் வேறு, அதனையுடையார் வேறு என நில்லாமல் இரண்டும் ஒன்றுய் நின்றமைபோல, அவர்தம் கொள் கையே சிற்றம்பலமாயிற்று. சீலத்தார் கொள்கையானது திருத் தொண்டு ஒன்றே. 'கழல்பேணுதல்' என்பதே சீலம். கழல் பேணுதல் என்ற திருத்தொண்டே சிற்றம்பலம் ஆனது. இத்திருப் பதிகம் பாடத் தொடங்கும் நிலையை எடுத்து விளக்குகிருர் சேக் கிழார்.

திருத்தொண்டு நிலையில் தலைநின்று கழல்பேணும் உரிமைத் தொழில் சிறப்பால், கூத்தப்பெருமானையோ, அவன் கூத்தாடும் சிற்றம்பலத்தையோ முதற் சொல்லாக வைத்துத்திருப்பதிகம் தொடங்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காமல், தில்லைவாழ் அந்தணரை முன்வைத்தே பாடத் தொடங்கினர் என்பது ஒன்று. செஞ்சடையார் சீர்தொடுக்கும் கானத்தின் எழு பிறப்பாய் நின்ற காழியார் தலைவர், தில்லைவாழந்தணர் தம் பெருமை எளிதில் ஏழிசைகளுள் அடங்காமையை உணர்ந்து, ஏழிசையும் ஓங்க எடுத்தார் என்று குறிப்பிட்டருளுவது இரண்டாவது. இவ்விரண்டு வகையான கருத்துக்களையும்,

" ஊழி முதல்வர்க்கு உரிமைத்தொழில் சிறப்பால்
வாழி திருத்தில்லை வாழ் அந்தணரை முன்வைத்தே
ஏழிசையும் ஓங்க எடுத்தார் எமையாளும்
காழியார் தங் காவலனர் " கற்றுங் கெரியோம்பி "

என்ற பெரியபுராண 2065 ஆம் திருப்பாட்டினல் தெரியலாம்.

தில்லையையோ தில்லையில் வாழ் இறைவனையோ முதலில் வைத்துத் திருப்பதிகம் பாடாமல், தில்லைவாழ் அந்தணரை முன்வைத்துத் திருப்பதிகம் எடுத்து மொழிந்த தன்மை எவ்வாறு அமைந்தது என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

திருத்தில்லையில்தான் அமுதுண்டார்

காழிப்பிள்ளையார் உமையளித்த ஞானத்திருமுலைப்பாலை, அம்மையளித்த பொற்கிண்ணம் மூலமாகத் தம் வாயை இடமாகக் கொண்டு ஏற்றபோது, பிள்ளையார் அதனை உண்ணமல், மறித்து, உலகத்துயிர்களின் செவியமுதமாக—திருமுறைகளாக வார்த்துக் கொண்டிருக்கிறர் ஆனமையால், அன்று அழுத நிலையில் அவர் அமுதத்தை உண்ணதவரானர். ஆனல், தில்லையில், திருப்பதிகம் பாடி முடித்தபின் ஒருவகையான புதிய அருளனுபவம் உண்டாகிறது.

அண்ணலார் தமக்கு அளித்த மெய்ஞ்ஞானமே எதிரில் தோற்றும் சிற்றம்பலமாக இருந்தது. மெய்ஞ்ஞானத்தே எழும் ஆனந்தமே சிற்றம்பலத்தின்கண் பெருமான் ஆடும் இன்பத் திருப்பெருங்கூத்தாக இருந்தது. இந்நிலையில் பதிகம் பாடத்தொடங்கினர். முடிந்தபோது, அம்பலமும் இல்லை ; ஆனந்தக் கூத்தும் இல்லை. ஒரே வெட்ட வெளிதான் தெரிகிறது. தன்னுள்ளேயிருந்து முன்பெல்லாம் இன்பவூற்றினை வெளிப்படுத்தும் ஞானம் இப்போது இல்லை ; உடலும் கரைந்தது ; ஏன் ! உயிரும் கரைந்தது. உள்ளே தோற்றுவது வெட்டவெளியே ; ஆகையால் வெளியேயும் வெட்ட வெளியே தோன்றுகிறது. புறவுடலுக்கு அப்பால், உள்ளே ஒரு உறுப்பும் இருப்பதாகத் தோன்றவில்லை. ஒரே வெட்டவெளி. அவ்வாறே, எதிரிலும் ஏதும் தெரியவில்லை, வெட்டவெளி. ஆனல், புறக்கண்ணின் மூலம் பேரானந்தம் அனுபவப் பொருளாவதை உணர்ந்தார். அந்த இன்பத்தைத் தானகத் தடுக்கவோ, நிறுத்தவோ இயலாமையால் அவ்வமுதத்தை உண்ணும் பேறு பெற்றர். அன்றே காழிக்குளக்கரையில் அழத்தொடங்கினர், இன்றுதான், கூத்தப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருமான், அவரை உள்ளும்புறமும் வெட்ட வெளியாக்கி, அத்தகைய அமுதத்தைக் கொடுத்து உண்ணச் செய்தான்.

"பண்ணார் பதிகத் திருக்கடைக் காப்புப் பரவி
உண்ணாடும் என்பும் உயிரும் கரைந்துருக்கும்
விண்ணாயகன் கூத்து வெட்ட வெளியே திளைத்துக்
கண்ணார் அமுதுண்டார் காலம்பெற அழுதார்"

என்பது, பெரியபுராணம் 2066 ஆம் திருப்பாட்டு.

இந்நிலையில், திருத்தில்லையைத் தங்கும் இடமாகக் கொள்ளாமல் அதன் கிழக்கேயுள்ள திருவேட்களத்தைத் தங்கும் இடமாகக் கொண்டு, கூத்தப்பெருமானை நாளும் வந்து வணங்கிப் போக வேண்டும் என்ற கொள்கையரானார். எனினும், தில்லைவாழ் அந்தணர்களின் சிறப்பு ஞானசம்பந்தரின் உள்ளத்தை விட்டகலவில்லை. திருத்தில்லையில் அவர்கள் கூத்தப்பெருமானைப் பேணும் திருத்தொண்டு நெறியின் பெருமையை அவர்தம் உள்ளம் நினைந்து கொண்டேயிருந்தது. காழிப்பிள்ளையார் தாம்பெற்ற ஞானவாரமுதத்தால், சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் வளர்ந்து கொண்டேயிருக்க, இவ்வளவுநாளும் அதனையே அனுபவித்து உணர்ந்துவரும் நிலையில் இருந்தார். ஆனால், இன்று, தில்லை வாழந்தணர் மட்டுமே நினைவுக்குரிய பொருளாக அமைவது காழிப் பிள்ளையாருக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது.

தம்மைப் போலவே, தாம்பாடிய பதிகத்தை யாழிலிட்டு மீட்டி இன்புறுத்திவரும் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவ்வாறே தில்லை அந்தணர்கள் தில்லைக் கூத்தப்பெருமானுடைய திருவடிகளுக்கு 'அணுக்கர் ஆம்பேறு' பெற்று விளங்குவதையே எண்ணி, அதிசயிக்கும் நிலையையே பெற்றிருந்தார் என்பதும் ஞானசம்பந்தருக்குத் தெரியவந்தது. இந்நிலையில், சம்பந்தர், தில்லைவாழ் அந்தணர்தம் சீலத்தின் அளவின்மையை நினைந்து, அதனால் பெருகும் அன்பு நீங்காத உள்ளம் உடையவராக இருந்தார்.

"பாடும் பதிக இசையாழ்ப் பாணரும் பயிற்றி
நாடும் சிறப்பெய்த நாளும் நடம் போற்றுவார்
நீடும் திருத்தில்லை அந்தணர்கள் நீள மன்றுள்
ஆடும் கழற்கு அணுக்கராம் பேறு அதிசயிப்பார்

ஆங்கவர்தம் சீலத்து அளவின்மையும் நினைந்தே
ஓங்கி எழும் காதல் ஒழியாத உள்ளத்தார்
தேங்கமழும் சோலைத் திருவேட்களம் கடந்து
பூங்கிடங்கு சூழ் புலியூர்ப் புக்கணையும் போழ்தின்கண்"

என்பவை சேக்கிழார் தம் பெரியபுராண (2071, 2072)த் திருப்பாட்டுக்களாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின்னர், இருவரும் திருவேட்களம் கடந்து, திருத்தில்லையின் எல்லையை அணையும்போது, தில்லை மூவாயிரவர்களும் சிவகணநாதர் களாகத் தோன்றும் காட்சியானது இறையருளால் அமைந்தது. தில்லை மூவாயிரவரும் சிவகணங்களாகத் தோன்றுமாறு அமைந்த காட்சியைத் தாம் கண்டதோடன்றித் திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கும் காட்டினர். பின்னர், தில்லை வாழந்தணர்களும் காழிப்பிள்ளையாரை எதிர்கொண்டு, அவர் வணங்கும்முன் தாமும் வணங்கி, வரவேற்று, அவருடன் திருவீதியில் வந்துகொண்டிருந்தார்கள். தில்லை வாழந்தணர் புடை சூழச் சிற்றம்பலம் சென்று, திருக்களிற்றுப்படி மருங்கு நின்றுகொண்டு

''ஆடினாய் நறுநெய்யொடு''

என்ற திருப்பதிகம் பாடி வணங்கினர், ஞானசம்பந்தர்.

தில்லையில் பெற்ற அனுபவப் புதுமை

திருஞான சம்பந்தப் பிள்ளையார் திருவருள் வயத்தினால் சிவ ஞானங் குழைத்தளித்த இயற்பாவால் மொழி ஞானப்பாலருந்தியவர். சிவஞானத் தெள்ளமுதருந்தியபின், திருஞான சம்பந்தப் பெருமானின் அறிவியல் விளக்கமும் அருளியல் அனுபவமும் எவ்வாறு இயங்கின என்பதை நிகழ்ச்சிகள் தோறும் நமக்குக் கிடைத்த சான்றுகளைக்கொண்டு, 'இதன் தன்மை இது' என்றும் 'இதனால் இந்நிகழ்ச்சி இவ்வாறு செயல்படுகிறது போலும்' என்றும் ஓரளவு பொதுமை நிலையில் நின்று சில முடிவுகளைக் காண முடிந்தது திருவருள் துணையினாலேயே. ஞானசம்பந்தர் போன்ற அருளாளர் தம்முடைய வாழ்வில் நடைபெற்றனவெல்லாம் சான்றுகள் இல்லாதவை, கற்பனை என்று தள்ளிவிடுதலும் இல்லை. அல்லது அருளியல் நிகழ்வுகளெல்லாம் அறிவாராய்ச்சிக்கு இடந்தருவன வல்ல; அறிவாராய்ச்சிக்கு அப்பாற்பட்டிருப்பதுதான் அருளியலின் சிறப்புத்தன்மை என விளக்கங்கூறி, கூறப்பெற்ற அருளியல் நிகழ்வு எதுவாயினும் அது நம்மால் ஆய்வதற்குரியதன்று எனக்கூறி, எல்லாவற்றையும் அறிவாராய்ச்சியில்லாமலேயே ஏற்றுக்கொள்ளுதலும் இல்லை. இம்மண்ணுலகில் நடைபெறுவன யாவும் ''இப்படியால் இது'' என்ற காரண காரிய அடிப்படையில் விளங்கிக் கொள்ளக் கூடியனவே என்று கொள்வதைவிட, 'இது இதனால்' என்ற அடிப்படையில் தான் நடந்தது எனத் துணிந்து கூறலாம் என்பதே சேக்கிழார் முதலிய சான்றோர்பெருமக்கள் அருள்வழி நின்று நமக்கு எடுத்துக்காட்டிய உண்மை. இன்றுள்ள சூழ்நிலையில் நம்மால் சில அருளியல் நிகழ்வுகளுக்கு உரிய காரணம் அறிய முடியாத நிலை இருக்கலாம். அதனால், அவையெல்லாம் கற்பனை என்று முடிவு செய்துவிட வேண்டுவதில்லை. கால இடைவெளி அமைய நின்று, மேலும் முயன்றால் காரண காரிய அடிப்படை இன்னது என நாம் தெரிந்துகொள்ள இயலும். இந்நிலையில் ஞானசம்பந்தர் முன்னின்று நடத்திய தொண்டுநெறி, சமூக முன்னேற்றப்பணி, செயல்முறைத் திட்டங்கள் ஆகியவைகளைக் கொள்கை அடிப்படையிலும் செயற்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாட்டுத்திட்ட அடிப்படையிலும் இணைத்து, பொதுமை நெறியில் ஆய்ந்து, சில முடிவுகளைத் தெரியவும் தெரிவிக்கவும் வேண்டும் என்ற அடிப்படையில் நெறிமுறை வழுவாது, பணியாற்றுதலே நம்கடமை. அவ்வகையில், தில்லைத் திருத்தலத்தில் நடைபெற்ற அருளியல் நிகழ்வுகள் முற்றுகப் புறக்கணிக்கக் கூடியனவல்ல. திருஞான சம்பந்தர் அருளிய திருப்பதிகங்கள் இரண்டு. அவைகளை முதன்மைபெறும் மூலங்களாகக் கொண்டு, சேக்கிழார் முதலிய அருளாளர்கள் அமைத்துக்காட்டிய வழிமுறைகள், வாக்குக்கள் ஆகியவைகளைத் துணைமூலங்களாக அமைத்து ஆய்வதும், அப்படித்தான் ஆய்வுப்பணியை நடத்துகிறேமா என நம்மையே நாம் சரிசெய்து கொள்ளுவதும் தேவை என்று சொல்வதைவிட, அதுவே நம்பணி, தவருன வழியில் செல்லாமலிருக்க அமைத்துக்கொண்ட பாதை எனக் கொள்ளவேண்டும்.

ஞானப்பால் அருந்திய காரணத்தால், அவருடைய காட்சியளவை முறை, அருளியல் அனுபவமுறை ஆகியவைகளில் இன்ன இன்ன மாற்றம் அமைந்துள்ளன என்பவைகள் முன்பே காட்டப் பெற்றன. அவ்வகையில் தில்லையில் அவர் பெற்ற முதல் அனுபவம், முன்னர் நாம் அவரை அமைத்துத் தெரிந்துகொண்ட அதே முறையில்தான் நடைபெற்றது எனக் கொள்ள முடிகிறது. பதிகம் பாடத் தொடங்கியபோது ஒரு மாற்றம் அமைகிறது. பின்னர்ப் பதிக முடிவில் தன் அகத்தேயும், சிற்றம்பலமாக அமைந்த புறத்தேயும் ஒருவகை அனுபவ மாற்றம் அமைந்து விடுகிறது.

முதல் அனுபவத்தில் அகத்தே நிகழும் ஆனந்த அனுபவம் கண்ணின் முன்புறக் கண்டு கும்பிட்டு எழும் களிப்பாக இருந்தது.

பதிகம் பாடத் தொடங்கும்போது ஒருவகை மாற்றம் இருந்தது. பதிகத்தை முடித்துத் திருக்கடைக்காப்புப் பாடி முடித்த அந்நிலையில், முதல் அனுபவம் நிகழுங் காலத்தே இருந்த அகநாட்டம், எலும்பு, உயிர் ஆகிய அனைத்தும் உருகிவிட்டன. அப்படியே வெளியில் அமைந்த கூத்தும் வெட்ட வெளிக்கூத்தாக அமைந்துவிட்டது. இத்தகைய மாற்றத்தை அளித்தது திருக்கூத்தே.

புறத்தே இருக்கும் பொருளைப் பன்முறையும் பார்த்துப் பார்த்து, அதனை மனத்தகத்தே செலுத்தி, அது இன்னது என்பதை இதுவரை நாம் பெற்றுள்ள அறிவின் துணைக்கொண்டு காண்பதும், அப்படிக் காண்பதால் வருகின்ற சில கருத்துக்களின் இணைப்பையே பொருளனுபவம் எனக்கொள்வதும் உலகியலில் அறிவுடையவர்களிடத்தே காணும் முறை. ஞானப்பாலளித்த செல்வம் வேறு வகையான அனுபவத்தைக் கொடுத்தது என நாம் அறிவோம்.

ஞானப்பால் அளித்த சிறப்புநிலை மேலும் மாற்றம் பெற்று விடுகிறது. அகத்தும், புறத்தும் வெட்டவெளியாகவே ஆக்கி, அவரது எலும்பும், உயிரும், ஞான நாட்டம் நல்கும் அமைப்பும் கரைந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விட்டன. கரையவைத்தது விண்ணுயகன் திருக்கூத்துத்தான். உலகியலில் பொதுமையில் நடப்பது போலவே, அவருக்கும் புறப் புலனுகிய கண் பார்த்து, அமைத்துக் கொடுத்த ஆனந்தானுபவ மாகிய அமுதத்தையே உண்டார்.

பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார் என்று முன்னுள்ள நிலையை விளக்கமுறுத்திய சேக்கிழார், கண்ணுர் அமுதமுண்டார் காலம்பெற அழுதார் என்று குறிப்பிடுகிருர். மீளவும் அழுகிருர். முன்பேயும் அழுதார், புனிதவாய் மலர்ந்து அழுதார், (முன்னே விளக்கப்பெற்றது) இப்போதும் அழுதார். இங்கேயும், ஆனந்தானு பவத்தில் திளைத்து, அமுதமுண்ட நிலையில்தான் அழுதார் என்று குறிப்பிட்டுக் காட்டுகின்ருர் சேக்கிழார்.

அடுத்தநிலையில், அப்பதிகம் திருநீலகண்ட யாழ்ப்பாணர் பெற்று, யாழிலிட்டுப் பாடி அமைக்கவேண்டிய செயற்பாட்டுக்கு வருகிறது. திருநீலகண்ட யாழ்ப்பாணர் அப்பதிகத்தை யாழிலிட்டுப் பாடி அமைக்கிருர். பதிக நிறைவுக்குப் பின், திருநீலகண்ட யாழ்ப் பாணரின் அனுபவமும் ஞானசம்பந்தர் தாம்பெற்ற அனுபவமும், இணைந்து நிற்பதைக் காண்கிருர். பாணருடைய அனுபவம் எவ்வாறு அமைந்தது? "நீடும் திருத்தில்லை அந்தணர்கள் நீள மன்றுள் ஆடும் கழல்" என்ருர் சேக்கிழார். திருத்தில்லை அந்தணர்கள் உயர்ந்தோர்கள், அவர்தம் உயர்வுடைமையை ஒட்டியே நீண்டுய ரும் நிலையைத் தில்லை பெறுகிறது. நீண்டுயரும் நிலையுடன், மேன் மேல் வளரும் தொன்மையான புகழையும் நீளப்பெறுகிறது சிற்றம் பலம். மேலே குறிப்பிடப் பெற்றவைகளை அடிப்படையாகக் கொண்டு, அவன் திருக்கூத்தும் நீளுகிறது. பதிகம் தில்லைவாழ் அந்தணரை முன்வைத்து எடுத்த பதிகமாதலின். தில்லைவாழ் அந்தணர்தம் உயர்பெருந்தகைமையை ஒட்டியே ஏனையவை வளருகின்றன என்ற பதிகத்தின் உட்கருத்தைப் பாணர்தம் அனு பவநிலையில் காணமுடிந்தது அவ்வனுபவம் எப்படி விளக்கம் பெறுகிறது என்னில் தில்லை வாழந்தணர்கள் பேறுதான் என்னே! என்று அதிசயிக்கும் நிலையே, பதிகத்தால் பெறும் அனுபவநிலை யாக அமைகிறது.

சம்பந்தரும் பாணரும்

பாணரின் தொண்டு நிலையையும், காழிப்பிள்ளையார் பாணரின் தொண்டினை அமைத்துக்கொண்ட நிலையையும் மதிப்பீடு செய்து மனத்தகத்துக் கொள்வது இன்றியமையாதது.

திருநீலகண்ட யாழ்ப்பாணரும் மதங்க சூளாமணியாரும் பாடு தலிலும், யாழ்மீட்டி அப்பாட்டினை யாழின்மூலம் இசைத்துக் கொடுத் தலிலும் வல்லவர். ஆயினும், சாதியால் தாழ்ந்தவர். திருக்கோயி லின் உள்சென்று வழிபடும் நிலை அவருக்கு இல்லை. இந்நிலையில் ஞானசம்பந்தர் ஏன் அவரைத் திருக்கோயிலின் உள்ளே அழைத்துச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்று வழிபடச்செய்யும் புரட்சிப் பணியை மேற்கொள்ளவில்லை ? என்று ஒருவினவை அனைவரும் எழுப்புவர்.

திருநீலகண்ட யாழ்ப்பாணரும் மதங்க சூளாமணியாரும் தம்மைக் காண வருகிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டவுடனேயே, சிவஞானசம்பந்தம் பெற்றுள்ளமை காரணமாக, தம் அகத்தே அவர்களைப் பற்றிய, அனைத்துச் செய்திகளையும் இணைத்த முழுமை அறிவு தொழிற்பட்டுவிடுகிறது. இந்நிலையில், அவர்களின் புறத் தோற்றம் முதலாக, அவர்கள் ஆற்றல், அவர்களைப் பணிகொள்ள அமைக்கும் திருவருளாற்றல் ஆகிய அனைத்தையும் உள்ளத்தில் அமைத்துக் கொடுத்துவிடுவதே ஞானப்பால் விளைத்த செல்வம். அதைச் செயற்படுத்துவதே அவர்தம் பணியாக அமையும். அவ் வகையில், திருநீலகண்டயாழ்ப்பாணர் பெருமையை உணர்கிறார். அதனாலேயே, சீகாழி எல்லைவரை சென்று, கூட்டத்தினருடன் சென்று வரவேற்கிறார். அப்போது காழிப்பிள்ளையார் அளித்த வரவேற்பு மடலில் அமைந்த வாசகம்,

"ஐயர் நீர் உளம் மகிழ இங்கணைந்த உறுதியுடையோம்"

என்பது. இங்கே பிள்ளையார் குறிப்பிடும் உறுதி என்பது யாது ? ஐயரே, நும்உளம் மகிழ நீவிர் இங்கணைந்ததும், உம்மை வரவேற்க யான் இங்கே அணைந்ததும் என்ற இரண்டு செயல்களையும் நாம் இருவரும் தனித்தனியே நிகழ்த்தினாலும், நாம் இருவரும் ஒரே அடிப்படையில் இயங்குகிறோம், இயக்கப்படுகிறோம் என்பது உறுதி என்றார். "எற்றைக்குந் திருவருளுடையேம்" என்பதுதான் உறுதி.

திருவருள் நெறியில் இணைந்து நின்ற ஒருமையும், ஐயர் என்று ஞானப்பாலருந்திய சிவஞானசம்பந்தரால் அழைக்கப்பெறும் பெருமையும் உடைய காரணத்தால், பெரும்பாணர் என்றே அழைக்கப் பெறும் பேறு பெற்றார். ஆயினும், அவரைப் புறமுன்றிற்கொடு புகுந்து கும்பிடச்செய்து, 'ஏயும் இசையாழ் உங்கள் இறைவருக்கு இங்கியற்றும்" என்று பணித்தருளினார்.

சமுதாய அடிப்படையில், சாதிப் பின்னணியுடன் இந்நிகழ்வை ஆய்வோமானால், ஞானபோனகர் சீகாழி எல்லைவரை சென்று அழைத்துவந்தது, பாணர்த் தம்பதிகளுடன் சேர்ந்தே நடந்து வந்தது, திருக்கோயிலின் புறமுன்றில்வரை அவரை அழைத்து வந்தது எல்லாமே புரட்சிதான். திருக்கோயில் விளங்கும் திருத்தல வீதிகளில், உள் வீதியிலோ, புறவீதியிலோ எங்கும் செல்லுதற்குக் கீழ்ச்சாதியினர்களுக்கு உரிமை இல்லை. ஆனால், திருக்கோயில் சன்னிதித் தெருவில் பாணர் தம்பதியினரை அழைத்து வருகிறார், புற முன்றில் எனப்பெறும் கோபுரத்தை அடுத்துள்ள முன்னிடத்தில் நிறுத்தி யாழிசை மீட்டச் சொல்கிறார். இதுவரை அழைத்து வந்தவர் உள்ளேயும் அழைத்துச் சென்று விடுவார். ஆனால், திருநீலகண்ட யாழ்ப்பாணர் பெரும்பாணராம் நிலையுடையவர் என்பதை உணர்த்த முற்படும் அருள் திறம் வேறு குறிப்பையுடையது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருப்பதிகப் பெருவழியை வீறதேறுந் தமிழால் அமைத்துக் கண்டவர் ஞானசம்பந்தர் என்பதை அடிப்படை எண்ணமாக அமைக்க வேண்டும். திருநீலகண்ட யாழ்ப்பாணர் தம்மனைவியாருடன் வந்து திருஞானசம்பந்தர் மேற்கொள்ளும் பணியிலேயே இணைந்து தொண்டாற்ற அமைகிறார். திருஞானசம்பந்தரே இசையுடன் பாடவல்லவர். இக்காலத்தே, ஒருசிலர் பாட்டு எழுத வல்லவராக இருப்பர், இன்னிசைப் பாட்டாகப் பாடும் கலையில் தேர்ச்சியுடையவராக இருக்கமாட்டார். அவ்வாறே, இன்னிசையுடன் பாடுதலில் வல்லவர் எல்லாருமே இசைப்பாட்டுக்களைத் தாமே புனைந்து எழுதக்கூடிய ஆற்றல் பெற்றுவராக அமையமாட்டார். ஆனால், திருஞானசம்பந்தர் இரண்டிலும் வல்லவர். செஞ்சடையார் சீர் தொடுக்கும் கானத்தின் எழுபிறப்பாகவே இருந்தார் என்பது விளங்கும். இந்நிலையில், திருநீலகண்ட யாழ்ப்பாணரின் தொண்டு ஞானசம்பந்தருடன் இணைவானேன்?

பதிகப்பெருவழியின் குறிக்கோள் இரண்டு

திருப்பதிகப் பெருவழியைத் தொடங்கிய பெருமான் திருஞானசம்பந்தப் பெருந்தகையின் தொண்டு இறைவனைத் தமிழ்த் திருப்பதிகங்களாற் பாடுவது என்பதன்று. திருப்பதிகப் பெருவழிஎன்பது திருப்பதிகத்தின் மூலம் இறையனுபவத்தையே அனைத்துயிர்களும் பெறுமாறு செய்விப்பதே. கி.பி. 7ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்ற பதிகங்களை இன்று ஒருவன் பாடமுற்பட்டால், ஞான'சம்பந்தர் அதனைப் பாடியபோது என்னநிலையில் நின்றுபாடினார், எத்தகைய தெய்வக்காட்சி அமைந்தது, எத்தகைய அனுபவத்தைப் பெற்றார் என்ற அனைத்தையும் இன்றும் அவனால் பெற முடியும் என்பதே. அத்தகைய அமைப்பை உளங்கொண்டபோது அவர் இருவகையில் அத்திருப்பதிகத்தின் இயக்கம் இருக்க வேண்டும் என்று கருதினார். ஒன்று இம்மாநிலத்தில் வாழ்கின்ற அனைத்துயிர்களிடத்தும் சென்று, இன்று நான் அமைக்கிற கருத்து, காட்சி, பொருளமைப்பு, பயன் ஆகிய அனைத்தும், அறிவாக விளக்கம் அமைத்தும் அனுபவமாக இன்பமூட்டியும் சிறக்க வேண்டும் என்று கருதினார். இது மாநிலத்தோரை அடிப்படையாகக் கொண்டது. மற்றது, இறைவன் திருச்செவியையும் சென்றடைந்து, அவனையும், இவ்வுயிரினிடையே இசைந்துவரும் நிலையை உண்டாக்குவது. இதனை,

> ''மல்லல் நெடுந்தமிழால் இம்மாநிலத்தோர்க்கு உரைசிறப்ப
> பல்லுயிரும் களிகூரத் தம்பாடல் பரமர் பால்
> செல்லும் முறை பெறுதற்கு''

என்ற பெரியபுராண 1978ஆம் செய்யுளால் உணரலாம்.

இவ்வகையில் திருப்பதிகம் சென்று உயிர்களின் உள்ளகத்தே தாக்கமுறுத்தி, அவைகளுக்கு அனுபவத்தைக் கொடுத்து, உருக்கம் பெற வைக்க வேண்டுமானால், பரம்பொருளைத் தான் அனுபவித்த அதே அனுபவம் உயிர்களைச் சென்றடைய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒருவன் தன் எதிரில் இருப்பவனைத் தன் அழுகையின் மூலம் அழ வைத்து விடலாம். ஆனால், ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இடையிட்ட காலத்தில் தான் பெற்ற — அனுபவித்த இன்பத்தைத் தம் பதிகத்தின் மூலம் அப்படியே அனுபவிக்க வைப்பது என்பது எவ்வாறு இயலும்! பரம்பொருளைப் பதிகம் பாடும் போது அனுபவமாகப் பெற்றுப் பாடுகிறார். அது, அப்போது, அதே சூழலில் உடன் இருப்பவர்களுக்கு அந்த அனுபவத்தைக் கொடுக்கலாம். ஆனால், வெளியே இருப்பவர்களுக்கு அந்த அனுபவம் வராது. எனவே, காட்சிப் பொருளாக நின்ற பரம்பொருளைப் பற்றித் தான் பெறுகின்ற அனுபவம், வெறும் பொருளனுபவமாக மட்டுமே இருந்துவிட்டால், அவ்வனுபவம் பின் வருபவர்களுக்கு அமையாது. பொருளனுபவம் பெறும் பொழுதே அதனை ஒலியுடன் இணைத்து அனுபவித்து, இரு வகை அனுபவமும் இணைய நிற்க, திருப்பதிகம் அமைய வேண்டும். பொருளனுபவத்தைத் திருவைந்தெழுத்து ஒலியாக நிறுத்தி, அவ்வொலி அனுபவத்தாலும் அதே பரம்பொருளைத் துய்த்து, பொருளாலும் ஒலியாலும் இணைத்துத் துய்த்த இன்ப அனுபவத்தை உள்ளீடாகக் கொண்டு அமைந்தபதிகமே ஒலியின் மூலம் உயிர்களை இயக்கி, பின் ஒலியும் பொருளும் இணைந்த அனுபவத்தைக் கொடுக்கும். அதனாலேயே, அப்பரடிகள்,

"மனிதர்காள் இங்கே வம்ஒன்று சொல்லுகேன்
கனிதந்தால் கனி உண்ணவும் வல்லீரோ"

என வினவி, பின்னர்

"ஒன்று கண்டேன் இவ்வுலகுக்கு ஒரு கனி
நன்று கண்டேன் அது நமசிவாயக் கனி
மென்று கண்டாலது மெத் தென்றிருக்கும்
தின்று கண்டாலது தித்திக்குந் தானே"

என்று ஒலியாலும் பொருளாலும் இணைந்து அனுபவிக்க வேண்டும் என்று காட்டினர்; அவ்வாறே அமைக்கும் அனுபவ நிலையில் அமைந்த திருப்பதிகங்கள் ஒலியனுபவத்தை மூலமாகக் கொண்டு கால, இட வேறுபாடுகளைக் கடந்து, உயிகளுக்கு அதே பொருள் அனுபவத்தை உண்டாக்க வல்லதாகிறது. இந்நிலையில், திருஞான சம்பந்தர் தம்மைத் திருக்கோலக்காவில் நிறுத்தி, திருவைந்தெழுத்துக்கான அமைப்பை உடன் கொண்டும், தம்மையே இசையின் எழுபிறப்பு அமைக்கும் மூங்கிலாக, குழலாக நிறுத்தி, தன்னிசையைக் 'குழலொலி' என்று அமைத்தும் காட்டுகின்றார். இவ்வாறு, ஞானசம்பந்தரின் இன்னிசை, நமசிவய என்னும் ஒலியுடன் இணைந்த பொருளனுபவத்தை உள்ளீடாகக் கொண்டு சென்று, உயிர்களை எழுப்பி, ஆன்ம அனுபவத்தையும், ஆன்ம உருக்கத்தையும் கொடுத்துப் பரம்பொருளனுபவத்தை உண்டாக்கும் தனிவலிமை பெறுகிறது. இதன் மூலம், சம்பந்தப் பெருமான் கொண்ட இருகொள்கைகளில் ஒன்று நிறைவுற்றதாகிறது. ஏனையது பெருமான் திருச்செவியை நோக்கித் திருப்பதிகங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செல்லும் முறை அமைதல். யாழிசையானது இறைவனை நோக்கிச் சென்று, அவன் செவிகள் மூலம் உள்சென்று தாக்கி, அவனை உயிர்களிடம் சென்று தொண்டாற்ற வைப்பது. ஞானசம்பந்தர் பதிகத்தைக் கி. பி. 20ஆம் நூற்றாண்டில் ஒருவன் பாடினால் அது, அவனுக்கு முதலில் ஞானசம்பந்தர் அப்பதிகம் பாடும் போது பெற்ற அனுபவங்கள் எல்லாவற்றையும் கொடுக்கும். அத்துடன் ஆன்ம வுருக்கத்தையும் சிவபோகத்தையும் மலர வைக்கும். யாழிசையானது இறைவனை ஈர்த்து, உயிர்கள் ஆன்ம உருக்கத்தையும் சிவபோகத் தையும் துய்க்கின்ற காலத்து, அத்துய்ப்புக்குத் தடையாக இருப்ப வைகளைத் தாக்கி அழித்துத் துணைபுரிய வைப்பது. இத்தகைய இரண்டாம் நிலையுடைய தொண்டினை ஏற்கிறார் திருநீலகண்ட யாழ்ப் பாணர்.

பிறிவின்றிச் சேவிக்கும் முறை

உலகத் துயிர்களைச் சிவானந்தப் பெருவாழ்வில் திளைக்க வைத்து, அவ்வகையில், அவைகளுக்கு உய்தியைத் தரும் வண்ணம் அமைத்த திருப்பதிகப்பெருவழியில் ஒரு பகுதி சார்ந்த தொண்டினைத் தானே மேற்கொண்டார். மறுபகுதியைத் திருநீலகண்ட யாழ்ப் பாணர் மேற்கொண்டார் என்பதே. பாணர் யாழிலிருந்து எழுப்பப் பெறும் ஒலி, நேரே பரம்பொருளைச் சென்று சாரும் இயல்பினது என்பதை

''யாழிலெழும் ஓசையுடன் இவர் மிடற்றிசை ஒன்றி
வாழி திருத் தோணியுளார் மருங்கணையும் மாட்சியினைத்
தாழும் இருசிறைப் பறவை படிந்த தனி விசும்பிடை நின்று
ஏழிசைநூற் கந்தருவர் விஞ்சையரும் எடுத்திசைத்தார்''

என்ற சேக்கிழார் (பெரியபுராணம் 2039) வாக்கால் உணரலாம்.

இன்று நடைபெறும் இசைக்கச்சேரியில் வாய்ப்பாட்டுக்காரரும் பக்கவாத்தியங்களும் அமையுமாறு, பக்கவாத்திய இசைகளை எழுப்பும் பலருள் ஒருவராகத் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர் தம் இசைத்தொண்டும் அமையவில்லை. திருஞானசம்பந்தர் மேற் கொண்ட தொண்டினில் சரிபாதி என நின்ற தொண்டினைத் தாம் மேற்கொண்டு செயற்படுத்துபவரானார்.

திருஞானசம்பந்தர் திருக்கோயிலின் உட்சென்று, சிவஞானப் பேருணர்விற் பொலியும் பிள்ளையாராகத் தம்மை நிறுத்தி, தாவில் சராசரங்களெல்லாம் சிவம்பெருக்கும் குறிக்கோளுடன் இணைந்து நின்று, திருச்கோயிற்பெருமான் சிறப்புக்களையும் பிறவற்றையும் அனுபவமாக்கி, தாமே ஒரு குழலென நின்று, திருவைந்தெழுத்தின் முறையில் நின்று, பெருகும் ஒலியை உடன்கொண்டு, சிவஞானப் பேருணர்வும், சிவம்பெருக்கும் குறிக்கோளும் ஒன்றிய தம்மனுப வமே உயிர்களுக்குரிய அனுபவமாமாறு திருப்பதிகம் அமைப்பார். பின்னர்த் திருக்கோயிலிலிருந்து வெளிப்போந்து, அங்கிருக்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாணரிடம் திருப்பதியத்தைக் கொடுத்துவிடுவார். தம்பிரான் திருமுன் நின்று பாடப்பெற்ற அதே திருப்பதிகம் மீண்டும் திருக்கோயிலின் புறமுன்றில் பாணரால் யாழிசையில் அமைத்துப் பாடப்பெறும். இதனைப் "**பிறிவின்றிச் சேவிக்கும் முறை**" என்று குறிப்பிடுவது மரபு.

பிறிவின்றிச் சேவிக்கும் முறையில், திருநீலகண்டயாழ்ப்பாணர் அப்பதிகத்தைப் பாடும்போது, ஞானசம்பந்தர் எத்தகைய அனுபவமும் மனநிலையும் இறைக்காட்சியும் பெற்றுரோ அதேநிலை அனுபவம் முதலியன பாணருக்கும் அமையும். பாணரே ஞானசம்பந்தருடன் இணைந்து யாழிசையை மீட்டியிருந்தால் கருவியிசையை மிடற்றிசைக்கு இணைய அமைத்துக் கொடுத்தார் என்ற நிலைதான் பாணரைச்சார்ந்ததாக அமையும், பின்னர்த் தனித்துநின்று ஞானசம்பந்தர் பாடியவைகளையே பாணரும் யாழிசையுடன் பாடும்போது, ஞானசம்பந்தர் பெற்ற அனுபவம் பாணருக்கும் அமைகிறது. அதனுல் திருப்பதிகத்தை, பின்னெருகாலத்தே எவரேனும் தனித்தோ இசைக் கருவியுடனே பாடமுற்பட்டால் அவரும் ஞானசம்பந்தர் பெற்ற அதே அனுபவத்தைப் பெற்றுச் சிறப்பது உறுதி என்ற உண்மையை உலகமக்களுக்கு உறுதிசெய்து காட்டும் ஒருவகை அனுபவ எடுத்துக்காட்டாக அந்நிகழ்ச்சி அமைகிறது. அதனுல், திருஞானசம்பந்தர் திருப்பதிகம் சிவஞானப் பேருணர்வையும் சிவபரம் பொருள் துய்ப்பையும் இணைத்த நிரதிசய இன்பஅனுபவத்தை நல்கும் என்பது உறுதிசெய்யப் பெறுகிறது. மேலும், ஞானசம்பந்தப் பெருமான் பாடும்போது நேர்நின்று துய்த்த இறையெனும் பரம்பொருள், ஞானசம்பந்தரின் அனுபவத்தில் ஒருவகைக் கேட்கும் பொருள் என்ற நிலையிலேயே அனுபவப் பொருளாகிருர். ஆனுல், திருப்பதிகத்தைக் கேட்ட நிலையில் அப்பரம் பொருள் பெற்ற பொலிவு நிலையை, ஞானசம்பந்தர் தம்முடைய அனுபவமாக அமைக்க இயலவில்லை. ஆனுல், பாணர் தம்முடைய யாழிசையால் மீட்டும்போது அப்பரம்பொருள் பொலிந்து தோன்றும் நிலையும் தம் காட்சியில் தோற்றம்பெற, பரம்பொருள் திருப்பதிக இசையில் பொலிந்து தோன்றும் காட்சியையும் அனுபவமாக்கி, எவ்வுயிரையும் இறைமைப் பொலிவுடன் மகிழ்விக்கும் பேறு பெற்ற திருத்தொண்டராக அமைகிருர் பாணர் ஆதலின், அவர் "பெரும்பாணர்" எனப் பெற்றுர். இன்று நமக்குக் கிடைக்கும் ஞானசம்பந்தர் பதிகங்களெல்லாம் பாணர் பெருந்தகையால், மீள அவ்வனுபவத்தை வெளிப்படுத்தி, இறைப்பொலிவையும் இணைத்து, எவ்வுயிரும் தம்மளவில் அனுபவிக்கலாம் எளிமை முறையில் செப்பனிட்டுக் கொடுக்கப் பெற்றவைகளே என்று தெளிதல் வேண்டும். பெருமைப்பாணர் இசைப்பதிகத்தை யாழிலிட்டு மீட்டும் போது அனைத்துயிரும் மகிழ் சிறந்து ஆனந்தானுபவம் பெற்று நிற்கும் முறையை அனைவரும் காணமுடியும். சிவஞானப் பேருணர்விற் பொலியும் பிள்ளையார் தம் திருப்பதிகத்தைச் செவிப்படுத்த கீழ்ப்பறவைச் சாதிகளும்கூட மெய்ஞ்ஞான நாட்டம் பெற்று, சிவஞான அனுபவம்பெற்றுச் சிறக்கும். ஆனுல், பாணரின் யாழிசையுடன் வெளிப்படும் நிலையில் அதே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருப்பதிகம் கேட்ட எந்த உயிரையும் திருவருளின்பத்தில் பொலிந்து திகழுமாறு செய்துவிடும். திருப்பதிகத்தை இக் காலத்தே ஒருவன் பாடும்போது தலம், தலத்துப்பெருமை, தலம்சார் இறைவன் பெருமை என்ற அளவில் நின்றெழும் அனுபவம் அழிய, திருவருளனுபவமே அகநிலை இன்ப அனுபவமாக அமைய, புறத் தேயும் திருவருட்பொலிவே தோற்றம் பெற்று அனுபவமாகும்.

சிவஞானசம்பந்தம் உற்று, பேருணர்வுப் பரம்பொருளைத் துய்க்கும் சிவஞான அனுபவத்தைத் தோற்றுவிக்கும் நிலையினதே ஞானசம்பந்தர் திருப்பதிகம். அதுவே, பாணரின் யாழிசையுடன் கலந்து வெளியாகும்போது எல்லையற்ற திருவருளின்ப அனுபவத் தையே வழங்கும் தன்மையுடையதாகிறது. சிவஞான அனுபவத் துடன் திருவருளின்ப அனுபவத்தையும் இணைத்து நிற்பதாலேயே இம்முறை '*பிறிவின்றிச் சேவிக்கும் முறை*' எனப் பெற்றது. பெரும் பாணர் ஞானசம்பந்தருடன் சென்று சேவித்தும் யாழிசை மீட்டியும் நின்றால் ஞானசம்பந்தரின் சிவஞான அனுபவமே பின்வருவோரின் உயிரனுபவமாகும். பாணர் தனித்து நின்றதால், திருவருள் ஞான இன்ப அனுபவத்தை உயிர்கள் பெறும் வாய்ப்பு அமைந்தது. தாம் மேற்கொண்ட தொண்டின் முழுமை நிலையைத் தம்முடன் இருந்தே அமைத்துக் கொடுக்கும் நிலையுடையவர் பாணர் என்பதைத் திருவரு ளால் முற்பட அறிந்த காரணத்தாலேயே, திருஞானசம்பந்தர் தாமே சென்று வரவேற்று, அழைத்து வந்தார். ஞானசம்பந்தர் பெற்ற அனு பவம் அருநெறி மறை அனுபவம் போன்ற அருமை அனுபவமே. பாணர் அவ்வனுபவத்தைத் தாம் ஏற்று, யாழிசையுடன் கலந்து, எல்லா உயிர்களும் அனுபவிக்கத்தக்க எளிமையுடைய—ஆனால், முன்னதில் மறைந்துகிடந்த ஒன்றைப் பொலிவுபெற நிறைவு செய்து அமைக்கப்பெற்றதாகிய நிறையுடைய திருவருளின்பமாக அமைத் துக் கொடுத்தார். அனைத்துயிருக்கும் பரம்பொருளுக்கும் இடை நின்று, இருவரையும் இணைத்து, இருவரும் துய்க்கும் அனுபவமாக ஆக்கினாராதலின், அதற்குரிய இடமாகத் திருக்கோயிலின் கருவறை அமைய முடியாது ; அதற்குத் திருக்கோயிலின் அகஇடமும் பொருந் தாது. ஆகையால், புறமுன்றில் இடமாக அமைந்தது. பாணர் மேற் கொண்டது அனைத்துயிரையும் ஈடுபடுத்தும் பெரும்பணி. திருநீல கண்ட யாழ்ப்பாணரின் தொண்டுநிலையின் பெருமையைத் திருவரு ளால் சிவஞானப் பேருணர்வால் முன்கூட்டியே அறிந்தாராதலின், பாணர் ஞானசம்பந்தரின் திருப்பதிகத்தை யாழிலிட்டு, பிறிவின்றிச் சேவிக்கப்பெற அருள்தரவேண்டும் என்று வேண்டிய காலத்தில், நின்விருப்பப்படியே செய்க என்றோ, யான் அனுமதி அளிக்கிறேன் என்றோ ஞானசம்பந்தர் கூறவில்லை.

"தம்பிரான் அருள் இதுவே"

என்ற அளவில், திருவருட்குறிப்பை வெளிப்பட எடுத்து மொழிந்து நிற்பவரானார். எனவே, இங்கு நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய திருவருட் குறிப்பு யாது?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூவர் ஆற்றிய முழுமைத்தொண்டு

திருப்பதிகப் பெருவழி' என்ற திருநெறியத் தமிழ் நெறியைத் தோற்றியும் நிலைநாட்டியும் நின்ற பெருமை திருஞானசம்பந்தருக்கே உண்டு. அவரே அந்நெறியின் முதற்குரு அதே திருநெறியத் தமிழ் நெறியை உலகத்துயிர்கள் செயற்படுத்தித் துய்ப்பதற்குரிய நடைமுறைப் பயிற்சித் திட்டங்களை அமைத்துச் செயற்படுத்தும் பணியே "திருநின்ற செம்மை" எனப்பெறும் செயற்பாட்டு நெறி. அத்தகைய செயற்பாட்டு நெறியை அமைத்துப் பணிசெய்தவர் அப்பரடிகள். அவர் திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரசர். திருநாவுக்கரசர் ஞானசம்பந்தப் பெருமானால் 'அப்பர் என்றும் 'அடிகள்' என்றும் உயர்வுடன் மதித்துப் போற்றப்பெற்றவர். திருநெறியைச் செம்மைப்படுத்தி, மண்ணுலகில் வாழ்வார் உணர்ந்து செயல்நெறிப்படுத்துவதற்கேற்ற நிலையில், செயற்பாட்டுத் திட்டம் வகுத்து, அந்நெறியானது விரிவாகவும் பெருமையாகவும் உயர்ந்து நின்று பயன்தரும் வகையில் மக்களுள் ஒருவராகத் தம்மை அமைத்துக்கொண்டு செயற்படுத்திக் காட்டிய பெருந்தகையே அப்பரடிகள். 'அப்பர்' என ஞானசம்பந்தர் போற்றியதன் திருவருட் குறிப்பு இது என்பதை இந்நூலின் எட்டாம் தலைப்பிற் காண்க. அவ்வாறே, அவரால் 'ஐயர்' என்று எக்காலத்தும் அழைக்கப்பெறும் பேறுபெற்ற திருநீலகண்ட யாழ்ப்பாணர், பெரியவர் என்ற வகையில், 'ஐயர்' என அழைக்கப்பெற்ற தகுதியை உடன் கொண்ட நிலையில், "பெரும்பாணர்" எனப் பெற்றார். அவரால் திருநெறியத் தமிழ் நெறியானது அனைத் துயிர்களாலும் எளிமையில் உணரவும் அறியவும் ஆம் நிலையையும் அனுபவ உண்மையாக அனுபவிக்கும் நிலையையும் ஒருசேர எய்த முடிந்தது. எனவே, திருநெறியத் தமிழ்நெறியைக் கொள்கை விளக்கமும் அனுபவ விளக்கமும் ஆக அமைத்து, அனைத்துயிர் களின் மன்றத்தில் அரங்கேறவைத்த பெருமை திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கு உண்டு. எனவே, ஞானசம்பந்தர் காலத்திலேயே, அவருடன் இணைந்துநின்று, அவர் தொடங்கிய நெறியை அனு பவித்தறியும் முறையாலும், செயற்படுத்திச் செம்மையாக்கும் செயற் பாட்டு அமைப்பாலும், விளக்கியும் செயற்படுத்தியும் நின்ற பெருந் தொண்டர்கள் இருவர். இருவரும் முறையே 'ஐயர், என்றும் 'அப்பர்' என்றும் ஞானசம்பந்தப் பெருமானாலேயே போற்றப் பெற்ற பெருமையுடையவர்கள் எனக் கொள்ளவேண்டும். இவ் வாறு வகுத்தமைத்ததும், இம்மூவரையும் ஒரேகாலத்தில் இயைந்து நின்று செயற்படுமாறு வரலாறு அமைத்ததும் "தம்பிரான் திருவருள்" என்றுணர்தல் வேண்டும்.

திருப்பதிகப் பெருவழி எனப்பெறும் திருநெறியத் தமிழ்நெறிக்கு இம்மூவரும் ஒருமை நிலையினரே. முப்பிரிவுகளாக நின்று பணியாற்றி னார்கள் என்றே கொள்ளுதல் வேண்டும். எனவே, திருக்கோயிலின் புறமுன்றிலில் பாணர் நின்றது, அவர்தம் சாதியால் வந்த இழிவின லன்று; அவர் மேற்கொண்ட தொண்டினால் வந்த தனித்தன்மையை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிலைநாட்டும் பெருந்தகைமையால் வந்த பெருமைநிலை எனப் போற்றுதல் வேண்டும். திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பாடுவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. பின்னர், பாணர் யாழிசையில் மீட்டும் போது உடனிருந்து கேட்டும், பெரும்பாணர் பேரருள் அனுபவ நிலையிற் பொலிவதை உடனிருந்து கண்டும், தம்மனுபவமும் அவ ரனுபவமும் இணைந்து நிற்பதை நேர்நின்று அறிந்தும் மகிழும் தன்மையில் இருந்தார் என்பதையும் நாம் இணைத்துக் காணவேண்டும். அதனாலேயே, தில்லைக் கூத்தன் திருப்பதிகம் வெளிப்போந்த நிலையில் இருந்த தம் அனுபவமும், பின்னர் அதனை யாழிசையில் மீட்டிய போது, பெரும்பாணரிடம் பொலிந்து விளங்கிய அனுபவமும் ஒத்து இருந்த முறையை இணைத்துக் காணுகிறார். அந்நிலையில், பாணரும் அப்பதிகத்தை யாழில் மீட்டிப் பாடி முடித்தபின், தில்லை அந்தணர் நீளமன்றுள் ஆடும் கழற்கு அணுக்கராம் பேற்றினை, நினைந்து அதிசயித்தார். திருப்பதிக வெளிப்பாட்டில் தாம் அனுபவித்த அனுபவமாகிய "அந்தணர்களின் முதன்மைப்படும் நிலை" என்பதே திருநீலகண்ட யாழ்ப்பாணரின் அனுபவமாகவும் நின்று விளங்குவதை இணைத்துக் காணுகிறார் சம்பந்தர்.

திருவருள் நிலையை நேர்நின்று காண்பது என்பது ஒருவகையில் உயர்தகுதியே. அதனைக் காட்டும் தகுதி ஞானசம்பந்தருக்கு உண்டெனில், அதனை அவ்வாறே நேர்நின்று காண்பதும் ஒருவகையில் அனைவராலும் எளிதிற் பெறமுடியாத பெருந்தகுதியே. அத்தகைய தனிப்பெருந்தகுதியை அப்பரடிகள் வாய்மூரில் பெற்றமை போலவே, பெரும்பாணரும் திருத்தில்லையில் பெறுகிறார். இந்நிலையில் திருஞானசம்பந்தர் திருநீலகண்ட யாழ்ப்பாணருக்குக் குருவாக அமைந்தார் எனக் கொள்ளவேண்டும்.

இறைப்பத்திமையும் இசைப்பத்திமையும்

திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஞானசம்பந்தரின் திருப்பதிகங்களை யாழிலிட்டு அமைக்கவேண்டும் என்பதுதானே தேவைப்படுவது, என்றால், அதுதான் பாணரின் பணி என்றால் ஞானசம்பந்தர் பாடும் போதே பாணர் அதைச் செய்யலாம். மீளவும் ஒருமுறை பாணர் பாடித்தான் யாழிலிட்டு இசைப்பானேன்? ஒரே செயல் இருமுறை இருவரால் அமைவானேன்?

ஆலமுண்ட கண்டனின் திருவடிப்பெருமை, திருவருளின்பம் திருவருட்பொலிவு ஆகியவைகளை உயிர்கள் அனுபவித்துணர வேண்டும் என்பதற்கு இசையை ஒருவகை வெற்றிபொருந்திய கருவியாக அமைத்துக் கொண்டவர் ஞானசம்பந்தர். ஞானசம்பந்தரின் வணக்கத்துக்குரிய பொருள் தம்பிரானுரே. தம் வணக்கத்துக்குரிய பொருளை உலகத்துயிர்கள் அனுபவிக்குமாறு செய்தற்குரிய கருவியாகவே இசையைக் கொண்டார் ஞானசம்பந்தர். ஆனால், பெரும் பாணர் இறைவனை இசையாகவே கண்டார். ஏழிசையாய் இசைப்பயனாய் நின்றவன் இறைவன் என்பது காழிப் பிள்ளையார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருத்து. பெரும்பாணர் இசைக்கு உரிய வேறு பெயராக ஒருசிலர் இறைவன் என்ற சொல்லேச் சொல்லுகிருர்கள் என்றுதான் கருதினுர். இசையே அனேத்தும் என்றும் இசைத்தன்மைக்கு வேறு ஒரு பெயர் அமைக்க எண்ணினுல் இறைத்தன்மை என்று கொள்ளலாம் என்றும் கருதுபவர் பாணர் இறைப்பத்திமை ஞானசம்பந்தருக்கு; இசைப்பத்திமை பாணருக்கு. ஞானசம்பந்தரால் 'இறை' என்று கருதப்பெற்றது எதுவோ, அதுவே, பாணரால் "இசை" என்று கருதப் பெறுகிறது. இவ்வாறமைந்த பாணரின் நிலேமையை உட்கொண்ட இறைவன் ஞானசம்பந்தர் அருளிய பதிகத்தை மீளவும் பெரும் பாணர் பாடவும் யாழிலிசைப்படுத்தவும் உரிமை தருகிருன். "மீளவும் பாட வேண்டும்" என்ற செயலேத் தேவையற்றது என்று சிலர் கருதலாம். ஆனுல் அது மிகமிகத் தேவை என ஏற்றுக் கொண்டதும், அவ்வாறு செய்வதற்கு ஆணே தந்ததும் இறைவனே என்று குறிப்பிடுகின்ருர் ஞானசம்பந்தர். இச்செய்திகளே,

"நாணமுடை வேதியனும் நாரணரும் நண்ணவொணுத்
தாணு, எனேயாளுடையான் தன்னடியார்க் கன்புடைமை
பாணன் இசை பத்திமையால் பாடுதலும் பரிந்தளித்தான்
கோணல் இளம் பிறைச் சென்னிக் கோளிலி யெம்பெருமானே"

என்ற தம்முடைய திருக்கோளிலித் திருப்பதிகத்து 9 ஆம் திருப்பாட்டில் அமைத்துக் காட்டினுர். மேலும், திருவாலவாயிற் பாடிய திருவியமகத் திருப்பதிகத்தின் 6ஆம் திருப்பாட்டில்,

"தக்க பூமனேச் சுற்றக் கருளொடே
தாரமுய்த்தது பாணற் கருளொடே"

என்று, தம்முடைய திருப்பதிகத்தைத் 'தாரம்' என்ற சொல்லாற் குறிப்பிட்டு, அதனே மீளவும் அவரால் பாடச்செய்ததை "உய்த்தது" என்று குறிப்பிட்டு, இவ்வாறு செய்தது, பாணர் மேல் வைத்த திருவருட் பெருமையாலேயே என்று குறிப்பிடுகிருர்.

வேறு ஒரு சான்றையும் இங்கே இணேத்துக் காணுதல் வேண்டும்.

'திருத்தொண்டத் தொகை' என்பது பெருவாய்மை மொழித் திருப்பதிகச் சத்தியமாகும். இதற்கு இருபொருள் உண்டு. சுந்தரர் பாடிய ஒரு பதிகத்தின் பெயராக அமைவது ஒன்று. திருத்தொண்டர்களின் கூட்டம் என்ற பொருளேத் தருவது மற்ருென்று. அடியவர் கூட்டத்தின் பெருமை, ஆற்றல், வலிமை, வளம், வள்ளன்மை ஆகிய அனேத்தும் திருத்தொண்டத் தொகைப் பாட்டுக்கும் உண்டு. பெரிது பெரிது எனப்பெறும் பெரியவைகளேயெல்லாம் தன்னுள் அடக்கிய பெருமை இறைவனுக்கு உண்டு; இறைவனேத் தன்னுள் அடக்கிய பெருமை தொண்டர்களுக்கு உண்டு. அத்துடன் "பெரிது பெரிது" என்ற பாட்டு முடிவு பெற்றுவிடும். ஆனுல், அனேத்துத் தொண்டர்களேயும் தன்னுள் அடக்கிய பெருமையையுடையது சுந்தரரின் செந்தமிழ்ப்பதிகமாகிய திருத்தொண்டத்தொகை. அப்பதிகம், தில்லேவாழ்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்தணரை முதலாகக் கோத்த காரணத்தால் பெருமையுடையது என்பது உண்மையே. அவ்வாறே, அனைத்து அடியவர்களுக்கும் மூலமாகத் திருநீலகண்ட யாழ்ப்பாணரை நிறுத்தி அவரை இறுதியில் தந்து முடித்து நிறுத்திய வகையாலும் திருத்தொண்டத்தொகை பெருமையுடையதே. முதலில் நிற்பதால் வரும் சிறப்பும் இறுதியில் நிற்பதால் வரும் சிறப்பும் ஒத்த நிலையுடையனவே. திருநெறியத் தமிழ் நெறிக்குப் பெரும்பாணர் ஒருவகையில் மூலமாக அமைந்தவர் என்பதனாலேயே, அவரை இறுதியில் நிறுத்தித் திருத்தொண்டத் தொகையை முடித்தருளினார் சுந்தரர் பெருந்தகை.

"மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீலகண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவலூர்க் கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமை கேட்டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே"

என்பது திருத்தொண்டத் தொகையின் இறுதிப்பாட்டு.

சாதியால் வந்த சழக்கன்று

ஞானசம்பந்தர் பாணனாரைத் திருக்கோயிலின் உள்ளே அழைத்துச் செல்லாமை என்பது சாதி இழிவினாலன்று; தம்பிரான் திருவருளால், அவர் தொண்டு செய்தற்கு என அமைந்த இடம் அதுவே என்பதை உணர்தல் வேண்டும். உள்ளே அழைத்துச் சென்றால், ஞானசம்பந்தர் பாடுவதற்கேற்ப ஒரு கருவியை இசைப்பவராகவே அவர் அமைவார். அவருடைய தொண்டு, ஞானசம்பந்தரின் தொண்டின் ஒருபகுதியைத் தாமே முன்நின்று தலைமையேற்று நடத்த வேண்டிய அமைப்பினையுடையது.

அதே நிலையில் ஞானசம்பந்தர் திருக்கோயிலின் புறமுன்றில் வரையில் அழைத்துச் சென்றதே ஒருவகைப் புரட்சி. தேவைப்படின் உள்ளேயும் அழைத்துச் சென்றிருப்பார். தொண்டின் தனிமையை நோக்கியே அவ்வாறு செய்யவில்லை. மேலும், செல்லும் இடங்களிலெல்லாம் பாணருடன் சேர்ந்தே உணவுகொண்டமையும், வேறுபாடின்றித் தங்கியமையும், திருநீலநக்க நாயனார் போன்ற வைதிகர் இல்லங்களில் தங்க நேர்ந்தபோதெல்லாம் இத்தகைய வேறுபாடு வந்து விடக்கூடாது என்பதற்காகவே, முதலில், பாணர் தங்குவதற்குரிய இடம் யாது என்றெல்லாம் வினவி, சாதி வேற்றுமை இடம் பெற்று விடலாகாது என்று மிகவும் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டு வந்தமையும் ஞானசம்பந்தர் பெரும் புரட்சியாளர் என்பதை நாம் வரலாற்று முறையில் அறிந்து அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும், பாணரும் இறைவனரைக் கருவறைவரை சென்று கண்டு வணங்க வேண்டும் என்ற கருத்துடையவராக இருந்தார் என்று எண்ணுவதற்கு இடமில்லை. தம்முடைய யாழை இசைத்து மீட்டுவாரே யானால் அவ்விடத்திலே பெருமான் வந்து நின்று காட்சிதரும் அளவுக்கு [illegible]மார் அருளாளராக இருந்தவர் அதுமட்டுமேயன்றி, இதற்கு அப்பாலாக இறைவனை அவர் காணவில்லை.

இனி, "அணுக்கராம் பேறு அதிசயிப்பார்" என்ற சேக்கிழார் வாக்கினுக்கு, அணுக்கராக நின்று காணவே விரும்பினர் என்று பொருள் கொள்வது பொருந்தாதென்பதற்குரிய சில காரணங்களைக் காணலாம்.

1. அணிமையில் நின்று காணவேண்டும் என்பதே கருத்தா யின் சிவகணநாதர்களாக அந்தணர்களைக் காட்டியிருக்க வேண்டிய அவசியமில்லை.

2. மேலும், அக்காட்சியைத் தில்லையின் எல்லையிலேயே காட்ட வேண்டிய அவசியம் என்ன என்பதும் விளங்காததாய் முடியும்.

3. ஞானசம்பந்தருக்கு அந்த எண்ணம் இருந்தமையாலேயே அவர் தில்லைவாழந்தணர்களை முன் வைத்துப் பதிகம் பாடத் தொடங் கினர். தில்லைவாழந்தணர்களைப் பற்றிய அதிசயம் பாணருக்கு இல்லை யானல், சிவகணநாதர்களாகத் தோற்றிய காட்சியை ஞானசம்பந்தர் பாணருக்குக் காட்ட வேண்டிய அவசியமே இல்லை என்பதாம்.

4. அணுக்கராய் நின்று வழிபட எண்ணிய பாணருக்கு இக் காட்சியைக் காட்டினல், சிவகணநாதர்கள் நிற்கும் இடத்துக்கு நீயும் வந்து நின்று காணவோ வழிபடவோ முற்படுவது பெரும்பாவம் என்று இறைவனும், ஞானசம்பந்தரும் இணைந்து நின்று பாணருக்கு உள்ளே வரலாகாது என்பதை மறைமுகமாக உணர்த்தியது போல வும் அமையும்.

எனவே, திருஞானசம்பந்தரைப் போலவே, பாணருக்கும் தில்லை வாழந்தணர்களுடைய அணுக்கராம் பேறு அதிசயிப்பதற்குரியதாக ஒருவகை அனுபவம் அமைந்தது. அந்நிலையில் இருவரும் செல்லும் போது, தில்லைவாழந்தணர்கள் சிவகணநாதர்கள் என்ற காட்சியைத் திருவருள் அமைத்தது. அணுக்கராம் பேற்றுக்குரிய காரணம் இது என்பதைத் தாம் கண்டது போலவே பாணனும் இக்காட்சியின் மூலம் தெளிவு பெற வேண்டும் என்பதற்காகவே, அக்காட்சியைப் பாணனர்க்கும் சம்பந்தர் காட்டவேண்டிய இன்றியமையாமை நேர்ந்தது.

அத்தகைய காட்சியைத் தில்லையின் எல்லையிலேயே காட்ட வேண்டிய நிலை ஏன் வந்தது என்றால், தில்லைவாழந்தணர்கள் இவர் களை வரவேற்க வருகிறார்கள். வரவேற்க வருபவர்களைப் பற்றிய ஐயம் தீர்வதற்குரிய வழியாக முன்கூட்டியே அமைத்துக் கொடுப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பது ஒன்று. இரண்டாவது, திருநீலகண்ட யாழ்ப்பாணர் உள்ளே வரமாட்டார். பதிகம் பாடும்போது காட்டினால், திருப்பதிகத்தின் நடுவில் வரும் இந்த அனுபவம் திருப்பதிக அனுபவத்தோடு முரண் படும். பின்னர், ஞானசம்பந்தரே தனக்கு இப்படி ஒரு காட்சி அமைந்ததைச் சொல்ல வேண்டும், சொன்னாலும், அக்காட்சியைப் பாணர் நேரே காண வாய்ப்பிராது. இன்னோரன்ன செய்திகள் திருப் பதிக ஆனந்தானுபவம் விளங்கியமைவதற்கு இடையூறாக அமை வன ஆதலின், முன்கூட்டியே, தில்லைவாழ்ந்தணர் பற்றிய அதிசய உணர்வு அடிப்படையில் எழும் அனுபவத்துக்கு உரிய காரணம் இன்னது என்பதை உணர்த்த முற்பட்டது இறையருள் என்று கொள்ள வேண்டும்.

தில்லைவாழ் அந்தணர்களும் சிவகணநாதர்களும்

திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகள் கூத்தப் பெருமானுக்கு உரிமைத்தொழில் பேணுபவர்களே தில்லைவாழந்தணர்கள் என்று திருத்தொண்டர் திருவந்தாதியிற் கூறுகின்றார்.

தில்லைவாழ் அந்தணர் புராணம் என்ற ஒரு பகுதியை அமைத்துக் கொண்டு பத்துப்பாட்டுக்களில் அவர்தம் பெருமையை அமைத்துக் காட்டுகிறார் சேக்கிழார்.

மேலே கூறப்பெற்ற இருவரும் தில்லைவாழந்தணர்களைப் பற்றிக் கூறியேயாகவேண்டும் என்ற ஒரு நிலையை உண்டாக்கியவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளே.

திருவாரூர்ப் பெருமானை வழிபடச் செல்லும் சுந்தரர் ஒருநாள், திருவாரூர்த் திருக்கோயில், தேவாசிரிய மண்டபத்துள் அமர்ந்திருக் கும் புனிதர்களைப் பார்த்து, இவர்களுக்கெல்லாம் யான் அடிமை பூணும் நாள் எந்நாளோ என்று கருதிக்கொண்டே சென்று இறை வனை வழிபடும்போது, தேவாசிரிய மண்டபத்துள் இருப்பவர் யார் அவர்தம் பெருமை என்ன என்று வினவியதாகச் சேக்கிழார் நமக்கு வரலாறு சொன்னாலும்,

> "திருவார் பெருமை திகழ் தேவாசிரியனிடைப் பொலிந்து
> மருவா நின்ற சிவனடியார் தம்மைத்தொழுது வந்தணையாது
> ஒருவாறொதுங்கும் வன்தொண்டன் புறகு"

என்றும்,

> "சேணார் மேருச்சிலை வளைத்த சிவனார் அடியார் திருக்கூட்டம்
> பேணாதேகும் ஊரனுக்கும் பிரானாம் தன்மைப் பிறைசூடிப்
> பூணார் அரவம் புனைந்தார்க்கும் புறகு"

என்றும் விறன்மிண்ட நாயனார் கூறியவைகளையும் உடன்படவேண் டிய நிலை வரலாறு விளைத்த பான்மை.

இருவரும் புறகு என்று ஆணை பிறப்பிக்கப் பெற்று விட்டது. திருத்தொண்டத்தொகை முன்பாடித் தமக்கு நேர்ந்த குறையைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீர்த்துக் கொண்டார் சுந்தரர். ஆனல், சுந்தரர் பாடியதை அடிப் படையாக வைத்தே இறைவனும் தம்குறையைத் தீர்த்துக் கொண்டான் என்று சொல்வது நீதியால் நினைய முற்படும்போது தகுதியுடையதாகுமோ ?

திருநாவலூரரை ஆவணங் காட்டி 'அடிமை' என்று கொண்டவன் இறைவன். அடிமை என்ற வகையில் உன் பெருமை தெரியாது என்ருர்; என்ன பணி செய்ய வேண்டும் என்ருர்; என்ன சொல்லிப் பாட வேண்டும் என்ருர்; இவ்வளவுக்கும் காரணம், தான் என்ன செய்ய வேண்டுமோ அது அவனுலேயே தொடங்கப் பெற வேண்டும் என்பதே. இந்நிலையில், தேவாசிரிய மண்டபத்து அடியார் யார், அவர் தம் பெருமை என்ன, என்று சுந்தரர் வினவிய வினக்களுக்கு விடை கூறி விட்டான். பின்னர், என்ன சொல்லிப் பாட வேண்டும் என்று கேட்கிருர். அப்போது, முன்னே ஆவணம் காட்டி ஆண்ட போது சொன்னது போல, இங்கே ஒரு சொல்லை மட்டும் எடுத்துக் கொடுத்துப் பாடச் சொல்லவில்லை. ஒரு வரி முழுவதையுமே எடுத்தமைத்துப் பாடுகின்ருன். அதுவே,

"தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்"

என்பது. அதனையே முதல் வரியாக அமைத்து, சுந்தரர் திருத் தொண்டத்தொகையினைப் பாடுகின்ருர். இவ்வரியை இறைவன் பாடவில்லை என்று சிலர் கூறுவர். இந்த வரியைப் பாடியது மட்டு மன்று; திருத்தொண்டத்தொகை பாடும் போது, இறைவனும் அங்கே வந்து நிற்கிருன். ஏன் எனில், தன்னையும் புறகு என்று நீக்கி விட்டதால், சபை முன் தானும் வந்து நின்று, குறை நீக்கம் காண வேண்டிய நிலை எம்பெருமானுக்கும் அமைய வேண்டிய தாயிற்று. அந்நிலையில், அவனும் பாடும் நிலைமையில் அமைந்ததே அம் முதல்வரி. அது தில்லைவாழ் அந்தணரைப் பற்றியது. ஆனல், தில்லைவாழ் அந்தணர்கள் திருவாரூர்த் தேவாசிரிய மண்டபத்தில் புனிதர் பேரவையில் எத்தகைய அடிப்படையில் தொடர்பு படுத்தப் பெறுகிருர்கள் என்பது ஒரு முக்கிய வினு. அவ்வாறே, பெரிய புராணம் ஆக்கப் பெறுதலும் அரங்கேற்றப் பெறுதலும் தில்லை யிலேயே. திருவாரூர்ப் புனிதர் பேரவையில் உள்ளவர்களை வணங்குதல் என்ற ஒன்றுதான் திருத்தொண்டத் தொகையின் உட்பொருள். இறுதியில் பலரை இணைப்பது பொருந்துவதாகலாம். ஆனல், தொடக்கமே தில்லைவாழ் அந்தணரை வைத்தே தொடங்கு தல் வேண்டுமா? தில்லை வாழந்தணரைக் குறிப்பிட முற்படும் சேக்கிழார்,

"தென்தமிழ்ப் பயனுயுள்ள திருத்தொண்டத் தொகை முன்பாட
அன்றுவன் தொண்டர் தம்மை அருளிய ஆரூர் அண்ணல்
முன்திருவாக்கால் கோத்த முதற்பொருளானுர் என்ருல்"

என (பெரியபுராணம் 358) வெளிப்படுத்தும் வாய்மொழியை நோக்கி ஞல், இறைவனல் முதல் வரியாக அமைத்துப் பாடிய நிலையில்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவ்வரிக்கு உரிய மூலப்பொருளாக அமைந்தவர் தில்லை வாழந் தணர்களே என்று கொள்ளுதல் நேரியதே.

"தில்லைவாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்"

என்று பாடி, இறைவனும் தன்னைப் புறகு என்று கூறப்பெற்ற விலக் கினின்றும் விடுபட்டான் என்று கொள்ள வேண்டும்.

தில்லைவாழ் அந்தணர் எண்ணிக்கையால் மும்மை ஆயிரத்தவர். தில்லைக் கூத்தப் பெருமானும் அவ்வெண்ணிக்கையுள் இணைந் தவனே. ஆக்கூரில் ஆயிரத்துள் ஒருவனுகத் தம்மை இணைத்துக் கொண்டமை போலவே, தில்லையிலும் மூவாயிரத்தவர்களுடன் தம்மை இணைத்துக் கொண்டான். கூத்தப்பெருமான் உலகுக் கெல்லாம் தலைவனுக அமைந்தவனுயினும் தில்லையில் உள்ள அந்தணர் தம் பேரவைக்குத் தலைவனுக அமைந்தவனுயினும் தில்லையில் உள்ள அந்தணர் தம் பேரவைக்குத் தலைவனுக வருவது என்பது மூவாயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை தான்.

தில்லைவாழந்தணர்களைப் பற்றிய ஒருவகைப் பொது விளக்கமே நாம் பெற்றிருக்கிறோம். திருஞானசம்பந்தரை மூலமாக வைத்து, நாம் தில்லைவாழந்தணர்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். திருஞானசம்பந்தர் நிலைநாட்ட வந்த திருநெறியத்தமிழ் நெறியானது இறைவன் அடியவர்கள் வாழ்ந்து காட்டிய நன்னெறி என்று கொள்வோமானுல், அது தில்லைவாழ் அந்தணரை முதலாக திருநீலகண்ட யாழ்ப்பாணரை இறுதியாக அமைத்து எடுததுக் காட்டிய நெறி என்று கொள்ள வேண்டி வரும். திருநெறியத் தமிழ் நெறியை உணர்ந்து கொள்ளுவதற்குத் தில்லைவாழ் அநதணர் யார் என்று தெரிந்து கொள்ளுதலும் தேவையாகிறது.

தில்லைத் திருத்தலம் திருமூலரோடும் தொடர்புடையது. திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் இருந்தார் என்ற குறிப்பையும் இணைத்துக் கொள்ளுதல் வேண்டும். இதன் விளக்கம் உரிய இடத்தில் காட்டப் பெறும்.

சிவஞானம் பற்றிய ஒரு வினு

நாம் நம் சிந்தனையிற் கொள்ள வேண்டிய முக்கியச் செய்தி ஒன்றும் உண்டு.

ஞானவாரமுதமுண்ட காழிப்பிள்ளையார் சிவஞானம் பெற்ற சிவஞானசம்பந்தர். சிவஞான சம்பந்தம் பெற்றவரும் தாம் பெற்ற சிவஞானத்தால், தில்லை வாழந்தணர்களைச் சிவகண நாதர்களாகத் தெரிந்து கொள்ள இயலாதது ஏன்? சிவஞானத்துக்கும் தெரிய வாராத செய்திகள் உளவோ? இத்தகைய வினுக்களை நாம் அணுகுதல் கூடாது என்பது மரபுவழிச் சான்றோர் கொள்கை. மரபுவழிச் சான்றோர் கொள்கையை மரபு வழி வந்தவரே பின் பற்றுவர். ஏனையோர் அதனை மதியாது வினு எழுப்புவர். விடை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காண முற்படுவர். விடை வேறு விதமாக அமைந்து வெளிவந்த பிறகு வருந்துவதை விட, வினு எழுப்பப் பெற்றே தீரும் என்ற நிலைமையைக் காலச் சூழல் தோற்றுவித்து விட்ட பிறகு, மரபு வழியுள் இணைந்தவர்களே அத்தகைய வினுக்களை எழுப்பி விடை அளித்து விடுவது நன்மையும் நற்பயனும் தரும் செயல்களாம்.

சிவஞானம் என்பது மிக உயர்ந்த ஒன்றே. உயிரானது தன்னைச் சிவஞானத்தின் வழியில் இயங்க வைத்துக் கொள்ளும் போது, சிவன் சிவஞானத்தால் அறிகின்ற எல்லாவற்றையும் சிவஞானத் தோடு தொடர்புற்ற உயிரும் அறியும் என்று கொள்ளலாகாது. உயிரின் தேவையான அளவுக்குரிய எல்லாவற்றையும் அறியச் செய்யும் வகையில் சிவஞானம் தொழிற்படும். எல்லாவற்றையும் அறிதல் என்பது உயிரின் குறிக்கோளன்று. விரும்பினுல் எல்லா வற்றையும் அறியலாம், விரும்பாது. எனவே, சிவஞானமானது, உயிரின் படிநிலை வளர்ச்சி, தனித்தன்மை ஆகியவைகளை அடிப் படையாகக் கொண்டு, வேண்டிய எல்லாவற்றையும் அறிவிக்க வல்லதே. அதனுல் சிவஞானத்தில் ஏதும் குறையில்லை.

இங்கே, ஞானசம்பந்தப் பெருமானுக்கு ஒரு திருப்பம் அமை கிறது. தொண்டு நெறிக்கும் திருத்தொண்டு நெறிக்கும் உரிய வேறு பாடும் தெளிவும் இறையருளால் அளிக்கப் பெறுகின்றன. திருநெறியத் தமிழ்நெறி என்பது இங்கே தான் தொடங்குகிறது. இதுவரையிலும் தான் மேற்கொண்டு வந்த தொண்டு நெறியின் அந்தத்தில் மலர்வதாகத் திருத்தொண்டு நெறி வருகிறது.

முன்னே, இறைவன் திருவடியை நினைந்து வழிபட்டுக் கொண் டிருந்த போது, மையல்செய்து, அடுத்த தொண்டுநெறியிற் பிறக்க வைத்தது போலவே, இங்கும் ஒருவகை மையல் உண்டாக்கப் பெறுகிறது. "அணுக்கராம் பேறு" இவர்கட்கு மட்டும் எவ்வாறு வாய்ந்தது என இவ்வாறு ஒரு அதிசயத்தை உண்டாக்கி, அதன் அடிப்படையில் திருவடியை நினைப்பதிலிருந்தும் வேறுபட்டுத் திருத் தொண்டர்களையே நினைந்து நினைந்து அதிசயிக்கும் நிலையை உண்டாக்கி விடுகிருன். இந்நிலையில், தில்லையில் தங்காமல், திருவேட்களம் சென்று தங்குகிருர். நினைவில் முன்னுக நிற்பது அந்தணர்களின் அணுக்கராம் பேற்று நிலையே.

இந்நிலையில், தில்லைவாழந்தணர்கள் சிவகணத்தவர்கள் என்ற காட்சியை அமைப்பதே சிவஞானசம்பந்தரைத் திருஞானசம்பந்த ராக ஆக்குகிறது. சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞான சம்பந்தராக இருந்த ஞானவாரமுதண்ட பிள்ளையார் இப்போது திரு ஞானம்பந்தம் பெற்றவராக அமைகிருர். இது ஒருவகையில் சுவாமி களுக்கு அமைந்த நயன தீக்கை போன்றது. இங்கே சுவாமிகள் குரு வின் பெருமையை உளங்கொள்பவரானுர். இந்நிலையில் சுவாமிகள் தில்லைவாழந்தணர்களைப் பற்றிக் கூறுபவைகளை இணைத்துக் காண வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஊறும் இன் தமிழால் உயர்ந்தார்

தில்லையில் காழிப்பிள்ளையார் அருளிய பதிகங்கள் இரண்டு. சிவகண நாதர்களாகத் தில்லைவாழந்தணர்களைக் கண்ட காட்சிக்கு முன்னர்ப்பாடிய பதிகம் "கற்றுங்கெரியோம்பி" என்ற பதிகம். சிவகணத்தவர் காட்சிக்குப் பின் மலர்ந்தது "ஆடினாய் நறுநெய் யொடு பால் தயிர்" என்ற பதிகம்.

முதற்பதிகத்தினுள் தில்லைவாழந்தணர்களைச் "சீலத்தார்" என்று குறிப்பிடும் திருஞானசம்பந்தர்,

"ஊறும் இன்தமிழால் உயர்ந்தார் உறை தில்லை தன்னுள்
ஏறு தொல்புகழ் ஏந்து சிற்றம்பலம்"

என்று இரண்டாம் பதிகத்துத் திருக்கடைக்காப்பினுள் அமைத்துக் காட்டுகின்றார். இரண்டாம் பதிகத் திருக்கடைக் காப்பினுள் தம்மை

"நான்மறை வல்ல ஞானசம்பந்தன்"

என்று கூறிக்கொண்ட சம்பந்தர் தில்லைவாழந்தணர்களை உயர்ந்தார் என்றும், அவர்தம் உயர்வுக்குக் காரணம் 'ஊறும் இன் தமிழ்' என்றும் கூறினார். ஊறும் இன்தமிழ் என்பது எதைக் குறித்தது?

"நீற்றினால் நிறைந்தகோல நிருத்தனுக்குரிய தொண்டாம்
பேற்றினார்; பெருமைக்கு எல்லை ஆயினார்; பேணிவாழும்
ஆற்றினார்; பெருகும் அன்பால் அடித்தவம் புரிந்து வாழ்வார்"

என்பது சேக்கிழார் (பெரியபுராணம் 352) தரும் விளக்கம்

இனி, "ஊறும் இன்தமிழால் உயர்தல்" என்பது ஒருவகைக் கொள்கை விளக்கத் தொடர். இதன் விளக்கத்தைத் திருமூலர் திருமந்திரம் கொண்டு காணுதல் வேண்டும்.

சிவயோகியார் ஒருவர் வடக்கிருந்து தெற்கே வருகிறார். மாட்டிடையன் மூலன் உடம்பில் புகுகிறார். தன்னுடல் திருவருளால் காணப்பெறுததாகிறது. மூலன் உடம்பில் வாழவேண்டிய இன்றியமையாமை. கொஞ்சநாள் தங்கி, அவ்வுடம்பின் தன்மையை நோக்கி அவர் கூறும் விளக்கம்

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்பது. இறைவனைத் 'தமிழ் செய்தல்' என்பது ஒருமுறை. இப்போது கிடைத்த மூலன் உடம்பு மிக நல்ல உதவியாக அமைகிறது என்று கூறுமுகத்தால் என்னை நன்றாக இறைவன் படைத்தனன் என்றார். தமிழ்செய்யும் நெறியைத் திருமூலர் நந்திநெறி என்றார். மேல்நோக்கி வளரும் நெறி என்பது பொருள். அந்நெறியானது ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம், தான் பற்றப் பற்றத் தலைப்படும் என்று கூறி, அதனால் வருகின்ற ஞானத்தைத் தமிழ்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மண்டலம் ஐந்தும் தாவியஞானம் என்றும் சிறப்பிப்பார். இந்நிலையில், உடலானது ஐந்தும் ஒன்றும் என ஆறுக விளங்கும். முன்பிருந்த மனம், ஆதியறிவு ஆகிய எல்லாம் அழியும். தமிழ் மண்டலம் என்று குறிப்பிடுவது ஐவகை இன்பநிலையங்கள். பின்னர் ஒன்று என்பது ஆறுவது. எனவே, ஆறு நிலைகளில் பிரிந்த இன்ப நிலையம், ஞானவிளக்கம் என்பதாக உடல் அமையும், ஆகவே இவ்வுடல் அருளாய் நிற்கும் நிலை, உடல் அருள்மயமாய் நிற்க, உயிரானது ஞானத்தையும் இன்பத்தையும் துய்க்கும். இந்நிலையில் சிவன் எரி எனத் தோற்றுவன், எரி எனத் தோற்றும்போது அது ' அழகு ' எனத் தோற்றும்.

அன்பினுல் புறத்தே மலர்வழிபாடு மேற்கொண்டவர்களே புறத் தேயமைந்த பெருமானை அகத்தவ வழிபாடு ஆற்ற முனைவர். முன்னது சகமார்க்கம் ; பின்னது அகமார்க்கம். அருளை முன்னிட்டுக் கொண்டு செய்கிற அகமார்க்கம் என்பதும் ஒருவகை வேள்வியே. வெளியில் அமையும் முத்தீயானது உள்ளேயும் அமைகிறது. முத்தீ யாக வேள்வி செய்யும் முறையில் முன்னது சூரியகண்டம், சந்திர கண்டம், அக்கினிக் கண்டம் எனக் காண்பர். ஒரே அக்கினி தான் மூன்று கண்டங்களிலும் மூன்ருக நிற்கும். நாலாம் நிலையாக அமையுங்கால் அந்த எரியானது அழகொளியாக விம்மிப்பரந்து, உடலையும் உயிரையும் பேரழகுமயமாக அமைக்கும்.

கூடற்சதுக்கப் பதிகப்பொருள்

அகத்தவம் எனப்பெறும் அகமார்க்க முறையை - அகப்பூசை முறையை மிக எளிமையாக அமைத்துக் காட்டுகின்ருர் திருஞான சம்பந்தர். அகப்பூசையைப் பற்றி, அகத்தே நடத்தும் மூன்று வகையான தீயெழுப்பு முறையைப்பற்றி மிகத்தெளிவாகக்கூறுகிருர்.

' கூடற்சதுக்கம் ' என்பது ஒரு பதிகம். இப்பதிகத்தைத் திருவானைக்காவிலிருந்து அருளுகின்ருர். இப்பதிகத்தினுள் ஆனைக்கா, ஆரூர், திருமயேந்திரப்பள்ளி, கயிலாயம் ஆகிய நான்கினை அமைத்துக்கொள்ளுகிருர். சூரியன் விளங்கும் இடமாக அமைவது நம் உடலில் மண்ணும் நீரும் இணைந்து ஒன்றுபடும் நிலை. ஆதார அமைப்புக்களாகக் கொண்டால் மூலாதாரமும் சுவாதிட்டானமும் இணைந்தநிலை. இதனை ஆரூர் பிருதிவி இலிங்கமாக, ஆனைக்காவை அப்புலிங்கமாக அமைத்தார். பின்னர் வருவது மதிமண்டலம். ஆனைக்காவை இடமாகக் கொண்டு தோன்றுகிறது. தீயும் வளியும் இணைந்து ஒன்றுபடும் நிலை. இதனை மயேந்திரப்பள்ளி என்ற தலமாக அமைத்தார். இங்கே ஆதாரநிலையில் மணிபூரகம் அனுகதம் என்ற இரண்டும் இணைந்தநிலை. அதற்குமேல் வானும் அதற்கு மேலும் உள்ள இருநிலை இணைப்பு. ஆதாரங்களுள் விசுத்தி ஆக்கினை என்ற இரண்டும் இணையும். அதனைக் கயிலாயம் என்ருர்.

ஒளியுருவினன் என்ற சிவனை இவ்வாறு நான்கு தலங்களில் அமைத்து நினைப்பது என்பதாகவே கொண்டால் அகத்தவம் நிறை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வுறும். முத்தீ என அகமார்க்கத்தில் குறிப்பிடுவது சூரியனாக விளங்கும் கனல் வடிவம்; சந்திரனாக விளங்கும் முத்தின் ஒளி, பின்னர் கூத்தப்பெருமானை நினைவுறுத்தும் மாணிக்க ஒளியாம் எரியின் வடிவு. நாலாம் நிலையில் ஈசத்வம் எனப்பெறும் அழகின் வடிவமே என்று கொண்டு, அருள்யோகம் எனப்பெறும் அகமார்க்கத்தை, அகத்தே செய்யும் முத்தீ வேள்வி முறையை அமைத்துக் காட்டினர். இதனை,

"கதிர்கொண்ட காந்தங் கனல் வடிவாகும்
மதிகண்ட காந்தம் மணிநீர் வடிவம்
சதிகொண்ட சாக்கி எரியின் வடிவாம்
எரிகொண்ட ஈசன் எழில் வடிவாமே"

என்ற 1653 ஆம் திருமந்திரத்தால் உணரலாம். அருளால் நினைந்து பெறும் இவ்வகத்தவத்தை அகத்தீ யெழுப்பும் முறை என்று கொள்ளும் முத்தீயெழுப்பு முறையை, ஞானசம்பந்தர் முறையே ஆரூர், ஆனைக்கா, மயேந்திரம், கயிலை என அமைத்து, இத்தலத்து இறைவர்களை முறையே நினைத்தால் இவ்வகத்தவம் கைகூடிவிடும் என்று அமைத்துக் காட்டினர். கூடற் சதுக்கம் என்ற அமைப்பில் இந்த நான்கு தலங்களையும் அமைத்துப் பாடியதன் நோக்கம் இதுவே. இவ்வகையில், எளிய வழியை அமைத்துக்காட்டிய ஞானசம்பந்தர் உலகத்துயிர்களுக்கும் 'குரு' என நின்ற பெருந்தகையாக அமைந்தார்.

இத்தகைய அகமார்க்கமே அகத்தீயம் என்று திருமூலரால் பேசப்பெறுகிறது. புறத்தே மூவகையாக அமைத்த வேள்விக் குண்டத்தில் புறத்தே அமைக்கப்பெற்ற தீயை எழுப்புதல் முறை. அகமார்க்கமாகிய அகத்தீ முறையில் உயிருடன் கலந்த இறைவனே என்றுமுள அங்கியாகிறன். திருவருளை முன்னிட்டுக் கொண்டு ஆரூர் இறைவனை நினைத்தால் அது தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்துத் தொடங்கும் அருள்நெறி அகமார்க்கமாகும். அந்நிலையில் உயிரோடு இணைந்து விளங்கும் கண்ணுதல் நந்தியெனும் பரம்பொருள், அன்பென நின்ற நிலையிலிருந்து அருளென மாறி நின்று பணிபுரிகிறன். ஆன்மாவின் அன்பு என்ற கண்ணை அருள் என்ற கண்ணாக மாற்றுகிறன். இதனை அருட்கண் விழிப்பித்தல் என்பார் திருமூலர். அருட்கண் விழிப்பிப்பதன் நோக்கம் களிம்பு அறுத்தலுக்காக. அதாவது ஆணவம் முதலாய மும்மலம் அழிவதற்காக. இம்முறையைப் "பளிங்கிற் பவளம் பதித்தல்" என்ற கலைச் சொல் தொடரால் குறிப்பர் திருமூலர். பளிங்கு ஆன்மா. இறைவன் தன்னை அருளின்ப மயமாக்கி அப்பளிங்கினுள் பதியும். அப்போது, ஆன்மாவின் பார்வையும் அருட்பார்வையாக மாறும்; களிம்பு அறுத்தநிலையால் களிம்பு அணுகாத கதிரொளி வெளிப்படும். இவ்வொளியானது வெளிப் படுவதைத்தான் அருளொளி என்றும் அருட்பொலிவு என்றும் அண்ணலார் அடியார் தமக்கு அமுதூட்டியபின் அவர்தம் உடம்பில் விளங்கும் பொலிவு என்றும் அதனை அனுபவித்தல் வேண்டும் என்பதைக் "கண்ணினல் அவர் நல்விழாப் பொலிவு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்டு ஆர்தல்" எ றும் ஞானசம்பந்தர் குறிப்பிடுவார். இந்நிலையில்,

"வேயின் எழுங்கனல் போலே இம் மெய்யெனும்
கோயில் இருந்து குடிகொண்ட கோன் நந்தி
தாயினும் மும்மலம் நீக்கித் தயா என்னும்
தோயமதாய் எழும் சூரியன் ஆமே"

என்ற திருமூலரின் 116ஆம் திருமந்திரம் கூறும் நிலை உண்டாகும்.

பின்னர் மதிமண்டலநிலை. இங்கே ஐம்முகச் சிவமென நின்று ஐம்புலன்களின் கட்டறுத்து அங்கே நலம் பதிவிக்கும் நிலை. இங்கே ஆனைக்கா அண்ணலை உன்னுதல் வேண்டும். இங்கே, பவளம் முத்தென ஒளிவிடும்.

மூன்றும் நிலை அக்கினி அண்டநிலை. திருமயேந்திரப்பள்ளி இறைவர் நினைவில் உறுவார். இது ஆன்மாவின் அறிவினில் இறைவன் குருவெனப் பதியும் நிலை. இங்கே இறைவன் மாணிக்கமெனத் தோற்றுவன். இங்கே, காண்பவனுடைய அறிவின் எல்லையையே தனக்குரிய எல்லையாகக் கொண்டு, அவனுக்கும், அவனல் பிறருக்கும், அருளொளியைப் பொழிவான். அப்போது அவன் செவ்வானின்செய்ய செழுஞ்சுடர் மாணிக்கமாக அமைவன்.

"எவ்வாறு காண்பான் அறிவு தனக்கு எல்லை
அவ்வாறு அருட்செய்வன் ஆதி அரன் தானும்
ஒவ்வாத மன்றுள் உமை காண ஆடிடும்
செவ்வானில் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கமே"

என்றார் 130ஆம் திருமந்திரத்தில் திருமூலர்.

ஆன்மாவின் அறிவினுள் குருவெனச் சென்று தம்மைக் கொண்டுபோய்ப் பதிவிக்கும் நிலையையே,

"விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேயினன்"

என்று, இணைத்துக் காட்டினர் திருஞானசம்பந்தர்.

இனிவரும் நான்காம் நிலையே திருக்கயிலாய இறைவனை நினைப் பிற்கொள்ள வேண்டுவது என்பதை உள்ளிட்டதாய் உணரப்பெறும் நந்தியை உள்ளிட்ட திருக்கயிலாய நன்னெறி. இதனல் உண்டாகும் நிலையை,

"மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றினில் ஆடும் திருக்கூத்தைப்
பேணித் தொழுது என்ன பேறு பெற்றாரே"

என்ற திருமந்திரத்துள் (131) விளக்கிக் கூறியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்நிலையில், மாணிக்கம் என நிற்கும் ஆன்மாவினுள் மரகத ஒளியானது பரந்திருக்கும். ஆன்மாவின் வெளியே உடலும் பிறவும் மரகத மாடமாய் ஒளிவீசும். மாற்றுக் குறையாத தங்கம் என எனநிற்கும் உயிரில் பெருமான் திருக்கூத்தியற்றுவன், இதனையே "அணுக்கராம்பேறு" என்று குறிப்பிட்டார், இத்தகைய நிலைபெற்ற பின்னரும், தாம் அப்பெருமானுக்கு அடிமை செய்ய வேண்டும் என எண்ணிச் செய்வதே வியப்புக்குரிய நிலை. அடிமை குலையாமல் இத்தகைய அருள்நிலையைப் பெறுதல். இவ்வாறு, சிவ கண நாதர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆணிப் பொன்மன்றும் திருக் கூத்தும். தில்லைத் தலத்தில் விளங்கும் மன்றும் திருக்கூத்தும் அவர்கள் அகத்தே அமைந்தமை போன்ற புறத்துநிலை. அதனு லேயே புறத்தே காணும் அம்பலமும் அருட்பெருங் கூத்தும், அந்தணர்களின் பொலிவால் அழகுபெறுகின்றன என்று குறிப் பிடுதல் மரபு. திருத்தில்லைத் தலத்தில் திகழும் பெருமான், அவன் தன் கூத்து ஆகியவைகளால் உலகத்துயிர்கள் நன்மைபெறும். அரு ளொளியைப் பெறும். ஆனால், தில்லைவாழந்தணர் தம் அகமார்க்கப் பெருந்தவத்தால் அழகு பெறவேண்டியவைகளே அத்தலத்து மன்ற மும் கூத்தனும்.

இத்தகைய அகத்தவநெறியை ஆரூரை முன்னிட்டுக்கொண்டு, ஆனைக்காவை உன்னி, திருமயேந்திரக் காட்சியை அமைத்தால் பின்னர்த் திருக்கயிலாயம் அமையும் என எளிய வழியில் அமைத் தார். எனவே, தில்லைவாழந்தணர்தம் நெறியானது ஆரூரை முன் னிட்டுக்கொண்டு தோற்றம்பெற்றுச் சென்று முடிந்த இடம். அதனு லேயே பெருமான் திருவாரூர்த் தேவாசிரிய மண்டபத்துப் புனிதர் பேரவையில் வந்து அடிமை கூறும்போது "தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று குறிப்பிட்டார்.

எனவே, ஆரூரிற் பிறத்தல் என்பது சைவமரபுத் தொன்னெறி. ஆரூரிற்பிறந்து தில்லையில் 'அணுக்கராம் பேறுபெறுதல்' முடிவுநிலை அமைக்கும் நெறி என்று கொள்ளுதல் வேண்டும்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும், மன்னும் நீதி தவழும் ஆரூராய், தேவாசிரிய மண்டபத்துப் புனிதர் பேரவையின் விதிமுறை தழுவிய விதை என்று தொடங்கி, ஆனைக்காவெனும் பொருளாக விளக்கம்பெற்று, திருமயேந்திரமாக அழகுபெற்றுத் திருக்கயிலாயம் என நிற்கும் தில்லையாய் அமைதல் அருள்நெறியிற் பிறத்தலாகக் கொள்ளவேண்டும். அதனுலேயே நம்பியாரூரர், "திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்" என்று கூறி னராகக் கொள்ளவேண்டும். இது உயிரின் அகத்தே நின்ற பரம் பொருள் விரிந்து, வெளிப்பட்டு, குருவென நின்று உணர்த்திய நிலை யில் தில்லைமன்றினுள் ஆடி, பின்னர்க் குருவாகவே ஆன்மாவில் சென்று தங்குகிறது. அப்போது ஆன்மா ஞானமேயாக விளங்கு கிறது. இந்நிலைகளை எளிய வழியில் அடையும் முறையை வெளிப் படுத்தலே கூடற் சதுக்கப் பதிகத்தின் உட்பொருள். இதுவே,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன்னை நன்ருகத் தமிழ்செய்தல் என்ற திருமூலரின் வாக்கின் நுண் பொருள். இது சகமார்க்கமாகிய பூசனையை அகமார்க்கமாக அமைத்த நெறி. புறத்தீ வேள்வியை நீக்கி அகத்தீ வேள்வியை அமைத்த முறை.

'அகத்தியம்' என்பது நெறி, அதனை நந்தியோகம் என்றும் நவயோகம் என்றும் கூறுவர் திருமூலர். நடுவுள அங்கியைப் பெருக வைக்கும் நிலை. அகத்தியர் 'நடுவுள அங்கி அகத்தியர்' எனப் பெற்ருர். அத்தகைய வளர்ச்சியால் உலகத்தில் எழுந்த தீமையை அழிக்கமுடிந்தது. அவைகளையே வீரட்டம் என்பார். இதனை,

" இருந்த மனத்தை இசைய இருத்திப்
பொருந்த இலிங்க வழியது போக்கித்
திருந்திய காமன் செயலழித் தங்கண்
அருந்தவ யோகம் கொறுக்கை அமர்ந்ததே"

என்ற 346 ஆம் திருமந்திரத்தால் உணரலாம்.

சதாசிவமாக நின்ற ஐம்முகங்களும் மலங்களைந்து, அவற்றைத் தமிழ் மண்டலங்களாக — இன்ப அனுபவத் தலங்களாக மாற்றி நிற்க, அவைகளைத் தாவி எழுந்த ஞானம் ஒன்று உண்டு. அதுவே அதோ முகம் மேல் நிலைப்பட்டுத் தரிசனமாதல். அதுவே திருநீல கண்டத் திருமுகம். அதைத் தன்னுள் தரிசனம் செய்தவரே 'அந்தணர்' ஆவர். இது ஐந்தினை ஒட்டி வந்தாலும், ஐந்தன் மேற்பட்ட ஒன்று ஆதலின், ஐந்தாகப் பிரிந்தும் விரிந்தும் நின்ற நிலைகளில் உள்ள ஒழுக்கம் முற்றும் நீத்து நின்றநிலை. இத்தகைய நிலையையே உலகியல் — ஐந்தெனப் பிரிந்து நின்ற உலகினில் வாழ முற்படும் ஐந்தியல் என்பதை நீத்து நின்ற ஆரும்நிலை. எனவே, அவர் களே ஒழுக்கத்து நீத்தார் எனப் பெற்ருர். அருளுருவாகப் பொலிபவர் அவரே. அந்தணர் அவரே அதோமுகமாய் நின்ற அடியைத் தன்னுள் கண்டு, தமிழாதல், இன்பமாதல் நிலை பெற்றவர். இதுவே, இலிங்க புராண நெறி. இந்நிலையில் தமிழ் மண்டலமைந்தும் வெட்ட வெளியாக நிற்க, பெருமானின் திருக்கூத்து நிகழும். இதனுலேயே, தில்லைவாழந்தணரைச் செம்மையால் தணிந்த சிந்தையினர் என்ருர். இதனை நெறி எனக் கொள்ள வேண்டுமாயின் குருவருளால் திருவருள் பெற்றுப் பொலிதற்கு அமையும் நெறி' என்க.

தில்லைத் தலத்தின் இரண்டாவது திருப்பதிகத்தின் திருக்கடைக் காப்பினுள் "ஊறும் இன் தமிழால் உயர்ந்தார்" என்று கூறியதன் நுட்பம் திருவருளுணர்வு கொண்டு, திருவருட்கண் விழிப்பித்து, நந்திநெறி என்று கண்டு, பின் அப்பரம்பொருளைத் தமிழாக்குதல் வேண்டும். இன்பமாக்குதல் வேண்டும்.

திருஞானசம்பந்தப் பெருந்தகை தாம் கண்ட சிவகணக் காட்சியை, தில்லைத் திருத்தலத்து இரண்டாம் பதிகத்து மூன்றும் பாட்டில் அமைத்தருளுகின்ருர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீலத்து ஆர் கரிய மிடற்றார் — திருநீலகண்டத்தர்; நல்ல நெற்றி மேல் உற்ற கண்ணினார் — திருவருட்கண் விழிப்பித்த நிலையில் அருட்காட்சியுடையார்; சூலத்தார் — ஞான வெற்றியெய்தியவர்; சடையார் அருள் வெள்ளத்தின் அமைந்த ஒழுக்கமுடையார். சீலத்தார் — மேலே அமைந்த அத்துணை நிலைகளையும் உள்ளடக்கிய ஒழுக்கமுடையவர்.

இனி, சடையார் சீலத்தார் எனக்கொண்டு, இறைவனின் கடையானது பன்முகப் படுதலின் பல்சடை; நெடுமையுடையதாதலின் நீள் சடை; பொன்மை நிறத்ததாதலின் பொன்சடை; பரப்பு எல்லையெல்லாம் கடந்து சென்றது ஆதலின் விரிசடை; நிமிர்ந்து உயர்ந்தது ஆதலின் நிமிர்சடை என ஐந்தாக்கி, சடையினுள் அமைத்த ஐவகை ஒழுக்கத்தினர் எனவும் கொள்ளலாம். அவை முறையே நஞ்சையும் அமுதமாக்கி, அம்மையின் திருக்கைகள் எனப் பெறும் அறத்தையும் வலிமையாக்கி நின்ற பன்முகத் தொழிலும் பாங்குறப் புனைந்த பன்சடையாம் தன்மை. அடுத்தது அருட்கண் விழித்து நின்று அனைவருக்கும் அருளைச் சென்று பொழியும் மூன்றாவது கண்ணின் நிலை. இதுவே ஐந்தெழுத்தாய் நின்று, இசையெனப் பரந்து, உயிர்களின் ஐம்புலக் காமத்தை அழித்து நின்ற நிலை. முப்புரம் அழித்த நிலையே நீள் சடை எனப் பெற்றது. பின்னர், உயிரானது ஞானமாய் நிலையே சூலத்தராம் நிலை. அதுவே பொன் சடையாயிற்று; இதுவே விகாரமாய்ப் புன் சடை என வழங்கப் பெறும். பரந்து சென்று சராசரங்களிலெல்லாம் சிவம் பெருக்குந் தன்மையே விரிசடைப் பண்பு. இதனையே 'சுடலைப் பொடி நீறணிவார்' என்று கூறினார். உயர்ந்தார் நிலை இதுவே. நீத்தார், பெரியார் என்பவர்களின் நிலையும் அந்தணர் என்பாரின் நிலையும் இதுவே, இதுவே உயர்ந்தநிலை எனப் பெறும். தான் மட்டும் அருளாளராக இருப்பது ஒரு வகை. தானும் அருளாளராக நின்று, பிற உயிர்களையும் அருளாளராக ஆக்கும் நிலையும் இவர்களுக்கு உண்டு ஆதலின் "உயர்ந்தார்" எனப் பெற்றார். இவர்களையே உலகம் நடுவு நில்லாது அழியும் காலத்து அதனை நடுவு நிறுத்தும் அகத்தியினர்; அகத்தியர் எனத் திருமந்திர நூலார் கூறுவர். அவர்களையே சிவகணத்தார் எனக் கண்டு, அவர்களின் அழகால் சிற்றம்பலம் அழகு பெறுகிறது என்று குறிப்பிட்டார் திருஞானசம்பந்தர். இதனை,

"தேரினார் மறுகில் திருவாரணி தில்லை தன்னுள்
சீரினால் வழிபாடு ஒழியாததோர்
செம்மையா லழகாய சிற்றம்பலம்
ஏரினால் அமர்ந்தாய் உன சீரடி ஏத்துதுமே"

என்ற, தில்லைப் பதிகத்து இரண்டாவதன் ஒன்பதாம் பாட்டினால் தெளியலாம். எனவே, அருட்கண்ணால் நோக்கும் நிலைபெற்றவரே. அந்தணர் ஆரூரில் தொடங்கிய தொண்டு, தில்லையில் திருத்தொண்டாக முடியும் தமிழ்நெறி, இதுவே. அனுபவநிலையில் தன்னுள் இருந்த இறைவனை ஆரூர்ச் சோதியான், ஆனைக்காச் சோதியான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயேந்திரச் சோதியான் என நினைந்து நினைந்து அணைந்து இன்புற்று இறுதியில் கயிலாயத்தானாக அணைந்து இன்புறும் தமிழ்நிலை. இவ்வாறு மூன்று பாசப்புரங்கள் மூன்று இன்ப உலகங்களாக, ஐந்து மலமண்டலங்களும் ஐந்து இன்ப மண்டலங்களாக அமைய, இவைகளைத் தாவிய ஒருமை ஞானமே இரண்டாய் நின்று சிவஞானமாகவும் சிவானந்தமாகவும் அனுபவப் பொருளாயிற்று. இத்தகு நிலையில் உள்ளூறு சோதியே அரியும்பிரமனும் காணாச் சோதி என்றார். இந்த அந்தணர் நிலையே ஆன்மாவின் உள்வந்து புகுந்த 'குரு'வின் நிலை.

நாலாவது என நின்ற "வெங்குரு" என்ற பெயரோடு இணைத்துக் காண வேண்டியது, வெம்மையால் வெந்த சிந்தையானது, செம்மையால் தணிந்த சிந்தையாகிறது. அது நாலாவதாக நின்ற நிலையைப் போல, ஆரூர், ஆனைக்கா, மயேந்திரம், கயிலாயம் என்ற நான்கு இலிங்கங்களை உள்ளுணர் சோதியாக நினைத்ததால் பெற்றநிலை என்று உணரும் வகையில் கூடற் சதுக்கப் பதிகத்தை உள்ளுறையாக்கி, உள்ளிருக்கும் பரம் பொருளே வெளிப்பட்டு வந்து அருட் கண்ணை விழிக்க வைத்து, பின்னர்க் குருவாய்ச் சென்று உயிரினுள் தங்குகிறது என்பதைத் தில்லைக் காட்சியாய் இணைத்துக் காணுமாறு செய்தார்.

மேலும் விரிக்கப் பெருகுமாதலின் விடுத்து, அந்தணர் நெறியையே திருக்கடைக் காப்பினுள் "ஊறும் இன் தமிழால் உயர்ந்தார் நெறி" என்று ஞானசம்பந்தப் பெருமான் அருளினர் என்று கொண்டு, அதுவே நந்தி நெறியாம் குரு நெறி என்றும், ஞான இன்பத் துய்ப்பு நெறியாதலின் 'தமிழ்' என நின்றது என்றும், அதுவே உயிரின் உள்ளே, தானே வந்து தன்னைப் பதிய வைத்துக் கொண்ட சிவ பரம்பொருளின் விரிவாய் அமைந்த நெறியாதலின், வெளியிடத்திலிருந்து வந்து பொருந்தும் இன்பம் என்று கொள்ளாமல் "ஊறும் இன் தமிழ்" என்றும் குறிப்பிட்டருளுவாராயினர்.

பாணரை வரவேற்கும் நிலையில் குருவாக நின்ற ஞானசம்பந்தர் தில்லையில் சிவகணத்துக் காட்சியைக்காட்டிய நிலையிலும் குருவானார். சிவஞான சம்பந்தர் திருஞானசம்பந்தராக ஆதல் தில்லையில் அமைந்தது. அது ஒரு வகையில் குருவருள் நிலை உணர்தற்கு ஏதுவாக நின்றது. அந்தணராம் பேற்றுக்குரிய அகத்தீ நெறியை எளிமையாக்கிக் கூடற் சதுக்கப் பதிகம் அருளியநிலையில் உலகத்துயிர்களுக்குங் குருவென நின்றார்.

கற்றாங்கு எரியோம்புதல்

"கற்றாங்கு எரியோம்பி" என்று தொடங்கும் பதிகத்தில் முதல் இரண்டு திருப்பாட்டுக்களில் எரியோம்பும் செயலும் பயனும் பேசப் பெறுகின்றன. எரியோம்பும் முறைகளாக, கற்றாங்கு எரியோம்புதல், பறப்பைப் படுத்து, பசு வேட்டு எரியோம்புதல் என்பன குறிப்பிடப் பெற்றுள்ளன. கலியை வாராமே செற்றார் என வேள்வியின் பயனை உள்ளடக்கிய நிலையில் தில்லைவாழந்தணர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருமை பேசப்பெறுகிறது. திருஞானசம்பந்தரால் குறிப்பிடப் பெறுவதும் தில்லைவாழந்தணர்களால் சம்பந்தர் காலத்தில் மேற் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெறுவதும் ஆகிய எரியோம்புதல் என்றால் என்ன என்பது வினா.

எரி வளர்த்தல் என்றும் எரி ஓம்புதல் என்றும் இருவகையான வேள்விமுறை பேசப் பெறுகின்றது. இருவகைகளிலும் மூன்று வகையான 'தீ' பேசப் பெறுகின்றது.

ஆகவனீயம், காருகபத்தியம், தாட்சிணாக்கினி என்ற மூவகை யான 'தீ' பேசப் பெறுகின்றது. வேள்விக்குரிய வேதிகை இடம் வட்டமாக, அறுகோணம், முக்கோணம் என்பனவாக அமைக்கும் முறையை வைத்து ஆகவனீயம் முதலிய பெயர்கள் அமைகின்றன. ஆனால் மூன்றிலும், நாமே நெருப்பைக் கொண்டு வந்து வைத்து வளர்க்க வேண்டும். இதனை "முத்திக்கொளுவிமுழங்கு எரி வேள்வி" என்ற 340ஆம் திருமந்திரப்பாடலால் அறியலாம். தமக்கு ஆற்றல் வேண்டும் என்பதைக் கருதியே தேவர்கள் பலரை முன் னிட்டுக் கொண்டு செய்வது. அத்தகைய தீ வளர்ப்பினால், வளர்த் தவர்கள் சத்தியைப் பெற்றார்கள். விளைவு என்ன என்றால் கொலை தான். இதனை,

" முத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியுள்
அத்திஉரி அரனுவ தாரும் அறிகிலார்
சத்தி கருதிய தாம்பல தேவரும்
அத்தீயி னுள்ளெழுந் தன்று கொலையே"

என்று திருமந்திரம் 340 கூறும்.

எரியோம்பும் முறை வேறானது. யாக குண்டத்தின் நடுவில், வைத்து உண்டாக்கிய தீயை வளர்த்தல் என்பது புறவேள்வி. அகத்தே உயிரின் நடுவே வந்து தங்கிய அங்கி ஒன்று உண்டு. அது வேள்வி செய்பவனால் கொண்டு வந்து வைத்ததன்று. வேள்வி செய்பவனை நாடி அவன் உயிரில் வந்து கலந்திருக்கும் தீ. இதனை ஆகுதி செய்தல் எனவும் வழங்குவர். பசுவிடத்துண்டாகிய நெய்யை இட்டுத் தீயை வளர்த்தல் என்பதை அடிப்படையாகக் கொண்டு 'ஆகுதி' என்ற சொல்லுக்கு விளக்கம் தருவார்கள். ஆனால், ஆகு + தீ என்பனவே ஆகுதி என வழங்கப் பெற்றுவிட்டது. பிறரால் ஆக்கப்பெறும் தீ அது அன்று. தானே ஆகும் தீ அது ஆதலின் ஆகு தீ எனப் பெற்றது. இதனைத் திருமூலர் 'அங்கி உதயம் செய்தல்' என்பார். உதயம் செய்கின்ற அங்கியை வளர்க்க வேண்டும். முன்ன மேயே வந்து அமைந்து உதயம் செய்து கொண்டிருக்கின்ற அங்கியை மேலும் வளருமாறு ஓம்புதல் வேண்டும்.

" அருக்கிய மூலத்துள் அங்கே இருக்கும்
அருக்கனும் சோமனும் ஆரழல் வீச
உருக்கி உரோமம் உயிர்விடும் தானே"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்றும், அச்சோதிதான்

"இயல் திகழ் சோதி இறைவன்"

என்றும் திருமந்திரம் 30, 31 பாடல்கள் அத்தகைய அங்கியின் இயல்பைப் பேசுகிறது. இவ்வாறு கூறிய திருமூலர், அக்கினிகாரியம் என்ற தலைப்பில், ஆகுதி கொடுத்து வேள்வி செய்கின்ற அந்தணர்கள் தாம் போகும் கதியை விரும்பி, புறத்தே உள்ள தீக்கு வேண்டியவற்றைக் கொடுத்து, பின் உண்ணுவர். உண்மையான ஆகுதி முறையானது 'மெய்ந்நெறி' எனப்பெறும். அதனை அவர்கள் தம் அறிவால் தலைப்பட வேண்டும் என்றார். இதனைத் திருமந்திரம் 214ஆம் பாடல் விளக்குகிறது. திருஞானசம்பந்தரும் "கற்றுங்கு எரியோம்பி" என்று கூறுகிறார்.

கற்றல் என்பது புறத்தே கல்வியின் மூலம் தெரிந்துகொள்ளுதல் என்று உரைசெய்தல் பொதுமை விளக்கம். குருவாக நின்றவனே கற்பிப்போன். குருவை அவன் திருவடி சேர்ந்து நிற்பவனே கற்பவன். அவன் அறிவிக்க அறிதலே, அறிவால் தலைப்படும் முறை. அதுவே மெய்ந்நெறி. குருவருளால் அறிதலே கற்றல். எனவே, வேதம் ஓதிய நிலையில் அறிதலும், நூல்களைப் படித்த முறையில் அறிதலும் வேறு. இது குருவினிடம் கற்றுங்கு எரியோம்பும் முறை.

அங்கி உதயம் வளர்க்கும் போது கற்கும் முறையை மிக நுட்பமாகச் சொல்கிறார் திருமூலர். கற்பிப்பவன் மேம்பால், கற்பவன் கீழ்ப்பால்; உபதேசம் பெறும்போது அவன் வடபால் இருந்து தெற்கு நோக்குவான்; கற்பவன் தென்பால் இருந்து வடக்கு நோக்குவான் இவ்வகையில், நாற்றிசையாலும் வளங்கொள் இலங்கொளி முறை இது என்று கூறுகிறார்.

அகத்தே உதயம் செய் அங்கியை, கற்றுங்கு ஓம்புதலால் வரும் பயன் என்ன ? நடுவுநில்லாது இவ்வுலகம் கெடுகின்றது என்ற நிலை வரும்போது அதனைச் சரிந்து கெட்டுப் போகாது காத்தலே. இதனை நடுவுநிலைமை என்றும் நடுநிற்றல் என்றும் விளக்குவர்.

உயிரென நின்ற தனக்கு நடுவே விளங்கிக் கொண்டிருக்கும் சோதி என்ற வகையில் முதன் முதலில் நடுவு நின்றவன் இறைவனே. பின்னர், ஓம்புதல் மூலம், தனக்கு உள்ளேயும், தனக்குப் புறத்தேயும் அவ்வொளி விளங்குகிறது. அந்நிலையில் உள்ளும் புறம்பும் அதே ஒளி விளங்க, நடுவில் உயிரானது ஞானமயமாய் நிற்றல். இந்நிலை அவனுடைய ஒளிநடுவில்தான் நிற்றல். இது முன்பும் விளக்கப் பெற்றது. இதனாற் பயன் உலக அழிவைக் காப்பாற்றமுடியும். இத்தகைய அங்கியோக முறையால்தான் எண்வகை வீரச்செயல் களையும்செய்து, உலகத்துக்கு வந்த இடையூற்றை நீக்கினன். அகத்தீ வேள்வி முறையே "கலியை வாராமே செறுதல்" என்ற ஞான சம்பந்தர் திருவாக்குக்குப் பொருந்துவதாக அமைகிறது.

மேலும் "பறைப்பைப் படுத்தல்" என்பது மாணிக்கவாசகர் கூறும் "பப்பற வீட்டிருந்துணரும் நின்னடியார்" என்ற வரியுடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இணைந்த பொருளுடையது. உயிரானது தன்னுடைய அறிவாற்றலைப் பரவி நிற்குமாறு செய்து அறிதல் உலகியல் முறை. பரவிநிற்கும் நிலையை அறுத்து, திருவடி ஞானத்துள் புகவைத்து, அடிப்படுத்த வேண்டும், அப்போது சிவஞான விளக்கம் உண்டாகும். இதனையே பறப்பைப்படுத்து'' என்றார் ஞானசம்பந்தர். பசுத்துவம் என்பது அறியாமை. இயல்பாகவே அறிவுடையதாயினும் அறியாமையாற் பசுவெனப்பட்டது உயிர். பசுத்துவத்தை அழித்தல் என்பதே பசு வேட்டல் என்பதாயிற்று. எனவே, திருமூலர் காட்டும் அகத்திய நெறியே, தில்லை அந்தணர் கொண்ட கற்றாங்கெரியோம்பும் நெறி யாக அமைந்திருந்தது.

இத்தலைப்பின் தொகைப்பொருள்

விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேயினன் என்ற ஏகபாதத் திருப்பாட்டுத் தொடரால் உணர்த்தப்பெறும் சைவநன்னெறியே குருவருள் கூட்டும் திருவருள் நெறி. இதனை அமைப்பதற்குரிய நிகழ்வுகளாக அமைபவை திருநீலகண்ட யாழ்ப்பாணர் தொடர்பும் திருத்தில்லைத் தலக்காட்சியும்.

திருநனிபள்ளித் தலயாத்திரையே சம்பந்தரின் முதல் யாத்திரை. அதன் முடிவுக்கும் திருத்தில்லைத் தலயாத்திரையாகிய இரண்டாவது யாத்திரைக்கும் இடைநின்ற காலத்தே அமைந்த வரலாற்று நிகழ்வே திருநீலகண்ட யாழ்ப்பாணரை வரவேற்றல். இந்நிகழ்ச்சியால் திரு வருளில் உறுதி வேண்டும் என்ற கொள்கை பிறந்தது.

இரண்டாம் யாத்திரையின் தொடக்கம் திருத்தில்லை. சம்பந்தப் பெருமான் புதுமை அனுபவம். 'அணுக்கராம் பேறு' கண்டு அதிசயிக்கும் நிலை. சிவகணநாதர் காட்சியில் சிவஞானசம்பந்தர் திருஞானசம்பந்தரானார். குருவருளின் பெருமை உணர்தல். திருத் தொண்டுத் திருநெறியே திருப்பதிகத் தமிழ்நெறி. இந்நெறியால் உயர்ந்த தில்லைவாழந்தணர்கள் ஊறும் இன் தமிழால் உயர்ந்தார் எனப்பெற்றார்கள். ஞானசம்பந்தரைப் போலவே பாணரும் பெரும்பாணர் ஆகிறார். திருப்பதிகத் தமிழ் நெறியானது மூன்றாகப் பிரிந்து மூன்று தலைவர்களால் ஏற்று நடத்தப்பெறும். ஞானசம்பந்தரோடு பாணரும் அப்பரடிகளும் இணைகிறார்கள். அந்தணர் மேற்கொண்ட நெறியானது அகத்திய நெறி. அதுவே ஆரூர், ஆனைக்கா, மயேந்திரம் தில்லை என்ற நான்காக அமைந்து, ஒரு தன்மை நெறியாக, ஆரூரிற் பிறந்து தில்லையை அடைதல் என்ற ஒரு மரபு நெறியாக மலர்ந்தது. இந்நெறியை விளக்க எழுந்த பதிகமே கூடற் சதுக்கப் பதிகம். கூடற் சதுக்கப் பதிகம் அருளிய வகையில் 'உலகத்துயிர்களுக்குக் குருவாம் நிலைபெற்று நின்ற பெருந் தகையானார் திருஞானசம்பந்தர்.

'குருவருள் நெறி' என்பதை அடிப்படையாகக் கொண்ட முதன் மைப் பொருளும் அதனை விளக்கும் வகையில் அமைந்த இணைப்புக் கருத்துக்களும் கொண்டதே இத்தலைப்பின் தொகைப்பொருள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. சுடர்மணி மாளிகைத் தோணிபுரத்தவன்

அருளாட்சியின் முதற்குரு

'இருமையின் ஒருமை' என்றும் 'ஒருமையின் பெருமை' என்றும் திருவெழுகூற்றிருக்கையில் திருஞானசம்பந்தரால் அமைத்துக் கூறப் பெற்ற இருவகை நெறிகளுள் ஒருமையின் பெருமை என்பதே திருநின்ற நெறி என்றும் அருள்நெறி என்றும் திருத்தொண்டு நெறி என்றும் வழங்கப் பெறும்.

இறைவனின் இயல் இசை என்ற இருதிறங்களை அறிந்து அவனுக்கு ஆட்படும் வகையில் மறைநெறி என்றும் பெருநெறி என்றும் இரண்டாய் அமையினும் அடிப்படையில் அது அன்பு நெறி எனப் பெறும் ஒரு நெறியே.

ஞானப்பாலருந்திய நிலையில் இருமையின் ஒருமை நெறியில் முழுமையை அடைந்த ஞானசம்பந்தர் தில்லைக் காட்சியின் மூலம் திருநின்றநெறி எனப் பெறும் திருநெறியில் இணைந்து நின்றவரானார். திருநின்றநெறி என்ற அருள் நெறியே 'தமிழ்செய்தல்' என்ற தொடரால் திருமூலரால் குறிக்கப் பெறுகிறது. திருஞானசம்பந்தரும் இந்நெறி வல்லாரை "ஊறும் இன் தமிழால் உயர்ந்தார்" என்று சிறப்பிக்கிறார்.

'தோணிபுரம்' ஐந்தாவதாக நின்ற பெயர். இதற்கு முன் நான்கு படிநிலைகள், நான்கு நன்னெறிக் கொள்கைகள் நிறுவப் பெற்றன என்பதைக் கொள்ள வேண்டும். பெம்மானாக நின்ற பரம்பொருள் நம்மை நோக்கி வந்து எம்மானாக ஆனான் என்பது முதலாவதான பிரமபுரத்துநெறி.

ஐம்புலன்களில் அமைந்த மலங்களை நீக்கி இன்பப் புலன்களாக அமைக்கும் நெறியில் ஐந்தெழுத்துடன் இணைந்த பொற்றாளம் பெறுகிறார் ஞானசம்பந்தர். ஒலியும் பொருளும் இணையும் நிலை. ஐந்தெழுத்தின் ஒலி முறையைத் தான்குழலென நின்று வெளிப் படுத்தியநிலை. இதுவே தண்ணீர் முத்தாதல் என்ற நெறி.

மூன்றாவது திருநீற்றுப் பெருமையும் தொண்டர் தம் பொலிவும் சைவநெறிக் கொள்கையாக அமைந்தன. அவை புகலிக் குரியன.

நான்காவது உயிரின் உள்நின்ற பரம் பொருளே வெளிவந்து குருவென நின்று உண்மையை உணர்த்தி, பின் உயிரினுள்ளேயே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்று தங்கி விடும் நிலை. இது வெங்குரு என்ற பெயரோடு இணைந்தது.

'சுடர்மணி மாளிகைத் தோணிபுரத்தவன்' என்பது ஞான சம்பந்தப் பெருமான் காழிப் பெயர்கள் பன்னிரண்டனுள் ஐந்தாவது பெயராகிய தோணிபுரம் என்பதை விளக்கும் முறையாகும்.

முதலில் தோணிபுரம் என்பதை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். திரு அவள் இவள் நல்லூர்த் திருப்பதிகத் திருக்கடைக் காப்பினுள், தோணிபுர நிகழ்ச்சியை நினைவு கூர்ந்து பாடுகின்றார் ஞானசம்பந்தர். உலகில் தம்முடைய மொழிகளைப் பொருள் பொதிந்த மொழிகளாக ஆக்கி உரைக்க வேண்டும் என்று பாடு பட்டு அவ்வாறே ஆக்கிய மொழிகளையும், ஆக்கிய திறமையையும் உடைய வல்லாளர்களாகிய மெய்ஞ்ஞானிகள் இந்த நாட்டில் உள்ளார்கள். ஆனால், யானோ, உணவு என அமுதேன்; கொடுக்கப் பெற்ற உணவை உண்டேன்; எனவே, என்னுடைய மொழியானது சாப்பாட்டிற்கென வெளிப்பட்டது; சாப்பாடாக உள் சென்ற ஒன்று வெளிப்படுத்திய மொழி; ஆனால், உணவின் அடிப்படையில் எழுந்த மொழியை உயர் மொழிகளாக ஆக்கிய பெருமை திருத் தோணிபுர ஊரனுக்கு உண்டு என்று, தம்மை முதன் முதல் ஆட்கொண்ட தோணியப்பரையும் அம்மையையும் உள்ளத்தே அமைத்து, திருவருளிருப்பின் சாப்பாட்டுப் பேச்சுக் கூட ஞானிகள் பேச்சைவிட உயர்ந்ததாக ஆகும் என்று எடுத்துக்காட்டுகிறார்.

உலகம் முழுவதும் கடலால் சூழப் பெற, சிவபரம்பொருள் பிரணவத்தைத் தோணியாக அமைத்துக் கொண்டு, அறுபத்து நான்கு கலைகளையும் ஆடையாகக் கொண்டு பிராட்டியாருடன் தங்கும் இடம் தேடிக்கொண்டு வரும் போது சீகாழியானது, கடலில் மூழ்காது மேற்பட்டு விளங்கித் தோன்றுவது கண்டு, அதனை இடமாகக் கொண்டார் என்பது திருத்தோணிபுர வரலாறு. திருஞான சம்பந்தர் குளக்கரையில் அழுது, உயரே பார்த்து அம்மே, அப்பா எனக் கூவி அழைப்பதற்கு உரிய முதற்பொருளாக நின்றவர் திருத் தோணிபுர நாதரே. சுருங்கக் கூறின், இத்தலம் தோணிக்குந் தோணியாக அமைந்த தலமாகும். பிரணவம் என்பது தோணி. அந்தத் தோணிக்கும் தங்குவதற்கு ஒரு இடம் வேண்டும் என்றநிலை உண்டான போது, அந்த இடமாகத் தன்னை அமைத்துக் கொண்ட பெருமை சீகாழிக்கு உண்டு. இவ்வேறுபாடு விளங்கவே ஞான சம்பந்தர் தம்மைத் 'தோணிபுரவூரன்' என்று சொல்லிக் கொண்டார். பிரணவத் தோணிக்கு உள்ளிருப்பவை மட்டுமே தோணிபுரம் என்ற சொல்லாற் குறிக்கப் பெறும். தோணிபுரத்தைத் தாங்கும் சீகாழியைத் ''தோணிபுரவூர்'' என்று குறிப்பிட்டார்.

மேலும், பிரணவம் நீர் மேல் மிதந்தவூர் ஆகும். ஆனால் சீகாழியை நீர் மேல் நின்ற மூதூர் என்று குறிப்பிட்டார். தொல் நீர் இல் தோணிபுரம் என்றார். பிரணவத் தோணிபுரத்துக்குப் பழமை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாய்ந்த பண்புகள் விளங்க இருக்கும் இல்லமாக அமைந்தவூர் காழி என்று பேசினூர். எல்லாவற்றுக்கும் மேலாக, 'ஓக்கம் உடைத் தோணிபுரம்' என்றூர். மேன்மேல் உயர்ந்து கொண்டேயிருக்கும் உயர்வு என்பதையே தன்னுடைய கொள்கையாகக் கொண்டு விளங்கும் தோணிபுரம் என்பது கருத்து.

தோணிபுரத்தைப் பிரணவத் தோணிபுரமாக அமைத்துக் கொண்டு, அதனைச் சுற்றிலும் சுடர் மணி மாளிகை சூழ்ந்திருக் கின்றது என்று குறிப்பிட்டார். எனவே, திருத்தொண்டர்கள் நடுவில் பிரணவ ஞான வடிவாக விளங்குபவன் இறைவன் என்ற கருத்தை ஒரு வகையில் தெரிவித்தாராகக் கொள்ளலாம்.

இனி, ஞானசம்பந்தப் பெருமான் வரலாற்றில் தோணிபுரத்து நிகழ்ச்சி எவ்வாறு அமைந்து சிறப்புறுகிறது என்பதையும் காண வேண்டும்.

பெரும்பாணர் பிறந்தபதி

திருத்தில்லை வழிபாடு முடிந்ததன்பின் யாத்திரையை முடிப்பதா அல்லது தொடருவதா என்ற நிலை தோன்றும் முன்னரே, பெரும் பாணர், தாம்பிறந்த பதிமுதலாக, நிவா நதிக்கரையில் அமைந்த தலங்களை வழிபடலாம் என்று கேட்டுக் கொள்ளவே, பிள்ளை யாரும் இசைகின்றூர். அவ்வளவில் திரு எருக்கத்தம்புலியூரை அடை கின்றூர். பெரும்பாணர் தாம் பிறந்த பதி இதுவே என்று கூற, ஐயர் நீர் அவதரித்திட அளவில் தவம் முன்பு செய்த இப்பதியின் சிறப் புத்தான் என்னே என்று வியந்து,, அத்திருத்தல வழிபாடு செய்து, பின் திருமுதுகுன்றம் வழிபட்டு, பின்னர்ப் பெண்ணுகடம் வந்துவழி பட்டார். அந்நிலையில், திருஅரத்துறை செல்லலாம் என்ற எண் ணம் தோன்ற, அதுவே செயல்பட்டது.

முத்துச்சிவிகை நிகழ்ச்சி

திருஅரத்துறையில் ஞானசம்பந்தப் பெருமானுக்கு முத்துச் சிவிகை இறையருளால் அளிக்கப் பெறுகிறது. வரலாற்றை அமைத்துத்தர வேண்டிய பொறுப்பில் நின்ற சேக்கிழார் அதற்குரிய சூழ்நிலையை உண்டாக்குகின்றூர்.

சிவபாத இருதயர் உடன் வருகிறூர். அவர் உடன்வருவதன் நோக்கம், குழந்தையாக இருக்கும் பிள்ளையார், சிலசமயம் நடந்தே நீண்டதூரம் செல்ல நேர்ந்து விட்டால் தூக்கிச் செல்லலாம் என்பது ஒன்று. உலகியல் வழியிலன்றி, அருளியல் வழியில் செல்லும் குழந்தையாக இருப்பதால், அவ்வப்போது எதிர்பாராதவகையில் நடைபெறும் அருளியல் நிகழ்வுகளை விளக்கமுறத் தெரிந்து கொள் ளும் நிலை இல்லையாயினும், ஏதோ நடைபெறுகிறது என்ற அளவிலா வது தெரிந்து கொள்ளலாமே என்ற தந்தைப்பாசம் இரண்டாவது. பெண்ணுகட வழிபாட்டை முடித்துக்கொண்டு, திரு அரத்துறைக்குப் போக நினைத்துப் புறப்பட்ட வுடனேயே சேக்கிழார்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"முந்தைநாள்கள் ஒரோ வொருகால் முது
தந்தையார் பியல் மேல் இருப்பார் தவிர்ந்து
அந்தணாளர் அவரருகே செலச்
சிந்தைசெய் விருப்போடு முன் சென்றனர்"

என்று (பெரியபுராண 2089ஆம் திருப்பாட்டு) கூறுகிறார். முன்பெல்லாம், வழிநடைச் சோர்வு வருமெனில், ஒவ்வொரு சமயம் தந்தையார் தோள்மேல் அமர்ந்து செல்வார், இப்போது அதனை முற்றாகத் தவிர்ந்தார். இது சேக்கிழார் அமைக்கும் சூழ்நிலை. சிறுகுழந்தையின் திருவடிகள் நடப்பதால் வருந்த அவ்வருத்தம் பொறுது அரத்துறை இறைவன் முத்துச்சிவிகையை அருளினான் என்று வரலாற்றை அழகுற அமைக்கும் பணி.

சம்பந்தர் தாம் முத்துச்சிவிகை பெற்றதாகத் தம் வாக்கினால் எங்கும் சொல்லவில்லை. ஆகையால், இந்நிகழ்ச்சி உண்மையானதா? இது முதல் வினா, சேக்கிழாருக்கு முன் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பிகள் கூறியது ஒரு முக்கியமான சான்றாக அமைகிறது. திரு அரத்துறைத் திருப்பதிகத்தில் தாம் முத்துச்சிவிகை பெற்ற நிகழ்ச்சியைக் குறிப்பாற் கூறுவதாகக் கொண்ட அறிஞர்கள் அந்நிகழ்ச்சி உண்மையானதே என்று நிறுவினார்கள்.

சேக்கிழார் உள்ளிட்ட அருளாளர்கள் நால்வரும் ஞானசம்பந்தப்பெருமான் முத்துச்சிவிகை பெற்றதை எடுத்துக் கூறிப் பாராட்டியுள்ளார்கள். இதனையொட்டி, சம்பந்தப்பெருமான் வரலாற்றிலும் சில நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

வடலூர் வள்ளல் இராமலிங்கசுவாமிகளைத்தவிர ஏனைய அருளாளர்கள் அனைவரும் சம்பந்தரின் வழிநடை வருத்தம், திருவடிகள் வருந்தும், யாத்திரை தொடர்ந்து நடைபெற வேண்டும் என்ற ஒன்றையே காரணமாக அமைத்தார்கள்.

சைவத் திருமடங்களில், அருளாட்சி ஏற்பு விழா நடைபெறுவதை இன்றுங் காணலாம். அப்போது சிவிகை இவர்ந்து பட்டினப் பிரவேசம் செய்தல் என்ற நிகழ்ச்சி உண்டு. ஞானசம்பந்தருக்கு முத்துச்சிவிகை தந்தது என்பது, அவர் அருளாட்சிப் பதவி ஏற்றார் என்பதை உணர்த்துவது. 'அருளரசு' என்ற ஆட்சிப் பீடத்தில் முதற்பீடமாக நின்று, அப்பரம்பரையின் முதற்குருவாகவும் அமைந்தவர் திருஞானசம்பந்தர் என்று எடுத்துக்காட்டி, அருளாட்சிப்பீடம் ஏறி, அருளரசு நடாத்திய அருட்குரு என்ற நிலையை இறைவன் ஞானசம்பந்தருக்கு அளித்தான் என்பதைக் காரணமாக அமைத்தார், வடலூர் வள்ளற் பெருந்தகை.

வரலாற்றில், பெண்ணாகடத்தை விட்டுப் புறப்பட்ட அன்று, நடந்தே சென்றார் ஞானசம்பந்தர். அடியவர் குழாமும் அன்புத்தந்தையும் உடன் சென்றனர். கொள்கையினால் ஒன்றிய ஒரு கூட்டத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தவர் இருவேறு வழிகளில் செல்கின்றுர்கள் என்று மிக நுட்பமாகக் குறிப்பிடுகிருர் சேக்கிழார்.

திருநெல்வாயில் அரத்துறையை அடையவேண்டும் என்பதே அனைவருக்கும் குறிக்கோள். ஒரேவழியில்தான் அனைவரும் செல்கின்றுர்கள். மேற்கொண்ட முறையால் ஞானசம்பந்தர் மட்டும் ஒரு வகை. ஏனைய அனைவரும் வேறு வகை. வகை வேறு பட்டதால் வருத்தம் நேரிடுகிறது.

திருஞானசம்பந்தருடன் அனைவரும் இணைந்தே சென்றுலும், திருஞானசம்பந்தர் மட்டுமே, ஏறும் அஞ்செழுத்தினை ஓதிக் கொண்டே சென்றுர். ஏனையோர் அனைவரும் வேறு செல்பவர் எனப்பெற்றுர். இந்நிலையில், வெய்யவன் மறையவே, அருகணைந்த மாறன் பாடி என்னும் பதியில் தங்குகின்றுர் ஞானசம்பந்தர் அடியவர்களுடன்.

"மாறன்பாடி எனும்பதி வந்துற
ஆறுசெல் வருத்தத்தின் அசைவினல்
வேறு செல்பவர் வெய்துறப் பிள்ளையார்
ஏறும் அஞ்செழுத் தோதி அங்கெய்திட"

என்பது சேக்கிழார் (பெரியபுராணம் 2094ஆம் பாட்டு) வாக்கு. ஆயினும்,

"ஆதியார் தம் அரத்துறை நோக்கியே
காதலால் அணைவார் கடிதேகிடத்
தாதையாரும் பரிவுறச் சம்பந்தர்
பாததாமரை நொந்தது பைப்பைய"

என்ற திருப்பாட்டினல், ஞானசம்பந்தரின் திருவடிகள் வருந்தின என்று கூறியிருப்பதை நோக்கி, சம்பந்தரும் வருந்தினர் என்பது சேக்கிழாருக்கும் உடன்பாடுதான் என்று கருதினர்கள் பலரும். ஞானசம்பந்தர், அரத்துறை அடிகள்மேல் ஆராத காதலினல் விரைந்து செல்கிருர், அவர் விரைந்த நடையைப் பார்க்கிற தந்தையின் உள்ளம் வருந்துகிறது. அது சிவபாத இருதயரின் உள்ளத்தையும் ஞானசம்பந்தரின் உடலையும் பற்றியதாக அமைத்து விடுகிருர். எனவே, கூட்டத்தார் அனைவரும் உடல் பற்றியே நடந்தார்கள். ஞானசம்பந்தப் பெருமான் ஐந்தெழுத்தையே பற்றி நடந்தார்.

உலகியல் வழிப்பயணத்தில் ஐந்தெழுத்தே புணையாக ஏறி நடப்பவர் வருந்தார்; வெற்றி யெய்துவர் என்ற கொள்கையை வலியுறுத்தினர் சேக்கிழார்.

பின்னர், சிவிகைக் கனவுகள். அரத்துறை அந்தணர்கள் எதிர் கொண்டழைக்கிருர்கள். அவரவர் தத்தம் கனவுகளில் இறைவன் கூறியதைக் கூறுகிருர்கள். அவைகளுள், ஞானசம்பந்தருக்குப் பெருமான் கூறியது கீழ்வருமாறு:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"... .... அரத்துறை
வள்ளலார் நாம் மகிழ்ந்தளிக்கும் அவை
கொள்ளலாகும் கொண்டுய்த்தல் செய்வாய்"

என்பது. இது, சேக்கிழார் திருவாக்கு. எனவே, முத்துச்சிவிகையை ஞானசம்பந்தர் கேட்டுக் கொடுக்கவில்லை; இறைவனே மகிழ்ந்து கொடுத்தது என்பதைச் சேக்கிழார் வலியுறுத்த எண்ணுவதால் இறைவன் கூறியகனவுரையை அமைக்கிறார். "கொள்ளலாகும்" என்பதனுல், சிவ பாத இருதயர் தோள் மேல் தூக்கி வந்ததை மறுத்து விட்டதுபோல, இதையும் மறுத்து விடக்கூடாது என்ற பொருளில் அமைத்துக் காட்டினர், சேக்கிழார்.

திருஞானசம்பந்தர் சிவிகையில் ஏறுதல் என்ற நிகழ்ச்சியை எப்படிச் செயற்படுத்தினர் என்பதைச் சேக்கிழார் திருவாக்கு விளக்குகின்றது.

முத்துச்சிவிகையை வலம் வந்தார். கீழே வீழ்ந்து வணங்கினர். எழுந்து வணங்கி, திருநீறு பூசிக்கொண்டார். "எந்தையார் அருள்" என்பது எண்ணம். திருவைந்தெழுத்தினை ஓதி ஏறினர். உலகம் உய்ய ஏறினர். இதுவே, செயற்பாட்டு முறை.

வடலூர் வள்ளற்பெருமான் சேக்கிழார் திருவாக்கில் மிகவூறி நின்றவர் ஆதலின், 'முத்துச்சிவிகை' என்பதைத் திருவருள் என்றே கொண்டார். அன்புறு நெறியில் வந்தபிள்ளையார், அன்புறு நெறியின் உயர் எல்லையில் நின்றுகொண்டு, அருளுறு நெறியைப் பெரிதும் மேற்கொண்டார். அன்புறு நெறியில் ஒரு சிறிது தொடர்பு இருந்தது. அதுவே, தந்தையார் தோளில் ஏறிவந்தமைக்குக் காரணம். இப்போது அதை முற்றும் துறந்து அருள்நெறியையே முற்றுக அடைந்தார் ஆதலின் முதற்படியின் தொடர்பை விடுத்து, அருள்நெறியிலேயே சென்று தங்கினர் என்பது குறிப்பு. அரத்துறைத் தலத்தை அடையும்போது, ஞானசம்பந்தப் பெருமானுக்கு நெறிமாற்றம் அமைகிறது. திருத்தில்லையில் பெற்ற குருவருள், செயற்பாடாய்ப் பரிணமித்தது திரு அரத்துறையில்.

வேறு ஒரு வினு உண்டு. வழிநடை வருத்தம் தீர்த்தல் என்பதே குறிக்கோளாயின், சிவிகை கொடுத்ததை அமைக்கலாம். குடையும், சின்னமும் அளிப்பானேன்? ஞானசம்பந்தருக்குச் சிவிகை அளித்துவிட்டதால் ஏனையோர் வழிநடை வருத்தம் என்னகும்?

மேலே குறிப்பிடப்பெற்ற வினுக்களை ஏனையோர் சிந்தித்திருக்கலாம். சிந்தித்தமைக்குச் சான்று இல்லை. வடலூர் வள்ளற் பெருமான், இதற்கு அளிக்கும் விளக்கமே வேறு.

'அருளாட்சியரசு' என்பதனுள் அருள்நிதியை ஞானசம்பந்தர் இனிமேல் தான் விரும்பியவாறே எந்த முறையிலும் வழங்கலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறைவன் அறத்தின் அடிப்படையில்தான் அருளைப்பொழிய வல்லவன். ஞானசம்பந்தர் இதற்குமுன் இருந்த நிலையில், இறைவனோடு தன்னை இணைத்துக்கொண்டு, அவர் கருதியவைகளை, அவர் உரைகளை, தம்முடையனவாக அமைத்துக் கொடுத்த அவ்வளவே. இப்போது, தாமே உயிர்களுக்கு அ;ருளை வழங்கும் நிலைபெறுகிறார். ஞானசம்பந்தர் நினைத்தால் இறைவன் நினைத்ததை மாற்றியும் வேறு ஒன்றைச் செய்ய முடியும் என்பதே. இதனை வள்ளற் பெருமான் தன்னுள் வைத்துக் காண்கிறார்.

"உலகியல் உணர்வுஓர் அணுத்துணை யேனும்
உற்றிலாச் சிறியவோர் பருவத் (து)
இலகிய எனக்குஉள் இருந்துஅருள் நெறியில்
ஏற்றவும் தரம் இலாமையின்நான்
விலகுறுங் காலத்து அடிக்கடி யேற
விடுத்துப் பின்விலகுறு தளித்தாய்
திலகநற் காழி ஞானசம்பந்தத்
தெள்ளமுதாம் சிவ குருவே"

என்று, ஆளுடைய பிள்ளையார் அருள்மாலையைத் தொடங்கும் போதே முதற்பாட்டில் குறிப்பிடுகிறார். முறைப்படி வந்தவனையே அருள் நெறியில் கொண்டுபோய் இணைப்பது இறைவன் செயல். முறைப்படி வாராதவனையும் கருணைகாரணமாக உயர்நிலையில் கொண்டுபோய் நிறுத்தும் ஆற்றல் திருத்தொண்டர்களுக்கு உண்டு என்பதே. இறைவன் திட்டமிட்டு அமைத்ததையும்கூட, திருத்தொண்டர் மாற்றி அமைக்கும் வல்லமை பெறுகிறார்கள் என்பதே. இதனைச் சேக்கிழாரும் ஓரிடத்தில் தனியாக நின்று சிந்திக்கின்றார்.

திருமறைக் காட்டில் கதவு திறக்கவும், பின்னர் அடைக்கவும் திறக்கவும் பாடி அவ்வருஞ்செயலை முடித்து அவர்களும் சென்றுவிட, சேக்கிழார் நின்று சிந்திக்கின்றார்.

"திருமறை நம்பர் தாம் முன்பு அருள் செய்த அதனைச் செப்பும்
ஒருமையில் நின்ற தொண்டர் தம்பிரானார் பால் ஒக்க
வரும் அருட் செய்கை தாமே வகுத்திட வல்லோரென்றால்
பெருமறையுடன் மெய்த்தொண்டர்க்கு இடையீடு பெரிதாமன்றே"

என்பது பெரியபுராண 2495ஆம் திருப்பாட்டாகும். எனவே, தம்பிரானார் பால் ஒத்தநிலையில் இணைந்துநிற்க, அவ்விணைப்பின் மூலம், அவன் செயல் தன்செயல் என நிறுத்தி, அவ்வளவில் நின்ற தொண்டர்கள் திருத்தொண்டர்களாக உயர்வு பெறும்போது, சில நிகழ்ச்சிகளைத் தாமேயும் வகுத்தளிக்க வல்லவர் ஆகிறார்கள். அத்தகைய மாற்றம் ஏற்படும்போது, இறைவன் அடியவர்கள் உரையைத் தன்னுரையாக ஏற்றுத் தானே செயற்படுகிறான் என்பதாம். இக்கருத்துக்கு ஒத்த வகையில், "சங்கமரு" என்று தொடங்கும் திருத்தோணிபுரத் திருப்பதிகத்தின்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"கொல்லைவிடை ஏறுடைய கோவணவன் நாவணவுமாலை
ஒல்லையுடையான் அடையலார் அரணம் ஒள்ளழல் விளைத்த
வில்லையுடையான் மிக விரும்புபதி, மேவி வளர் தொண்டர்
சொல்லை அடைவாக இடர் தீர்த்தருள் செய் தோணிபுரமாமே"

என்ற நாலாந் திருப்பாட்டில், தொண்டர்களின் சொல்லை அடிப்படையாக வைத்து, இடர்நீக்கி அருள்செய்கிறான் என்று குறிப்பிடுகிறார். இங்கே, தன் செயலைத் தன்தொண்டர் செய்யவேண்டும் என்பதில்லை. மேலும், தொண்டர் சொன்னது அறவழி இயைந்ததா அப்பாற்பட்டதா என்பதும் ஆய்வுக்குரியதன்று. தொண்டர் கூறிய எதையும் செயற்படுத்தி விடுவான் என்பதே.

திருத்தொண்டர் அனைவர்க்குமே இந்நிலை உரியதாயினும், இத் திருத்தொண்டு நெறிக்குத் தலைமையேற்று, குருவென நின்று, உலகத் துயிர்களுக்குத் திருவருள் நெறியைத் திருநெறியத் தமிழால் பரப்ப வந்தாராதலின், ஒரு குருவானவர் செல்லும்போது, அவருடைய குருவாந் தகுதிக்கேற்ற நிலையில் சிவிகை, குடை, சின்னம் முதலியன அளிக்கப் பெறுகின்றன என்பதாம். முத்துச்சிவிகையும் திருவருளும் ஒன்றே என்பது கருத்து. முத்துச் சிவிகையூர்ந்து சென்று, அரத் துறைத் திருக்கோயிலை அடைந்து இறைவனைப் பணிந்து பதிகம் பாடுகிறார்.

திருநெல்வாயில் அரத்துறைப் பதிகத் திருக்கடைக் காப்பினுள் அவர் தாம்பாடிய பதிகம் பற்றிய குறிப்பை எடுத்து மொழிகிறார்.

"அருளை முறைமையாற் சொன்ன பாடல்"

என்பதே, அப்பதிகத்தின் உட்பொருளாக அமைக்கப் பெற்றுள்ளது என அறியலாம்.

மறைநெறியும் பெருநெறியும் இணைந்த ஒருநெறியில் இறைவனைப் பெம்மான், எம்மான் என்று தொடங்கி, பெருமான் என்பது அவன் அரிய பண்பு எனவும், அவன் எம்மான் என நின்றது அவன் பெருமைப் பண்பு எனவும் அமைத்த ஏத்துதல் முறையை அருள்நெறியில் மாற்றிக் காட்டுகின்றார். இங்கே,

"எந்தை, ஈசன், எம்பெருமான், ஏறமர் கடவுள்"

என்ற முறையை அமைத்துக்காட்டி, இறைவனைத் தந்தை என்ற அக உறவு முறையில் தொடங்கி வாழ்த்துதலும் சிந்தித்தலும் செய்தாலே போதும், அந்த ஒன்றனாலேயே அருளை அடைந்து விடலாம் என்று குறிப்பிட்டார். இந்த முறையும் கூடற் சதுக்கப் பதிகத்தின் மூலம் உணர்த்திய நால்வகைத் தலங்களில் உள்ள இறைவனை நான்கு உறவுப் பெயர்களில் நினைத்து வழிபட வேண்டும் என்று கூறிய முறையும் இணைந்து நிற்பதைக் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"எந்தை ஈசன் எம்பெருமான் ஏறமர் கடவுள் என்றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமலர் உந்திக் கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல் வாயில் அரத்துறை அடிகள் தம்மருளே"

என்பது, திருவருளே என்ன நின்ற முத்துச் சிவிகையூர்ந்து சென்று அரத்துறையடிகளை வணங்கி, அருட்குருவாய் நின்றவர் அருளிய திருப்பதிகத்தின் முதல் அருளிப்பாடு.

அறமும் அருளும்

திருவருள் நெறிக்குத் தலைமை தாங்கி, திருவருளே என நின்ற சிவிகையூர்ந்து, உலகத்து உயிர்களுக்கெல்லாம் அருட்குருவாய், அருளரசு தாங்கி வரும் அருள் ஞானசம்பந்தர் அரத்துறைப் பெருமான் திருமுன் சென்று வணங்கி நிற்கின்றார்.

அறத்துறை என்பதே அரத்துறை என மருவி நின்றது. அருளரசுப் பீடம் ஏறிய ஞானசம்பந்தர் அறவழியில் தான் அருள் செயற்படும் என்பதை உணரவும் உணர்த்தவும் செய்கின்றார்.

அரசு கட்டில் ஏறியோர்க்கும் அருளரசுப் பீடத்தில் ஆட்சியுரிமை பெற்றோர்க்கும் குடை உண்டு. செல்வன் ஒருவன் சிவிகையில் செல்லலாம். ஆனால், அவனுக்குக் குடை இல்லை. ஞானசம்பந்தப் பெருமானுக்குக் குடையும் கொடுக்கப் பெறுகிறது. இதனை,

"ஏறுதற்குச் சிவிகை இடக்குடை
கூறி ஊதக் குலவு பொற்சின்னங்கள்
மாறில் முத்தின் படியினால் மன்னிய
நீறுவந்த நிமலர் அருளுவார்"

என்று, அழகுறக் கூறினார் (பெரியபுராணம் 2098) சேக்கிழார்.

குடையானது கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. கொள்கையும் அதன் செயற்பாட்டு முறையும் ஒத்து இயங்க வேண்டும். கொள்கையைச் செயற்படுத்துகிறவர்களுக்கு அக் கொள்கையைச் செயற்படுத்த முடியாத அளவில் ஏதேனும் இடையூறு வருமானால், அந்த இடையூற்றை அழித்து, அவர்கள் அக்கொள்கையைக் கடைப் பிடிப்பதற்கு உரிய பாதுகாப்பைத் தருவது என்ற அடிப்படையில் கொடுக்கப் பெறுவதே குடை.

சின்னம் என்பது கொள்கையின் உயிர்த்தன்மையை நிலை நாட்டுவது. இந்த ஒரு குறிப்பிட்ட ஒரு கொள்கையானது மக்கள் வாழ்வோடு இணைந்து, மக்களுக்கு வாழ்வில் உறுதியைக் கொடுத்து, இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்ற நிலையை விளக்குவதே சின்னம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'தண்ணீர் முத்தாதல்' என்பது போல அன்புறுநிலையும் அருளுறு நிலையும் ஒன்றோடு ஒன்று இணைந்ததே. அருள்நிலை என்பதே முத்தைப் போன்ற நிலை. அருள் என்ற நிலையினை இறைவனுக்கே உரியதாகக் கொள்ள வேண்டியதில்லை. தண்ணீரே முத்தாவது போல மக்களே — உயிர்களே அருளுறுநிலையை எய்தி, அருளரசு நடத்துகின்றனர். அவர்களே திருத்தொண்டர்கள். அருள்நிலை வாழ்வு என்பது மக்கள் வாழ்க்கையோடு இணைந்ததே. அருள் நெறியைக் கடைப்பிடிக்கும்போது இடையூறு இல்லாமல் காப்பாற்றி வழிநடத்துவதற்கு உரிய பாதுகாப்பு, தண்ணிழல் ஆகியவை இருக்கின்றன என்ற கருத்துக்களை விளக்கும் போக்கிலேயே முத்தினால் இயன்ற மூன்றும் கொடுக்கப் பெறுகின்றன. எனவே, சம்பந்தப் பெருமானின் வழி நடை வருத்தத்துக்காக அன்று, கொள்கை விளக்கமாகவே அவைகள் ஞானசம்பந்தப் பெருமானுக்குக் கொடுக்கப் பெறுகின்றன.

அருளாட்சி உரிமை பெற்ற ஞானசம்பந்தர் அறத்துறை அடிகளை எண்ணுகிறார். வழிநடை வருத்தந் தீர்ப்பது குறிக்கோளாயின் அது இதற்கு முன் வழிபாடு செய்த தலங்களுள் எந்த ஒன்றிலிருந்தும் தரப் பெற்றிருக்கலாம். அறத்துறை என்ற தலமே அருள் வழங்கும் நிலையுடையதாகிறது. இந்த இணைப்பை உடன்கொண்ட ஞான சம்பந்தர் அறத்தின் அடிப்படையிலேயே அருள் செயல்படும் என்ற கருத்தை முடித்துக் காட்டுகின்றார்.

அறத்துறை என்னும் தலத்திலிருந்து புறப்பட்டு, யாத்திரையைத் தொடர்ந்த அருளரசுக்குருவான திருஞானசம்பந்தர் சண்டேச நாயனார் திருத்தலமாகிய சேய்ஞலூர் செல்லுகிறார். அவ்வூரின் எல்லையிலேயே சிவிகையினின்றும் இறங்கி, தலைமேற் குவித்த கையினராய், திருக்கோயிலின் உள்சென்று வணங்குவார்,

> "நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு
> மாலடைந்த நால்வர் கேட்க நல்கிய நல்லறத்தை
> ஆலடைந்த நீழன் மேவி அருமறை சொன்னதென்ன
> சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே"

என்ற திருச்சேய்ஞலூர்த் திருப்பதிகத்து, முதற்பாட்டினை அருளுகின்றார். இப்பதிகத்தின் திருக்கடைக் காப்பினுள் தம்மைத் தோணிபுரத் தலைவன் என்று அமைத்துக் கொண்டு,

> "சாயடைந்த ஞானமல்கு சம்பந்தன் இன்னுரைகள்"

என்று தம் பதிகத்தை விளக்கம் செய்து காட்டுகிறார். 'சாய்' என்ற சொல் உள்ளதன் நுணுக்கம் என்ற பொருள் தரும். இதனை,

> 'ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
> ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்"

என்ற தொல்காப்பிய 813ஆம் நூற்பாவால் தெளியலாம். எனவே, இப் பதிகம் மிகமிக நுட்பத்தைக் கொண்ட ஞானத்தை அடிப்படை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாகக் கொண்டது என்று கூறுகிறார். அத்தகைய நுட்பமான ஞானம் என்ன? ஆலின் கீழ் இருந்து அறம் முதலிய நான்மறைகளை நல்கிய வன் அவன். அவன் நல்கிய நல்லறத்தை மேற்கொள்ளாதவர் அவனடி கூடுதல் இயலாது. எனவே, அருள் நிலை வாய்த்தல் இல்லை என்று கூறி, அறவழி ஒழுகியவர்களே அருளைப் பெற முடியும் என்று அறுதியிட்டுக் காட்டுவாராயினர். மேலும், இறைவன் திரு வுருவம் எது என்று கேட்பீர்களாயின் அது அறமே என்னும் பொருளில் கீழ்க்கண்ட திருவைகாவூர்த் திருத்தலத்து நாலாம் பாட்டு அமைகிறது.

"இன்னவுரு இன்னநிறம் என்றறிவதேல் அரிது நீதி பலவும்
தன்ன உருவாம் என மிகுத்த தவன் நீதியொடு தானமர் விடம்"

என்ற பகுதியில் அறமே அவன் வடிவம், நீதியே அவன் நிறம் என்று குறிப்பிடுவதைக் காணலாம். இவ்வகையால், அறத்துறை அடிகள் முத்துச்சிவிகை அளித்த இணைப்பை உடன் கொண்டு, அறம் சென்ற வழியில் அருள் செல்லும் என்று விளக்குவா ராயினர்.

இரண்டாவது யாத்திரை முடியும் நிலையில் காழிப்பதியை அடைந் தார் கவுணியக் குலபதியாம் ஞானசம்பந்தர்.

தோலொடு நூல் தாங்கல்

அருள்நெறியின் முதன்மைக் குருவாய் இறைவனால் அமர்த்தப் பெற்று அருளரசு ஆற்றிவரும் ஞானசம்பந்தருக்கு அகவை ஏழாக, தொல்லைமறை விதிச் சடங்கு மறையோர் செய்யத் "**தோலொடு நூல்தாங்கினர்**" என்பது சேக்கிழார் வாக்கு.

பூணூல் அணிதல் என்ற உபநயன நிகழ்ச்சிக்கு முன்பும் பின்பும் ஞானசம்பந்தப் பெருந்தகை சென்று வணங்கிய இடம் திருத்தோணி புரம் என்றார் சேக்கிழார். திருத்தோணிபுரத்தில் தோணியாக இருப் பது பிரணவம் ஆகையால், இருபிறப்பின் நிலைமையைச் சடங்கு களின் மூலம் அமைத்துக் கொடுக்கும் மறை முனிவர்கள்,

"வருதிறத்தின் மறைநான்கும் தந்தோம்"

என்று கூறி, மந்திரங்கள் முதலியவைகளை, ஞானசம்பந்தப் பெரு மானுக்கு உபதேசம் செய்தார்கள். அமைதியாக எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்ட பிள்ளையார்.

வேதங்களையும், வேதங்களை உணர்வதற்குரிய அங்கங்களையும் தமக்கு மந்திரமொழியைத் தந்த மறையவர்களுக்கே எடுத்து விளக் கினர். அவர்கள் பிள்ளையாரைத் தம் கண்முன்னே வரு தியானப் பொருள் என்றே கருதி வணங்கினர்கள். பின்னர், அவர்கள் தங்க ளுக்கிருந்த ஐயங்கள் எல்லாவற்றையும் கேட்டார்கள், பிள்ளையாரும் விளக்கியருளினர். இறுதியில், ஞானசம்பந்தர் ஒரு முக்கியமான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருத்தை அவர்களுக்கு விளக்கிக் கூறிவிட்டு, 'துஞ்சலும்' என்று தொடங்கும் பஞ்சாக்கரத் திருப்பதிகம் பாடுகிருர்.

முற்படச் சொன்ன எல்லா மந்திரங்களும் தோன்றுவதற்குரிய மூலமாய முதல் மந்திரம் முதல்வனரின் ஐந்தெழுத்து என்று கூறினர். திருஞானசம்பந்தர் திருவைந்தெழுத்தைப் பற்றி இரண்டு பதிகங்கள் அருளுகின்ருர்.

"துஞ்சலும்" என்று தொடங்கும் பதிகமே முதன்முதல் பாடப் பெற்றது. இது தோலோடு நூல் தாங்கிய நிகழ்ச்சியில் கூடியிருந்த நான்மறையாளர்களுக்கு உணர்த்தும் முறையில் அருளப்பெற்றது. மற்றைத் திருப்பதிகம் "காதலாகி" என்று தொடங்கும் நமச்சி வாயத் திருப்பதிகம். இது திருமணத்துக்கு வந்தவர்கள் எல்லாரும் சோதியுட் கலந்து வீட்டின்பம் பெறுதற்காக அருளப்பெற்றது. இரண்டாவது பாடிய பதிகத்தில் 'நமச்சிவாயம்' என்பது நாதனின் நாமம் என்று விளக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டது.

திருவைந்தெழுத்தினைப் பற்றிய இரண்டு பதிகங்களையும் முறையே உணரும் பதிகம் என்றும் ஓதும் பதிகம் என்றும் அமைத் துக் கூறுவது மரபு.

நான்மறைகளில் வல்லவர்கள் ஞானசம்பந்தப் பெருமானுக்கு, வருதிறத்தின் மறை நான்கும் தந்தோம் என்று கூற, நான்கு கொடுத்த உங்களுக்கு நான் கொடுப்பது ஐந்து என்று கூறித் திருவைந் தெழுத் தினை, அதன் பெருமையை அருளினர். இப்பதிகத்துள் வரும்,

"அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே"

என்ற இரண்டாம் பாட்டின் இறுதி வரியானது சைவஉலகில் மிகவும் பயிலப்பெறும் தொடர். அந்தியுள் மந்திரம் என்பதற்கு "மாலைக் காலத்தில் ஓதத் தகுவது" என்று பொருள் கொண்டுள்ளனர்.

உணரும் பதிகப் பொருள்

ஞானசம்பந்தப் பெருமான் அருளிய பஞ்சாக்கரப் பதிகம், நமசி வாயப் பதிகம் என்ற இரண்டனுள், முதல்நின்ற பஞ்சாக்கரப் பதிகமே உணரும் பதிகம் எனப் பெறும்.

உணரும் பதிகம் என்பது திருவைந்தெழுத்தை உணருதல் பற்றிய விளக்கம் தருவதாக அமைந்த பதிகம். இனி, உணரும் முறையும் இரண்டு; கழிய உணரும் முறை; உற்று உணரும் முறை. அவ்விரண்டு முறையையும் கொண்டு ஐந்தெழுத்தை விளக்குவதே இப்பதிகம்.

சூரியனைக் காட்டு என்று கேட்ட ஒருவனுக்கு, இருட்டைக் காட்டி, இருட்டில் மின்மினியைக் காட்டி, இருட்டில் சிறுவிளக்கைக் காட்டி, பின்னர், ஒளிமிகுந்து செல்லும் விளக்குகளைப் படிப்படியே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காட்டிச்சென்று, அவ்வாறு காட்டிக்கொண்டு போகும்போதெல்லாம் இருட்டு என்பது மெல்ல மெல்லக் குறைந்து வருகிறது பார் என்பதையும் காட்டி, ஒளிமிகுதல் இருள்குறைதல் என்ற இரண்டையும் இணைத்துக்காட்டி, இறுதியில் இருட்டை முழுமையாக இல்லாமற் செய்யும் ஒளிதான் சூரியன் என்று சொல்லி முடித்து விடுதல். இம் முறையில் மின்மினி ஒளியுடையதுதான் என்றாலும் சூரியன் அன்று; கொள்ளிக்கட்டை மின்மினியைவிட அதிக ஒளி உடையது எனினும் சூரியன் அன்று என இவ்வாறு நீக்கிக் கொண்டே சென்று, இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது சூரியன் என நிறுத்திவிடுதல்.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

எனவரும் திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு, சில ஆய்வு முறைகளை மேற்கொள்வது இயற்கை. அவ்வகையில், பொய்ப் பொருளிலிருந்து நீக்கி மெய்ப்பொருளை அறியும் முறை. எடுத்துக் காட்டாக, காரணம் காரியம் என்ற இரண்டனுள், காரியம் என்பது ஒன்றிலிருந்து வெளிவந்தது என்றும், எதிலிருந்து வெளிவந்ததோ அதில்சென்று ஒடுங்கிவிடுகிறது என்றும் ஓர் இலக்கணம் அமைத்துக் கொண்டு, எது எதில் ஒடுங்குகிறது, என இவ்வாறு ஒன்றை ஒன்றில் ஒடுக்கிக் கொண்டே சென்றால், இறுதியில் ஏதாவது ஒன்று எதனுள்ளும் ஒடுங்காத நிலையில் நிற்கும். எனவே, தான் வேறு ஒன்றில் ஒடுங்காததாய், மற்றவற்றைத் தன்னுள் ஒடுக்கிக் கொள்வதாய் அமைந்த பொருள் ஒன்று உண்டு என நாம் முடிவுக்கு வந்தால், எதிலும் ஒடுங்காமல் இருக்கும்பொருளே காரணப்பொருள் என்று கொள்வது ஒருவகை ஆய்வு. மற்றவைகள் எல்லாம் ஒன்றின் ஒன்றாக ஒடுங்கிவந்து, இறுதியில். வேறு எதிலும் ஒடுங்காது நிற்கும் பொருளை 'அந்தம்' என்று சொல்லவேண்டும். ஒன்றில் ஒன்று ஒடுங்குதல் என்ற முறையில் அமைத்துச் சென்றால், எந்த ஒருபொருள் வேறு எதிலும் ஒடுங்காத பொருளாக இருக்கிறதோ அதுவே அந்தம். இந்நிலையில் ஞானசம்பந்தப்பெருமான் மறைவல்லவர்களுக்கு, மந்திரங்கள் ஒன்றில் ஒன்று ஒடுங்கும் முறையைக் கூறிச் சென்று, இறுதியில் எல்லாமந்திரங்களும் வந்து இங்கே ஒடுங்கிவிடுகின்றன. ஆனால், இந்த மந்திரமே எல்லா மந்திரங்களுக்கும் அந்தமாக நின்ற மந்திரம் என்று பொருள் படும்வகையில் "**அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே**" என்றார். இத்தொடருக்கு, அந்திக் காலத்தில் செபிப்பதற்குரியது என்றும், ஒருயாமத்தின் முடிவும் அடுத்த யாமத்தின் தொடக்கமும் ஆக இருக்கும் சந்திக்காலத்தில் செபித்தற்குரியது என்றும் உரை கண்டுள்ளார்கள். சம்பந்தப்பெருமான் திருவைந்தெழுத்தை நினைத்தற்கு ஒரு குறிப்பிட்ட காலத்தை மட்டுமே உரிமையாக்கவில்லை. "துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்" என்றே தொடங்குகின்றார். எல்லா மந்திரங்களும் ஒடுங்குவதற்கு இடமாய், தான் ஒடுங்குவதற்கென வேறு ஒன்று இல்லாததாய் நின்ற மந்திரம் ஐந்தெழுத்து என்னும் பொருள் தரும் முறையில், "அந்தியுள் நின்றது ஐந்தெழுத்துமே" என்று குறிப்பிட்டருளினார். இவ்வாறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உணரும் முறையே கழிய உணரும் முறை. இது இதனுள் ஒடுங்கும் ஆதலின் இது மூலம் அன்று என இவ்வாறு ஒவ்வொன்ருகக் கழித்துக் கொண்டே சென்று, இறுதியில், ஒடுங்காதிருக்கும் தன்மையை உடைய ஒன்றை, அந்தம் இல்லது அந்தியுள் நின்றமந்திரம் என உணர்தல். இதுவே கழிய உணரும் முறை.

'உண்மை விளக்கம்' என்ற சாத்திர நூலின் ஆசிரியர் திருவதிகை மனவாசகம் கடந்தார். 'உண்மை விளக்கம்' என்று பெயர் வைத்த பின், ஒரு விளக்கம் செய்கிருர். உண்மையை விளக்க முற்படும் போது, பொய் இது, பொய் இது என்று பொய்யையே விளக்கிக் கொண்டு சென்று, இறுதியில், பொய்யெல்லாம் நீங்க நின்றது உண்மை என்று விளக்குவது உண்டு. அதுவும் உண்மையைப் பற்றிய விளக்கம் தான். பொய் காட்டி, பொய் அகற்றி, பின்னர் எஞ்சி நிற்பதை உண்மை என ஒப்புதல். ஆனல், பொய்காட்டா உண்மை விளக்கம் என்பதும் ஒன்று உண்டு அதைக் கூற வேண்டும் என்று தம் குருவிடம் கேட்கிருர்.

மெய்கண்டாரைக் குருவெனக் கொண்ட இவர், பொய் காட்டிப் பொய்யகற்றிப் போதானந்தப் பொருளாம் மெய் காட்டும் மெய் கண்டாய் என்று ஒழிய உணரும் முறையைக் கூறி, பின்னர், 'பொய் காட்டா மெய்யா'' என்று தம் குருவை அழைக்கிருர். பிறகு சொல்வது தான் சிந்திப்பதற்குரியது. யான் வினவ முற்படுவது ''சுத்தவினு'' என்று கூறி, விடையும் சுத்தமாக அமைய வேண்டும் என்கிருர். பொய்யை அறிதல், பின்னர் நீக்குதல் இல்லாமல் உண்மையில் நேரே சென்று பொருந்தி அறியும் நிலை பெறுதல் வேண்டும். உண்மையையே நேர் நின்று அறிதல். இதுவே, உற்றறியும் முறை. பெரியபுராணத்தில் சில அடியார்களுக்கு இறைவன் நேர்க் காட்சி கொடுத்தான், எதிர்க் காட்சி கொடுத்தருள எனவும், நேர் நின்று கும்பிட்டார், நேர்ந்தார் எனவும் வருவன இக்கருத்தை விளக்குவன.

பஞ்சாக்கரத் திருப்பதிகத்தின் திருக்கடைக் காப்பினுள் திருஞான சம்பந்தர், இப்பதிகம் ஈரைந்து என்று சொன்னுர். எனவே, தாம் சொல்லக் கருதிய செய்திகளை இரண்டு பிரிவாகச் சொல்லியிருக்கிருர் என்று கருதுதல் வேண்டும். இரண்டு பிரிவாகச் சொன்னமைக்குக் காரணம், தாமும் 'காழி' என்ற பத்தாம் நிலையாகிய அந்தத்தில் நின்று சொன்னுலும், தம்மையே இரண்டு பிரிவாக அமைத்துக் கொள்ளுகின்ருர். நற்றமிழ் ஞானசம்பந்தன்; நான்மறை கற்றவன். இதற்கு மேல், சொன்ன முறை இரண்டு என்றும் குறிப்பிட்டார். அற்றம் இல் மாலை — (இது கழிய உணரும் முறை); அஞ்செழுத்து உற்றன (உற்று உணரும் முறை) என இரு முறைகளாற் கூறியதாகக் குறிப்பிடுகிருர்.

அஞ்செழுத்தை உணரும்முறைப் பதிகமாக அமைத்த சுவாமிகள் நான்மறையாளர்கள் வினவிய முறையில் அந்தியுள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மந்திரம் என்றும், அஞ்செழுத்தை நேர் நின்றே அறிந்து உய்யலாம் என்ற வகையில், அங்கையில் ஐவிரல் அஞ்செழுத்துமே என்றும், நேரே அதனைத் தொட்டுக் காட்டும் முறையிலும் விளக்கியுள் ளார்கள்.

ஐந்தெழுத்து எது?

'அஞ்செழுத்துமே' என்ற சொல்லானது அப்பதிகப் பாட்டுத் தோறும் பயின்று வருகின்றது என்பது உண்மை. ஐந்தெழுத்தில் பல பிரிவுகள் உள்ளன. ஆகையால் ஞானசம்பந்தர் குறிப்பிடும் ஐந்தெழுத்து என்பது எது? இனி, ஐந்தெழுத்தினை இறைவன் நாமம் எனக் கொள்வது ஒருவகைப் பொதுமை விளக்கம். இக் கருத்தை ஞானசம்பந்தர் 'காதலாகி' என்று தொடங்கும் நமச்சிவாயப் பதிகத்தில் அமைக்கின்றார். இங்கே 'நமசிவய' என்ற ஐந்தெழுத்தை மந்திரமாகக் கொள்ளும் போது தூலம், சூக்குமம், காரணம், முத்தி என்றிவ்வாறான பிரிவுகளை அமைத்து வேறுபடுத்திக் காண்பதும் காட்டுவதும் உண்டு.

இருக்கு முதலாய நான்கு வேதங்களுக்கும் உட்பொருளாக அமைந்தது திருவைந்தெழுத்து என்று கூறி விளக்குவது ஒருவகை. அவ்விளக்கம் நான்கு வேதங்களினுடைய உட்பொருளாயமைந்த நான்கு மகாவாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டது.

இருக்கு வேதத்தில், ஐதரேய உபநிடதத்தில், 'பிரக் ஞானம் பிரமம்' என்ற மகாவாக்கியம் காணப் பெறுகிறது.

யசுர் வேதத்தில், பிருகத் ஆரண்யக உபநிடதத்தில், 'அகம் பிரஹ்மாஸ்மி' என்னும் மகாவாக்கியம் காணப் பெறுகிறது.

சாம வேதத்தில், சாந்தோக்ய உபநிடதத்தில் 'தத்வமஸி' என்ற மகா வாக்கியம் காணப் பெறுகிறது,

அதர்வ வேதத்தில், 'அயம் ஆத்மா பிரஹ்மம்' என்ற மகா வாக்கியம் காணப் பெறுகிறது.

மேலே குறிப்பிடப் பெற்ற நான்கும் காரண வாக்கியங்கள் என்றும் பேசப் பெறும். இவை நான்கும் பொருள்கள் நின்ற நிலையை விளக்க வந்தவைகள் எனக் கொண்டு விளக்கம் அமைக்கப் பெறுகின்றன.

மூவகை விளக்கம்

திருஞானசம்பந்தரால் 'அஞ்செழுத்து' என்று குறிக்கப் பெற்றது எது என்பதை அறிவதற்குத் துணைசெய்யும் வகையில் 'நமசிவய' என்ற ஐந்தெழுத்தின் விளக்கங்களை அமைத்துக் கொள்ளலாம்.

1. 'நமசிவய' என்பது இறைவனின் பெயர் எனக் கொள்வது ஒரு விளக்கம். ''நாதன் நாமம் நமசிவாயவே'' என்பது ஞான சம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பந்தர் திருவாக்கு. தம்மைச் சமணர்கள் செய்த கொடுமைகளி லிருந்து தப்பித்த முறையைக் கூறப்புகும் அப்பரடிகள் "நாதன் நாமம் நவிற்றி உய்ந்தேனன்றே" என்று கூறினர். இனி, அப் பரடிகளின் பெயராகிய 'திருநாவுக்கரசு' என்பது 'அடியவர் ஐந் தெழுத்து', எனப்பெறும். 'திரு' என்பது 'நுண்மை அடியவர் ஐந் தெழுத்து'; திருநாவுக்கரசு என்பதில் ஒற்று நீங்க உள்ள ஐந்தும் பரிய அடியவர் ஐந்தெழுத்து எனப்பெறும். இதனை ஓதுவது என்ற ஒன்றை மட்டுமே கொண்டு முத்தி பெற்றவர் அப்பூதி அடிகள்.

"உற்றான் அலன் தவம் தீயில் நின்றான் அலன் ஊண் புனலா
அற்றான் அலன் நுகர்வும் திருநாவுக்கரசெனும் ஓர்
சொற்றான் எழுதியும் கூறியுமே துன்பில் பதம்
பெற்றான் ஒரு நம்பி அப்பூதி என்னும் பெருந்தகையே"

என்பது *நால்வர் நான்மணி மாலை*யின் செய்யுள்.

'நமசிவய' என்பதற்குச் சிவனுக்கு வணக்கம் ("நம சிவாய") என விளக்கம் செய்யப் பெற்றது. இதனை முன்னதன் வளர்ச்சிப் படிநிலை எனக் கொள்ளலாம்.

2. **பொருள் நின்றநிலை.** பரம்பொருளும் உயிரும் நின்ற நிலையை விளக்கும் வகையில் 'நமசிவய' என்ற ஐந்தெழுத்துக்கு உரை காண்பர். இதனை இரண்டு வகையில் அமைக்கலாம்.

(அ) **உபநிடத அமைப்பு விளக்கம்.** உயிரும் சிவமும் நின்ற நிலை என்பதாக, நம, சிவ, ஆய எனவும் சிவ, நம, ஆய எனவும் பிரித்தும் இணைத்தும் விளக்குதல். நமப்பதம் உயிரையும், சிவப் பதம் சிவத்தையும் ஆய என்பது இரண்டும் நின்றநிலையையும் குறிப் பதாகக் கொள்வது. இவை முறையே தத்வமசி, அகம் பிரம்மாஸ்மி என்ற இரு மகாவாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு அமைத்த விளக்கம்.

அகம்	பிரஹ்ம	அஸ்மி
நம	சிவ	ஆய

எனவும்,

தத்	துவம்	அசி
சிவ	நம	ஆய

எனவும் கொள்வர். மேலும், நமப்பதம் தன்முயற்சியால் சிவமாக ஆன நிலை என்றும், சிவப்பதத்தால் முயன்று முன்னேற்றம் செய்யப் பெற்ற நமப் பதத்தின் நிலை என்றும் மேல்விரிவு விளக்கம் அமைக் கப் பெற்றது. பின்னுள்ள விளக்கம் மாணிக்கவாசகரை ஆட் கொண்ட விளக்கம் என்று கூறி,

" நானேயோ தவம் செய்தேன்
சிவாய நமஎனப் பெற்றேன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேனாய் இன்னமுதமுமாய்த்
தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனதுள்ளம்
புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர் வாழ்க்கை
ஒறுத்தன்றே வெறுத்திடவே"

என்ற திருவாசகத் திருவேசறவுப் பத்தாம் பாட்டினைக் காட்டுவர்.

அடுத்தநிலையில், 'அசி' என்பதற்கு அங்கம் என்று நின்ற உயிரை 'அ' எனவும் அதனிடத்தே தங்கிய 'சி' என்பது சிவம் எனவும் கொண்டு, தத்வமசி என்றும் தொந்தத்தசி என்றும் இருநிலைகளில் அவைகள் நின்றன என அமைத்துக்கொண்டு, தொந்தத்தசி என்பதே நமசிவய என்பதாகவும், தத்வமசி என்பதே 'சிவயநம' என்பதாகவும் விளக்கம் செய்தார் சுத்தசாதகத்தார்.

பரம்பொருளே வலியவந்து உயிரை ஆட்கொண்டது என்ற கருத்தைத் திருஞானசம்பந்தரும் திருவைந்தெழுத்து மூலமாக விளக்கியுள்ளார். 'நல்லானை' என்று தொடங்கும் காழிப்பதிகத்து இரண்டாந் திருப்பாட்டில்,

"நம்மான மாற்றி நமக்கு அருளாய் நின்ற
பெம்மான்"

என்பதற்கு ந, ம, ஆன மாற்றி நமக்கு அருளாய் நின்ற பெம்மான் என்பது 'சிவயவசி' எனநின்ற ஐந்தெழுத்து நிலையை உடன் கொண்டது.

(ஆ) மெய்கண்ட சாத்திர முறை

நமசிவய என்ற ஐந்தும் ஐந்து பொருள்களைக் குறிக்கும் ஐந்து தனிச் சொற்கள் என்று கொண்டு முப்பொருள்களும் ஐந்தாய் விரிந்து நின்றன என்று கொண்ட விளக்கத்தை மெய்கண்ட சாத்திரம் ஏற்றது.

ந, ம என்ற இரண்டும் முறையே திரோதானம், மலம் என்ற இரண்டையும் குறிக்கும். சி,வ என்ற இரண்டும் சிவனையும் அருளையும் குறிக்கும். 'ய' என்பது உயிரைக் குறிக்கும்.

1. நமசிவய—மலம் சிவம் உயிர் என நின்றநிலை.

2. சிவயநம—சிவம் உயிர் மலம் என நின்றநிலை.

ஐந்தெழுத்தை ஓத வேண்டிய முறை இரண்டாவதே என்று வரையறுத்துக் கூறியது உண்மை விளக்கம்.

"ந முதலா ஓதில் அருள் நாடாது; நாடும் அருள்
சி முதலா ஓதுக நீ சென்று"

என்பது 41ஆம் உண்மை விளக்கத் திருப்பாட்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. திருக்கூத்து இயற்றும்நிலை

ஐந்தெழுத்தால் ஆடும் நடம் இரண்டுவகை. இதனை உணர்த்தும் முறையில் தில்லைக் கூத்தன் வடிவம் நமசிவய. அவன் ஐந்தொழில் இயற்றுவதற்கு உரியநிலையில் திருவடிகள், திருக்கைகள் முதலியன ஐந்தெழுத்தாய் அமைக்கப் பெறுகின்றன. அவைகள் விரிப்பின் பெருகும்.

ஐந்தொழில் புரியும் இப் பஞ்சாக்கர நடனமே ஊன நடம் ஞான நடம் என இருவகைப்படும்.

இனி, *மிகு பஞ்சாக்கரத்தால்* ஆடும் நடம் ஒன்று உண்டு. அது நாதாந்த நடனம். அங்கே பரையை மன்றமாகக் கொண்டு பார்வதி காண ஆடுவது.

ஆனந்தத் திருக்கூத்து பேச்செல்லாம் இறந்த பெரு நிலையில் பேசாமை பெற்ற ஞானிகள் (மௌனிகள்); மும்மலத்தை நீக்கியவர்கள். தான் எனத் தகும் தற்போதத்தையும் அந்தம் ஆக்கினர்கள். தான் என்ற தற்போதம் எந்த இடத்தில் முடிந்ததோ அந்த இடத்துக்குத் 'தான் அந்தம் ஆன இடம்' என்று பெயர். அந்த இடமே அந்தம் என்றும் அந்தி என்றும் சொல்லப் பெறும். இது உயிர் நின்ற நிலையே. உயிரானது தான் என்னும் தற்போதத்தை ஒழித்த — அந்தமாக்கிய இடம் எதுவோ அதுவே, அங்கே, தற்போதம் அந்தமான இடத்தில் ஆனந்த ஊற்று வெளிப்படும். தற்போத அந்தமே ஆனந்தஆதி எனப்பெறும். அந்த இடத்தில் நடுநிற்பன். தற்போதத்தின் அழிவு, ஆனந்தத் தோற்றம் என்ற இரண்டற்கும் இடையே அருள் மூர்த்தியாக நின்றுடுவான். உயிர்தான் இடம். இங்கே, ஆனந்த எழுத்து அஞ்சால் ஆடுவான், உயிர் இன்பம் துய்ப்பதற்காக ஆடுவான். இதுவே இரத்தினசபையில் நின்று ஆடும் முறை. இரத்தினசபை என்பது உயிரே. இதனையே சம்பந்தர்,

> "செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
> அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே"

என்று, பஞ்சாக்கரப் பதிக இரண்டாந் திருப்பாட்டில் கூறுகிறர்.

இனி, இவைகளுக்கெல்லாம் மேலாக வேறொரு விளக்கம் உண்டு. அதனைக் காண வேண்டும்.

சிவய நம என்பது பருமை ஐந்தெழுத்தாக நிற்க, பிரணவம் அதற்கு நுண்மையாக நிற்கும். பிரணவத்தை அ, உ, ம, ., (புள்ளி என நின்ற விந்து) இவற்றின் ஒலியாகிய நாதம். பிரணவத்தை ஓரெழுத்து என்றும் அதன் விரிவு அ, உ, ம, விந்து, நாதம் என்றும் கூறுவர். இந்த ஐந்தையும் மூலமாகக் கொண்டு 'சிவயநம' என்ற ஐந்தெழுத்து வருகிறது என்பது சாத்திரம். இதனை ஓதும் மந்திர உரிமை கொடுக்கும் காலத்தே "ஓம் நமசிவய என்றோ ஓம் சிவயநம என்றோ அமைத்துக் கொடுத்துத் தீக்கை செய்வர். இங்கே மொத்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எழுத்து 'ஆறு' என்பதாக அமையும். ஆனல், சாத்திர முறையில் எழுத்து ஐந்தே. உபதேச அமைப்பு முறையில் எழுத்து ஆருகவே நிற்கிறது.

இனி, பிரணவத்தை ஐந்தெழுத்தாக விரிக்கும் போது சிவன், அருள், ஆவி, திரோதம், மலம் என்ற ஐந்தெழுத்தின் அடைவு முறையை 'ஓம்' என்பதன் அடைவுமுறையெனவும் கொள்ளலாமா என்ருல், பிரணவத்தில் சிவன், அருள் என அ, உ என்ற இரண்டும் அமையும். அடுத்து உள்ள ம, விந்து, நாதம் என்ற மூன்றும் உயிர் என்றும் மலம் என்றும் கொள்ளும் மரபுமுறை அமைந்துள்ளது. 'ம' என்பதை உயிர் என்று கொள்வதிலும், பிரணவமும் சேர்ந்த போது. எண்ணிக்கையை ஐந்து எனக் கொள்வதா ஆறு எனக் கொள்வதா என்ற கருத்திலும் ஐயம் உண்டாதல் இயற்கை. இவைகள் விளக்கப் பெறுகின்றன. ஆயினும், திருஞானசம்பந்தர் ஒருவகை விளக்கம் அமைத்துக் காட்டுகின்ருர். அவர் தரும் விளக்கம் திருவைந்தெழுத்துப் பதிகத்தில் ஐந்தாந் திருப்பாட்டாக அமைகிறது.

"கொங்கலர் வன்மதன் வாளி ஐந்து அகத்து
அங்குள பூதமும் அஞ்சு ஐம்பொழில்
தங்கரவின் படம் அஞ்சு தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செழுத்துமே"

என்பதே அது.

ஐந்து விரல்களைக் கொண்டிருக்கும் அகங்கையை எடுத்துக் காட்டாக அமைத்துக் காட்டுகின்ருர். ஐந்து விரல்களை வைத்து, கட்டைவிரலைப் பதிஎன்றும், சுட்டுவிரலை—ஆள்காட்டி விரலைப் பசு என்றும், நடுவிரல், ஆழிவிரல், சுண்டுவிரல் ஆகிய மூன்றையும் முறையே ஆணவம், கன்மம், மாயை என்றும் அமைத்து விளக்கம் கூறுவது ஒருவகை. ஆனல், ஞானசம்பந்தர் கூறுவது வேறு. உள்ளங்கையையும் ஐந்து விரல்களையும் இணைத்தே எடுத்துக் கொள்ள வேண்டும்.

உள்ளங்கைக்கும் விரல்கள் ஐந்தற்கும் உள்ள இணைப்பு உண்டு என்பதை நாம் கொண்டாலும் ஐந்துவிரல்களும் அங்கை ஒன்றும் ஆக ஆறு என்று கொள்வதில்லை. இனி, விரல்களே இல்லாமல், அகங்கை மட்டும் அமைந்த படம் வரைந்தால், அதற்குக் 'கை' என்ற பெயர் இல்லை. அங்கை ஐவிரல் போலவே ஏனை நான்கு செய்திகள் சம்பந்தரால் கூறப்பெறுகின்றன. அவை,

(1) மன்மதனிடம் உள்ள ஐந்து மலரம்புகள் கொண்ட தூணி

(2) ஐம்பூதம் (நிலம், நீர், தீ, வளி, வான்)

(3) ஐம்பொழில் எனப்பெறும் உலகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(4) ஐந்து தலைகளையுடைய அரவு. அவ்வாறே

(5) ஐந்து விரல்களைக் கொண்ட அங்கை

இங்கே காட்டப்பெற்றவாறு, ஐந்து பிரிவுகளுடையது ஐந்தெழுத்து மந்திரம். எடுத்துக்காட்டுக்களை இணைத்துப் பார்த்தால் ஐந்து பிரிவாய் நிற்கும் மந்திரம் ஒன்று என்ற அளவில் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதாக இத்திருப்பாட்டினை உரைவிளக்கம் செய்து காணலாம். இவ்வாறு பொருள் கொள்வதில் தடை இல்லை. ஆனால், திருக்கடைக்காப்பு நாம் இவ்வாறு பொருள் கொள்வதை நிறைவான விளக்கம் என்று ஏற்கவில்லை. திருக்கடைக்காப்பினுள் பொருள் நின்ற முறையைக் கீழே காணலாம்.

நற்றமிழ் ஞான சம்பந்தன்	நான்மறை கற்றவன்
காழியர்	காழியர் மன்னன்
உன்னிய நிலையில் கூறியவை	உற்று நின்ற நிலையில் கூறியவை
அற்றம் இல்லாதவை என ஓரைந்து	உற்றுப்பெற்றவை என ஓரைந்து
(குற்ற நீக்கம்)	(குணம் கூட்டுதல்)

இவ்வாறு எல்லாவற்றையும் இரட்டையாக நிறுத்தி இவைகளை இணைத்து நிற்பது ஒன்றே என உணரவைத்தார்.

காழியர்களில் ஒருவனும் மன்னனும் என நின்ற இரட்டையை இணைக்கும் ஞானசம்பந்தர்.

நற்றமிழ் ஞானமும் நான்மறை கற்ற ஞானமும் எனநின்ற இரட்டையை இணைக்கும் ஞானசம்பந்தர்.

நான்மறையைக் கற்ற நிலையில் நினைந்தும் நற்றமிழ் என அனுபவித்து நின்ற நிலையில் உற்றும் என இரண்டாய் நின்ற அறிமுறையை இணைத்து அமைத்த மாலை.

குற்ற நீக்கத்தைக் கற்றறிந்த வகையில் நினைந்து கூறியவை ஐந்து; குண நிறைவை உற்றறிந்த வகையில் அனுபவமாகவே நின்று கூறியவை ஐந்து. இவ்வாறு இரண்டு ஐந்தாக நின்ற மாலை ஒன்று.

பயனும் இருமையின் இணைப்பாக அமைந்த ஒருமை. இம்பர் இவ்வுலகில் உள்ளவர்; இவ்வுலகப் பேறுபெற்றவர். அம்பர் அவ்வுலகில் உள்ளவர்; அவ்வுலகப் பேறுபெற்றவர். உம்பர் இரண்டையும் இணைத்துத் துய்க்கும் ஒருமை நிலையினர். கற்றுச்சிறப்படைதலும் உற்று நின்று சிறப்படைதலும் ஆகிய இரண்டும் இணைந்தபோது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்நிலையே வல்லராதல் நிலை என்பதையும் ஞானசம்பந்தப் பெருமான் திருவாக்கினுல்தான் தெரிந்துகொள்ளமுடிகிறது.

திருவைந்தெழுத்துப் பதிகத்தின் திருக்கடைக்காப்பினுல் கோடிட்டுக் காட்டப்பெற்ற சில கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சிந்தித்தோமானுல் திருவைந்தெழுத்துப் பதிகத்தின் ஐந் தாம் திருப்பாட்டின் கருத்தமைவுகளைக் கீழ்க்கண்டவாறு கொள்ள லாம்.

"அஞ்சும் தம்முடை அங்கையில் ஐவிரல் அஞ்செழுத்துமே"

என்ற வரியினுல் முன்சொல்லப் பெறும் நான்கு வகையான ஐந்தையும் தம்முடைய அங்கையும் ஐந்து விரல்களும் என்று கொண்டு, அவ்வாறே நின்றது அஞ்செழுத்தும் என்று பொருள் செய் முறையினை அமைத்துக் கொள்ள வேண்டும். அவ்வகையில் அமையும் விளக்கம் என்ன?

மன்மதனின் ஐவகை மலர்கள் எனும் அம்புகள் என நிற்பன உடலின் அமைந்த ஐம்புலன்கள்; அகத்து அங்குள்ள பூதம் என்பது சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்து தன்மாத்திரைகளும் ஐம்பூதங்களும். ஐம்பொழில் என்பது இவ்வுலகம். இந் நான்கு செய்திகளால் தனு, கரண, புவன, போகம் என்ற நான்கையும் தரும் மாயா மலம் உணர்த்தப் பெற்றது. அதற்குமேல், தங்கு அரவின் படம் ஐந்து என்பது ஐந்து பிரிவுபெற நின்று மேலே குறிப்பிட்டவைகளைச் சார்ந்து செயலாற்றும் ஆணவம் என்ற மூலமலத்தைக் குறித்தது. பிரிவுகளாக நின்றவைகளெல்லாம் எனது என்ற உறவினில் நிற்க, மூலங்கள் எல்லாம் 'யான்' என்ற உறவினில் நிற்க, இவ்வாறு, பிரிவுகளையும் பிரிவுகளை இணைக்கும் மூலங்களையும் யான், எனது என அமைந்தவை எனக்கொண்டு, இவையனைத்தும் 'நம' என்ற இரண்டெழுத்துக்களின் - மல எழுத்துக்களின் விளக்கங்களாகக் கொள்ள வேண்டும்.

இனி, உயிர் என்ற ஒன்று தனிப்பொருளேயாயினும் தனித்து நிற்பதன்று. பாசத்தோடு சார்ந்த நிலையில் தன்னைப் பாசமாகவே தோற்றிக் கொள்ளும்; சிவத்தோடு இணைந்த காலத்தில் சிவமே எனத் தன்னைத் தோற்றிக் கொள்ளும். எனவே, அது சார்ந்ததன் வண்ணமாயதும் சதசத்து என நிற்பதும் ஆகும். மாயை, ஆணவம் என - இரண்டு ஐந்து என - நிற்பது பத்து. எனவே 'ய' என்ற எழுத்தானது பத்து என்பதைக் குறிக்கும் ஆதலின் 'ய' என்ற எழுத்தே அமைக்கப் பெற்றது. 'ய' என்பது உயிரன்று. எனவே, உள்ளங்கையும் விரல்களும் குறிக்கும் முதற்கருத்து மலங்களோடு தம்மை இணைத்துக் கொண்டு நின்ற உயிர், என்பது சார்ந்ததன் வண்ணப்பொருள்.

அவ்வாறே, இன்னெருவகைப் பிரிப்பில் அமையும் பத்து இருக்கிறது. அப்பிரிப்பும் இரண்டு மூலப்பொருள்கள் ஐந்து ஐந்தாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விரிய நின்ற பத்துக்களே. அப்பிரிப்பைக் குறிக்கும் தொடர் என்ன என்பதற்கு வேறு எதுவும் தனியாக வேண்டுவதின்று. இங்கே கூறப் பெறும் ந, ம என்ற இரண்டே போதும். மெய்யெழுத்து வரிசையில் ந என்பது எட்டாவது; 'ம' என்பது எட்டாவதன் பின் இரண்டாவ தாக நின்றது. ந, ம என்பது எட்டாவது மெய்யும், பின்னர் இரண் டாவது மெய்யும் இணைய நின்ற எட்டிரண்டு—பத்து. உயிர்மெய் எனத் தனித்த எழுத்து இல்லை. மெய்யே எண்ணிக்கைக்கு உரியது. இனி, உயிரெழுத்தில் எட்டு என்பதைக் குறிப்பது 'அ' என் பது; இரண்டு என்பதைக் குறிப்பது 'உ' என்பது. எட்டும் இரண்டும் உருவான நிலையில் பத்து என நின்ற 'ய' வருகிறது. 'அ' என்பது இறைவனையும் 'உ' என்பது அருளையும் குறிக்கும். அகரமாய் நின்ற இறைவன், 'உ' என்ற அருளில் நிற்க, அருள் ஐந்தாகப் பிரிந்ததும், இறைவன் அந்த ஐவகை அருளை இடமாகக் கொண்டு ஐந்தென நின்று ஆடுகின்றான். அருட் பிரிவு ஐந்தும், ஆட்டப் பிரிவு ஐந்தும் ஆக இருபிரிவுகளாக நின்று பத்து ஆயிற்று. முன்னே மலங்களை இடமாகக் கொண்டு உயிர் தன்னை வெளிப்படுத்திக் கொண்டமை போலவே, அருளை இட மாகக் கொண்டும் உயிர் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. எனவே, உயிருக்கெனத் தனி எழுத்து இல்லை. எனவே 'நமய' என் பவை மலங்கள் இரண்டும் பிரிந்து நிற்க. இரண்டுமலமும் பிரிவுகளா கிய பத்தும் என்பது பொருளே யொழிய 'நம' என்பது மலம் 'ய' என்பது உயிர் என்று பொருளே கொள்ளலாகாது. அவ்வாறே சிவய என்பவைகளையும் சிவமும் அருளும் என்ற இரண்டும் அந்த இரண் டன் பிரிப்பாக நின்ற பத்து விரிவுகளும் என்று கொள்ள வேண்டுமே யொழிய சிவ என்பவற்றின் பின் நின்ற 'ய' என்பது உயிரைக் குறிக்கும் என்று கொள்ளக் கூடாது. 'ய' என்பது பத்து என்ற எண் ணிக்கையைக் குறிக்கும் அவ்வளவே.

எட்டும்	இரண்டும்	உருவான	இலிங்கம் (குறி)
1. எட்டாவது மெய்	அதன்மேல் இரண்டாவது மெய்		(பத்து என்ற குறி)
ந	ம	நம	ய
2. எட்டு என்ற எண்ணைக் குறிக்கும் உயிர் எழுத்து	இரண்டு என்ற எண்ணைக் குறிக்கும் உயிர் எழுத்து		
அ	உ	அஉ சிவ	ய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வகையில் உயிருக்கெனத் தனித்த எழுத்தோ அடையாளமோ இல்லை. மேலே கூறப்பெற்ற இரு நிலைகளில் ஏதாவது ஒன்றின் மூலம் தன்னை இணைத்துக் கொண்டு, தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும்.

இனி, இப்பிரிவு, பிரணவமாக நிற்கும் போது, உயிரெழுத்தில் 'ஓ' என்பதையும் மெய்யெழுத்தில் 'ம்' என்பதையும் குறிக்கும். இவையிரண்டும் பத்தாவது எண்ணுள்ள எழுத்துக்கள் என்ற அளவிலேயே கொள்ளப்பெற்றன.

இங்கே, தமிழ்நெடுங்கணக்கில் அமைந்த சிக்கல் ஒன்றையும் பெருமான் விடுவித்தருளுகின்றார்.

தமிழ் நெடுங்கணக்கில் பத்தாவதாக நின்ற எழுத்து 'ஒ' என்ற குற்றெழுத்தே. நெட்டெழுத்து 'ஓ' பதினொன்றாவது ஆகும். ஐ, ஔ இரண்டெழுத்துக்களும் கூட்டெழுத்துக்கள் ஆனமையால், அவை இரண்டையும் முறையே 11ம் 12ம் எழுத்துக்கள் என்று தான் கொள்ள வேண்டும் என்றும் 'ஏ' என்ற எழுத்துக்குப் பின் 'ஐ' என்ற கூட்டெழுத்தை வரிசையில் சேர்க்கக் கூடாது என்றும் சுவாமிகள் கருதினராதல் தெளியலாம்.

தமிழ் நெடுங் கணக்கு அமைப்பு முறையில் உயிரெழுத்துக்களில் அ, இ, உ, என்ற மூன்றுமே தனிநிலை உயிர்கள் என்றும் அ, இ என்ற இரண்டும் இணைந்த போது 'ஐ' என்ற கூட்டெழுத்தும், அ, உ என்ற இரண்டும் இணைந்தபோது 'ஓ' என்ற கூட்டெழுத்தும் அமைந்தன என்றும் ஒரு கொள்கையை அமைத்துக்கொண்டு, அ, ஆ, இ, ஈ, உ, ஊ என்ற எழுத்துக்களை முறையே எண்ணி, பின்னர் எ, ஏ என்ற இரண்டையும் இணைத்து, கூட்டெழுத்துக்களுள் முதலாவதாகிய 'ஐ' என்பதை எண்ணி, அடுத்த கூட்டெழுத்தாகிய 'ஒ' என்பதையும் அதன் நெடிலையும் இணைத்து, பின்னர் 'ஔ' என்பதைச் சேர்க்க எண்ணிக்கை பன்னிரண்டாம் இவ்வாறு அ, இ, உ என்ற மூன்றுமே முதல் எனக் கொள்ளின் 'எ' என்ற எழுத்தின் நிலை என்ன? தனிநின்ற எழுத்தா அல்லது கூட்டெழுத்தா என்ற வினா எழும். மேலும், அ, உ என்ற இரண்டன் இணைப்பினால் வரும் கூட்டெழுத்து 'ஓ' என்பதன்று; 'ஔ' என்பதே. எ, ஒ என்ற இரண்டு தனிக்குற்றெழுத்து ஒலிகளைக் கொள்ளாதவர்கள், ஆனால் ஏ, ஓ தனி நெட்டெழுத்து ஒலிகளை ஏற்றுக் கொண்டவர்கள் கொண்ட முறையே அ, இ, உ என்ற மூன்றும் தனிநிலை உயிரெழுத்து என்பது. தமிழ் நெடுங்கணக்கில் அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்தும் தனிநிலை உயிர்களே.

பிரணவ நிலையைக் குறிக்கும் போது அ, உ. ஆன எழுத்து என்பது அகரம் உகரமும் இணைந்த எழுத்தாகிய 'ஓ' என்பதைக் குறிக்க வந்தது அன்று. ஏனெனில் அகரமும் உகரமும் இணையில் 'ஔ' என்ற எழுத்துத்தான் வரும். அகர உகர இணைப்பேதான் 'ஓ' எனக் கொண்டாலும் 'ஒ' என்பதைத் தான் பிரணவ எழுத்தாகக் கொள்ள வேண்டுமேயல்லாமல் 'ஓ' என்ற நெட்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

டெழுத்தைக் கொள்ளுதல் பொருந்தாது. மெய்யெழுத்துக்களில் எட்டாம் எழுத்தும் மேல் இரண்டாம் எழுத்தும் சேர, நம என்ருகி, பத்து என்பதைக் குறித்தது போலவே அதே அளவில் எண்களை அமைத்துப் பார்க்கும் போது எட்டும், மேல் இரண்டும் என்ற எண்களால் குறிக்கப் பெறும், ஏ, ஓ என்ற இரு எழுத்துக்களையும் இங்கே சேர்ப்பதற்கில்லை. பத்தாவதாக நின்ற 'ஓ' என்பதே பொருந்துவது. எட்டும் இரண்டும் என்ற கூட்டெண்ணிக்கையும் (10) அவ்வெண்ணிக்கையில் நின்ற எழுத்தாகிய 'ஓ' என்பது உயிரிலும், பத்தாவது எண்ணிக்கையில் அமைந்த 'ம்' என்பது மெய்யிலும் இணைய 'ஓம்' என்பதே பிரணவமாயிற்று.

மேலே கண்டவாறு இலக்கண நெறியில் கூருமல் சுவாமிகள் வேறு வகையில் இக்கருத்தை விளக்கியருளுகிருர்கள்.

பன்னிரண்டு உயிர் போல சீகாழிக்குப் பன்னிரண்டு பெயர்கள் உண்டு. அவற்றில் காழி என்பதே இறுதிப் பெயர். ஏனெனில் பத்தாவது. உயிர் நின்ற நிலை அதுதான். பின்னுள்ள இரண்டும் முன்னதனேடு இணைந்த கூட்டு நிலைகள் என்று அவ்விரண்டையும் இறுதியில் வைத்து விட்டார். அடுத்து முன்னுள்ள பத்துள்ள நிலைகளையும் இரண்டு அணியாகக் கொள்கிருர். முன்னின்ற ஐந்தும் குற்றம் நீக்கியவை. பின்னின்ற ஐந்தும் குணம் சேர்த்தவை. இந்நிலையில் ஐந்தாவது தோணிபுரம். தோணிபுரத்தை உயிர் எழுத்து வரிசையில் 'உ' என்று கொள்வதா என்ருல், வரலாற்று முறையில் பிரணவம் தான் தோணியாக வந்துள்ளது. ஒருவேளை அருள் என நின்ற சத்தியைத் தோணியாக அமைத்துக் கொண்டு வந்தான் என வரலாறு சொல்லப் பெற்றிருக்குமேல் நாம் அவ்வாறு கொள்ளலாம். அவ்வகையில் அ, இ, உ, எ, ஒ என்றும் பின்னர் ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்றும், அதன் பின்னர் ஐ, ஔ என்றும் இவ்வாறு நிரல் நிறை அமைய வேண்டும் என்பது சுவாமிகள் கருத்தாக அமைந்திருக்கிறது குற்றம் நீக்கிய நிலையில் 'ஒ' என்பதும் குணம் சேர்த்த நிலையில் ஓ என்பதும் அமைந்தன. 'ஒ' என்பது குற்றமழித்த நிலையில் உணரப் பெறும் பிரணவம். 'ஓ' என்ற நெடிலே குணம் கூட்டிய நிலையில் அமையும் முழுமை என்ற வகையில் பிரணவ முதலெழுத்தாயிற்று.

பத்தாவது உயிரெழுத்து "ஓ" என்பதே. பத்து என்பதை ஐந்தும் ஐந்தும் எனப்பிரித்தால் முதற்பிரிவுக்கு—உயிர்க்குறிலுக்கு 'ஒ' என்பது ஐந்தாவது எழுத்தாகும். இரண்டாம் பிரிவுக்கு—உயிர் நெடிலுக்கு 'ஓ' என்பது ஐந்தாவது எழுத்தாகும். குற்றம் நீக்கிய நிலைக்கு 'ஒ' என்பதையும் குணம் சேர்த்த நிலைக்கு 'ஓ' என்பதையும் அமைத்தார்.

ஐந்தெழுத்து அமைப்பு

ஒளிக்கும் இருளுக்கும் இடம் ஒன்றே என்ருற்போல உள்ளங்கையும் ஐந்துவிரல்களுமே எல்லா நிலைகளிலும் கொள்ளவேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூன்றுவகையான நிலைகள், செயற்பாடுகள், பயன்கள், எழுத்துக்கள் அமைகின்றன. இம்மூன்று நிலைகளும் முறையே துஞ்சலாம் பொழுது, துஞ்சல் இலாதபொழுது, செம்மையில் நின்றபொழுது எனப் பிரித்துக் காட்டியருளினார்கள். அவைகளை முறையே காண லாம்.

துஞ்சலாம் நிலை. சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியா தீதம் என்ற ஐவகை நிலைகளில் சென்று ஒடுங்கிய நிலை. இப்படிச் சென்று ஒடுங்குதலும், மீளவும் வந்து நிற்றலும் ஆகிய பத்துப் படிகள் இங்கே உண்டு. ஓர் உயிர் மனித உடம்பில் தூங்கி விழிக் கிறது என்று சொன்னால் ஐந்துபடிகள் கீழே இறங்கிச் சென்று, ஐந்துபடிகள் மேலே ஏறிவருகிறது. பொதுவாக மக்கள் அறிவது, தூங்கும் முன் நின்ற நினைவு நிலையும், தூங்கி விழித்தபின் நின்ற நினைவு நிலையும். இத்தகைய பத்துப் படிகளையும் ஒருவன் நனவு நிலையில்—உறங்காத நிலையில்—விழித்தநிலையில் நின்று செய்திகளைத் தெரிந்து கொள்வதுபோல, வெளியில் உள்ளவர்களுக்குத் தூங்கு கிறான் என்ற நிலையைத் தோற்றிவிட்டு, கீழ்நோக்கிச் செல்லும் அவன், இப்போது நான் கனவு நிலையில் இருக்கிறேன், சுழுத்தியில் இருக்கிறேன், துரியத்தில் இருக்கிறேன், துரியாதீதத்தில் இருக்கிறேன் என்று கண்டு, பின்னர் நான் நனவு நிலை எனப்பெறும் மேல்நிலைக்கு வரப்போகிறேன் என்பதுணர்ந்து, மேலே வருதற்கு உரிய துரியாதீதம் இது என்றும் கண்டு, அவ்வாறே மேல் வருதல். கீழே செல்லும் போது இறுதியில் நின்ற துரியாதீதமும், மேலே வருவதற்கு முதலாக நின்ற துரியாதீதமும் ஒன்றல்ல. கீழாலவத்தை எனப்பெறும் கீழ் நோக்கிச் சென்று அடைந்த துரியாதீதம் அற்ற நிலையில், அதாவது, அந்தத்தில்தான் மேலாலவத்தையின் முற்படியாகிய துரியாதீதம் நிகழும். சாதாரண மனிதன் இந்நிலைகளில் போகும்போது தூங்கியே விடுகிறான். இந்நிலையில், தூங்குவது போலத் தோற்றங்காட்டி விட்டுத் தூங்காமலே இருப்பதுதான், பயன்பெற்ற நிலை. இது சாக் கிரத்தேசாக்கிரம்புரிதல்· சாக்கிரத்தே அதீதம்புரிதல் வேறு.

இந்நிலையில் குற்றம் நீக்குதல் இறைவன் பணி. அதற்காக ஆடும் ஆட்டம் ஊனநடனம். இங்கே உள்ளே எழுத்து 'நமசிவய' என்பதே. இது இரண்டாக அமையும் நமய என்றும் சிவய என்றும். இதைப் பொதுவாகப் பஞ்சாக்கர நடனம் என்றே கூறுவர். இந்த நடனம் நடுஇருள் யாமத்து நடைபெறும். அபயகரம் நின்றநிலையில் அங்கை ஆட்டிடமாக, ஐந்து விரல்களும் நம என்பதனின் வி [illegible] களாகிய பத்துவகைகள் அமைய ஆடும் நிலை. அதனில், மேல்நோக்க கீழ்நிலைக்குச் செல்லும் படிகள் ஐந்து, பின்னர், [illegible] மேல்வரும் படிகள் ஐந்து ஆதலின் இரண்டு நிலைகளை இருபுறமும் நின்று ஆடும் நிலை. நமய ஒருநிலை, சிவய ஒருநிலை. எனவே நமய என்பது கீழாலவத்தைக்கு; சிவய என்பது மேலாலவத்தைக்கு. எனவே 'நமசிவய' என்பது இவ்விருநிலைகளுக்குரிய ஐந்தெழுத்தா யிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"இதனை ஊன நடம் ஒருபால் ஒருபால் ஞானநடம்
தான் நடுவே நாடு"

என்று சாத்திரம் விளக்கிக் கூறும். மலநீக்கம் பயன்.

துஞ்சலிலாத நிலை. மலநீக்கம் பெற்றபின் குண ஆக்கம் என்பதைச் சிவப்பேறு எனவும் இன்பப்பேறு எனவும் கொள்வர். இந்நிலையை ஞானப்பேறு என்றுதான் சொல்லுதல் வேண்டும். இது நின்மல சாக்கிரம் முதலாக நின்மல துரியாதீதம் வரை செல்லும் ஐந்துபடிகள். இங்கேயும் சென்று திரும்புதல் என இரண்டாகப் படிகள் உண்டென்பர். அவ்வகையில் கருத்து வேறுபாடு உண்டு. சாக்கிரத்தே அதீதத்தைப் புரிதல் என்ற நின்மல துரியாதீதமே இறுதி நிலை. இதனை உமை காண ஆடுவன். அந்தி நடம் என்பது வழக்கு. அந்திக்காலம் என்பது கருத்தன்று. தத்துவங்களின் அந்தியில்-அந்தத்தில்—நாதத்தின் அந்தியில் ஆடும் நடனம். இதற்கு உரிய எழுத்துக்கள் சிவயவசி எனப்பெறுமாயினும் 'சிவயநம' என்பதே ஐந்தெழுத்து—பயன் சிவப்பேறு, முற்றறிவு முதலியன பெறுதல். இதனை நாதாந்த நடம் என்பர். 'சிவயநம' என்ற ஐந்தெழுத்தை மிகு **பஞ்சாக்கரம்** என்பர். **திருவைந்தெழுத்து நடம்** என்றும் கூறுவர்.

பரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்
உரையுணர்வுக் கெட்டா ஒருவன்—வரைமகள்தான்
காணும் படியே கருணை உருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு

என்பது **உண்மை விளக்கம்** (38)

மேலே குறிப்பிடப்பெற்ற இருவகையான திருக்கூத்துக்களை ஞானசம்பந்தப்பெருமான் பஞ்சாக்கரத் திருப்பதிகத்தினுள் முதலிரண்டு பாட்டுக்களில் அமைத்து விளக்கினர். இவ்வகையில் நேரும் இடர் நீக்குதல் என்பதை முதல் 5 திருப்பாட்டுக்கள் வரை பேசுகிறர். ஆருவது திருப்பாட்டில், இம்மை, அம்மை ஆகிய இரு நிலைகளிலும் துணையாக இருப்பது அஞ்செழுத்தே என்று இரண்டையும் இணைத்துக் கூறினர்.

ஏழாவது திருப்பாட்டினில் 'உம்மை' என்ற அனுபவப் பேற்றுக்குரிய திருக்கூத்து, எவ்வாறு அமைக்கப் பெறுகிறது என்று கூறுகிறர். துன்பநீக்கம் சிவப்பேறு என்ற இரண்டும் இல்லை, சுருங்கக் கூறின் 'கேடும் ஆக்கமும் கெட்ட திரு' என்பதாம் நிலை. பீடு கொடுப்பன; மாடு கொடுப்பன; ஆடி உகப்பன ஆம் ஆனந்தத் திருக்கூத்து என்பதே மூன்றும் நிலை. இதுவே பிரணவக் கூத்து முன்னுள்ள ஐம்முகக் கூத்து ஒடுங்கிய அதோமுகக் கூத்து. இதற்குரிய எழுத்தை ஆருவது எழுத்து என்பர், ஆருவது முகமாகிய அதோமுகம் தானே தனித்து நின்று, ஏனைய ஐம்முகங்களைத் தம்முள் ஒடுக்கி அமைத்துக்கொண்டு ஆடும் நிலை. பெரிய நடனம் என்றும் பெருங்கூத்து என்றும் கூறுவர். முன்னுள்ள இருவகைக் கூத்துக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களும் கற்றறிந்த நிலையில் அமையும் திருக்கூத்து வகை. இந்த மூன்றும் நிலை உற்றுணரும் நிலையில் அமையும் அனுபவ ஆனந்தத் திருக்கூத்து. இதற்கு உரிய இடமும் அதே அங்கையும் விரல்களுமே. அங்கையையும் ஐந்துவிரல்களையும் உள்ளடக்கிய சோதிப்பிழம்பு தோன்றும். அதுவே 'ஓ' என்ற அமைப்பில் உள்ளங்கை விரல்கள் ஆகியவைகளைச் சுற்றிய நிலையில், உள்ள இடம். முன்பே உள்ள ஐம்புலன் முதல் அனைத்தும் இப்போது அருளானந்தம் பொழியும். அங்கை, விரல் என்ற வேறுபாட்டு உருவம் தோற்றுது. ஆனால் அதே இடம் அருளாகத் தோற்றும். 'ஓ' என்ற வட்டத்தில் பெருஞ்ஜோதி தோன்றும். உள்ளே 'ம்' என்ற எழுத்துத்தான் இப்போது அருளாக நிறைந்து நின்று ஆனந்தம் பொழியும். அது பேச்சற்ற நிலை. எனவே 'ஓம்' என்ற எழுத்தை உற்றுணரும் நிலையே இங்குள்ளது. இதனை மேலைப் பெருவெழுத்து என்றும் கூறுவர். இங்கேயும் பிரிவுகள் ஐந்து உண்டு. இதுவே, நீலகண்டத் திருக்கூத்து. உயிரை நாடிவந்து நின்ற பரம்பொருள் உயிரிலேயே ஆடும் ஆனந்தக் கூத்து.

எனவே மூன்று நிலைகளிலும் படிகள் ஐந்தே. முன்னதில் நமசிவய, இரண்டாவதில் சிவயநம. இவையிரண்டும் அறிதல் நிலைக்குரியவை; மூன்றுவது அதோமுக தரிசனம். நேர்தோன்ற ஆடும் கூத்து. உயிரை இடமாகக் கொண்டு ஆடும் அருட்கூத்து. 'ஓம்' என்ற எழுத்தே திருநீலகண்ட எழுத்து ; இது அருளெழுத்து. சோதியும் கருணையுமே, எனினும் ஐந்தாகப் பிரிந்து நிற்கும். இதனை உற்றுணர முடியுமே யன்றிக் கற்றறிய முடியாது. அஞ்செழுத்தை ஆருகப்பெற்று உள் சென்று பிரணவ நிலையில் உற்று அனுபவிக்க வேண்டும். பிரணவக் கூத்து அமைந்த காலத்து, தான் என்பது அழியும், தனது என்பது அழியும். அருளே வடிவமாக ஆனந்தமே அவர்தம் உடம்பி லிருந்து வெளிப்படுவதாக அமையும். அவர் முன்னிலையில் அற்புதங்கள் நிகழும். நிகழ்த்துவது அவர் அல்லர். திருவருள் அவரை மூலமாகக் கொண்டு உலகில் பல அரியவைகளைச் செய்து காட்டும்.

நூல் தாங்கியமையின் நுட்பம்

நான்மறைப் பொருளை விளக்கம் செய்தும். அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்தும் இன்ன தன்மையன என்று எடுத்துக் கூறியும் அமைந்த நிகழ்வுகள் எல்லாம் பூணூல் அணிதல் என்ற ஒன்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவைகளே.

திருவருளின் வழிநின்று செஞ்சொல் பயிற்றும் சேக்கிழார் அருள் மொழித்தேவர் என நின்றவர் என்பதை இங்கு அவர் இயம்பும் நுட்பத்தாலும் உணர்தல் வேண்டும்.

"ஒல்லைமுறை உபநயனப் பருவம் எய்த
உலகிறந்த சிவஞானம் உணரப் பெற்றுர்
தொல்லைமறை விதிச் சடங்கு மறையோர் செய்யத்
தோலொடு நூல் தாங்கினர் சுரர்கள் போற்ற"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பது பெரியபுராணத்து 2166ஆம் சேக்கிழார் திருவாக்கின் பின்னுள்ள இரண்டு அடிகள் கொண்ட பகுதி ஆகும்.

நூல் தாங்கினர் என்பதற்குப் பூணூல் அணிந்தார் என்பதைப் பொருளாக அனைவரும் கொள்கின்றனர். "தோலொடு" என்பதற்கு 'உடம்பில்' என்று பொருள் கொண்டோர் ஒருபகுதியினர். பிறிதொரு சாரார் 'தோல்' என்பதற்கு 'மான்தோல்' என்று பொருள் கொண்டு மான்தோலோடு பூணூலையும் ஏற்றுத் தரித்தார் என்று விளக்கம் கூறுவர். சேக்கிழார் நூலினும் தோலுக்கு உயர்வு உண்டு என்று கருதியே 'ஒடு' என்னும் உருபினைத் தோலுக்கு இணைக்கிறார்.

மான்தோலும் பூணும்நூலும் குறிப்பு மொழிகள். அவைகளைத் தமிழகத்துப் பழமை வழக்கொடும், சைவநன்னெறியின் மூலங்களாக நின்ற அறத்தொடும் அருளொடும் இணைத்துப் பொருள் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

> "தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
> நல்குரவு என்னும் நசை"

என்றும்,

> "அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
> நின்றது மன்னவன் கோல்"

என்றும் வரும் திருக்குறள்களையும்,

"தோலாவது இழுமென் மொழியால் விழுமியது நுவறல் என்றார் தொல்காப்பியரும்" என்று பரிமேலழகர் எழுதிய விளக்கத்தையும் இணைக்க வேண்டும். மேலும், பரிமேலழகரே "குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்" என எடுத்துக் காட்டிய மணிமேகலையில் பாத்திரம் பெற்ற காதையில் வரும் 76 ஆம் அடியையும் இணைக்க வேண்டும். பின்னர், நீத்தார் பெருமைச் செய்திகளைத் திருக்குறள் மூன்றும் அதிகாரத்துக் குறள்களால் இணைக்க வேண்டும். பின்னர்க் கிடைப்பது தான் *தோலா மொழி* அதுவே நிறைமொழி.

வேல் தாங்குதல் நூல் தாங்குதல் கோல் தாங்குதல் எல்லாம் கணக்காயர் தொழில். மேல் கணக்கு என்றும் கீழ்க் கணக்கு என்றும் கணக்கு இருவகைப்படும். சிவனும் கணக்காயனே.

> "எழுதுங் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே"

என்பது அப்பரடிகள் திருவாக்கு. இதன் விரிவை இந்நிலைய வெளியீடாகிய *வீர சைவம்* என்ற நூலிற் காண்க. தொல்வரவு என்பதே மேல் கணக்கு. 'தோல்' என்பதே கீழ்க்கணக்கு.

தொல்வரவு என்பது கங்கை. அதுவே அருள்நிலை. முன்பே விளக்கப் பெற்றுள்ளது. தோல் என்பது அறம் கூறும் நிலை பெறல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிலத்து மறைமொழிகளை ஆணையின் வழிநின்று ஆக்கித் தரும் நிலை. தோலும் நூலுமாக நிற்பவன் இவ்வுலகில் ஆசிரியன் ஒருவனே.

"ஆகமம் ஆகி நின்றான்"

என்பது திருவாசகம். அவன் புத்தகத்தைப் பிரித்துப் பாடம் சொல்பவன் அல்லன்; வேதம் ஓதுதல் போல, தான் சொல்லிப் பிறரைச் சொல்லச் செய்யும் உபாத்யாயன் அல்லன். கற்க விரும்புபவன் கணக்காயனையே நூலாகக் கொள்ள வேண்டும். அவன் செய்தன எல்லாம் தொல்வரவு எனப் பெறும் மரபுகள். அவன் வாழ்க்கை நெறிமுறைகளே மற்றவனுக்கு மேல் கணக்கு. அவன் நடந்தவாறே நடந்து பழக வேண்டும். அப்படிப் பழகுபவனே மாணவனாகத் தம்மை ஆக்கிக் கொள்ளும் நெறிமேற்கொண்ட மாணாக்கன். நீ இவ்வாறு செய்வதற்கு உரிய சான்று எது என்று ஒரு வினாவை எழுப்பினால், ஒரு நூலின் பெயரைச் சொல்லி, அதன் பக்க எண்ணிக்கையைக் குறிப்பிட்டுக் காட்டிச் சான்றாக்குவது அன்று. என்னுடைய ஆசான் நடந்து காட்டிய முறை என்பதே விடை. நெற்றியில் திருநீறு பூசுவதற்கு நீள அகல அளவு என்ன என்று என்னை வினவினார் ஓர் அன்பர், நான் பூசியிருப்பது தான் அளவு என்றேன். நூல் ஆதாரம் என்ன என்றார். என்னையும் என் போன்ற உதவாக்கரைகளையும் தாமே வலியவந்து உயர்நிலைப்படுத்திய, ஞானகுரு, திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் ஆகமமாக நிற்க, நான் கற்றுக் கொண்டது. அவர்கள் ஆகமம்; அவர்கள் மேற்கணக்கு. அதையே பின்பற்றி நிற்பவன் நான். எனக்கு ஆதாரம் அவரே; அனைத்தும் அவரே என்பது தான் என் விடை. ஆகமம் ஆக நின்ற அவனே அண்ணிப்பான் ஆதலும் வேண்டும். தாமே நிறைமொழி மாந்தராக நின்று, நிலவுலகில் என்றும் அழியாத தோலாமொழியை—எண்ணியவெல்லாம் உடனெய்தும் மறைமொழியை, விழுப்பம் தரும் விழுப்பத்தை, நிலத்து மறை மொழியை, நினைக்க நினைக்கப் புதிய புதிய வளமைகளையெல்லாம் தரும் மந்திரத்தை, ஆணையிற் கிளக்கும் மறை மொழியை அருளுதலும் வேண்டும். அதுவே அண்ணித்தலாம் நிலை. அதுவே அறத்தை உள்ளீடாகக் கொண்ட கீழ்க்கணக்கு நிலை.

மேற்கணக்காகவும் அல்லது மேற்கணக்கைத் தாங்கிவருகை கீழ்க்கணக்கு ஆதியாக நின்ற நிலையே 'கோல்' அதுவே நேர்மை கருதிச் செங்கோல் எனப் பெற்றது.

தொல்வரவு அல்லது மேல் கணக்கு என்பது முன்னைப் பழமைக்கும் பழமை; கோல் என்பது பின்னைப் புதுமைக்கும் புதுமை. முன்னதைத் தாங்கிப் பின்னதை வெளிப்படுத்தும் நிலையில் ஆதியாக நிற்றல் என்பதே 'செங்கோல் நிலை'.

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்"

என்பது திருக்குறள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருஞானசம்பந்தர் நூல் தாங்கினர்; ஆகமமாக நின்றூர். தோலொடு அணிணித்தார். அஞ்செழுத்துண்மையை அனைவர்க்கும் விளக்கியமைத்தார். செவிமடுத்தவர் அனைவரும் இவர் நம்மால் வழிபடுதற்குரியவர் என்று கருதித் தியானப் பொருளாகக் கொண் டார்கள் என்பது சேக்கிழார் வாக்கு.

தோல் மான்தோலைக் குறித்தது என்பது மான்வயிற்றில் வள்ளி பிறந்தாள் என்பதை உளங் கொள்க. கொடுத்த ஒன்றைப் பேணிப் பாதுகாத்து, வேண்டுவார்க்கு வேண்டும் விளக்கம் தந்து, காலத்தில் மலரச் செய்வது என்னும் குறிப்பினைக் கொண்டது. மான்தோல் என்பது ஒருவகை அடையாளச் சொல்லே. தோல் என்பதனோடு ஒத்த பொருளுடையதே 'பிரணவம்' என்ற சொல். நினைக்குந் தோறும் புதுமையைத் தருவது என்பது பிரணவம் என்ற சொல்லின் பொருள்.

முத்துச்சிவிகை தந்து, ஞானசம்பந்தரை அருள்நெறியின் குருவென ஆக்கிய இறைவன், அக்குருவின் செயல் என்பது இரு பகுதிகளை உடன் கொண்டது என்று காட்டி, அருளைத் தாங்கி நிற்றல் என்பது நூல் தாங்குதல் என்றும், அறநெறி சார்ந்த தோலா மொழிகளை வெளிப்படுத்தித் தோல் தாங்குதலும் வேண்டும் என் பதை நிகழ்ச்சிகள் மூலமாக அமைத்துக் காட்டினூராயிற்று. அதனு லேயே இந்நிகழ்ச்சியானது, முத்துச்சிவிகை அளித்த நிகழ்ச்சிக்கு அடுத்த நிகழ்ச்சியாக அமைந்தது.

இருபகுதிகளை உடன் கொண்ட செயல்களில், நூலென நிற்றலை விட, அவர் நிறைமொழி வெளிப்படுத்தி அருள்புரியும் தோல் தாங்கிய நிலையே உயர்வுடையது என்று கருதினர் சேக்கிழார். அதன் அடிப்படையில், 'தோல்' என நின்ற பகுதிக்கு 'ஒடு' உருபு கொடுத்துச் சிறப்பித்தார்.

விரிவாகச் சிந்திக்க வேண்டிய பகுதி இது. விரிவஞ்சி நுட்பம் மட்டுமே அமைக்கப் பெற்றது. இப்பகுதியை ஒரு சடங்கு முறை என்று அமைத்து, இன்னும் அதனொடு இணையாத பல கருத்துக்களை யும் இணைத்து நிறுத்தி, தயங்கிப் படிக்கவோ, ஏற்ற பெற்ற மாற்றி விளக்கம் செய்யவோ, கூசிக் குறுகி நாணியோ செயற்படுவன ஈண்டைக்குப் பொருத்தமுடையனவாகா என்று திருவருளால் உணர்ந்து தெளிதல் சான்றோர் கடனும்.

தோலொடு நூல் தாங்கும் நிகழ்ச்சியைப் பாடவந்த சேக்கிழார் தோணிபுரம் என்பது இந்நிகழ்ச்சியுடன் முடிவடைகிறது என்றும் இனிவரும் நிகழ்ச்சிகள் பூந்தராய்ப் பகுதிக்குரியது என்றும் குறிப் பிட்டுக் காட்டும் எல்லையை மீறுதல் பெருங்குற்றமாகும்.

'சுடர்மணி மாளிகைத் தோணிபுரத்தவன்' என்று ஞானசம்பந்தர் அருளியதை அப்படியே எடுத்து விளம்பும் நிலையில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"செல்வநெடு மாளிகையில் அமர்ந்து நாளும்
திருத்தோணி மிசையாரைச் சென்று தாழ்ந்து
மல்குதிருப் பதிகங்கள் பலவும் பாடி
மனமகிழ்ந்து போற்றிசைத்து வைகு நாளில்
ஒல்லேமுறை உபநயனப் பருவம் எய்த
உலகிறந்த சிவஞானம் உணரப் பெற்ருர்
தொல்லே மறை விதிச்சடங்கு மறையோர் செய்யத்
தோலொடு நூல் தாங்கினுர் சுரர்கள் போற்ற"

என்று கூறி, அடுத்து, திருநாவுக்கரசர் சீகாழிக்கு வரும் நிகழ்ச்சியைத் தோற்றுவாய் செய்யும் போது,

"பந்தணே மெல்விர லாளும் பரமரும் பாய்விடை மீது
வந்துபொன் வள்ளத் தளித்த வரம்பில்ஞா னத்தமு துண்ட
செந்தமிழ் ஞானசம் பந்தர் திறங்கேட் டிறைஞ்சு தற்கா
அந்தணர் பூந்தராய் தன்னில் அணேந்தனர் நாவுக் கரையர்"

என்று குறிப்பிடுகிருர் சேக்கிழார். "பூசுரர் சேர் பூந்தராய்" என்று அமைக்கிருர் சம்பந்தர்.

இத்தலேப்பின் தொகைப் பொருள்

சீகாழிக்கு அமைந்த பெயர் வரிசையில் ஐந்தாம் படிநிலேப் பெயராக அமைந்தது தோணிபுரம்; அது பிரணவத்தை உள்ளீடாகக் கொண்டது; இதில் அமையும் நிகழ்ச்சிகள் மூன்று எனினும் முத்துச் சிவிகை பெறுதலும் தோலொடு நூல் தாங்குதலுமே சிறப்பு உடையன.

முத்துச்சிவிகை அளித்தல் என்ற நிகழ்ச்சியினே, ஏனேய அருளாளர்களேப் போலன்றி, தனிநிலேயில் சிந்தித்து விளக்கங் கண்டவர் இராமலிங்க சுவாமிகளே என்பதும், ஏனேயோர் கூறும் காரணத்தை உடன் கொண்டால் குடையும் சின்னமும் தந்த செயல் பயனற்ற செயலாய் முடியும் என்பதும், அறத்துறைப் பதிகம் அருளே முறைமையாற் சொன்ன பதிகம் என்பதும், அருளாட்சிப் பீடத்தின் முதலரசும் குருவுமாக நின்ற சம்பந்தர் அருளானது அறத்தின் வழியிலேயே செயற்படும் என்பதைத் தம்முடைய முதல் அறிக்கையாக வெளியிட்டார் என்பதும், இந்நிலேயில் தம்மை மிக நுட்பமாகிய ஞானம் பெற்ற நிலேயுடையவர் எனக் கூறிக் கொள்கிருர் என்பதும் முத்துச்சிவிகை பெறுதலுடன் இரண்டாவது யாத்திரை நிறைவுறுகிறது என்பதும், பின்னர் அமைவதே தோலொடு நூல் தாங்குதல் என்ற நிகழ்ச்சி என்பதும், அஞ்செழுத்துப் பதிகம் இரண்டனுள் உணரும் பதிகமே நூல் தாங்கிய காலத்துப் பாடப் பெற்றது என்பதும், அஞ்செழுத்தினே உணரும் முறை இரண்டு,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(கழிய உணரும் முறை, உற்று உணரும் முறை), இரு முறைகளி லேயே பதிகச் செய்தி முழுவதும் அமைத்துக் காட்டப் பெறுகின்றது என்பதும், அஞ்செழுத்தின் ஐவகை நிலைகள், மூவகை விளக்கங்கள், அஞ்செழுத்தும் ஓரெழுத்தும் நின்ற இணைப்பு இவை இவை என்பதும் தோலொடு நூல் தாங்குதல் என்ற சேக்கிழார் திருவாக்கில் 'ஒடு' என்ற உருபின் பொருட் சிறப்பினைக் குறிக்கொள்ள வேண்டும் என்பதும், தோலொடு நூல் தாங்குதல் தமிழகத்துத் தொன்மரபு என்பதும், அதுவே சைவ நன்னெறியின் மூலமாய் நின்ற முதன்மை மரபு என்பதும் இணைவும் இசைவும் அமையக் கூடிய விளக்கங் களுடன் எடுத்து விளக்கப்பெற்றுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8. அப்பராம் பேறு

இடைநின்ற தனிநிகழ்வு

கழுமல முதுபதிக் கவுணியன் அளித்த கட்டுரையின் வண்ணம் பன்னிருபேர் படைத்துடைய காழிப்படிகளின் வரிசையமைப்பில் தோணிபுரத்துக்கு அடுத்ததாக அமைய இருக்கும் பெயர் பூந்தராய் என்பது. "பூசுரர் சேர் பூந்தராயவன் பொன்னடி" என்று அமைத்துக் காட்டுகிருர் திருஞானசம்பந்தர்.

திருஞானசம்பந்தரின் வரலாற்று நிகழ்வுகளும் நுட்பங்களும் இப் பன்னிரு படிநிலைகளை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றன என்ற அடிப்படை முன்னுள்ள தலைப்புகளிலும் விளக்கப் பெற்ற ஒன்றே. அவ்வரிசையில், தோணிபுரநிகழ்ச்சிக்குப்பின் அமைய வேண்டுவது பூந்தராய் நிகழ்ச்சியே. அவ்வாறே வரலாற்று அடிப் படையிலும் தோலொடு நூல் தாங்குதல் என்ற நிகழ்ச்சியானது தோணிபுரத்துடன் இணைந்துவிட்டமையின், அடுத்துள்ள திருநாவுக் கரசரின் சந்திப்பானது பூந்தராய் நிகழ்வில் அமைய வேண்டிய ஒன்றே.

ஆயினும், பன்னிரு படிகளில் காழி என்ற பத்தாம் படியை நிறுத்தி, பின்னுள்ள கொச்சைவயம், கழுமலம் என்ற இருபடிகளை முன்னுள்ளவற்றில் இணைத்தும், பத்துப் படிகளை ஐந்தும் ஐந்து மாகப் பிரித்தும் ஒரு அமைப்பை உருவாக்கிக் கொண்டார் ஞானசம் பந்தர் என்பதும் முன்னுள்ள தலைப்புக்களில் விளக்கப்பெற்றுள்ளன. அவ்வாறே பிரமபுரம் தொடங்கித் தோணிபுரம் வரையில் உள்ள ஐந்து படிகளும் ஒருவகை வளர்ச்சி நிலையைச் சார்ந்தவை. பூந்தராய் முதல் காழி வரை உள்ள ஐந்தும் இணைந்த வளர்ச்சியேயாயினும் வேறுபட்ட வளர்ச்சி முறையைச் சார்ந்தவை. முற்பகுதிப் படிகள் ஐந்தையும் பிற்பகுதிப் படிகள் ஐந்தையும் இணைத்து விளக்கும் ஒரு வகை அடிப்படை இணைப்பு வளர்ச்சியும் இருக்கவேண்டும் என்பது ஆய்வுமுறை; இருக்கிறது என்பது வரலாறு. எனினும் இரண்டினுள் எந்த ஒன்றிலும் சேர்ந்து நிறுத்தி விளக்க இயலாமையின் ஞானசம் பந்தப்பெருமான் சீகாழியின் எல்லையையும் கடந்து சென்று அப்பரடிகளைக் காணும் வரலாற்று நிகழ்ச்சியானது ஒரு தனித் தலைப் பாகவே நின்று சிறக்கும் தகுதி உடையதாகின்றது. இந்நிகழ்ச்சி யானது ஞானசம்பந்தப்பெருமான் அனுபவத்தில் ஒரு புதிய திருப் பத்தை விளைவிப்பதாகவும் அமைகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'அப்பராம் பேறு' என்ற இத் தலைப்பினை, ஞானசம்பந்தரொடு சார்த்தியோ திருநாவுக்கரசரொடு சார்த்தியோ உரை செய்யக் கூடாது. அப்பராம் பேற்றினை ஞானசம்பந்தர் பெற்றார் என்று கொள்ளக்கூடாது. அப்பராம் பேற்றினை அடைந்தவர் திருநாவுக்கரசர் என்றும் கொள்ளக்கூடாது. இருவரும் இல்லாத நிலையில் அப் பேறு தோற்றம் பெற்றமைக்கு வரலாற்றுச் சான்று இல்லை. இருவரும் இணைந்து நின்ற நிலையில் 'அப்பராம் பேறு' அனைத்துயிர்களுக்கும் அனுபவப் பொருளாகிறது. இத்தகைய சூழலில் அமைந்த தலைப்பே '*அப்பராம் பேறு*' என்பது.

திருநாவுக்கரசரை எதிர்கொள்ளுதல்

அருளாட்சிப் பீடத்தின் முதலரசியற்றிய குருநாதர் எனப்பெறும் திருஞானசம்பந்தர் காழிப் பெருமான் திருவருள் பெற்ற செய்திகளை, தில்லைத்தல வழிபாட்டுக்கு வந்த திருநாவுக்கரசர் கேள்விப்படுகிறார். ஆளுடைய பிள்ளையாரைக் காணவேண்டும் என்ற ஆர்வத்தால் சீகாழியை நோக்கிய வழிநடை மேற்கொள்ளுகிறார் ஆளுடைய அரசுகள்.

சைவத்திலிருந்து சமண் சார்ந்து, பின்னர்த் திருவருளால் சைவம் சார்ந்து, சமணர்கள் இழைத்த கொடுமைகளையெல்லாம் நல்ல நாமம் நவிற்றுதல் என்ற ஒன்றினாலேயே வென்று முன்னேறிய திருநாவுக்கரசர் தம்மைக் காணுவதற்காக வந்து கொண்டிருக்கிறார் என்ற செய்தி திருஞானசம்பந்தருக்குத் தெரியவருகிறது.

திருதொண்டர் எவ்வாறு இருப்பார் என்று எண்ணிய நிலையில் திருஞானசம்பந்தருக்கு அகத் தோற்றம் உருக்கொண்டு, அது அனுபவப் பொருளாக அமைந்து, உடம்பின் புறஎல்லை வரையில் வந்து நின்று, அது இன்ப அனுபவத்தை விளைவித்துக் கொண்டிருக்கிறது. அவர்தம் உள்ளத்துத் தோன்றி நின்ற வடிவம் திருத்தொண்டர் திருவடிவம்.

திருஞானசம்பந்தர் தொண்டர்கள் புடை சூழச் சென்று, காழிப் பதியின் எல்லையும் கடந்து சென்று நின்று வரவேற்கிறார். இரு பெரும் சமய நற்குரவர்களின் தொண்டர்களும் கடலெனப் பெருகியிருக்கிறார்கள். இருவரின் தொண்டர்களும் இணைந்த நிலையைச் சேக்கிழார் அன்புக் கடலும் அருட்கடலும் கலந்தன என்று உருவகப்படுத்திக் காட்டுகிறார். திருநாவுக்கரசர் தலயாத்திரை மேற்கொள்ளும்போது அன்பர்கள் பலரும் பின் தொடர்ந்து வர, கூட்டமாகவே செல்லும் மரபுடையவர் என்று கொள்ள இடந்தரவில்லை. திங்களூர் நிகழ்ச்சி முதலியவைகளை இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். வாகீசர் தில்லையிலிருந்து ஞானசம்பந்தரைக் காணும் ஆர்வம் மிகச் செல்லும் நிலைமையை அறிந்த மக்கள் இருவரும் திருவருட் பேற்றுக்கு ஆளானவர்கள் ஆகையால் இருவர் சந்திப்பில் சுவையான நிகழ்வுகள் உளவாகலாம் என்பதைக் கருத்திற்கொண்டு அவர்களாகவே திருநாவுக்கரசருடன் இணைந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வந்திருக்கலாம். அவ்வாறன்றி, வாகீசர் தம் அடியவர் குழாத்துடன் செல்வதை மரபாகக் கொண்டார் என்று கொள்ள இடம் தரவில்லை.

திருத்தொண்டர் திருவுரு

திருஞானசம்பந்தரின் அகத்தே அமைந்த தோற்றம் திருத் தொண்டர் தோற்றம். அதே தோற்றத்தின் புறத்தோற்றமே நாவுக் கரசர் என அமைதல் வேண்டும். திருஞானசம்பந்தர் அறியும் மரபு முறையில் இப்படித்தான் நாம் அமைத்துக் கொள்ள வேண்டும். அகத்தோற்றம் இன்னது என நாம் வரையறுக்கும் வல்லமை இல் லோம் ஆயினும், அருளாளர் பெருந்தகை சேக்கிழார் அத்தகைய அகத்தோற்றமாக அமைந்த திருதொண்டர் திருவுரு எவ்வாறு இருக் கும் என்பதை அமைத்துக் காட்டுகின்றார்.

"சிந்தையிடை அரு அன்பும் திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாம் கருத்தும் கை உழவாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற் பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத்து அரசும் எதிர் வந்தணைய"

என்பது திருத்தொண்டர் திருவுருவ வரைபடப் (பெரியபுராணம் 2173) பாட்டு.

அருளாளராயினும் வரலாற்றாசிரியர் என்ற வகையில் சேக்கிழார் சிக்கலுக்குள் நுழையவும் விடுபெறவும் வேண்டிய சூழல் அமைந் திருக்கிற முறையை நாமும் கண்டு தெளில் வேண்டும்.

சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாட முற்பட்டவர். திருத் தொண்டர் எத்தகைய தோற்றமுடையவராக இருப்பார் என்று ஒரு பொதுவினா எழும். இதற்கு விளக்கம் சொல்லாமல் சேக்கிழார் தப்பிக்க இயலாது. அறுபத்து மூன்று தனியடியார்களையும் ஒன்பது தொகையடியார்களையும் வரிசையாக நிறுத்திப் பார்த்து, ஒரு பொது அமைப்பை உருவாக்கினார் என்று கொள்ளலாமா? வேறு எவ்வகை யில் இச் சிக்கலைச் தீர்த்தார் என்று கொள்ளலாம்?

திருநாவுக்கரசர் யார்? "திருத் தொண்டின் நெறி வாழ வரும் ஞானத் தவமுனிவர் வாகீசர்" என்பது சேக்கிழார் தரும் விளக்கம்.

பெரியபுராணத்திலேயே, திருக்கூட்டச்சிறப்பு என்ற தலைப்பில், பதினொரு திருப்பாட்டுக்கள் அமைக்கின்றார்.

"அத்தர் வேண்டிமுன் ஆண்டவர் அன்பினால்
மெய்த்த மைந்து விதிர்ப்புறு சிந்தையார்
கைத்திருத் தொண்டு செய்கடப் பாட்டினார்
இத்தி றத்தவ ரன்றியும் எண்ணிலார்"

என்பது அப்பகுதியில் நின்ற ஐந்தாம்திருப்பாட்டு. முதன்முதல் இரண்டு செய்திகளை அறிமுகப்படுத்துகிறார். சிந்தையால் ஒன்று; செயலால் ஒன்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அறிதற்கரிய பரம்பொருளே வலியவந்து இந்த எளியனையும் ஆண்டு கொண்ட அன்பின் பெருமையை எண்ணி எண்ணிப் பூரிப்பதால், அவ்வெண்ணம் உடல் முழுவதும் பரந்து ஆனந்த அனுபவமாகி, அவ்வனுபவ வெளிப்பாடாக உடல் விதிர்ப்புறுகிறது. இது சிந்தை பற்றியது; திருத்தொண்டு செய்பவர் என்பதற்கு அடையாளம் உண்டு என்கிறார். ஒழுக்கம் அல்லது செயல் மூலம் திருத்தொண்டர் என்பதைத் தெரிவித்தார்.

இனி, நாலாவது வரியாகிய ''இத்திறத்தவரன்றியும் எண்ணிலார்'' என்பதற்கு, சரியைத் தொண்டினை மேற்கொண்ட இவர்களேயன்றி, கிரியை, யோகம், ஞானம் என்ற தொண்டினை மேற்கொண்டவர்களும் உளர் என்று கொண்டு, வெவ்வேறு வகையில் ஈடுபட்டார் என்று கருத்துரை எழுதி, வெவ்வேறு வகையில் ஈடுபட்டவராவார் கிரியை, யோகம், ஞானம் என்ற வகையில் தொண்டாற்றியவர் என்ற விளக்கம் செய்த பெருமக்கள் உண்டு. அதுவே, சேக்கிழார் கருத்தாயின், தொண்டர் நால்வகையினரே என்று குறிப்பிட்டு விடலாமே! 'எண்ணிலார்' என்று கூறியதன் உட்பொருளைத் தத்துவநூல் விளக்கம் கொண்டு காணுமல், தத்துவ விளக்கத்தைக் கொண்டுபோய் அமைத்துக் கண்டதனுல் ஏற்பட்ட விளைவு. குறிப்பிடப்பெற்ற இரண்டு அடிப்படைத்திறங்கள் மட்டுமே திருத்தொண்டர்களின் திறம் அல்ல. எண்ணிலாத திறங்கள் இவற்றை அடிப்படையாகக் கொண்டு எழும், என்று கூறி விளக்கும் தன்மையில் இத்திறத்தவர், அன்றியும் எண்ணலாத் திறங்களை உடையவர் என்று திருத்தொண்டர்களின் அடிப்படைத்திறங்களும் அவைசார்ந்தெழும் சார்புத்திறங்களும் இவை இவை என வரையறுத்துக் கூறப் புகுவாராயினர்.

இவ்வாறே திருநீறு, திருநீறு காரணமாக விளைந்த திருமேனிப் பொலிவு முதலியவைகளை முறைப்படுத்திக் கூறி வருபவர் திருநாவுக்கரசின் தோற்றத்தை மனத்தகத்துக் கொண்டே கூறிவருகிறுரோ என்று நாம் எண்ண இடமளிக்கிறது.

இனி, அவற்றுள் ஒன்று, '' ஆடையுங்கந்தையே '' என்பது. திருஞானசம்பந்தரின் அகத் தோற்றத்தில் இடம்பெறும் முக்கிய அடையாளங்களுள் இதுவும் ஒன்று. ''கந்தை மிகையாம் கருத்தும்'' என்பது அவ்விளக்கம். '' ஆடையுங்கந்தையே '' என்பது திருக்கூட்டச் சிறப்பில் ஒன்பதாந் திருப்பாட்டில் வரும் தொடர். அதில் அமைந்த உம்மையைக் கருத்திற்கொண்டு, '' கந்தை மிகையாம் கருத்தும்'' என்ற பெரிய புராணத்து 2173ஆம் பாடல் வரிக்கு விளக்கம் எழுதும்போது, ''உடுத்த கந்தையும் மிகை எனக் கருதும் துறவுள்ளமும்'' என்று விளக்கமெழுதினர்கள், இவ்வரிக்கு விளக்கமெழுதிய திரு. வி. க. அவர்கள் ''திருமேனி தன்னிலசையுங் கந்தை......'' என்று பாடங்கொண்டு '' திருமேனியிலசைகின்ற கந்தையும் மிகை என்கின்ற கருத்தும் '' என்பர் *பழைய குறிப்புரை*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாசிரியர்' என்றெழுதினர். மேலும், **ஆறுமுகத் தம்பிரானர்** கூறும் விளக்கமொன்றையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

ஆறுமுகத் தம்பிரானர் தாம் கூறும் உரைக்கு ஒரு பாடபேதம் அமைக்கிருர். கந்தை என்ற சொல் 'கந்தம்' எனப் பாடபேதம் அமைகிறது. கந்தம் மிகையாம் கருத்தும் - இந்திரியங்களால் உணரப் பெறும் விஷயத் தொகுதிகள் குற்றம் என்னும் கருத்தும் (கந்கம்—இந்திரியம், மிகை—குற்றம்) என்ற உரை அமைகிறது. திரு. வி. க. அவர்களுக்கு இவ்வுரையே சரி என்ற கருத்து அமைந்ததால் தம்பதிப்பில் 'கந்தைமிகையாம்' என்பதற்குப் பதிலாக, "கந்தம் மிகையாம் கருத்தும் என்ற பாடத்தையே ஏற்றுப் பதிப் பித்தார்.

மேலே குறிப்பிடப்பெற்ற உரை இரண்டனுள் பழைய உரை காரர் கூறுவது, திருமேனி தன்னில் அசைவு என்பதைத் திருமேனி தன்னில் அசையும் என்று கொண்டு, ஏனையோர் கொள்ளும் பொதுப் பொருளே கொள்ளுகிருர் என்பது. இனி, ஆறுமுகத்தம்பிரானர் கூறும் உரையில், கந்தை என்ற சொல் கந்தம் எனப் பாடபேதம் கொள்ளப் பெற்று, (கந்தம்—இந்திரியம்; மிகை—குற்றம்) இந்திரியங்களால் உணரப்படும் விஷயத் தொகுதிகள் குற்றம் என்னும் கருத்தும் என்ற விளக்கம் கிடைக்கிறது அவ்வாருயின், இந்திரியங்களின் குற்றமே அவைகளால் உணரப்பெறும் விஷயத் தொகுதிகளையும் குற்றமுடையவைகளாக ஆக்குகின்றது என்பது கருத்தாக நின்று, முடிவில் மனித உடம்பே குற்றமுடையது என்பதாக முடிவு பெற்று நிற்கும். "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மா நிலத்தே" என்று கூறியவர் நாவுக்கரசர். மேலும், இந்திரியங்களின் குறை நீக்கப்பெறலாம் என்ற கருத்தும் நாவுக்கரசருக்கு உண்டு. குறைநீக்கப்பெற்ற காலத்தும் இந்திரியம் இந்திரியமே. இந்திரியம் என்பது கருவி என்னும் பொருளுடையது. குறைநீக்கப் பெற்றபின் பதி இந்திரியம் என்ற வழக்கில் மாற்றம் இல்லை. மின்னுர் விடையும் மூவிலைச் சூலமும் பொறித்துவை என்று கேட்கிருர் நாவுக்கரசர். அவைகளின் மூலம் இந்திரியங்கள் குற்றம் நீக்கப்பெறுகின்றன. பின்னரும், "அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்த வாறே" என்று கூறும் வாகீசர், உடம்பு எனப்பெறும் இந்திரியக் கூட்டின் மூலமாகத்தான் காண்கிருர். எனவே, இந்திரியங்களையும் அவற்ருல் அறியப்பெறும் விஷயங்களையும் முற்றுகவே குற்றம் என்பது வாகீசரின் கருத்தாகஇருக்க முடியாது. மேலும், "காண் டலே கருத்தாய் நினைத்திருந் தேன்" என்ற திருவாரூர்த் திருப்பதி கத்தின் பொருளும் இணையாது. அடுத்து, திருத்தொண்டரைப் பற்றிக் குறிப்பிடும் இடங்களிலெல்லாம் பயின்று வரும் சொல் "கந்தை" என்பது. "ஆடையுங் கந்தையே என்பதன் நுட்பம் விளக்கப் பெருமலேயே அமைத்துவிட்ட குற்றமும் வரும்.

இனி, கந்தை என்ற சொல்லாட்சியையும் கருதவேண்டியுள்ளது. துணிப்பது, வெட்டுவது, அறுப்பது போன்ற அடிப்படையில் வாராத

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்லாக இருக்கிறது 'கந்தை' என்பது. கந்தை என்பது உலக வழக்கில் நைந்து, கிழிந்து இருக்கும் உடை என்ற பொருளில் வழங்கப்பெற்றாலும், அதன் தோற்றம் 'கந்து' என்ற அடிப்படையில்தான் தோன்றியிருக்க வேண்டும். கந்து-பற்றுக்கோடு; கந்தை—குறிக்கோளைப் பற்றுக் கோடாகக்கொண்ட உடை என்ற பொருளில் தோற்றம் பெற்றிருக்கவேண்டும். சில உடைகள் கொள்கையை விளக்க அணியப்பெறுபவை என்ற கருத்து இக்காலத்துக்குப் புதியதன்று. எனவே, திருத்தொண்டர் அணியும் ஆடை ஒரு குறிக்கோளைக் கொண்டது என்ற பொருள் குறிப்பதாகக் கொள்ளலாம். அவ்வாறாயின், திருத்தொண்டர் அணியும் ஆடையானது கந்தை; குறிக்கோளைக் கொண்ட ஆடை என்ற பொருள் அமையும். அவ்வகையில் "கந்தை மிகையாம் கருத்து" என்பதன் பொருள் திருத்தொண்டர் உடுக்கும் கந்தையானது யாதும் குறைவிலர் என்ற பொருளில் இவ்வுலகில் ஏனையோருக்குத் தேவைப்படும் பொருள்களெல்லாம் இவருக்குத் தேவையற்றவை என்ற கருத்தை வெளிப்படுக்கும் குறிக்கோளுடையது என்பது பொருளாகும்.

ஆடையே குற்றம்; ஆடையுங் குற்றம் என்ற கருத்தானது சைவத்துக்குப் புறம்பானது; சமண்கருத்து. சமணர்களுங்கூட, இந்த ஆடை வேண்டாம் என்றார்களேயன்றி, திகம்பரம் சுவேதம்பரம் என வேறுவகை ஆடை உண்டு என்றே கொண்டார்கள். ஆடையும் மிகை என்றால் மிகையை விடுப்பதற்கு என்ன தடை. நாவுக்கரசர் சமண் சமயத்திலிருந்து மீண்ட பிறகுங்கூட, ஆடையும் மிகை என்ற கருத்தை அவர்மேல் ஏற்றி உரைப்பதற்குக் காரணம் என்ன என்பது விந்தையே.

இனி, ஆடையுங் கந்தையே என்பதற்கும் கந்தை மிகையாம் கருத்தும் என்பதற்கும் சேக்கிழார் காட்டும் குறிப்பு என்ன என்பதையும் நாம் கருதுதல் வேண்டும்.

திருத்தொண்டர்களின் திருமேனியில் அமையும் பொருள்களும் தத்துவ நுட்பமும் அமைத்துச் சொல்லிக் கொண்டு வருகிறவர், "ஆரம் கண்டிகை" என்றார். அதன்பின் "ஆடையுங் கந்தையே" என்றார். "உடுத்த கந்தையும் மிகை என்று கருதும் துறவுள்ளம்" என்று விளக்கம் கண்டார்கள். "ஆடையுங் கந்தையே" என்ற திருக்கூட்டச் சிறப்புப் பாட்டினுள் வரும் தொடரின் வண்ணம் கொட்டாரக்கறைப் பட்டுடுத்தி நிற்கும் சுந்தரர் திருத்தொண்டர் ஆக மாட்டாரே! திருநாவுக்கரசருக்குப் பொருத்திக் காட்டலாம். (அதுவும் தவறு) ஆயினும், திருத்தொண்டர்களின் பொது அடையாளமாக அதனைக் கொள்ள முடியுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். கந்தை என்பதற்குக் கிழிந்து நைந்து போன உடைதான் கட்டிக் கொள்ள வேண்டும் என்று விதிசெய்து, திருத்தொண்டர்களுக்கு நல்ல கிழியாத ஆடை கொடுப்பதையோ, உடுப்பதையோ தடை செய்வானேன்? கிழியாத நல்ல ஆடை தரிப்பது திருத்தொண்டர்களுக்குக் குற்றம் தருவதா? இதற்கு, அனை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வராலும் ஒத்துக் கொள்ளப் பெற்ற திருத்தொண்டர் பெருந்தகையையே — திருநாவுக்கரசரையே நாம் கேட்கலாம்.

திருப்பைஞ்ஞீலித் திருக்குறுந்தொகையில் முதல் திருப்பாட்டினில் "உடையவர் கோவணம் ஒன்றும் குறைவிலர்" என்பதே முதல் வரியாக அமைகிறது. இவ்வரியையும் இதை ஒத்தவைகளையும் அடிப்படையாகக் கொண்டே சேக்கிழார், திருக்கூட்டச் சிறப்பு ஒன்பதாம் திருப்பாட்டினுள்,

"ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணிஅல தொன்றிலர்
ஈர அன்பினர் யாதும் குறைவிலர்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ"

என ஒரே பாட்டில் இரண்டையும் அமைத்துக் காட்டுகின்றார்.

"கந்தை மிகையாம் கருத்து" என்ற தொடர், யாதும் குறைவிலர் என்ற கருத்தை விளக்கும் அடையாளமாக அமைகிறது என்பதே சேக்கிழார் கருத்தாக அமைதல் வேண்டும். கந்தை — திருத்தொண்டரின் உடை; மிகை ஆம் கருத்து = இவ்வுலகில் உள்ள அனுபவப்பொருள்களெல்லாம் தேவையற்றவை என்ற கருத்தை வெளிப்படுத்தும் தன்மையுடையது.

கல்லாடை அணிதல் துறவுக்கு அடையாளமாக இக்காலத்தே கருதப் பெறுகிறது. கல்லாடையும் மிகை என்றோ குற்றமானது என்றோ நீக்கி விடக் கூடியது என்பதாகவோ நினைவு கொண்டு அதைத் துறவுக்கு அடையாளமாக ஆக்குவது இல்லை. சிவமாம் பெரு வாழ்வில் நின்று திளைப்பவராகையால் குறைவற்ற நிறைவு வாழ்வு அவருக்கு உண்டு. தேவை என்பதாக ஒன்று இல்லை. இவ்வுலக வாழ்வில் அமைபவைகளோ பிற உலகில் அமைபவைகளோ அவருக்குத் தேவையானவையல்ல என்ற குறிப்பை வெளிப்படுத்தும் அடையாளமாக, அந்த ஆடை அமைகிறது என்று உளங் கொள்ள வேண்டும்.

"அத்தர் வேண்டி முன் ஆண்டவர் அன்பினால், மெய்த்தழைந்து விதிர்ப்புறு சிந்தையார்" என்று அவர் தம் கருத்தெல்லாம் இறைவன் அன்பில் ஊறித் திளைத்து விட்ட பிறகு, கந்தையும் மிகை என்ற கருத்தை அவர்கள் உள்ளத்தில் வைத்துக் கொண்டிருந்தார்கள் என்பது உள்ளத்தியல் ஆய்வு முறையாலும் பொருந்தாத தொன்று.

அவ்வாறே, கோவணமும் 'உடையர் கோவணம்' என்பதால் ஒரு முழத் துணியை இடையில் மறைப்புடையாகத் தரித்தார் என்று கொள்ளுவதும் தவறு. அதனால் பத்துமுழ ஆடையுடுப்பவர் கோவணம் கட்ட மாட்டார் என்பதும் பொருளாகாது.

கொள்கை வெளிப்பாட்டுக்கு உடைய ஒரு முக்கிய கருவியாகப் பயன்படுத்துவதை இக்காலத்தே விளக்கிக் கூற வேண்டிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவசியம் இல்லை. அவ்வாறே தான் திருத்தொண்டரின் உடைய மைப்புக்களும். கோவண உடை என்பது இக் காலத்தே அமைக்கப் பெறும் பஞ்சகச்சம் என்ற அமைப்பில் தரிக்கும் உடை. கச்சு கச்சம் என்றால் தடையாக, கட்டு என அமைக்கப்பெறும் உடை. ஐம்புல ஆசைகளையும் அடக்கியவர் என்ற பொருளில் 'ஐவகைக் கட்டு, என்ற அமைப்பினை ஒரு கொள்கை விளக்க உடையமைப் பாகக் கொண்டார்கள். அது, கோவணம் போல் தரிக்கப் பெறுவது ஆதலின் கோவண உடை எனப் பெற்றது. கீழ்ப்பாச்சுக் கட்டு என்ற வழக்கும் உண்டு. ஐம்புலன்களை வென்ற அடிகள் என்னும் கருத்தில் கோவண உடை (ஒரு முழத் துணி உடை அன்று) அமைந்தது.

எனவே, கந்தை மிகையாம் கருத்து என்பதற்கு, ஆடையானது யாதும் குறைவிலர், உள்ளனவாகப் பிறர் கருதுவனவெல்லாம் இவரைப் பொறுத்த வரையில் தேவையற்றவை, குற்றமுடையவை என்ற கருத்தை விளக்குவதாக அமைத்த குறிப்பை உட்கொண்டது என்பதே.

விரிப்பிற் பெருகுமாதலின் இத்துடன் நிறுத்தி, இதுபற்றிய 'ஓர் அனுபவத்தை எழுதி முடிக்கிறேன்.

பாடல் பெற்ற திருத்தல வழிபாட்டுக்குச் சென்ற யான், அங்கே அறுபத்து மூவர் தோற்றங்களைக் கண்டு, இவ்வளவு வருமானம் உடைய கோயிலில், இவர்களுக்கு ஆடை அமைக்க வழி இல்லையா என எண்ணி, நிர்வாக அதிகாரியைக் கேட்ட போது அவர் அளித்த விடை என்னை வியப்பில் ஆழ்த்தியது. "கந்தை மிகையாம் கருத்து இங்கே நடைமுறைப் படுத்தப் பெறுகிறது" என்றார். அவருடைய பெரியபுராண அறிவை நான் வியந்தேன். ஆனால், இவ்வாறு விளக்கம் அமைக்கலாகாது என்று அவரிடம் கூறி மீண்டேன். மேலும், இல்லை என்று வருபவர்களுக்குக் கஞ்சியாவது ஊற்று என்பதை வள்ளலார் கூற, வடலூர் வருவோர் எல்லோருக்குமே கஞ்சிதான் கொடுப்பது என்பதாகக் கொள்ளாமல், முடிந்தால் வடை பாயசத்துடன் கொடுப்பதை வள்ளலார் தடை செய்யவில்லை என்று சொல்ல வேண்டியிருப்பதுபோல், அறுபத்து மூவர்களுக்குக் கந்தை யாய்க் கிழிந்த ஆடையையே கொடுக்க வேண்டும் என்பதும் பொருளாகாது எனக் கொள்ள வேண்டும்.

திருஞானசம்பந்தரின் புதிய அனுபவம்

திருத்தொண்டர் வடிவ நுட்பங்களைத் திருநாவுக்கரசர் — ஓர் ஆய்வு என்ற நூலிற் காண்க. இங்கே, ஞானசம்பந்தர் திருத் தொண்டரின் தோற்றம் இது என்று அமைத்துவந்த அவ்வளவிலே திருநாவுக்கரசர் இருந்தார் என்பது உண்மை. ஆனால், அதற்கு மேலும் இருந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகத்தே தோற்றும் திருத்தொண்டர் வடிவமாகப் புறத்தே தோன்றும் வடிவம் இருந்தது. ஆனல், அவ்வடிவத்தில் திருநாவுக்கரசரைக் காணவில்லே. அகத்தே தோற்றி அனுபவமாகாத ஒரு காட்சியைத் திருஞானசம்பந்தர் அங்கே காணுகிருர். அதாவது 'சிவன்' என்னும் உருவமே புலனுகிறது. திருநாவுக்கரசரை அங்கே காணவில்லே.

அகத்தே தோன்றிய திருத்தொண்டர் வடிவம் புறத்தே தோன்றுவதோடு அது புறத்தே சிவன் எனவும் தோற்றியது. அதாவது, திருத்தொண்டரும் சிவனும் ஒன்று என்ற இணேப்பையே விளக்கும் நிலேயில் திருநாவுக்கரசரின் தோற்றம் அமைந்தது. திருத்தொண்டர் என்ற கருத்தைத் தோற்றுவிக்கும் உருவ அமைப்பு என்பது ஒருவகை. திருத்தொண்டரே சிவன் என்ற கருத்தைத் தோற்றுவிக்கும் உருவ அமைப்பு வேறு வகை. உருவம் திருத்தொண்டர்; அவ்வுருவம் வெளிப்படுத்துங் கருத்தானது சிவன் என்பது.

திருஞானசம்பந்தரின் அக அனுபவத்தை உடன் கொண்டதாய் ஆனல், அதேசமயத்தில் அதற்கு வேருகவும் அமைந்ததாய்—சிவம் என்ற கருத்தைத் தோற்றுவிப்பதாய் நின்ற ஒரு புதிய காட்சி அனுபவம் பெறுகிருர் சம்பந்தர். ஆனல், திருநாவுக்கரசரைக் காணவில்லே. அந்நிலேயில், 'சிவன்' என்ற காட்சியளவையை உடன்கொண்டு, "அப்பரே" (தந்தை) என்ன, நாவுக்கரசரும் "அடியேன்" என்ருர்.

அப்பர் என அழைத்ததன் நுட்பம்

திருஞானசம்பந்தர் என்ற ஒரு பெயராலேயே இவ்வுலகில் வாழ்ந்தவர் காழிப்பிள்ளேயார் ஆனல், மருள்நீக்கியார், தருமசேனர், திருநாவுக்கரசர் என்ற பல பெயர்களே இவ்வுலகில் பெற்றவர் வாகீசர். இவ்வளவு பெயர்களும் அவர்தம் உடம்புக்கிடப் பெற்ற பெயர்கள். ஆனல், எந்த ஒரு பெயரில் அவர் இந்நிலவுலகில் வாழ்ந்தவர் எனின், எந்த ஒரு பெயருடனும் வாழாத நிலேயில் இவ்வுலகில் வாழ்ந்ததே அவர் பெருமை என்று கொள்ளுதல் வேண்டும். அது அவர் வாழ்ந்த துறவு நெறி. துறவும் துறவு மேற்கொள்ளும் துறவுக்குத் துறவாம் நெறி. இதனல் விளேயும் பேற்றினே உளங்கொண்ட மெய்கண்டார்,

" அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகனுகி இறைபணி நிற்க"

என்ற பத்தாம் நூற்பாவை இலக்கணமாக அமைத்துக் காட்டினுர்.

மேலே காட்டப்பெற்ற இரண்டு சிந்தனேகளேயும் அமைத்த பிறகுசேக்கிழார் கூறும் திருவாக்காகிய,

" மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும் திருவடிவும்
மதுர வாக்கில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின் மாலைகளும்
செம்பொன் தாளே
சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும்
தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப்
பரவிச் செல்வார்''

என்ற (பெரியபுராணம் 1945) பாட்டினுள் அமையும் 'தாமும்' என்ற சொல்லின் பொருட்செறிவை நோக்குதல் வேண்டும். அதுவே ''அப்பரே'' என்று கூறிய ஞானசம்பந்தர் வாக்கையும் ''அடியேன்'' என்று கூறிய நாவுக்கரசர் வாக்கையும் இணைத்து விளக்கும் தத்துவ நுட்பத்தையும் பத்தாஞ் சூத்திரப் பேற்றையும் நமக்கு விளக்குவதாக அமையும் நிறைமொழி எனக் கொள்ளுதல் வேண்டும்.

உயிரானது திருத்தொண்டர் எனநிற்றலே, அப்பராய் நிற்றலே—சிவனாய் நிற்றலே ''அப்பராம் பேறு'' என்பதன் நுட்பம் எனக் கொள்ளுதல் வேண்டும். திருஞானசம்பந்தர் வாக்கில் 'அப்பர்' என்ற சொல் தந்தையாய் நின்ற சிவனைக் குறிக்கும் என்பதை ஞானப்பால் வரலாற்றில் காண்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. முதற் பகுதியின் முடிப்புரை

'திருஞானசம்பந்தர்—ஓர் ஆய்வு' என்ற தலைப்பினைக் கொண்ட நூல் இரண்டு பகுதிகளைக் கொண்டது. திருஞானசம்பந்தரின் வரலாற்றை ஒட்டிய விளக்கங்கள், அருளியல் நுட்பங்கள் ஆகியவை முதற்பகுதியாகவும் திருஞானசம்பந்தரின் கொள்கைகள், பணி பற்றிய விளக்க அமைப்புக்கள், இக்காலச் சமுதாயத்தில் எழும் சிக்கல்கள், விடைகள் ஆகியவற்றைக் கொண்ட கொள்கை விளக்கம் இரண்டாம் பகுதியாகவும் அமையும். அவ்வகையில் முதற் பகுதியானது, ஞானசம்பந்தரின் வரலாற்றை ஒட்டிய விளக்கமும் அருளியல் நுட்பமும் அமையக் கொண்ட பகுதியாகும்.

திருஞானசம்பந்தர் காழிக்குரிய பன்னிரு பெயர்களையும் தம்மையும் இணைத்துக் கொள்கிறார். பன்னிரண்டு பெயர்களும் பிரமபுரம் தொடங்கி, கழுமலம் வரை வந்து நிறைவுறும். ஆனால், திருஞானசம்பந்தர் தாம் வாழ்ந்த காலத்தைப் பத்தாம் பெயரோடு இணைத்துக் கொண்டு விடுகிறார். 'காழி' என்பதே பத்தாவது பெயர். இதுவே வளர்ச்சிப் படியின் இறுதிப்படி என்று அமைதிப்படுத்தி, பின்னர் நின்ற கொச்சைவயம், கழுமலம் என்ற இரண்டும் இனி வருவன வல்ல என்று கூறி, அவைகளை முன் இரண்டு பெயர்களோடு இணைத்து விடுகிறார்.

சீகாழியின் வரலாறு பத்துப்படிகளில் அமைகிறது. அதுவே அடிப்படை; அதே பத்துப்படிகளில் தொன்மைச் சைவ நன்னெறியும் வளர்கிறது; ஞானசம்பந்தரும் வளருகிறார். இது ஒரு முக்கோண அமைப்பு. சீகாழி வரலாறு, சைவசமய வளர்ச்சி வரலாறு, ஞானசம்பந்தர் வரலாறு என்ற மூன்றும் ஒன்றோடு ஒன்று இணைந்து பின்னிப் பெருகி எழுகின்றன.

அடுத்தநிலையில் பத்துப்படிகளை ஐந்தும் ஐந்தும் ஆகப் பிரித்து முதல்நின்ற ஐந்தை மூலமாக அமைக்கிறார். பின்னர் வரும் ஐந்தை முன்னதனை ஒட்டியே வரும் வேறு வகை வளர்ச்சி என அமைக்கின்றார். இத்தகைய அமைப்பிலேயே ஞானசம்பந்தப் பெருமானின் வரலாற்று வளர்ச்சி நிலைகள் அமைகின்றன.

ஞானசம்பந்தர் அமைக்கும் முறையானது ஒரு புதுமையும், அதேசமயத்தில் அவ்வமைப்பு முறை ஒரு தனிக்கொள்கையாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமையும் வலிமையும் உடையதாக அமைகிறது. புதிய கொள்கையை எடுத்து விளக்கும் பகுதிகள் அங்கங்கே விரித்து விளக்கப் பெறுதலின், ஞானசம்பந்தரின் வரலாற்று நுட்ப மூலப்பகுதி இத்துடன் நிறைவு பெறுவதாகிறது. வரலாற்றுப் பகுதியிலும் ஐவகை மூலங்களை ஒட்டி வரும் விரிவுப்பகுதிகள் இரண்டாம் நிலையின ஆதலின், அவைகளையும், கொள்கை விளக்கம் ஆகியவைகளையும் கொண்டு விளங்குவதாக இரண்டாம் பகுதி அமைகிறது.

திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாரின் திருவருள் பெற்ற நம்பியாண்டார் நம்பிகள் எடுத்து மொழிந்தருளிய பதிகப் பெருவழியும் தமிழ்வழியும் ஆய கொள்கையை நிலைநாட்டிய பெம்மான் ஞானசம்பந்தரே என்ற அருள் வாக்கை முன்னிட்டு எழுந்ததே இவ்வாய்வு என்பது முன்பே உணர்த்தப் பெற்றுள்ளது. பதிகப் பெருவழிகண்டவர் என்பது மட்டுமன்றி, காழி, சைவம், தம்வளர்ச்சி ஆகிய மூன்றையும் இணைத்து நிறுத்தி அவ்விணைப்பால் ஒருவகைக் கொள்கையையும் உருவாக்கியவர் ஞானசம்பந்தர் என்ற அடிப்படையில் நம்பிகள் கூற்றையும் சம்பந்தர் கூற்றையும் இணைத்த ஒருவகை முழுமைக் கொள்கை இம்முதற்பதிப்பில் விளக்கம் செய்யப் பெற்றது. ஞானசம்பந்தரின் கொள்கை விதை இம்முதற்பகுதியின் கருவாகிறது. வளர்ச்சியும் தழைச்சியும் பயனும் பிற வளங்களும் அமைந்த பகுதியாக வெளிவர இருப்பதே இவ்வாய்வு நூலின் இரண்டாம் பகுதி.

முதற்பகுதி முற்றும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy